புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ஸெப்டம்பர் 25உ [ந. 165

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

பிரஸங்கம் CLXV.

மிஸ்ட்டர் சர்ச்சிலின் யுத்த விமர்சனம்.

(ஸெப்டம்பர் 21).

விமான ஆதிக்கம்.

ஏற்பாடாக—அழித்தல்.

ஐரோப்பாவில் விரோதிகளுக்கு மேல் பிரிடிஷ் அமெரிக்க, ருஷ்யருக்கு ஏற்பட்ட விமான ஆதிக்கத்தினால்தான் இந்த நிலப்போர் வெற்றி கிடைப்பது சாத்தியமாக இருக்கிறது.

சென்ற 12 மாதங்களில் நமது விமானப்படை அதற்கு முந்திய வருஷத்தில் ஜெர்மனி மீது எறிந்ததைவிட 3 மடங்கு அதிகமான குண்டுகளை வீசியது. சென்ற 3 மாதத்தில் வீசிய குண்டின் அளவு அதற்கு முந்திய 3 மாதங்களில் வீசப்பட்ட குண்டைப்போல அரை மடங்கு அதிகமானதாகும். யந்திர சாதனங்களால் குண்டுகள் குறிதவருமல்விழ ஏற்பாடு செய்வதில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வருஷம் முதல் 8 மாதங்களில் ஏற்பட்ட சேதம் முன் வருஷத்தில் அதே 8 மாத காலத்தில் ஏற்பட்ட சேதத்தைவிடக் குறைவாகும். நமது விமானிகளது ஊக்கமும், உற்சாகமும் அதிகமாக இருக்கிறது.

ஜெர்மன் யுத்த முயற்சி நடைபெறுமிடங்கள் கட்டுப்பாடான முறையில் துரிதமாக அழிக்கப்படுகின்றன.

இதன் விளைவுகள் ஜெர்மனியின் பலவகைப்பட்ட யுத்த முயற்சிகளையும், யூ படகு கட்டும் திட்டத்தையும், குற்றம் பொருந்திய நாஸிகளின் வாழ்க்கையையும், பொருளாதாரத்தையும் பாதித்துவிட்டன. போர்முனைகளில் சண்டை போடுவதைவிட்டு விமான நடவடிக்கையைத் தடுக்க உள்நாட்டில் தற்காப்பு செய்யும் முறையில் ஜெர்மனின் கவனம் செலுத்தப்படுகிறது. எதிரியின் முன்னேறித் தாக்கும் சக்தி குறைந்துவிட்டது. ஜெர்மன் விமானப்படை மேன்மேலும் தற்காப்பு முறையில் போராடும்படி செய்யப்பட்டிருக்கின்றன. சிற்சில சமயங்களில் துக்க சம்பவங்கள் நிகழினும் இந்தத் தீவை எதிரி விமானங்கள் தாக்குவது மிக்க சொற்பமாகிவிட்டது. எதிரிகள் வெடிகுண்டெறியும் விமானங்களைக் கட்டுவதை விட்டுவிட்டு உள்நாட்டுப் பாதுகாப்புக்காக யுத்த விமானங்களையும் இரவில் போர் செய்வதற்கான விமானங்களையும் உற்பத்தி செய்யவேண்டியிருக்கின்றது.

போர்முனைகளில் எல்லாம் தனது பலத்தைப் பாதுகாப்பதற்காக நம்மைவிடக் குறைவாக விமானங்களை உபயோகப்படுத்தி நிலப்படைகளுக்கு அதிக்கிரமமளிக்கவேண்டியிருக்கிறது.

ஜெர்மனியைவிட 100-க்கு 50 வீதம் அதிகமான விமானங்களை நாம் ஒவ்வொரு போர்முனையிலும் உபயோகிக்க முடிகிறது. இதல்லாமல் ருஷ்ய விமான எதிர்ப்பு இருக்கிறது.

இந்த விமானப்படை ஆதிக்கத்தைத் தவிர அமெரிக்க விமானப்படை, பிரிடனிலும் மத்தியதரைக்கடலிலும் பலப்படுத்தப்பட்டு நடவடிக்கை செய்துவருகிறது. அமெரிக்கர்கள் பகலில் குண்டு வீசும்பொழுது லக்ஷியங்களைக் குறிதவருமல் அடித்துவிடுகிருர்கள். எதிரியின் சண்டை விமானங்களை எதிர்த்து அவைகளுக்கு பெருத்த நஷ்டமும் விளைவிக்கிருர்கள். ஜெர்மன் விமான ஸப்ளையைப்போல 4 மடங்கு அதிகமான புதிய விமான ஸப்ளை பிரிடிஷ், அமெரிக்கருக்குக் கிடைக்கிறது.

ஸ்தம்பிக்கச் செய்தல்.

மாதா மாதம் அமெரிக்க, பிரிடிஷ் விமானபலம் அதிகரிப்பதால் எதிரியின் விமான நிலப் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஸ்தம்பிக்கச் செய்துவிட ஹேது ஏற்படும். எதிரிகளை ஸ்தம்பிக்கச் செய்யவேண்டுமானல் எதிரியின் விமான தற்காப்புகளை எதிர்த்து கோரமாக யுத்தம் செய்ய வேண்டும். அதிலிருந்து நல்ல பலன்கள் உண்டாகும். நாம் நமது சேதத்தைக் குறைத்துக் கொண்டு இராப் பகலாக எதிரியின் ராணுவ இலக்குகளை அழிப்பதை சாத்தியமாக்குவோம். 1944-ல் பெருஞ்சேதம் விளைவிப்போம். வெண்கடல் முதல் கருங்கடல் வரையிலுள்ள 2,000 மைல் ருஷ்யப் போர்முனையில் நடக்கும் பெரிய போராட்டத்தை கவனித்து இது ஆலோசிக்கப்படவேண்டும். சிலவிடங்களில் ருஷ்யப் படைகள் ஜெர்மானியரைவிட அதிக பலமுள்ளனவாக இருக்கின்றன.

கடல் யுத்தம்.

ஆகாயத்திலும், தரையிலும் ஏற்பட்ட மாறுதல்களைப்போல கடல் யுத்தமும் நமக்கு சாதகமாகி விட்டது. படையெப்பு பீதி ஏற்பட்ட நாள் முதல் நமது கடல் மார்க்கங்களுக்கும் உலகம் பூராவிலுள்ள நமது கடற்படைக்கும் எதிரியின் யூ படகு நடமாட்டத்திலிருந்து அதிக அபாயம் உண்டாகுமென்று சொல்லியிருக்கிறேன்.

மே மாதத்தில் வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் சாமான் கப்பல் கூட்டங்களும் அதைச் சேர்ந்த துணைக்காவல் கப்பல்களும் மகத்தான வெற்றிபெற்றன. அதன் பிறகு கப்பல் நஷ்டம் குறைந்து விட்டது. மாதாமாதம் நானும், ஜனதிபதி ரூஸ்வெல்டும் வெளியிடும் கணக்குகளைக் கவனித்து வாருங்கள்.

உபரியாக நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஸெப்டம்பர் 18-ம் தேதியோடு முடிவடைந்த காலத்தில் 4-மாத காலத்தில் வட அட்லாண்டிக்கில் விரோதியின் வேலையால் ஒரு வியாபாரக் கப்பல்கூட மூழ்கடிக்கப்படவில்லை.

அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்ட பின் ஆகஸ்ட் மாதத்தில் சேதம் மிகக்குறைவாகும். அமெரிக்கா யுத்தத்தில் புகுருவதற்கு முன் 15-மாதங்களில் பிரிடிஷ் நேசதேசக் கப்பல் நஷ்டத்திற்கு இது பாதியளவேயாகும்.

ஸெப்டம்பர் மாதத்தின் முதலிருவாரங்களில் உலகின் எந்த பாகங்களிலும் எதிரி ஸப்மரீன்களால் ஒரு நேசதேசக் கப்பல்கூட மூழ்கடிக்கப்படவில்லை. சென்ற யுத்தத்திலும் சரி, இந்த யுத்தத்திலும் சரி இத்தகைய நிலைமையே ஸப்மரீன் போராட்டத்தில் ஏற்படவில்லை.

இவ்வருஷத்தில் இழந்த கப்பல்களைவிட 60 லக்ஷம் டன் அதிக எடையுள்ள கப்பல்களைக் கட்டியிருக்கிறோம். நேசநாட்டினருக்கு யுத்தம் முதல் இதுவரை ஏற்பட்ட நஷ்டத்தை எல்லாம் சீக்கிரம் ஈடுசெய்தவர்களாவோர்.

ஜப்பானுடன் போர்.

கியூபெக் மகாநாட்டில் ஜப்பானுடன் நடக்கும், போரில் விசேஷ கவனஞ் செலுத்தப்பட்டது. பஸிபிக் சமுத்திரத்தில் பலபாகங்களில் மகத்தான நடவடிக்கைகள் ஆரம்பமாகி விட்டன. பஸிபிக் மகாசமுத்திரத்திலேயே யுனைடெட் ஸ்டேட்ஸின் முக்கியமான பலம் உபயோகிக்கப்படுகிறது. ஸாலமன்ஸிலும், நியூகினியிலும் மாக் ஆர்தர் பெருவாரியான தாக்குதலை நடத்திவருகிருர். முதல் முதலில் குடால்கனரிலிருந்தும், பாபுவாவிலிருந்தும் ஜப்பானியர்கள் வெளியேற்றப் பட்டார்கள். அதற்குப் பிறகு ஜுலை 13-ம் தேதி யன்று நியூ ஜார்ஜியாவிலும் ஸெப்டம்பர் 4-ம் தேதியன்று லேக்கு வடகிழக்கிலுள்ள ஹுவான் விரி

குடாவிலும் துருப்புகள் இறங்கின. நியூ ஜார்ஜியாத்தீவிலிருந்து விரோதிகளைத் துரத்தியாகி விட்டது. ஸாலாமூவா, லே என்ற தளங்களை அழித்துப் பிடித்து விட்டோம். இந்த நடவடிக்கைகளின் மூலம் கடல் மூலமாகவும், தரை மூலமாகவும் விமானப்படையுடன் தாக்கும் முறைகளின் சிலாக்யமும் எல் அலாமீனில் ஜெர்மானியர்களால் பரிசோதனை செய்யப்பட்ட 9-வது ஆஸ்திரேலியப்படை தன்னுடைய சக்தியை ஜப்பானைக் குறைத்து உபயோகப்படுத்திய திறமையையும் வெளியிடப்பட்டன.

எதிர்கால நடவடிக்கை.

மாதங்களாக ஆக இந்தப் போர்திட்டம் அதிகமாகத் தெரியவரும். கிஸ்காத் தீவை அமெரிக்க கனேடியப் படைகள் வசப்படுத்திக்கொண்டதால் ஜப்பானியர் அலூஷியன் தீவுகளைக் காலிசெய்து விட்டனர். அட்டுத் தீவிலிருந்த ஜப்பானியப்படை அழிக்கப்பட்டதால் கிஸ்காவிலிருந்த 10,000 ஜப்பானியர் நமது தாக்குதலுக்காகக் காத்திராமல் இருட்டில் கப்பலேறி ஓடி விட்டனர்.

அட்டுத் தீவில் கடைசிவரை நின்று ஜப்பானியர் போராடினர். அவர்கள் இம்முறையைக் கைவிட்டு விட்டு உயிருக்காகத் தப்பியோடும் முறையை மேற்கொண்டிருப்பதாக கிஸ்கா, ஸாலமூவா, லே போராட்டங்களால் தெரிகிறது. புதிய மனோபாவம் அதிகரித்தால் பலனில் மாறுதலேற்படாது. ஆனால், தொல்லையும் சேதமும், செலவும் குறையும்.

அதிருஷ்டம்.

இதாலியின் சரணகதி எதிர்பாராத அதிர்ஷ்டமாகும். இதற்கும் இதாலியைத் தாக்குவதற்கு நிர்ணயித்த தேதிக்கும் சம்பந்தமில்லை.

தாக்குதலுக்கு ஏற்றபடி செய்யவே யுத்த நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வருவது தாமதப்படுத்தப்பட்டது.

ஹிட்லர் இதாலியின் நடத்தை துரோகமானதென்றும், இழிவானதென்றும், கூறினன். இம்மாதிரியான விஷயங்களில் அவனே சரியான ஜட்ஜாகும்.

லாபம் சம்பாதிப்பதற்காக வீழ்ந்து கொண்டிருந்த பிரான்ஸைத் தாக்கி முஸோலினி பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் விரோதியானன். இக்குற்றத்தைப் போக்க முடியாவிட்டாலும் தங்களுடைய உரிமைகளுக்கும், ஸ்வதந்திரத்துக்கும் ஹானி ஏற்படுத்தும் கொடுங்கோல் செய்யும் யதேச்சாதிகாரிகளுக்கு உடந்தையாகயிருக்கும் தேசங்கள் கடைசியில் சிக்ஷையை அனுபவிக்கவேண்டியிருந்தாலும், இதாலிய ஸர்க்காரின் செயல் மனித இயற்கைக்கு ஒத்ததென்றும், விடுதலைக்கான முதல் காரியமாக இருக்குமென்றும் நம்புகிறேன். இதாலி ஏற்கனவே ஆபிரிக்காவிலும், ருஷ்யாவிலும் ஏராளமான ஆள் பலத்தை இழந்திருக்கிறது. போர்முனையில் இதாலிய சிப்பாய்கள் கைவிடப்பட்டிருக்கின்றனர். இதாலி தனது ஏகாதிபத்தியத்தைத் திரும்பப் பெற முடியாத வழியில் இழந்துவிட்டது.

இப்பொழுது இதாலியர்களுடைய அழகான நாடு ஜெர்மானியரின் போர்க்களமாக வேண்டும். அவர்களுக்கு இன்னும் அதிக கஷ்டங்களும் நேரிடக்கூடும். ஹிட்லரின் ஆக்ரோஷத்தினல் அவர் கொள்ளையடிக்கப்படுவார்கள்.

ஆனல், பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் ராணுவங்களும், அமெரிக்கப்படைகளும் இதாலியில் முன்னேறினல் இதாலியர்கள் அடிமைத் தனத்திலிருந்து விடுதலை செய்யப்படுவார்கள். தற்கால உலகத்தின் ஸ்வதந்திர ஜனநாயக நாடுகளுடன் சேர்ந்துகொள்ள அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

இதாலியரை நடத்தும் முறை.

முஸோலினி சிறைதப்பி ஜெர்மனி வந்து இதாலியர் மீது மீண்டும் பாஸிஸ்ட் சுமையை வைக்க முயற்சிப்பதால் இதாலியில் உள்நாட்டுக் கலவரம் ஏற்படக்கூடும். முஸோலினியின் இந்த கோஷ்டியை ஒழிக்க இதாலியிலுள்ள தேசீய வாதிகள் முயற்சிக்கவேண்டும். இதாலிய மக்கள் அரசாங்கத்தாரை ஆதரிப்பதுடன், மன்னருடனும், படோக்ளியோவுடனும் ஒத்துழைத்து நாஸிகளின் குயிஸ்லிங் கோஷ்டியாரை இதாலியைவிட்டு துறத்தியடிக்கவேண்டும். சாத்யமானல் அவர்களை நிர்மூலமாக்கிவிடவேண்டும். தங்கள் எதிர்கால ஸர்க்கார் சம்பந்தமாக இதாலியத் தலைவர்கள் எந்தவிதமான ஜனநாயக ஏற்பாட்டையும் செய்துகொள்ளலாம். இந்த சம்பவங்களால் அது பாதிக்கப்படாது.

ஜெர்மானியரை நடத்தும் முறை.

ஜெர்மானியர் இதாலியரைப்போல நடத்தப்படமாட்டார்கள். என்னுடைய வாழ்நாளில் இரண்டு தடவையும் நமது முன்னோர்கள்நாளில் மூன்று தடவையும் அவர்கள் அக்கிரமமான யுத்தத்தில் உலகத்தை இழுத்துவிட்டார்கள். அவர்கள் தங்களது ஸ்வதந்திரத்தையும் மதிப்பதில்லை. பிறரிடம் ஸ்வதந்திரத்தைக் காண்பதையும் வெறுக்கின்றனர்.

அடிக்கடி போர் மூளுவதற்கு பிரஷியாவே காரணம். 25-வருஷ காலத்தில் ஜெர்மன் ஆதிக்க ஆசையால் 2 முறை அளவிலாத கஷ்ட நஷ்டங்களுக்கும் ரத்தஞ் சிந்துதலுக்கும் உள்ளான பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய மக்கள் தங்களை ஜெர்மானியர் மீண்டும் கிளம்பி பழிவாங்கக் கிளம்ப வழியில்லாதபடி செய்வார்கள் என்று நான் திண்ணமாக நம்புகிறேன்.

நாஸி கொடுங்கோன்மையும், பிரஷ்ய ராணுவ முறையும் பூரணமாக அழிக்கப்பட வேண்டும். பிரஷ்ய ராணுவத் தத்வத்தையும், நாஸி அக்கிரமங்களையும், அறவே ஒழிக்க வேண்டும்.

இனிமேல் இப்பேர்ப்பட்ட யுத்தம் மூளாதபடிக்கும் செய்துவிடவேண்டும்.

ஜெர்மனியின் கூட்டாளி நாடுகள் யுத்தத்தை சுருக்காக முடிக்க வேலைசெய்ய முன் வருவார்களானல் அவர்கள் தாராளமாகச் செய்யலாம்.

ஆனல், நாஸி அக்கிரமங்களும், பிரஷ்ய ராணுவதத்வமும் ஒழிக்கப்படவேண்டும். இதைப் பெறுகிறவரையில் எந்தத் தியாகத்தையும் செய்ய நாங்கள் தயங்கமாட்டோம்.

ஏட்ரியாடிக் கடலில் ஆதிக்கம்.

பால்கன் நாடுகளில் கிரேக்க, யூகோஸ்லாவிய தேசாபிமானிகள் விடா முயற்சியுடனும், தீரத்துடனும் எதிரியைத் தாக்கி வருகிறார்கள். அவர்கள் தேசத்தின் பெரும்பாகத்தை வசப்படுத்திக்கொண்டு மலைகளிலிருந்து கோரமான யுத்தம் செய்கிறார்கள். போக்குவரவு மார்க்கங்களை அழித்துவருகிறார்கள். நகரங்களையும், துறைமுகங்களையும் ஆக்கிரமித்து விடுகிறார்கள். அவர்களின் நடவடிக்கைகளை அடக்கியாளுவதற்கு ஜெர்மன், இதாலிய, பல்கேரியத் துருப்புகளில் 47 டிவிஷன்கள் தேவைப்படுகின்றன.

அவற்றில் 25 டிவிஷன்கள் இதாலியைச் சேர்ந்தவை. எதிரியைத் தாக்கும் சக்தி அவர்களுக்கு இல்லாதபோனலும், தேசாபிமானிகளை அவர்கள் எதிர்க்கமாட்டார்கள். அவர்களுக்கு முஸ்தீப்புகள் சம்பாதித்துக்கொடுக்க அவர்கள் உதவியளிக்கக்கூடும்.

இதுவரையில் விமான மூலமாகவும், ஆபீஸர்கள் மூலமாகவும், பொருளனுப்புவது மூலமாகவும் தான் ஸ்வதந்திரத்துக்காக ஊக்கத்துடன் பாடுபடும் கிரேக்க, யூகோஸ்லாவிய ஸ்வதந்திர மக்களுக்கு ஒத்தாசை செய்ய முடிந்தது. கூடிய சீக்கிரம் இதாலி நமது வசமாகிவிடுமென்று எதிர் பார்க்கிறோம். அது நடைபெற்றல் ஏட்ரியாடிக் கடலிலும், நாம் ஆதிக்கம் பெற்றுவிடுவோம்.

இதன் மூலம் நமது நடவடிக்கைகள் அதிகப்படுகின்றன. அவைகளை ஆரம்பிக்குமுன் ஹிட்லரைச்சேர்ந்த நாடுகளில் ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா முதலிய நாடுகளிலுள்ள ஜனங்களின் நிலைமையையும், மனப்பான்மையையும் ஆராய்ச்சி செய்யவேண்டும். ருஷ்யப் படைகளின் முன்னேற்றமும் பிரிடிஷ் அமெரிக்க விமான நடவடிக்கையில் அதிகரிப்பும் நிலைமையில் விசேஷ மாறுதல்களை உண்டுபண்ணக்கூடும்.

மூன்றுவதாகவும் உருவானதுமான பிரயோஜனம் உண்டாகிவிட்டது. இதாலியக் கடற்படை நம்மிடம் சரண்புகுந்துவிட்டது. இதாலிய மன்னரும், படோக்ளியோ நிர்வாகமும் விடுத்த கோரிக்கைப்படி இது நடைபெற்றது.

இந்த சம்பவம் உலகத்தின் கடற்படை நிலைமையில் விசேஷமான மாறுதலளித்து விட்டது.

தென் கிழக்கு ஆசியா சேனுதிபதி.

ஜப்பானைத் தாக்குவதற்காக கியூபெக்கில் தென் கிழக்கு ஆசியா ராணுவத் தலைமைக் காரியாலயம் லார்டு மவுண்ட்பேடன் தலைமையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவர் சமீபத்தில் நமது படை நிர்வாகிகளுடன் இந்தியாவுக்கு வருவார். வட ஆபிரிக்காவில் ஜெனரல் ஈசன்ஹவரின் தலைமையில் அமுல் நடத்தியது வெற்றிகரமாக முடிந்தது. இவ்விதமான ஒன்றுபட்ட நேசதேசத் தலைமை காரியாலயம் அமைக்கவேண்டியது அவசியம். தென் கிழக்கில் அமெரிக்கப் படைகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாலும், சைனவுக்குப் போகும் விமான மார்க்கங்கள் அபரிமிதமாக விருத்தி செய்யப்படுவதாலும், இதற்கு அவசியமேற்பட்டிருக்கிறது. இரு படைகளுக்கும் ஒத்துமையும், நல்லுணர்ச்சியும், இருந்து வந்தாலும் இந்த யுத்த முறையில் ஒன்றுபட்ட தலைமை அதிகாரியிருக்கவேண்டியது அவசியம்.

மேலும் 16, 17 வருஷங்களுக்கு முன்பு ஏகாதிபத்திய பாதுகாப்புக் கமிட்டி இந்திய எல்லைப்புரங்களில் அல்லது அதற்கு வெளியில் நடக்கும் போர்களை இந்திய சேனுதிபதியின் ஆதிக்கத்திலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று செய்த சிபார்சு நிறைவேற்றப்பட்டது.

முதலில் மவுண்ட் பேடனின் தலைமை ஆபீஸ் டில்லியில் இருக்கும். ஆரம்ப காலத்தில் இந்திய ஸர்க்காருடனும், ஆச்சின்லக்குக்கும் இதற்கு நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டியது அவசியம். மவுண்ட் பேடன் நியமனத்தை அமெரிக்கரும், சியாங்கே ஷேக்கும் வர

வேற்றிருக்கின்றனர். இம்மாதிரியான ஒன்றுபட்ட தலைமை அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கும் பொழுது அவர் எல்லாக் கக்ஷியினரின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகும்படி நடவடிக்கைகளை நடத்திவரவேண்டும்.

வார யுத்தச் செய்திகள்.

முக்கியமான சம்பவங்கள்.

16—9—43 (வியாழக்கிழமை). இதாலியில் பாஸிஸ்ட் கக்ஷியின் தலைமையை முஸோலினி மறுபடியும் வகித்தான்.

ருஷ்யர்கள் கருங்கடல் துறைமுகமான நோவோராஸிஸ்க்கையும், லாஸொவாயா வையும் நோவகிராட்—ஸெவர்ஸ்கியையும் பிடித்துவிட்டார்கள்.

நேசநாடுகள் நியூகினியிலுள்ள முக்கியமான லே தளத்தைப் பிடித்துவிட்டனர்.

17—9—43 (வெள்ளிக்கிழமை). ஜெனரல் மாண்ட் காமரியிடமுள்ள பிரிடிஷ் 8-வது படை ஜெனரல் கிளார்க்கிடமுள்ள அமெரிக்க 5-வது படையுடன் சேர்ந்து கொண்டது.

நேசநாடுகள் ஸாலர்னோ கடற்கரை யுத்தத்தில் வெற்றி பெற்றூர்கள்.

ருஷ்யர்கள் பிரியான்ஸ்கை ஆக்கிரமித்தனர்.

அமெரிக்கக் கடற்படை இலாகா காரியதரிசியான கர்னல் நாக்ஸ் லண்டனுக்கு வந்துவிட்டார். அங்கே கடற்படை சம்பந்தமாக சம்பாஷணை களை நடத்துவார்.

18—9—43 (சனிக்கிழமை). ருஷ்யர்கள் பாவலோகிராட்டை ஆக்கிர மித்தனர்.

19—9—43 (ஞாயிற்றுக்கிழமை). நேசநாடுகள் இதாலியில் பாட்டிபாக்ளியாவை யும், ஆஸ்டாஸல்லாவையும் பிடித்தார்கள்.

க்யூபெக்கில் முக்கியமான சம்பாஷணைகளை நடத்திவிட்டு மிஸ்ட்டர் சர்ச்சில் லண்டனுக் குத் திரும்பி வந்தார்.

ருஷ்யர்கள் ஸ்மொலன்ஸ்க்குக்கு வாசற்படி போன்ற யார்ட்ஸேவோவையும், டுகோவ் ஷினவையும் கிராஸ்னேகிராட்டையும் பிடித்துக்கொண்டார்கள்.

ஜெர்மானியர்கள் மத்தியதரைக்கடலிலுள்ள ஸார்டீனியாவைக் காலி செய்தனர்.

20—9—43 (திங்கட்கிழமை). கார்ஸிகா ஜனங்கள் ஸ்வதந்திர பிரெஞ்சுப் படை களின் உதவிக்கொண்டு கார்ஸிகாவிலிருந்து ஜெர்மானியர்களைத் துறத்தியடித்தனர்.

21—9—43 (செவ்வாய்க்கிழமை). நேசநாடுகள் இதாலியில் ஸோராண்டோ தீபகற்பத்தை ஆக்கிரமித்தனர்.

நேசநாடுகள் டோடிகானீஸ் தீவுக் கூட்டத்தில் ஒன்றான காஸ் தீவைப் பிடித்தார்கள்.

ருஷ்யர்கள் செர்னிகோவைக் கைப்பற்றினூர்கள்.

22—9—43 (புதன்கிழமை). நேசநாடுகள் இதாலியிலுள்ள போடென்சா வைக் கைப்பற்றினூர்கள்.

ருஷ்யர்கள் அனபாவை ஆக்கிரமித்தனர்.

இதாலி.—ஸெப்டம்பர் 14.—ஸாலர்ேனாவிலிருந்து அக்ரிபோலிவரையிலுள்ள 28 மைல் கடற்கரைப் பிரதேசத்தில் கோரமான யுத்தம் நடைபெற்றது. 5-ம் படை அட்டாவில்லியிலும் ஆல்பெனல்லாவிலும் பின்வாங்க நேரிட்டது.

ஸெப்டம்பர் 15.—ஜெர்மானியர் களைப்புற்று இன்று பூராவும் போர் புரியவில்லை.

ஸெப்டம்பர் 16.—8-ம் படை, 5-ம் படையுடன் அக்கிரிபோலிக்கும், வாலோவுக்கும் மத்தியில் சேர்ந்துவிட்டன. இதற்கு முன்னதாகவே 5-ம் படை தற்காப்பு முறையைவிட்டு முன்னேற ஆரம்பித்துவிட்டது. ஸெலிக்கும், கோலராவுக்கும் மத்தியில் ஜெர்மானியர் பிடித்துக்கொண்ட முன்னணி ஸ்தானத்திலிருந்து ஜெர்மானியர்கள் துரத்தப்பட்டார்கள். ஜெர்மானியர்கள் புறம்காட்டி ஓடிவருகிறார்கள்.

ஸெப்டம்பர் 17.—நேசதேசப் படைகள் மாண்டிகார்வினேவையும், ஆல்பெனல்லாவையும் பிடித்துக்கொண்டார்கள். 8-ம் படையுடனும், 5-ம் படையுடனும் டாரண்டோ பிரதேசத்திலிறங்கிய படைகள் சேர்ந்துகொண்டன. ஜெர்மானியர்கள், ஸாலர்னோ பிரதேசத்தின் வடக்குக் கோடியைத் தாக்கினார்கள்.

ஸெப்டம்பர் 18.—ஸாலர்னோ போர்முனையின் வலது விலாப்பக்கத்தில் உள்நாட்டில் 12 மைல்களுக்கப்பாலிலுள்ள ரோக்காடி ஆஸ்பிடியை நாம் ஆக்கிரமித்துவிட்டோம். ஸாலர்னோவைச் சுற்றிலும் ஜெர்மானியர்கள் பலமான ஸ்தானங்களிலிருக்கிறார்கள்.

ஸெப்டம்பர் 19.—5-ம் சேனை ஆல்பிவில்லாவையும், பாட்டிபாக்ளியாவையும் பிடித்தது. ஜெர்மானியர்கள் ஸாலர்னோ சமவெளியிலிருந்து பின்வாங்குகிறார்கள்.

ஸெப்டம்பர் 20.—5-ம் படை நேபிள்ஸ் வளைகுடாவை நோக்கியிருக்கும் ஸாரெண்டோ தீபகற்பத்திலுள்ள உன்னதமான சிகரங்களைக் கைப்பற்றினார்கள். ஸாலர்னோ வளைகுடாவிலுள்ள ஆமெல்பியும், ஸாலர்னோ பிராந்தியத்திலுள்ள எபோலியும் டாரண்டோ பிராந்தியத்திலுள்ள சியோஜாவும் கைப்பற்றப்பட்டன.

ஸெப்டம்பர் 22.—பொடான்ஸோ விழுந்துவிட்டன.

நேபிள்ஸுக்கான யுத்தம் ஆரம்பமாகிவிடும். ஜெர்மானியர்கள் நகரத்தை அழித்து நாசம் செய்துவருகிறார்கள்.

இந்த வாரத்தில் நேசநாடுகள் கீழேகண்ட தீவுகளைப் பிடித்தார்கள்.

ஸெப்டம்பர் 12, நேபிள்ஸ் வளைகுடாவில் காப்ரி, ஸெப்டம்பர் 13. டோடிகானீஸ் தீவுகளில் ஹீரோ. ஸெப்டம்பர் 18, நேபிள்ஸ் வளைகுடாவில் பயோஸிடா, கேயடா வளைகுடாவில் பான்ஸா, ஈஜியன் கடலில் சாமொஸ்தீவு, டொடிகானீஸ் தீவுகளில் கான்டெல்லோரிஸோவும், ஸார்டினியாவும், காஸ் (ஸெப்டம்பர் 21) கார்ஸிகாவின் ஒரு பாகமும்.

ருஷ்யா.—இந்த வாரத்தில் செம்படை கீழேகண்ட இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது. கீவுக்கு வடகிழக்கில் 65-மைல்கள் தூரத்திலுள்ள இருப்புப்பாதை ஜங்ஷன், கருங்கடற்கரையிலுள்ள நோவோராஸிஸ்க் துறைமுகம். கார்கோவ் போர்முனையில் ஸோஸோவாயா, பிரியான்ஸ்க், பாவலோகிராட், யார்ட்ஸேவோ, டுகொழ்ஷினோ (ஸ்மொலன்ஸ்க்குக் கருகில்). கீவுக்குச் சமீபத்தில் பிரிலூகி, லப்னி கீவ், கிராஸ்னோகிராட் கார்கோவுக்கு வடமேற்கில் செர்னிகோவ், செர்னி (கீவ் போர்முனையில்). குபானில் அனபா ஸ்மொலன்ஸ்க்குக்காக யுத்தம் பலமாக நடைபெறுகிறது. கீவை நோக்கியும், துருப்புகள் முன்னேறுகின்றன. நீபர் நதிப் போர்முனையில் நீப்ரோபெட்ரோவாஸ்கிலிருந்து டைபோஸோர்கிக்குச் செல்லும் இருப்புப் பாதை துண்டிக்கப்பட்டுவிட்டது. ஆஸாவ் கடல் பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் தற்காப்பு யுத்தம் செய்துவருகிறார்கள்.

பஸிபிக் யுத்தம்.—சென்ற வாரத்தில் லே பிடிக்கப்பட்டது. நியூகினியாவின் காடுகளிலும், சதுப்பு நிலங்களிலும், மலைச்சரிவுகளிலும் நடைபெற்ற ஒன்பது மாத யுத்தம் முடிவடைந்தது. லேயிலிருந்த ஜப்பானியத் துருப்புகள் மார்க்கம் பள்ளத்தாக்கு வழியாக வடக்கேயுள்ள மலைக்குன்றுகளுக்கு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை லேக்கு வடமேற்கில் மாடாங்குக்குச் செல்லும் வழியிலுள்ள கியாபித் (கியாரி) என்னுமிடத்தில் இறங்கி ஆஸ்திரேலிய குடைத் துருப்புகள் வழிமறித்துவிட்டன.

ஸெப்டம்பர் 14-ம் தேதியன்று பஸிபிக்கில் வைக்கப்பட்டிருக்கும் விமானப்படைகள் கில்பர்ட் தீவுகளைச் சேர்ந்த தாராவாத் தீவையும், கில்பர்ட் தீவுகளுக்கு மேற்கேயுள்ள நாருத் தீவையும் பலமாகத் தாக்கின.

அம்பாயினு நகரமும், கடல் விமான தளமும் குண்டு வீச்சுக்குட்பட்டன.

சைனு.—அமெரிக்க விமானப்படை கீழ்கண்ட இடங்களைத் தாக்கியது.

துருப்புகளின் முகாம்கள்—ஷிலோ. சாமான்கிடங்குகள்—யாங்க்ஸு. பழுது பார்க்கும் ஸ்தாபனங்கள்—கியூகாங்கருகில். மருந்து குவியல்கள்—நான்சாங். எதிரியின் நிலயங்கள்—ஷூசாங், ஹெயிபாங். சாமான் கிடங்குகள், துருப்புகளின் முகாம்கள்—தாயே.

பர்மா.—இவ்வாரத்திய விமான நடவடிக்கை விவரம் அடுத்த பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

13—9—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—எதிரிக் கப்பல்கள்—டச்சுக் கடற்கரை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

(6 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன.)

ரஸ்தாக்கள்—பாம்பி (Pompei).

ரஸ்தாக்கள், ரயில்வேக்கள், எதிரி சைனியங்கள், போக்குவரத்துகள், துருப்பு ஸ்தாபனங்கள்—ஸாலெர்னோ (Salerno) பிரதேசம்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நியூ கினியிலுள்ள லே (Lae).

ராணுவ நிலயங்கள்—டச்சு செலபஸ்ஸிலுள்ள மக்காஸர் (Maccassar).

நியூபிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), டானிம்பர்த்தீவிலுள்ள ஸேலாரு (Selaru), விட்டுவிலுள்ள காரோவ் (Garov) தீவு.

நியூ கினியிலுள்ள பின்ஸ்ஷாபன் (Finschhafen)

ஸாலமன்ஸிலுள்ள கோலம்பங்காரா (Kolombangara).

பர்மா (Burma).

படகு போக்குவரத்து முடிவு—சாகெய்ங் (Sagaing).

ராணுவ நிலயங்கள்—லான்கின் (Lonkin).

14—9—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—பகலிலும், இரவிலும் எதிரிகள் நடத்திய விமான நடவடிக்கைகளைப்பற்றி தகவல் ஒன்றும் இல்லை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வே சாமான்கள் தயார்செய்து சேமிக்கும் இடங்கள்—பெஸ்காரா (Pescara).

ரஸ்தா சந்திப்புகள்—பொடென்ஸா (Potenza).

அச்சுநாட்டு போக்குவரத்துகள்—ஸாலெர்னோ (Salerno) பிரதேசங்களுக்குப்பின்.

ருஷ்யா (Russia).

(80 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரிச் சைனியங்கள்—மார்க்ஹாம் (Markham) நதியின் தென்கரை.

ஜப்பானிய விமான நிலயம்—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak). (23 ஜப்பானிய விமானங்கள் எரிக்கப்பட்டன. 8 விமானங்கள் விமானச் சண்டையில் சுட்டுத் தள்ளப்பட்டன.)

பர்மா (Burma).

ஸப்ளை தளங்கள்—ஹுகாங் (Hukawng) சமவெளி.

ரயில் ரோட் ஸ்தாபனங்கள்—கான்பாலு (Kanbalu).

கட்டடங்கள்—மித்கினா (Myitkyina).

படகுகள், கப்பல்கள்—ஐராவதி (Irrawaddy).

ஸப்ளைக் குவியல்கள்—மாக்வி (Magwe).

15—9—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

மாலை.—விமானத் தொழிற்சாலைகள்—பாரிஸ் (Paris).

விமான நிலயங்கள்—ராமில்லி (Romilly), மெர்வில்லி (Merville) பிரையஸ்ஸட் (Bryassud). (9 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—ரப்பர் தொழிற்சாலை—மாண்ட்லூகான் (Montlucon).

இலக்குகள்—பெர்லின் (Berlin), வடமேற்கு ஜெர்மனி (North west Germany).

விமான நிலயங்கள்—பிரான்ஸ் (France). (10 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

இலக்குகள்—இதாலியிலுள்ள ஸாலர்னோ (Salerno).

ரயில்வேக்கள்—நேபிள்ஸிற்கு வடக்கு (North Naples).

ரயில்வே பாலம்—இதாலியிலுள்ள பெனிவெண்டோ (Benevento).

ருஷ்யா (Russia).

(94 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப் பட்டன.)

விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கடற்படைதளம்—டச்சு நியூ கினியிலுள்ள அம்பாய்னு (Amboina).

விமான நிலயம்—ஸாலமன்ஸிலுள்ள காஹிலி (Kahili). (24 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

ஜப்பானிய நாசகாரி—ஸாலமன்ஸிலுள்ள கியெட்டா (Kieta).

எதிரி இலக்குகள்.—அட்மிராலிட்டி (Admirality) தீவுகள், ரூக்தீவு (Rook), நியுகினியிலுள்ள ஹன்ஸாபே (Hansabay), டானிம்பரிலுள்ள ஸெலாரு (Selaru), ஸாலமன்ஸிலுள்ள கொலம்பங்காரா (Kolombangara).

பர்மா (Burma).

ரயில்வேக்கள்.—பர்மாவிலுள்ள ஷ்வேபோ (Shwebo) பிரதேசம்.

எண்ணெய்க் கிணறு.—யெனங்யாட் (Yenangyat).

படகுகள்.—அரக்கான் (Arakan) கடற்கரை.

சிறிய கடற்துறைகள்.—கியாக்ட்யூ (Kyauktyu).

16—9—43. (வியாழக்கிழமை.)

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—நாஸி கவசம் பூண்ட வண்டிகள்.—லெஹாவர் (Lehavre) பிரதேசம்.

(43 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேகரிக்குமிடங்கள்—மொடேனி (Modane).

பாலம்.—செயிண்ட் ரபேலுக்கருகில்.

இலக்குகள்.—பெர்லின் (Berlin).

விமான நிலயங்கள், ரயில்வேயும் இதர இலக்குகள்—பிரான்ஸ் (France), லோ கண்ட்ரீஸ் (Low Countries).

3 சுரங்வேடி அறுக்கும் கப்பல்கள்.—டச்சுக் கடற்கரை (மூழ்கடிக்கப்பட்டது).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—லிஸ்டர்னோ (Listerno), லிட்டோரியோ (Littorio).

ரஸ்தாக்கள்.—காஸெர்ட்டா (Caserta), பெனெவெண்டோ (Benevento).

எதிரி போக்குவரத்துகள் யுத்த தளவாடங்கள், துவியல்கள்.—ஸாலெர்னோ (Salerno) பிரதேசம்.

எதிரி விமான நிலயம்.—காம்பினோ (Campino), ரோமிற்கருகிலுள்ள பிராட்டிகா (Prattica), கார்வெட்டரி (Carveteri), பர்பாரா (Furbara).

ருஷ்யா (Russia).

(8 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவிலும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak) விமான நிலயம்.

(48 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

எதிரிச் சைனியங்கள்.—நியூ கினியிலுள்ள லே (Lae).

ராணுவ நிலயங்கள்.—சைனுவிலுள்ள ஷிலோ (Shilo).

யுத்த தளவாடக் குவியல்கள்.—சைனுவிலுள்ள நான்சாங் (Nanchang).

பர்மா (Burma).

கட்டடங்கள்.—பூதிடாங் (Buthidaung.)

நீராவி யந்திரங்கள், வண்டிகள்.—ஷகெய்ங் (Sagaing).

எண்ணெய் வண்டி.—ஷ்வேபோ (Shwebo).

எண்ணெய்க் கிணறுகள், சேமிப்புகள்.—ஐராவதி, ராம்ரீ தீவுகள்.

ஜப்பானியத் துருப்புகள்.—கியாக் பாண்டு (Kyauk Pandu).

17—9—43. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—இலக்குகள்—பெர்லின் (Berlin).

ரயில்வே இலக்குகள்.—பிரான்ஸிலுள்ள பிரிட்டனி (Brittany).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

சேனைகள் தயார் செய்து சேகரிக்குமிடங்கள், ரஸ்தா ரயில் சந்திப்புகள்.—இதாலியிலுள்ள பெஸ்காரா (Pescara).

போக்குவரத்துகள்.—பொடன்சா (Potenza).

ரயில்வே தளங்கள்.—போகியா (Foggia).

போக்குவரத்து ஸாதனங்கள்.—ஸாலர்னோ பிரதேசத்திலுள்ள ஜெர்மன் சைனியத்திற்குப்பின்.

ருஷ்யா (Russia).

(37 எதிரி விமானங்கள் சுட்டு தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸிலுள்ள பூகா (Buka) பிரதேசம்.

விமான நிலயம்.—காஹிலி (Kahili), பல்லாலி (Ballale). (16 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

பர்மா (Burma).

ரயில்வேக் கட்டடங்கள்.—டின டெயனியான் (Tin Deinyan), செயிவா (Seywa).

லாரிகள்.—சாக்கி (Chauk)ற்கு கிழக்கிலுள்ள ரஸ்தாக்கள்.

சேனைகள் தங்கியிருக்கும் குடிசைகள்.—டாங்கப் (Taungup) கணவாய், கியாக்பாண்டு (Kyaukpandu).
கட்டடங்கள்.—அபாக்வா (Apaukwa).

18—9—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—படகுகள்—டச்சுக்கடற்கரை (Dutch-Coast).
சேனைகள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—ரோவன் பிரதேசம்.
எதிரி விமான நிலயம்.—பீவாய்ஸ்டில்லி (Behunwais-Tille).
இரவு.—சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—விட்டர்போ (Viterbo), பிராட்டிகாடி (Pratticadi), மார் (Mare), காம்பியானோ (Campiano).
விமானமிறங்குமிடங்கள்.—போகியே (Foggia), ரஸ்தாக்கள் ஸாலர்னோ பிரதேசம்.
ரயில்வே தளங்கள்.—இதாலியிலுள்ள பெஸ்காரா (Pescara).
ரோட்ஸிலுள்ள மாரிட்ஸா (Maritza), விமான நிலயம்.
ரயில்வே தளங்கள்.—நேபிள்ஸ் பிரதேசம்.

ருஷ்யா (Russia).

(36 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸிலுள்ள பூயின் பெய்ஸி (Buin Faisi) பிரதேசம். (20 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

பர்மா (Burma).

நீராவி யந்திரங்கள், லாரிகள் இதா லக்ஷியங்கள்.—புரோம் (Prome).
ராணுவ நிலயங்கள்.—ஹென்ஷாடாவிற்கருகில் (Henzada).
கிராமம்.—பூதிடாங் (Buthidaung) பிரதேசம்.
ரயில் ரோட் சந்திப்புகள்.—நாபா (Naba), பாங்யாங் ஜார்ஜ் (Bongyaung Gorge).

19—9—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்—லில்லி (Lile), மெர்வில்லி (Merville).
ஹாலந்திலுள்ள வூயன்ஸ்டிரெட்ச் (Woensdrecht).
விமானச் சண்டைகள்.—இங்கிலீஷ் கால்வாயிலுள்ள வடக்கு பிரான்ஸிலும்.
(6 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி வண்டிகள், போக்குவரத்துகள்.—ஸாலெர்னோவிற்குப்பின் (Salerno).
ரஸ்தா சந்திப்புகள் ரயில்வேக்கள்.—ரோமி (Rome)க்கும், நேபிள்ஸி (Naples)க்கும் இடையில்.
போக்குவரத்துகள்.—பெடென்ஸா (Potenza).

ருஷ்யா (Russia).

(47 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப் பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—டாராவா (Tarawa) தீவுகள், நாரு (Nauru) தீவு.
விமான நிலயம்—பூயின் (Buin) பிரதேசம்.
(14 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).
ஒரு ஜப்பானியக் கப்பல்.—காவியெங் (Kavieng).
இதர கப்பல்கள்.—ஸெயின்ட் ஜார்ஜ் முனை Cape St. George).

பர்மா (Burma).

கப்பல் கட்டும் துறைகள்.—முனிவா (Monywa).
களஞ்சியங்கள்.—லான்கின் (Lonkin).
எதிரி ஸப்ளை ஸ்தாபனங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்.

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

14—9—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

பல இடங்கள்.—இங்கிலாந்தின் தென் கிழக்குக் கரையும், லண்டன் பிரதேசம். (4 ஜெர்மன் விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

ருஷ்யா (Russia).

நஷ்யச் சைனியங்கள்.—நோவோராஸிஸ்க் (Novorossisk).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான நடவடிக்கை இல்லை.

15—9—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

16—9—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—பிரையான்ஸ்க் (Bryansk) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸிலுள்ள வெல்லா லவெல்லா (Vella Lavella).

17—9—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

18—9—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

பகல் இரவுகளில் நடந்த விமானத்தாக்குதல் பற்றி ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.—ஸ்மொலன்ஸ்க் (Smolensk) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஆன்ஸ்லோ (Onslow).

19—9—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia),

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

20—9—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.—ஸ்மொலன்ஸ்க் (Smolensk) முன்.

தூரக்கிழக்கு (Far East).

ஆஸ்திரேலியாவிலுள்ள டார்வின் (Darwin) துறைமுகம்.

யுத்தக் குறிப்புகள்.

தப்பியோடின கைதி. தான் அமானுஷமான சக்தியுள்ளவனென்று ஹிட்லர் நினைத்துவிட்டான். அவனுடைய தேவ வாக்கை நாம் இங்கு கூறுவோம். 1939-ம் வருஷம் ஜனவரி மாதம் 30-ம் தேதியன்று அவன் பின்வருமாறு சொன்னான் "தேசிய பொது உடமை இயக்கமுள்ள ஜெர்மனி, எந்த எண்ணத்துடனும் ஒரு சர்வதேச வல்லரசு இதாலியைக் கைப்பற்றிவிட்டால் அதன்பின் ஜெர்மனிக்கு அதோகதி வந்துவிடுமென்று நன்றாய் அறிந்திருக்கிறது."

இந்த ஜோஸியம் பலித்துவிட்டது. அப்பொழுது எதிர்பார்த்த அந்தியகாலம் ஹிட்லருக்கு வந்துவிட்டது. இதாலி விழுந்துவிட்டதுடன் இதாலி ஹிட்லருக்கு எதிரிடையாக யுத்தம் செய்யவும் ஆரம்பித்துவிட்டது.

கதியற்ற ஹிட்லர் முஸோலினியின் விடுதலையைப்பற்றி பிரமாதமாகப் பேசி வருகிறான். ஒரு காராகிரஹத்திலிருந்து, மற்றொரு காராகிரஹத்துக்கு வந்திருக்கிறோமென்பதை மறந்து ஜெயிலிலிருந்து தப்பி ஓடிவந்த கைதி "பாஸி நிர்வாகத்தை மறுபடியும் நடத்தவும், ஜெர்மனிக்கு பேருதவி செய்வதற்காகவும்தான் முன்வந்துவிட்டதாகவும் ஒலி பரப்புப் பிரசங்கம் செய்திருக்கிறான். தொடர்ச்சியாகக் கிடைத்துவரும் தோல்விகளை மறைத்துச் சொல்லுவதற்காக ஒரு புதிய நண்பனை அடைந்துவிட்டதாகவும், ஹிட்லர் பீத்திக்கொள்ளுகிறான். ஆகிலும், முஸோலினியை ஜனங்கள் காணக்கூடவில்லை. அவனிருக்குமிடம் புலப்படவில்லை. அவன் ஆற்றிய சொற்பொழிவும், பிறரால் பெர்லின் ஒலிபரப்பு நிலயத்தில் தயாரிக்கப் பட்டதுபோல் தோன்றுகிறது.

வி வி வி வி வி

குடியரசு பாஸிதத்வம். முஸோலினி புதிதாகப் பறை சாற்றியிருக்கும் குடியரசு பாஸி தத்வமானது முஸோலினியும், அவனுடைய பாஸிஸ்ட் கொள்கையும் அடைந்த அதோகதியைத்தான் அடையப்போகிறது. மன்னர் பேரில் குற்றம் சாட்டி மன்னருக்கு விரோதி ஸ்வபாவம் காட்டும் முஸோலினி மறுபடியும் கைதியாகி ராஜ துரோகத்துக்காக சிக்ஷையடைவது நிச்சயம். இப்பொழுது அவன் ஹிட்லரின் கையாளாகவும், அவன் சொல்லுகிறபடி கூத்தாடுகிறவனாகவும் ஆகிவிட்டான். இதாலியப் படைகளில் அதமர்களான கருஞ் சட்டையினர்கள் ஒன்றுசேரவேண்டுமென்று அவன் கட்டளையிட்டிருக்கிறான். அவனுடைய ஒலியிலிருந்து "கருஞ்சட்டையினரே, நீங்கள் மறுபடியும் ஒன்றுசேருங்கள். நீங்கள் ஏராளமான தீரச் செய்கைகளைச் செய்திருக்கிறீர்கள். வாலிபமுள்ள பாஸிஸ்டு கக்ஷியினரே, தரைப் படைகளில் சேர்ந்துகொள்ளுங்கள். விமானிகளே, பாஸிஸ்டு ஸ்திரீ தொழிலாளர்களே, சிற்பிகளே இந்த யுத்தத்திலிருந்தும் புத்துயிர் பெறும் இதாலிய தேசமானது உங்களுடையது" என்று முஸோலினி ஓலமிட்டிருக்கிறான்.

தேசபக்தனின் வேண்டுகோள். இதற்கு எதிரிடையாக ஆல்ஜியர்ஸ் ஒலிபரப்பிலிருந்து மற்றொரு செய்தி வந்திருக்கிறது. படோக்ளியோ வின் பிரசங்கம் ஒவ்வொரு இதாலியரின் ஹிருதயத்திலும் ஒலி பெருக்குகிறது. "இதாலியர் களே, கொரில்லா யுத்தம் நடத்த உங்களிடம் சக்தியும், சாதனங்களுமிருக்கின்றன. இம் மாதிரியான நடவடிக்கை ஏட்ரியாடிக் கடலின் அக்கரையில் நடைபெறுகிறது. ஜெர்மா னியர்கள் நமக்கு நஷ்டம் விளைவிக்க உத்தேசித்திருக்கிறார்கள். இந்தகோரமான கஷ்டத் தையும் நாம் சமாளித்துக் கரையேறவேண்டும். அதை நாம் நிச்சயமாய் நிவர்த்திசெய்து விடுவோம்.

"ஜெர்மானியர்களையும், இதாலியர் என்று பெயர் வகிக்க லாயக்கில்லாத சில இதாலியர் களையும் நீங்கள் பிரிட்டிஷாருடனும், அமெரிக்கர்களுடனும் சேர்ந்துகொண்டு தாக்குவது உங்களுடைய கடமையாகும்.

"ஆக்கிரமிப்பு நாடுகளைப்போல இதாலியை மதிக்கவும், அவர்களுடைய நகரங்களைக் காப்பாற்றுவதற்காக நமது நகரங்களை அழிக்கவும், நம்முடைய தாய்மார்களையும் சகோதரி களையும் ஜெர்மனிக்கு அழைத்துச் செல்லவும் நாம், ஜெர்மானியர்களை விடக்கூடாது.

"இன்று நான் ஒரு செய்தி விடுக்கிறேன். "ஜெர்மானியர்களை நாட்டைவிட்டுத் துரத்துங்கள்". டான் நதிப்பிரதேசத்திலும், லிபியாவிலும், டூனிஸியாவிலும், கலாப்ரியா விலும் நம்முடைய படைகளைத் தனியே விட்டு ஓடிவிட்ட ஜெர்மானியர்கள் கௌரவத்தைப் பற்றிப் பேச எவ்விதம் துணிவு கொண்டார்கள்.

"எவ்வகையிலும், எல்லா இடங்களிலும் எந்தக் காலத்திலும் ஜெர்மானியர்களைத் தாக் குங்கள். நகரங்களைவிட்டு நாட்டுப்புறங்களுக்குச் செல்லுங்கள். போக்குவரவு மார்க்கங்களைத் துண்டித்துவிடுங்கள், பாலங்களையும் கப்பல் தளங்களையும் நொருக்கிவிடுங்கள்.

"ஜெர்மனியை எதிர்த்துநிற்பதுதான் நம்முடைய வாழ்க்கையின் பயன். இதுதான் சிறந்த நடவடிக்கை" என்று படோக்ளியோ சொல்லியிருக்கிறார்.

வி வி வி வி வி

பதில் நடவடிக்கை. இதாலியர்கள் பழையபோர்வீரனின் வேண்டுகோளுக் கிணங்கி நேசதேசப் படைகளுடன் சேர்ந்துகொண்டு உள்நாட்டுக் கலவரத்தை உண்டுபண்ணுகிறார்கள். கடைசியாக வந்த செய்தியிலிருந்து ஒரு இதாலிய நீர்மூழ்கிக் கப்பல் அமிராக்ளியோ காக்னி தானாகவே சரண் புகுந்துவிட்டது. ஸெப்டம்பர் 21-ம் தேதி வெளிவந்த ஆல்ஜியர்ஸ் ஒலிபரப்பில் இதாலிய ரெயில்வேத் தொழிலாளர்களெல்லாம் வேலை நிறுத்தம் செய்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. டூரினில் தெருச்சண்டை நடைபெற்றுவருகிறது. பிரெஞ்சு எல்லைச் சரகத்தில் இதாலிய 4-ம் படை கூனியோ என்னுமிடத்தில் ஜெர்மானியர்களுடன் போர் புரிந்துவருகிறது. நாச வேலை ஏற்படாமல் தடுப்பதற்கு மட்டும் ஜெர்மானியர்கள் 12 டிவிஷன் துருப்புகளை உபயோகப் படுத்தவேண்டும்.

வி வி வி வி வி

மூவகைப்பட்ட நடவடிக்கை. இதேசமயத்தில் மூன்று பகுதிகளில் நடைபெறும் நேசதேச நடவடிக்கைகளை ஜெர்மானியர்கள் சமா ளித்து வரவேண்டும். கலாப்ரியாவும், ஸாலர்னுவும், டாண்டோவும் விழுந்தபின் நேச நாடுகள் கடல் மூலமாக துருப்புகளை இறக்கி கேந்திர ஸ்தானங்களை இதாலியில் ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு வசதியேற்பட்டுவிட்டதென்பதை ஜெர்மானியர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இதேவிதமாக ரோம் பிராந்தியத்திலும், லெக்ஹாரனுக்கு வடக்கிலும் படை களும் கூடிய சீக்கிரத்திலிறங்கக்கூடும்.

வி வி வி வி வி

அட்டை கோபுரம். ஏட்ரியாடிக் கடற்கரை துறக்கப்பட்டுவிட்டது. டோடி கானீஸ் தீவுகள் கடுதாசிக் கோபுரம்போல் வீழ்ச்சி பெறுகின்றன. ஸார்டீனியாவை இதாலிய தேசாபிமானப்படைகள் பிடித்துவிட்டன. கார்ஸிகா, பிரெஞ்சு தேசாபிமானப் படைகளின் வசமாகிவிட்டது.

முஸோலினியும், புத்துயிர் பெற்ற பாஸி தத்வமும் என்ன செய்ய முடியும்? ஜெர்மா னியரின் ஆக்கிரமணத்துக்குட்பட்ட இதாலியில் முஸோலினி பாஸிஸ்ட் குடியரசு நிர்வா கத்தை ஏற்படுத்தலாம். ஆகிலும், அவனுடைய சௌகரியமும், அவனுடைய தீனஸ்வரமும் வெகுதூரத்தில் த்வனிக்க முடியாது. இவன் இழிவடைந்த தலைவனென்றும், ஹிட்லரின் பொம்மையென்றும் ஜனங்கள் நன்கறிவார்கள்.

வட ஆபிரிக்காவில், அமெரிக்காவும், பிரிட்டனும் ஆரம்பித்த யுத்த தந்திரத்தின் விளைவுகள் நாளடைவில்தான் புலப்படுகின்றன. ஜெர்மனியின் ஹிருதயத்தை அடைவதற்கு சாதகமான ஒரு பிளவை ஐரோப்பிய அரணில் உண்டுபண்ணிவிட்டோமென்பது ஸ்பஷ்டமாகப் புலப்படுகிறது. ஸ்டாலினோவின் வீழ்ச்சிக்கு இதாலிப் படையெடுப்புத்தான் காரணமென்று ஜெர்மானியர்கள் இப்பொழுது ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஜெர்மனிக்கு அதிக நெருக்கடி உண்டாகிவிட்டது. ஜெர்மனியின் வயிறு போன்ற தெற்கு ஐரோப்பாவை நேசதேசப்படைகளின் யதாம்சம்தான் தாக்கிவருகின்றன. வட ஆபிரிக்கக் கடற்கரை பூராவிலும், ஏராளமான துருப்புகள் குவிந்து கொண்டிருக்கின்றன. மறைபொருளான பிரிடிஷ் 9-வது சேனை ரகசியமாக எங்கேயோ சென்றிருக்கிறது.

வி வி வி வி வி

அச்சுநாடுகள் முறிபட்டன; அச்சும் சக்கரமும் நொருங்கிவிட்டது. அச்சுநாடுகளும், அச்சும், சக்கரங்களும் நொருங்கிவிட்டன. சக்கரத்திலுள்ள ஆரங்களான ருமேனியாவும், ஹங்கேரியும், பல்கேரியாவும், கடகடத்துப்போய் அகன்றுவிட்டன. ஜெர்மன் தற்காப்பு ஏற்பாட்டின் ராஜீய தைரியம் நிலைகுலைந்துவிட்டது. கூட்டாளிகளைப் போர்புரியும்படி செய்வதும், ஆக்கிரமிப்பு நாடுகளை அடக்கியாளுவதும் ஜெர்மனிக்கு மகத்தான காரியங்களாகும்.

இதாலி சரணாகதி செய்யும்வரையில் ஜெர்மன் அமுலுக்குட்பட்ட நாடுகளில் தீவ்ரமான நடவடிக்கைகளை ஜெர்மனி எடுத்துவந்தது. ஆக்கிரமிப்பு நாடுகளை தயையன்னியில் கடுமையாக நடத்துவது, சிறிய தேசங்களை பயமுறுத்துவதும், மற்ற சிறிய நடுநிலைமை வகிக்கும் நாடுகளுக்கு இறுதி உத்தரவுகள் அனுப்புவதுமாக ஜெர்மனி நடவடிக்கைகள் நடத்திவந்தது. இப்பொழுது ஆச்சரியப்படக்கூடிய முறையில் மாறுதல் உண்டாகிவிட்டது. வெருட்டலுக்கு பதிலாக நயந்து கொள்வதும், தழுவிக்கட்டுவதும் செய்யப்படுகிறது.

டென்மார்க்கில் பீதி வெருட்டலுடன் முடிந்துவிட்டது. ஜெர்மன் நடவடிக்கையில் தாடஸ்த்யம் ஏற்படவில்லை.

ஸ்வீடன் நடவடிக்கையைப்பற்றியும் அவர்கள் முடிவான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. சில நாட்களுக்குமுன் ஜெர்மன் பிரமுகர்கள் ஆத்திரத்துடன் ஸ்வீடிஷ் நிர்வாகமும், ஸ்வீடிஷ் பத்திரிகைகளும் தங்களுடைய நடவடிக்கைகளை சரிப்படுத்திக் கொள்ளாவிடில் விபரீதமேற்படுமென்று வெளியிட்டார்கள். ஜெர்மனியின் பொறுமை அளவு கடந்துவிட்டதென்றும் அவர்கள் சொன்னார்கள். ஸ்வீடிஷ் நிர்வாகம் ஜெர்மனியின் தற்கால நிலைமையை அறிந்து பதில் விடுத்து எதிர்த்து நின்றபொழுது வெருட்டல் நின்றுபோய்விட்டது.

இப்பொழுது வெருட்டலை நிறைவேற்ற ஜெர்மனியிடம் சக்தியில்லை. அது குலைக்குமே ஒழிய கடிக்காது. பால்கன் நாடுகள் இந்த மர்மத்தை அறிந்துவிட்டன. பூடாபெஸ்டிலும், புகாரெஸ்டிலும் ஸொபியாவிலும் ஜெர்மனியைக்கண்டு நடுங்கும் சுவபாவம் குறைந்துவிட்டது. ஹிட்லர் மாட்டிவிட்டிருக்கும் வலையாகிய யுத்தத்திலிருந்து எவ்விதம் வெளியேறுவதென்றுதான் அவர்கள் கவலைப்படுகிறார்கள். புடாபெஸ்டு ஒலிபரப்பில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. ஹங்கேரியின் சங்கடமான பூகோள அமைப்பினால் அது தவறான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. இல்லாவிடில் அது நடுநிலைமைவகிக்கும் நாடாகயிருக்கக்கூடும். புகாரெஸ்டிலிருந்து வெளிவரும் பத்திரிகையில் ருமேனியா சமாதானம் செய்துகொண்டு மற்றவர்கள் போர்புரிவதைக் கவனித்துக்கொண்டிருக்க ஆசைப்படுகிறது என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஆகையால் ஹிட்லரின் ஆதீனத்துக்குட்பட்ட நாடுகளெல்லாம் யுத்தத்திலிருந்து வெளியேறக் கனவு காண்கிறார்கள். அடுத்தபடியாக அவர்கள் சுறுசுறுப்புடன் கலவரம் செய்து வெளியேறும் வழியைத்தேடவேண்டும்.

ஆகிலும், ஜெர்மனிக்கு இது கனவல்ல, துர்ச்சொப்பனம். இதாலியில் ஏற்பட்ட மாதிரியாக இன்னும் பல இடங்களில் தாக்குதல்களும், ஐரோப்பியக் கோட்டையில் இன்னும் சில பிளவுகளும் ஏற்பட்டுவிட்டால் புதிய உலக அமைப்பின் ராஜீயக் கட்டடம் பூராவும் இடிந்து விழுந்துவிடும்.

வி வி வி வி வி

இதாலி யுத்தம்—யுத்த தந்திரம். படோக்ளியோவின் சரணாகதியைக்கண்டு ஆச்சரியப்பட்டவன்போல் ஹிட்லர் பாசாங்கு செய்தாலும், தன்னுடைய சாரணர்கள் மூலம் நிலைமையை முன் கூட்டியே அறிந்து, மன்னரையும் புதிய மந்திரியையும் துரத்தியடித்துவிட்டு முஸோலினியை மறுபடியும் அதிகாரத்தில் ஸ்தாபிக்க முயற்சிசெய்து வந்தானென்பது வெளிப்படுகிறது. சமாதான ஒப்பந்தத்தின் ஷரத்துகளை

நேசநாடுகள் முன்னதாகவே பிரசுரித்து விட்டதால் ஹிட்லரின் பிரயத்தனம் தடைபட்டது. ஆகிலும், இதாலியின் நிலைமை சீர்கெட்டிருந்தபடியால் ரோம் முதலிய அநேக இதாலிய நாடுகளை ஹிட்லர் வெகு சுலபமாகக் கைப்பற்றிவிட்டான். ஜெர்மானியர்கள் தங்களுடைய வெற்றிகளைப் பலப்படுத்திக் கொள்ளுமுன் நேசதேசப்படைகளும் இதாலியிலிறங்கிவிட்டன.

யுத்த தந்திரத்துக்கு சாதகமாக மூன்று முக்கியமான அம்சங்கள் காணப்படுகின்றன. விரோதிகளாகயிருந்த இதாலியர்கள் நண்பர்களாக ஆகிவிட்டார்கள். இதாலியக் கடற்படை சரண்புகுந்துவிட்டது. ஜெர்மனியின் எதிர்ப்புமூலம் நேசநாடுகளுக்குப் படைகளை இறக்குவதில் சிரமமேற்படவில்லை. ஏனெனில் அச்சுநாடுகளின் கடல் நடவடிக்கைகள் ஓய்ந்துபோய்விட்டன. ஜெர்மானியர்கள் நேபிள்ஸ் பிராந்தியத்திலும் அதற்குத் தெற்கேயும் குவிந்திருக்கும்பொழுது எப்பொழுது எங்கு படைகளை இறக்குவதென்பதுதான் முக்கியமான பிரச்னைகள்.

இதாலியின் கால்விரல் போன்ற பாகத்தில் எட்டாம்படைக்கு எதிர்ப்பு அதிகமாக யில்லை. ஏனெனில் ஜெர்மானியர்கள் அங்கு ஏராளமான படைகளை அனுப்பவில்லை. நேச தேசப்படைகள் விலாபக்கங்களிலும், பின்பக்கத்திலும் இறங்கி விடுவார்களோ என்றபயம் அவர்களுக்கு உண்டாகியிருந்தது. ஜெர்மன் துருப்புகள் பல இடங்களில் சிதறிக்கிடந்தன. படைகளை ஒன்று கூட்டுவதற்கு அவர்களுக்கு அவகாசம் இல்லை.

ஜெர்மானியர் எதிர்பார்த்தவண்ணமே நேசதேசத்தார்கள் பின்புறத்தில ஸாலர்னோ பிராந்தியத்தில் படைகளை இறக்கினார்கள். எதிரியிடம் உள்ள சொல்ப படைபலத்துடன் அவன் நேசநாடுகளை எதிர்த்து நிற்கவேண்டியதாயிற்று. நேசநாட்டுத் துருப்புகளைச் சமாளித்து நின்று, துருப்புகள் பின்வாங்குவதற்காக மார்க்கத்தை பத்திரப்படுத்தவும், வடக்கு இதாலியிலுள்ள படைகளை ரோமல் திருத்தியமைக்கவும், அவகாசமளிக்கவும் தான் ஸாலர்னோ போர் துவக்கப்பட்டது. ஆனால், நேசநாடுகளும் ஜெர்மானியர்களை ஸாலர்னோவில் வளைத்துக் கொண்டு கடற்கரையிலுள்ள தங்கள் ஸ்தானங்களைக் காப்பாற்றிவிட்டார்கள். ஸாலர்னோவுக்கு அருகில் நடைபெற்ற கோரமான யுத்தத்தில் அதிக நஷ்டமேற்பட்டபோதிலும் அதற்குத் தகுந்த பயன் கிடைத்துவிட்டது. அத்துடன் 8-ம் படை பத்திரமாக முன்னேறி 5-ம் படையுடன் சேர்ந்து கொள்ளவும் வசதியேற்பட்டது. இதிலிருந்து அதிக லாபங்கள் கிடைத்துவிட்டன. ஸாலர்னோவில் நாம் வெற்றிபெற்றோம். கெஸ்ஸல்ரிங்க் புறங்காட்டி ஓடுகிறான். நேபிள்ஸுக்காக நடைபெறும் யுத்தம் கூடிய சீக்கிரம் ஆரம்பிக்கப்படும்.

இதாலிக்காக நடைபெறும் யுத்தமானது ஜெர்மனிக்காக நடைபெறும் யுத்தமாக மாறிவிட்டது. இந்த யுத்தம் இதாலியில் நடைபெறப்போகிறது.

வி வி வி வி வி

உலக யுத்தம். இதாலியின் வீழ்ச்சியிலிருந்து ருஷ்யாவிலும், சைனாவிலும், ஆஸ்திரேலியாவிலும் எதிரொலிகள் உண்டான போதிலும் மேற்கில் நடைபெற்றாலும் கிழக்கில் நடைபெற்றாலும் இந்த யுத்தம் உலகமளாவிய ஒன்றுபட்ட யுத்தமென்பதில் சந்தேகமில்லை. இந்த சம்பவத்தைப்பற்றி வியாக்கியானம் எழுதும் பொழுது சைனாவிலுள்ள டாகங்க் போ பின்வருமாறு சொல்லுகிறது. "ராணுவ முறையில் பஸிபிக்கில் நேசதேசத்தாரின் கடற்படை பலமதிகரித்து வரும் சங்கடத்தை ஜப்பான் அனுபவிக்கவேண்டும். ராஜீய முறைல் ஜப்பானுடைய உலக ஆதிக்கக் கொள்கையின் அஸ்திவாரம் கலைக்கப்பட்டுவிட்டது. இதுவரையில் ஜப்பானியரின் உலக ஆதிக்கம் மூவரின் ஒப்பந்தத்தைப் பொருத்திருந்தது. இந்தக் கக்ஷிக்காரர்களில் ஒருவர் மாண்டு போனார். மற்றொருவர் பலமாகக் காயமடைந்துவிட்டார். இதாலி சரணடைந்ததிலிருந்து ஜப்பானுடைய ஒருகால் முடமாகிவிட்டதென்று அது அறிந்து கொள்ளவேண்டும்.

"இதாலிய எதிர்ப்பின் சிதைவு ஜப்பானின் தோல்விக்கு முற்போக்கான நடவடிக்கை" என்று மிஸ்டர் கர்டின் சொல்லியிருக்கிறார். ஸெப்டம்பர் 22-ம் தேதி பெர்லினிலுள்ள அதிகாரவர்க்கத்தார்கள் "ரிசர்வ் படைகளின் குறைவினாலும், இதாலியில் நேசதேசத்தார்கள் இறங்கிவிட்டதினாலும் ஜெர்மனி ருஷ்யாவில் மகத்தான சேனைகளை, பின்வாங்கும்படி நேரிட்டது" என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

வி வி வி வி வி

ருஷ்யப் போர்முனை. "நமது துருப்புகள் எந்த இடத்தைக் கைவிட்டாலும், அவைகள் திட்டப்படிக்கும், சகல முஸ்தீப்புகளுடனும் பின்வாங்கிவிட்டனவென்றும் போர்முனையின் இசைவு கலைக்கப்படவில்லையென்றும் ருஷ்யப் போர் நிலைமையைப் பற்றி, டாக்டர் கோயபல்ஸ் சொல்லிவருகிறான். தொடர்ச்சியாக ஜெர்மனிக்கு ஏற்பட்டுவரும் தோல்விகளை மறைப்பதற்கு இவைகள் அழகான வார்த்தைகள். சூமி, விஸ்சிசான்ஸ்க், டாகன்ராக், மேரியாபோல், பிரியான்ஸ்க், நெழின், நோவாரோஸிஸ்க்

பாவலோகிராட், யாட்ஸேவோ, டுகௌவ்ஷினு, பிரிலூகி, லூபூயி, ரோம்னி, கிரோஸ்னு கிராட் அனபா முதலிய இடங்களிலிருந்து ஜெர்மன் படைகள் வெளியேற்றப்பட்டன. ஓரலில் முற்போக்கான ஜெர்மன் தற்காப்பு வரிகைகள் பிளக்கப்பட்டன. அதன்பின் அடுத்த அரணுன டென்னு பிரதேசமும் விழுந்துவிட்டது. இரண்டு வாரத்துக்குள்ளாகவே டான் பாஸ் பிரதேசத்திலிருந்து. ஜெர்மானியர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள். ஸ்மொலன்ஸ்க் குக்கும், கியவுக்கும் கிரிமியாவிக்கும் ஆபத்து உண்டாகிவிட்டது. செம்படை நீபர் நதியை சமீபித்துவிட்டது.

வி வி வி வி வி

பசிபிக் யுத்தம். அமெரிக்கப் படைகளின் தளகர்த்தரான ஜெனரல் மார்ஷல் சொல்லுகிருர். "நம்முடைய முன்னேற்றம் மெதுவாகயிருக்கிறதென்று தோன்றலாம். ஆகிலும், நாங்கள் சாவதானமாகவும், ஊக்கமாக வும் முன்னேறுகிறேம். போகும்பொழுது எதிரியின் விமானங்களையும், கப்பல்களையும் நாசம் செய்துகொண்டு போகிறேம்". ஸலாமூவாவும், லேயும் வீழ்ச்சிபெறுமுன் சென்ற இரண்டு மாதங்களில் 2,000 டன் எடைமானமுள்ள வெடி குண்டுகளை நாங்கள் ஒவ்வொரு இடத்திலும் பொழிந்திருக்கிறேம். இந்த இடங்களில் ஒரே சமயத்தில் கடல் மூலமாகவும் குடைகள் மூலமாகவும் துருப்புகளை இறக்குவது என்ற நேசதேசத்தாரின் புதிய பிரயத்தினம். எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே வெற்றிகளை அளித்துவிட்டது. அந்த முறைகளையே மேல் மேலும் கையாண்டுவருகிறேம். ஸெப்டம்பர் 22-ம் தேதி கிடைத்த தகவலிலிருந்து ஆஸ்திரேலியக் குடைத் துருப்புகள் லேக்கு வடமேற்கில் மாடாங்குக்குப் போகும் வழியி லுள்ள கியாபித் (கியாரி) என்னுமிடத்தில் இறங்கி, லேயிலிருந்து மார்காம் பள்ளத்தாக்கு வழியாகத் தப்பித்து ஓடிக்கொண்டிருக்கும் ஜப்பானியப் படைகளை வழிமறித்துவிட்டார்கள். லேயையும், ஸலாமூவாவையும் பிடித்த ஆர்தரின் துருப்புகளுக்கு கடல் மூலமாகவும், ஆகாய மார்க்கமாகவும் மோர்ஸ்பி, துறைமுகத்திலிருந்து அவன் ஸ்டான்லிமலைகளைத் தாண்டி யும் ஸப்ளைகளும், உதவிப்படைகளும் வந்து சேர்ந்தன என்பது கவனுர்கமுள்ளது.

வி வி வி வி வி

விமான நடவடிக்கை. சென்ற வாரத்தில் விமான நடவடிக்கையில் உயர்வான சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பிரிடிஷ் கால்வா யில் பொலோனிலிருந்து 10 மைல் தூரத்தில், பிரிடிஷ் விமானப் படையின் ரக்ஷணையுடன் நூற்றுக்கணக்கான இங்கிலீஷ் கப்பல்களில் இருவகைப்பட்ட ராணுவ ஒத்திகை நடைபெற் றது. அப்பொழுது ஜெர்மன் விமானப்படை சக்தியற்று ஒன்றும் செய்யக்கூடவில்லை.

அதே சமயத்தில் சண்டை விமானங்கள் 2,000 தடவைகளும் வெடிவிமானங்கள் 1000 தடவையும் பிரான்ஸ் பேரிலும், இங்கிலீஷ் கால்வாய் பேரிலும் பாய்ந்து சென்றன.

இதாலியில் நேசதேசத்தார்கள் முக்கியமான ஜெர்மன் போக்குவரவு ஸாதனங்களை இரவும், பகலும் நொருக்கி வருகிருர்கள்.

ஐரோப்பாவில் நேசதேச விமான நடவடிக்கையை கடிகாரம் போல் வட்டமாகத் தாக் குதல் என்று மிஸ்ட்டர் ஈடன் ஒரு சமயம் சொல்லியிருக்கிருர். அது அப்பொழுது எல்லா தினங்களிலும் நடைபெறுகிறது. ஜெர்மனியைச் சுற்றியிருக்கும் நகரங்களான போர்டோ, டான்ஸிக், போலஸ்தி, கிரீஸ், கலாப்ரியா, ஸார்டீனியா, கார்ஸிகா போன்ற பிரதேசங் களுக்கிடையே உள்ள நாடுகள் நொருக்கப்படுகின்றன. இந்த வட்டத்துக்குட்பட்ட பிரதேச மும்,வட்டத்தின் மேலுள்ளதுமான பிரதேசங்களும் முக்கியமாக வட ஆபிரிக்கா, ஸிஸிலியி லுள்ள விமான தளங்களிலிருந்து விமானங்களின் குண்டு வீசும் எல்கைக்குட்பட்டவை. ருஷ்ய விமானப்படை வட்டத்தின் கிழக்கு பாகத்திலுள்ள வளைவு பூராவையும் தாக்கி வருகிறது. எட்டாம் படை இதாலியில் வடக்கே முன்னேறும் பொழுதும், பிரான்ஸிலும், ஹாலந்திலும் நேசதேசங்கள் கேந்திர ஸ்தானங்களை ஏற்படுத்தும்பொழுதும் இந்த வட்டம் குறுகிவிடும்.

ஜனுதிபதி ரூஸ்வெல்டின் யுத்த விமர்சனம்.

(ஸெப்டம்பர் 17, 1943).

(சில குறிப்புகள்).

நேபிள்ஸில் படை இறக்கம்.

உலகில் எந்தவிடத்திலேனும் பாஸிஸ்ட் சேஷமிருந்தால் நாம் இப்போரில் பூர்ண வெற்றி பெற்றதாக பாத்தியதை கொண்டாடமுடியாது.

செப்டம்பர் 3-ம் தேதி ஸிஸிலியில் இதாலியுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப் பட்டது. ஆனால் செப்டம்பர் 8-ம் தேதிவரை அதனை அமுலுக்குக்கொண்டுவரமுடியவில்லை. நேபிள்ஸ் பிரதேசத்தில் அப்போதுதான் படை இறக்கத் தயாராகமுடிந்தது. சிறிது காலத்திற்கு முன்னரே நாம் படை இறக்கும் திட்டத்தைத் தயாரித்துவிட்டோம். யுத்த நிறுத்த உடன்பாடு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி நாம் நமது திட்டப்படி நடக்கத் தயாராக இருந்தோம். இதாலியப்படைத் தலைவர்கள் நம்முடன் போர் செய்வதை நிறுத்திவிடும்படி சேனைகளையும், கடற்படையாளர்களையும் வேண்டிக்கொண்டார்கள். இதாலியச் சிப்பாய்கள் குலைந்து ஆயுதசாதனமில்லாவிட்டாலும், ஜெர்மானியருடன் பல விடங்களில் போராடுகின்றனர். நிபந்தனையற்ற சரணாகதி ஷரத்தின்படி இதாலியக் கடற் படை நம்முடன் சேர்ந்துவிட்டது. அது இதாலிய மக்களின் விரோதிகளான நாஸிகளை அழிக்க அனுபவமான சாதகமாக இருக்கும்.

ஹிட்லர் முன்னேறித் தாக்குவதைக் குலைத்து தற்காப்பு முறையில் போராடும்படி நிர்ப்பந்தித்தபோது, அவன் ஐரோப்பாவை எவரும் ஊடுருவமுடியாத கோட்டையாகச் செய்துவிட்டதாகப் பெருமை பேசினான். ஆனால் அவன் தமது கோட்டைக்குக் கூரை மேயாமல் அலக்ஷியமாக விட்டுவிட்டான். இந்தக் கோட்டையில் தாக்கக்கூடிய பலவிடங் கள் இருப்பதை நாம் காலா காலத்தில் அவனுக்குக் காட்டுவோம்.

இந்தக் கூரையில்லாக் கோட்டையை பிரிடிஷ், அமெரிக்க விமானப்படைகள் அதிக பலனுறத்தாக்கிவருகின்றன. மேற்கு ஜெர்மனியைத் தாக்குவதுபோலவே தெற்கு, கிழக்கு ஜெர்மனியை இராப்பகலாகத் தாக்குவதற்கான விமானத் தளங்களை ஏற்படுத்துவதே தற்போது நமது நோக்கமாகும். பிரிடன் 1940—41-ம் வருஷங்களில் பெருவாரியான விமா னங்களால் தாக்கப்பட்டபோது பிரிடிஷ் பொது மக்களும், மன்னரும், பிரதம மந்திரியும் பிரிடன் சகித்துக்கொள்ளக்கூடுமென்று ருஜுப்பித்தபொழுதும், நமது ராணுவமும், பிரிடிஷ் விமானப்படையினரும் சும்மாயிருக்கவில்லை. அவர்கள் கோயரிங்கும், அவரது நாஸி பயமுறுத்தல் கோஷ்டிகளும் செய்யும் தவறுதல்களை ஆராய்ந்துவந்தனர்.

நேசநாடுகள் தவறு செய்யவில்லை.

அவர்களது கொடிய தவறுகளை நாம் செய்யவில்லை. நாஸிகள் செய்ததுபோல கொல்லும் ஆனந்தத்தைப் பெறுவதற்காகக் குடியிருப்பு வீடுகள்மீது நாம் குண்டுகளை வீசவில்லை. நாம் தொழிற்சாலைகள், கப்பல் கட்டுமிடங்கள், தளவாடக் கிடங்குகள், போக்குவரத்து சாதனங்கள் முதலிய ராணுவ இலக்குகளையே தகர்த்துவருகிறோம்.

ஜெர்மனி இன்னும் பெருந்தீங்கிழைக்கும் சக்தி பெற்றிருக்கிறது. ஆனால் நாளுக்குநாள் அந்தக் கெடுதலான சக்தி ஈவிரக்கமின்றி அழிக்கப்படுகிறது. இதனை ஹிட்லர் இதற்குள் அறிந்திராவிட்டால், அவர் விவேகத்தை அடியோடு இழந்தவனாவர்.

பெரிய விமானத்தாக்குதலில் பிரிடிஷ், அமெரிக்கர் ஏராளமான விமானங்களை இழக்கின் றனர். ஆனால் இந்த நஷ்டங்கள் துரிதமாக ஈடுசெய்யப்படுவதால் நமது குண்டு வீச்சின் அளவு இனி ஒருநாள்கூட குறையாது. திட்டப்படி நடக்க உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டுபோகவேண்டும்.

போலஸ்தி தாக்குதல்.

போலஸ்தி தாக்குதலில் 53 வெடிகுண்டெறியும் விமானங்களையும், 500 நேர்த்தியான விமானிகளையும் இழந்திருக்கிறோம். இது ஒரு பெருத்த நஷ்டமென்று தோன்றலாம். ஆகிலும், எதிரியின் யுத்த முயற்சிக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் கவனித்தால் இது அற்பமானதாகும். சாத்யமானால் நமக்கும் அப்பேர்ப்பட்ட நஷ்டத்தை உண்டுபண்ண ஜெர்மன் ராணுவ அதிகாரிகளும், ஜப்பானிய ராணுவ அதிகாரிகளும் 10,000 கணக்கான மனிதர்களைப் பலி கொடுக்கத் தயாராகயிருப்பார்கள். தைரியமும், தீரமும் பொருந்திய அமெரிக்கர்கள் சிறந்த முறையில் தாக்குதல் செய்திருக்கிறார்கள். இத்தாக்குதலால் கிடைத்த வெற்றியால் யுத்தம் குறுகி, எண்ணற்றவர்களது உயிர்காக்கப்படும்.

இதாலி நம் வசமாகிவிட்டால் நாம் ஜெர்மனியையும், அதன் கீழுள்ள இதர நாடுகளையும் தாக்கப்போவதற்கான தூரமும் அம்முறையிலுள்ள அபாயமும் குறையும்.

ருமேனியா, ஹங்கேரி, பின்லாந்து, பல்கேரியா போன்ற நாட்டு மக்களுள் சமாதான விருப்பமும், கிளர்ச்சியும் அதிகரித்துவருகிறது. இந்தத் தேசங்களுக்குள் இதாலியில் ஏற்பட்டதுபோன்ற பெரிய கலகத் தீ பற்றிக்கொள்ளுமென நம்புகிறோம்.

ருஷ்யாவுக்குப் பாராட்டு.

ருஷ்ய ராணுவத் திட்டம் ஜெர்மானியர் பலமாக உதைவாங்குவது ஒவ்வொரு அமெரிக் கரையும் உற்சாகப்படுத்தியது. இவ்வருஷம் கோடையில் ஜெர்மானியர் 1941-42ல் முன்னே றியதுபோல ருஷ்யாவில் வெற்றிகரமாக முன்னேறவில்லை.

ருஷ்யர்கள் முன்னேறித் தாக்கிவருகிறார்கள். தாக்குதல் பலமாகயிருக்கிறது. 1812-ம் வருஷம் நெபோலியன் முதுகுகாட்டி ஓடிய பின் இப்பொழுதுதான் மகத்தான ராணுவ வெற்றியை ருஷ்யர்கள் பெற்றிருக்கிறார்கள்.

கார்கோவ், ஸ்டாலினோவும் இதர ஜெர்மன் தளங்களும் பிடிபட்டதால், யூக்ரேனும், டாணெட்ஸ் பிரதேசமும் திரும்பக்கிடைத்துவிட்டன. கோடிக்கணக்கான ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள நிலங்களும், நூற்றுக்கணக்கான ஊர்களும் விடுபெற்றுவிட்டன. ருஷ்யர்கள், ஜெர்மானியர் ஒவ்வொருவரையும் ருஷ்யாவிலிருந்து ஒழித்து, ஜெர்மனி மீது படையெடுக்கும் உத்தேசங்கொண்டிருக்கின்றனர். இது உலகிற்கு ஆக்கமளிக்கக்கூடியது.

வட ஆபிரிக்கப் படையெடுப்பும், ஸிஸிலியின் ஆக்கிரமணமும், இதாலியில் படையெடுப்பும் நமது விமானத் தாக்குதல்களால் ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய இடங்களில் போர்புரிய ஜெர்மன் விமானப்படை சென்றதும் ருஷ்யப் படைகளுக்கு லெனின் கிராட்டிலிருந்து கருங்கடலுக்கு முன்னேற உதவியிருக்கின்றன. பால்கனிலும், தென் பிரான்ஸிலும், இங்கிலீஷ் கால்வாயோரத்திலும் ஜெர்மனி பல டிவிஷன்களை வைத்திருக்கச் செய்வதால் நாம் ருஷ்யர்கள் முன்னேற உதவியிருக்கிறோம். நான் சொல்லியிருப்பது போதுமானதல்லவென்று நினைக்கிறேன்.

ஜப்பானியப் போர்.

இம்மாதிரியே மத்தியதரைக், கடல் போரும், ஜப்பானியப் போருடன் நேரில் சம்பந்தங்கொண்டிருக்கிறது. சென்ற நவம்பரில் வட ஆபிரிக்காவில் நாம் படை இறக்கியபோது சிலர் நாம் பஸிபிக்கில் போரைத் தீவிரமாக நடத்துவதற்குறிய கடமையை அலக்ஷியம் செய்வதாக நம்பினர். அவர்கள் யுத்தத்தைத் தனிப்பட்ட பகுதிகளாகப் பிரித்துப் பேசுகிறார்கள். மேற்கு ஐரோப்பியமுனை, ருஷ்யப் போர்முனை, பர்மா போர்முனை, நியூகினியா, ஸாலமன்ஸ் போர்முனை இவைகள் தனிப்பட்ட போர்முனைகளென்றும், ஒன்றுக்கொன்று சம்பந்தமற்றவையென்றும் அவர்கள் நினைக்கிறார்கள். சிலர் விமான நடவடிக்கையென்றும், நில நடவடிக்கையென்றும், கடல் நடவடிக்கையென்றும் பிரித்துப் பேசுகிறார்கள்.

எல்லாப் போர்முனைகளிலும் ஒரே யுத்தம்தான்; ஒரே முறைப்படி நடைபெறுகிறது. மத்தியதரைக்கடலை விடுவித்ததால் நமது படைகள் இந்துமகா சமுத்திரத்திலும், வங்காள விரிகுடாவிலும் பூரண ஆதிக்கத்தைத் திரும்ப மேற்கொள்ள இயலும்.

இதாலி விரோதியாக இருந்தவரை, இதாலியக் கடற்படை ஆபத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்கும்வரை மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் கடற்படையில் ஒரு பெரும் பகுதியை மடக்கி வைக்கவேண்டியிருந்தது.

இந்தப் பெரும் படை தற்போது கிழக்கே புறப்பட்டுச் செல்லுமாறு விடுவிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானியரை மேன்மேலும் அதிகமாகத் தாக்குவதற்காக இவை செல்லும். மத்தியதரைக்கடல் எதிரி பயமில்லாமல் செய்தது தூரக் கீழ்த்திசைப் போருக்குப் பேருதவியாக இருக்குமென்பது போதியபடி வற்புறுத்தப்படவில்லை.

வட ஆஸ்திரேலியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலுள்ள கடல்தான் நமது கடற்படை பாதுகாப்புக்குட்படாதிருந்தது. மத்தியதரைக்கடல் வெற்றியால் இந்த உடைப்பு அடைபட்டுவிடும்.

எதிர்காலம் நமக்குக் கஷ்டமாக இருந்தாலும் ஜெனரல் டோஜோவின் கொலைகாரக் கோஷ்டிக்கு எவ்வளவு கஷ்டமேற்படுமென்பதை நினைத்துப்பாருங்கள். எல்லாத் திசைகளிலும் சியாங்-கே-ஷேக், ஜெனரல் மாக் ஆர்தர், அட்மிரல் நிமிட்ஸ், அட்மிரல் லார்டு லூயி மவுண்ட் பேடன் முதலியவர்களது படைகள் பழிவாங்கச் சூழ்ந்துவருவதைக் காண்பார்கள். ஐரோப்பாவில் ஜெர்மனியைத் தாக்கும் படைகள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதுபோல பல பஸிபிக் போர்முனைகளிலும், ஜப்பானுடன் போராடும் படைகள் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளனவாக இருக்கின்றன. அலூஷியன் தீவிலிருந்து நாம் அபாயத்தை விளைவிப்பதால், ஜப்பான் இதர பிரதேசங்களில் ஏராளமாகப் படைகளை உபயோகிக்க முடியாது. அட்டு, கிஸ்கா தீவுகள் கவனமாகத் தயாரிக்கப்பட்ட திட்டங்களின்படி பிடிக்கப்பட்டன. குறைகூறுகிறவர்கள் ஸியாட்டிலிலும், போர்ட்லாந்திலும், ஸான் பிரான்ஸிஸ்கோவிலும், லாஸ் ஏன்ஜல்ஸிலும் ஜப்பானியப் படையெடுப்பு அபாயம் ஏற்படுமென்று நடுநடுங்கிக்கொண்டிருந்தார்கள்.

பர்மாத் தாக்குதல்.

அமெரிக்கர்கள், ஆஸ்திரேலியர்கள் நியூஸீலாந்துப் படைகள், நியூகினி, ஸாலமன்ஸ் போரில் ஜப்பானின் பலத்தில் பெரும் பகுதியை அழித்து நமக்குப் புதிய தளங்கள் கிடைக்கும்படி செய்திருக்கின்றன. இவற்றிலிருந்து நாம் முன்னேறித் தாக்கமுடியும்.

நெடுங்காலமாக நாம் பர்மாவில் தற்காப்பு முறையில் போராடி வந்தோம். அங்கு முன்னேறித் தாக்குதலை மேற்கொள்ள நாம் தீர்மானிக்கிறோம்.

சீனாவுக்கு அதிகமான ஸப்ளையும், ராணுவ உதவியும் அனுப்பி வருகிறோம். சீனாவிலும், பர்மாவிலும் நாம் இழப்பதைவிட ஜப்பான், தினம் அதிகமான விமானங்களை இழந்துவருவதாகத் தகவல் வருகிறது. ஜப்பானின் ஹிருதயத்தை நேராகத் தாக்கத் தயாராகும்வரை நாம் இவ்வாறு செய்துவருவோம்.

யுத்தச் செலவு.

1940 மே முதல் இன்றுவரை யுத்தத்திற்காக 12,81,23 லக்ஷம் டாலர் செலவு செய்திருக்கிறோம். அதாவது, 38,436 கோடி ரூபாய்கள். தினம் யுத்தச் செலவு 25 கோடி டாலராகிறது. அதாவது 75 கோடி ரூபாய்கள்.

உற்பத்தியின் உன்னதி.

1943-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 1-ம் தேதி வரையில் நம்முடைய தளவாட உற்பத்தி பின்வருமாறு :—இந்தத் திட்டம் 1940-ம் வருஷம் மே மாதம் ஆரம்பிக்கப்பட்டது. 1,23,000 விமானங்கள் ; 3,49,000 விமான இஞ்சின்கள் ; 53,000 டாங்கிகள் ; 93,000 பீரங்கிகள் ; $9\frac{1}{2}$ மிலியன் சிறிய பீரங்கிகள் ; துப்பாக்கிகள், குழற்துப்பாக்கிகள், யந்திர பீரங்கிகள். 25,942 மிலியன் தோட்டாக்கள் ; 12,33,000 வண்டிகள்.

இன்று வரையில் வெளியேயனுப்பப்பட்ட தளவாடங்களில் பாதிபாகம், 1943-ம் வருஷம் முதல் 8 மாதங்களில் உண்டுபண்ணப்பட்டவை. அதாவது, 52,000 விமானங்கள், 23,000 டாங்கிகள், 40,600 பீரங்கிகள், 46,38,000 சிறிய பீரங்கிகள், 13,339 மிலியன் தோட்டாக்கள்.

1940-ம் வருஷம் மேமாதத்திலிருந்து 2,380 யுத்தக் கப்பல்களும், 13,000 துருப்பேற்றிச்செல்லும் கலங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. 1941-ம் வருஷம ஜனவரி மாதம் முதல் 1943-ம் வருஷம் ஜூன் மாதம் முடிய கட்டப்பட்ட மின்சார சக்தி நிலயங்களும், கப்பல்களில் உபயோகிப்பதற்காகக் கட்டப்பட்ட மின்சார யந்திரங்களும் சேர்ந்து 1941-ம் வருஷம் ஜனவரி மாதத்தில், அமெரிக்காவிலிருந்த மின்சார சக்தி அளவுக்குச் சமானமாகயிருந்தன. சென்ற 6 மாதங்களின் கப்பல் கட்டும் கணக்குகள் 1942-ம் வருஷம் பூராவிலும் கட்டப்பட்ட கப்பல்களுக்குச் சமானமானவை.

ஐரோப்பிய யுத்தம் துவக்கியபின் நமது பெட்ரோல் உற்பத்தியை 66 சதவிகிதமும், நிலக்கரி உற்பத்தியை 40 சதவிகிதமும், ரஸாயனப் பொருள் உற்பத்தியை 300 சதவிகிதமும், இரும்பு உற்பத்தியை 125 சத விகிதமும், மின்சார சக்தியை 79 சதவிகிதமும், எஃகு உற்பத்தியை 106 சதவிகிதமும் அதிகரித்திருக்கிறோம்.

கடைசியாக யுத்தம் நடைபெற்றுவரும்பொழுது, உலகத்தில் அக்கிரமமான ஆக்கிரமணம் நடைபெறாமல் தடுப்பதற்கும் சாச்வதமான முறையில் சர்வதேசங்களுக்குள் நியாயமான சம்பந்தங்கள் நிலைபெறுவதற்கும், நாங்கள் மற்ற நேசதேசத்தார்களுடன் ஒத்துழைப்போம். அமெரிக்காவின் இருபாகத்திலும் நாங்கள் நட்புள்ள அயல் வீட்டாராக வசித்து அதன் லாபங்களை அடைந்திருக்கிறோம். இந்த நிலைமை உலகம் பூராவிலும் நிலைபெறவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவ்விதம் செய்தால்தான் உள்நாட்டிலும், அந்நிய தேசங்களிலும் ஸ்வதந்திரத்துக்கும், நியாயத்திற்கும், உலக க்ஷேமத்திற்கும், பாடுபடும் ஆட்வர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் நாம் சத்தியவாதிகளாக ஆவோம்.

யூ படகுகள் போரில் ஜெர்மனி தோல்வியை ஒப்புக்கொள்ளுகிறது.

பிரிடனுடைய நெடும் போக்கான திட்டங்கள் பயனளித்து விட்டன.

(A. J. மாக்வின்னி).

ஜெர்மன் கடற்படை இலாகாவில் குழப்பம் ஏற்பட்டிருக்குமென்று ஜெர்மனியிலிருந்து சில ஹேஷ்யங்கள் புலப்படுமென்று எதிர் பார்த்தேன். ஜெர்மன் யூ படகுகள் அழிக்கக்கூடியதற்கு மேலாக மூன்று மடங்கு அதிகமான நேசதேசக் கப்பல்களை ஜெர்மன் விமானப்படை ஆகஸ்டு மாதத்தில் மூழ்கடித்துவிட்டதென்று பிரசாரர்கள் பிரசங்கம் செய்யவேண்டுமென்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் உத்தரவிட்டபொழுது ஜெர்மனியின் கடத் தளபதியான கார்ல் டோனிட்ஸின் பேரில் யூ படகுகளின் தோல்விகளுக்காக குற்றம் சாட்டியது போல தோன்றுகிறது.

யூ படகுகளின் பாச்சா பலிக்கவில்லையென்று டிஸம்பர் மாதத்திலேயே ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் அறிந்து விட்டார்கள். ஜனவரி மாதத்தில் 52 வயதுள்ளவும், ஜெர்மன் யூ படகு நிபுணருமான கடற்தளபதி கார்ல் டோனிட்ஸை ஜெர்மன் கடற்படை பூராவுக்கும் உயர்தர அதிகாரியாக நியமித்தார்கள்.

ஜெர்மன் கடற்படை துறைமுகங்களில் பத்திரமாக இருக்கின்றன.

நார்வேயிலுள்ள வளைகுடாக்களில் கப்பல்கள் பத்திரமாகயிருக்குமென்று முடிவு செய்து ஜெர்மனியின் கொள்ளைக் கப்பல்களிலிருந்த தேர்ச்சி பெற்றவர்களில் சிலரை டோனிட்ஸ் குறைத்து விட்டான். கடலில் நேசதேசத்தாரின் எவ்வகைப்பட்ட நடவடிக்கைகளையும் யூ படகுகள் சமாளித்து விடுமென்றும் அவன் ஹிட்லரிடம் சொன்னான். கடற்கரை பிரதேசங்களில் உண்டாகியிருக்கும் ஏராளமான அவசியங்களையும் தவிர ஜெர்மன் விமானப்படை யூ படகுகளுக்குக் காபந்து செய்யச்சென்றது என்று ஏற்பட்டதிலிருந்து யூ படகுகள் தான் ஹிட்லரின் சிறந்த ஆயுதம் என்ற பேச்சு வியர்த்தமானதென்று யூ படகுகள் காட்டி விட்டன என்று பெர்லின் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளுவது போலிருக்கிறது. ஆகையினால் யூ படகுகளின் பேரிலுள்ள நம்பிக்கை மிகவும் குறைந்து விட்டது. இந்த மனப்பான்மை மாறுதலிலிருந்து டோனிட்ஸ் பாதிக்கப்படுவனா என்பது சந்தேகாஸ்பதமானது. ஏனென்றால் அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டால் யூ படகுகளின் கௌரவத்துக்கு ஹானியை விளைவித்ததாகும். சமீப வஸந்த காலத்தில் "பிரிடனை கடலில்தான் முறியடிக்க முடியும்" என்று டோனிட்ஸ் சொன்னதை ஜெர்மானியர்கள் இதற்குள் மறந்திருக்கமுடியாது. இந்த அபிப்பிராயத்தை பூர்த்தி செய்விக்க அவன் ஒரு நடவடிக்கையையும் செய்து முடிக்கவில்லை. சமீப காலத்தில் ஜெர்மானியர்கள் ஏராளமான சப்பல்களை மூழ்கடித்துவிட்டதாக மிகையாகப் பேசிவருவதிலிருந்து ஜெர்மன் விமானப்படை கடல் மார்க்கங்களில் கப்பல்களை மூழ்கடிக்க முடியாது என்று நினைப்பது முட்டாள்தனமாகும். நேசதேசக் கப்பல்களை வெகுதூரம் பறந்து செல்லக்கூடிய ஜெர்மன் விமானங்கள் அதிகமாகத் தாக்கக்கூடுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

பிரிடனின் நீண்டநோக்கமுள்ள திட்டம்.

பிரிடன் பிழைத்திருப்பதற்காகச் சண்டை போடவேண்டியிருந்த சமயத்தில், எதிரியைத் துறத்தியடிப்பதற்கும், ஜெர்மனியை இறுதியில் பலமாகத் தாக்குவதற்கும் இரண்டு திட்டங்களைத் தயார் செய்தது. இந்த நீண்டநோக்கமுள்ள திட்டத்தைப்பற்றிய விவரங்கள் பிரிடனின் கடற்படை இலாகாவின் முதல் பிரபுவான மிஸ்ட்டர் A. V. அலெக்ஸாண்டர் சமீபத்தில் செய்த பிரசங்கத்தில் அடங்கியிருக்கின்றன. ஸிஸிலிய வெற்றியில் ஈடுபட்ட மூன்று யுத்தக் கப்பல்களின் பெயரைச் சொல்லிவிட்டு அவர் மூன்று இதர போர்க் கப்பல்களைப் பற்றியும் பிரஸ்தாபித்தார். ஒன்று பீபஸ் என்பது. இது சென்ற யுத்தத்தில் குண்டுகளைப் பொழிவதில் கியாதிபெற்ற கப்பல். மற்ற இரண்டும் பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த ராபர்ட்ஸும், அபெர் கிராம்பியும். கடற்படையைச் சேர்ந்த எந்த நூலிலும் இவ்விரண்டு கப்பல்களைப் பற்றிய விவரங்களிருக்கவில்லை. இதுவரையில் அவைகள் ரகசியமான கப்பல்களின் ஜாபிதாவில் சேர்க்கப்பட்டிருந்தன. இவைகள் 1940-ம் வருஷத்தில் பிரிடனுக்கு நெருக்கடியான சமயத்தில் கட்டப்பட்டன. 20 மைல்களுக்கப்பாலிலுள்ள ஜெர்மன் படை

கள் பிரிடனில் படையெடுத்து விடுமென்று பீதியுண்டாகியிருந்தபொழுது ஹிட்லரின் ஐரோப்பாவை வெகுநாட்கள் கழித்து பீரங்கிக் குண்டுகளால் தாக்குவதற்கு பிரிடன் கப்பல்களைக் கட்டிவந்திருக்கிறது. இதுதான் இந்த போர்க் கப்பல்களின் அலுவல்கள். அதிக ஆழமில்லாத இழுப்புக் கப்பல்கள் 15 இஞ்சு வாயுள்ள பீரங்கிகளுள்ளவைகள். எதிரியைத் தாக்கும் முயற்சிகளில் அவைகள் மிதக்கும் கோட்டைகள் போன்றவை. பிரிடனை ஜெர்மன் விமானங்கள் நொருக்கித் தவிடுபொடியாக்கிவந்த சமயத்தில் அச்சுநாடுகளுடைய ஐரோப்பாவைத் தாக்குவதற்காக பிரிடன் கப்பல்களைத் தயார்செய்து வந்தது.

நான் ராபர்ட்ஸ் என்னும் கப்பலில் மத்தியதரைக்கடல் நடவடிக்கைகளுக்காகத் தயார் செய்யப்பட்டபொழுது சென்றேன். 1940-ம் வருஷத்தில் டங்கர்க்கிலிருந்து தோல்வியுற்று வந்த சேனையிலுள்ளவர்களுடன் சம்பாஷித்தேன். நாசகாரிகளிலிருந்தும், யூ படகுகளைத் தாக்கும் கப்பல்களிலிருந்தும் இந்தப் போர்க் கப்பலுக்கு மாற்றப்பட்ட வேலைக்காரர்களுடனும் பேசியிருக்கிறேன். யூ படகுகளின் நடமாட்டம் அதிகமாகயிருந்தபொழுது அவர்கள் சிரமப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அநேக நிகழ்ச்சிகளை எதிர் பார்த்து சந்தோஷப்பட்டார்கள். "இந்தக் கப்பலிலுள்ளவர்களுக்குப் பழிக்குப்பழி வாங்குவதற்கு நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. ஆகிலும், கொஞ்சம் பொருமைவேண்டும். சமயம் வரும்பொழுது எதிரியை இதிலுள்ள பெரிய பீரங்கிகள் தவிடுபொடியாக்குவதற்கு சக்தியும் சாமர்தியமுள்ளவையாகயிருக்குமென்பதில் திருப்தி உண்டாகுகிறது" என்று அவர்கள் சொன்னார்கள்.

இந்தப் புதிய போர்க் கப்பல்கள் முதல் முதலில் ஸிஸிலியில்தான் நடவடிக்கைகளை ஆரம்பித்தன. அவைகளைப்பற்றி நாம் இனி அடிக்கடி கேள்விப்படுவோம். பிரிடனிடம் இன்னும் போருக்கு லாயக்கான அநேக கப்பல்களிருக்கின்றன. ஜெர்மனி முன்னேறும் சக்தியையிழந்து பின்வாங்கப்போகிறதென்று தீர்க்கதரிசிகள்தான் கண்டுகொள்ளக்கூடிய நாளில் இந்தக் கப்பல்களுக்கு திட்டங்கள் போடப்பட்டு அவைகள் கட்டப்பட்டன.

ஹிட்லரின் யூ படகு தளமான பிஸ்கே விரிகுடாவில் யூ படகுகளைத் தீரத்துடன் அழித்து வந்த ரென் வகுப்பைச்சேர்ந்த சிறிய கப்பல்கள் பிரிடன் தற்காப்பு யுத்தம் செய்துவந்தபொழுது கட்டப்பட்டவைகள்.

யூ படகுகளை அழிக்கும் சிறிய கப்பல்கள்.

கார்வெட்டிக் கப்பல்களையும், போர்க் கப்பல்களையும் விடப் பெரியதும் பெரிய நாசகாரிகளைவிட சிறியதும், ஆனால், அதிக சக்தி வாய்ந்ததுமான இந்தச் சிறிய கப்பல்கள், யூ படகுகள் துணைக்காவல்கொண்ட சாமான் கப்பல் கூட்டத்தைத் தாக்குமுன் அவைகளைத் தாக்கும் கடற்படையின் ஒரு பகுதியைச் சேர்ந்தவைகள் நாசம் விளைவிக்கும். இந்தக் கப்பல்களும் நீர்மூழ்கிகளைத் தாக்கும் நேசதேச விமானங்களும் சேர்ந்து தளங்களிலிருந்து புறப்பட்டு பிஸ்கே விரிகுடாவைத் தாண்டிச்செல்லும் யூ-படகுகளைக் கண்டுபிடித்து பரிஷ்காரமாக அவைகளை அழித்து விடுகின்றன. கடைசியாகக் கிடைத்த கடற்படை இலாகாவின் அறிக்கையிலிருந்து ஒரே ஒரு தாக்குதலில் 7 யூ படகுகள் அழிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இவ்விதமான நடவடிக்கைகளுக்குப்பின் வட அட்லாண்டிக்கிலுள்ள வியாபார மார்க்கங்களிலிருந்து யூ-படகுகள் கிளம்பி அதிக லக்ஷியங்களில்லாத பத்திரமான பிரதேசங்களுக்குச் சென்று விட்டன.

இப்பொழுது காலதாமதம் ஜெர்மனிக்கு பாதகமாக முடிந்துவிட்டது. ஒரு வருஷத்துக்கு முன் ஆபிரிக்க கடற்கரைக்கும் நன்னம்பிக்கை முனைக்கும் சமீபத்தில் ஏராளமான துணைக்காவல் கப்பல்கள் தாக்குதலுக்கு இலக்காகயிருந்தன. ஆனால் அதற்கப்புறம் நிலைமை மாறிவிட்டது.

ஐரோப்பிய அரணும்—அதை எவ்விதம் ஊடுருவிச் செல்லுவதும்.

(லிபரேடர்.)

ஐரோப்பாவுக்காக யுத்தம் துவக்குவதில் கையாளப்பட வேண்டிய தாக்குதல் முறைகளைப்பற்றி பெருவாரியாக எழுதப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு ஒப்பிடக்கூடிய நடவடிக்கைகள் இதுவரையில் இருந்திராது என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. தற்காப்பு உள்ள

ஒரு கடற்கரைப் பிரதேசத்தில் துருப்புகளை இறக்குவது என்ற பழைய முறை இனிமேல் பொருந்தாது. அதற்கு முற்றிலும் மாருக விமானப்படையின் உதவிகொண்டு பாண்டலேரியா அரண் தரைப் போரில்லாமலேயே பிடிபட்டுவிட்டது.

கடல் யுத்தத்திலும், நிலப் போரிலும் ஒன்றுபட்ட வேலை செய்யக்கூடிய விமான நடவடிக்கை நடைபெற்று கடற்கரை யுத்த அரங்கத்திலும், அதற்குச் செல்லும் மார்க்கங்களிலும் விமான ஆதிக்கம் ஏற்பட்டால் அதுதான் கடற்கரை யுத்தத்தில் முடிவான நிலைமையை உண்டு பண்ணும். மூன்று வருஷங்களாக நடைபெற்ற யுத்தத்தின் படிப்பினையாக தளவாட அதிகரிப்புடன் அவைகளை ஒழுங்காக அமைத்து உபயோகிக்கும் திட்டங்கள் அவசியமென்று புலப்பட்டுவிட்டது. யுத்தத்தில் படைகள் பலமாகப் போர்புரிய வேண்டுமானல் சேனதிபதிகளிடம் ஒற்றுமைவேண்டும். இதைவிட சகலவிதமான படைகளுக்குள்ளும் நல்லுணர்ச்சி ஏற்பட்டு ஒரு குறிப்பிட்ட யுத்தத்தை நடத்த எல்லா வகையான படைகளும் ஒன்றுபட்டு தாக்கவேண்டும். வட ஆபிரிக்காவில் டூனிஸியா கேந்திர ஸ்தானத்தில் பத்திரமாகயிருந்த எதிரியைத் தாக்குவதில் மூவகைப் பட்ட படைகளும் ஒத்துழைத்ததால்தான் வெற்றி கிடைத்ததென்று நாம் அறிந்திருக்கிறோம். ஒன்றுபட்ட சேனதிபத்யத்துடன் தனிப்பட்ட போர் முனைகளில் சேனைகளை நடத்தும் முறையும் சிலாக்யமாகயிருந்தது. அந்த முறையை கஷ்டசாத்யமான ஐரோப்பிய யுத்த அரங்கத்திலும் உபயோகிக்கும் காலத்தை எதிர்பார்த்து வருகிறோம்.

ஐரோப்பாவுக்காக நடைபெறப்போகும் யுத்தத்தில் ராணுவ அவசியத்தைப்பற்றிய பிரச்னைகளை பொது ஜனங்கள் சர்ச்சை செய்வதில்லை. அந்த அவசியங்களும் இணையற்றவைகள். ஐரோப்பிய கண்டத்தில் நாம் ஒரு இடத்திலோ அல்லது பல இடங்களிலோ இறங்குவதென்பது சென்ற யுத்தத்தில் ஜெர்மனி இரண்டு போர்முனைகளில் போர் புரிய நேரிட்டு நஷ்டமடைந்தது போல் இப்பொழுதும் செய்துவிடும் உத்தேசத்துடன்தானென்று அநேகர் நினைக்கிறார்கள். அது அப்படியில்லை. இப்போதைய பிரச்னை மிகவும் சிக்கலானது. அதன் விளைவுகள் அதிக திருப்திகரமானவை.

பழைய அனுகூலம்.

சென்ற யுத்தத்திற்கும், இந்த யுத்தத்திற்குமுள்ள ராணுவ தந்திரங்கள் வேறுபாடுள்ளவை. சில புள்ளி விவரங்களைக் கவனித்தால் இது புலப்படும்.

சென்ற யுத்தத்தில் மொத்தமாக 1,000 மைல்கள் நீளமுள்ள இரு போர் முனையில் ஜெர்மனி போர் புரிந்தது. மேற்குப் போர்முனை 400 மைல்களும், கிழக்குப் போர்முனை 600 மைல்களும் நீளமுள்ளதாகவுமிருந்தன. இந்த இரண்டு போர்முனைகளுக்கும் மத்தியில் சுமாராக 1,000 மைல் பிரதேசமிருந்தது. அதன் பெரும் பாகத்திலும் ஜெர்மனியின் உள்நாட்டு இருப்புப் பாதைகள் ஏராளமாக அமைக்கப்பட்டிருந்தன. இந்த நிலைமையானது ஜெர்மனிக்கு தைரியத்தையும், சலன சக்தியையும் அளித்து வந்தது. தைரியம் ஏற்படுவதற்கு 1,000 மைல்கள் கொண்ட பிரதேசத்தில் இடைவிடாது படைகளைத் திருத்தி அமைத்துவிட வசதியிருந்ததுதான் காரணம். எந்த மார்க்கத்திலும் பலஹீனமான இடங்களே கிடையாது. சலன சக்திக்கு துருப்புகளை ஒரு போர் முனையிலிருந்தோ பகுதியிலிருந்தோ மற்றொரு போர்முனைக்குத் துரிதமாகவும், பத்திரமாகவும் கொண்டுபோக சௌகரியமிருந்தது.

அந்த யுத்தத்தில் சுமாராக 1,500 மைல்கள் நீளமுள்ள கிழக்கித்திய போர்முனையுடன், மேற்கிலும், தெற்கிலும் 5,000 மைல்கள் நீளமுள்ள கடற்கரையைத் தற்காப்பு செய்ய ஜெர்மனி ஏற்பாடுகள் செய்யவேண்டும். போர்முனைகள் சராசரி 2,000 மைல்கள் தூரத்திலிருக்கின்றன. ஒரு போர்முனைக்கும், மற்றொரு போர்முனைக்கும் ஒரு பிராந்தியத்திலிருந்து மற்றொன்றுக்கும் செல்லும் போக்குவரவு மார்க்கங்கள் ஐரோப்பா கண்டத்தை அளாவியிருக்கின்றன. மார்க்கங்கள் ரஸ்தா வழியாகவும் சொல்பமான இருப்புப் பாதைகளின் வழியாகவும் செல்லுகின்றன. மார்க்கங்கள் பழுதுபட்டும், விமானங்களினுடையவும் கொரில்லாப் படைகளுடையவும் நாசவேலைக்குட்பட்டுமிருக்கின்றன. இதைவிட ஏராளமான சாமான்களின் போக்குவரத்தும் நடைபெறவேண்டும்.

புதிய சங்கடம்.

இந்தக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டுவிட்டதால் சென்ற யுத்தத்தில் ஜெர்மனிக்குச் சாதகமாக யிருந்த ஒன்றுபட்ட நடவடிக்கையும் உள்நாட்டு அரணின் சிலாக்கியமும், இப்பொழுது

அதற்குப் பயன்படாது. உண்மையாக ஜெர்மனியின் தற்போதிய நிலைமை பத்திரமானதல்ல. ஆகிலும், ஒரு ஆறுதல் மட்டுமிருக்கிறது. ஜெர்மனியின் விரிவான போர்முனையானது கடற்கரையை ஒட்டியிருப்பதாலும் அங்கே இறங்குவது கஷ்ட சாத்யமானதாலும், ஜெர்மனிக்குச் சிறிது சௌகரியமிருக்கிறது.

முதலெடுப்பில் ஏற்பட்டிருக்கும் இந்தச் சங்கடத்தை நிவர்த்தி செய்து கடற்கரைகளில் கேந்திர ஸ்தானத்தை ஸ்தாபித்துவிட்டால் ஜெர்மன் துருப்புகள் பிரிடிஷ் கால்வாய் கடற்கரையைத் தவிர மற்ற போர்முனைகளில் அபாயத்துக்குட்பட்டு போக்குவரவு சிரமங்களுடன் போர்புரிய நேரிட்டுவிடும். ஸ்டாலின்கிராடிலும், நார்வே, கிரீட் சம்பந்தமான போர்முனைகளில் டுனிஸியாவிலும், ஏற்பட்ட கஷ்டங்கள் ஜெர்மனிக்கு ஏற்பட்டுவிடும். ஆங்காங்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் அணிவகுப்புகளை கடற்கரையிலுள்ள கேந்திர ஸ்தானங்களுக்கு எதிரியின் துருப்புகளிறங்கிய இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாக ஜெர்மனி உதவிக்கு அனுப்பிவிடலாம். இந்த உதவிப் படைகளும் அழிந்துவிட்டால் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் உபரிப் படைகளைக் கொண்டுவருவது சிரம சாத்யமானது. அதற்குக் காலதாமதம் ஏற்படும். போக்கு வரவு பிரச்னைகள் உண்டாகும். ஒவ்வொரு தடவை படைகளைச் சலனம் செய்வதிலிருந்தும் ஜெர்மனி தற்காப்பு செய்யவேண்டிய பெரிய பிரதேசத்தின் ஒவ்வொரு பாகமும் பலஹீனமடைந்து விடும்.

சுருக்கமாகச் சொன்னால் உள்நாட்டு தற்காப்பு அரண் ஏராளமான பிரதேசத்தை அவலம்பித்திருப்பதால் அது நிஷ்பிரயோஜனமற்றதாக ஆகிவிட்டது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. போதுமான கடற்படை பலமுள்ள ஒருவர் அநேக பிராந்தியங்களில் வெளிப்புறத்திலுள்ள அரண்களைத் தாக்குவதற்கு அதிக வசதி பெற்றிருக்கிறார். உள்நாட்டு அரணுக்குள்ளிருப்பவருக்குத் தற்காப்பு வசதிகள் அதிகமில்லை. இப்பேர்ப்பட்ட வசதி கடல், விமான ஆதிக்கமுள்ள பிரிடனுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சக்தியை பிரிடன் சிறந்த முறையிலும் உபயோகித்துக் கொள்ளலாம்.

நாம் கூறிய வசதியின் பூரா முக்யத்வத்தையும் அறிய வேண்டுமானால் ஜெர்மனியின் போர்முனைகளின் விஸ்தாரமான சுற்றளவை கவனிக்கவேண்டும். ஜெர்மனியின் நிலைமை எப்படியிருக்கிறதென்றால், நாம் எந்த இடத்திலும், எவ்வித தியாகமும் செய்து ஊடுருவிச் சென்றுவிட்டால் அதன் அதிர்ச்சிகள் ஜெர்மன் யுத்த அரங்கம் பூராவிலும் தோன்றிவிடும். ஜெர்மனியின் தற்காப்பு அரண்களை யோசிக்குமளவில் நாம் முடிவான மகத்தான நடவடிக்கை ஆரம்பிக்குமுன் ஜெர்மானியப் படைகளை பல இடங்களில் தாக்குவதுதான் நமது முக்கிய யுத்த தந்திரமாகும். ஒரு முக்கியமான போர்முனையை ஏற்படுத்தி தரையில் அபார சக்திவாய்ந்த ஜெர்மனியுடன் போர் புரிவதென்பது நம்முடைய அக்கரைக்குப் பொருத்தமானதல்ல. இந்த முறையை நாம் சென்ற யுத்தத்தில் பிரெஞ்சு மக்களின் நட்பின் ஆதரவினால் கையாண்டுவந்தோம். ஆகிலும், இந்த நடவடிக்கையில் கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் லாபகரமாக நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு சந்தர்ப்பமில்லாமல் போய்விடுகிறது.

அச்சு நாடுகளின் போர்முனைகளை விஸ்தரிக்கவேண்டும்.

இந்த யுத்தத்தில் பிரிடனுடையவும், அமெரிக்காவினுடையவும் கடல், நில சக்தி மூலமாக ஜெர்மன் போர்முனைகளை விரிவுப்படுத்தி ஒரே காலத்திலோ அல்லது தொடர்ச்சியாகவோ பல்வேறு இடங்களில் ஜெர்மன் துருப்புகளைப் போர் செய்யும்படி செய்து, அவைகளை பலஹீனப்படுத்தியும், துண்டாக்கியும், வளைத்துக்கொள்வதும்தான் முக்கியமான யுத்த தந்திரமாகும். வேறு விதமாகச் சொன்னால், ஜெர்மானியர்கள் தாங்களாகவே ஸ்டாலின்கிராடிலும், காகஸஸிலும், டுனிஸியாவிலும் உண்டுபண்ணிக்கொண்ட நிலைமையை அநேக இடங்களில் நாம் உண்டு பண்ணவேண்டும். ஜெர்மனியின் தற்காப்பு பிரதேசத்தின் சுற்றளவு மிகுதியாகயிருக்கிறபடியால் அவ்விதம் செய்வதற்கு நமக்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

இந்த யுத்த தந்திரத்தை அனுஷ்டிக்கவேண்டுமானால் மிகவும் விரிவான திட்டங்கள் போடப்படவேண்டும். திட்டங்களைப் போடுவதற்கு மிகவும் பலமான அதிகார வர்க்கத்தார் வேண்டும். படைகளைச் சரியான முறையில் வ்யூகரசனை செய்யும் முறையில் மூவகைப்பட்ட படைகளின் உயர்தரமான ஒன்றுபட்ட ஒத்துழைப்பு அவசியமென்பது போல, அதேவிதமாக ஐரோப்பிய அரணைத் தாக்குவதற்குத் திட்டம் போடுவதற்கும் ஒரே ஒரு சிறந்த சேனாதிபதி அவசியம். கிர்சனிலிருந்து பாலர்மோ வழியாக பெட்ஸாமோவுக்குச் செல்லும் தாக்குதலை ஆரம்பிக்காவிட்டாலும் கிர்கனிஸிலிருந்து புகாரெஸ்டுவரையிலும் முன்னேறி யுத்தம் செய்ய திட்டம் போட ஒரு சிறந்த தலைவர்வேண்டும்.

ஹிட்லரின் வேனிற்கால பேச்சுகள்.

(மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகை).

யுத்தம் நடந்துவரும் ஒவ்வொரு வருஷத்திலும் ஸெப்டம்பர் மாதத்திலோ அல்லது அக்டோபர் மாத முதலிலோ ஹிட்லர் பேசிய பேச்சைத் தொடர்ச்சியாய் கவனிப்போம். ஹிட்லரின் பேச்சு சரித்திரத்தில் அவைகள் முக்கியமானவைகளாய் இருக்கின்றன.

1940-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 4-ம்தேதி ஹிட்லர் மிகுந்த உணர்ச்சியோடிருந்தான். அவன் பேச்சைக்கேட்டவர்கள் எல்லாம் பிரிடனை முடிவுசெய்து விடுவதாய் அவன் உணர்ச்சியுடன் கூறியபொழுது மிகவும் குதூகலத்தோடு அவன் பேச்சைக்கேட்டனர். "பிரிடிஷ் விமானப்படை 2,000, 3,000 அல்லது 4,000 கிலோகிராம் (Kilogram) நிறையுள்ள குண்டுகளைப் போட்டால், நாம் 1,50,000, 1,80,000, 2,00,000, 3,00,000 அல்லது 4,00,000 கிலோகிராம் (Kilogram) நிறையுள்ள குண்டுகளை அதற்கு மேலான அளவுள்ள குண்டுகளையும் ஒரே இரவில் போடுவோம்."

1941-ம் வருஷம் அக்டோபர் மாதம் 3-ம் தேதி ருஷ்யத் தாக்குதலைப்பற்றி "நாம் நம் திட்டத்தின்படி சரியாகவே நடவடிக்கைகள் நடத்தியிருக்கிறோம். நம் திட்டங்களில் சிறிதும் மாறுதல் ஏற்படவில்லை. இந்த எதிரி ஏற்கனவே முறியடிக்கப்பட்டுவிட்டான். இனி இவன் தலைதூக்க முடியாது" என்று அவன் பேசினான்.

1942-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 30-ம் தேதி அவன் பேச்சின் உணர்ச்சி தளர்ந்துவிட்டது. இருந்தாலும், ஸ்டாலின்கிராட்டை "கைப்பற்றி விடுவோம். நீங்கள் அதைப்பற்றி நிச்சயமாய் இருக்கலாம்" என்றும் சொன்னான். அவன் சரணடையமாட்டான் என்பது மட்டும் நாம் திரும்பவும் கூறவேண்டும். "இரண்டாம் போர்முனையைப்பற்றி" அவன் நம்பியிருந்தான். "என் முன்னால் ஒரு தீவிரமான எதிரி இருப்பின் இரண்டாம் முனை எங்கு ஏற்படுத்தலாம் என்பதை நான் நிச்சயமாய்க் குறிப்பிடுவேன். ஆனால் இந்த முட்டாள்களாகி ராணுவ அதிகாரிகளுடன் அவர்கள் எங்கு நம்மை தாக்குவார்கள் என்பது கண்டுபிடிப்பது யாராலும் முடியாது. பைத்தியக்காரத்தனமான தாக்குதல்கள் நடைபெறலாம். அது ஏற்றுக்கொள்ள முடியாத சமாசாரமாகும். ஆனால் பைத்தியக்காரர்களோடும் இந்த குடிகாரர்களோடும் நாம் எதிர்த்தால் என்ன நடைபெறும் என்பது யாராலும் சொல்லமுடியாது. உண்மையில் நாம் எங்குவேண்டுமானாலும் சண்டையிடத் தயாராயிருக்கவேண்டும். மிஸ்ட்டர் சர்ச்சில் அடுத்தபடியாக தாக்குதலை எங்கு ஆரம்பித்தாலும் சரி அங்கு 9-மணி நேரம் தரைமீது மட்டும் தங்கியிருந்தால் நலம் என்பதை நான் மிஸ்ட்டர் சர்ச்சிலுக்குச் சொல்லுவேன்." இந்த கடைசிப் பேச்சில் வேறு எவ்விதமான பரிஹாசமும் கிடையாது.

பாஸிஸத்தின் வீழ்ச்சி முறை.

சரித்திர பூர்வமான கடைசிக் கூட்டம்.

ரோம் அதிகார வர்க்கத்தாரின் வரலாறு.

பெரிய பொதுக்கூட்டத்தில் நிபந்தனைகளுக்கு மத்தியிலும், பல சூழ்ச்சிக்காரர்களின் சதியாலோசனைகளின் மத்தியிலும் பாஸித்தத்வம் எவ்விதம் வீழ்ச்சிபெற்றது என்பதைப் பற்றி ரோம் அதிகார வர்க்கத்தார் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள்.

கடைசி சமயத்தில் முஸோலினியை ஒருவர் சுழல் துப்பாக்கியால் சுட்டுவிடுவதாக பயமுறுத்தினாரென்று சொல்லப்படுகிறது. அற்புதமான நாடகமேடையிலும், கோமாளிகள் தோன்றும் கூட்டங்களிலும் காணக்கூடிய நிந்தனையும் துரோக புத்தியைக் கண்டிப்பதுமான

சம்பவங்கள் அந்தக் கூட்டத்தில் காணப்பட்டன. அந்த நடவடிக்கைகளின் பூராவிருத்தாந்தமும் ஒரு பத்திரிகையின் ஆறு பத்திகளில் அச்சிடப்பட்டிருக்கின்றன. அந்த சமயத்தில் இதாலியில் முகாண்மையாகவிருந்த ஒருவரின் சாக்ஷியத்தைக்கொண்டு இந்த விருத்தாந்தம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

பாஸிஸ்டு கிராண்டு சபை கடைசியாகக் கூடினபொழுது முஸோலினி ஸிஸிலியில் ஏற்பட்ட படையெடுப்பைப்பற்றிப் பேசினுன். இதாலியத் துருப்புகள் இன்னும் பலமாக எதிர்த்துப் போராடுமென்று எதிர் பார்த்ததாக முஸோலினி சொன்னுன்.

இதைக் கேட்டவுடன் ரோமாபுரிக்குள் பாஸிஸ்டு கக்ஷியார்கள் படையெடுத்தபொழுது தலைவர்களாகயிருந்த நால்வரில் ஒருவரான டி போனே என்பவர் எழுந்திருந்து முஸோலினியைக் குறித்து சுழல் துப்பாக்கியைக் குறி பார்த்தார். இதாலியத் துருப்புகளின் கௌரவத்திற்கு முஸோலினி அவமானம் செய்து விட்டானென்று அவனுக்குக் கோபமுண்டாகி விட்டது.

பாஸிஸத்தின் கடைசி நாட்களில் முஸோலினிக்கு கோபம் அதிகரித்துக்கொண்டே வந்தது. "இதாலிய ஸோல்ஜரின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கு நீ சரியானவனல்லவென்றும் உன்னைச் சும்மாவிடக்கூடாதென்றும்" முஸோலினி உரக்கக்கத்தினுன்.

ரோமாபுரியின் மேல் படையெடுத்தபொழுது மற்ளெரு புரட்சி கக்ஷியை கிளப்பியும் அபிஸீனிய யுத்த ஆரம்பத்தில் இதாலிக்குக் தோல்விவரும்படியாக யுத்தம் செய்தும் டி போனே இழிவு பெற்றிருக்கிருன்.

76-வயதுள்ள அந்த ஜெனரல் மௌனமடைந்து தன்னுடைய துப்பாக்கியைச் சுடாமல் சும்மாவிருந்துவிட்டான்.

விவசாய இலாகா மந்திரியான பாரெஸ்சி என்பவர் கோபாவேசத்தினுல் மயக்கமடைநது கீழே விழுந்தார். பழிச்சொல்லுகள் மிகுதியாகயிருந்த அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகள் தடைபட்டன. கூட்டத்தின் அங்கத்தினர்கள் அவருக்கு தாது புஷ்டி மருந்துகளைப் போட்டினுர்கள். மறுபடியும் அவர் மயக்கம் போட்டு விழுந்தார். இந்தத்தடவை அவர் தானுகவே எழுந்துவிட்டார். அவர் பேரில் ஏராளமான பழிச்சொற்கள் சரமாரியாக விழுந்தன. அவர் சுயப்பிரக்ஞை அடைந்தபொழுது கண்ணீர்விட ஆரம்பித்தார்.

ஸியானே பிரபுவைக்கண்டு முஸோலினிக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. "இவன் என்னுடன் நட்புகொண்டது முதல் என்னைக் காட்டிக்கொடுத்துவிட்டானென்று முஸோலினி கத்தினுன்.

"இருபது தடவை என்னிடம் வந்து பிரபுக்களின் கௌரவம் வழங்கப்படவேண்டும் என்று நீ என்னைக் கேட்டாயல்லவா" என்று கிராண்டி பிரபுவை முஸோலினி ஹேளனம் செய்தான்.

மீட்டிங்கு முடிந்தவுடன் பாஸிஸ்டு கக்ஷியின் மாஜி காரியதரிசியான பாரினுஸி, முஸோலினி தோல்வியடைந்து விட்டானென்று கண்டுகொண்டு மெதுவாக நழுவி வியா டெக்ளி அஸ்டாலிக்குச் செல்லும் மாடிப்படிக்கட்டுக்குச் சென்றுவிட்டான். வித்தியா சாலையின் தலைவரும், லண்டனில் மாஜி அயல்நாட்டு மந்திரியாக இருந்த கிராண்டியுடன் முஸோலினியை ஒழிக்கச் சதியாலோஜனை செய்தவருமான பெடர்ஸோனி, கூட்டத்தைவிட்டு தொழிற்சாலைத் தலைவர் பாலெல்லா திடிரென்று போன காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் "ஜாக்கிரதை நம்மைக் கொலை செய்வதற்காகத் தயார் செய்யப்படுகிறது" என்று ஒரு கடிதத்தில் வரைந்து அதை தன்னுடைய சதியாலோசனை நண்பர்களிடம் காண்பித்தான்.

முஸோலினியின் வீழ்ச்சிக்குக் காரணமான தீர்மானம் எப்படி விவாதிக்கப்பட்டு பாஸ் செய்யப்பட்டது என்ற விவரங்கள் உலகமறிந்தவைதான். கடைசியாக அந்தப் பொதுக் கூட்டத்தை விட்டு வெளியேறியபொழுது, தற்காப்பு சபையின் தலைவரான டூருங்காஸி காஸனேவா ஸியானே பிரபுவை சந்தித்து "வாலிபரே, நீர் செய்த குற்றத்துக்கு உம்முடைய உயிரை வாங்குவதுதான் சரியான சிக்ஷையாகும். உனக்கு என்னுடைய ஆசீர்வாதம்.

ஆகிலும், அதிலிருந்து நீர் வெகு காலம் ஜீவித்திருக்கவேண்டுமென்று நான் எதிர்ப் பார்க்கிறேன் என்று நினைக்கவேண்டாம்" என்று சொன்னான்.

பாஸிஸத்தின் வீழ்ச்சியைப்பற்றி எழுதும் அதிகார விருத்தாந்தத்தில் ஹிட்லரும், முஸோலினியும் கடைசியாக சந்தித்தபொழுது போர் தொடுக்கும் நிலைமையில் பிரிந்தார்களாம். ஸிஸிலியிலுள்ள நிலைமையை சமாளிக்க ஜெர்மனி அதிகமான ராணுவ ஒத்தாசையை அனுப்ப வேண்டுமென்று முஸோலினி வேண்டிக்கொண்டான். ஆயுதங்களை அனுப்ப இஷ்டமில்லாமல் ஸோல்ஜர்களை மட்டும் அனுப்புவதாக ஜெர்மனி ஒப்புக்கொண்டது. முஸோலினிக்கு இது பிடிக்கவில்லை. பிறகு விவாதம் நிம்மதியாக நடைபெறவில்லை. இதாலி இன்னும் அதிக ராணுவப் படைகளை அனுப்பவேண்டுமென்று ஹிட்லர் வேண்டினான். அது நியாயமற்றதென்று முஸோலினி மதித்தான். முஸோலினி உதவி வேண்டுமென்பது பொறுத்தமாகாதென்றும் ஹிட்லர் விவாதித்தான். முஸோலினிக்குக் கோபம் வந்துவிட்டது.

தன்னுடைய அருவருப்பை கடுமையான சொற்களைப் பேசி அவன் வெளியிட்டானென்று சொல்லப்படுகிறது. ஒன்றும் முடிவு பெறாமல் இரண்டு யதேச்சாதிகாரிகளும் பிரிந்தார்கள். அங்கு பிரசன்னமாகியிருந்த இதாலியப் படைத்தலைவரான அம்பிராஸியோ பூராத் தகவல்களையும் மன்னரிடம் சமர்ப்பித்தார். முஸோலினிக்கு எதிராக படோக்ளியோ தலைமையில் ஒரு கக்ஷியும், கிராண்டி, பெடர்ஸோனியின் தலைமையில் மற்றொரு கக்ஷியும் இதாலியிலிருந்து வருகிறதென்று அவருக்குத் தெரியும். இரண்டாவது புரட்சிக்காரர்கள் முஸோலினி ஒழிய வேண்டுமென்றும் பாஸிஸ்டு நிர்வாகம் நிலை பெற்றிருக்கவேண்டுமென்றும் அபிப்பிராயம் கொண்டவர்கள்.

நிர்வாகத்தைத் திருத்தியமைக்க இருவர்களும் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மன்னர் இருகக்ஷிக்காரர்களுடனும் தொடர்பு வைத்து வந்தார். கிராண்டி மத்தியஸ்தம் செய்வதாக முன் வந்தபொழுது அவனுக்கு மன்னர் இடம் கொடுக்கவில்லை. இந்த அலுவல் பாஸிஸ்டு பொதுக்கூட்டத்தைச் சேர்ந்ததென்று கிராண்டியிடம் அவர் சொன்னார். முஸோலினிக்கு விரோதமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அரசியல் முறையில் முஸோலினியை அப்புறப்படுத்திவிடலாமென்றார்.

இதாலியின் ராணுவ நிலையும் நெருக்கடியான நிலைமையை அடைந்துவிட்டதென்றும் ஜெர்மனியுடன் உள்ள சம்பந்தங்களும் மறைந்துவிட்டனவென்றும் இதற்கு முஸோலினியின் நடத்தையும் கொள்கைகளும்தான் காரணங்களென்றும் மன்னருக்கு புகட்டப்பட்டது. அதற்குப் பிறகு ஜூலை மாதம் 24-ம் தேதி மாலை 6 மணி முதல் மறுநாள் விடியற்காலம் வரையில் குழப்பமான பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதற்குப் பின் மன்னர் முஸோலினியைக் கூப்பிட்டனுப்பியபொழுது அவர் காலதாமதம் செய்து மன்னர் சொல்லுவது விளங்கவில்லையென்று பாசாங்கு செய்து வந்தார்.

கிராண்டியும், பெடர்ஸோனியும் மன்னரிடம் கூட்டத்தின் நடவடிக்கைகளை ஸவிஸ்தாரமாகச் சொல்லிவிட்டார்கள். முஸோலினி கடைசியில் மன்னரைச் சந்தித்தபொழுது அவர் மன்னரிடம் பூரா விருத்தாந்தத்தையும் சொல்லாமல் சிறிது சொல்லிவிட்டு எதிர் காலத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தான். வெட்கப்பட்டுக்கொண்டிருந்த முஸோலினியின் பேச்சில் குறுக்கிட்டு கால தாமதத்திற்கு ஜவாப்புக் கொடுக்கவேண்டுமென்று மன்னர் கேட்டார். தன்னுடைய நடவடிக்கைகளுக்கு ஞாயம் கற்பிக்க அநேகம் முகாந்திரங்களைச் சொல்லிய பின் முஸோலினி நிலைமையை நன்றாய் அறிந்துகொண்டான்.

பிறகு மன்னர் பின்வருமாறு சொன்னார். "உனக்கு அடுத்தபடியாக பிரதம மந்திரி பதவியை வகிக்க ஒருவரை நியமித்துவிட்டேன். அவர் உத்தியோகத்தை ஏற்கனவே ஏற்றுக்கொண்டுவிட்டார். அவர்தான் மார்ஷல் படோக்ளியோ. அவர் சொல்படி நீர் நடந்துகொள்ளவேண்டும்".

முஸோலினிக்கு மறுபடியும் ஆக்ரோஷமுண்டாகிற்று, பயமுறுத்த ஆரம்பித்தான். மன்னரையும், சேனைகளையும் எதிர்த்து நிற்க வலுவுள்ளவனென்று அவன் சொன்னான். மன்னர் எச்சரிக்கை செய்தும் பயன்படவில்லை. தன்னுடைய வருங்கால நடவடிக்கையைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாக அவன் மன்னரிடம் சொன்னான்.

ஜெர்மனியின் இரண்டாம் விமானப் போர்முனை பிரச்னை.

(பிரடெரிக் டாம்லின்ஸன் அப்ஸர்வரின் விமான நிருபர்).

ஜெர்மனியின் இரண்டாம் முனையைப்பற்றிய பிரச்னை விமானப் போரினால் என்ற விஷயத்தில்தான் அதிகமாய் இருக்கிறது. சென்ற யுத்தத்தில் ருஷ்யா முறியடிக்கப்பட்டபின், ஜெர்மனிக்கு, பிரெஞ்சு, பெல்ஜியன், பிரிடிஷ் படைகளோடு சண்டை செய்வதற்குப் போதிய மனிதபலம் இல்லாது இருந்தது. 1943-ம் வருஷம் போதிய மனிதபலம் இல்லாத கஷ்டம் சென்ற யுத்தத்தைவிட இப்பொழுது மிகவும் அதிகமாய் இருக்கிறது.

ருஷ்யா திரும்பவும் தாக்கப்பட்டால் ஜெர்மன் விமானப்படை ஜெர்மனியின் தரைப் படையின் பிடையெடுப்புகளுக்கு மிகவும் உதவியாயிருக்கவேண்டும். தாக்குதல்களிலோ, எதிர்த் தாக்குதல்களிலோ ருஷ்ய எதிர்ப்பைச் சமாளிக்கத் தயாராயிருக்கவேண்டும். பிரிடிஷ் தளங்களிலிருந்து சென்று பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியின்மேல் போடும் குண்டுகளை எதிர்த்து நிற்பதன்னியில், நார்வே முனையிலிருந்து பால்கன் ஸமஸ்தானங்கள் வரையிலும், நாம் செய்யும் தாக்குதல்களையும் இந்த ஜெர்மன் விமானப்படை எதிர்க்கவேண்டியிருக்கிறது.

ருஷ்யாவிலுள்ள நீண்ட யுத்த அரங்கத்தில், யுத்தம் புரியவும், நார்வேயிலிருந்து பிரான்ஸு வரையிலும், இதாலியிலும், பால்கன்ஸிலும் யுத்தம் புரியவும், காத்துக்கொள்ளவும் ஜெர்மனியிடம் 5,000 விமானங்கள் இருக்கின்றன. இவைகளன்றியும் ஜெர்மனியிடம் விமானப்படையும், தரைப்படையும் ஒருங்கே சேர்ந்து சண்டை செய்யும் சாமர்த்தியமும் அனுபவமும், இருக்கிறது. மேலும் விமானப்படையை சமயத்திற்குத் தகுந்தாற்போல் உபயோகப்படுத்தும் சாமர்த்தியமும் உளது.

திடீரெனவும், சட்டெனவும் தாக்குதல் செய்து சமாளிக்கும் பலம் ஜெர்மானியரிடமுள்ளதென்பது டியப்பில் நடந்த போர்களினின்றும் வெளியாகிறது. இந்த நடவடிக்கையில் ஜெர்மானியர்கள் நடுப்பகலிலே நெடுந்தூரம் குண்டுகளை வீசும் விமானங்களை உபயோகப்படுத்தினார்கள். அவ்விதம் செய்தது யுத்த முறையின் பிரகாரம் பெரும் பிழையேயாகும். ஆனால், அப்படி செய்ததினின்றும் அப்படைகளின் வேகத்தையும், அவைகள் யுத்தத்தில் சற்றும் தளராமல் முனைவர் என்பதையும் வெளிப்படுத்துகிறது. தாக்குதல்களை அதிகமாக நடத்தினால் ஜெர்மனிக்கு இன்னது செய்வதென்று தெரியாமல் போய்விடும்.

ஜெர்மனியின் முன்னணி விமானங்களில் ஐந்தில் இரு பகுதிகள் ருஷ்யாவினால் நாசமாக்கப்பட்டாலும்கூட, மீதியுள்ள ஜெர்மன் விமானங்களால், தாக்குதல் ஒரு இடத்தில் மட்டும் நடந்தால் அதனைச் சமாளிக்கக்கூடிய போதிய பலம் உள்ளது. ஜெர்மன் விமானப் படைபலம், சண்டையிடும் விமானங்களைச் சடுதியில் இரட்டிப்பாய், செய்துகொள்ளும். உதாரணமாய், லஹாவர் பிரதேசத்தில் அப்படியே நடந்தது. அப்பிவில்லியிலிருந்தோ, அல்லது செயிண்ட் ஓமர் பிரதேசத்திலிருந்தோ, அல்லது ஜெர்மனியின் உள் நாட்டிலிருந்தோ படைகளை வாபஸ் பெற்றுக்கொள்ளும். ஆனால், ருஷ்யாவிலோ, மத்தியதரைக்கடல் பிரதேசத்திலோ அவ்வாறு செய்ய முடியாது.

தாக்குதலுக்கு காத்துக்கொள்ளும் முறை.

மேல் நாடுகளிலே ஜெர்மன் விமானப்படையின் எண்ணிக்கை 1,000. பகலிலும், இரவிலும் சண்டையிடும் விமானங்கள்தான். அந்நாட்டில் தாக்குதல்களுக்குத் தயாராக அல்லது 200 அல்லது 300 நீண்டதூரம் குண்டுபோடும் விமானங்கள் உளது என்று தெரிகிறது. டியப், போரிலிருந்து நம் விமானப்படை மிகுதியும், அமெரிக்க நீண்டதளம் குண்டுபோடும் விமானங்களாலும், ஒரு இஞ்ஜினுடைய வேட்டை விமானங்களாலும் பலப்படுத்தப்பட்டு, பிரிடனிலே போதுமான விமான பலம் படைத்திருக்கிறோம். இவைகளைக்கொண்டு, ஒரே சமயத்தில் இங்கிலீஷ் கால்வாய்க்கு அப்பால் நடக்கும் பல தாக்குதல்களை நடத்தவும், சமாளிக்கவும் முடியும். ஜெர்மானியர்களுக்கு இவ்விஷயம் நன்கு தெரியும். இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டி தாக்குதல்கள் செய்வது சுலபம் என்பதும் தெரியும். இருப்பினும், ஒரே முனையில் நம் தாக்குதல்களினால் முடிவான வெற்றியுண்டாகாதவரையில் நாம் தாக்குதல்கள் செய்வதில்லை.

இங்கிலேயின் போக்கை ஜெர்மானியர்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள். ஆகையினால்தான் அவர்கள் பிரிடனை இரவிலே படையெடுப்பதில்லை. வேட்டை விமானங்களால் குண்டுகளைப் போடும் தாக்குதல்கள் இனி நடக்கும் யுத்தங்களிலே மிகவும் முக்கியமானவை அல்ல.

ஜெர்மானியர்களிடம் 177 ஹெயின்கெல் விமானங்கள் இருக்கின்றதென்றால் அது வேறு வகையாகும். ஆனால், ஜெர்மன் விமானப்படை புத்திசாலித்தனமாக பதிலுக்குப் பதிலாய் தாக்குதல் செய்யவேண்டுமென்ற எண்ணத்தை அவ்விதம் செய்யாமல் தடுத்து நிற்கிறது.

சேமித்துவைக்கப்பட்ட மீதமான படை.

மூன்று நாட்களில் பேர்லந்தின் விமான பலத்தை தகர்ப்பதற்காக ஜெர்மனி 1,500 விமானங்களை உபயோகப்படுத்தியது. நார்வேயில் 1,000 விமானங்களுக்குக் குறைவாகவே உபயோகப்படுத்தப்பட்டன. பால்கன்ஸ் நாட்டிலும், கிரீட்டிலும் 1,500 விமானங்களுக்கு குறைவாகவே உபயோகப்படுத்தப்பட்டன. முன்பே ஜெர்மனியால் தனக்குத் தேவையான விமானங்களை உபயோகப்படுத்தமுடிந்தது. 4,000, 5,000 விமானங்கள் இந்த யுத்தத்தில் தனக்குப் போதுமென நினைத்து யுத்தத்தில் இறங்கியது. அதுமுதல் அதே எண்ணிக்கையை வைத்துக்கொண்டும் சண்டையில் முனைந்து நின்றது. சேனை தயாரிப்பதும், ராணுவம் தயார் செய்தலும், விமானப் போக்குவரத்துகளும் ஆகிய இவைகளை எல்லாம் முன்னேறித் தாக்கும் ஒரு படைவகுப்பை உண்டாக்கும் உத்தேசத்தோடுதான்.

உண்மையில் போதுமான விமானங்கள் ஜெர்மனியிடம் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால், நமக்குக் கிடைக்கும் சில உண்மையான விஷயங்களினின்றும் அவர்களிடம் போதுமான பயிற்சிபெற்ற விமானிகளும், விமானப்படையும் இல்லை என்று தெரிகிறது.

ருஷ்ய யுத்த அரங்கத்தில் ஜெர்மனிக்கு ஏற்பட்ட விமான நஷ்டம் மிகவும் அதிகம். அங்கு ஜெர்மனி 3,000 விமானங்களுடன் யுத்தத்தை ஆரம்பித்தது. பிளான்டர்ஸ் யுத்தத்தின்போதும், பிரிடன் யுத்தத்தின் போதும் சில 100 விமானங்கள்தான் ஜெர்மனியின் கைவசமிருந்தது. மாஸ்கோவின்மேல் 1,000 குண்டுபோடும் விமானங்களையும், ஸ்டாலின் கிராடின்மேல் 1,000 விமானங்களைத் தாக்குதலுக்கு ஜெர்மனி உபயோகப்படுத்தியது.

இப்பொழுது 2,000 விமானங்களுக்குக் குறைவாகவே கீழ்த்தேசத்தில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. ஜெர்மன் விமான உற்பத்திசாலையில் மாதத்திற்கு 3,000 விமானங்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் முடிவு ஏற்படும் காலத்தில் இது மிகவும் குறைவான எண்ணிக்கையேயாகும்.

அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்களை அடக்கியாளுவதில் பொதுமக்களின் உதவி.

அளவுக்குமேல் சேமித்துவைப்பவர்களை பிரிடன் எவ்விதம் கண்டுபிடித்து வருகிறது.

ஏழைமக்களைப் போல அளவு கடந்து சேமித்து வைப்பவர்களும், நம்முடைய சிநேகிதர்கள். உலகத்தில் எல்லா பாகங்களிலும் அவர்களிருக்கிறார்கள். ஆகிலும், ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொருவிதமான முறையில் இந்த நடவடிக்கை நடைபெற்று வருகிறது, தனிப்பட்ட நபர்களின் ஆசைக்கு இடம் கொடாத பொருளாதார முறையை அனுஷ்டித்து வரும் ருஷ்யாவிலும், சேமித்து வைப்பதற்கு ஒன்றுமில்லாத ஜெர்மனியிலும் அளவு கடந்து சேமிப்பது நடைபெறாது. ஏற்கனவே யிருந்த பொருளாதார நிலைமை நிலைத்திருப்பதும் அதிகமாகச் சேமிப்பதற்கும் அநியாய விலைக்கு விற்பதற்கும் போதுமான சாமான்களும் உள்ளதுமான பிரிடனிலும், அமெரிக்காவிலும் அளவுக்குமேல் சேமித்துவைப்பவர்கள் உற்பவித்து அரசாங்கத்தாரின் அமுலுக்கும், பொதுமக்களின் கவனத்துக்கும் சவால் விடுக்கிறார்கள்.

பிரிடனில் ஏற்பட்டிருக்கும் தற்போதிய பொருளாதார அடக்குமுறை திட்டங்களையும் மீறி அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்களுக்கு வசதியிருக்கிற தென்பது நம்மைப்போன்ற சிலருக்கு விந்தையாக யிருக்கிறது. உணவுப் பொருள் இலாகா அவசியமான உணவுப் பொருள்

களைக் கொள்முதல் செய்து நியாயமாக பிரிடன் பூராவும் விநியோகம் செய்த பின்னும், கொள்முதல் சாமான்கள் எல்லாவற்றிற்கும் பங்கீடு முறைகள் அனுஷ்டிக்கப்பட்ட பின்னும், விலைவாசிகள் அடக்கு முறைச் சட்டங்கள் பிரகாரம் மானிட வாழ்க்கைக்கு வேண்டிய சகல விதமான சாமான்களுக்கும் உயர்தர விலையை நிர்த்தாரணம் செய்த பின்னரும், சில்லரை வியாபார ஸ்தலங்களில் வியாபாரம் திட்டப்படி போஸ்டாபீஸ் நடவடிக்கைகள் போல நடந்து வரும்பொழுதும், வருமான வரிகள் அதிகமாக விதிக்கப்பட்டு அனாவசியமானச் செலவுகளைச் செய்ய வசதியில்லாத பொழுதும், பிரிடனில் அளவுக்குமேல் ஒருவரும் சேர்த்து வைக்க மாட்டார்களென்று நம்பக்கூடும். நல்ல முறையில் வாழ்க்கை நடைபெற்று வரும் குடும்பங்களிலும், சிறிய சம்பவங்களும், நாடகங்களும் உண்டாகுவது போல பிரிடனில் சிறந்த முறையில் நடைபெற்றுவரும் பொருளாதார வாழ்க்கையிலும், அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்களும் அவர்களுக்கு போஷகர்களுமிருந்து வருகிறார்கள்.

அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்கள் பிரிடனில் இரண்டு முறையைக் கையாளுகிறார்கள். சட்டத்திலுள்ள குறைவுபாடுகளைக் கண்டுபிடித்து அதன் மூலம் சட்ட வரம்பை மீறிவிடுகிறது. அல்லது அகப்பட்டுக்கொள்ளாமல் மறைந்து நின்று சட்ட வரம்புக்குள் அகப்படாமல் தப்பித்துக்கொள்ளுவது. 1941-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 30-ம் தேதியன்று காமன்ஸ் சபையில் விவாதம் நடைபெற்றபொழுது, வடக்கு மிட்லாந்தில் உணவுப்பொருள்களின் விலைவாசிகளைப் பரிசீலனை செய்யும் கமிட்டியின் தலைவர் பங்கீடு செய்யாத உணவுப் பொருள்கள் சம்பந்தப்பட்ட மட்டில், முக்கியமாக டப்பிகளில் அடைக்கப்பட்ட உணவுப் பொருள்களில் நம்பக்கூடாதபடி அநேகர் அநியாய லாபம் சம்பாதித்துவிட்டார்களென்று வெளியிட்டார். ஒரு வருஷம் கழித்து 1942-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் உணவுப் பொருள் இலாகா பார்லிமெண்டரி காரியதரிசியான மேஜர் லாயிட் ஜார்ஜ், ஒரு வருஷத்தில் அநியாய லாபம் சம்பாதித்தவர்கள், இதர உணவுப் பொருள் சம்பந்தமாகக் குற்றம் செய்தவர்களில் 40,000 பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்று காமன்ஸ் சபையில் வெளியிட்டார்.

பொதுஜனங்களின் ஜாக்கிரதை.

இந்த அநியாய நடவடிக்கைகளை பிரிடனிலுள்ள அதிகார வர்க்கத்தார் மட்டும் கவனித்து வரவில்லை. அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்களை நசுக்கும் பேரில் ஜனங்களின் பரிபூர்ணமான ஒத்துழைப்பும் அதிகாரிகளுக்குக் கிடைத்தது. பொதுஜனங்களின் ஒத்துழைப்பு இருவகைப்படும் முதலாவதாகக் குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதில் ஜனங்கள் அரசாங்கத்தாருக்குப் பேருதவி செய்தார்கள். இரண்டாவதாக ஜனங்கள் மனதாரவும் பூரா சம்மதத்துடனும் நியாய, நிர்வாக இலாகா சட்ட திட்டங்களுக்கு உட்பட்டிருந்தார்கள். சாதாரண காலங்களில் அவைகளை அவர்கள் பொருத்துக் கொள்ளமாட்டார்கள். ஏராளமாக உற்பத்தி செய்யும் முதலாளிகளும், சாமான்களைப் பங்கீடு செய்யும் வியாபாரிகளும் அதிகார வர்க்கத்தாருடன் மனதார ஒத்துழைத்திருக்கிறார்கள். அதன் பயனாகச் சாமான்களின் இருப்புக் கணக்கும், சாமான்கள் போய்ச் சேரவேண்டிய லக்ஷியங்களும் சுலபமாய்க் கண்டுபிடிக்கப்பட்டன. ஆகையால், அதிகமாகச் சேமித்து வைப்பவர்களை எளிதில் கண்டுபிடிக்க வசதியேற்பட்டது. உதாரணமாக, முதல் தடவை நடைபெற்ற ஒரு கூட்டுறவு நடவடிக்கையை விவரிப்போம். பிரிடனிலுள்ள மார்கரீன் உற்பத்தி செய்பவர்கள் தங்களுடைய உற்பத்திகளை நியாயமாக விநியோகம் செய்வதற்கு அரசாங்கத்தாருடன் ஏற்பாடு செய்வதாக ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்.

சுருங்கச் சொன்னால் பிரகிருத யுத்தத்தில் பிரிடிஷ் தொழிலாளியும், பெரிய வியாபாரியும் நல்ல முறையில் நடந்துகொள்ளுகிறார்கள். 19-ம் நூற்றாண்டிலிருந்த அவனுடைய முன்னோர்கள் "கோரமான யுத்தம் நடைபெற வேண்டுமென்றும், அறுவடைக் குறைவு ஏற்பட வேண்டுமென்றும் அடிக்கடி பிரார்த்தனை செய்து வந்தார்கள்".

அயோக்யர்களைக் கண்டு பிடிப்பதில் முன் ஜாக்ரதையுடனிருக்கும் வேலையானது சாதாரண பொதுமக்கள்களைச் சேர்ந்ததாகும். பணக்காரர்கள் விலைவாசியின் உயர்வை ஆதரிப்பதற்கு ஆசையுள்ளவர்கள். அவர்களில் சிலர் சட்ட விரோதமாக விற்பனை செய்யப்படும் சாமான்களை விலைக்கு வாங்குவதில் குதூகலமடைகிறார்கள். இம்மாதிரியான ஆசையுள்ளவர்களைக் கண்டு அநியாய லாபம் சம்பாதிக்க முயற்சிக்கும் நபர்களைக் கண்டுபிடித்து சிக்ஷிப்பதற்காக, அநியாய லாபம் சம்பாதிக்க முயற்சிக்கும் நபர்களைக் கண்டுபிடித்து போலீஸாருக்குத் தகவல் கொடுப்பதற்காக ஏராளமான உத்தியோகப்பற்றற்ற பாதுகாப்பு கோஷ்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வேலையில் பொதுமக்களுக்கு போதனை செய்யும் நிலயங்களும் ஈடுபட்டிருக்கின்றன. பிரிடன் பூராவிலும் அவைகளுக்கு தெருக்கோடி நிகண்டு என்ற பெயர் வழங்கப்படுகிறது.

உத்தியோகப்பற்றற்ற இந்த கோஷ்டிகளைத் தவிர ஒவ்வொரு பிரதேசத்திலும் உத்தியோக முறையில் விலைவாசிகளை நிர்த்தாரணம் செய்யும் சிறிய கமிட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அந்தக் கமிட்டியில் வாங்கிச் சாப்பிடுகிறவர்களும், வியாபாரிகளிடம் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். வுல்டன் பிரபுவின் கொள்கைகளை அனுசரித்து கமிட்டி மெம்பர்கள் பொதுமக்களிடையே பொறுக்கியெடுக்கப்படுகிறார்கள். "சத்தியமானவரையில் ஜனங்களே இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.

இந்த சந்தர்ப்பத்தில் பிரிடனிலுள்ள பத்திரிகாசிரியர்கள் எக்காலத்திலும் அரசாங்கத்தாரை ஆதரித்து, அளவுக்குமேல் சேமிப்பதைத் தடுப்பதற்காக ஏற்படுத்தவேண்டிய சட்ட திட்டங்களையும் அரசாங்கத்தாருக்கு சிபார்சு செய்துமிருக்கிறார்கள். உணவு பிரச்னையைத் தீர்க்கும் முறையில் அவர்களுக்குள்ள சர்வ சாமர்த்தியத்தையும் பத்திரிகைகள் உபயோகப்படுத்தியிருக்கின்றன. டெயிலி ஹெரல்ட் பத்திரிகையில் எழுதப்பட்ட "உணவுப் பொருளை வீண் செய்யாதே" என்று தலையங்கமிட்ட கட்டுரையானது இந்தப் பிரயத்தனங்களில் ஒன்றாகும்.

கடுமையான சட்ட திட்டங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை.

மற்றொரு முறையிலும், பிரிடிஷ் பொதுமக்கள் அதிகார வர்க்கத்தாருக்கு பேருதவி செய்திருக்கிறார்கள். அநியாய லாபம் சம்பாதிப்பவர்களை அடக்கும் முறையில் அவர்கள் அரசாங்கத்தாரிடம் கடுமையான உத்தரவுகளைப் போடவேண்டுமென்று அடிக்கடி மன்றாடியிருக்கிறார்கள். இங்கிலாந்தில் நிறுவப்படும் சட்ட திட்டங்களெல்லாம் பொதுஜன அபிப்பிராயத்தை அடிப்படையாக உள்ளவை. அவைகள் அரசாங்க சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டதும் அவைகள் தெருக்கோடிகளிலும், பொதுஜனங்கள் கூடும் விடுதிகளிலும் பிரேரேபிக்கப்பட்டவை. பிரிடனிலுள்ள சாராயக் கடைகளில்தான் பொதுஜன அபிப்பிராயம் முதல் முதலில் உருவடைகிறது. அதற்கு உதவியாக மனோல்லாஸமும் சேர்ந்துவிடுகிறது. 1941-ம் வருஷம் மார்ச்சு மாதம் 30-ந்தேதியன்று அமெரிக்க டைம்ஸ் பத்திரிகையின் லண்டன் நிருபர் பொருத்தமாகத்தான் பின்வருமாறு எழுதினார்:-"சாராயக் கடைகளில் அக்கிரமக்காரர்களைச் சுட்டுக் கொன்றுவிடவேண்டுமென்ற பேச்சு முதலில் கிளம்பியது". ஸ்டார் என்னும் தாராளக் கக்ஷியின் பத்திரிகையில் இந்தக் கெடுதலை நிவர்த்திக்க வேண்டுமென்ற மனப்பான்மையுடன் "இந்நாட்டில் இவ்விதமான கெடுதல் ஒரு பொழுதும் நடைபெற்றதில்லை. 18-வது நூற்றாண்டுக்குப்பின் இவ்விதமான நடவடிக்கையே கிடையாது. திருடர்களும், கொள்ளைக்காரர்களும் திட்டப்படி கெடுதல் செய்துவருகிறார்கள்." பிறகு உத்தியோகப் பற்றற்றவர்களின் ஓட்டுகள் எடுக்கப்பட்டது. அதில் 82 சதவிகிதம் ஜனங்கள் குற்றவாளிகளை ஜெயிலில் அடைத்துவிட வேண்டுமென்ற அபிப்பிராயத்தை ஆமோதித்தார்கள்.

இந்த அபிப்பிராயத்தை ஒத்து அதிகார வர்க்கத்தார் அநியாய லாபம் சம்பாதித்துக் குற்றம் செய்தவர்களுக்கு 14 வருஷங்கள் காவல் தண்டனையும் லாபத்துக்கு மூன்று மடங்குள்ள அபராதமும் விதிக்கப்படுமென்று உத்தரவிட்டார்கள். இதை வினா, பிரிடிஷ் இராஜநீதி சாஸ்திரத்தின் தத்துவமும் மாற்றப்பட்டது. அநியாய லாபம் சம்பாதிப்பவர்களைப் பரிசீலனை செய்யும் காலத்தில் குற்றவாளி இல்லை என்று ருஜு செய்துகொள்ளவேண்டிய பொறுப்பு குற்றவாளியைச் சேர்ந்தது என்று திருத்தியமைக்கப்பட்டது.

நியூகினியா காடுகளில் யுத்தம்.

ஜப்பானியர்களை வாவிலிருந்து ஸலாமூவா முடியத் தாக்கித் துரத்தியடித்த ஆஸ்திரேலியப் படைகளின் தீரத்தை சரியாக மதிக்கமுடியாதென்று நியூகினியாவிலுள்ள ஆஸ்திரேலிய நிருபரான ஆக்ஸல் ஒஸ்லன் சொல்லுகிறார்.

அவர்களுடைய சிரமசாத்யமான அலுவல்களையும், காட்டில் போர்புரியும் கஷ்டங்களையும், சகதி, பருவக்கால மழை, குன்றுகளிலிருந்து எதிரிகளைத் துரத்தியடிப்பதற்கு நடைபெறவேண்டிய தொடர்ச்சியான யுத்தங்களையும் மதித்துப்பார்க்கமுடியாது.

வாவிலிருந்து புறப்பட்டு மூபோ வழியாக பாப்பேக்குக் கால்நடையாகச் சென்றபொழுது, சென்ற ஏழு மாதங்களில் ஆஸ்திரேலியர்கள் அந்தப் பிரதேசங்களில் பிழைத்

திருந்து முரட்டு ஸ்வபாவமுள்ள ஜப்பானியர்களோடு கோரமாகப் போர் செய்து அவர்களை எவ்வாறு அந்தப் பிரதேசங்களிலிருந்து துறத்தியடித்தார்களென்று நினைத்து ஆனந்தமடைந்தேன்.

இந்தத் துருப்புகள் எப்பொழுதாவது திரும்பி வந்து தங்களுடைய கஷ்டமான அநுபவங்களை வெளியிடுவார்கள். ஆகிலும், அவர்கள் கண்கூடாகப் பார்த்தவைகளையும், அனுபவித்தவைகளையும் அவர்கள் சொல்லிக்கொள்ள முடியாது.

ஸலாமூவா கடற்கரைக்கப்பாலுள்ள பிரதேசத்தில் கால அளவும், தூரமும், மழையும், குளிரும், சகதியும், வியாதியும், காயங்களும் விசேஷ அர்த்தம் பொருந்தியவை. அவைகளை உணருவதற்கு அவைகளின் அநுபவம் அவசியம்.

மழையும், சகதியும் தவிர்க்க முடியாதவைகள். கால அளவு நாட்கள், மாதங்கள் என்ற முறையில் கணிக்கப்படவில்லை. ஒரு சம்பவத்துக்கும், மற்ற சம்பவத்துக்குமுள்ள அவகாசம் தான் கால அளவாக மதிக்கப்படுகிறது. தூரத்தைக் கண்டுபிடிப்பதற்கு எவ்வளவுமணி நேரம் நடந்து செல்லவேண்டுமென்று கண்டுபிடித்து அதிலிருந்து கணக்கிடப்படுகிறது. சகதியும், மலைச் சரிவுகளுமுள்ள ஒரு மைல் தூரம் செல்லுவதற்கு ஒரு மணிநேரம் பிடிக்கும்.

காயம்பட்டவர்களின் அலக்ஷிய புத்தியும், ஆச்சரியப்படத்தக்கது. காட்டில் சண்டை போடுவதென்பது கண்ணும்பூச்சி விளையாட்டுப்போல் நடைபெறுகிறது.

ஜனாதிபதி சியாங் கே ஷேக்.

இந்தப் பதவி அளித்தது ஜனங்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

சைனாவின் தலைவராக நியமிக்கப்பட்ட சியாங் கே ஷேக்குக்கு புதிய கௌரவம் கிடைத்திருக்கிறது. ஆகிலும், புதிதான அதிகாரம் கிடைக்கவில்லை என்று டேயிலி டேலகிராப் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது.

நிர்வாக சபையின் தலைவராகவும், படைத் தலைவராகவும் அவர் சைனாவில் ஏற்கனவே உயர்தர நிர்வாக, ராணுவ அமுல்களை நடத்திவந்திருக்கிறார். ஆகிலும் அவரைத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுத்ததிலிருந்து அவரிடம் தேசமக்களுக்குள்ள நம்பிக்கை வெளியாகிவிட்டது. அத்துடன் தேசத்திற்கு அவர் செய்திருக்கும் அபாரமான சேவைகளையும் பாராட்டக்கூடியதாகவிருக்கிறது.

30 வருஷங்களுக்குமுன் சைனாவில் அரச நிர்வாகம் மறைந்தபின் இப்பொழுதுதான் சைனாவில் ஐகபத்யம் சிறந்த முறையில் உண்டாகியிருக்கிறது. இந்த ஒற்றுமைக்கு இரண்டு காரணங்கள் உண்டு. அயல்நாட்டாரின் தாக்குதல் ஏற்படும்பொழுது உள்நாட்டு மனஸ்தாபங்களை ஒத்திவைத்துவிடவேண்டியதென்பது ஒன்று. எதிர்ப்பு முறைகளை பரிஷ்காரமாக அமைப்பதிலும், தேசீய உணர்ச்சியை உண்டுபண்ணுவதிலும் சியாங் கே ஷேக் செய்த அரிய சேவை மற்றொன்று. சைனாவிலும், துரோகிகள் அபரிமிதம். சென்ற ஆறு வருஷங்களாக ஏற்பட்ட நெருக்கடியில் ஜனங்களிடம் ஒற்றுமையையும், ஊக்கத்தையும் உண்டு பண்ணியதில் சைனாவில் சியாங கே ஷேக்தான் முதல்தரமான சேவை செய்தவரென்பது நிச்சயம். சியாங் கே ஷேக்கின் தலைமையில் அநேக நூற்றாண்டுகளாக இல்லாத அந்தஸ்தையும், கௌரவத்தையும் இந்த யுத்தத்துக்குப்பின் சைனா அடையப்போகிறது. சமாதான காலத்தில் முக்கியமாக தீர்க்கப்படவேண்டிய மகத்தான பிரச்னைகள் எவையென்று சீனத் தலைவர்கள் நன்குஅறிவார்கள். நிரந்தரமான அரசியலை ஏற்படுத்துவது ஒரு முக்கியமான பிரச்னை. சியாங் கே ஷேக்கின் அதிகாரம், அவனுடைய சொந்த கௌரவத்தையும், அவனுக்கு உதவியாகயுள்ள செம்பாதி பிரபுக்களடங்கிய சபையையும் பொருத்திருக்கிறது. தேச மக்களின் அபிப்பிராயத்தை நேர்முகமாக அறிந்து அதன்படி அமுல் நடத்தும் முறையை ஒட்டியதல்ல.

சைனாவிலுள்ள பெரும்பாலோர் அவரிடம் விசேஷ விசுவாசம் கொண்டிருக்கிறார்கள் என்பது நிச்சயம். இந்தராஜ்ய முறை நீடித்திருப்பதற்குள்ள அவசியம் நீங்கிவிட்டபின் இந்த நிர்வாகத்துக்கு முடிவு ஏற்பட்டுவிடுமென்று அவரே முன்கூடிச் சொல்லியிருக்கிறார். யுத்த காலத்தில் சைனாவுக்கு சேவை செய்வதில் அவர் காட்டியிருக்கும் பெரும் போக்கான மனப்பான்மையுடன் சமாதான காலத்திலும் சைனாவின் புனருத்தாரணத்துக்கும் அவர் தலைமை வகிப்பார் என்று நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

'வி' டயரி-1944.

(குறிப்பு புஸ்தகம்).

(அக்டோபரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3 அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணு.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,

தேசிய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 165. (5-வது பிரிவு).

25- 9-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
27- 9-43	பெருமாநாடு	... ,,	7.00
,,	புல்வயல்	... ,,	7.30
28- 9-43	கீழாநிலை-புதுப்பட்டி	... ,,	7.00
28- 9-43	கீழாநிலை	... மாலை	7.30
29- 9-43	அன்னவாசல்	... ,,	7.00
,,	கீழக்குறிச்சி	... ,,	7.30

தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் தசரா பிரஸங்கங்கள்—166.

30- 9-43	புதுக்கோட்டை சாந்தார் கோவில் கீழ சன்னதி.	மாலை	6.30
1-10-43	,,		,,
2-10-43	முனிஸிபல் ஆபீஸ்	... ,,	6.00
3-10-43 to 7-10-43	புதுக்கோட்டை சாந்தார் கோவில் கீழ சன்னதி.	மாலை	6.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

25—9—43 வெட்டம்விடுதி.

26—9—43 ஏம்பல்.

27—9—43 கீரனூர்.

28—9—43 குடுமியாமலை.

29—9—43 ராயவரம்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—28-9-43.

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ அக்டோபர் ௴ 2௳ [ந. 166

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

பிரஸங்கம் CLXVI.

பொதுஜன தற்காப்பு: பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் வெற்றிபெற்ற தினவிழா.

புதுக்கோட்டை ஸமஸ்தான மாட்சி தங்கிய மன்னர்பிரான் நிகழ்த்திய சொற்பொழிவு.

சீமாட்டிகளே, சீமான்களே, ஸெப்டம்பர் 26, 1943.

நாம் இன்று இங்கு பிரிடனுக்காக நடைபெற்ற விமானப்போரில் வெற்றிபெற்ற தினத்தை கொண்டாட குழுமியிருக்கிறோம். ஜெர்மனி மகத்தான விமானப்படை பலம் பெற்றிருந்த பொழுது, அது நம்மை யுத்தத்தில் இழுத்துவிட்டது. ஜெர்மன் விமானப்படை பலம் நம்முடையதைவிட சங்கியையில் அதிகமாகயிருந்தது. பிரிடனுக்கு வெகு சமீபத்தில் பிரான்ஸிலும் மற்ற இடங்களிலும் ஜெர்மனி விமான தளங்களைப் பெற்றிருந்தது. அநேக முனைகளிலிருந்து ஜெர்மன் விமானங்கள் சண்டை விமானங்களின் துணைக்காவலுடன் சில நிமிஷங்களுக்குள் பிரிடன் வந்து விடக்கூடும். இங்கிலாந்துக்கு கடல் மார்க்கமாக வரும் துணைக்காவல் கொண்ட சாமான் கப்பல் கூட்டங்களை ஜெர்மன் விமானப்படை வழிமறித்துத் தாக்கி நமது கப்பற்படையையும், விமானப்படையையும் நாசம் செய்துவிடத் துவக்கம் செய்தது. நம்முடைய கப்பற்படையை மூழ்கடிப்பதற்கும், விமானப்படையை அழிப்பதற்கும் ஜெர்மனி செய்த முயற்சி பயன்படாமல் போய்விட்டபொழுது ஜெர்மானியர்கள் பிரிடனிலுள்ள பொதுமக்கள் பேரில் வெடிகுண்டுகளை காட்டுமிராண்டித்தனமாகவும், கண்மூடித்தனமாகவும் பொழிந்து பிரிடனிலுள்ள தொழிலாளர்களின் மனோதைரியத்தைக் குலைத்துவிடவும், லண்டனையும், மற்ற நகரங்களையும், நாசமாக்கிவிடவும் ஆரம்பித்தார்கள். முதலெடுப்பில் சில வெடிகுண்டுகள் வீசும் விமானங்கள் மட்டும் பிரிடனுக்கு வந்து, சொல்பமான வெடிகுண்டுகளை குறியன்னியில் போட்டுவிட்டு, யாதொரு சேதத்தையும் உண்டுபண்ணாமல் திரும்பிச் சென்றன. 1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் இரண்டாவது வார ஆரம்பம் முதல் ஜெர்மானியர்கள் மின்னல் தாக்குதல் முறையைக் கையாண்டார்கள். பிரிடனுக்காக

நடைபெற்ற போர் என்று சொல்லப்படும் இந்த மகத்தான விமான நடவடிக்கையானது மிகவும் கோரமான நிலைமையை அடைந்தது. வாரா வாரம், சராசரி மரித்தவர்களும், பலமாகக் காயம் பட்டவர்களும் சேர்ந்து 6,000 பேர்களுக்கு எட்டிவிட்டது. பகலிலும், இரவிலுமாக சராசரி 400 ஜெர்மன் விமானங்கள் பிரிட்டனை தினசரி தாக்கி வந்தன. பிரிட்டனில் ஜெர்மானியர் படையெடுத்து விடுவார்களோ என்ற பீதியும் உண்டாகியிருந்தது. லண்டனிலும் இதர நகரங்களிலிருந்து குழந்தைகளைப் பத்திரமாகவுள்ள பிரதேசங்களுக்கு அனுப்ப வேண்டியதாயிற்று. பிரிட்டனிலிருந்து குழந்தைகளை கனடா போன்ற கடல் தாண்டியிருக்கும் நாடுகளுக்கு அனுப்பும்படி நேரிட்டது. காயம்பட்ட ஜனங்களுக்கு சிகிச்சை வசதிகளும் மிகுதியாக ஏற்பாடு செய்யவேண்டியிருந்தது. சொத்துக்களுக்கு அதிகச் சேதம் ஏற்பட்டது. விசேஷமாக தொழிலாளர்கள் குடியிருந்த வீடுகள் சேதமடைந்தன. பிரிட்டனுக்காக நடைபெற்ற போர் 1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8-ம் தேதியன்று ஆரம்பமாயிற்று. ஸெப்டம்பர் 15-ம் தேதி தான் அது உச்ச நிலைமையை அடைந்தது. அன்று பிரிட்டனுடைய விமான எதிர்ப்புத் தற்காப்புகளை நொருக்கிவிடுவது என்ற தீர்மானத்துடன் ஜெர்மானியர்கள் பலமான விமானத் தாக்குதல் செய்தார்கள். 185 சிறந்த விமானங்கள் பலி கொடுக்கப்பட்டபின் தங்களுடைய பிரயத்தனம் பலிக்காது என்ற அறிவு ஜெர்மானியர்களுக்குத் தோன்றும்படி நாம் செய்தோம். ஆகையால், அந்த வெற்றி கிடைத்த நாளை நாம் இன்று கொண்டாடுவது பொருத்தமேயாகும். 1940-ம் வருஷம் அக்டோபர் மாதம் 31-ம் தேதியன்று இந்த விமானப்போர் முடிவடைந்தது. ஜெர்மானியர்களுக்கு அதில் 2,375 விமானங்கள் நாசமாகிவிட்டன. இன்னும் அநேக விமானங்கள் பழுதுபட்டு இருக்கலாம். அதற்கு பின் ஜெர்மன் விமான நடவடிக்கையின் வலு நாளடைவில் குறைந்துவிட்டது. இப்பொழுது விமான நடவடிக்கையே இல்லையென்று சொல்லலாம். ஜெர்மனியின் விமானப்படையின் சங்கியை மிகுதியாக இருந்தபோதிலும் நமது விமானகைள் உயர்வானவை. நமது மாலுமிகள் விசேஷ பயிற்சி பெற்றவர்கள். நமது சிறந்த விமானிகளுக்கு நம்முடைய பாராட்டு உரித்ததாகும். அவர்கள் எதிரியின் விமானப்படை பெருக்கையும், தங்களுக்கு ஏற்படக்கூடிய பேராபத்தையும் கண்டு மனங்கலங்காமல் தங்களுடைய தீரத்தினுலும், ஊக்கத்தினுலும், யுத்தப்போக்கை மாற்றி வெற்றிபெற்றுவிட்டார்கள். மிஸ்ட்டர் சர்ச்சில் சொன்ன பிரகாரம் ராணுவ சரித்திரத்திலேயே இந்தப் போரில்தான் ஒரு சிலர் அநேகரைக் காப்பாற்றி புகழ் பெற்றிருக்கிறுர்கள். இந்த யுத்தத்தில் வெற்றி பெருவதற்கு விமான ஆதிக்கம் மிகவும் அவசியமானது. ஒவ்வொரு யுத்த அரங்கத்தின் நடவடிக்கையும், விமான ஆதிக்கத்தினுல் தான் வெற்றிகரமாக முடிந்திருக்கிறது. விமான ஆதிக்கத்தின் மேன்மை பிரிட்டனுககாக நடைபெற்ற போரில் முதலில் வெளியிடப்பட்டது பிரிடிஷ் ராணுவ அதிகாரிகள் இதை நன்கு உணர்ந்திருக்கிறுர்கள். இந்தியா பூராவிலும் ஏராளமான விமான தளங்களையும் மகத்தான விமானிகள் பயிற்சி ஸ்தாபனங்களையும் அமைத்திருக்கிறுர்களென்பது புகழத்தக்கது. இன்று எதிரியை சமாளித்து நிற்க நாம் தயாராகயிருப்பதுடன் எதிரியைத் தேடி அவனை அடிப்பதற்கும் சக்தி பெற்று இருக்கிறேம்.

2. 1940-ம் வருஷத்தில் பிரிட்டன் தன்னந்தனியாக நின்றது. ஆகிலும், கஷ்ட காலம் ஏற்பட்டபொழுது பிரிடிஷ் மக்களின் மனம் தளர்ச்சியடையவில்லை. ஸ்வதந்திரத்தையும், நாகரீகத்தையும் காப்பாற்ற அவர்கள் செய்யும் இந்த யுத்தம் இறுதி வெற்றியளிக்குமென்று அவர்கள் நம்பியிருந்தார்கள். அவர்களுடைய நண்பர்களுக்கும் அவர்களிடம் அனுதாபம் காட்டுகிறவர்களுக்கும் பொதுமக்களை பயமுறுத்தும் ஹிட்லரின் நடவடிக்கைகள் உபயோகமற்றவைகளென்று பிரிடிஷ் மக்கள் ருஜூச் செய்து விட்டார்கள்.

3. பிரிட்டனுக்கு மிகவும் நெருக்கடியான இச்சமயத்தில் உறுதியான தீர்மானமும், தைரியமும் விடாமுயற்சியுமுள்ள மிஸ்ட்டர் சர்ச்சில் தலைமை வகிக்க முன் வந்தார். அவர் பிரிடிஷ் மக்களுக்கு தைரியம் ஊட்டி தீரமாக நடந்துகொள்ளும்படி அவர்களை உற்சாகப்படுத்தினுர்.

4. முதல் வருஷ யுத்தத்தில் நாம் அயல்நாடுகளின் உதவியன்னியில் தன்னந்தனியாக யுத்தம் செய்து வந்தோம். இரண்டாம் வருஷ யுத்தத்தில் அமெரிக்காவும், ருஷ்யாவும் பிரிட்டனுடன் சேர்ந்துகொண்டன. மூன்ருவது வருஷ யுத்தத்தில் சைனு, ஜெர்மனி பேரிலும், இதாலி பேரிலும் போர் தொடுத்தது. அப்பொழுது ஜெர்மானியர்கள், ருஷ்யாவுக்குள் வெகு தூரம் முன்னேறி விட்டார்கள். நான்காவது வருஷ யுத்தத்தில் நமக்கு ஏராளமான வெற்றிகள் கிடைத்தன. ருஷ்யாவில் பிடித்த பிரதேசங்களின் பெரும் பாகத்தை ஜெர்மானியர்கள் இழக்க நேரிட்டது. இதாலியர்கள் வட ஆபிரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வரும் குறுக்குப்பாதையான மத்தியதரைக்கடலில் இப்பொழுது நேசதேசக் கப்பல்கள் தாராளமாகச் சஞ்சாரம் செய்யலாம். இதாலி நிபந்தனையற்ற சரணுகதி அடைந்தது. ஆகிலும், ஜெர்மானியர்கள் மத்திய இதாலியிலும், வடக்கு இதாலியிலும், இன்னும் இருந்து வருகின்றனர்.

5. நேசதேசத்தார்களின் வலிமை அதிகரித்துவிட்டதென்றும் அவர்களுடைய நோக்கங்களும், காரியங்களும் ஒன்றுபட்டவையென்றும் அச்சுவல்லரசுகளுக்குள் மற்ருெருவர் வெற்றி பெருவதில் அதிருப்தி இருக்கிறதென்றும் வற்புறுத்திச்சொல்ல விரும்புகிறேன். ஜெர்மனியின் கொடுங்கோன்மைக்குட்பட்ட நாடுகளெல்லாம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

6. எதிர் காலம் இப்பொழுதைவிட பிரகாசமாக எப்பொழுதும் இருந்ததில்லை. மிஸ்ட்டர் சர்ச்சில் அமெரிக்காவுக்குச் சென்று ஜனுதிபதி ரூஸ்வெல்ட்டுடன் ஆலோசனை செய்துவிட்டு இங்கிலாந்துக்குத் திரும்பிவந்து விட்டார். வருங்காலத்தில் கூடிய சீக்கிரம் அச்சுநாடுகளுக்கு அதிக பலமான அடிகள் விழுமென்று நாம் எதிர் பார்க்கலாம். மேற்கு ஐரோப்பாவில் மூன்ருவது போர்முனை ஏற்படலாம். ஹிட்லரின் ஐரோப்பிய அரணைத் தாக்குவதற்காக வட ஆபிரிக்கக் கடற்கரை பூராவிலும், இதாலியின் கால்கட்டை விரலைப் போன்ற பாகத்திலிருந்து பிரெஞ்சு—ஸ்பானிஷ் எல்லைச்சரகம் வரையிலும் நேசதேசப் படையெடுப்புப் படைகள் ஏராளமாகக் குவிந்து நிற்கின்றன என்று சமீபத்தில் தகவல் கிடைத்திருக்கிறது. ஆனுல், யுத்தம் இன்னும் ஜயித்து வந்த பாடில்லை. யுத்தத்தைப்பற்றி இனிமேல் கவலைப்படவேண்டாமென்று நினைக்கக்கூடாது. போர்முனையிலுள்ளவர்கள் கோரமாகப் போர் புரியவேண்டும். உள்நாட்டிலுள்ளவர்கள் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிவரும். தோல்விகளும், ஏமாற்றங்களும் ஏற்படக்கூடும். ஆகிலும், இறுதியில் வெற்றி நிச்சயம். தனிப்பட்ட சிறிய சம்பவங்களையும், பெரிய சம்பவங்களையும்கூட பொருட்படுத்தக் கூடாது. நீண்ட நோக்கத்துடன் எல்லா யுத்த நடவடிக்கைகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நேசதேசத்தாருக்கு ஒத்தாசை செய்யும் முறையில் ஒவ்வொருவரும் தன்னுலியன்றதைச்செய்து வரவேண்டும். ஒவ்வொருவரும் ஒரு சிறிய சேவை புரியலாம். விஷம வதந்திகளை அடக்கவேண்டும். அநியாய லாபம் சம்பாதிப்பவர்களையும், தேவைக்கு அதிகமாகச் சேமித்து வைப்பவர்களையும் ஸர்க்கார் அதிகாரிகளிடம் தெரிவிக்கவேண்டும். பொது ஜனங்கள் தான் இவைகளைத் தடுக்கமுடியும். பொதுஜனங்களின் ஒத்துழைப்பில்லாமல் கையளவு உத்தியோகஸ்தர்கள் ஒன்றும் செய்ய முடியாது. உணவுப்பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும். அதிக உணவு உற்பத்தி இயக்கத்துக்கிணங்கி ஸமஸ்தானத்திலுள்ளவர்கள் சென்ற பஸலியில் 30,599 ஏக்கர் கொண்ட நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வந்திருக்கிருர்கள். யுத்தக்கடன் பத்திரங்களிலும், சேமிப்பு பத்திரங்களிலும் பொருளைக் கொடுக்கலாம். இந்த ஏற்பாட்டிலும் நமது ஜனங்களின் ஒத்துழைப்பு சிலாகிக்கத்தக்கது. சொந்தச் செலவில் சிக்கனம் செய்யலாம். வீணுகப்போகும் காகிதத்தைச் சேமித்து வைக்கலாம். ஜீவனத்தில் சிரமம் ஏற்படும்பொழுது சந்தோஷ மனப்பான்மையுடன் இருந்து வரலாம். மேலே சொல்லிய பலவிதமான முறைகளில் நாம் ஒவ்வொருவரும் ஒரு சிறிது செய்தால், நாம் ஆவலுடன் எதிர்பார்த்து வருவதும், சதாகாலமும் பிரார்த்தித்துக்கொண்டிருப்பதுமான வெற்றியும், சமாதானமும், கூடிய சீக்கிரம் ஏற்படுவதற்கு ஒத்தாசை செய்ததாகும்.

வார யுத்தச் செய்திகள்

(A)—முக்கியமான சம்பவங்கள்.

23—9—43 (வியாழக்கிழமை). நேசநாடுகள் நியூகினியாவிலுள்ள பின்ஷாபனி விறங்கினார்கள்.
நேசநாடுகள் தெற்கு இதாலியிலுள்ள ஜெனோஸாவையும், அட்ரியானோவையும் பிடித்தனர்.
முஸோலினி நிர்வாக சபையை அமைத்தார். அதில் கிராஸியானோ தற்காப்பு மந்திரி.

24—9—43 வெள்ளிக்கிழமை). ருஷ்யர்கள் யூனிசாவையும், போல்டாவையும், கைப்பற்றினார்கள்.

25—9—43 (சனிக்கிழமை). பிரிடிஷ் மந்திரி சபையில் மாறுதல்கள் செய்யப்பட்டன. ஸர் ஜான் ஆண்டர்ஸன் கோசாதிபதி பதவியை ஏற்றார்.
நேசநாடுகள் நியூகினியாவிலுள்ள பின்ஷாபனுக்குச் சமீபத்திலுள்ள விமான நிலயத்தைப் பிடித்துக் கொண்டனர்.
நேசதேசத்தார்கள் தெற்கு இதாலியிலுள்ள ஆல்டாமூராவையும், மாடராவையும் மால்பெடாவையும் பிடித்தனர்.
ருஷ்யர்கள் ஸ்மொலன்ஸ்க்கையும், ரோஸ்லாவையும் ஆக்கிரமித்தனர்.

26—9—43 (ஞாயிற்றுக்கிழமை). மத்தியதரைக்கடல் சம்பந்தமான பிரச்னைகளைப் பற்றி ஆலோசனை செய்ய நேசதேச கோஷ்டி ஆல்ஜீயர்ஸில் நியமனம் செய்யப்பட்டது.
வடகிழக்கு கார்ஸிகாவிலுள்ள பாஸ்டியா என்னும் ஸ்தானத்தை ஜெர்மானியர்கள் காலி செய்து விட்டபடியால் ஸ்வதந்திர பிரெஞ்சுப் படைகளும், ஸ்வதந்திர கார்ஸிகப் படைகளும் அதை ஆக்கிரமித்துவிட்டன.
ருஷ்யர்கள் வெண்மை ருஷ்யாவுக்குள் புகுந்து போரோவாயாவைப் பிடித்துவிட்டார்கள்.
அமெரிக்க விமானங்கள் ஜெர்மனியிலுள்ள எம்டனைத் தாக்கி 1,000 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளைப் பொழிந்தன.

27—9—43 (திங்கட்கிழமை). ஜெர்மனியும், ஜப்பானும் மூவர் ஒப்பந்தத்தின் மூன்றாம் வருஷவிழாவைக்கொண்டாடினார்கள்.
பிரிடிஷ் 8-வது படை ஒபாண்டோ நதியைக் கடந்து ஸெரிக்னோலாவைப் பிடித்தது.
ருஷ்யர்கள் அஸாவ் கடற்கரையிலுள்ள ஜெர்மன் தளமான டெம்ரியூக்கைப் பிடித்தனர்.

28—9—43 (செவ்வாய்க்கிழமை). பிரிடிஷ் 8-ம் படை இதாலியிலுள்ள பாக்கியாவைப் பிடித்துவிட்டது.
அமெரிக்கப் படைகள் ஸாலமன்ஸுக்கு வடகிழக்கிலுள்ள எல்லிஸ் தீவுக்கூட்டத்தின் வடக்குக் கோடியான தீவை ஆக்கிரமித்தனர்.
பிரான்ஸில் மனித பலத்தைத் திரட்டும் ஜெர்மன் அதிகாரியான டாக்டர் ரிட்டார் பாரிஸ் நகரில் கொலை செய்யப்பட்டார்.

29—9—43 (புதன்கிழமை). நேசதேசத்தார் இதாலியில் ஸாலர்னோ பிராந்தியத்திலுள்ள ஜெர்மன் அரண்களைப் பிளந்து கொண்டு பாம்பீயைப் பிடித்தார்கள்.
ருஷ்யர்கள் கிரமென்சங்கை ஆக்கிரமித்தனர்.

(B)—செய்தி திரட்டுச் சுருக்கம்.

இதாலி—யுத்தம் திருப்திகரமாக நடைபெறுகிறது. எட்டாம்படை மணிக்கு ஒரு மைல் வீதம் முன்னேறுகிறது. இந்த வாரத்தில் அது போடென்ஸாவையும், ஆல்டா மூராவையும், மாடெர்ாவையும், மால்பெட்டாவையும், ஸ்பின்ஸொலாவையும், ஆடெல்லாவையும் பிடித்தது. ஒபாண்டா நதியைத்தாண்டி மார்கெரிடா, டிஸவொயா, மெல்பி, வெனேஸெ முதலிய இடங்களையும் அந்தச் சேனை பிடித்துவிட்டது. இவ்வாரத்தில் முக்கியமான வெற்றி பாக்கியாவைக் கைப்பற்றியதுதான். பாக்கியா இதாலியில் முக்கியமான விமானதளம். நேபிள்ஸிலிருந்து எட்டிரியாடிக் கடற்கரைக்குச்செல்லும் மார்க்கத்தில் அச்சாணிபோன்ற ஸ்தலம். அதிலுள்ள 13 விமானக்கூட்டங்களிலிருந்து ஜெர்மனியையும், பால்கன் நாடுகளையும், விமானப் படைகள் தாக்கக்கூடும். 8-ம் படை முன்னேறியதிலிருந்து 5-ம் படையை எதிர்த்து நிற்கும் ஜெர்மன் படைகளின் இடது விலாப்பக்கத்துக்கு ஆபத்து உண்டாகிவிட்டது.

இதற்கு மாறாக, 5-ம்படை அடிமேலடியாக முன்னேறுகிறது. ஜெர்மானியர்கள் ஒவ்வொரு குன்றிலிருந்தும் துறத்தியடிக்கப்படுகிறார்கள். கீழ்க்கண்ட பிரதேசங்களை அவர்கள் கைப்பற்றிவிட்டார்கள். ஸான் ஸிப்ரியானோ, மாண்டிகார்வினு, ரொவல்லா, காம்பானு, அட்ரியானோ, ஜினேஸா, காவாடி டொர்ரானி, ஸெனுர்கியா, வால்வா, கலாப்ரிட்டொ, காஸானோ, வியோனி, காஸ்டல்னூவோ, 8-வது படையின் நடவடிக்கைகளைப் போல அவ்வளவு பகட்டாக 5-ம் படையின் நடவடிக்கை யில்லாவிட்டாலும் வெஸூவியஸ் மலையின் சிசாக்கழுத்துபோன்ற பாகங்களில் கொஞ்சம் கொஞ்சமாக அது முன்னேறி விட்டது. நேபிள்ஸ் சமவெளிக்கு வாசற்படிபோன்ற நொஸரா பிரதேசம் புலப்பட்டுவிட்டது. [கடைசியாக வந்த செய்தியில் ஜெர்மானியர்கள் நேபிள்ஸைக் காலிசெய்து விட்டதாகத் தெரியவருகிறது.] கார்ஸீகாவிலுள்ள பாஸ்டியா ஆக்கிரமிக்கப்பட்டது.

இதாலிய நேசப்படைகள் பிரென்னர் கணவாய் இருப்புப்பாதையைத் தாக்கினார்கள்.

யூகோஸ்லாவியாவிலுள்ள ஸ்பிளிட் துறைமுகத்தில் பதினைந்து நாட்களாக ஜெர்மானியர்களுக்கும், ஸ்வதந்திரத்துருப்புகளுக்கும் போர் நடைபெறுகிறது. சூசாக்கில் தெருச் சண்டை நடைபெறுகிறது. ஜெர்மானியர்கள் எட்ரியாடிக் கடலிலுள்ள கிரேக்கத் தீவான கார்பூவில் இறங்கிவிட்டதாகச் சொல்லுகிறார்கள்.

ருஷ்யா.—இந்த வாரத்தில் ருஷ்யர்கள் ஏராளமான முக்கியமான நகரங்களைக் கைப்பற்றிவிட்டார்கள். முக்கியமானவைகள் குபான் தீபகற்பத்தில் நோவாராஸிஸ்க்குக்கு வடமேற்கில் 40-மைல்களுக்கப்பாலிலுள்ள அனபா, கார்காவுக்கு வடமேற்கில் 80 மைல்களுக்கப்பாலிலுள்ள, யூக்ரேனின் மத்தியபாகத்திற்கு வாசற்படிபோன்ற போல்டாவா, யூனகா, பிரியான்ஸ்க், கோமல் இருப்புப்பாதையிலுள்ள முக்கியமான ஜங்ஷன், ஐந்து இருப்புப்பாதைகள் சேருமிடமும், ஹிட்லரின் பெரிய தளமுமான ஸ்மொலன்ஸ்க், ரோஸ்லாவல், காரெல்லி, பொரிஸ்டால், புரோவாரி, டெம்ரியூக்.

ருஷ்யர்கள் நீபர் நதியைக்கடந்து வெண்மை ருஷ்யாவுக்குள் புகுந்துவிட்டார்கள். கதியற்று பழிவாங்கும் முறையில் ஜெர்மானியர்கள் தான்யங்களுள்ள வயல்களை தீக்கிரையாக்குகிறார்கள். கிணறுகளைப் பாழாக்குகிறார்கள். நோவாராஸிஸ்க்கில் ஒரு ஸ்திரீயும் அவளுடைய நான்கு குழந்தைகளும் தான் உயிர்தப்பினார்கள். "புயல் காற்றடித்து எல்லாவற்றையும் அகற்றிவிட்டது போல ஸ்மொலன்ஸ்க் சூன்யமாக விருந்தது" என்று ரெட் ஸ்டார் பத்திரிகை எழுதியிருக்கிறது.

விமான நடவடிக்கை.—கீழ்கண்ட இடங்களில் விமான நடவடிக்கை நடைபெற்றது.

ஸெப்டம்பர் 21.—பெர்லின் வடக்கு, வடமேற்கு ஜெர்மனி.

ஸெப்டம்பர் 22.—ரப்பர் சாமான்கள் உற்பத்தி நிலையமான ஹானோவர் (அரை மணி நேரம்.)

ஸெப்டம்பர் 23.—மான்ஹிம், லட்விக்ஷேபன். (பலமான தாக்குதல்).

ஸெப்டம்பர் 27.—பிரிடனுக்கு அதிகச் சமீபத்திலுள்ள ஜெர்மனியின் கடற்படை, நீர் மூழ்கி தளமான எம்டன் பேரில் 85-வது தடவை தாக்குதல் 1,000 டன்கள் எடைமான முள்ள குண்டுகள் வீசப்பட்டன.

பஸிபிக் யுத்தம்.—பின்ஷாபனை நோக்கி நேசதேசப் படைகள் முன்னேறுகின்றன. ஜப்பானியர்களின் எதிர்ப்பு குறைவு பட்டுவருகிறது. ஆகிலும், நமது படைகளின் முன்னேற்றம் தடைபடவில்லை. வேவாக்கைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் நேசதேச விமானங்கள் 7 கப்பல்களையும், 29 படகுகளையும், 50 விமானங்களையும் நாசம் செய்திருக்கின்றன.

ஸீனு.—கியாங்க்ஸி மாகாணத்தின் தலைநகரமான நாஞ்சங்குக்குத் தெற்கிலுள்ள பூ நதியின் கிழக்குக்கரையில் ஜப்பானியர்களும், சீனர்களும் கடும்போர் செய்துவருகிறார்கள்.

பர்மா.—கீழேகண்ட லக்ஷியங்கள் குண்டுவீச்சுக்குட்பட்டன.

ஸெப்டம்பர் 20.—காதா,

ஸெப்டம்பர் 21.—வெட்லட், நிய்க்பியான், ஸிபா, ஷ்வீபோ, ஸிகான்.

ஸெப்டம்பர் 24.—தாமாந்தி, மூ கால்வாய் பாலம்.

ஸெப்டம்பர் 26.—பயின்மானுவுக்கு வடக்கிலும், மேற்கிலுமுள்ள இருப்புப்பாதை. மாயூ நதியிலுள்ள சாமான் படகுகள், மாண்டலே பிரதேசத்திலும், லெட்ப்டான், தான்பீஸாயாட்டியிலுள்ள இருப்புப்பாதை தளங்கள்.

ஸெப்டம்பர் 27.—அக்யாப்.

சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

20—9—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயம்—பிரான்ஸிலுள்ள மோர்லே (Morlaix).

சுரங்கவெடி அறுக்கும் கப்பல்கள்.—பிரெஸ்ட் (Brest)

நீராவி யந்திரங்கள்.—பிரான்ஸ் (France).

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரஸ்தா சந்திப்புகள் ரயில்வேக்கள்.—இதாலியிலுள்ள டோர்ரி அனன்ஷியாடா (Torre Annunziata), ஸார்னோ (Sarno), காஸ்ட்டெல் (Castel), நுவாவோ (Nuovo), பார்மியா (Formia).

ரஸ்தா சந்திப்புகள்.—இதாலியிலுள்ள அவெல்லினோ (Avellino), கலாபிரிட்டோ (Calabrito).

எதிரி போக்குவரத்துகள்—பொடென்ஸா (Potenza).

துருப்பு நிலயங்கள்.—வடமேற்கு ஸாலர்னோ (N. W. Salerno).

இலக்குகள்.—பெனிவெண்டோ (Benevento), வெனிஸ் (Venice).

ரயில்வே தளங்கள்.—பெஸ்காரா (Pescara).

விமான நிலயம்.—கிரீட்டிலுள்ள மாலீமி (Maleme).

ருஷ்யா (Russia).

(33 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—கிளஸ்ட்டர் முனை (Cape Gloucester).

படகு.—செயிண்ட்ஜார்ஜ் முனை (Cape St. George).

கடல் விமான தளம்.—அம்பாய்னு (Amboina).

பர்மா (Burma).

ரஸ்தா ரயில் போக்குவரத்துகள்.—மேற்கு பர்மா.

லாரிகள்.—ஏ. யூ. (Ye. U). டாங்குப் கணவாய் ரஸ்தா (Taungup Pass).

ஜப்பானியச் சேனைக் குதிரைகள்.—யிபாக்யி (Yebawgyi), தாயெட்லிபின் (Thayetlebin).

நீராவி யந்திரங்கள்.—கின் (Kin) ஸ்டேஷன்.

எதிரி ஆக்கிரமித்த கட்டடங்கள்.—மாங்டா (Maungdaw).

21—9—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரஸ்தாக்கள், போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களில்.

ரயில்வே, ரஸ்தாப் பாலங்கள்.—பெனிவெண்டோ (Benevento), காபா (Capua), கான்ஸெல்லோ (Cancello).

துறைமுக ஸ்தாபனங்கள்.—லெக்ஹார்ன் (Leghorn).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளம்.—நியூ கினியிலுள்ள லே (Lae), பின்ஸ்சாபன் (Finschhafen).

பர்மா (Burma).

ரயில்வே தளங்கள்.—வெட்லெட் (Wetlet).

இலக்குகள்.—ஹுகாங் (Hukawng) சமவெளி.

எதிரி ஸ்தாபனங்கள்.—காதா (Katha).

இலக்குகள்.—மாண்டலே (Mandalay) பிரதேசம்.

கட்டடங்கள்—ஷ்வேபோ (Shwebo), ஜிகான் (Zigon), ஹாய்பா (Hsipaw).

22—9—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—தொழிற்சாலை இலக்குகள்-ஹனேவர் (Hanover), ஒல்டன்பர்க் (Oldenburg), எம்டன் (Emden).

எதிரி விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland), வடமேற்கு ஜெர்மனி (North West Germany). (27 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை. பல எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி துருப்பு சேமிப்புகள், துருப்பு போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

ஜெர்மன் துருப்பு ஸ்தாபனங்கள்.—இதாலியிலுள்ள போகியா (Foggia) பிரதேசம்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவிலும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி போக்குவரத்து ஸாதனங்கள்.—போகாட்ஜிம் யூவாலா (Bogadjim Yuala) போக்குவரத்து சாதனங்கள்.

2 வியாபாரக் கப்பல்கள்.—பிஸ்மார்க் கடலிலுள்ள காவியங் (Kavieng) பிரதேசம்.

எதிரிக் கப்பல்கள்.—செயிண்ட்ஜார்ஜ் முனை (Cape St. George), காரோவ் (Garove) தீவு.

இலக்குகள்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), டிமோரிலுள்ள கொபாங் (Koepang).

கொலம்பங்காரா (Kolombangara).

பர்மா (Burma).

ஸேடா (Sedaw) பிரதேசம்.

துருப்பு நிலயங்கள்.—கின் (Kin).

சேமிப்புகள்.—கியுங்கானி (Kyungon)க்கருகில்

படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

ரயில் வேக்கள்.—டவுன்கூ (Toungoo)விற்கு வடக்கில்.

துருப்புக் குடிசைகள்.—கெடுபா (Gheduba) தீவு, ஸாண்டோவே (Sandoway).

23—9—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

கப்பல்.—கப்பற்கட்டுந்துறைகள், கப்பல் தளங்கள்—நாண்டிஸ் (Nantes) கால்வாய் முகப்பு.

எதிரி விமான நிலயங்கள்.—வென்னெஸ் மியுகான் (Vannes-Meucon), கெர்லின் பெஸ்டார்ட் (Kerlin Bastard), காஞ்செஸ் (Conches), மோர்லே (Morlaix), போல்மிக் (Poulmic). (24 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 7 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—ராணுவ இலக்குகள்-ஜெர்மனியிலுள்ள மான்ஹீம் (Mannheim), லட்விக்ஷாபன் (Ludwigshafen), டார்மஸ்டாட் (Darmstadt), ஆச்சென் (Aachen).

வேவு பார்த்தல்.—பிரான்ஸ் (France). (32 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை. 4 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

பாலங்கள் ரஸ்தாக்கள்.—கான்ஸெல்லோ (Cancello) வைச்சுற்றிலும், காபா (Capua) பிரதேசம்.

மோட்டார் போக்குவரத்துகள் பீரங்கி ஸ்தாபனங்கள் பாலங்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களில்.

ரயில்வே தளங்கள், விமான நிலயங்கள்.—இதாலியிலுள்ள பைஸா (Pisa).

ருஷ்யா (Russia).

(38 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன.)

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—டச்சுக் கிழக்கு இந்தியத் தீவிளிலுள்ள ஹாலாங் (Halong).

விமான நிலயம்.—பின்ஸ்சாபனிற்கருகில் (Finschhafen), நியூ பிரிடனிலுள்ள கிளஸ்டர் முனை (Cape Gloucester).

பர்மா (Burma).

ஸ்டீமர்கள், படகுகள்.-ஐராவதி (Irrawaddy).

எண்ணெய்க் கிணறு.—மின்பூ (Minbu), விற்கருகில்.

மோட்டார் வண்டிகள்.—மெய்க்பைல் (Meikpile), மாண்டலே (Mandalay).

24—9—43. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்—பிரான்ஸிலுள்ள எவரக்ஸ் (Everux), பாவில்வி (Fauville), போவெஸ்டைல் (Beauvaistille), பிரெஸ்டலான்வாக் (Brestlanvoc), பிரெஸ்ட் கூபாவாஸ் (Brest Guipavas), செயிண்ட் ஓமர் (St. Omer).

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

மோட்டார் போக்குவரத்துகள், ரஸ்தா சந்திப்புகள்.—நேபிள்ஸ் (Naples) காபா (Capua) பிரதேசம்.

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேகரித்துமிடங்கள்.—பைஸா (Pisa).

கப்பல்கள் துறைமுக ஸ்தாபனங்கள்.—லெக்ஹரன் (Leghorn).

ரஸ்தா சந்திப்புகள்.—பெனிவெண்டோ (Benevento), அவெல்லினோ (Avellino) பிரதேசங்கள்.

தாக்குதல்கள்.—கார்ஸீகா(Corsica).(19 ஜெர்மன் போக்குவரத்து விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia).

(49 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

தாக்குதல்கள்.—யாடி (Yati) நதிப்போக்கில்,

யுத்த தளவாடக் குவியல்கள்.—ராகிட்சுமா (Ragitsuma).

பர்மா (Burma).

ரயில்வேக்கள்.—மாண்டலே (Mandalay)க்கருகில், ஷுவேபோ (Shwebo)க்கு வடக்கில்.

படகுகள்.—ஐராவதி (Irrawaddy), சிண்ட்வின் (Chindwin) நதிகள்.

ஜப்பானியர் தங்கியிருக்கும் ஸ்தலங்கள் —டாமந்தி (Tamanthi).

25—9—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயம்—பிரான்ஸிலுள்ள செயின்ட் ஓமர் (St. Omer).

இரவு.—ஜெர்மன் துணைக்காவலோடு கூடிய கப்பல் கூட்டம்—டென்ஹெல்டருக்கு (Denhelder) தென் மேற்கு.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரஸ்தாக்கள், பீரங்கி ஸ்தாபனங்கள் துருப்புகள்.—வெரோனே (Verona), பொலோனு (Bologna), பொல்ஸானோ (Bolzano).

லக்ஷியங்கள்.—கான்ஸெல்லோ (Cancello) வைச்சுற்றிலும், கெய்யாஸ்ஸோ (Caiazzo).

பேரும் ரஸ்தாக்கள்.—இதாலியிலுள்ள பார்மியா (Formia).

விமான நிலயம்.—பாஸ்ட்டியா (Bastia);

விமான நிலயம்.—கிரீட் (Crete).

ருஷ்யா (Russia).

(28 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—பின்ஸ்சாபனிலும் (Finschhafen) அதைச்சுற்றிலும்.

விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak).

ருஷ்யா (Russia).

ராணுவ நிலயங்கள்.—மேமியோ (Maymyo).

கப்பல்கள்.—காதா (Katha).

ரயில்வே தளங்கள்.—நாபா(Naba) ஜங்ஷன்.

கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்.

ஜப்பானியச் சைனியங்கள்.—பூதிடாங் (Buthidaung) பிரதேசம்.

26—9—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—வேவு பார்த்தல்—வடக்கு பிரான்ஸ் (Northern France).

இரவு.—இலக்குகள்—ஜெர்மனியிலுள்ள ரைன்லாந்து (Rhineland).

விமானச் சண்டைகள்.—ஹாலந்து (Holland). (ஒரு எதிரி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி துருப்புகள்.—இதாலியிலுள்ள ஸாலர்னோ (Salerno) விற்குத் தெற்கில்.

மோட்டார் போக்குவரத்துகள், ரஸ்தா சந்திப்புகள்.—இதாலியிலுள்ள பெனிவெண்டோ (Benevento), அமால்பி (Amalfi), போகியோ, (Foggia).

விமான நிலயங்கள்.—நேபிள்ஸி (Naples)க்கருகில்.

ஜெர்மன் வெளியேறும் படகுகள்.—கார்ஸீகா (Corsica)விற்கும் இதாலி (Italy)க்கும் மத்தியில்.

விமான நிலயம்.—கிரீஸிலுள்ள ஆதென்ஸ் (Athens).

ருஷ்யா (Russia).

(51 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak).

பட்டணத்தைச் சேர்ந்த பிரதேசம்.—பின்ஸ்சாபன் (Finschhafen).

ஜப்பானியப் படகுகள்.—நியூ பிரிடன் (New Britain)ச் சுற்றிலும்.

பர்மா (Burma).

ரயில்வேக்கள்.—பின்மானு (Pyinmana). விலிருந்தும், பின்மானுவிற்கும் போவன.

படகுகள்.—ஐராவதி (Irrawaddy), கலடான் (Kaladan).

ஜப்பானியச் சைனியங்கள்.—பூதிடாங் (Buthidaung).

ரயில்வே தளங்கள்.—மாண்டலே (Mandalay), கியாக்ஸ் (Kyaukse), லெட்படான் (Letpadan).

ரயில்வே சாக்கு வண்டிகள்.—யூவி (Yev)க்குத் தெற்கில்.

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

21—9—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—இங்கிலாந்திலுள்ள கிழக்கு ஆங்கிலியாவிலுள்ள கடற்கரை.

விமானச் சண்டைகள்.—பிஸ்கே வளைகுடா (Bay of Biscay), வட கடல் (North Sea). (6 அச்சு விமானங்கள் சுட்டுத் தள்ளப் பட்டன.)

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள போர்ட் மோர்ஸ்பி (Port Moresby).

நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda) பிரதேசம், வெல்லாலவெல்லாவிலுள்ள பார்கோமா (Barkoma).

22—9—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia),

நஷ்யச் சைனியங்கள்.—டினிப்பர். (Dnieper).

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—ஸாலமனஸ் (Solomens). (20 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

23—9—43. (வியாழக்கிழமை.)

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

நஷ்யச் சைனியங்கள்.—டினிப்பரின் (Dnieper) கீழ்கரை.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நியூ கினியிலுள்ள ஸிலிட்ஸிலி (Tsilitsili).

கப்பல்கள்.—நியூ கினியிலுள்ள ஹோபாய் (Hopoi).

24—9—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

ருஷ்யா (Russia).

நஷ்யச் சைனியங்கள்.—டினிப்பரின் (Dnieper) கீழ்கரை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசப் படையெடுக்கும் படகுகள்.—நியூ கினியிலுள்ள பின்ஸ்சாபன் (Finschhafen)

25—9—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் இல்லை.

நஷ்யா (Russia).

நஷ்யச் சைனியங்கள்.—கீவ் (Kiev).

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—பின்ஸ்சாபன் (Finschhafen).

26—9—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—கெர்ச் (Kerch) ஜல சந்தி.

தூரக்கிழக்கு (Far East).

ஆஸ்திரேலியத் துருப்புகள் பீரங்கி ஸ்தாபனங்கள்.—பினிஸ்சாபன் (Finschhfen).

27—9—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

நஷ்யச் சைனியங்கள்.—டினிப்பரின் (Dnieper) கீழ் கரை.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

நன்றி செலுத்தல். ஸெப்டம்பர் மாதம் 26-ம் தேதியன்று கொண்டாடப் பட்ட பொதுஜன தற்காப்பு, பிரிடனுக்காக நடை பெற்ற யுத்தத்தில் வெற்றியடைந்த தின விழாவானது அந்நாளை ஞாபகப்படுத்தவும் கடவுளுக்கு பிரார்த்தனை செய்யவும் ஏற்பட்டதுடன் அநேகரைக் காப்பாற்றிய ஒரு சிலருக்கு நன்றி செலுத்தவுமதான் முக்கியமாகக் கொண்டாடப்பட்டது. ஒரு சிலர் அந்தக் காலத்தில் பிரிடனில் வசித்துவந்தவர்களை மட்டுமில்லாமல் சாம்ராஜ்ய நாடுகளிலும், உலகத்தின் மற்ற பாகங்களிலும் வசித்துவந்தவர்களையும் கொடுங்கோன்மையிலிருந்தும், காட்டுமிராண்டித் தனத்திலிருந்தும் காப்பாற்றிவிட்டார்கள்.

இந்தப் போர் விசித்திரமானது. சரித்திரத்திலேயே இதுதான் முதல் ஆகாய யுத்தம். இரண்டு விமானப்படைகள் ஆகாய மார்க்கத்தில் போர் புரிந்தன. இந்தப் போர் ஆகாயத்தில் இரண்டு அல்லது மூன்று மைல்கள் உயரத்தில் மணிக்கு சுமாராக 300 மைல்கள் பறந்து செல்லக்கூடியதும், தரையிலிருக்கும் ஆண், பெண் குழந்தைகள் பேரில் வெடிகுண்டுகளைப்

போட்டு நாசம் விளைவிக்கும் விமானப்படைக்கும், அதிக பயிற்சி பெறாததும் ஆனால், தீரமுள்ளதுமான, விடாமுயற்சியுள்ளதுமான ஒரு சிறிய சண்டை விமானப்படைக்கும் நடைபெற்றது. தரைப் பிரதேசத்தில் விமான எதிர்ப்பு பீரங்கிகளிலும், விமான நடவடிக்கைத் தற்காப்புகளிலும், தீயைக் கண்டுபிடிப்பதிலும், தீயணைக்கும் வேலையிலும், உதவிப்படைகளிலும் சிகிச்சைக்காக ஜனங்களை அப்புறப்படுத்தும் சேவையிலும், ஈடுபட்ட ஆடவர்களும், ஸ்திரீகளும் எதிரியைத் துரத்தியடிப்பதற்கும், தங்களுடைய உற்றாரையும், உறவினர்களையும், காப்பாற்றுவதற்கும் ஒத்தாசை செய்துவந்தனர்.

ஹாலந்தும், பெல்ஜியமும், பிரான்ஸும் 37 நாட்களுக்குள் பிடிக்கப்பட்டாலும் பிரிடனுக்காக நடைபெற்ற விமானப்போர் 84 நாட்கள் நடைபெற்றது. எதிரி இடைவிடாது முதலில் பகலிலும், பிறகு திருடன்போல் இரவிலும் பிரிடனைத் தாக்கினான். ஆகிலும், கடைசியில் அவன் துரத்தியடிக்கப்பட்டான். எதிரிக்கு 2,375 விமானங்கள் பகலில் நஷ்டமாகிவிட்டன. இரவு காலத்தில் நொருங்கிப்போன விமானங்களையும் அல்லது அடிபட்டு ஜெர்மனிக்குத் திரும்பி குப்பையில் தள்ளப்பட்டதுமான விமானங்களையும்பற்றி விவரங்கள் கொடுக்கமுடியாது.

சில சம்பவங்கள் அவைகள் நடைபெற்ற நாட்டிற்குமட்டும் முக்கியத்துவமுள்ளவையல்ல. அவைகள் உலகத்திற்கும் முக்கியமானவைதான். ஏனெனில் அவைகள் மானிட வர்க்கத்தின் போக்கையே மாற்றியமைத்துவிட்டன. உதாரணமாக, மாரதான் யுத்தத்தில் கிடைத்த வெற்றியானது கிரீஸைக் காப்பாற்றியதுடன் மேற்கு நாகரீகத்தையும் காப்பாற்றி ஐரோப்பாவையும் காப்பாற்றிவிட்டது. அதேமாதிரியாக ஜெர்மன் விமானப்படையை முறியடித்த வைபவம் பிரிடனுக்கு மட்டுமில்லாமல் உலகத்துக்கும், முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் போர்தான் மானிட வர்க்கத்தின் ஸ்வதந்திரத்தை ரக்ஷித்தது.

வி வி வி வி வி

இகழ்ச்சிக் கொண்டாட்டம். அதிசயப்படத்தக்க முறையில் நமது ஸெப்டம்பர் 26-ம் தேதி வெற்றி தினவிழாவுக்கு மறுநாள் ஜெர்மனியும், ஜப்பானும் மூன்று அச்சு வல்லரசுகளுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூன்றாவது வருஷ விழாவைக் கொண்டாடி, ஒருவருக்கொருவர் நற்செய்திகளை அனுப்பினார்கள். இதாலியின் சரணாகதிக்குப்பின் இந்த மூவர் ஒப்பந்தம் நிலைபெற்றிருக்கவில்லையென்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்போலும். அன்று பேசியபொழுது வான் ரிப்பன்டிராப், ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் கடைசிவரையில் போராடுவதற்கு 250 மிலியன் ஜனங்களிருக்கிறார்களென்று தற்புகழ்ச்சி செய்துகொண்டான். பெர்லினிலிருந்த முஸோலினி இதாலிக்குத் திரும்பி அனுப்பப்பட்டு, அவனும் சொற்பொழிவு ஆற்றினான். "சென்ற மூன்று வருஷங்களில் ஆவலுடனும், நம்பிக்கையுடனும் தான் நடத்திய மூவர் ஒப்பந்தத்தை பாஸிஸ்ட் குடியரசு நிர்வாகமும், அதிக நம்பிக்கையுடன் பரிபாலித்துவரும்" என்று அவன் சொன்னான். இந்த வார்த்தைகள் அச்சுநாடுகளுக்கு நாசத்தை சூசிப்பிக்கின்றன. பழைய சரித்திரத்தைப் பரிசீலனை செய்தால் சென்ற மூன்று வருஷங்களில் இதாலிய சாம்ராஜ்யம் அழிந்தது போல அடுத்த மூன்று வருஷங்களுக்குள்ளாக அச்சு வல்லரசுகள் பூராவாக நாசமாகிவிடுமென்று அவைகள் முன்கூடிச் சொல்லுகின்றன.

ஜெர்மன் செய்தி இலாகாவின் ராஜதந்திர நிருபர் இதைப்பற்றி புத்திசாலித்தனமாக வியாக்யானம் எழுதியிருக்கிறார். "கொண்டாடுவதற்கு இது சரியான சந்தர்ப்பமில்லை" என்று சொல்லுகிறார். அதுவும் சரிதான். எங்கு பார்த்தாலும் அச்சுநாடுகளுக்குத் தோல்வி ஏற்பட்டுவரும்பொழுது குதூகலப்படுவது கோமாளித்தனமே ஒழிய வேறில்லை.

வி வி வி வி வி

போயடீஷியாவின் சாபம். "ரோம் அழித்த தேசமே அதை நாசம் செய்யும்" என்று போயடீஷியா சொன்னது கவி சாதுர்யம் என்றாலும் சரித்திரமும், நடப்பு சம்பவங்களும், அதன் உண்மையை துலக்கிக் காட்டிவிட்டன. ரோம் சாம்ராஜ்யத்தின் குலைவும், இறுதியில் வீழ்ச்சியும் கால அளவில் ஏற்பட்டாலும், துரோகமானது அதன் போலிச் சக்ரவர்த்தியின் வீழ்ச்சியை உண்டுபண்ணிவிட்டது. இதாலி, அபிஸீனியாவையும், குடியேற்ற நாடுகளான ஸோமாலிலாந்தையும், எரிட்ரியாவையும், டிரிபோலியையும் இழந்துவிட்டது. மத்தியதரைக்கடலை இதாலிய சமுத்திரம் என்று இனிமேல் சொல்லமுடியாது. அதிலுள்ள தீவுகளையும், கடற்கரையையும் இதாலி தோற்றுவிட்டது. போர்செய்யும் பிரெஞ்சுக்காரர்களும், கிரேக்கர்களும், யூகோஸ்லாவியர்களும் அவைகளுக்குப் பாத்தியம் கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள். நேசதேசத்தார்கள் தங்களுடைய ரத்தத்தைச் சிந்தி அவைகளைப் பிடித்திருக்கிறார்கள். ஆகிலும், முட்டாள்தனமாக படோக்ளியோ இதாலிக்குச் சொந்தமான குடியேற்ற நாடுகளை இதாலியிடம்

கொடுத்துவிடவேண்டுமென்று நேசநாட்டாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறான். அவன் முறியடிக்கப்பட்ட சத்துருவென்பதையும், அவனுடைய விசுவாச புத்தி பரிக்ஷிக்கப்படவேண்டுமென்பதையும், நேசதேசத்தாரின் ஆதரவினால்தான் இதாலியின் ஒரு பாகம் அவன் வசம் இருக்கிறதென்பதையும் அவன் மறந்துவிட்டான்போலும். இதாலியர்களே நம்பிக்கைக்கு அருகதையுள்ளவர்களல்ல. முஸோலினி அதிகாரத்திலிருந்தபொழுது அவனை அவர்கள் ஆதரித்தார்கள். ஜெர்மன் துருப்புகள் இதாலிக்குள் வந்தபொழுது அவர்களை வரவேற்றார்கள். சஞ்சலமான காலப்போக்கினாலும், அல்லது துரதிருஷ்டவசத்தினாலும் முஸோலினி திரும்ப அதிகாரத்துக்கு வந்தால் இதாலியர்கள் எதையும் செய்யத் தயாராகவிருப்பார்கள்.

வி வி வி வி வி

இதாலிக்காக யுத்தம். நேசநாடுகளுக்குத் தோல்வி நிச்சயமென்று எதிர்பார்த்து கோயபல்ஸ் ஸெப்டம்பர் மாதம் 17-ம் தேதியன்று ஸாலர்னோவில் மற்றொரு டிப்பி நடவடிக்கை ஏற்படுமென்று சொன்னான். ஜப்பானியர்கள் இதைப் பின்பற்றி இந்த நடவடிக்கை டங்கர்க்கை ஒத்ததாக யிருக்குமென்றார்கள். இந்த குதூகலம் அகாலத்தில் ஏற்பட்டதாக மாறிவிட்டது. ஸாலர்னோவில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது உண்மைதான். மிஸ்டர் சர்ச்சில் சொன்னபிரகாரம் ஸாலர்னோ கேந்திர ஸ்தானத்தை பலப்படுத்திக்கொண்டு, முக்கியமான ஒரு வெற்றிபெற்று நேசதேசத்தார்கள் நிலைமையை சமாளித்துவிட்டார்கள். அதற்குப்பின் கடற்படை பீரங்கிகளின் ரக்ஷணைக்குட்பட்டு ஏராளமான சாமான்களும், உதவிப்படைகளும் குவிந்துவிட்டபடியால் நேசதேசத்தாரின் நிலைமை வலுவடைந்துவிட்டது. வெடிவிமானங்கள் 2,500 தடவை பாய்ந்து சென்று 1,400 டன்கள் எடைமான முள்ள குண்டுகளை ஸாலர்னோவில் பொழிந்தன. எதிரியின் தெற்கு விலாப்பக்கத்தையும், பின் பக்கத்தையும் 8-ம் படை தாக்கி நிலைமையை தலை கீழாக மாற்றிவிட்டது. ஜெர்மானியர்கள் பலமாகச் சண்டை போட்டுக்கொண்டே எல்லா பாகங்களிலிருந்தும் பின் வாங்குகிறார்கள். நேபிள்ஸ் நேசநாடுகளின் வசமாகிவிட்டது.

எட்டாம் படை முன்னேறிக் கொண்டிருக்கிறது. சர்ச்சில் சொன்னபிரகாரம் எல்அலாமீனில் ஆரம்பித்த முன்னேற்றம் இன்னும் முடிவடையவில்லை. அதுவும் 5-ம் படையும் சேர்ந்து இந்த வாரத்தில் அநேக இடங்களைப் பிடித்துவிட்டன. முக்கியமாக பாக்கியா விமான நிலயம் பிடிபட்டுவிட்டது.

அறுகுறையாகச் சொன்னால், நேசதேசத்தார்கள் ஸாலர்னோவுக்கு வடக்கேயுள்ள சம வெளிகளையும், ஏட்ரியாடிக் கடற்கரையிலுள்ள மார்கெரிடா-டி ஸாவாயியாவையும் அவ்விரண்டையும் சேர்க்கும் 'V' போன்ற பாகத்தின் தெற்கு பாகத்தையும் ஆக்கிரமித்துவிட்டார்கள்.

நேபிள்ஸை நேச நாடுகள் ஆக்கிரமித்துவிட்டன. இது இதாலியில் மூன்றாவது பெரிய நகரம், இரண்டாவது பெரிய துறைமுகம். அது பெரிய தொழிற்சாலைகளுள்ளது. எஃகு ஆலைகளும், கப்பல் கட்டும் தளங்களும், துணி நெசவு ஆலைகளும் ரசாயனப் பொருள் உற்பத்தி சாலைகளும் அதிலிருக்கின்றன. ரோமுக்கும், கலாப்ரியாவுக்கும், பாரிக்கும் செல்லும் இருப்புப்பாதைகளுக்கு இது மத்திய நிலயம்.

கார்ஸிகாவிலிருந்து ஜெர்மானியர்கள் பிரெஞ்சு கம்மாண்டோ படைகளாலும் கார்ஸிக ஸ்வதந்திரப் படைகளாலும் துரத்தியடிக்கப்படுகிறார்கள். கார்ஸிகா நமது வசமாகி விட்டால், பிரான்ஸில் படையெடுப்புச் செய்ய அது பாய்ச்சல் ஸ்தலமாக ஆகிவிடும்.

யூகோஸ்லாவிய ஸ்வதந்திரப் படைகள் டால்மேஷியன் கடற்கரையை பலமான நடவடிக்கைகள் நடத்திவருகிறார்கள். நேசதேச ராணுவ அதிகாரிகள் மிகாலோவிச்சுடன் தொடர்பு ஏற்படுத்திவிட்டார்கள். 8-ம் படை ஏட்ரியாடிக் கடலில் முன்னேறுகிறது. தேசீய விடுதலைச் சேனைகள் ஸ்பிளிட்டுக்காகக் கடும்போர் செய்து வருகின்றன.

இதாலியர்களில் சிலர் பிரென்னர் கணவாயிலுள்ள இருப்புப் பாதையை பலமாகத் தாக்கி வருகிறார்கள்.

வி வி வி வி வி

ஸ்மோலன்ஸ்க்கின் வீழ்ச்சி. ருஷ்யாவில் எதிரியின் மிகவும் முக்கியமான கேந்திர ஸ்தானமும், ஹிட்லரின் தலைமை காரியாலயமும், மாஸ்கோவைத் தாக்குவதற்கு ஹிட்லர் தளமாக உபயோகித்ததும், ஐந்து இருப்புப்பாதைகளுக்கு

மத்தியஸ்தலமும், மாஸ்கோவிலிருந்து துக்ககரமாக பின்வாங்கிய நெபோலியனின் நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்டதால் சரித்திர பூர்வமாக ருஷ்யாவிலேயே கோர சம்பவங்களுடன் கூடியதுமான ஸ்மொலன்ஸ்க்கின் வீழ்ச்சிதான் இவ்வாரத்திய, இந்த வேனிற் காலத்திய மகத்தான ஜெர்மன் தோல்வி. இந்தப் பிரதேசத்தை தங்களுடைய டாட்சங்கத்தின் உதவி கொண்டு பலப்படுத்தி, 25 மாதங்களாக ஜெர்மானியர்கள் காப்பாற்றி வந்தார்கள்.

ஸ்மொலன்ஸ்க்கை ருஷ்யர்கள் பலமாகத் தாக்கிப் பிடித்துக்கொண்டார்கள். ஜெர்மானியர்கள் அங்கிருந்து பின்வாங்கிவிட்டதாகவும் அது வீழ்ச்சிபெறுவதற்கு முன்னமே அதைப்பற்றிய தகவலையும் ஜெர்மானியர்கள் சொல்லிவிட்டார்கள். தோல்விகளை மறைத்துச் சொல்லுவதற்கு ஜெர்மானியர்கள் இப்பேர்ப்பட்ட தந்திரத்தைச் செய்து வருகிறார்கள். அவர்கள் பலசாலிகள் போலும். ஆனால் யுத்த அவசிய முறையில் பின்வாங்கிவருவதாகவும் அவர்கள் சொல்லி வருகிறார்கள்.

ஸ்மொலன்ஸுக்குப் பிறகு மகத்தான முன்னேற்றம் செய்து ருஷ்யப் படைகள் நீபர் நதியையும், ட்வினு நதியையும் தாண்டி வெண்மை ருஷ்யாவுக்குள் புகுந்துவிட்டனர். கீவை ஜெர்மானியர்கள் காலி செய்ய ஆரம்பித்துவிட்டார்களாம்.

ருஷ்யர்கள் அனபாவைப் பிடித்தபின் ஜெர்மானியர்கள் கூபான் தீபகற்பத்தைக் காலி செய்து வருகிறார்கள். இதிலிருந்து கிரிமியாவின் கிழக்குக் கோடியிலுள்ள கெர்ச் ஜலசந்திக்குப் பாய்ச்சல் ஸ்தலம் ருஷ்யர்களுக்குக் கிடைத்துவிட்டது. ஆஸாவ் கடலுக்கும், கருங்கடலுக்கும் மத்தியில் சில மைல்கள் தூரம்தானிருக்கிறது. சமீபத்திலுள்ள டாமன் தீபகற்பத்திற்கு ஆபத்துண்டாகிவிட்டது.

கிழக்கிலுள்ள ஜெர்மானியரின் நிலைமை ஸ்டாலின்கிராட்டுக்குப்பின் இப்பொழுது மிகவும் பயங்கரமாகயிருக்கிறது.

இவ்விதமான பின்வாங்குதல் இதுவரையில் நடைபெற்றதில்லை. ஐரோப்பியக் கோட்டையின் வாசற்படிகள் பின்னோக்கிச் செல்லுகின்றன. அவைகள் நீபர் நதிக்கரையையும் தாண்டி போலிஷ் எல்லைச்சரகத்துக்கு வந்துவிட்டன.

ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுடைய சொற்பொழிவுகளிலும், இதர சின்னங்களிலும் ஜெர்மனியின் அதோகதி நிச்சயம் என்ற தோற்றம் புலப்படுகிறது. "எது வந்தாலும் சரணாகதி செய்வது கிடையாது" என்று கோயபல்ஸ் சொல்லி வருகிறான். ருமேனியர்கள் அங்காராவில் சமாதானப் பேச்சுகளை ஆரம்பித்துவிட்டதாகத் தெரியவருகிறது. பின்லாந்தின் பொக்கிஷ மந்திரி சமாதானம் செய்து கொள்ளத் தயாராகயிருப்பதாகச் சொல்லி ஸெப்டம்பர் மாதம் 26-ம் தேதியன்று ஹெல்ஸிங்கியில் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். "பின்லாந்துடன் ருஷ்யா சமாதானம் செய்துகொள்ளலாம். ருஷ்யாவை ராணுவ முறையில் முறியடிக்க முடியாது. தத்வதரிசிகளான நாங்கள் எங்களுடைய அயல்நாட்டுக் கொள்கையில் இந்த முக்கியமான உண்மையை மதித்துவிட்டோம். எதிர் காலத்தில் பலம் பொருந்திய ருஷ்யாவின் நண்பனாக வசிப்பதுதான் சாவதானமென்று நாங்கள் கருதிவிட்டோம். ருஷ்யர்கள் சமாதானம் செய்துகொள்ள விரும்பினால் நாங்கள் தயாராக விருக்கிறோம்" என்று அவர் சொன்னார்.

இந்தச்சமயத்தில் ருஷ்யப் போர்முனையில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்குப்பின் மூன்று முக்கியமான நடவடிக்கைகள் ஏற்பட்டிருக்கின்றன. (1) சமீபத்தில் கலகம் ஏற்பட்ட நார்வேக்கு ஜெர்மனி ஸ்வதந்திரமளித்துவிடுவதாகச் சொல்லுகிறது. அந்த ஸ்வதந்திரம் புதிய உலக அமைப்பு திட்டத்துக்குட்பட்டதுதான். (2) மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் ருஷ்யாவுக்குப் பிரதிநிதித்துவமுள்ள ஒரு நேசதேசக் கோஷ்டியை நியமிப்பது. (3) நேசதேச ராஜதந்திரிகள் பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்யப் பிரதிநிதிகள் ஒன்றுகூடி சமீப காலத்தில் யோசனை செய்வார்களென்று அடிக்கடி சொல்லிவருகிறது.

வி வி வி வி வி

பின்வாங்கும் அலைகள். ஜெர்மன் துருப்புகள் பின்வாங்குவது வெள்ளப் பெருக்கு அடங்குவதற்கு சமானமாகும். வெள்ளம் பெருகி பிரதேசங்களை மறைத்துவிட்டுப் பின்வாங்கும்பொழுது மூழ்கிக் கிடந்த பிரதேசங்களும் வெளிகளும் தோன்றுகின்றன. இரண்டு வருஷமாக ஜெர்மன் வெள்ளத்தில் மூழ்கியிருந்த ஓரலும், கார்கோவும் பிரியான்ஸ்க்கும், ஸ்மொலன்ஸ்க்கும், ருஷ்ய நதிகள் பாய்ந்து செழிப்புறச்செய்யும் வயல் பிரதேசங்களும் மறுபடியும் தோன்றிவிட்டன.

ஏமாற்றம். ருஷ்யா விடுதலைபெற்ற தோற்றம் ஒரு பக்கத்தில் காணப்படுகிறது. எவ்வித ஆபத்துகளிலிருந்து அது விடுவிக்கப்பட்டிருக்கிறதென்றும் நாம் மதித்துப் பார்க்கவேண்டும். யூக்ரேனை ஆக்கிரமித்துக் கொண்டு ருஷ்யர்களின் செலவில் போஷனை செய்துகொள்ளுவதென்று ஜெர்மனி எண்ணம் கொண்டிருந்தது. நேசநாடுகள போட்ட கடல் முற்றுகையைப் பொருக்கமுடியாமல் ஹிட்லர் கிழக்குப் பக்கம் சென்று ருஷ்யாவைக் கொள்ளையடித்துவிடலாமென்றும், யூ படகுகளின் நடவடிக்கை மூலம் பிரிடனில் வறுமையை உண்டாக்கிவிடலாமென்றும் ஹிட்லர் நினைத்தான். இந்த இரண்டு முயற்சியிலும் அவனுக்கு ஏமாற்றம் உண்டாக்கிவிட்டது. அவனுடைய நீர்மூழ்கிகள் தளங்களுக்குத் திரும்பிவருகின்றன. அவைகள் மறுபடியும் சஞ்சாரம் செய்வதற்கு ஹேஷ்யமில்லை. அப்படி வந்தாலும் கெடுதல் செய்ய முன்போல சக்திபெற்றிருக்காது. அதே சமயத்தில் யூக்ரேனிலிருந்தும் ஜெர்மன் துருப்புகள் துறத்தி அடிக்கப்படுகின்றன.

கூடிய சீக்கிரத்தில் ஜெர்மனிக்கு வறுமை ஏற்படும். இறுதியில் விசாரணை செய்யப்படும் நாள் சமீபத்திலில்லாவிட்டாலும் ருஷ்யாவைக் கொள்ளையடிப்பதற்குப் பதிலாக மற்ற ஆக்கிரமிப்பு நாடுகளில் கொள்ளையடிககலாமென்று ஜெர்மனி உத்தேசித்துவிட்டது. ஜெர்மன் மக்களின் மன உறுதியை நிலைநிறுத்த ஜெர்மன் பிரசாரகர்கள் பின்வருமாறு சொல்லி வருகிறார்கள் "யுத்த ஆரம்பத்திலிருந்ததைவிட இப்பொழுது ரொட்டிப் பங்கீடு கடுமையாக இருக்கிறது." "ஜெர்மானியர்கள உணவுப்பொருள் வசதியினால் முன்னணியில் நிற்கிறார்கள்" என்ற கோயபல்ஸின் அபத்தப் பேச்சைக் கேட்டு ஜெர்மன் மக்கள திருப்தியடைகிறார்கள். விசாரணை காலம் வரும்பொழுது அடிமைப்பட்டும் வறுமையினால் வருந்தி மெலிந்துபோன ஐரோப்பிய நாடுகளெல்லாம் ஜெர்மன் அதிகாரிகளையும், கொடுமை விளைவிக்கிறவர்களையும் சின்னபின்னம் செய்துவிடுவார்கள்.

வி வி வி வி வி

பஸிபிக் யுத்தம். பஸிபிக்கில் டாராவா, நாருத் தீவுகளை நேசதேசத்தார்கள் தாக்க ஆரம்பித்துவிட்டதால் ஜப்பானிய ரகசிய தளமான டிரக்குக்கு பேராபத்து உண்டாகிவிட்டது. அமெரிக்காவுக்கு பேர்ல் துறைமுகம் போல ஜப்பானியருக்கு டிரக் தீவு முக்கியமானது. டோக்கியோவிலிருந்து 2,200 மைலுக் கப்பாலிலும், ஸாலமன்ஸிலிருந்து 1,300 மைல்களுக்கப்பாலிலும், பிலிப்பைன்ஸ் தீவுகளிலிருந்து 2,150 மைல்களுக்கப்பாலிலும இது இருக்கிறது, பூமத்தியரேகையை ஒட்டி ஸலாமூவா, லேயிலிருந்து டாராவா வரையில் பிறைவடிவமாக தற்காப்பு ஸ்தானங்களை நேசநாடுகள் அமைத்துவிட்டார்கள். இந்தப் பிறைவட்டத்தில் எந்த பாகத்திலிருந்து முன்னேறினாலும் ரபால் துண்டிக்கப்பட்டுவிடும். இந்தப் பேராபத்தை நன்கு உணர்ந்து ஜப்பானியர்கள் தஙகளிடமுள்ள படைபலம் பூராவையும் திரட்ட ஆரம்பித்துவிட்டார்கள். டோக்கியோ ஒலிபரப்பில் பின்கண்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. "நேசநாடுகள் பஸிபிக்கில் உள்ள நம்முடைய கேந்திர ஸ்தானங்களை முதலில் பிடித்துக்கொண்டு பிறகு நமது தாய் நாட்டைத் தாக்க பரிஷ்காரமான திட்டத்துடன் முயற்சி செய்துவருகிறார்கள்."

வெளிப்பக்கத்திலுள்ள தற்காப்புகளை நொருக்கியபின் ஆஸ்திரேலியப் படைகள் பின்ஷேபன் துறைமுகத்தைத் தாக்கிவருகிறார்கள், அவர்கள் பூமி நதியைத் தாண்டி பின்ஷேபனுக்குத் தெற்கே கால் மைல் தூரத்திலுள்ள லாக்மேக் விரிகுடாவை நோக்கி முன்னேறுகிறார்கள். நேசதேசப்படைகள் பின்ஷேபனுக்கருகிலுள்ள ஸாடல்பர்க்கைக் கைப்பற்றி விட்டார்கள். தென் மேற்கு பஸிபிக்கில் உள்ள நேசதேசத்தரைப்படைகளின் தளகர்த்தரான ஜெனரல் ஸர் தாமஸ் ப்ளாமி பின்வருமாறு சொல்லுகிறார். "பின்ஷேபன் யுத்தம் திருப்திகரமாக நடைபெறுகிறது. எதிரி இங்கே அடைபட்டிருக்கிறான். மாடாங்கிலும், வீவாக்கிலும், ஹாலான்டியாவிலுமுள்ள பலமான தற்காப்புகளை முதலில் பிடிக்கவேண்டும். ஜப்பானியர்கள் கைப்பறறியிருந்த நாடுகளை முன்போல அவர்கள ஊக்கத்துடன் காப்பாற்றி வரவில்லை. அவர்களுடைய படைகள் தோற்கடிக்கமுடியாதவைகள என்ற அபிப்பிராயத்தை அவர்களே மாற்றிக்கொண்டுவிட்டார்கள்."

வி வி வி வி வி

விமான நடவடிக்கை. இந்த வாரத்தில் பேர்லினையும், ஹானோவரையும், மான்ஹீமையும், லட்விக்ஷேபனையும், எம்டனையும் வெடி விமானங்கள் தாக்கின. எம்டனைத் தாக்கியத்தில் மூன்று புதிய அம்சங்கள் புலப்பட்டன. லக்ஷியத்தின் பேரில் அமெரிக்க பறக்கும் கோட்டை விமானங்கள் குண்டுகளைப் பொழிந்த பொழுது அவைகளுக்குத் துணையாக "தண்டர் போல்டு" சண்டை விமானங்கள் சென்றன. இரண்டாவதாக எதிரி விமானஙகள் திரும்பி வந்தபொழுது பிரிடிஷ் விமானங்களைப்போல

மார்க்கத்தைக் கண்டுபிடிப்பதற்காக எரிவெடிகளை அவைகள் போட்டன. மூன்றாவதாக வெடி குண்டுகளை புதி தினுசில் ஏற்றிவைத் திருந்ததால் அதிகவெடி குண்டுகளையும் பல ரக வெடி குண்டுகளையும் ஏற்றி செல்ல முடிந்தது.

வி வி வி வி வி

டோக்கியோவைத் தாக்க மார்க்கம். டோக்கியோவுக்குப் போகும் மார்க்கம் என்று சொல்லக் கூடிய ஸப்ளை மார்க்கம் இந்தியாவின் கிழக்கு மலைச் சரகத்தில் அமைக்கப்படுகிறது. இந்த ரஸ்தா முடிவில் பர்மா ரஸ்தாவையோ அல்லது லாஷியோ—சுங்கிங் ரஸ்தாவையோ போய்ச் சேரும். மணிபூர் ரஸ்தாவைவிட காட்டு மார்க்கமாகச் செல்லும் இந்தக் கஷ்ட சாத்தியமான ரஸ்தாவை சீனர்களும், இந்தியர்களும், அமெரிக்கர்களும், நீக்ரோக்களும் காரேமலையிலிருக்கும் மலைவாசிகளும், காடுகள் மத்தியில், மழை, சகதி, பூமிச் சரிவு, அட்டைகள், மலேரியா போன்ற கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டு அமைத்துவருகிறார்கள்.

வி வி வி வி வி

சில்லரை விஷயங்கள். 1. 4-வது இந்திய பட்டாளத்தைச் சேர்ந்த, ஏழாம் எட்வர்ட் மன்னரின் 2-வது கூர்கா ரைபிள்ஸ் படையிலுள்ள சுபேதார் லால் பகதூர் தாபாவுக்கு விக்டோரியா கிராஸ் பதக்கத்தை மாட்சிமை தங்கிய மன்னர் பிரான நேரில் சூட்டினார். சாம்ராஜ்யத்திலுள்ள மூவகைப்பட்ட படைகளைச் சேர்ந்த ஒரு வருக்கும் இந்த உயர்வான கௌரவம் கிடைக்கவில்லை. இவருக்கு மன்னர் இரண்டு தடவை பதக்கமளிக்கும் பாக்கியம் ஏற்பட்டது இதற்கு முன் இவருக்கு நாடா வழங்கப்பட்டது. இப்பொழுது அவருக்குப் பதக்கமே வழங்கப்பட்டடது.

2. கோசாதிபதியாகயிருந்த ஸர் சார்லஸ் கிங்ஸிலி உட் காலமானார். அன்னாருக்கு பதிலாக ஸர் ஜான் ஆண்டர்ஸன் பதவியேற்றார்.

ஸாலர்னோ யுத்த விமர்சனம்.

(மேஜர் ஜெனரல் ஸர் சார்லஸ் குவின்).

ஸாலர்னோவில் நடைபெற்ற கோரமான யுத்தத்துக்கு பூப்பிரதேசத்தின் அமைப்பு காரணமென்று சொல்லமுடியாது. உற்றறிவோர்களுக்கு புலப்பட்டதுபோல் ஜெர்மானியர் களுக்கும், நேசதேசத்தார்கள் நேபிள்ஸுக்குச் சமீபத்தில் இறங்குவதற்குத் தயார் செய்து வருகிறார்களென்று ஸ்பஷ்டமாய்த் தெரியும். படோக்ளியோ சரணடைந்த செய்தி பிரசுரிக்கப் பட்ட பொழுது போர் ஆரம்பிக்கும் தருணம் கிட்டிவிட்டதென்பதும் புலப்பட்டது.

நேசதேசத்தார்கள் நேபிள்ஸ் பிராந்தியத்தை வெடிகுண்டுகளால் தாக்கியதிலிருந்தே நேசதேசத்தாரின் எண்ணங்கள் என்னவென்று வெளியாகிவிட்டது. ஆகிலும், எந்த முனையில் எந்த சமயத்தில், அவர்கள் படைகளை இறக்குவார்களென்று மட்டும் புலப்படவில்லை. ஆகிலும், பூப்பிரதேசத்தின் காடின்யத்தினால் மற்ற இடங்களில் படைகளை இறக்குவது சாவதானக் குறைவானதாகும். ஆகையால், திடீரெனத் தாக்குவதென்பது படைகள் இறங்கும் குறிப்பான நேரத்தைப் பொருத்தமட்டில்தான் ஏற்பட்டிருந்தது.

ஜெர்மானியர்கள் எவ்வளவுதூரம் எதிர்த்து நிற்பார்களென்பதுதான் முன்கூடிச்சொல்லக் கூடவில்லை. தெற்குக் கோடியில் ஏராளமான படைகளைப் பலிகொடுக்க ஜெர்மனி தயாராக விருக்குமாவென்பது சந்தேகமாயிருந்தது.

ஆகிலும், அவர்கள் நன்றாய் தயாராகவிருந்து ரிசர்வ் படைகளையும் அனுப்பி படை யெடுக்கும் படைகளை இறங்கிய உடன் எதிர்த்தார்களென்பது ஆச்சரியமில்லை. படை யெடுக்கும் படைகள் கடற்கரையில் பலமான விசாலமான ஸ்தானத்தை ஏற்படுத்திக்கொண்டு உதவிப்படைகளையும், விமானப்படையையும் குவித்துக்கொள்ள சக்திபெறும் வரையில் அவைகள் எதிரியின் தாக்குதலுக்குட்பட்டவை என்பதை ஜெர்மானியர்கள் அறிந் திருக்கிறார்கள்.

கடற்கரையில் கேந்திர ஸ்தானத்தை அமைப்பதும், அதிலிருந்து அதற்குப்பின் முன்னேறுவதும் நவீன யுத்த சாதனங்களின் உதவியால் கடற்கரையில் துருப்புகள் இறங்கு வதைவிட மிகவும் கஷ்ட சாத்யமானவை என்னும் விஷயத்தை கற்றறிவில்லாத பொது மக்கள் மதிப்பதைவிட யுத்த நிபுணர்கள் நன்கு அறிவார்கள்.

வட ஆபிரிக்காவிலும், ஸிஸிலியிலும், ரெக்கியோவிலும் படைகளிறங்கியபொழுது பலமான எதிர்ப்பு ஏற்படாததால் இறங்கும் துருப்புகளுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களைப் பற்றிய பகுத்தறிவு உண்டாகவில்லை. ஆகிலும், படைகளை இறக்குவதற்கு சிறந்த முறையில் ஆயத்தம் செய்யப்படவேண்டுமென்றும் என்ற படிப்பினை மட்டும் உண்டாகிற்று. ஸிஸிலியில் திடீர் தாக்குதல் முறைகளும், இதாலிய எதிர்த் தாக்குதலின் பலஹீனமும் சேர்ந்து படைகள் வெற்றிகரமாக இறங்குவதற்குச் சாதகம் அளித்தன. படையெடுப்புக்கு ஏற்படக் கூடிய சிரமங்களும் தோன்றவில்லை. ஸாலர்னோவில் நமக்கு ஏற்பட்ட சிரமங்கள், துருப்பு களிறங்கிய ஸ்தானமானது நமது யுத்த விமானங்கள் செல்லக்கூடிய தூரத்தின் அந்தியத் திலிருந்ததால் அதிகரித்துவிட்டன. இதனால் ஜெர்மானியர்கள் தங்கள் விமானப்படையை உபயோகித்து அதிகப் பிரயோஜனத்தை அடையும்படி நேரிட்டது.

போப் பாதிரியை ஹிட்லர் எவ்விதம் நடத்துவான்?

(லண்டன் தந்தி).

ரோமன் கத்தோலிக்க மதத்தின் தலைவருக்கு இப்பொழுது எவ்விதமான கஷ்டம் ஏற்படு கிறது? இதாலியிலுள்ள பட்டணம் ஒன்றில் இருந்து ஜெர்மன் ஒலிபரப்பின், நேசதேசக் கக்ஷியின் தூதுக்கோஷ்டியினரை நேராகவே பயப்படுத்தியதாக ஜிவார்ட் பிரைஸ் என்பவர் "டெய்லி மெயில்" பத்திரிகையில் எழுதியிருந்தார்.

இந்த நாஸிக் கக்ஷியின் பிரசாரத்தில் "அவர்கள் ஸ்விட்ஸர்லாந்திற்கு போகவேண்டு மென்று போப் பாதிரி ஒரு வருஷத்திற்கு முன்பு கூறியபடி நடக்காததற்கு இப்பொழுது வருந்துவார்கள்" என்று சொல்லப்பட்டிருந்தது.

உலகத்தை சுற்றிலும் பெரும் மதத் தலைவரை, ஒரு கைதியைப் போலவோ, அல்லது ஒரு பிணையாளியைப் போலவோ, சுற்றுமாறு கொண்டு போவதான காரியம், ஹிட்லர் கூட மேற் கொள்ள அஞ்சும்படியான காரியமாகும். 3,00,00,000 ஜெர்மன் கத்தோலிக்கர்கள் இந்த முறையைப் பின்பற்ற மிகவும் திடுக்குற்றிருப்பார்கள்.

காப்பாற்றுவதாகக் கூறி ஹிட்லர் போப் பாதிரியை தன் தேசத்தில் கொண்டுபோய் வைத்துக்கொள்வானோ என்ற ஒரு பயம் இருக்கிறது. ரோமாபுரி "தாக்குதலுக்கும், யுத்த ரங்கமாவதற்கு மிகவும் பிரதானமான நகரமாயிருக்கிறது" என்று அவன் சொல்லலாம்.

அடுத்தாற்போல் நேசதேசத் துருப்புகள் இதாலியத் தலைநகரமான ரோமாபுரியில் முன்னேறி, ஜெர்மன் துருப்புகள் வடக்கே சென்றுவிட்டால், ஹிட்லர் அப்பொழுது ரோமா புரி "சமத்வக்கொள்கை கக்ஷியின் கொள்கையை"ப் பின்பற்றப்போகிறது என்று கூறலாம்.

உலகத்தோர், நாஸி அரசாங்கம் கத்தோலிக்க மதத் தலைவரை நடத்தும் முறைகளை மிகவும் அச்சத்தோடு பார்த்துக்கொண்டிருப்பார்கள். ஹிட்லர் கொண்டுள்ள பெரும் கர்வத்தை அடக்கும்படியாய் அந்த நாஸி முறைகளை குற்றம்கூறும் சொற்களையும் உலகம் கவனித்துக்கொண்டிருக்கிறது.

சென்ற மாத முதலில் போப் பனிரண்டாம் பயஸ் ஒலிபரப்பில் "தற்பெருமை இல்லா தவர்களும், அநீதியான முறையில் அதிகாரம் பெறவேண்டுமென்ற விருப்பமில்லாதவரும் போற்றத்தக்கவர்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

சமாதானம் நிலவுமாறு போப்பாதிரி செய்த காரியங்களுக்கு நன்றி செலுத்துமாறு இதாலியர்கள் கொண்டாடிய களியாட்டங்கள் நாஸிக் கக்ஷியினரின் விரோதப்பான்மையை தூண்டிவிடத் தக்கது. மதாசாரங்களின் மேல் நடவடிக்கை நடத்த ஹிட்லர் தயாராயிருக் கிறான் என்ற விஷயம் ஆகஸ்டு மாதத்தில், கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மன்ஸ்டரின் பிஷப் கௌண்ட் வான் காலன் என்பவர் கெஸ்ட்டபோ துருப்புகள் செய்த அட்டூழியங் களைப்பற்றி பேசியதற்காக ஹிட்லர் தன் அரசாக்கினையால் பிடித்து சிறைப்படுத்தியதே போதிய சான்றாகும்.

ரோமாபுரியின் மக்களைப்பற்றி ஹிட்லர் எப்பொழுதும் ஐயங்கொண்டேயிருக்கிறான். ரோமாபுரியில் முஸோலினியைப் பார்க்கப் போனபொழுது, போப் பாதிரியைப் பார்க்கப் போகவில்லை. ஆனாலும், செயின்ட் பிடர் சர்ச்சைப் பார்த்தாவது தன் விருப்பத்தைத் திருப்தி செய்துகொள்ளலாம் என்ற நோக்கத்தோடு 400 ஏக்கர் பூமியான ரோமாபுரியைச் சுற்றி வந்தான்.

கார்டினல் பாசெல்லி (Cardinel Pacelli) யைப்போல, மியூனிச்சிலே தற்சமயம் போப்பாக இருக்கும் பாதிரியார், முன்னிருந்த போப்பின் தூதராக இருந்தார். அவர் இருந்த பொழுது தான் ஹிட்லரும் நாஸிக் கக்ஷியும், நாஸி முறைகளின் வளர்ச்சியை முதலில் வளர்த்த இக்கலான ராஜிகளேயும், கலவரஙகளேயும் அதன் தளஉதவியையும் உணர்ந்தான். அப்பொழுது முதல் போப் பாதிரியாருக்கு இருந்துவரும் அகில உலக செல்வாக்கையும் கண்டு ஹிட்லருக்கு அவரிடம் மட்டும் பயம் உண்டு.

மியூனிச்சிலிருந்த தக்க ஆதாரமுள்ள ஒருவரிடமிருந்து நான் ஒரு விஷயம் அறிந்தேன் அதாவது ஹிட்லர் மியூனிச்சில் ஏற்படும் பண சகாயஙகளேப்பெற முகமன் வார்த்தைகளேக் கூறும்போது கார்டினல் பாசெல்லியுடன் கூடிய ஒரு கூட்டத்தில் பேசினுன்.

கார்டினல் பாசெல்லியால் வரவேற்கப்பட்டபொழுது, ஹிட்லர் அவர் காலில் முழந்தாளிட்டு, வணஙகி அவரின் கையிலுள்ள "வேதாசாரமோதிரத்தை முத்தம் செய்து" தான் ஒரு தீவிரமான கத்தோலிக் கிருஸ்தவன் எனக் கூறினுன். மேலும் தனக்குப் பழக்கமான பிரசங்கத்தை ஆரம்பித்து ஜெர்மன் அரசாஙகத்திற்குத் தான் தலைவன் ஆவது உறுதியென்றும், அப்பொழுது அவனது குறிக்கோளாவது இப்பொழுது கத்தோலிக்க மதத்தில் ஏற்பட்டிருக்கும் சீர்திருத்தங்களுக்கு மாருகக்கிளம்பி முன்போலவே கத்தோலிக்க மதத்தை தழைக்கச் செய்வது தான் என்றும், ஜெர்மனி முற்றிலும் கத்தோலிக்க மதத்தைப் பரவச் செய்வான் என்றும் பிரலாபித்தான.

அன்றைய தினம் ஹிட்லரின் அந்தப் பிரசங்கத்திற்கு கார்டினல் பாசெல்லி பதிலிருத்தாமல் இருந்ததானது ஹிட்லரின் உரமான ஞாபகத்தில் என்றைக்கும் விறுவிறுப்புடன் தோன்றிக் கொண்டேயிருக்கிறது.

ஸ்வதந்திரப் படைகள் ஸ்பிளிட் துறைமுகத்தைக் கைப்பற்றியது.

யூகோஸ்லாவியில் இதாலியர்களின் வீழ்ச்சியின் பயனுக யூகோஸ்லாவிய அரசாங்கத்தார் ஊர்ஜிதம் செய்கிறபடி ஸ்வதந்திரப்படைகள் ஸ்பிளிட் துறைமுகத்தைப் பிடித்துக்கொண்டார்களென்ற தகவல் கவனுர்கமுள்ளது.

ஸ்பிளிட் என்பது யூகோஸ்லாவியாவின் முக்கியமான துறைமுகம். டால்மேஷியா மாகாணத்தின் நிர்வாகத்தின தலைமை காரியாலயமிருக்கும் ஸ்தானம். ஆயிரக்கணக்கான அடிகள் உயரமாகயிருக்கும். டினுரிக் ஆல்ப்ஸ் மலேயின் சுண்ணும்புக் கற்களுள்ள மலேச் சரிவுகளின் அடிவாரத்திலிருக்கிறது.

டால்மேஷியா கடற்கரையிலுள்ள நகரஙகளேப் போல கடல் மார்க்கமாக ஸ்பிளிட்டுக்கும் சுலபமாகச் செல்லலாம். அதை வசப்படுத்திக்கொண்டு ரக்ஷிக்கவேண்டுமென்ருல் அந்த நாடு கடலாதிக்கம் பெற்றிருக்கவேண்டும். இதை விடு குரோஷியாவின் மத்தியபாகத்துக்கு மலேகள வழியாக வளேந்து வளேந்து செல்லும் ரஸ்தாக்களேயும், இருப்புப் பாதைகளேயும் கைவசப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த மார்க்கமாக வந்துதான் ஸ்பிளிட் நகரத்தை ஸ்வதந்திரப்படைகள் பிடித்திருக்கவேண்டும். இதாலியக் கடற்படை சரணடைந்தபின் எட்ரியாடிக் கடலில் நேசதேசத்தார்களுக்குக் கடலாதிக்கம் ஏற்பட்டுவிட்டதால் அவர்கள நம்பிக்கையுடன் இதைச் செய்திருக்கக்கூடும். யூகோஸ்லாவியாவிலுள்ள முக்கியமான தரை மார்க்கஙகளேக் காப்பாற்றும் சக்தியை எதிரி இழந்துவிட்டானென்பதையும், ஸ்வதந்திரப் படைகளின் நடவடிக்கை வெளிப்படுத்திவிட்டது.

சென்ற சில நாட்களில் ஸ்வதந்திரப்படைகள் குறிப்பிட்ட அநேகம் இருப்புப்பாதைகளேக் கைப்பற்றிவிட்டனவென்ற தகவல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஸ்பிளிட்டைக் கைப்பற்றியதிலிருந்து இது ஊர்ஜிதமாகிவிட்டது.

இதாலி சரணடைவதற்குமுன் பால்கன் நாடுகளில் காவல் வேலேயில் 2 லக்ஷம் இதாலியர்கள் ஈடுபட்டிருந்தார்கள். யுத்தத்திலிருந்து திடீரென்று இதாலியர்கள் மறைந்து விட்டதால் உண்டுபண்ணப்பட்ட வெளியை அடைப்பது ஜெர்மானியர்களுக்கு கஷ்ட சாத்யமானது. வடக்கிலுள்ள குரோஷியாவிலுள்ள பொம்மை அரசாஙகத்தின் துருப்புகளேயும் தெற்கிலுள்ள பல்கேரியத் துருப்புகளேயும் இந்த வேலேயில் அமர்த்தும்படி ஜெர்மன சேனைத் தலைவர்களுக்குச் சங்கடம் ஏற்பட்டுவிட்டது. குரோஷியத் துருப்புகள் உபயோகமற்றவர்களாக ஆகிவிட்டார்கள். இதிலிருந்து பொம்மை ஸமஸ்தானத்தை நிர்வாகம் செய்ய ஜெர்

மானியர்கள் நியமித்த பாவலிச்சும் மற்ற குரோஷியப் பிணையாள்களும் குரோஷிய ஜனங்களின் ஆதரவைப் பெறவில்லையென்ற அபிப்பிராயம் ஊர்ஜிதப்படுத்துகிறது. பாவலிச்சுடன் நெடுநாளாக ஒத்துழைக்க மறுதளித்த குரோஷிய விவசாயிகள் கோஷ்டியும், இதாலியின் சரணாகதியால் அச்சுப்படைகள் செம்பாதி குறைந்துவிட்டதால், தங்களுடைய ஆதிக்கத்தை விஸ்தாரப்படுத்தியிருக்கும் தேசாபிமான படைகளும்தான் குரோஷிய தேசீய உணர்ச்சியின் பிரதிநிதிகள்.

இரண்டு வருஷகாலமாக அந்தக் கோஷ்டிகள் உள்நாட்டில் ரகசியமானதும், ஊடுருவிச் செல்லக்கூடியதுமான இடங்களில் பீதியுடன் ஒளிந்துகொண்டிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் இருப்புப்பாதைகளையும், நகரங்களையும் பிடித்துவிடக்கூடும்.

வெகுகாலமாக ஜெர்மனியைத் தீரத்துடனும், சகிப்புத் தன்மையுடனும் எதிர்த்து வந்தவர்களுக்கு உயர்ந்த வெகுமதி கிடைத்துவிட்டது. சில சமயங்களில் ஜெனரல் மிகைலோவிச்சுக்குட்பட்ட பகுதிக்கும், டிடோ என்று கியாதிபெற்ற தலைவர்களுக்குட்பட்ட பகுதிக்கும், விரோதங்கள் ஏற்பட்டிருந்தன. அவர்களின் தலைமை காரியாலயத்தில் நியமிக்கப்பட்ட நேசதேசப்படைகளின் உத்தியோகஸ்தர்களின் மத்தியஸ்தத்தினால் இப்பொழுது இருதலைவர்களும் ஒன்றுபட்டு நடவடிக்கைகளை நடத்திவருகிறார்கள். இதாலியப் படைகளைக் கலைத்ததிலிருந்து அவர்களுக்கு ஏராளமான ஆயுதங்களும், மருந்து சாமான்களும் கிடைத்துவிட்டன. அதன் விளைவுகள் ஏற்கனவே தோன்றிவிட்டன.

படையெடுப்பு: கப்பற்படையும், மனித பலமும்.

(பிரியான் டன்ஸ்டால்.)

ஒன்றுபட்ட நடவடிக்கைப் படைகளுடன் ஒத்துழைக்கும் கடற்படையைச் சேர்ந்த உயர்வான வேலைக்காரர்களின் திறமையைப்பற்றி பொதுமக்களுக்கு அறிவு ஏற்படுகிறதில்லை. பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த பலவகைப்பட்ட கப்பல்களிலிருப்பவர்களைவிட துருப் பேற்றிச் செல்லும் சிறிய கலங்களில் அநேக வேலைக்காரர்களிருந்து வருகிறார்கள்.

ஒன்றுபட்ட யுத்தப் படைகளின் நடவடிக்கை என்பது நவீன யுத்த தந்திரத்தின் நூதனமான முறையாகும். சுருக்கமாகச் சொன்னால் நவீன சேனைகளுக்குத் தேவையான முஸ்தீப்புகளையும், டாங்கிகளையும் மற்ற கனமான ஆயுதங்களையும், கடல் மார்க்கமாகக் கொண்டுபோய் எவ்விதம் தரையிலிறக்குவது என்பதுதான் இந்த யுத்த தந்திரம். அநேக இடங்களில் துறைமுக வசதிகள் கிடைக்காது. நிச்சயமாக, எதிரிகள் தரைமார்க்கமாகவும் விமான மூலமாகவும் பதில் தாக்குதல் செய்யக்கூடும். பிரிடனின் மூவகைப்பட்ட படைகளின் ஒன்றுபட்ட தாக்குதலில் சரித்திரத்திலேயே இதுவரையில் இவ்விதமான சங்கடங்கள் ஏற்பட்டதில்லை. இதிலுள்ள சிரமங்களும், அபாயங்களும் விசேஷமானவை. புத்திசாலித்தனத்துக்கும் தைரியத்துக்கும் ஏற்பட்டிருக்கும் இந்தச் சோதனையை கடற்படையில் சேர்ந்திருக்கும் வீரர்கள் சமாளித்து வருகிறார்கள்.

சரித்திரத்திலுள்ள அநேக யுத்தங்களில் கடற்படை படைகளை இறக்குவதற்காகப் படகுகளை உபயோகப்படுத்தியிருக்கிறது. அந்தப்படகுகள் சாதாரணமான ரகத்தைச்சேர்ந்தவைகள். அவைகளை ஓட்டுகிறவர்களும், கடற்படையில் பயிற்சி பெற்றவர்கள். டாங்கிகளையும், அதற்கு வேண்டிய பெட்ரோலையும் ஏற்றிச் செல்லவேண்டிய அவசியமேற்படவில்லை. இப்பொழுது அவைகளைத்தான் முதலில் உபயோகிக்கவேண்டும். குதிரைப்படைகள் சில சமயங்களில் உபயோகப்படுத்தப்பட்டன. முன்னதாகச் செல்லும் படைகள் உபயோகித்த யுத்த தளபீரங்கிகளும், வெடிமருந்துகளை உபயோகிக்கும் சிறிய பீரங்கிகள்தான். அவைகளுக்கு வெடிமருந்துகளும் அதிகமாகத் தேவையில்லை. மேலும், பீரங்கிகளும் கப்பற்படையைச் சேர்ந்தவைகள்.

சுறுசுறுப்பற்ற வருஷங்கள்.

பாக்கியிருக்கும் கனமான முஸ்தீப்புகள் சாவகாசமாக கடற்கரைகளுக்கு வந்து சேரும். சென்ற யுத்தத்திலும், காலிபோலியைத் தவிர மற்ற இடங்களிலிறங்கிய நமது துருப்புகளுக்கு எதிர்ப்பே கிடையாது. மேற்குப் போர்முனைகளுக்குச் செல்லுவதற்கு பரிஷ்காரமாக உள்ள துறைமுக வசதிகள் நமக்குக் கிடைத்திருந்தன. ஆகையினால் தான் இப்பொழுது உபயோகப் படுத்தப்படும் இழுவைப்பாலம் போன்ற படைகளை இறக்கும் கலங்கள் 1918-ம் வருஷம் நடந்த சமாதான ஒப்பந்தத்துக்கு முன் வெளியே வரவில்லை. அதற்குப்பின் சோம்பேறித்தனம் வந்துவிட்டது. 1936-ம் வருஷத்திற்குப் பின்தான் இந்தப் பரீக்ஷார்த்தமான வேலை மறுபடியும் துவக்கப்பட்டது.

இன்று பிரிடிஷ், அமெரிக்கா, கனேடியா, இதர நேசதேசத் துருப்புகள் ஐரோப்பாவில் மகத்தான தாக்குதல்களை ஆரம்பிக்கவேண்டுமானால் அவைகளுக்கு பல ரகங்களில் கட்டப்பட்ட துருப்புகளை இறக்கும் சிறிய படகுகளும் அவைகளை ஓட்டுவதற்கு விசேஷப் பயிற்சி பெற்ற வேலைக்காரர்களும் அவசியம் வேண்டும். எதிர்ப்பு இல்லாத இடங்களில் ஏராளமான படைகளை இறக்குவதற்கும் மேலே சொல்லிய படகுகள் ஏராளமாகத் தேவைப்படும். இன்று முக்கியமாகத் தரையிலும், விமானப்படை மூலமாகவும் கோரமான எதிர்ப்பு ஏற்படக்கூடுமென்று எதிர்பார்க்கும்பொழுது படகுகள் அத்தியாவசியமென்று ஏற்படுகிறது. ஆகையால் படைகளை இறக்கக்கூடிய படகுக் கூட்டமானது நம்முடைய சக்திவாய்ந்த ராணுவப்படைகளை ஐரோப்பாவில் இறக்கி போர் துவக்குவதற்கு வசதியளிக்கத் தயாராகயிருக்கிறது.

விசேஷப் பயிற்சி.

இந்த ஒன்றுபட்ட யுத்த சேவையிலீடுபட்ட படகுகள் சிறிய படைகளை இறக்கி எதிரியின் பிரதேசத்தைத் தாக்கி வருகின்றன. மடகாஸ்கரில் துருப்புகளை இறக்குவதற்கும், சென்ற நவம்பர் மாதத்தில் வட ஆபிரிக்காவில் துருப்புகளிறங்கியதற்கும் ஒரு சிறிது ஒத்தாசையும் செய்திருக்கின்றன. மூவகைப்பட்ட படைகளுக்கும் கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் தாக்குதல் நடத்த பயிற்சியளிப்பதுதான் அதன் மிகவும் முக்கியமான வேலை. அதிலும், துருப்புகளை இறக்கும் படகுகளை நடத்திச் செல்ல கடற்படை வேலைக்காரர்களுக்குப் பயிற்சியளிப்பதுதான் மிகவும் முக்கியமான அலுவலாகும். அதன் அங்கத்தினர்கள் R. N. V. R. உத்தியோகஸ்தர்களும், யுத்தத்திலீடுபட்ட வேலைக்காரர்களும். இந்த வேலைக்காரர்கள் கடற்படை பயிற்சி முகாம்களிலிருந்து பயிற்சியின் ஆரம்பக்கல்வி கற்றுவரும் நபர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இந்த வேலைக்காரர்கள் படகுகளை ஓட்டும் வேலையில் விசேஷப் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். அவர்கள் இந்த வேலையில் உயர்தரமான அனுபவம் பெறவேண்டும். சிலர்களுக்கு இஞ்ஜின்களை ஓட்டவும், உபரி உதவியன்னியில், எதிரியின் குண்டு வீச்சுக்கும் விமானத்தாக்குதலுக்கும் உட்பட்டு இஞ்ஜின்களைப் பழுது பார்க்கவும் பயிற்சியளிக்கப்படுகிறது. காலாட்படைகள், டாங்கிகள், பீரங்கிகள், லாரிகள், பெட்ரோல், சாமான்கள், விமானப்படைகள், விமான எதிர்ப்பு பீரங்கிகள், இவைகளைக் கொண்டுபோவதற்கு பல ரகக் கலங்களிருப்பினும், முக்கியமான அம்சங்களில் அவைகள் ஒரே மாதிரியாகத்தான் அமைக்கப்படுகின்றன. அவைகளெல்லாம் அதிக ஆழமில்லாதவை. அடிப்பக்கத்தில் தட்டையானவை. நீர்மட்டத்துக்கு மேலுள்ள கப்பலின் முன்பாகம் உயரமாகயிருப்பதாலும், ஆழமில்லாததால் கப்பல் சமுத்திரத்தில் நீர் மட்டத்தில் மிதந்து வருவதாலும் துருப்பேற்றிச் செல்லும் கலங்களைச் சுலபமாகச் சலனம் செய்வது சிரமசாத்தியமான வேலையாகும். வேலை செய்யும் பொழுது வேலைக்காரர்களுக்கு யாதொரு தற்காப்பும் கிடையாது. மேலும், கலங்களின் கனத்தைக் குறைவுபடுத்தவேண்டியதால் வெடி குண்டுகளையும், பீரங்கிக் குண்டுகளையும், யந்திர பீரங்கிக் குண்டுகளையும் தடுக்க அவைகளில் சாதனங்கள் அமைக்கப்படவில்லை. தூங்குவதற்கும், சாப்பிடுவதற்கும், சுத்தி செய்து கொள்ளுவதற்கும் வசதிகள் குறைவாகத்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதிலிருந்து கலங்களில் வேலை செய்வது கஷ்டமானதும், அபாயத்துடன் கூடியதென்றும் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். யுத்தக் கப்பல்களிலும், விமானம் தாங்கிகளிலும், சஞ்சாரிகளிலும், நாசகாரிகளிலும், அல்லது சிறிய யுத்தக் கப்பல்களிலுமுள்ள சேவையைப்போல இதில் அபிருசியும் சந்தோஷமும் கிடையாது. துருப்புகளை இறக்கக்கூடிய சிறிய கலங்கள் யுத்தக் கப்பல்களை சேர்ந்தவைகளெல்ல என்று வெளிப்படையாகத் தோன்றும். இதன் வேலைக்காரர்கள் கலங்களிலேயே வசிப்பதில்லை. ஆகிலும், மற்றெந்தக் கப்பல்களும் இந்தக் கலங்களைப்போல் முன்னேறித் தாக்கும் யுத்தத்தில் பங்கெடுத்துக் கொள்ளுவதில்லை. இவைகளைப்போல மற்றெந்த கப்பல்களும், எதிரியின் துருப்புகளுக்கும், பிரிடிஷ் கடற்படைக்கும் தொடர்பு ஏற்படுத்தமுடியாது.

இந்தக் கலங்களை ஓட்டும் வேலைக்காரர்களின் பயிற்சி பின்வருமாறு: படகுகளில் துருப்புகளுடனும், வண்டிகளுடனும் அல்லது அவைகளில்லாமலும் எப்பேர்ப்பட்ட சீதோஷ்ண ஸ்திதியிலும், அலைகள் ஓங்கியிருக்கும் பொழுதும், குறைந்துவரும்பொழுதும், அமைதியான சமுத்திரத்திலும், பலமான நீரோட்டமிருக்கும்பொழுதும், மணல் பாங்கான கடற்கரைகளிலும், புல் அடர்த்தியான கடற்கரைகளிலும், புல் அடர்ந்த மலைச்சரிவுகளிலும், குன்றுகளிலும், சகதியிலும், ஏறுவதையும் இறங்குவதையும் அவர்கள் அடிக்கடி ஒத்திகை செய்யவேண்டும். பலமான நீரோட்டமிருக்கும் பொழுதும், அலைகள் குறைந்துவரும் பொழுதும் கடற்கரையில் சிக்கிக்கொள்ளுதல், அல்லது டாங்கிகளை இறக்கும்பொழுது அவைகள் ஆழமான ஜலத்தில் அகப்பட்டுக்கொள்ளுதல்போன்ற அபாயத்துக்குட்பட்டும்

ஒரு பெரிய படகை ஓட்டுவதிலுள்ள சிரமங்களை நிதானித்துப் பாருங்கள். இந்தத் தீரச்செய்கைகளை அப்யாசம் செய்து வருகிறவர்களையும், கூடிய சீக்கிரத்தில் எதிரிகளின் தாக்குதலுக்குட்பட்டு தங்களுடைய அலுவலை நடத்தக் கூடியவர்களையும், படகோட்டிகளென்றும் அவர்களுடை கப்பல்களைக் கலங்களென்றும் சொல்லுவதைக்கண்டு அவர்கள் மனஸ்தாபப் படுகிறார்கள்.

சர்ச்சில் விடுத்த எச்சரிக்கை.

இவ்விதமாக யுத்த ஆரம்பத்துக்குப்பின் பிரிடிஷ் கடற்படையில் ஒரு புதிய பகுதி உண்டாகியிருக்கிறது. இதுவரையில் இந்தப்பகுதியின குணதிசயங்களும், திறமையும், அமைப்பும் ஜனங்களின் கவனத்துக்கு வரவில்லை அந்தக் காலம் சமீபித்துவிட்டது. கூடிய சீக்கிரத்தில் நமது கடற்படையின் பலம் எவ்வகைப்பட்டதென்று நாம் அறிவோம். ஐரோப்பாவைப் படையெடுக்கும்பொழுது நமக்கு லாபங்கள் கூடிய சீக்கிரத்தில் கிட்டி விடாது. இந்தக் கலங்களில் வேலை செய்கிறவர்கள் பலமாகவும், அநேக காலம்வரையிலும் கஷ்டப்பட வேண்டியிருக்கும். புதன்கிழமையன்று கில்ட் ஹாலில பிரதம மந்திரி சொன்ன பிரகாரம் "மகத்தான ராணுவ நிகழ்ச்சிகளில், அபாயங்களும், யுத்தப் போக்கில் மாறுதல்களும் உண்டாகுவது சகஜம்தான். யுத்தத்தில் உறுதியான நடவடிக்கை நடைபெறுமென்று நான் சொல்ல முடியாது. கடல் மூலமாகவும், தரைமூலமாகவும் நடைபெறும் இருவகைப் பட்ட நடவடிக்கைக்கும் இந்த அபிப்பிராயம் பொருந்தும்."

உண்மையான பரிக்ஷை காலம் வரும் பொழுதுதான் பிரயாசைப்படுவதும், பிரசித்தி பெருததும், பயிற்சி பெற்றதுமான இந்தப் படகு வேலைக்காரர்களின் மதிப்பை நாம் அறிய முடியும். எதிர் காலத்தில் விமானம் தாங்கிக் கப்பல்களைப்போலவும் அதன் வேலைக்காரர்களைப்போலவும் துருபபிறக்கும் கலங்களும் அதன் வேலையாட்களும் நிலைபெற்றிருக்குமென்று நினைக்கிறேன். யுத்த கால அவசியத்துக்குமட்டுமில்லாமல் சமாதான காலத்திலும், பிரிடிஷ் கடற்படையின் தனிப்பட்ட முக்கியமான பகுதியாக இந்தப் பகுதியிருந்துவரும். பிரிடிஷ் கடற்படை நூதன முறைகளை வெறுக்கிறதென்ற குற்றச்சாட்டு இருந்தபோதிலும், அது தேவைகளுக்குத் தக்கவாறு புதிய சாதனங்களை அமைத்து வருகிறது.

முஸோலினி, ஹிட்லரின் அந்திய காலத்தை விளக்கிக் காட்டுகிறான்.

(பால்டர் ஷுப்பிக்).

முஸோலினியின் இருப்பிடத்தைப்பற்றி பலவகைப்பட்ட வதந்திகள் கிளம்பிவிட்டன. அவன் இறந்துவிட்டானென்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர், அவன் கிரெமோனாவில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் பாஸிஸ்ட் அரசாங்கத்தின் நிர்வாகியாக இருக்கிறான் என்று சொல்லுகிறார்கள். மற்றும் சிலர், அவன் பெர்கஸ்காடனிலுள்ள ஹிட்லரின் மாளிகையில் இருக்கிறானென்று சொல்லுகிறார்கள். இதுதான் சம்பாவிதமாகத் தோன்றுகிறது.

படோக்ளியோவின் கைதியாகவிருந்ததைவிட ஹிட்லரின் அரண்மனையில் வசிப்பது ஹிட்லருக்குச் சுகமளிக்கப்போகிறதாவென்று சிலர் கேட்கக்கூடும். படோக்ளியோவின் சிறையிலிருந்து ஜெர்மன் குடைத் துருப்புகள் துணிவுகரமாக முஸோலினியை மீட்டுக் கொண்டு போனார்களென்று சொல்லப்படுகிறது. ஹிட்லரைப்போல முஸோலினி அதிக பிரமை கொண்டவனல்ல. ஹிட்லரின் அபிப்பிராயத்தில் உலக சரித்திரம் ஒரு விசித்திரமான படப் புஸ்தகம் என்றும் அதில் விசுவாசமும், துரோகமும் மாறி மாறித் தாண்டவமாடுகின்றனவென்றும் சொல்லப்படுகிறது.

இதாலி சரணடைந்த பிறகு கோயபல்ஸ் ஹிட்லரை ஒலிபரப்பில் பேசும்படி கட்டாயப் படுத்தியிருக்கிறான். ஜெர்மனியைவிட்டு ஹிட்லர் ஓடிவிட்டானென்ற வதந்தியை அடக்குவதற்கு இந்தப் பிரசங்கம் அவசியமாம். ஹிட்லர் ஜப்பானுக்குச் சென்றுவிட்டானென்ற வதந்தியும் கிளம்பிவிட்டது. ஹிட்லர் தன்னுடைய ஸ்வபாவப்படி இதாலியின் வீழ்ச்சிக்கு ராஜதுரோகம்தான் காரணமென்று சொல்லிவிட்டான்.

சரித்திரத்திலேயே துரோகம்தான் அதிகமாகயிருக்கின்றது என்று ஹிட்லர் சொல்லுவதற்கு நல்ல முகாந்திரங்களிருக்கின்றன. 1918-ம் வருஷத்திய தோல்வியானது முதுகில் குத்தியது என்று அவன் நினைக்கிறான். 1923-ம் வருஷம் மூனிக்கில் நடைபெற்ற கலவரம் துரோகத்தின் காரணமாக முறிபட்டது. 1934-ம் வருஷத்தில் ஸெயிண்ட் பார்த்தலோமியாவில் நடைபெற்ற அநியாயக் கொலைகள் துரோகத்திற்குத் தகுந்த சிக்ஷை. ஜெனரல் பிட்ஷூம் ஒரு ராஜதுரோகி.

ஜெர்மனியில் விரிவாகக் காணப்படும் இந்த அற்பமான அபிப்பிராயங்கள் தேசீய பொதுவுடமைக் கொள்கையின் இயற்கையான அம்சங்கள். இந்தக் கொள்கைக்கு ஆதாரமும், வளர்ச்சியும் சதியாலோசனையில் வேறூன்றி இருக்கின்றன. இந்த இயக்கத்துக்கு அடிப்படையாக ஜன சமூக வாழ்க்கையின் குறைவுகளிருந்தனவென்பது வாஸ்தவம். ஆகிலும், உயர்வான லக்ஷியங்கள் மறந்துபோய் கண்மூடித்தனமான தேசீய உணர்ச்சியும், ராணுவ ஆர்வமும் தோன்றிவிட்டன.

கெடுதல்களை வேர்ப்பிடுங்கலாகக் களைந்துவருவதற்கு முஸோலினியைக் காராகிருகத்திலிருந்து விடுவித்து பெர்கஸ் காடனுக்குக் கொண்டுவந்துவிடுவது என்று ஹிட்லர் நினைத்தது புத்திசாலித்தனமாயிருக்கலாம். முஸோலினியைத் துணிவுகரமாக மீட்ட உற்சாகமானது கூடிய சீக்கிரத்தில் வருந்தத்தக்க தோற்றங்களை உண்டுபண்ணிவிடும். இதாலியின் வீழ்ச்சியுடனும், அதன் மூலம் ஜெர்மனிக்கு ஏற்படக்கூடிய பலன்களுடனும் முஸோலினியின் விடுதலையை ஒப்பிட்டுப்பார்த்தால் நிலைமை விளங்கும்.

இரண்டு சர்வாதிகாரிகளும், பெர்கஸ்காடனில் உட்கார்ந்துகொண்டு தங்களுடைய தீரச் செய்கைகளின் லாப நஷ்டங்களைக் கணக்கிடும்பொழுது, அந்த நிலைமை துக்கத்தையும் ஹாஸ்யத்தையும் அளிக்கிறது. தன்னுடைய சாம்ராஜ்யத்தை இவ்வுலகத்திலுள்ள ஒரு வல்லரசும் திரும்பிப் பிடித்துவிட முடியாதென்று முஸோலினி நன்ருய் அறிந்திருக்கிருன். அவனுடைய நடத்தையினுல் துக்கம் சம்பவித்துவிட்டது. பரிகாசக் கூத்துத்தான் பாக்கி இருக்கிறது. அரண்மனையின் மாடியின் முன்வாயிலிலிருந்துகொண்டு இனிமேல் அவன் பிரசங்கம் செய்யமுடியாது. இனிமேல் அவனணிந்து கொண்டிருந்த கௌரவ அடையாளங்கள் அவனுக்கு உதவியளிக்கமுடியாது. பாஸிஸ்ட் கக்ஷிக்காரர்களின் வந்தனோபசாரமும் அவனுக்குப் பயன்தரப்போவதில்லை. அவனுடைய இந்திரஜாலவித்தையின் மாயம் புலப்பட்டுவிட்டது. பாஸிதத்வம் அழிந்துவிட்டது. ஜெர்மானியர்கள் இதாலியைக் கொள்ளையடித்து பாழாக்கிவருகிருர்கள். இதாலியை யுத்த தளமாகவும் அவர்கள் செய்துவிட்டார்கள்.

ஹிட்லர் ஒப்புக்கொண்டாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இதாலியின் துக்கமான சரித்திரத்தில் ராஜத்துரோகம் என்பது கிடையாது என்று ஹிட்லரிடம் முஸோலினி வற்புறுத்திச் சொல்லுவான். இதாலிய மக்கள் யுத்தத்தையும், பாஸிதத்வத்தையும் வெறுக்கிருர்கள். தோல்வி நிச்சயமென்று அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள்.

பெர்கஸ்காடனில் ஹிட்லருக்கு எதிர்த்தாற்போல் உட்கார்ந்திருக்கும் வெளுத்த முகமும், துக்காக்கிராந்தமான மனேநிலையுமுள்ள முஸோலினி ஹிட்லரின் மற்ருெரு ரூபமாகும். ஹிட்லரிடம் முஸோலினி பின்வருமாறுதான் சொல்லப்போகிருன். "என்னுடைய கஷ்டமான வாழ்நாளை நீங்கள் நீடித்துவிட்டீர்கள். அதற்குப் பதிலாக உன்னுடைய ஜீவதசை குறையவேண்டுமென்று நான் விரும்புகிறேன். எனக்கு ஏற்பட்ட துர்தசைதான் உனக்கும் எதிர் காலத்தில் ஏற்படப்போகிறது. ஒரு பூதத்துடன் சகவாசம் செய்ய நீங்கள் ஆலோசனை செய்துவிட்டீர்களென்பது வருந்தத்தக்கது. சரித்திரம் என்னைப் புதைத்திருந்த புதைகுழியிலிருந்து என்னை நீங்கள் வெளியே கொண்டுவந்துவிட்டீர்கள். என்னுடைய அதோகதிதான் உங்களுக்கும் ஏற்படப்போகிறதென்று அறிந்துகொள்ளுங்கள்."

இதாலியின் கக்ஷி மாறுதல்.

ஜெர்மனிக்கு ஏற்பட்ட லாபங்களும், நஷ்டங்களும்.

(டெயிலி டெலகிராப் பத்திரிகை).

இதாலியர்கள் கக்ஷி மாறுதல் செய்ததிலிருந்து ஜெர்மனிக்குப் பொருளாதார முறையில் லாபமும், நஷ்டமும் உண்டு. இதாலியிலிருந்து ஜெர்மனிக்கு அனுப்பப்படும் கீழே கண்ட சாமான்கள் ஜெர்மனிக்கு நஷ்டமாகிவிடும். ஜெர்மனிக்குக் கிடைத்து வந்த பாதரசத்தில் 45 சதவிகிதம், அலுமினிய இயற்கைப் பொருளில் 10 சதவிகிதம், குடைகளுக்குத் தேவையான இயற்கைப் பட்டு நூலின் பெரும் பாகம், ஜெர்மனியில் குறைவாகயிருக்கும். செம்பு உலோகத்துக்குப் பதிலாக உபயோகப்படும் துத்தநாகம்.

வருஷாவருஷம் ஜெர்மனி இதாலிக்கு அனுப்பிவந்த 12 மிலியன் டன்கள் எடைமானமுள்ள நிலக்கரி ஜெர்மனிக்கு உபயோகப்படும். ருமேனியாவிலிருந்து இதாலிக்கு ஒவ்

வொரு மாதமும் அனுப்பப்பட்ட லக்ஷம் டன்கள் எடைமானமுள்ள எண்ணெயை ஜெர்மனி உபயோகப்படுத்திக்கொள்ளலாம், இதாலிக்கு நிலக்கரியையும், எண்ணெயையும் நேச தேசத்தார்கள் அனுப்பவேண்டும். ஆகிலும், ஜெர்மானியர்கள் இதாலியிலிருக்கும் வரையில் அவைகளை இறக்குமதி செய்ய நேசதேசத்தார்கள் அனுமதிப்பார்களாவென்பது சந்தேக மானது.

உணவுப் பொருள்கள் சம்பந்தப்பட்டமட்டில் இதாலி தன்னைத்தானே போஷித்துக் கொள்ளும் நிலைமையிலிருக்கிறதென்று தெரியவருகிறது. இந்த வருஷத்தில் இதாலியில் நல்ல அறுவடையென்றும் சொல்லப்படுகிறது.

யூக்ரேன் நடவடிக்கைகளில் ஜெர்மானியருக்குத் தோல்வி. ஜெர்மானியரின் கட்டுக்கதைகள் அழிக்கப்பட்டன.

(லண்டன் தந்தி).

ருஷ்யாவிலேயே பெரிதும், மிகவும் அதிகமான உற்பத்தி செய்வதுமான டான்பாஸ் என்ற பெரும் தொழிற்சாலைகளையுடைய நகரம் மறுபடியும் ருஷ்யர்களின் கையில் சிக்கி விட்டது. யூக்ரேன் பிரதேசம் தாக்குதல் நடத்துவதற்குள்ள பிராந்தியங்களில் ஒன்ருக இருக்கிறது.

பசியால் வருந்திய ஜெர்மானியர்களுக்கு இந்த இரு விவசாய நகரமும், தொழிற்சாலை நகரமும் போதிய உதவியாய் அவர்களுக்கு வேண்டியவைகளைக் கொடுத்து உதவி புரிந்தன. ஜெர்மானியர்களும், அவர்களின் சைனியங்களின் ரத்தத்தைச் சிந்தி சிறிதளவு இந்நாடுகளி லிருந்தும் சுரண்டிக்கொண்டார்கள்.

1941-ம் வருஷம் நேரான முறையிலோ அல்லது விமானங்கள் மூலமாகவோ பிரிடனைத் தாக்கி, தோல்வியுறச் செய்வதென்பது இயலாத காரியமென உணர்ந்தவுடன் அவர்களின் எண்ணங்கள் எல்லாம் “U படகுகளினும், யூக்ரேன் பிரதேசத்தின்” மேலும் சென்று விட்டன. U படகுகளின் உதவியால் பிரிடனுக்குச் செல்லும் ஸப்ளைக் கப்பல்களை மூழ்கடிக் கவும், யூக்ரேன் பிரதேசத்தை ஜயிப்பதால் பிரிடிஷாரால் தடைசெய்யப்பட்டதனுல் இவர்களுக்கு கிடைக்காத பண்டங்களையும் உணவுப்பொருள்களையும் பெறவும் நினைத்தார்கள்.

‘டாஸ்ரெய்ச்’ என்ற ஜெர்மன் பத்திரிகையில் 1941-ம் வருஷத்தின் பனிக்காலத்தில் “கீழ்தேசப் பகுதிகளின் ஜயத்தினுல் பொருளாதார விஷயத்தில் நாம் அதிகமாய் முன் னேற முடியும்” என்றும் “இந்த பிரிடிஷார்கள் கப்பல்களை தடைசெய்திருந்ததெல்லாம் மிகவும் குறைந்துவிட்டது” என்றும் சொல்லப்பட்டிருந்தது. இந்த நாஸிக் கதைகளை நாம் சிறிது சிந்தித்தோமாஞல் அவர்களின் இந்தக் கட்டுக்கதையானது எவ்வளவு கேவலமானது என்று வெளியாகும்.

மேலும், இந்தக்கடல் அடைப்புகள் சிறிது மெதுவானவைகளாக இருப்பினும் மிகவும் கெட்டியானதும் ஜெர்மன் உயிர்களையே திணறவைக்கும்படியானதுமாய் பெரும் அடைப்பு களாகவே இருக்கின்றன என்பது இந்தக் கதைகளால் நன்கு வெளிப்படுகிறது.

பொருளாதார சிக்கன முறை யுத்த மந்திரியால் குறிக்கப்பட்ட கணக்கிலிருந்து, யுத்தத்திற்கு முன்பு டானெட்ஸ் பிரதேசத்தில் 90,000,000 டன்கள் நிறையுள்ள நிலக்கரி உண்டாகியது என்று தெரிகிறது. சுரங்கங்களை ருஷ்யர்கள் மிகவும் தீவிரமாய் அழித்ததினுல், ஜெர்மானியர்கள் மேலே குறிக்கப்பட்ட அளவில் 10-ல் 1 பங்கு நிலக்கரிகள் அடைந்தார் களோ என்பது சந்தேகப்படும்படியாய் ஆகிவிட்டது. அப்படிக்கிடைத்த சொற்ப அளவு நிலக்கரியையும், அவர்கள் ஆக்கிரமித்திருந்த கீழ் தேசங்களுக்கு அனுப்பவேண்டியிருந்ததால் ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலைகளுக்குக்கூட அந்த நிலக்கரியை அனுப்ப முடியவில்லை.

மிகுந்த செழிப்போடுகூடிய கோதுமை விளையும் நிலங்களையுடைய யூக்ரேன் பிரதேசம் ஜெர்மானியருக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்துவிட்டது. ருஷ்யர்கள் தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்ய முனைந்ததிலிருந்து, யூக்ரேன் பிரதேசங்களிலிருந்து அங்குள்ள மக்களுக்கு போதிய அளவு கோதுமைதான் பயிர் செய்யமுடிகிறது. அங்கு இப்பொழுது அதிகமாய் உண்டாகக்கூடியது எண்ணெய் உண்டாக்கும் பயிர்களேயாகும். யுத்தத்திற்குமுன் இப்பயிர்களினின்றும் 1,00,000 டன்கள் எண்ணெய் எடுக்கப்பட்டது. ஆனுல் ஜெர்மானியர்கள் மிகுந்த சிரமத்தோடு 30,000 டன்கள்தான் எண்ணெய் எடுக்கிருர்கள்.

கால் நடைகளின் எண்ணிக்கை முன்னைவிட இப்பொழுது பாதிதான் இருக்கிறது மொத்தத்தில் மூன்றில் இரு பகுதிக்கு மேலான எண்ணிக்கையுடைய ஆடுகளை ருஷ்யர்கள் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள். நெய்யப்படக்கூடிய பொருள்கள் உற்பத்தியாகும்

பருத்தி முதலிய பயிர்களை அதிகமாய் உண்டாக்கலாம் என்று ஜெர்மானியர்கள் நினைத்தார்கள். ஆனால் ருஷ்யர்கள் 36,000 டன்கள் நிறையுள்ள பருத்தி சேர்த்த இடத்தில் 17,000 டன்கள் நிறையுள்ள பருத்திதான் ஜெர்மானியர் உண்டாக்கியிருக்கின்றனர். 1939-ம் வருஷம் ருஷ்யர்கள் 30,000 டன்கள் நிறையுள்ள சணல் உண்டாக்கினார்கள். ஆனால் ஜெர்மானியர்கள் 1 டன் சணல்கூட உண்டாக்க முடியவில்லை. இந்த விதமாக விவசாயங்களில் ஜெர்மானியருக்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு மூன்று முக்கிய காரணங்கள் உள. அவைகளாவன, இழுக்கும் இயந்திர சக்தியில் குறைவு, உழைப்பில் குறைவு, இறுதியாக பிரிடிஷாரின் கடல் அடைப்புகளால் அவர்களுக்கு கிடைக்காததான உரங்களில் குறைவு ஆகிய இவைகளேயாகும்.

யூக்ரேன் பிரதேசத்தில், நிலக்கரியும், மாங்கனீஸ் என்ற உலோகமும் அதிகமாய்க் கிடைக்கும். யுத்தத்திற்கு முன்பு யூக்ரேனிலுள்ள இரும்பு சுரங்கங்களிலிருந்து 16,000,000 டன்கள் நிறையுள்ள களிம்பு கலந்த உலோகம் கிடைத்துவந்தது. ஆனால் ருஷ்யர்கள் கையாண்டு வரும் முறைகளால், சுரங்கங்கள் வேலை செய்வதற்கு வேண்டிய மின்கார சக்தி அழிக்கப்பட்டுவிட்டதால் நிலமட்டத்தில் கிடைக்கக்கூடிய சொற்ப அளவு உலோகப் பொருள்தான் ஜெர்மானியர்களுக்குக் கிடைக்கிறது. யுத்தத்திற்கு முன்புபோல், மாங்கனீஸ் என்ற உலோகம் கிடைப்பதில்லை. ஜெர்மானியத் தொழிற்சாலைகளில் மாங்கனீஸ் உலோகத்தின் உபயோகத்தை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்கமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு குறைத்துவிடும்படியாய் கொடுக்கப்பட்ட உத்தரவினின்றும் ஜெர்மானியர்களிடத்தில் மாங்கனீஸ் என்ற உலோகம் இல்லை என்பது வெளிப்படை.

ஆயினும் 18 மாதங்களுக்கு முன்பு, ஜெர்மனியின் ராணுவ அட்டவணையில் இந்த மூலப்பொருள்களில் அபிவிருத்தி மிகவும் அதிகமாய்தான் இருந்தது. நேசக்கட்சியினர் அதை மாற்ற மிகவும் தீவிரமாய் உழைத்தனர். மேல்நாட்டு யுத்த அரங்கங்களிலுள்ள கோட்டைகள், ராயல் விமானப்படையில் ஏற்பட்ட கேடுகளை சரிபார்த்தால் இவைகளில் முனைந்திருந்ததால், அந்த விதம் மாறுபாடு செய்வது சிறிது கஷ்டமாயிருந்தது.

யூக்ரேனிலிருந்து ஜெர்மானியர்களுக்கு வேண்டிய அளவு தொழிலாளிகளும் கிடைக்கவில்லை. யுத்தத்திற்கு முன்பு அங்குள்ள ஜனத்தொகையின் எண்ணிக்கை 1,67,000,000 ஆகும். இப்பொழுது ஜனத்தொகை 1,27,000,000 ஆக ஆகிவிட்டது. இந்த விதம் குறைந்ததிற்குக் காரணம் முக்கியமாக, திடகாத்திரமானவர்களை செஞ்சேனையில் சேர்த்துக் கொண்டதாலும், இதர கைதேர்ந்த தொழிலாளிகளை யூரல் பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகளுக்குக் கொண்டுபோய் விட்டதும்தான். இவ்விதம் ஜெர்மானியர்கள் வருவதற்குமுன் திடகாத்திரமானவர்களும், கைதேர்ந்த தொழிலாளிகளும் யூக்ரேன் பிரதேசத்தைவிட்டு அப்புறப்படுத்தப்பட்டுவிட்டனர்.

எனினும், 700,000 யூக்ரேனின் தொழிலாளிகள் ஜெர்மனிக்கு வேலைக்காக கொண்டு போகப்பட்டனர். அங்கு அவர்கள் சரியானபடி வேலை செய்ய முடியவில்லை. யூக்ரேனிலுள்ள 'செழிப்பான சுடுமண்ணில்' ஜெர்மானியர்கள் முதலில் களிப்புடன் வேலை செய்ய ஆரம்பித்து அவர்கள் கைகள் எல்லாம் இறுதியில் ரத்த மயமானதுதான் மீதமாயிற்று. அதற்கப்புறம் அவர்களுக்கு ஏற்பட்ட அபஜெயத்தை உணர்ந்து, இந்த ஏற்பாட்டினின்றும் தப்பித்தால் போதுமென்று நினைத்தனர்.

ஆக்கிரமித்த கிழ்தேச ஜெர்மன் மந்திரி ரோஸென்பர்க் கடைசியாய் வெளியிட்டதாவது, மேல்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளோடு ஒப்பந்தம் செய்துகொள்ளப் போகிறார்கள் என்பதே. அவ்வித ஒப்பந்தமாவது ஐரோப்பாவில் செழிப்பான இப்பிரதேசங்களில் வேண்டியவைகளைப் பெறுவதற்காகும். ஆனால் இத்தகைய தோல்விகளை அடைந்த பின்னும் மேல் தேசத்திலுள்ள தொழிலாளிகள் இந்தத் தோல்விகளை மேலும் சமாளிப்பார்களா என்பதுதான் சந்தேகம்.

யூக்ரேனில் உள்ளவைகளைப்பெற்று லாபம் அடையும் மார்க்கமறிந்த ருஷ்யர்கள் மறுபடியும் யூக்ரேனில் அந்த லாபங்களை அனுபவிக்கப் போகிறார்கள் என்பது திண்ணம்.

ஸர் கிங்ஸ்லி வுட்: "வகுப்பு பேதத்தை ஒழித்தவர்".

(ரெனி கிராஸ்).

(கிருஸ்தவ சாஸ்திர போதகன் என்னும் பத்திரிகையிலுள்ள கட்டுரையின் சுருக்கம்).

சமீபத்தில் உயிர் துறந்த ஸர் கிங்ஸ்லி வுட், பிரிடனில் வகுப்புப் பேதகத்தை ஒழிக்கும் முறைகளை அமுலுக்குக் கொண்டுவந்த கோசாதிபதி என்று எல்லோரும் அறிவார்கள். அவர் ஒரு புரட்சிக்காரர் அல்ல. யுத்த பளுவை எல்லோரும் சமமாகப் பொறுக்கவேண்டுமென்ற நோக்கமுள்ளவர்.

யுத்தத்திற்குமுன் ஸர் கிங்ஸ்லியின் நடவடிக்கைகள் சந்தோஷகரமானவை. வெற்றி பெறுவதென்பது அவருடைய ஸ்வபாவமான குணம். நிலைமைகளும், சந்தர்ப்பங்களும் அவருக்கு அனுகூலமாக இருந்தன. அவர் கவலையற்று நிம்மதியாக வசிப்பவர்களின் கோஷ்டியைச் சேர்ந்தவர். மானிட வாழ்க்கையில் அவர் கஷ்டப்படவுமில்லை, தக்கப்படவுமில்லை. ஆகிலும், பிரிட்டனில் அவர் ஓனிலமையான பேச்சுள்ளவரென்று சொல்லப்படுகிறது. அவர் குட்டையான ஆகிருதியும், பிக்விக்கைப்போல தோற்றமுமுள்ளவர். அவருடைய வாழ் நாட்கள் பூராவிலும் அவர் நடவடிக்கையில் அதிக சுறுசுறுப்புள்ளவர் போல வெற்றிகரமாகப் பாசாங்கு செய்துவிட்டார்.

பிறப்பின்படி அவர் பாதிரியார் வேலையை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவருடைய தகப்பனார் தெற்கு இங்கிலாந்தில் வெஸ்லீயன் மதத்தைச் சேர்ந்த குருவாயிருந்தார். கிங்ஸ்லிக்கு அவருடைய கோவிலில் நாமகரணம் செய்தபொழுதே இவர் ஈசுவரனிடத்தில் வழிபட்டு உழைக்கவேண்டுமென்று தகப்பனார் தீர்மானம் செய்துவிட்டார்.

சட்டப் படிப்பில் நிபுணர்.

ஆகிலும், சரீர சம்பந்தப்பட்டமட்டிலும் அல்லது மத சம்பந்தத்திலும் கிங்ஸ்லிக்கு விவாதம் செய்யக்கூடிய குணங்களிருக்கவில்லை. சமயாசார சாஸ்திரத்தை அவர் கைவிட்டுவிட்டார். அதற்குப் பதிலாக சட்டப் படிப்பில் அவர் முதன்மையை அடைந்தார். 19 வயதில் அவர் பிரிட்டனிலுள்ள ஒரு நியாய வாதியிடம் அமர்ந்தார். 27 வயதில் அவர் மாஜிஸ்திரேட் உத்தியோகத்தில் நியமிக்கப்பட்டார். இதுதான் அவருக்குப் பிடித்தமான உத்தியோகம்.

பிறகு அவர் ஜோஸப் சேம்பர்லினுடைய நடவடிக்கையில் கலந்துகொண்டார் அவருடைய விக்ரஹத்துடன் லண்டனுக்குச்சென்று, ராஜீய விவகாரங்களில் தலையிட்டு லண்டனிலுள்ள மாகாண கவுன்ஸிலர் பதவியிலிருந்து படிப்படியாக மேல் பதவியை அடைந்தார். அவருடைய புத்தி விசாலமும், பகுத்தறிவும், சக்தியும், சாந்தமான ஸ்வபாவமும் சேர்ந்து கவுன்ஸில் சபையில் அவர் ஒரு முக்கியமான கன்ஸர்வேடிவ் கக்ஷிக்காரர் என்று சொல்லக்கூடிய புகழை அளித்துவிட்டன.

பார்லிமெண்ட் சபையில் சேவை.

1918-ம் வருஷம் யுத்த சமயத்தில் நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலில் அவர் மேற்கு உல்விச்சின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்ட சபையில் ஸ்தானம் வகித்தார். அவருக்கு "கிரப்" என்ற காரணப் பெயர் கிடைத்தது. அவர் மூக்குக் கண்ணாடிகளையும் மீசையையும் பெற்றிருக்காவிட்டால், விக்டோரியா மகாராணியின் தோட்டங்களில் மன்மதாகிருதியாய் உலாவிவந்த புருஷர்களுடன் அவரை ஒப்பிடலாம்.

நமிட்டு விஷமம் செய்வதில் அவருக்கு ஆசையுண்டு. இப்பொழுது அதற்கு அரிய சந்தர்ப்பம் வாய்த்தது. பார்லிமெண்டு சபையில் கடுமையான கேள்விகளைக் கேட்கும் பழக்கத்தை அவர் அபிவிருத்தி செய்தார். அவர் கேட்கும் முதல் கேள்வி இனிய சொற்களாலும், அழகான முறையிலும் கேட்கப்பட்டு விடும். அடுத்தபடியாக வரும் கேள்வியில் அழகான சிறிய விஷமமிருக்கும். அவருடைய கேள்விகள் பிறருக்குக் கூச்சலுண்டாக்குவதுபோல் மெதுவாகவிருக்கும். ஆகிலும் அது அதிக அபாயகரமானவை. அவருடைய பேச்சுக்கள் சந்தோஷப்படுத்துமே அல்லாது பிறரை நோகடிக்கக்கூடியவையல்ல.

ஸர் கிங்ஸ்லி வுட் பார்லிமெண்டு சபையில் விஷமமாகப் பேசுவதுடன் நின்றுவிடவில்லை. பரிகாசம் செய்வதிலும் அவருக்கு ஆசை அதிகம். அதற்குத் தகுந்தபடி அவரிடமுள்ள அபார சக்தியை அவர் தன்னுடைய புத்தி அமைதினாலும், ஒழுங்கான சாந்தமான நடவடிக்கையாலும், மறைத்து வைத்திருந்தார். பிறர் ஒரு பிரச்னையைத் தீர்க்க முயலும் பொழுது அவர் அதைச் செய்து முடித்துவிடுவார். அவர் அமைச்சராக உத்தியோகம் வகித்தவரையிலும் அவர் சிறந்த நடவடிக்கையுள்ளவரென்று வெளிக்காட்டிவிட்டார். போஸ்டு மாஸ்ட்டர் ஜெனரலாக இருந்தபொழுது பொதுமக்களுக்கு அந்த இலாகாவை விக்ரயம் செய்துவிட்டார்போலத் தோன்றிற்று. அவர் வெற்றிகரமாக தன்னுடைய அலுவல்களைச்செய்து முடித்ததற்கு அவருடைய நல்ல பழக்கவழக்கங்கள்தான் காரணமென்று அவர் சொல்லுவதுண்டு.

போஸ்ட்டு மாஸ்ட்டர் ஜெனரல் உத்தியோகம்.

பொதுமக்கள் சரியான மார்க்கத்தில் செல்லும் வாடிக்கைக்காரர்களென்பது அவருடைய அபிப்பிராயம். பொருளைச் செலவிடும்படியாக பொதுமக்களுக்கு ஆசை காட்டவேண்டும். ஆகையால் போஸ்டாபீஸ் இலாகாக்களை அவர் விஸ்தாரப்படுத்தினார். அவர் காலத்தில் போஸ்டாபீஸ் இலாகா அதிக லாபம் சம்பாதித்தது.

போஸ்டாபீஸ் ஜெனரல் அலுவல்கள் ஸ்டாம்புகளை விற்பனை செய்வதுடன் நின்றுவிட வில்லை. 1930-ம் வருஷத்தில் ஸர் கிங்ஸிலியை கன்ஸர்வேடிவ் கக்ஷியினர் நிர்வாகக் கமிட்டியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். அடுத்த வருஷத்தில் பொதுத் தேர்தலில் கன்ஸர்வேடிவ் கக்ஷி தோல்வியுற்றதும் அவர் தலைவராகயிருந்தபொழுதுதான்.

இந்த குதூகலமான சமயத்தில் யுத்தம் ஆரம்பமாயிற்று. நேவில் சேம்பர்லின் கிங்ஸிலி வுட்டை விமான இலாகா மந்திரியாக நியமித்திருந்தார். மிஸ்ட்டர் சர்ச்சிலுக்கு இது திருப்திகரமாகயில்லை. அவரை கோசாதிபதியாக சர்ச்சில் நியமித்தபொழுது நாடெங்கும் மகத்தான ஆச்சரியமுண்டாயிற்று. கோசாதிபதி ஸ்தானம் பிரதம மந்திரி பதவிக்கு அடுத்த முக்கியமான உத்தியோகம்.

மிஸ்ட்டர் சர்ச்சில் செய்த நியமனத்தின் மேன்மை மூன்று வருஷ யுத்த சேவைக்குப்பின் புலப்பட்டுவிட்டது. ஸர் கிங்ஸிலி இப்பொழுதும் அடக்கம், நட்பு, புன்னகை போன்ற குணங்களுள்ளவர்போல் வேஷம் போட்டுவந்தார். இந்த வேஷத்திற்கு பின் தளர்ச்சி செய்ய முடியாத பிடிவாதமும், ஊக்கமும் குடிகொண்டிருந்தன. ஒவ்வொருவரும் தன்னை அன்புடன் பாராட்டும் முறையில் வாழ்நாளைக் கழித்துவந்த கோசாதிபதி, ஜனங்கள் அதிக தியாகங்களைச் செய்யவேண்டுமென்று வற்புறுத்தினர்.

அவருடைய தலைமையில் பொருள் சம்பந்தமாக பிரிடன் முடிவான வெற்றி பெற்றுவிட்டது. இப்பொழுது பவுன் ஸ்டார்லிங் உலகத்திலேயே சிறந்த நாணயமென்று நிர்த்தாரணமாகிவிட்டது.

மேரி ராணியாரின் பதக்கம்.

(லூயி L. V. வுல்ப் எழுதிய கட்டுரையின் சுருக்கம்.)

பிரிடனிலுள்ள மூவகைப்பட்ட படைகளைச் சேர்ந்த ஆடவர்களிடமும், பெண்மக்களிடமும் யுத்த ஞாபகார்த்த சின்னமாக ஒரு சிறிய பதக்கம் காணப்படுகிறது. இதை அவர்கள் அன்புடன் அணிந்து வருகிறார்கள்.

அவர்களைத் தன்னுடைய மோட்டாரில் அன்புடன் ஏற்றிச்சென்ற ராணியின் ஞாபகார்த்தமாக அதை அவர்கள் அணிந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்தப் பதக்கத்தில் "M. R." என்ற எழுத்துக்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

தேசத்துக்குப் பாடுபடும் மூவகைப்பட்ட படைகளிலுள்ள ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் மேரி ராணியார் காண்பித்து வரும் அனுதாப அடையாளங்களில் இந்தப் பதக்கமளிப்பதும் ஒன்றாகும். அநேக மாதங்களுக்குமுன் பெட்ரோல் குறைவு உண்டாகி போக்குவரத்து கஷ்டமாகிவிட்டபொழுது சொந்தமான மோட்டார் உள்ளவர்கள் தங்களுடைய வண்டிகளில் சேவை செய்து வரும் படைகளை ஏற்றிச்செல்லலாமென்ற அபிப்பிராயம் தோன்றிற்று. மேரி ராணியாரும் வழியில் செர்விஸ் உடுப்புகள் போட்டுக்கொண்டு எந்த ஆடவரும், ஸ்திரீயும் நின்றாலும், அவர்கள் சமிக்ஞை செய்யாவிட்டாலும், மோட்டாரை நிறுத்தி அவரை அதில் ஏற்றிச்செல்ல வேண்டுமென்று மோட்டார் ஓட்டுகிறவனுக்கு உத்தரவிட்டிருந்தார்.

விமானப்படையைச் சேர்ந்தவர், ஸ்திரீகளின் உதவிசேவைப்படையாளர்கள், உதவிப் பயிற்சி சேவைப்படைகள், சிறுபெண்கள், மாலுமிகள் எல்லோரும் மேரி ராணியாரின் மோட்டாரில் அவருக்குப் பக்கத்தில் சுகமான ஆஸனங்களில் உட்காரும் பெருமையை அடைந்திருக்கிறார்கள்.

நீங்கள் எந்த ஊரைச்சேர்ந்தவர்கள், சேவை எப்படியிருக்கிறது என்று மேரி ராணியார் அவர்களைக்கேட்டு அவர்கள் தங்களுடைய சொந்த குடும்ப வாழ்க்கையைப்பற்றிப் பேசும் பொழுது ஆனந்தமடைவார். பிரயாணம் முடிந்தவுடன் பிரயாணி ராணிக்கு வந்தனம் செலுத்திச் செல்லும் பொழுது ராணியார் அவர்களுக்கு ஒரு பொக்கிஷத்தைக் கொடுப்பாள். அதுதான் இந்தச் சிறிய பதக்கம். அதை அவர்கள் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுவார்கள்.

ஸோல்ஜர்களுக்குப் பொழுதுபோக்கு வசதிகள்.

மேலே சொல்லியது மேரி ராணியார் மூவகைப்பட்ட படைகளுக்கும் செய்து வரும் ஒரு சிறிய உபகாரமாகும். நாட்டுப்புறத்திலுள்ள ராணியாரின் வாசஸ்தலத்தில் பதினைந்து நாளைக்கொருதரம் அவர் ஒரு சினிமாப்படக்காக்ஷியை ஏற்பாடு செய்திருக்கிறார். அதைப் பார்ப்பதற்கு சுற்றுப்புறத்திலுள்ள எல்லா ஸோல்ஜர்களும் கட்டணமன்னியில் கண்டு களிக்குமாறு அழைக்கப்படுகிறார்கள். சினிமாப்படக்காக்ஷிச் செலவை ராணியே ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அந்தப் பிரதேசத்தில் அதிகமான பொழுதுபோக்கு வசதிகளில்லாததால் ராணியாருக்கு அவர்கள் நன்றி செலுத்துகிறார்கள்.

ராணியாரின் மாளிகையின் சுற்றுப்புறத்திலுள்ள விடுதியில் ராணியாரின் மெய்க்காப்பாளர்களான ஒரு படைப்பகுதி வசித்து வருகிறார்கள். மேரி ராணியார் அவர்களை அன்புடன் பாராட்டி, அவர்களுக்குத் தேவையான பொழுதுபோக்குகளை ஏற்பாடு செய்கிறார். அவர்களின் சௌக்யமான வாழ்க்கைக்கும் வசதிகளை அளிக்கிறார். பொது ஜனங்களின் பாட்டுப்புத்தகத்தை உதவியாகக்கொண்டு துருப்புகளுடன் சேர்ந்து எல்லோருமாக கீதங்கள் பாடுவதுமுண்டு. சென்ற கிருஸ்துமஸ் பண்டிகையின் பொழுது ராணியார் அதிருஷ்டப் பரிசு டிக்கெட்டுகள் ஏற்பாடு செய்தார். அந்த அதிருஷ்டப் பரிசுகளில் சிப்பாய்களுக்கு ஷவரக் கத்திகளும், ஷவர துடைப்பங்களும், ஸோப்புக்கட்டிகளும் கிடைத்தன.

துருப்புகளுடன் பிரசங்கங்களில் பிரசன்னமாகிறார்.

யுத்த இலாகாவில் துருப்புகளுக்காக பிரகிருத யுத்த நடவடிக்கைகளைப்பற்றி அறிவூட்டும் பொருட்டு ஏற்பாடு செய்திருக்கும் பிரசங்கங்களுக்கு ஸோல்ஜர்களுடன் ராணியாரும் போவது உண்டு. ஸோல்ஜர்களுக்காக அச்சிடப்பட்ட சிறிய புஸ்தகங்களையும் ராணியார் வாசிப்பதுண்டு. அவருடைய மாளிகைக்கு வெளிப்பக்கத்தில் ஒரு பெரிய மரத்தினால் கட்டப்பட்ட குடிசையில் கிருஸ்துவ வாலிபர்கள் சங்கத்தின் ஆதரவின் கீழ ஸோல்ஜர்களுக்காக ஒரு பண்டகசாலை வைக்கப்பட்டிருக்கிறது. ராணியார் அங்கே அடிக்கடி போவார்.

இந்த வழக்கமான நடவடிக்கைகளுடன், ராணியார், தனிப்பட்ட படைப் பகுதிகளையும் விமானப்படையைச் சேர்ந்த தேடுவிளக்கு கோஷ்டியார்களையும், வெடிகுண்டுகளை அப்புறப்படுத்தும் வேலையிலிடுபட்டவர்களையும் பார்வையிடுவதுண்டு.

கனடாவைச் சேர்ந்த மேரி ராணியாரின் சொந்தத் துருப்புகள் படைக்கு ராணியார் உயர்தர தளகர்த்தர். அவர்கள் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தபொழுது அவர் துருப்புகள் இறங்குமிடத்துக்குச் சென்று அவர்களுடன் கலந்து கொண்டு ராணுவ அதிகாரிகளுடன் விருந்துண்டும் காலையிலும், மாலையிலும் நடைபெற்ற ராணுவ ஒத்திகையின் பொழுது ஸோல்ஜர்களைப் பார்வையிட்டும் அவர்களுடன் அன்று பூராவும் கழித்து வந்தார்.

இன்னும், நான்கு ராணுவப்பகுதிக்கும் ராணியார் உயர்தர தளகர்த்தர். 13-18 பிரிடிஷ் ஹஸ்ஸார்ஸ், (இதுவும் ராணியாரைச் சேர்ந்தது). ராணியாரின் பிரிடிஷ் ராணுவப்படை (மேற்கு ஸர்ரே), வர்ஸ்டர் ஷைர் யோமென்ரி, ஆக்ஸ் போர்ட்ஷைர்யோமென்றி புதுப்படை.

ராணியார் துருப்புகளுக்கு ஆடை வசதிகளை நெசவு செய்கிறார்.

உலகத்திலுள்ள போர்முனைகளிலுள்ள துருப்புகளின் ஆபீஸர்களுக்கெல்லாம் நிரந்தரமாக ராணியார் நெசவு ஆடைகளையும், இதர வெகுமானங்களையும் அனுப்பி வருகிறார். துருப்புகளுக்கும் ராணியார் நெசவு செய்த மேஜோடுகளும், கைக்குட்டைகளும் கையுறைகளும் அனுப்பப்படுகின்றன.

ராணியாரின் வீட்டில் பிற்பகல் நேரங்களில் படைகளுக்காக துணிகளை நெசவு செய்வது நிரந்தரமான ஏற்பாடு. ராணியாருடன் விருந்துண்ணும் பிரமுகர்களும், வேலைக்காரிகளும் அவளுடைய சிப்பந்திகளும் எல்லோம் இதில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் நெய்து கொடுக்கும் ஆடைகள், விநியோகம் செய்யும் மத்ய ஆபீஸுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கிருந்து ஸோல்ஜர்களுக்கும், மாலுமிகளுக்கும் விமானிகளுக்கும் அவைகள் அனுப்பப்படுகின்றன. அவைகளின் உற்பத்திக்குக் காரணம் ராணியாரென்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

பொதுமக்களின் வாழ்க்கையில் குறைவு.

(J. B. ப்ரீஸ்ட்லி.)

பிரிடனிலுள்ள ஜனங்களின் வாழ்க்கை நிலைமையைப்பற்றி நான் ஒலிபரப்பில் பேசி வெகு நாட்களாகிவிட்டது. யுத்த அவசியத்தை முன்னிட்டு, உங்களுடைய வாழ்க்கை அடிக்கடி மாறிக்கொண்டிருப்பதால், உங்களுடைய வாழ்க்கை முறைகளைப்பற்றிக் கேள்விப் பட நீங்கள் ஆசைப்படுவீர்களென்று நான் நம்புகிறேன்.

நீங்கள் அனுபவித்துவரும் அநேக மாறுதல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், எங்களுடைய நிலைமை நிம்மதியாகயிருக்கிறதென்றும், யுத்த காலத்திய வாழ்க்கை இங்கு திட்டமாகக் குறிப்பிட்ட முறையில் நடைபெற்றுவருகிறதென்றும் நீங்கள் முதலெடுப்பில் நினைக்கலாம். இதே விதமாகத்தான் பிரிடனிலுள்ள அநேக ஜனங்களும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் போலும். இதற்குக் காரணம், படைகளைத் திரட்டுதல், மகத்தான பங்கீடுத் திட்டங்கள் போன்ற முக்கியமான மாறுதல்கள், இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டன.

உதாரணமாக, பெட்ரோல், காஸலீன் ஸப்ளையை எடுத்துக்கொள்ளுவோம். பெட்ரோல் பங்கீடு திட்டத்தை அநேக மாதங்களுக்கு முன்னதாகவே ரத்து செய்துவிட்டார்கள். அதற்குப் பதிலாகக் கடுமையான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி மோட்டார் வைத்திருக்கும் ஒருவருக்கும் ஒரு பொட்டு எண்ணெய்கூட விநியோகம் கிடையாது. மனுச்செய்துகொண்டு, தேசத்தின் அவசியத்துக்காகப் மோட்டார் உபயோகப்படுத்தப்படுமென்று ருஜூச் செய்தால்தான் எண்ணெய் கொடுக்கப்படும். வைத்தியர்களுக்கு எண்ணெய் ஸப்ளையுண்டு. மற்றவர்களில் பெரும் பாகத்தாருக்கு ஸப்ளை கிடையாது. லக்ஷக்கணக்கான மோட்டார்கள் ஷெட்டில் நின்றுகொண்டிருக்கின்றன. அவைகள் எதிர் காலத்திலும் உபயோகப்படுத்தப்படமாட்டா. இவைகளை நீங்கள் அறிவீர்கள். ஆகிலும், பெட்ரோலையும், மோட்டார்களையும் உபயோகிப்பதில் யுத்த அவசியத்தை முன்னிட்டு நாங்கள் குறிப்பிட்ட நடவடிக்கையை அனுஷ்டித்துவருகிறோமென்றும், இவைகள் சம்பந்தமான தற்போதைய நிலைமை ஆறு மாதங்களுக்கு முன்னிருந்த நிலைமை மாதிரியாகத்தானிருக்கிறதென்றும் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆகிலும், இது தனிப்பட்ட விஷயம். இதேமாதிரி பல உதாரணங்களுமிருக்கின்றன. எங்களுக்கு மாதா மாதம் மிட்டாயும், கற்கண்டும் அளவிட்டுக் கொடுக்கப்படுகிறது. ஆகிலும், நாங்கள் மாதா மாதம் கொள்முதல் செய்யக்கூடிய அளவு சாமான்களின் இருப்பைப்பொருத்து வித்தியாசப்படும். ஆனாலும், மிட்டாய் ஸப்ளையில் மாறுதலேற்படவில்லை. எங்களுடைய பங்கீடுச் சீட்டைக் கடைக்குக்கொண்டுபோய் சாத்தியமானதை வாங்கிவிடுவோம். எங்களுடைய குழந்தைகளுக்கு அவைகளைக் கொடுத்துவிட்டு நாங்கள் சும்மா விருந்துவிடுவோம். இந்த அனுஷ்டானமும் பழக்கமாகிவிட்டது.

"சம்பூர்ணமான யுத்தம் நடைபெறும்பொழுது நியதியான காரியம் நடைபெறமுடியாது."

மறுபடியும் இந்த உதாரணங்கள் தனிப்பட்டவைகள் என்று சொல்லுகிறேன். எவ்வளவு ஜாக்கிரதையுடன் பங்கீடு முதலிய திட்டங்களை அமைத்து அமுல் நடத்திவந்தாலும் சம்பூர்ணமான யுத்தம் நடைபெறும்பொழுது நியதியான நடவடிக்கை நடைபெற முடியாதென்றும், யுத்த அவசியம் அதிகரித்துவரும்பொழுது அதற்கு அபரிமிதமான உதவி அவசியமென்றும், அதன்மூலம் சாதாரண பொதுஜனங்களின் வாழ்க்கை நிலைமை குறைவுபடத்தான் வேண்டுமென்றும் நான் நினைக்கிறேன்.

நான் பெரும்போக்கான அபிப்பிராயத்தை வெளியிடுகிறேனென்று ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். பங்கீடு முறைகளை ஆரம்பித்து பரீக்ஷார்த்தமாக அது நடைபெறும் காலத்தில் சாதாரணமான பொது மக்கள் கஷ்டப்படுவது சகஜம்தான். அப்போது பங்கீடு முறையில் நடைபெற முடியாது. ஆகிலும், உத்தேசப்படி பங்கீடு திட்டம் பரிஷ்காரமாக வேலை செய்துவரும்பொழுது அவர்கள் சுகமடைவார்கள். சில சமயங்களில் பங்கீடுமுறை ஆரம்ப காலத்தில் சாமான்களின் குறைவு ஏற்படுவது சகஜம். இரண்டு வருஷங்களுக்கு முன் பலமான குண்டுவீச்சேற்பட்டபின் நாட்டில் சுருட்டுப்பஞ்சம் உண்டாகிவிட்டது.

சுட்டிகள் வைத்திருந்த கடைகளை ஜனங்கள் சூழ்ந்துகொண்டு, சிறிது நேரத்துக்குள்ளாக எல்லாச் சரக்குகளையும் ஒழித்துவிட்டார்கள். வெடிகுண்டு வீச்சைப்பற்றி அபரிமிதமாகப் பேசுவதைவிட சுருட்டு வியாபாரத்தில் பேரம் அதிகமாகிவிட்டது. இப்பொழுது ஸப்ளைகள் இடைவிடாது வந்துகொண்டிருக்கின்றன. ஆகையால், அதைப்பற்றி இப்பொழுது கவலையில்லை.

அமெரிக்காவில் அநேக பாகங்களில் சென்ற ஒன்று அல்லது இரண்டு மாதங்களாக இறைச்சி ஸப்ளை குறைவு உண்டாகிவிட்டதென்று கேள்விப்படுகிறேன். நெருக்கடியான நிலைமை உண்டாகிவிட்டதென்று ஜனங்கள் நடுங்கினார்கள். பங்கீடு முறைகள் சரியாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டால், இந்தக் குறைவுபாடு ஒய்ந்துவிடுமென்று எனக்குத் தோன்றுகிறது. விசாலமான நோக்கத்துடன் கவனித்தால் எவ்வளவு பரிஷ்காரமாகத் திட்டங்கள் போடப்பட்டாலும் நடைபெற்றாலும், பூர்ணமான யுத்தத்தின் தேவைகளின்மூலம் சாதாரண ஜனங்களின் வாழ்க்கை முறையானது காலக்கிரமத்தில் குறைவுதான்படுமென்று நான் நினைக்கிறேன். இந்தக் குறைவு கண்டிப்பாய் நடந்தே தீருமென்று எனக்குத் தோன்றுகிறது. நாம் யுத்தத்தில் வெற்றிபெறவேண்டுமானால், யுத்த ஆவசியம் அதிகரித்துவரும்பொழுது பொது மக்களுக்குச் சௌகரியக் குறைவு நிச்சயமாய் உண்டாகும்.

ஆடவர்களும், ஸ்திரீகளும் திரட்டப்படுகிறார்கள்.

எங்களுடைய வாழ்க்கை முறையைப்பற்றி சில விவரங்களைக் கூறுகிறேன். யுத்த முயற்சிக்காக ஆடவர்களைத் திரட்டுவது எங்கள் நாட்டில் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது. எங்களைவிட பரிஷ்காரமாக இந்த வேலையை மற்றெந்த நாடும் செய்யவில்லை. இதர சேவைப் படைகளுக்கும், யுத்தத் தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளுக்கும் ஏராளமான ஜனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். வாலிபமுள்ள அநேக ஸ்திரீகளும் இந்தச் சேவைகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதன் விளைவாக பொதுமக்களின் வாழ்வு நிலையில் வேலைக்காரர்களின் குறைவு நன்றாய் ஏற்பட்டு, அதன் சிரமங்களை நாங்கள் அனுபவித்துவருகிறோம். நான் சமீபகாலத்தில் லண்டனிலுள்ள சேவைப் பகுதியின் நிலயத்தில் குடியிருந்துவருகிறேன். நான் அதற்கு அதிகமான வாடகையைக் கொடுத்தாலும், அது அதன் ஸ்வான்தார் ஒப்புக்கொள்ளுகிறபடி ஸ்தூலமாகக் கட்டப்பட்டிருக்கிறது. யுத்தத்துக்குமுன் இந்த இடத்தில் வேலை செய்தவர்களில் நாலில் ஒரு பங்குதான் இங்கு வேலை செய்கிறார்கள். அவர்களும் வயது முதிர்ந்த மாதுகளும் வேலைக்காரர்களும், சுமைக்காரர்களுமாகயிருக்கிறார்கள். ஹோட்டல்களிலும் இதேமாதிரிதான் நடைபெறுகிறது. என்னுடைய நண்பன் லண்டனில் கியாதிபெற்ற ரண வைத்தியன். அவன் ஏராளமான பொருள் ஒவ்வொரு கேஸிலும் சம்பாதித்துவிடுவான். இப்பொழுது அவனும், அவன் மனைவியும் இரண்டு அரைகளில் வசித்துவருகிறார்கள். அவனுடைய மனைவிதான் அவனுடைய மோட்டார் ஓட்டுகிறவள், காரியதரிசி, சமையல்காரி, வீட்டு வேலைக்காரியாகயிருக்கிறாள். லண்டனிலுள்ள என்னுடைய வைத்தியரும், ஹார்லித் தெருவில் கியாதிபெற்றவர். அவருடைய சம்சாரம் தனிப்பட்ட முறையில் சிகிச்சை செய்வதற்காக அநேக வைத்தியசாலைகளை ஏற்படுத்தியிருக்கிறாள். பிரகிருதத்தில் அவர்களுக்கு வீட்டில் ஒத்தாசைக்கு ஒருவருமில்லை. ஒரு நாள் பூராவும் கஷ்டப்பட்டு வீடு திரும்பியபின், அவர்களே தங்களுடைய உணவைத் தயார்செய்துகொள்ளவேண்டியிருக்கிறது. இந்தவிதமான நடவடிக்கைகளில் பிரமாதமான கஷ்டம் இருக்கிறதென்று நான் சொல்லவில்லை. அவர்களும் இதில் ஆயாசப்படவில்லை. எங்களுடைய ஜீவன நிலைமையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பதை வெளிப்படுத்துவதற்குத்தான் இந்த உதாரணங்களைச் சொல்லுகிறேன். நம்முடைய வாழ்நாள் முடியும் வரையில் வேலைக்காரர்களின் குறைவு இருந்துதான் தீரும். அதைப்பற்றி நான் அதிகக் கவலைப்படவில்லை. இதுதான் நமது கஷ்டத்தின் ஆரம்பம். இன்னும் ஆயிரக்கணக்கான ஸ்தாபனங்களிலும், தொழிலாளர்களின் குறைவு ஏற்பட்டிருக்கிறது. எல்லா ஆபீஸ்களிலும், கடைகளிலும் வேலைக்காரர்களின் குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் நடவடிக்கைகள் முன்போல் துரிதமாக நடைபெறக்கூடவில்லை. லண்டனிலுள்ள கடைகளைச் சீக்கிரமாக மூடிவிடுகிறார்கள். ஆகையால் பகல் பூராவும் வேலை செய்கிறவர்கள் சிற்றுண்டி நேரத்தில் தேவைப்பட்ட சாமான்களை விலைக்கு வாங்குவதற்கு முந்துகிறார்கள். மிகவும் முக்கியமில்லாவிட்டாலும் அவசியமாகச் செய்யப்படவேண்டிய சிகையலங்காரம், ஜோடுகளைப் பழுதுபார்த்தல், கடிகாரம் ரிபேர் செய்வதுபோன்ற காரியங்கள் இப்பொழுது கஷ்டசாத்யமானவை. அடிக்கடி என்னுடைய சிகை சங்கடமாக வளர்ந்துவிடுகிறது. நான் அணிந்து கொள்ளும் ஜோடுகளைப் பழுதுபார்ப்பதற்காகக் கடையில் மூன்று மாதங்கள்வரை போடவேண்டியிருக்கிறது. கடிகாரத்துக்குச் சாவி கொடுக்கும்பொழுது மிகவும் கவலை எடுத்துக் கொள்ளுகிறேன். என்னுடைய குழந்தைகள் அஜாக்கிரதையாக அவர்களுக்குக் கிறிஸ்துமஸ்

பண்டிகையின்பொழுதும், பிறந்தநாள் கொண்டாட்டத் தினத்தன்றும் இனுமாகக் கொடுக்கப்படும் கடிகாரங்களைக் கெடுத்துவிடுவார்கள். ஒவ்வொரு நாளும் என்னிடமுள்ள பழைய அச்சடிக்கும் டைப் மெஷினை நான் உபயோகித்துவருகிறேன். சில சமயங்களில் அது அதிக சப்தம்போடுகிறது; அல்லது தாவிச்செல்லுகிறது. அது பழுபட்டு வேலை செய்யாமல் போய்விட்டால், என்னுடைய வேலையை நான் எப்படி நடத்துகிறதென்று நினைக்க எனக்கு நடுக்கமுண்டாகிறது.

சிறிய சாமான்களை வலைபோட்டுத் தேடவேண்டியிருக்கிறது.

மேலும் யுத்த முயற்சிகளுக்கு அவசியமில்லாத பல வியாபார ஸ்தலங்கள் மூடப்பட்டு அவைகளிலுள்ள சாமான்கள் மறைந்துவிட்டதாலும், அவைகளுக்குப் பர்த்தியாக சாமான்கள் உண்டுபண்ணப்படாததாலும், இதற்குமுன் அபரிமிதமாகக் கிடைத்துவந்த சிறிய சாமான்களைப் பெறுவது மிகவும் சிரமசாத்தியமாயிருக்கிறது. முக்கியமாக ரேடியோ, மின்சார சாமான்களும், இல்லற வாழ்க்கைக்குறிய சில்லறை சாமான்களும்தான் குறைவுபட்டிருக்கின்றன. புதிதாகக் குடித்தனம் ஆரம்பிக்கும் தம்பதிகள் என்ன செய்வார்களென்று எனக்குத் தோன்றவில்லை. ஆகிலும், அரசாங்கத்தாரின் உத்தரவுப்படி குடித்தன முறைக்கு வேண்டிய சாமான்களை நியாயமான விலையுடனும், அதிக வேலைப்பாடுமில்லாத மர சாமான்களையும் அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். குழந்தைகள் வைத்து விளையாடும் பொம்மைகள் கடைகளில காணப்படவில்லை. ஒரு சிறிய நகரத்திலுள்ள விளையாட்டு சாமான்கள் விற்கும் கடைக்குச் சென்று, என்னுடைய குழந்தையின் உபயோகத்திற்குச் சாமான் வாங்க உத்தேசித்தபொழுது எனக்கு ஒன்றும் அகப்படவில்லை. ஒட்டுப் படங்கள்கூட கிடைக்கவில்லை. துணிமணிப் பங்கீடு வருவதற்கு முன்னதாகவே, ஏராளமான உடைகளை வைத்திருந்த வயது முதிர்ந்தவர்கள் துணிமணிப் பங்கீடுச் சீட்டை வைத்துக்கொண்டு காலம் தள்ளிவிடலாம். அநேகமாக அவைகளில் சிலவற்றை நாங்கள் ஸ்திரீகளுக்கும் கொடுத்துதவுகிறோம். வளர்ச்சி பெற்றுவரும் குழந்தைகளும், ஸ்திரீகளும் பங்கீடு அளவுப்படி கொடுக்கப்படும் துணிகளைக்கொண்டு ஆடைகள் தயாரித்துக்கொள்ளமுடியாது. அவர்கள் சம்பந்தப்பட்டமட்டில் ஆடைகளைத் திருத்தியமைக்கவேண்டும். ஒட்டுப்போட்டு சீர்திருத்த வேண்டும். யுத்தம் இன்னும் அநேக வருஷங்கள் நடைபெற்றால், அநேக ஜனங்கள் கோமாளிகளைப்போல் அழகான ஒட்டுகள்போட சட்டைகளுடன் நடமாடுவார்கள். இதுவும் பிரமாதமான காரியமல்ல.

வாஸஸ்தலம் கஷ்டம்தான் முக்கியமானப் பிரச்னை. இந்தத் தீவில் ஜனத்தொகை அதிகரித்துவிட்டதுபோலத் தோன்றுகிறது. நகரங்களிலும், பட்டணங்களிலும் ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது. கிராமங்களில் ஏராளமான ஜனங்கள் வசித்துவருகிறார்கள். இந்தப் பிரச்னையைப்பற்றி எனக்கு அதிகம் தெரியும். எனக்கு அழகான இரண்டு மாளிகைகளிருந்தும் அவைகளில் நான் வசிக்கக்கூடவில்லை. லீவில் வரும்பொழுதும் பள்ளிக்கூட ரஜா நாட்களிலும் என்னுடைய குடும்பத்தார் ஒன்றுசேர்ந்து வாழவேண்டுமென்று நினைத்தால், அவர்கள் வசிப்பதற்கு வீடுகளை அமர்த்துவதில் ஏராளமான பொருள் செலவிட்டு, சௌகரியங்களைத் தேடிக்கொள்ளவேண்டும். லண்டனின் மத்திய பாகத்தில் அதிக ஜன நெருக்கடி உண்டாயிருக்கிறது. சமீபகாலத்தில் ஜாகைகள் அகப்படுவது கஷ்டமாயிருக்கிறது. அகப்பட்டாலும் வாடகை அதிகமாகயிருக்கிறது. ஜனங்கள் முணுமுணுக்கிறார்கள். லண்டனுக்கு வெளிப்புறத்திலும் நிலைமை சௌகரியமாகயில்லை. நாட்டுப்புறங்களிலுள்ள ஹோட்டல்களும், சாவடிகளும் ஸர்க்கார் உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டன. தனிப்பட்ட வீடுகளிலும், படுக்கையறை என்று தனிப்பட்ட அறைகள் கிடையாது. ருஷ்யர்களைப் போல் நாமும் பழக்க வழக்கங்களிலும், நோக்கங்களிலும் பொதுவுடமை அபிப்பிராயத்தை மேற்கொள்ளுகிறோம். ஒரே இடத்தில் ஸ்திரமாக வசித்துவந்தால், கிடைக்கக்கூடிய வாசஸ்தலத்தைச் சிறந்த முறையில் உபயோகித்துக்கொள்ளலாம். தேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்கிறவர்களுக்கு அதிகக் கஷ்டம் உண்டாகுகிறது. வேலைக்காரர்கள், சேவகர்கள், வாசஸ்தலங்கள், சாமான்கள், போக்குவரத்துகளின் குறைவுகள், யுத்த அவசியம் அதிகரித்துவரும்பொழுது அதிகப்படும்.

நம்மைவிட ஜெர்மானியரின் வாழ்க்கை மோசமானது.

யுத்த முயற்சிகளில் மேலும் மேலும் அதிகப்பொருள் செலவிடவேண்டும். பொது ஜனங்களின் வாழ்க்கை முறைகள் குறைவுபடவேண்டும். இதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். இந்த நிலைமை யுத்தத்தில் ஈடுபட்ட இரு கக்ஷியினருக்கும் அன்வயிக்கும். நம்மைவிட ஜெர்மானியர்களின் நிலைமை மோசமாகயிருக்கிறது. நமக்கு ஏற்பட்டிருக்கும்

கஷ்டங்களைவிட ஜெர்மானியர்களுக்கு அதிக சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆக்கிரமிப்பு நாடுகளில் தங்குதடையன்னியிலும், தடையன்னியிலும் ஜெர்மானியர்கள் கொள்ளையடித்தும் கூட அவர்களிடம் போதுமான சாமான்கள் கைவசமில்லை. அவர்களின் வாழ்க்கை உயிரும், உடலும் சேர்ந்திருப்பதற்கு மட்டும்தான் போதுமானதாயிருக்கிறது. முந்தி லாபகரமாக யிருந்தது. இப்பொழுது அசௌகரியத்தை உண்டுபண்ணிவிட்டது. ஜெர்மனிக்குக் கிடைத்த சௌகரியம் யாதெனில், யுத்தம் துவங்குவதற்கு அநேக வருஷங்களுக்கு முன் முதற் கொண்டு ஜெர்மானியர்கள் யுத்த முயற்சியிலீடுபட்டிருந்தார்கள். உணவுப் பங்கீடும் கடுமை யாக நடைபெற்றுவந்தது. அந்த வருஷங்களில் பொது ஜனங்கள் பூர்ணமான யுத்தத்தை நடத்துவதற்குத் தயார் செய்யப்பட்டார்கள். இந்த சௌகரியத்தினுல் ஜெர்மனி யுத்தத்தி லிறங்கியபொழுது, அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், ஜனசமூகத்தின் அமைப்பையும் திருத்தியமைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் உண்டாகவில்லை. பொதுஜனங்களின் மனப்பான்மையைக் கிளப்பிவிடுவதற்கு, யுத்த ஆரம்பத்தில் உணவு விநியோகத்தை நாஸிகள் அதிகப்படுத்தினுர்கள். 1940-ம் வருஷத்தில் மேற்கு ஐரோப்பாவை ஆக்கிரமித்து, அங்கி ருந்த உணவுப் பொருள்களையும், துணிமணிகளையும், மற்ற சாமான்களையும் கொள்ளையிட்டு ஜெர்மானியர்கள் சௌகரியமாக வசித்துவந்தார்கள். ஆகிலும், நாம் முற்றுகைப் போட்டு விட்டதின்மூலம் அவர்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டு, அதன் பலன்களை அவர்கள் அனுப வித்துவருகிருர்கள. கொள்ளைக்குப்பின் உள்நாட்டிலுற்பத்தியான சாமான்களையே அவர்கள் உட்கொள்ளவேண்டியிருந்தது. உற்பத்தியும், தேவைகளுக்குப் போதுமானதல்ல. அநேக வருஷங்களாக உணவுப் பங்கீடும், போலி சாமான்களை உபயோகிப்பதும் ஜெர்மானி யர்களின் வாழ்க்கை முறையைக் குறைத்துவிட்டபோதிலும், உண்மையில் நெருக்கடியான நிலைமை வந்தபொழுது, குறைத்துச் செலவு செய்வதற்கு வசதியில்லாமல், வாழ்க்கை முறை அதமபக்ஷத்துக்குக் குறைந்துவிட்டதால், அவர்களுக்கு ஆலஸ்யமும், அசௌகரிய மும் உண்டாகிவிட்டது. அதன்மூலம் ஜெர்மானியர்களின் ஆரோக்கியமும், மனப்பான்மை யும் குன்றிவிட்டது.

பிரிட்டனிலுள்ள நாம் நான்காவது வருஷயுத்தத்தை நடத்திவருகிருேம். ஜெர்மானியர்கள் எட்டாவது அல்லது ஒன்பதாவது வருஷ யுத்தத்தை நடத்திவருகிருர்கள். இதனுல், அவர் களுக்குத் தோல்வி ஏற்பட்டுவிடாது. யுத்தகளத்தில் அவர்கள் நன்ருய் முறியடிக்கப்பட வேண்டும். ஆகிலும், பரிதாபகரமான வாழ்க்கை முறைகள் அவர்கள் பின்வாங்க நேரிடும் பொழுது அவர்களுக்கு உதவியளிக்கப்போவதில்லை.

துருக்கி, பிரிடனுடன் உறவாடுகிறது.

யுத்தத்தில் கலந்துகொள்ளாமல் உதவியளிக்கிறது.

(ஸர் விண்டுகம் டீடிஸ்).

சில காலத்துக்குமுன், ஸ்விட்ஸர்லாந்தும், ஸ்வீடனும், துருக்கியும், மற்ற நடுநிலைமை வகிக்கும் நாடுகளும் வேலியின் பேரில் உட்கார்ந்துகொண்டு எந்தப்பக்கத்தில் குதிப்பதென்று ஆலோசனை செய்துகொண்டிருப்பது போன்ற ஒரு மிகைப்படம் ஒரு பத்திரிகையில் வெளி வந்தது. இந்தக் கோஷ்டியில் துருக்கியையும் படம் வரைந்தவர் அறிவின்மையால் சேர்த்திருக் கிருர். மதில் சுவரில் உட்கார்ந்துகொண்டு நடவடிக்கைகளின் போக்கின்படி முடிவுசெய்வது என்ற நாடுகளின் கோஷ்டியில் துருக்கி இருக்கவில்லை, இருந்தது மில்லை.

1940-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நான் துருக்கிக்குச் சென்றபொழுது துருக்கிய அரசாங்கமும், ஜனங்களும், நேசநாடுகளின் கக்ஷியை முழுமனதுடன் ஆதரிக்கிருர்களென்று நான் கண்டுகொண்டேன். என்ன வந்தாலும் துருக்கி இந்த நிலைமையிலிருந்து மாறிவிடா தென்றும், அச்சுவல்லரசுகள் அதைத் தாக்கினுல் கடைசி வரையில் அவர்களை எதிர்த்து நிற்கு மென்றும் நான் ஜோஸியம் சொன்னேன். பிரான்ஸின் வீழ்ச்சிக்குப்பின்னும் என்னுடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள ஒரு முகாந்திரமும் ஏற்படவில்லை. அந்த வீழ்ச்சியானது துருக்கியர்களின் நம்பிக்கையைத் தளரச் செய்திருக்கக்கூடும்.

துருக்கியின் நடுநிலைமைக்கும், மற்ற நாடுகளின் நடுநிலைமைக்கும் வித்தியாசமுண்டு. யுத்த ஆரம்பத்தில் நாஸிகளின் அதிக்ரமத்தை எதிர்த்து நிற்க வேண்டுமென்று துருக்கி, பால்கன் நாடுகளுக்கு எச்சரிக்கை செய்தது. ஹிட்லருக்கு எதிரிடையாக பால்கன் நாடுகள் சேர்ந்து கொள்ளாதது துருக்கியின் தவறென்று நான் ஏற்கனவே சொன்ன பிரகாரம் ஜெர்மனி அதைத் தாக்கினால் தான் கண்டிப்பாய் எதிர்த்து நிற்பதாகவும், துருக்கி ஜெர்மனிக்கு அறிமுகப்படுத்தி விட்டது. லண்டனிலுள்ள துருக்கிய அயல் நாட்டு, மந்திரி துருக்கி ஐக்கிய தேசத்தார்களின் நண்பரென்றும், நடுநிலைமை வகிக்கும் நாடல்லவென்றும் அடிக்கடி சொல்லி வருகிறார். இந்த யுத்தம் பூராவிலும் துருக்கி நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்து இவ்விதமான விவரணம் பொருத்தமென்றே தோன்றுகிறது.

பிரான்ஸுக்கும், பிரிடனுக்கும், துருக்கிக்கும் 1939-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் நடந்த நட்பு ஒப்பந்தத்தின் கதி என்னவென்று கேள்வி உண்டாகலாம். போலந்தும், பிரான்ஸும் வீழ்ச்சி பெற்றபின் ஏற்பட்ட மோசமான நிலைமையையும், யுத்தத்துக்கு துருக்கி தயாராகயில்லை என்பதையும், துருக்கிக்கு உதவியனுப்ப பிரிடன் அந்த சமயத்தில் சக்தியற்ற தென்பதையும் பிரிடன் உணர்ந்து ஒப்பந்த நிபந்தனைகளின்படி துருக்கி நடந்துகொள்ள வேண்டியதில்லை என்று முடிவு செய்தது. தற்காப்பு செய்து கொள்ளப் போதுமான பலம் துருக்கி அச்சமயத்தில் பெற்றிருக்கவில்லை என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டால், 1940-ம் வருஷத்தில் ஜெர்மனியுடன் துருக்கி யுத்தம் துவக்கியிருந்தால் நேசநாடுகளுக்குச் சங்கடமான நிலைமை உண்டாகியிருக்கும். டார்டனல்ஸையும், பாஸ்பரஸ் ஜலசந்தியையும், ஆசியா மைனரின் மேற்குக் கரையிலுள்ள கப்பல் தளங்களையும் பிடித்துக்கொண்டு ஆசியா மைனர் வழியாக ஸிரியாவையும், இராக்கையும் தாக்கும் வசதி ஜெர்மனிக்கு ஏற்பட்டிருந்தால் அந்த நிலைமை மத்தியக் கிழக்கிலுள்ள நமது ஸ்தானங்களுக்கு அபாயம் உண்டுபண்ணியிருக்கும். ஆகிலும், துருக்கி நடுநிலைமை வகித்ததிலிருந்து மத்தியக் கிழக்குப் போர்முனையின் நடவடிக்கைகளுக்கு மிகுதியான சாதகம் ஏற்பட்டது.

இந்த யுத்தத்தில் துருக்கியின் மனப்பான்மையைப்பற்றி சந்தேகப்படவேண்டியதில்லையென்றாலும், சாத்யமான வரையில் யுத்தத்தில் ஈடுபடாமலிருப்பதுதான் துருக்கியின் அக்கரைகளுக்கு ஒத்ததாகும். துருக்கியில் அநேக வருஷங்களாக யுத்தக்கொடுமைகள் உண்டாகி தேசம் க்ஷீண தசையை அடைந்துவிட்டது. அராஜகமும், ஏற்பட்டு முதல் உலக யுத்தத்தில் அது ஈடுபட்டது. அதிலிருந்து அது விடுதலை பெற்றது. முன்போல் நல்ல ஸ்திதியை அடைய சமாதானம் நிறம்பிய அநேக வருஷங்கள் செல்லவேண்டும்.

அடாடர்க் செய்துவரும் சீர்திருத்தங்கள் சிறந்தவை. மகத்தானவை. சொல்ப கால அளவில் இவ்விதமான ராஜீய பொருளாதார ஜனசமூக சீர்திருத்தங்கள் சரித்திரத்திலேயே துருக்கியைப் போல மற்றெந்த நாட்டிலும் நடைபெற்றிருக்கமுடியாது. ஏகாதிபத்யத்துக்குப்பதிலாக குடியரசு ஆக்ஷி ஏற்பட்டிருக்கிறது. தேவாதிபத்யத்துக்கு பதிலாக துரைத்தன ஆதிபத்யம் வந்துவிட்டது. கோஷா அரையில் அடைபட்டிருந்த ஸ்திரீகள் தங்களுக்குறித்தான அலுவல்களில் அமர்ந்து தேசீய வாழ்க்கையிலீடுபட்டிருக்கிறார்கள். பாஸ்பரஸ்ஸிலிருந்த தலைநகரம் அனடோலியாவிலுள்ள உன்னத பிரதேசத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இந்த மாறுதலில் இடம் மாறுதலடைந்ததைத் தவிர தனிப்பட்ட விசேஷமிருக்கிறது. கொள்ளையடிக்கும் முறைகள் மறைந்து விட்டன. துருக்கியில் ஏற்பட்ட டைபஸ் ஜுரமும், பெரிய அம்மையும், காலராவும், மலேரியா குளிர் ஜுரமும் ஜனங்களை முன்போல் நாசம் செய்யாவிட்டாலும், அடியோடு அகற்றப்படவில்லை. அரசாங்கத்தாரும், துருக்கிய செஞ்சிலுவைச் சங்கமும் இந்த வியாதிகளை அழிக்க இடைவிடாது முயன்றுவருகிறார்கள்.

இன்னும் அநேக சீர்திருத்தங்கள் சிறந்த முறையில் நடைபெறுகின்றன. ஆகிலும், ஒரே நாளில் அவைகளைச் செய்துவிட முடியாது.

ஒப்பந்தத்தின் ஷரத்துகளின்படி துருக்கி மனப்பூர்வமாக நடந்துகொண்டிருக்கிறது என்பது ஸ்பஷ்டமானது. ஷரத்துகளின்படி சில நடவடிக்கைகளை நடத்தவேண்டாமென்று நேசநாடுகள் துருக்கிக்கு அனுமதி கொடுத்தார்கள். இந்த யுத்தத்தில் துருக்கி கலந்துகொண்டிருந்தால் நேசநாடுகளுக்கும், துருக்கிக்கும் அது லாபகரமாகயிருந்திருக்காது.

எதிர் காலத்தில் என்ன நடைபெருமென்று என்னால் சொல்லமுடியாது. ஆகிலும், நம்முடைய நண்பன் பேரில் நாம் பூர்ணமான நம்பிக்கையுடன் இருக்கலாமென்றுதான் நான் எண்ணுகிறேன்.

'வி' டயரி-1944.

(குறிப்பு புஸ்தகம்).

(அக்டோபரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3 அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணு.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாஙகிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் தசரா பிரஸங்கங்கள் 166.

30–9–43	புதுக்கோட்டை சாந்தார் கோவில் கீழ சன்னதி.	மாலை	6.30
1–10–43	,,		,,
2–10–43	முனிஸிபல் ஆபீஸ் ...	,,	6.00
3–10–43 to 7–10–43	புதுக்கோட்டை சாந்தார் கோவில் கீழ சன்னதி.	மாலை	6.30

பிரஸங்கம் 167. (1-வது பிரிவு).

9–10–43	முனிஸிபல் ஆபீஸ் ...	மாலை	6.00
10–10–43	கீரனூர் ...	,,	7.00
,,	நாஞ்சூர் ...	,,	7.30
11–10–43	பூவரசகுடி ...	,,	7.00
,,	வேங்கடகுளம் ...	,,	7.30
12–10–43	பெருங்களூர் ...	,,	7.00
,,	ஆதனக்கோட்டை ...	,,	7.30
13–10–43	C. S. M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை ...	,,	10.45
13–10–43	காலேஜ் A இங்கிலீஷ் ...	காலை	11.00
,,	காலேஜ் B தமிழ் ...	,,	11.00
,,	பூங்குடி ...	மாலை	7.00
,,	சச்சமங்கலம் ...	,,	7.30
14–10–43	மிரட்டுநிலை ...	,,	7.00
,,	அரிமளம் ...	,,	7.30
15–10–43	உடையாளிப்பட்டி ...	,,	7.00
,,	கிள்ளுகோட்டை ...	,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

9—10—43	பொன்னமராவதி.
10—10—43	விராச்சிலை.
11—10—43	விராலிமலை.
12—10—43	வடகாடு.
13—10—43	கீழாநிலை—புதுப்பட்டி.
14—10—43	ஆலங்குடி.
15—10—43	புதுக்கோட்டை.

(நோட்டு மெட்டு.)

1. டோஜோ ஹிட்லர் முஸோலினி
தொடுத்த போரின் அனல்தீர்க்கும்
வெற்றி இறைவா ஆங்கிலரின்
நேசர்படைக்குத் தருவீரே.

2. ஆண்டு நான்கு சற்றேறக்
குறைய பூர்த்தி ஆகியது
மக்கள் துயரம் விடம்போல
ஏறும் கொடுமையா ரறியார்.

3. குருவும் கடக, மிற் சேர்ந்தான்
கோவின் கோளும், நிலை மாறி
நன்மை பயக்கும், இல்லுறைந்தார்
நமக்கு அதுவே, நற்காலம்.

4. போரின் நிலை இனி மேல் வேறு
முன்போல் தோல்வி, நாமறியோம்
மேலும் மேலும், நாம் வெற்றி
பெறுவோம் எதிரி, தோல்யுறும்.

5. தீரா நோயும், ஓர் நொடியில்
தீரும் அதுபோல், இப்போரும்
தீர ஈசா—வகை செய்யும்
காரும் இறைவா, பூ மாதை.

"Grow more food" Song.

சகாணு or ஆனந்த பைரவி—ஆதி.

(பல்லவி)

போரிழைத்ததுயரம் தீர—போனகமளி கற்ப
தாருவே உதவி செய்வீர்.

(அனு பல்லவி.)

போரினுல் உணவுடை கிடைப்பதும் அரிதாச்சு
பூலோகத்தவர் எல்லாம் பசியால் வாடலுமாச்சு—(போ).

(சரணங்கள்.)

1. உலகுக் குணவளித்த தேசம் எதிரி கொண்டான்
அங்குள்ளோர் பயந்தோடி எண்ணிலர் வந்தடைந்தார்
அவருக்கும் உணவுக்கு நமை எதிர் பார்ப்பவருக்கும்
ஆகாரம் அளிப்பது நமது கடமையாச்சு—(போ).

2. நிலந்தனைத் தரிசாகப் போடாதீர் நஞ்சை புஞ்சை
தோட்டந் துரவு எங்கும் நெல் சோளம் தினை கம்பு
துவரை பயறுளுந்து காய்கறி வகைப் பயிர்
மிகவே விளையச் செய்வீர் பசிப்பிணி அகற்றுவீர்—(போ).

3. அயல் நாட்டு வாணிபம் அறவே சண்டையினுலே
நின்றது அந்நாட்டுக் கேற்றுமதி முன்செய்த
பருத்தி கடலைப்பயிர் செய்வதைக் குறைத்தங்கே
ஆகாரப் பொருள் மிகப் பயிர்செய்து மிடிதீரும்—(போ).

4. புலந்தனில் விளைந்ததை வேணுமென்றகத்தனில்
பூட்டாதீர் மொத்தமாய் வணிகர்க்கும் வில்லாதீர்
ஏழை எளியவர்கள் நன்மையை நாடிநீர்
அதிகாரிகள் சொல்லும் விலைக்கே நீர் விற்றிடுவீர்—(போ).

5. பணமே நம் உயிரென்று பணத்தைப் பெருக்க எண்ணி
விளைந்ததை வெகு கிராக்கி விலைக்கு நீர் விற்காதீர்
விற்றுல் அதனுல் வரும் செல்வம் நொடியில் ரவி
முன் பனிபோலாகும் மிடிக்கதுமிடமாகும்—(போ).

6. நாடெங்கும் வாழ்ந்திடக் கேடொன்றுமிலை யென்ற
ஔவையார் முதுமொழி தன்னை நீர் மறவாமல்
ஆண்டவா எமையாளும் ஆங்கிலர்படை வெற்றி
அடைய அருள்புரிவீர் என்று இறைஞ்சிடுவீர்—(போ).

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—6-10-43.

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ அக்டோபர் ௴ 9௳ [ந. 167

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

பிரஸங்கம் CLXVII.

இந்தியாவிலுள்ள பிரிடிஷ் விமானப்படையின் நடவடிக்கைகள்.

பருவகாலத்தில் நடமாட்டம். அதன் திறமை வெளிப்படுகிறது.

(விங் கமாண்டர் L. V. பிரேஸர்).

பருவகாலம் முடிவடையும்பொழுது இந்தியாவிலுள்ள பிரிடிஷ் விமானப்படை பர்மாவிலுள்ள ஜப்பானியர்களைத் தாக்கும் நடவடிக்கைகளை அதிகப்படுத்த ஆரம்பித்துவிடும். இப்பொழுது அதிகமான நடவடிக்கை ஆரம்பிப்பதிலிருந்து சென்ற சில மாதங்களில் பிரிடிஷ் விமானப்படை சும்மாவிருந்துவிட்டது என்று பொருள்படாது. சென்ற பருவகாலத்தின் முடிவுக்குப்பின் பிரிடிஷ் விமானப்படைகள் மகத்தான வேலைகளைச் செய்திருக்கின்றன. அவைகளுக்கு இரண்டு முக்கியமான லக்ஷியங்களிருந்தன. இந்தியாவைத் தாக்குவதற்காக பர்மாவிலுள்ள தளங்களை ஜப்பானியர் உபயோகிக்காமல் தடுத்துவிடுவது ஒன்று. பர்மாவிலுள்ள ஐச்வர்யங்களைப் பயன்படுத்தி ஜப்பான் தன்னுடைய யுத்த முயற்சிகளை பலப்படுத்திக் கொள்ளாமல் தடுப்பது மற்றொன்று. இவ்விரண்டு லக்ஷியங்களும் அமெரிக்க 10-வது விமானப்படையின் ஒத்தாசையுடன் பூர்த்தி செய்யப்பட்டன. இதைவினா அரக்கான் யுத்தத்தில் தரைப்படைக்கு ஒத்தாசை செய்வதிலும் அவைகள் ஈடுபட்டிருக்கின்றன. மாரி காலம் துவங்கினபொழுது ஜப்பானியர்கள் வங்காளத்திலுள்ள பெரிய நகரங்களை இரவில் வெடிகுண்டுகளால் தாக்கினார்கள். கிருஸ்துமஸ் வாரத்தில் கல்கத்தாவில் 5 தடவை குண்டுகள் வீசப்பட்டன. ஒரு இரவில் குண்டு வீசிய விமானங்களின் உயர்தர சங்கியை 8 ஆகயிருந்தது. தளவாடங்களின் நஷ்டம் சொல்பம்தான். அவைகள் மறுபடியும் ஜனவரி மாதம் 15-ம் தேதியன்று திரும்பவும் தாக்கின. எதிரி விமானங்கள் எல்லாவற்றையும் நேசதேச இரவுச் சண்டை விமானங்கள் ஐந்து நிமிஷங்களுக்குள்ளாக அழித்துவிட்டன. ஜனவரி மாதம் 20-ம் தேதியன்று தாக்கிய எதிரியின் நான்கு விமானங்களில் இரண்டு நாசமடைந்தன. மற்றொரு விமானம் பழுதாக்கப்பட்டது. அதன் பிறகு ஜப்பானியர்கள் மறுபடியும் அங்கு வரவில்லை. அதன்பின் இந்தியாவில் ஏற்பட்ட நடவடிக்கைகள் யுத்த பிராந்தியத்திலுள்ள விமானங்களைத் தாக்கியதுதான், இந்தியாவில் தாக்குதல் ஏற்படாதபடி காபந்துகள் செய்யப்பட்டுவிட்டன.

இதற்கு உதவியாக நேசதேச நடுத்தர வெடி விமானங்களும், கனமான வெடி விமானங்களும் இரவு பகலாக எதிரியின் விமானக்கூட்டங்களைத் தாக்கி முற்போக்கான தளங்களிலிருந்த ஜப்பானிய வெடிகுண்டு வீசும் விமானங்களைத் துரத்தியடித்துவிட்டன. ஆகையினால் மாக்வி என்னும் தளம் இந்தியாவுக்கு சமீபத்திலுள்ளது, மிகவும் முக்கியமானது, அக்யாபிலும், ரெங்கூனிலுமுள்ள கப்பல் கட்டுமிடங்கள் தினந்தோறும் தாக்கப்பட்டன. அமெரிக்

கர்கள்தான் பெரும்பாலும் அக்யாப்பைத் தாக்கினார்கள். இவ்விதமாக இந்தியாவை கடல் மூலமாக ரகசியமாகத் தாக்கமுடியாதபடி நேசதேச விமானப்படை தலைவர்கள் செய்து விட்டார்கள்.

நாலு மாதத்திய நடவடிக்கை.

எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களை இடைவிடாது தாக்கி, பிரிடிஷ் விமானப் படையும், அமெரிக்க விமானப்படையும் பர்மாவுக்குள் ஜப்பானியர்கள் அதிக தளவாடங்களை கொண்டுவர முடியாதபடி செய்துவிட்டன. அங்கிருந்து வெளியே அதிக சாமான்களைக் கொண்டுபோக முடியாமலும் அவைகள் நிச்சயமாய்ச் செய்துவிட்டன. பர்மாவைக் காலி செய்வதற்குமுன் நாம் அழித்த எண்ணெய் கிணறுகளையும், எண்ணெய் சுத்திகரிக்கும் ஸ்தாபனங்களையும் நமது விமானங்கள் வெடி குண்டுகளால் அழித்து வருகின்றன.

பருவகாலத்திலும் அதன் பின்னும் இருப்புப்பாதைகளும், நதிகளில் செல்லும் நீராவிக் கப்பல்களும், சாமான் படகுகளும், மோட்டார் படகுகளும், இதர சாமான் ஏற்றிச்செல்லும் சாதனங்களும் இரக்கமன்னியில் தாக்கப்படுகின்றன. ஆகஸ்டு மாதம்முடிய போபைடர்களும், ஹரிகேன் விமானங்களும் 1,620 சாமான் படகுகளையும், 43 நீராவிக் கப்பல்களையும் படகுகளையும், 683 இதர கலங்களையும், 45 ரெயில்வே இன்ஜின்களையும், 510 சாமான் வண்டிகளையும், 125 துருப்புபேற்றிச் செல்லும் வண்டிகளையும், 18 தொழிற்சாலைகளையும் நிர்மூலமாக்கியிருக்கின்றன.

மே மாதத்தின் மத்தியில் அரக்கானில் ஜப்பானிய முன்னேற்றம் முடிவடைந்தபொழுது எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களின் உயர்ந்த பரிமாணம் ஏற்பட்டபொழுதும் பிரிடிஷ் விமானப்படையும், அமெரிக்க விமானப்படையும் எதிரியின் போக்குவரத்து மார்க்கங்களை இரவு பகலாக, மூன்று நாட்கள் வரையில் தாக்கின. இதற்குள்ளாக ஜப்பானிய விமானப் படைகள் பின்வாங்கிவிட்டன. நமது விமானங்களுக்கு எதிர்ப்பே கிடையாது. மூன்று நாட்களுக்குள் 53 துருப்பேறிச் செல்லும் வண்டிகள் நாசமடைந்தன, அல்லது பழுது பட்டன. 15 படகுகளும், 15 நீராவிக் கப்பல்களும், 200-க்கு மேல்பட்ட சாமான் படகுகளும் நாசமடைந்தன, அல்லது பழுதுபட்டன. காலந்தப்பி ஜப்பானியர்கள் தாய்லாந்திலிருந்தும் பர்மாவின் தூரப்பிரதேசங்களிலிருந்தும் வெடிகுண்டு வீசும் விமானங்களையும், சண்டை விமானங்களையும் கொண்டுவந்தார்கள். வேவு பார்க்கும் விமானங்கள் அவைகளை வழிமறித்து விட்டன. நேசதேசத்தார் விமான நடவடிக்கையை நிறுத்திவிட்டு ஜப்பானியர் வசம் சிக்கிக்கொள்ளவில்லை. ஜப்பானியச் சண்டை விமானங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை. வெடி விமானங்கள் பழிவாங்கும் முறையில் சிட்டகாங் விமானக்கூடத்தைத் தாக்கின. விமானங்கள் நாசமாகிவிட்டன, 6 விமானங்கள் பழுதுபட்டன. மே மாதம் 29-ம் தேதி சிட்டகாங் விமானக் கூடம் மறுமுறை தாக்கப்பட்டது. இந்த நடவடிக்கையில் ஜப்பானியர்கள் 6 விமானங்களை இழந்தனர். இரண்டு விமானங்கள் நாசமாகியிருக்கக்கூடும். மூன்று விமானங்கள் பழுதுபட்டன.

பருவகாலத்தில் நடவடிக்கை.

இத்துடன் எதிரியின் விமான நடவடிக்கை ஓய்ந்துவிட்டது. ஆகிலும், பிரிடிஷ் விமானப்படை பர்மாவிலுள்ள எதிரியின் ரஸ்தாக்களையும், நதி மார்க்கங்களையும், இருப்புப் பாதைகளையும், பருவ காலம் பூராவிலும் நொருக்கி வந்தன. முக்கியமாக போபைடர்களும், ஹரிக்கேன் விமானங்களும் எதிரிக்கு ஓய்வு கொடுக்கவில்லை. வெஞ்சன்ஸ் பருந்துப் பாய்ச்சல் விமானங்கள் குறிதவருமல் ஜப்பானியத் துருப்புகள் பேரில் குண்டுகளைப் பொழிந்தன. காடடர்ந்த இந்தப் பிராந்தியத்தில் இந்த விமானங்கள் தான் குறிதப் பாமலும், பலமாகவும், விமான நடவடிக்கை செய்யக்கூடியவை. மே மாதம் 13-ம் தேதியன்று நடவடிக்கை ஆரம்பித்து வெஞ்சன்ஸ் பருந்துப்பாய்ச்சல் விமானங்கள் 300 தடவை பாய்ந்து சென்றிருக்கின்றன. ஒரு விமானம்கூட நஷ்டமாகவில்லை. அக்யாப்பில் ஒரு கட்டடத்தைத் தாக்கியபின் ஒரு விமானி பின்வருமாறு சொன்னான்: "நான் கீழேபாய்ந்து சென்று தீக்கிரையாகி நொருங்கிக் கொண்டிருக்கும்வீட்டின் வழியாகச் சென்றேன்".

யுத்த நடவடிக்கையிலும் அணி வகுப்புச் செய்வதிலும், பிரிடிஷ் விமானப்படையும், அமெரிக்க விமானப்படையும் சிறந்தவை என்று ருஜுவாகிவிட்டது. இந்தியாவின் எல்லைச் சரகங்களிலும், அரக்கான் போர்முனையிலும் நேசதேச விமானங்களின் ஆதிக்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ரெங்கூன் வரையிலும், வடக்கு பர்மாவிலும் அவைகள் விமானத் தாக்குதல்கள் செய்தன. சென்ற பருவகாலத்துக்குப்பின் ஜப்பானியர்கள் 107 விமானங்களை இழந்தனர். இன்னும் அநேகம் பழுதுபட்டிருக்கும். ஆகையால், அவைகள் தளங்களுக்குச் சென்றிருக்க முடியாது. இந்த நடவடிக்கைகளில் பிரிடிஷ் விமானப்படைக்கு 95 விமானங்கள் நஷ்டம். 18 விமானங்களின் விமானிகள் பத்திரமாய் வந்து சேர்ந்தார்கள்.

இந்த யுத்த முனையில் தரையிலிருக்கும் துருப்புகளுக்கு பிரிடிஷ் சாமான் ஏற்றிச் செல்லும் விமானப்படைகள் வெற்றிகரமாகச் சாமான்களை வழங்கியிருப்பதுதான் நூதன

மான நடவடிக்கையாகும். இந்த யுத்த முறையை ஒரு படைப்பகுதி விசேஷமாகக் கையாண்டு வந்திருக்கிறது. ஜனவரி மாதத்தில் 190 டன்கள் எடைமானமுள்ள சாமான்கள் அனுப்பப் பட்டன. அது கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து ஜுலை மாதத்தில் 760 டன்களுக்கு அதிகரித்தது. சாமான்கள் உள்நாட்டிலுள்ள மலை வாசிகளுக்கும் வின்கேட்டும் அவரைச் சேர்ந்தவர்களும் நடவடிக்கை செய்ததுபோன்ற தனிப்பட்ட தரைப்படைகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டன.

முன்னணி வரிசைகளுக்குப்பின் விமானக்கூடங்களும், அவைகளைப் பரிபாலிக்கும் படைகளும் எதிரியின் லக்ஷியத்துக்கப்பால் ஏராளமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. தென் இந்தியாவில் வைக்கப்பட்டு முஸ்தீப்புகள் அமைக்கப்பட்டுவரும் பிரெஞ்சு விமானப்படைகள் போர்புரிய ஆவலுடனிருந்து வருகிறார்கள். பர்மாவில் வெகுதூரத்திலிருக்கும் பிரதேசங் களையும், தாயிலாந்தையும் வெடி விமானங்களால் தாக்குவதற்கு நாம் தயாராகயிருக்கிறோம். இந்தியாவுக்கு வெஞ்சன்ஸ் விமானங்களும், இதர சண்டை விமானங்களும், வெடி விமானங் களும் வந்த வண்ணமாக இருக்கின்றன. செப்டம்பர் மாதம் 15-ம் தேதியன்று விமானப் படை உயர்தர மார்ஷல் ஸர் ரிச்சர்ட் பியர்ஸ் "தீரத்துடன் முன் செல்லுங்கள்" என்று விமானிகளுக்கு உத்தரவிட்டார். பருவகாலம் பூராவிலும் அவர்கள் விமான நடவடிக்கை செய்திருக்கிறார்கள். இப்பொழுது வெஞ்சன்ஸ் விமானங்களுடன் அவர்கள் நடவடிக்கையை அதிகரித்து விடுவார்கள்.

வார யுத்தச் செய்திகள்.

(A)—முக்கியமான சம்பவங்கள்.

30—9—43 (வியாழக்கிழமை).	நேசநாடுகள் இதாலியிலுள்ள நேபிள்ஸைப் பிடித்தனர்.
	ருஷ்யர்கள் கிரிசெவைப் பிடித்தனர்.
1—10—43 (வெள்ளிக்கிழமை).	வடஆபிரிக்க தளத்திலுள்ள விமானங்கள் தெற்கு ஜெர்மனியிலுள்ள மூனிச்சையும் ஆஸ்திரியாவில் வியன்னாவுக்குச் சமீபத்திலுள்ள வீனர் நியூஸ்டாட்டையும் பலமாகத் தாக்கின.
2—10—43 (சனிக்கிழமை).	நேசதேசத்தார்கள் நியூகினியாவிலுள்ள பின்ஷாபனைப் பிடித்தனர்.
	பிரிடிஷ் 8-ம் படை இதாலியுள்ள ஸான்ஸாவெரோவையும், லூஸராவையும் கைப்பற்றினர்.
3—10—43 (ஞாயிற்றுக்கிழமை).	ஜெர்மானியர்கள் ருஷ்யாவிலுள்ள டாமன் தீபகற்பத்தைக் காலி செய்தனர்.
	நேசநாடுகள் இதாலியில் பெனிவெண்டோவைப் பிடித்தனர்.
	ஜெர்மனியிலுள்ள காஸ்ஸலும், பிரான்க்பர்ட்டும் குண்டு வீச்சுக்குட்பட்டன.
4—10—43 (திங்கட்கிழமை).	தேக அசௌக்யம் காரணமாக பதவியிலிருந்து விலகிக்கொண்ட ஸர் டட்லி பௌண்டுக்குப் பதிலாக ஸர் ஆண்ட்ரு கன்னிங்காம் முதல் கடற்தளபதியானார்.
	பிரிடிஷ் 8-ம் படை ஏட்ரியாடிக் கடற்கரையில் புதிதாகத் துருப்புகளையிறக்கி டெர்பாலி என்ற இடத்தைப் பிடித்தனர்.
	ஜெர்மானியர்கள் மத்தியதரைக்கடலிலுள்ள கார்ஸீகாவைக் காலி செய்தனர்.
5—10—43 (செவ்வாய்க்கிழமை).	ஆலோசனை செய்வதற்காக பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் இங்கிலாந்துக்கு விஜயம் செய்திருக்கிறார்.
	அமெரிக்க யுத்தக் கப்பல்கள் பஸிபிக்கிலுள்ள வேக்தீவின்பேரில் குண்டுகளைப்பொழிந்தனர்.
6—10—43 (புதன்கிழமை).	இதாலியில் நேசநேசத் துருப்புகள் வால்டர்னோ நதியைத்தாண்டின.

செய்தி திரட்டுச் சுருக்கம்.

இதாலி.—நேபிள்ஸ் ஸெப்டம்பர் 30-ம் தேதி விழுந்தது. ஜெர்மானியர்கள் நகரத்தையும், துறைமுகத்தையும் அழித்துவிட்டனர். நகரத்தைச் சுற்றிலுமுள்ள ஜெர்மன் தற்காப்புகளை ஆறு நாட்களாக 5-ம் படை தகர்த்தது. நேபிள்ஸ் சமவெளிக்கும், ஸாலர்னோ வளைகுடாவுக்கும் மத்தியிலுள்ள காடடர்ந்த மலைகளில் மிகவும் கோரமான யுத்தங்கள் நடைபெற்றன.

நேபிள்ஸைப் பிடித்தற்குமுன் 5-ம் படை கீழ்கண்ட இடங்களைப் பிடித்தது. ஸான் ஏஞ்சலோ, (நேபிள்ஸுக்குக் கிழக்கில்), பாம்பி (வெசூவியஸ் மலை அடிவாரத்தில்), ஆஸெர்னோ, நோஸெரா, 8-ம் படை ஏட்ரிடிக் கடல் ஓரத்திலுள்ள ஸாப்போநெடுவைப் பிடித்தது.

நேபிள்ஸைப் பிடித்துவிட்டு 5-ம் படை பின்னும் முன்னேறி ஸான்ஸெவெரினோ ஆவெல்லினோ, டாரி அனன்சியாடா, பெனிவெண்டோ, பிரிகெண்டோ, வல்லாடா, கிரோட்டா, மினோர்டா, மோட்டா, மாண்டிமில்லேடோ, பொமிக்ளியானோ, டார்கோ, காபொடிகினோ, ஆவெர்ஸா, மாடலொனி முதலிய இடங்களைப் பிடித்தது. க்ாலரி நதியையும், வால்டர்னோவையும் அது தாண்டிவிட்டது.

8-ம் படை பாக்கியாவிலிருந்து ரோமை நோக்கி முன்னேறி ஸான் ஸாவரோவையும், லூஸராவையும் பிடித்தது. ஒரே தாண்டலாகத் தாண்டி ஏட்ரியாடிக் கடற்கரையிலுள்ள டெர்மாலியில் புதிதாகப் படைகளையும் இறக்கிவிட்டது. பிபெர்னோ நதிக்கரையில் டெர்மாலிக்கு மெற்கே கோரமான யுத்தம் நடைபெறுகிறது.

காலரி நதியை 5-ம் படை தாண்டியதும், டெர்மாலியை எட்டாம் படை பிடித்ததும், ரோமை நோக்கிப் பின்வாங்கிவரும் ஜெர்மன் துருப்புக்களை வளைத்துக் கொள்ளும் நேசதேசக் கிடுக்கியின் இருகரங்களாகும். கார்ஸிகாவிலுள்ள பாஸ்டியா விழுந்துவிட்டது. கார்ஸிகா யுத்தம் அநேகமாக முடிந்துவிட்டது.

ஜெர்மானியர்கள் கார்பூ தீவிலும், டோடிகானிஸ் தீவிலுள்ள காஸ், லேராஸ் தீவிலும் இறங்கி விட்டனர். இதாலியைச் சேர்ந்த மூன்று மாகாணங்கள் ஜெர்மனியுடன் சேர்க்கப்பட்டன. குரோஸியர்கள், லஸ்ஸின் தீவைப்பிடித்தனர்.

ருஷ்யா.—நீபர் நதியின் கிழக்குக் கரையிலுள்ள பாக்கியுள்ள ஜெர்மன் முக்கிய ஸ்தானமான கிரெமென்சங்க் ஸெப்டம்பர் மாதம் 29-ம் தேதி விழுந்தது. டாமன் தீபகற்பத்தில் ஸ்டாரோ டிரோராவ்ஸ்கோவும், கிராஸ்னயா ஸ்டிரெலாவும், வாஸ் டோஜ்ரெனியும், டாமனும் பிடிபட்டன.

கடுமையான கால நிலையிலும் செம்படை, ஓர்ஷா, மோகிலெவ், கோமல், ஜெர்மானியர்கள் நீபர் நதிக்கரையில் நிலைத்து நிற்க முயன்றும் ருஷ்யர்களின் முன்னேற்றம் ஓயவில்லை. வைடெப்ஸ்க் முதலிய இடங்களை நோக்கி முன்னேறுகிறது.

ஜெர்மனி பேரில் விமான நடவடிக்கை.—இந்த வாரத்தில் கீழ்கண்ட பிரதேசங்களின் பேரில் குண்டுகள் வீசப்பட்டன. போகம், ஹேகன், மூனிக், வீனர் நியூஸ்டாட், எம்டன், காஸல், பிராங்க்பர்ட், ஹனோவர். போகம் ரூர் பிரதேசத்தின் நிலக்கரிச் சுரங்கங்களுக்கு மத்திய நிலயம். மூனிக்கில்தான் நாஸிகளின் மதாலயமிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் 4,000 ராத்தல் எடைமானமுள்ள பெரிய வெடிகுண்டுகள் 25 நிமிஷங்கள் நேரங்கள் வரையில் பொழியப்பட்டன. ஜெர்மன் சண்டை விமானங்கள் மூனிக்குப் போகும் வழியில் 150 மைலுக்கப்பாலில் எதிர்த்தன. அக்னி ஜ்வாலைகள் 200 மைலகளுக்கப்பால் புலப்பட்டன. வியன்னுவுக்கு சமீபத்திலுள்ள வீனர் ந்யூஸ்டாட் என்னுமிடத்தில் ஜெர்மன் விமானக் கூடுகள் தயாரிக்கப்படுகின்றன. எம்டனில் பெரிய யூ படகு தளமிருக்கிறது. கெஸ்ஸலில் ரயில்வே எஞ்ஜின்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஹேகனில் உலோக உற்பத்திசாலையிருக்கிறது. ஹனோவரில் ரப்பர் உற்பத்திசாலையும் ரோமத்தை சிணுக்குவாரும் சாதனங்களுமிருக்கின்றன.

பஸிபிக் யுத்தம்.—பின்ஷாபன் அக்டோபர் 2-ம் தேதி பிடிபட்டது. அதைப் பிடிக்குமுன் காருகாக்கில் பலமான குண்டுவீச்சேற்பட்டது. ஆஸ்திரேலியர்கள் மாடாங்கு, வேவாக்கை நோக்கி முன்னேறி வருகிறார்கள். ஸாலமன்ஸ் தீவுக்கூட்டத்தில் கொலம்பரகாராத் தீவிலுள்ள விலாவை ஜப்பானியர்கள் காலிசெய்து வருகிறார்கள். நேசதேச யுத்தக் கப்பல்கள் பின்வாங்கி வரும் துருப்புகளின் பேரில் குண்டுகளைப் பிரயோகித்தனர். எதிரியின் ஒரு பீரங்கிப் படகும், 40 துருப்புகள் செல்லும் படகுகளும் மூழ்கிவிட்டன.

சைனு.—மேற்கு சைகியாங்கிலும், தெற்கு கியாங்க்ஸூவிலும், ஆண்வெய் மாகாணத்திலும் பலமான யுத்தம் நடைபெறுகிறது. நாங்கிங்குக்கு தென்கிழக்கிலுள்ள போக்குவரவு

மார்க்கங்களின் மத்தியஸ்தலமும் தெற்கு ஆண்வேயிலுமுள்ள கிவான்ஸ்டேயுக்குள் ஜப்பானியர்கள் ஊடுறுவிச் சென்றன. கோரமான தெருச் சண்டை நடைபெறுகிறது.

சைனாவிலுள்ள அமெரிக்க விமானப்படைகள் இந்தோ—சைனாவிலுள்ள ஹைபாங்கைத் தாக்கின.

பர்மா.—இங்கு நடைபெற்ற விமான நடவடிக்கை விபரங்கள் அடுத்த பகுதியில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

கடல் யுத்தம்.—பிரிடிஷ் கடற்படையும், அமெரிக்க விமானந்தாங்கிச்செல்லும் கப்பலும் இதர அமெரிக்க யுத்தக் கப்பல்களும் அக்டோபர் 4-ம் தேதியன்று நார்வேக்குச் சமீபத்தில் பொடோ பிராந்தியத்தில் கடல் சண்டையில் ஈடுபட்டன. எதிரியின் சாமான் கப்பல்களின் பேரில் குண்டுகள் நேராக விழுந்தன. 8,000 டன்கள் எடைமானமுள்ள ஒரு எண்ணெய்க் கப்பலும் அடிபட்டது.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

27—9—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—(அமெரிக்க விமானங்களால் 14 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 7 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

துறைமுக ஸ்தாபனங்கள்.-எம்டன் (Emden).

ரயில்வே ஸ்தலங்கள்.—ரோவன் ஹாட்டிவில்லி (Roven Hottiville).

விமான நிலயங்கள்.—அப்டிவைட்லி டிரகாட் (Abdevidle Drucat).

(ராயல் விமானப்படை, நேசதேசச் சண்டையிடும் விமானங்கள் வேவு பார்த்தன).

இரவு.—(ராயல் விமானப்படைத் தாக்குதல்கள்.) (39 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

தொழிற்சாலை லக்ஷியங்கள்.—ஹனேவர் (Hanover), பிரன்ஸ்விக் (Brunswick), எம்டன் (Emden).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயங்கள்.-வெட்டர்போ (Viterbo), லகோடி (Lagodi), பிராக்கியானே (Bracciano).

துருப்பு ஸ்தாபனங்கள், ரயில்வேக்கள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களில்.

விமான நிலயம்.—கிரீட் (Crete).

ருஷ்யா (Russia).

(71 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் துருப்புகள், பீரங்கி ஸ்தாபனங்கள்.—நியூ கினியிலுள்ள பின்ஷாபனிலும் (Finschhafen) பின்ஷாபனைச் சுற்றிலும்.

பர்மா (Burma).

ரயில்வே தளங்கள்.—பியாப்வி (Pyawbwe), கியார்ஸ (Kyaurse).

சிறிய துறைமுகங்கள் :—அக்யாப் (Akyab).

28—9—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரஸ்தா, நதிப் போக்குவரத்துகள்.—நேபிள்ஸ் பிரதேசத்தில் பின்வாங்கும் ஜெர்மன் சைனியங்களுக்குப் பின்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் **தரைமீதுள்ள விமானங்களும்.**—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவிலும்.

தூரக்கிழக்கு (Far East).

கப்பல்கள், துறைமுகங்கள், விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak). (7 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 29 படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. 64 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

பர்மா (Burma).

படகுகள்.—சிண்ட்வின் (Chindwin), ஐராவதி (Irrawaddy) நதிகள், மாக்வி (Magwe).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—டாங்தா (Taungtha).

29—9—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—(ராயல் விமானப்படையால் தாக்குதல்).

தொழிற்சாலைப் பிரதேசம்.-ஜெர்மனியிலுள்ள போக்கம் (Bochum).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில். (1 எதிரி விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

படகுகள், **ரஸ்தா சந்திப்புகள்.**—கான்ஸெல்லோ (Cancello), பியானே (Piano), அமோரோஸி (Amorosi).

பாலம்.—அப்போல்லினாரி (Appollinari).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஸப்ளைக் குவியல்கள் ஸ்தாபனங்கள்.—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak) பிரதேசம்.

எதிரிப் படகுகள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள காய்ஸ்வெல் (Choisevl).

கப்பற்கட்டுந் துறைகள்.—கிஸோ (Gizo).

பர்மா (Burma).

(அமெரிக்க விமானப்படையால் தாக்குதல்கள்).

களஞ்சியப் பிரதேசம்.—மாகாக் (Magok).

ரயில் ரோட் தளம்.-டான்டாபின் (Tantabin).

ரயில் ஸ்தலம்.—ஙாபாயின் (Ngapayin).

சேமிப்புகள், வழிகள்.—ஈ யூ (Ye-U).

கப்பற்கட்டுந்துறைகள்.—அக்யாப் (Akyab), பாஸ்ஸின் (Bassein).

(ராயல் விமானப்படையால் தாக்குதல்கள்).

சேனைக் குடிசைகள்.—பூதிடாங் (Buthidaung).

ஜப்பானியச் சைனியங்கள்.—மாங்டா (Maungdaw) விற்கு கிழக்கு.

மாலேய்க் (Mawlaik).

ஜப்பானிய போக்குவரத்துகள்—ஈயு (Ye U) விற்குத் தெற்கிலே.

படகுகள்—மூ (Mu) நதி.

ரயில்வேப்பாலம்—சியாந்தா (Chiantha).

30—9—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

படகுகள் ரஸ்தாக்கள்.—காபா (Capua). பெனிவெண்டோ (Benevento), பியானோ (Piano), காஸ்டெல்வெனெர் (Castelvener).

ரயில் ரஸ்தா சந்திப்புகள்.—பார்மியா (Formia).

ருஷ்யா (Russia).

(59 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய லக்ஷியங்கள்—ஸாலமன்ஸிலுள்ள பொகெய்ன்வில்லி (Bougainville) யிலிருந்து டச்சு கிழக்கு இந்தியத் தீவிலுள்ள ஸெலபஸ் (Celebes) வரை.

விமான நிலயம்.-ஸாலமன்ஸிலுள்ள காஹிலி (Kahili). (12 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

(அமெரிக்க விமானங்களால் தாக்குதல்).

ராணுவ நிலயங்கள்.—பகாக்கு (Pakokku).

ரயில் ரோட் தளங்கள்.—தாழி (Thazi).

1—10—43. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானத் தொழிற்சாலைகள்—ஜெர்மனியிலுள்ள வெய்னர் (Weiner) நியூஸ்டாட் (Neustadt).

மியூனிச் (Munich).

இரவு.—யூ-படகு தொழிற்சாலை—ஜெர்மனியிலுள்ள ஹாகன் (Hagen).

யூ-படகு தளம்—ஜெர்மனியிலுள்ள எம்டன் (Emden).

விமான நிலயம்.-செயிண்ட் ஓமர் (St. Omer).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

(11 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 14 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை.)

பாண்டூன் பாலங்கள்.—கிராஸ்ஸானிஸ் (Grazzanise).

கடற்கரை ரஸ்தாக்கள்.-பார்மியா (Formia).

ருஷ்யா (Russia).

(51 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள் ஜப்பானியச் சைனியங்கள்.-மடாங் (Madang), வீவாக் (Wewak).

பர்மா (Burma).

கட்டடங்கள்.—பாஸ்ஸின் (Bassein).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நாம்தி (Namti).

2—10—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—(ராயல் விமானப்படைத் தாக்குதல்கள்).

ஜெர்மனியிலுள்ள மியூனிச் (Munich).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இலக்குகள்.—ஜெர்மனியிலுள்ள ரூர் (Ruhr), ரைன்லாந்து (Rhineland).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரிப் போக்குவரத்துகள்.—ஐஸெர்னியா காம்போபாஸோ (Isernia-Campobasso) பிரதேசங்கள்.

ரஸ்தாக்கள், பாலங்கள்.—இதாலியிலுள்ள ஜெர்மன் சைனியங்களுக்குப்பின்.

ருஷ்யா (Russia).

(42 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—நியூ கினியிலுள்ள மடாங் (Madang), வீவாக் (Wewak).

பர்மா (Burma).

அமெரிக்க விமானத் தாக்குதல்கள்.—களஞ்சியங்கள்—முனிவா (Monywa).

சேமிப்புக் கட்டடங்கள்.—அலான் (Alon).

ஜப்பானியக் கப்பல்கள்.-மிங்கன் (Myingun).

ஜப்பானியச் சைனியங்கள்.—நாட்சங் (Natchaung).
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—டாங்குப் (Taungup).

3—10—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—(24 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன). (ராயல் விமானத்தாக்குதல்கள்).
தளவாடங்கள், இஞ்ஜினியரிங் ஸ்தலங்கள்.—ஜெர்மனியிலுள்ள காஸ்ஸல் (Cassel).
லக்ஷியங்கள்.—ஹனோவர் (Honover), ரைன்லாந்து (Rhineland).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

துருப்புகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமித்துவைக்குமிடங்கள் மோட்டார் போக்குவரத்துகள்.—எதிரி அரண்களுக்குப் பின்.
இசேர்னியா (Isernia).
துருப்புகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—சிவிடாவெச்சியா (Civitavecchia).
ரயில்வே பாலம்.—கபா (Capua).

ருஷ்யா (Russia).

(53 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன.)
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—காரில்லி (Garilli) கிராமம்.
விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).
காரோவ் (Garove) தீவுகள்.
ரூக் (Rooke) தீவுகள்.
ஜப்பானியச் சைனியங்கள்.—அம்பாய்னு (Amboina).

பர்மா (Burma).

ரயில்வே தளங்கள்.—சாகெய்ங் (Sagaing).
ரஸ்தாக்கள் சேமிப்புகள்.—பர்மா (Burma).
ரயில்வே தளங்கள்.—நாம்தி (Namti).
ஜப்பானியர் ஆக்கிரமித்த கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்.

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

28—9—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

மத்தியதரைக்கடல் (Mediterranean).

தீவுகள்.—காஸ் (Cos), லெரெஸ் (Leros).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—கோமல் (Gomel) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஆஸ்திரேலியாவிலுள்ள டிரெஸ்டேல் மிஷின் (Drysdale Mission).

29—9—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.—வொய்ட் ருஷ்யா (White Russia).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

30—9—43. (வியாழக்கிழமை.)

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda), ஸாலமன்ஸிலுள்ள வெல்லா லவெல்லா (Vella Lavella).

1—10—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.—டினிப்பரின் (Dnieper) கீழக்கரை.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

2—10—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் (London) பிரதேசம். (விமான எச்சரிக்கை மட்டும்).

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—வெல்லா லவெல்லா (Vella Lavella).

3—10—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

4—10—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), தெற்கு இங்கிலாந்து (South England). (1 எதிரி விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

மத்தியதரைக்கடல் (Mediterranean).

தீவு காஸ (Cos).

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

எதிர்காலப் போர். நாம் பூர்ணமான யுத்தத்திலீடுபட்டிருக்கிறோம். நாம் பிழைத்திருக்கப் போர் புரிகிறோம். 1940-ம் வருஷத்திலும், அல்லது நாம் தன்னந்தனியே நின்ற வருஷத்திலும் இருந்ததுபோல இப்பொழுது அபாயம் சமீபத்திலில்லையென்றாலும் தேசிய யுத்த முயற்சியில் குறைவு ஏற்படும் படியாகவும், அதன் வேகமும், ஆர்வமும் குறைந்துவிடும்படியாகவும். நமது ஒற்றுமை குன்றிவிடும்படியாகவும் நமக்குச் சோம்பேறித்தனம் வரும்படியாகவும் இந்த யுத்தத்தை நடத்தினாலும் இதேவிதமாக நேசதேசப் படைகள் நடந்துகொண்டாலும் அப்பொழுது முன்போல அவ்வளவு கோரமாக இல்லாவிட்டாலும் மிகுதியான கஷ்டங்களுக்கு நாம் உட்படவேண்டியதாகயிருக்கும்.

"யுத்தத்தின் வலுக்குறைந்து விடும், நமது ஸோல்ஜர்களுக்கு ஆயுதப் பெருக்கு உண்டாகவேண்டிய சமயத்தில் யுத்த தளவாடங்கள் குறைந்துவிடும்."

மேலே சொன்ன பிரகாரம் ஸெப்டம்பர் மாதம் 28-ம் தேதியன்று தொழிலாளர்கள் மகாநாட்டில் மிஸ்டர் சர்ச்சில் சொற்பொழிவாற்றினார். எல்லாப் பிராந்தியங்களிலும் நமக்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்து வருவதால் 'இறுதி வெற்றி தோன்றிவிட்டதென்ற அதிக நம்பிக்கை கூடாதென்றும் யுத்த முயற்சிகளில் தளர்ச்சி செய்யக்கூடாதென்றும் அவர்களுக்கு எச்சரிக்கை செய்தார்.

இது சரியான சமயத்தில் விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும். அக்டோபர் 3-ம் தேதியன்று மத்தியதரைக்கடல் பிரதேசத்துக்கு விஜயம் செய்த கர்னல் நாக்ஸும், ஆல்ஜியர்ஸிலிருந்து ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். "கிருஸ்துமஸுக்கு முன்பு யுத்தம் தீர்ந்துவிடுமென்று அனுமானிப்பது முற்றிலும் ஆதாரமற்றதாகும். ஐரோப்பியக்கோட்டை மீது தற்போது தான் போர் துவங்குகிறது" என்று அவர் சொன்னார்.

கோயபல்ஸும் உலக சரித்திரத்திலேயே யுத்தத்தின் பிற்பகுதியில் நிலைமை ஒரு நாளும் சுலபமானதாக ஆகியதில்லை என்று சொல்லியிருக்கிறான்.

ஸெப்டம்பர் மாதம் 21-ம் தேதி ஒலிபரப்பில் டோஜோவும் இதே அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறான். "யுத்த நிலைமை கோரமாகி வருகிறது. வெற்றி பெறவேண்டும் அல்லது உயிர் துறக்கவேண்டுமென்ற" அவன் சொல்லியிருக்கிறான்.

இந்தியா யுத்த தளமாகப் போவதால் இந்தியாவை யுத்தம் அணுகிவிட்டது. மவுண்டு பேட்டன் பிரபு இந்தியாவுக்கு வந்துவிட்டார். இப்பொழுது நாம் ஓய்வெடுத்துக்கொள்ளக் கூடாது. நம்முடைய யுத்த முயற்சிகளை இரட்டிக்கவேண்டும்.

வி வி வி வி வி

இதாலிய விஷயங்கள். இதாலிய மன்னரும், படோக்ளியோவும் பாரியில் தாத்காலிக நிர்வாகத்தை அமைத்திருக்கிறார்கள். இதாலியிலுள்ள ராஜ விசுவாஸிகளுக்கு தங்களுடைய கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கும் அவர்கள் செய்துகொண்ட வாக்குத் தத்தப்படிக்கும் மன்னருடன் சேர்ந்து எதிரியைத் தாக்கும்படிக்கு ஓரறிக்கையை மன்னர் விடுத்திருக்கிறார். சமாதான நடவடிக்கைகளில் படோக்ளியோ ஆர்வம் காட்டியிருப்பதை மதித்து இந்தப் புதிய நிர்வாகத்தை நேசநாடாக நேசதேசத்தார்கள் அங்கிகாரம் செய்துவிட்டார்கள். அது எவ்விதமிருப்பினும் நேசநாடுகளுக்கு அந்த நிர்வாகம் உபயோகமுள்ளதாகயிருக்கிறது. அது இல்லாதபோனால் ஆக்கிரமித்த நாடுகளை நேசநாட்டார்களே ஆட்சி புரிய வேண்டிவரும். இந்தப் புதிய நிர்வாகத்தில் ஸாவாய் அரச வம்சத்தாரிருப்பதால் அந்த நிர்வாகத்துக்கு சட்டபூர்வமான கௌரவமும் ஏற்பட்டிருக்கிறது. பொதுப்படையாகப் பார்க்குமளவில் இதாலியர்கள் யுத்தத்தை வெறுத்தாலும் ஏராளமான யுத்த முயற்சிகளைச் செய்ய சத்தியற்றவர்களாயிருப்பினும், முஸோலினியின் கோரிக்கைகளை எதிர்த்துப் பிரசாரம் செய்ய புதிய நிர்வாகம் கையாளாகயிருக்கக்கூடும். இது நேசதேசத்தாரின் யுத்த அவசிய தந்திரமென்றாலும் எதிர்பாராத சம்பவங்களில் கடுமையான நடவடிக்கைகளைக் கையாளுவதும் அவசியமாகும்.

வி வி வி வி வி

நேசதேச ராணுவ நிர்வாகம். நேசநாடுகள் கைப்பற்றிய இடங்களில் நேசதேச ராணுவ நிர்வாகம் அமைக்கப்படுகிறது. ஸிஸிலியைப்போல் இதாலியிலும் ஜனங்களுக்கு சௌகரித்தை ஏற்படுத்திவருகிறது. பிரிடிஷ் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய நிம்மதியான வேலையிலீடுபட்டு கலவரத்தை அடக்கி உதவியளித்து வருகிறார்கள்.

இதாலியர்களின் ஒத்துழைப்பு. ராணுவ ஒத்தாசை சம்பந்தமாக ஜெனரல் ஈஸன்ஹவர் மார்ஷல் படோக்ளியோவைக் கண்டு பேசினர். படோக்ளியோ திரட்டும் படைகள் எதிரியைத் துரத்தியடிப்பதற்குச் சக்தியற்றதாகயிருந்த போதிலும் அவைகள் இரண்டாம் பக்ஷமான வேலைகளைச் செய்வதற்கு உபயோகப்படும். போக்கு வரவு மார்க்கங்களையும், கப்பல் கட்டும் தளங்களையும் காபந்து செய்வதற்கும், ரஸ்தாக்களை அமைப்பதற்கும் அவைகள் பிரயோஜனமுள்ளவை.

இதாலியக் கடற்படையின் பெரும்பாகம் நேசதேசத் துறைமுகங்களுக்கு வந்து விட்டதால் அவைகளை நாம் உபயோகித்துக்கொள்ளலாம். நமக்குக் கப்பல்கள் கிடைத்து விட்டன. ஆகிலும், அவைகளை ஓட்டுவதற்கு மாலுமிகள் தயாரிப்பதுதான் கஷ்டம். காலக்கிரமத்தில் இதாலிய உத்தியோகஸ்தர்களும் வேலைக்காரர்களும் நம்முடன் சேர்ந்து ஒத்துழைக்கக்கூடும். அது இன்னும் நடைபெறவில்லை. பிரிடிஷ் கடற்படை, இதாலியக் கடற்படைக்கு ஆள்களை அனுப்ப முடியாது. ஆபீஸர்களும், வேலைக்காரர்களுமாக 70,000 பேர்கள் தேவைப்படும். அப்படி ஆள்களைத் திரட்டினாலும் இதாலிய முஸ்தீப்புகளைக் கையாளுவதில் அவர்களுக்கு முதலில் பயிற்சியளிக்க வேண்டியிருக்கும்.

முறிபட்டுப்போன அச்சுநாடுகளின் கோஷ்டியில் முஸோலினி இன்னமும் சேர்ந்து கொண்டிருக்கிறன். மறுபடியும், அதிகாரம் பெறுவதற்கும் ஆர்ப்பாட்டம் செய்து வருகிறன். மூன்று வல்லரசர்களின் ஒப்பந்தத்தின் மூன்றும் ஆண்டுவிழா தினத்தன்று "இதாலியப்படைகளிருப்பது போலும், அவைகள் உலகத்தை விடுதலை செய்வதற்காக ஜெர்மனியுடனும், ஜப்பானுடனும் சேர்ந்து போர் புரியுமென்றும், அவன் பேசியிருக்கிறன். அவன் எவ்வளவு படைகளைத் திரட்டக்கூடுமென்பதும், ஜெர்மனிக்காகப் போர்புரிய அவைகளுக்கு எவ்வளவு உத்சாகமிருக்குமென்பதும் புலப்படவில்லை. இதாலியிலிருந்த 30 டிவிஷன் துருப்புகளின் கதிஎன்ன ஆகிற்றென்று விளங்கவில்லை. சிதைவுபட்ட பாஸிதத்வத்தின் உதவியை ஹிட்லர் நாடியிருக்கிறன். பாஸிதத்வம் படைகளைத் திரட்டி வருகிறதென்று முஸோலினி பதிலுரைத்திருக்கிறன்.

முஸோலினியின் வாக்குறுதி வீன் டம்பமாகத் தோன்றுகிறது. வடக்கு இதாலியில் நிலைமை அமைதியாக யிருக்கிறதென்று வெளிப்படையாகத் தோன்றினாலும், நிலைமை மோசமாகத்தானிருக்கிறது. ஒருவகையில் ஜெர்மனியின் ராணுவ அமுலுக்குட்பட்டு வடக்கு இதாயிலிலுள்ள தொழிற்சாலைகள் மறுபடியும் வேலை செய்ய ஆரம்பித்தாலும், உற்பத்திக் குறைவும், இயற்கைப்பொருள் குறைவும், நாசவேலையும், தொழிலாளர்கள் குறைவும் ஏற்பட்டிருக்கின்றன. கலைக்கப்பட்டிருக்கும் இதாலிய ஸோல்ஜர்கள் கட்டாய சேவை செய்யவேண்டுமென்று திரட்டப்படுகிறர்கள்.

வி வி வி வி வி •

இதாலிய யுத்தப் போக்கு. நேபிள்ஸ் சமவெளிக்கும், ஸாலர்னே வளைகுடாவுக்கும் மத்தியிலுள்ள மலைகளிலிருந்து எதிரியின் தற்காப்பு அரண்களை ஒரு வாரமாக ஊடுருவிச் சென்றபின் 5-ம் படை நேபிள்ஸைப் பிடித்துவிட்டது. எதிரி ரோம் நகரத்தை நோக்கி பின் வாங்குகிறன். நமது சேனைகள் பின்பற்றிச்செல்லுகின்றன. நகரத்தில் பொதுவுடமைக்கக்ஷிக்காரர்கள் கலகம் செய்ததால் அதைக் காலிசெய்துவிட்டதாக ஜெர்மானியர்கள் சொல்லுகின்றனர். இதற்கு உண்மையான காரணங்கள் பின் வருமாறு. நேசநாடுகளுக்கு ஏராளமான பக்க பலமிருப்பது, அவர்கள் புதிய இடங்களிலிறங்குவது, பிரிடிஷ் கடற்படை ஜெர்மன் ஸ்தானங்களை குண்டுகளால் தாக்குவது, இதாலியில் ஆகாயத்திலும் நேசதேசத்தாருக்கு ஆதிக்கம் உண்டாகிவிட்டது. ஜெர்மன் விமானப்படை தரைப்படைகளைக் கைவிட்டுவிட்டது.

ஜெர்மன் துருப்புகள் பின்வாங்குமுன் நகரத்துக்கு நெருப்பு வைத்துவிட்டார்கள், துறைமுகத்தை நாசம் செய்துவிட்டனர். ஐரோப்பாவிலேயே நேர்த்தியான நகரம் ஏற்கனவே உள்நாட்டுக் கலவரத்தினால் அழிந்திருந்தது. இப்பொழுது முற்றிலும் பாழாகிவிட்டது. வெளிச்சமும், மின்சாரமும், தண்ணீரும், உணவுப்பொருளும் இல்லாத பொட்டலாகிவிட்டது.

ருஷ்ய முன்னேற்றத்தைப்போல நேபிள்ஸின் வீழ்ச்சியும், ஜெர்மன் படைகளை உயர்வான சேனதிபத்யமும், போர் வீரர்களும் முறியடித்துவிட முடியுமென்று மறுபடியும் ருஜூப்பித்துவிட்டது. ஆகிலும், ரோமுக்கும், பெர்லினுக்கும் வெகுதூரம் செல்லவேண்டுமென்றாலும் அவைகளுக்குப் போகும் வழிகள் திறக்கப்பட்டுவிட்டன. சுலபமாகவும் ஊடுருவிச் செல்லக்கூடியவையாகிவிட்டன.

கார்ஸிகா. ஸார்டினியாவிலிருந்தும், கார்ஸிகாவிலிருந்தும் ஜெர்மானியர் வெளியேறிவிட்டதிலிருந்து ஒரு முனையில் நெருக்கடி ஏற்பட்டால் மற்றொரு முனையிலும் அதன் விளைவுகள் ஏற்படுமென்ற உண்மை வெளியாகிவிட்டது. இதாலியில் நாம் பலமான நடவடிக்கையை மேற்கொண்டுவிட்டதால் எதிரி இந்த முக்கியமான தீவுகளை விட்டு வெளியேறும்படியான சங்கடம் உண்டாகிவிட்டது. கார்ஸிகாவை ஆக்கிரமணம் செய்ததில் நேசதேசப் படைகளின் ஒத்துழைப்பு வெளிப்பட்டது. நேசதேச நீர்மூழ்கிகளும், விமானப்படையும் சேர்ந்து ஜெர்மானியர்கள் தப்பியோடாதபடி தடுத்துவிட்டன. இந்த நடவடிக்கையில் பிரெஞ்சுக்காரர்கள் பெரும் பங்கு எடுத்துக் கொண்டார்களென்றும் அவர்களுடன் நாசவேலைக்காரர்களில் அநேகரும் கலந்து கொண்டார்களென்றும் தெரியவருகிறது. படையெடுக்கும் படைகளுக்கு ஆயுதபாணிகளாகவும் எதிர்த்து நிற்கத் தயாராகவுமுள்ள 15,000 கார்ஸிக வாசிகள் உதவியளித்தனர். நேசநாடுகள் ரகசியமாக உதவிகளும், முஸ்தீப்புகளும் அனுப்பி உதவி வருவதும் சமயம் வரும்பொழுது போர்புரிவதற்கும் தயாராக யிருக்கும் அநேக ரகசிய ஸ்தாபனங்கள் இருந்து வருகின்றனவென்று, லவாலை விட ஜெர்மனியாரிடம் அதிக அபிமானமுள்ள மார்ஷல் டீட் * ஒப்புக்கொள்கிறான்.

வி வி வி வி வி

யூகோஸ்லாவியா. கூடிய சீக்கிரத்தில் யூகோஸ்லாவியா யுத்த அரங்கமாக ஆகக்கூடுமென்பதற்கு அநேக ஹேஷ்யங்கள் புலப்படுகின்றன. அவைகளில் மூன்று முக்கியமானவை. ஒன்று மத்தியக் கிழக்குக்கு யூகோஸ்லாவியாவின் மன்னரான பீடரின் வருகை. இரண்டாவது, ஸோபயாவுக்கு ஜெர்மன் போக்குவரவு இலாகா மந்திரியின் விஜயம். மூன்றாவதாக டால்மெஷியன் கடற்கரை பூராவிலும் போர் நிலைமை உண்டாகிவிட்டது.

பால்கன் நாடுகளில் ருஷ்யப்படைகளும், அமெரிக்க, பிரிடிஷ் துருப்புகளும் ஒன்று கூடும் நிலைமை ஏற்படுமென்று பயந்து யுத்த ஆரம்பத்துக்கு முற்போக்கான ராணுவ நடவடிக்கைகள் யூகோஸ்லாவியாவில் துவங்கிவிட்டன. பல்கேரியா வாக்களித்திருந்த உணவுப்பொருள்களைப்பெறும் வெளிப்படையான நோக்கத்துடன் ஜெர்மன் மந்திரி விஜயம் செய்தபோதிலும் ஏட்ரியாடிக்கடலைத் தாண்டி நேசதேசத்தார்கள் செய்யக்கூடிய தாக்குதலுக்குத் தாற்காப்பு செய்வதற்காகத்தான் அவர் வந்தார். பிரெஸ்லாவிலிருந்து ஸோபயாவுக்குப் போகும் இருப்புப் பாதையை ராணுவ நடமாட்டத்துக்குத் தயாராக வைக்கும்படி அன்னாருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. சாமாளிக்க முடியாத நிலைமை ஏற்படும்பொழுது துருப்புகளைப் பின்கடத்தி செல்லுவதற்கும் இருப்புப்பாதை வசதியளிக்கும்.

யூகோஸ்லாவியாவில் மறுபடியும் ஸ்தாபித்துக்கொள்ளுவதற்கு முற்போக்கா எகிப்துக்கு வந்து. சேர்ந்திருக்கும் பீடர் மன்னர் நாட்டிலுள்ள செட்னிக்கக்ஷியார்களையும், பார்டிஸான் கக்ஷிக்காரர்களையும் ஒன்று திரட்ட முயன்று வருகிறார். பார்டிஸான் கக்ஷியார்கள் என்பது கொரில்லாப் படைகள். நெபோலியன் நாள் முதல்கொண்டும், ருஷ்யப் புரக்ஷிக்குப் பின்னும் ஸ்பானிஷ் உள்நாட்டுக் கலவரத்துக்குப் பின்னும் அவர்கள் பிரசித்திப் பெற்றவர்கள். அவர்களுக்குத் தலைவர் கோஸ்டா நாகி என்பவர், அவர் தனிப்பட்ட முறையில் நிர்வாகம் நடத்தி வருகிறார். அவருடன் 50,000 இதாலியர்கள் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். அவருக்கு எதிரியாக செட்னிக் என்ற கக்ஷியின் தலைவர் திரேஸாகைலோவிச் இருக்கிறார். மிகைலோவிச் சிறந்தவரென்றும், அமானுஷமான சத்தியுள்ளவரென்றும் விளங்கி வந்தார். இப்பொழுது அவர் ஜெர்மன் கக்ஷியைச் சேர்ந்தவரென்றும், ருஷ்யாவின் சத்ருவென்றும் ருஷ்யர்கள் அவரை நிந்தித்து வருவதால் அவருடைய கீர்த்தி மங்கிவிட்டது. ஆகிலும், பொதுவுடமைக்கக்ஷியை எதிர்ப்பதைவிட ஸெர்பிஸம்தான் அவரிடம் குடிகொண்டிருக்கிறது. எப்படியிருந்தாலும் அயல் நாட்டிலிருக்கும் யூகோஸ்லாவியா நிர்வாகம் அவரை ஆதரித்துவிட்டது.

கொரில்லாவாகவிருந்தாலும், தேசாபிமானியாகயிருந்தாலும் அவர்கள் ஒன்று சேர வேண்டுமென்று அரசர் கோரிக்கை செய்துவிட்டார். தேசம் பூராவும் எதிர்த்து நிற்கின்றது. ஸ்பிளிட்டிலும், சூசாக்கிலும், ஜபல் ஜானுவிலும், ஹெர்சிகோவினுவிலுள்ள காரிசியாவிலும், ஸான்ஸாக்கிலும், மாண்டினிக் ரோவிலும் கோரமான யுத்தம் நடைபெறுகிறது.

வி வி வி வி வி

ருஷ்ய முன்னேற்றம். ருஷ்யாவின் வேனிர்கால முன்னேற்ற யுத்தத்தில் ஜெர்மனிக்கு பெரும் நஷ்டம் விளைந்திருக்கிறது. சில வாரங்களுக்குள்ளாக யூக்ரேனில் பாதி பாகத்தையும், கார்கோவைச் சுற்றிலும் உள்ள விவசாய பூமியையும் டான்பாஸைச் சுற்றிலுமுள்ள தொழிற்சாலைகளையும் ஜெர்மனி இழந்தது. கீவ், ஒடெஸ்ஸாவைச் சுற்றிலுமுள்ள மேற்கு யூக்ரேன் அவர்கள் வசமிருக்

கிறது. எவ்வளவு காலம் அதைக் காப்பாற்ற முடியும் என்பதுதான் தற்போதிய பிரச்னை. ருஷ்ய முன்னேற்ற வேகம் அதிகரித்து வருகிறது. நொவோராஸிஸ்க்கும், அனபாவும் விழுந்தபின் டாமான் தீபகற்பம் விழுந்துவிட்டது. ருஷ்யர்கள் கெர்ச்சுக்குச் சமீபத்தில் வந்துவிட்டார்கள். செம்படை பால்டிக் கடலிலுள்ள ஜெர்மன் ஆக்கிரமிப்பு நாடுகளுக்கு அபாயம் விளைவிக்கும்படியாக வெண்மை ருஷ்யாவுக்குள் புகுந்துவிட்டன. மாரிகால யுத்தத்தை நீபர் நதிக்கரையில் நடத்துவதாக ஜெர்மனி உத்தேசிக்கலாம். இது ருஷ்யர்களின் நடவடிக்கையைப் பொருத்து இருக்கிறது.

வி வி வி வி வி

வெண்மை ருஷ்யா. வெண்மை ருஷ்யா என்ற பெயர் வியப்படையும்படியாக இருக்கிறது. யூக்ரேனைப்போல வெண்மை ருஷ்யாவும், ருஷ்ய தேசத்திற்கு வெளிப்புறத்திலும் அன்னியர் ஆக்ஷிக்குட்பட்டிருந்தது. அங்கு வசிப்பவர்கள் வெண்மையான உடுப்பை அணிந்து கொள்ளுகிறார்கள். வெண்மையான உள்ளங்கியையும், மேல் சட்டையையும் வெண்மையான மேஜோடுகளையும் அவர்கள் போட்டுக்கொள்ளுகிறார்கள். அவர்கள் ருஷ்யாவின் ஆதிக்கத்துக்குட்பட்டபொழுது வித்தியாசம் பாராட்டுவதற்காக அந்தப் பிரதேசத்துக்கு வெண்மை ருஷ்யா என்ற பெயர் வழங்கப்பட்டது. ஜனத்தொகையில் 80 சதவிகிதமுள்ள வெண்மை ருஷ்யர்கள் தங்களைச் சுத்தமான ஸ்லாவ் ஜாதியாரென்றும், ருஷ்யர்களையும் யூக்ரேனியர்களையும்விட உயர்வானவர்களென்றும் மதிக்கிறார்கள். இந்தப் பிரதேசத்தில் ஏராளமான நதிகள் ஓடுகின்றன. ருஷ்யாவை டார்டார்கள் படையெடுத்தபொழுது மாஸ்கோவைட் சந்ததியார்கள் இங்கு ஆக்ஷி புரிந்தனர்.

வி வி வி வி வி

யுத்தத்திலிருந்து விலகும் தந்திரம். கிழக்குப் போர்முனையில் ஏற்பட்ட தனிப்பட்ட தோல்விகளை மறைத்துப் பேசும் முறையில் ஜெர்மானியர்கள் இது அசைந்துகொடுக்கும் தந்திரமென்றும், அதனால்தான் ஜெர்மன் துருப்புகள் பின்வாங்குகின்றனவென்றும் சொல்லிவந்தார்கள். ஜெர்மனி புதிய யுத்த தந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறதென்றும் இது அவர்களுக்கு மட்டும் சொந்தமானதென்றும் இந்த உயர்வான தந்திரம் செம்படையை நசுக்குவதற்காக உபயோகப்படுத்தப்படுகிறதென்றும் சொல்லப்பட்டது. செம்படை அழிந்துவிடாமல் வரிசையாக ஜெர்மனிக்குத் தோல்விகளை இழைத்தபொழுது ஜெர்மன் தந்திரப்படி போர்முனை குறுக்கப்படுகிறதென்றும், ஜெர்மன் படை வரிசைகள் திருத்தியமைத்து வலுப்படுத்தப்படுகிறதென்றும் ஜெர்மானியர்கள் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். ஸ்மாலென்ஸ்க்கிலிருந்து ஆஸாவ் கடல் வரைக்கும் ஜெர்மன் படைகள் பின்வாங்கியபொழுது சலன தந்திரம் என்ற பேச்சு ஓய்ந்துவிட்டது.

கோயபல்ஸ் சமீபகாலத்தில் "இந்த யுத்தத்திலிருந்து ஒதுங்கிச் செல்லும் தந்திரம்" என்று சொல்லிவருகிறார். அக்டோபர் மாதம் 3-ம் தேதியன்று அவர் ஒலிபரப்பில் பின்வருமாறு பேசினார். "ஜெர்மன் ராணுவத்தினிடம் போர்புரிந்துவரும் ருஷ்யாவை நமது எல்லைச் சரகத்துக்கு வெகு தூரத்திலேயே நிலைநிறுத்தப்போதுமான பலமிருக்கிறது. நாம் சென்ற இரண்டு வருஷங்களில் ஏராளமான பிரதேசத்தைக் கைப்பற்றியதால் இப்பொழுது அவைகளை விட்டுவிட நமக்குச் சாதகம் உண்டாகியிருக்கிறது. இவைகள் சிறந்த யுத்த தந்திரத்துக்கு ஒத்தவைகளே. பிரதேசங்களை நாம் கைவிட்டுவிடுகிறோமென்பது உண்மைதான். போர்முனையில் ஏற்பட்டிருக்கும் நஷ்டங்களைவிட யுத்த தந்திர முறையில் நமக்கு அதிக லாபங்கள் கிடைத்துவிட்டன."

சூட்டு வெளிப்பட்டுவிட்டது. ருஷ்யர்களை அழிப்பதற்கு பதிலாக ருஷ்யப் போர்முனையில் ஜெர்மானியர்கள் அழிவுபட்டு வருகிறார்கள். இரண்டாம் போர்முனை ஏற்பட்டால் அதைச் சமாளிக்க அவர்களிடம் பக்கபலமில்லை. பிரதேசங்களை ஏராளமாகச் சம்பாதித்து அதன் லாபங்களை அடையவேண்டுமென்ற தோற்றம் போய்விட்டது. எல்லாவற்றையும் இழப்பதைவிட ஜெயித்த நாடுகளைக் கைவிடுவது உத்தமம். ஸெர் டோரியஸ் பின்வருமாறு எழுதுகிறார்.

"கிழக்குப் போர்முனையில் துருப்புகளைச் செலவிடாமல் ஜெர்மனி மீதப்படுத்தியதிலிருந்து, அமெரிக்க, பிரிடிஷ் படைகளின் படையெடுப்பு பயத்தை நிவர்த்திப்பதற்காக ஐரோப்பாவின் பல பாகங்களில் துருப்புகளைக் குவித்துவைக்க ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கு வசதி ஏற்பட்டது. ஐரோப்பா கண்டத்தின் பக்க பலத்துக்கு மூலாதாரமான துருப்புகளை பலி கொடுப்பதைவிட தந்திரமாக கிழக்குப் போர்முனையிலுள்ள பிரதேசங்களை இழந்து விடுவதுதான், ராணுவ தந்திரம் என்று ஜெர்மானியர்கள் அடிக்கடி சொல்லிவருவதை மேலே சொல்லிய காரணம் விவரணம் செய்யும்".

இரண்டாம் போர்முனை. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் அச்சம் கொண்டிருக்கும் இரண்டாம் போர்முனை யோசனையில் மட்டும் அல்ல, உருவாகவும் ஆகிவிட்டது. ருஷ்யாவிலும், இதாலியிலும் சமீபத்தில் கிடைத்த வெற்றிகளின் மூலம் படையெடுக்கும் காலம் ஒரு மாதம் முன்னதாகவே ஏற்பட்டுவிட்டது. தீர்மானமான முடிவுகள் செய்தாகிவிட்டன. ஜெனரல் ஸ்மட்ஸ் இங்கிலாந்துக்கு வந்துவிட்டார். ஜெனரல் மார்ஷலும் வந்து சேருவார். அமெரிக்க விமானப் படையின் தலைவரான ஜெனரல் ஹென்றி ஆர்னல்ட் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "ஐரோப்பாவைத் தாக்கக்கூடிய மகத்தான படையெடுப்பு கூடிய சீக்கிரம் நடைபெறும். இந்த நடவடிக்கையில் லக்ஷக் கணக்கான வெடி விமானங்களும், சண்டை விமானங்களும், கப்பல்களும், டாங்கிகளும், பீரங்கிகளும், தரைப் படைகளும் கலந்து கொள்ளும்.'' இங்கிலீஷ் கால்வாயில் பீரங்கிப் போர்கள் நடைபெற்றிருக்கின்றன.

வி வி வி வி வி

ஹிட்லரின் கோட்டை. ஹிட்லரின் அரண் நொருங்கிவருகிறது. புகாரெஸ்டில் பொதுவுடமைக்கக்ஷியின் பிரசுரங்கள் விமான மூலம் போடப்பட்டன. இஸ்தான்பூலிலிருந்து கிடைத்த தகவலின்படி ருமேனியாவிலுள்ள துருக்கி அயல் நாட்டு மந்திரியான M. டான்ரீவர், நேசதேசப்படைகள் இறங்கியவுடன் ருமேனியா உதவி செய்யத் தயாராகயிருப்பதாகவும், ருஷ்யாவுக்கு பெஸ்ஸாராபியாவையும் வடக்கு பூகோவினாவையும் தத்தம் செய்து விடுவதாகவும் அண்டோனெஸ்கு யோசனைகள் சொல்லுவதாகச் சொல்லுகிறார். மாரிகாலத்தில் ருஷ்யர்கள் கிழக்கு ருமேனியாவைப் படையெடுப்பார்கள் என்ற பீதியுண்டாகியிருக்கிறது. இந்த பீதிகளை நிவர்த்திக்க, நோய் வாய்ப்பட்டிருந்த வான் பேபன் ருஷ்யாவும், ஜெர்மனியும் ஒப்பந்தம் செய்துகொண்டு விட்டதன்ற பொய் வதந்தியைக் கிளப்பி வருகிறான்.

அச்சு நாட்டாரின் பிடிப்பிலிருந்து விடுவித்துக்கொள்ள ஹங்கேரியும் முயற்சி செய்து வருகிறது. வெண்மை ருஷ்யாவினுடையவும், பால்கன் நாடுகளுடையவும் தற்காப்புக்காக உபரிப்படைகளை அனுப்ப வேண்டுமென்ற ஹிட்லரின் கோரிக்கையை ஹங்கேரி நிராகரித்து விட்டது. ஹிட்லர் அதிகமாக வற்புறுத்தினால் சம்பந்தங்கள் ரத்தாகிவிடுமென்று ஹங்கேரி சொல்லிவிட்டது.

வி வி வி வி வி

ஸ்வீடனும், ஜெர்மனியும். யூதர்களை ஏராளமாக தேசப்பிரஷ்டம் செய்யக்கூடாதென்று ஸ்வீடிஷ் நிர்வாகம் ஜெர்மனிக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ஜெர்மனிக்கு எண்ணெயை ஸப்ளை செய்வதையும் அது நிறுத்திவிட்டது.

வி வி வி வி வி

யூப் படகுகள். புதிய முஸ்தீப்புகளுடன் யூப் படகுகள் மறுபடியும் அட்லாண்டிக் கடலுக்கு வந்துவிட்டன. சமீபகாலத்தில் மூன்று நாட்களாக நேசதேசத் துணைக்காவல் கப்பல் கூட்டத்தை அவைகள் தாக்கி சேதங்களை உண்டுபண்ணியிருக்கின்றன. ஆகிலும், நேசதேசத்தார்கள் யூப் படகு யுத்தத்தின் முதல் கட்டத்தில் ஜயமடைந்துவிட்டார்களென்றும், ஆகிலும், யுத்தம் ஜயித்தபாடில்லையென்றும் கர்னல் நாக்ஸ் சொல்லிவிட்டார்.

ஸெப்டம்பர் மாதம் 18-ம் தேதியுடன் முடிவடைந்த நான்கு மாதங்களில் யூப் படகுகளின் நடவடிக்கை மூலம் வட அட்லாண்டிக்கில் நேசநாடுகளுக்கு ஒரு சாமான் கப்பலும் நஷ்டமாகவில்லை. யூ படகுகளை ஒன்றன்பின் ஒன்றாக யுத்தக் கப்பல்களும், வெகு தூரம் செல்லும் விமானங்களும் மூழ்கடித்திருக்கின்றன. குளிர்காலத்திலேற்பட்ட தோல்விக்குப்பின் கடற்தளபதி டோனிட்ஸ் யூ படகுகளில் புதிய ரகமான மீன் வெடிகளையும், விமான எதிர்ப்பு தற்காப்புகளையும் அமைத்துவிட்டான். எதிரிக்குச் சேதம் விளைவிக்காமல் யூப் படகுகள் தினசரி ஒன்றாக நஷ்டமடையக்கூடாதென்பது அவருடைய நம்பிக்கை.

வி வி வி வி வி

தூரக்கிழக்கு. லே, ஸலாமூவா, பின்ஷேபன் முதலிய இடங்களின் வீழ்ச்சியும், ஸாலமன்ஸினுள்ள கொலம்பங்காரா தீவிலிருக்கும் விலாவிலிருந்து 40 படகுகளில் ஜப்பானியர்கள் தப்பி ஓடியதும், அவைகளை அமெரிக்கக் கடற்படைகள் அழித்ததும், ஜப்பானியக் கடற்படை சும்மாவிருந்துவருவதும், ஜெர்மனியைப்போல் தாக்குதலைச் சமாளிப்பதற்கு, தன்னுடைய படைகளைச் படி உபயோகப்படுத்தவேண்டிய நிலைமை ஜப்பானுக்கு வந்துவிட்டதென்று வெளியாக்குகின்றன.

பர்மாவில் விமான நடவடிக்கை. அமெரிக்க பத்தாவது விமானப்படையின் நடவடிக்கையைப்பற்றி ஜெனரல் டேவிட்ஸன் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்: நேசதேசத்தாரின் பருவகால நடவடிக்கையில் ஸெப்டம்பர் மாதத்தில் விசேஷ நடவடிக்கைகள் நடைபெற்றன. இந்த மாதத்தில் இரண்டாவது தடவையாக ஏராளமான டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன. இரண்டு நாட்களில்தான் விமான நடவடிக்கை கிடையாது.

வி வி வி வி வி

புதிய கடற்தளபதி பிரபு. ஸர் டட்லிபௌண்ட் தேக அசௌக்கியம் காரணமாக பதவியிலிருந்து விலகிக்கொண்டுவிட்டபடியால் அன்னாருக்குப் பதிலாக டாரண்டோ, மடபான் நடவடிக்கைகளில் கியாதிபெற்ற ஸர் ஆண்ட்ரூ கன்னிங்ஹாம் கடற்தளபதியானார். இதாலிய ஏரி என்று சொல்லப்பட்ட மத்தியதரைக் கடலை கன்னிங்காமின் ஏரி என்று பெயர் வழங்கும் படியாகச் செய்த அவருடைய புகழ் எந்நாளும் மத்தியதரைக்கடல் சரித்திரத்தில் விளங்கும். மத்தியதரைக்கடலை ஆக்கிரமித்துக்கொள்ளுவதாக உத்தேசித்திருந்த இதாலியக் கடற்படையை மால்டாவில் நிபந்தனையற்ற சரணாகதி செய்யும்படி வற்புறுத்திய கீர்த்தியும் அவருடையதுதான்.

வி வி வி வி வி

சில்லரை விஷயங்கள். 1. அமெரிக்கக் குத்தகைக்கடன் நிர்வாகியான மிஸ்டர் ஆவெரல் ஹாரிமான் ருஷ்யாவில் அமெரிக்க அயல்நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

2. M. பியூடோர் குஸெவ் லண்டனில் ருஷ்ய அயல்நாட்டு மந்திரி ஸ்தானம் வகிப்பார்.

புத்திசாலிகள் யுத்தத்தில் ஈடுபடுகிறார்கள்.

பிரிடிஷ் கவிகளும், சித்ரம் வரைகிறவர்களும் சாந்த புத்தியுள்ளவர்களல்ல.

(ஆராய்ச்சி செய்பவரும் ஜீவராசிகளின் நிலைமையை பரிசீலனை செய்பவருமான டாம் ஹாரிஸென் எழுதியது).

மேதாவிகள் சாந்தமான புத்தியுள்ளவர்களென்று எல்லோரும் சுலபமாக நினைத்து வருகிறார்கள். மேதாவித் தன்மையைப்பற்றி தப்பான அபிப்பிராயமிருப்பதால்தான் இந்த உணர்ச்சி ஏற்படுகிறது. உலக நடவடிக்கையைக்கண்டு மேதாவி சீக்கிரத்தில் வ்யதையை அடைகிறான். உலகத்தில் சகோதர பாவம் நிரம்பியிருக்கிறதென்று அவன் நிச்சயமாய் நம்புவதால் ஒரு சச்சரவிலும் அவன் கலந்துகொள்ளுவதில்லை. அவனுடைய மனப்பான்மையும், புத்திவிசாலமும் நுட்பமானதால் இரக்கமின்மையும், தீரமும் அவனிடம் காணக்கூடவில்லை.

மேதாவி என்ற பதத்திற்கு புத்திசாலித்தனத்தை சரியான மார்க்கத்தில் பிரயோகிக்கிறவன் என்பதுதான் பொருளாகும். அவன் நல்ல யோசனை கூறக்கூடியவன், பக்ஷபாதமற்ற ஆர்வமுள்ளவன். நிலைமையை பூராவாக அவன் மதித்துப் பார்த்துவிட்டால் தனிப்பட்ட நபர் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்றும் அவன் தீர்மானித்துவிடுவான். அவ்விதம் தீர்மானம் செய்துவிட்டால் அவன் தனித்திருக்கும் சக்திபெற்றவனாதலால் அவன் சிறந்த கோபமற்ற போர் வீரனாகிவிடுகிறான்.

சென்ற யுத்தத்தில் பள்ளிக்கூட போதகர்களும், கல்லூரி வித்வான்களும் தான் தீரமும், விடமுயற்சியுமுள்ள போர்வீரர்களாகயிருந்தார்கள். இந்த யுத்தத்தில் பிறர்கள் நாஜி தத்வம் காட்டுப்புற நாட்டியம்போல் ஒரு இயக்கமென்று நினைத்தபொழுது மேதாவிகள் தான் எதிர்காலத்தில் உண்டாகப்போகும் அதன் கெடுதல்களை முன்கூட்டியே மதித்துப் பார்த்தார்கள். யுத்தத்தின் அடிப்படையான தத்வங்களை அவர்கள் நன்கு உணருவதால் அவர்கள் தங்களுடைய நடவடிக்கையைப்பற்றி முடிவான எண்ணம் கொண்டுவிட்டார்கள்.

ரிச்சர்ட் ஹிலாரி.

இச்சமயத்தில் ரிச்சர்ட் ஹிலாரியின் ஞாபகம் வருகிறது. அவருடைய "கடைசி எதிரி" என்ற தலையங்கமுள்ள புஸ்தகம் அவருடைய தலைமுறையிலுள்ள மேதாவிகள் யுத்தத்தைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களென்பதை தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. அவருடைய எதிர்கால வாழ்க்கை சந்தோஷகரமாகவும், நம்பிக்கை உண்டுபண்ணக்கூடியதாகவு

மிருந்தது. யுத்தம் உலகத்தையும், தனிப்பட்டவர்களையும் எவ்விதம் பாதிக்கிறதென்று அவர் நன்றாய் உணர்ந்தார். அவர் இறக்குமுன் யுத்தத்தைப்பற்றி சிறந்த புஸ்தகத்தைப் பிரசுரித்தார். அவருடைய சிநேகிதனான கோஸ்லெர் பிரான்ஸிலிருந்து தப்பி ஓடி பிரிடிஷ் படையில் வேலையிலமர்ந்தார். பிறகு நோய்வாய்ப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அவருடைய தலைமுறையிலிருந்த அநேக வாலிபர்களும் யுத்தத்துக்கு முன் ஹொரைஸன் என்ற பத்திரிகையில் அடிக்கடி கட்டுரைகள் எழுதிவந்தார்கள். அவர்களுள் டோனி கோல்ட்ஸ்மித் யுத்தத்தில் உயிர்துறந்தார். அவருடைய சர மோக்தியை அவருடைய சிநேகிதரும் நாடக ஆசிரியரும் "கண்ணீர் பெருகாத பிரெஞ்சுக்காரர்கள்" என்ற புஸ்தகம் எழுதியவரும், இப்பொழுது விமானப்படையில் லெப்டினெண்ட் வேலை பார்ப்பவருமான டெரன்ஸ் ராட்டிகன் எழுதினார்.

ஸ்டீபன் ஸ்பெண்டர் என்ற கவி லண்டன் தீயணைக்கும் உதவிப்படையில் பையர்மானாக இருக்கிறார். விமானப்படையில் லெப்டினெண்ட்டாகவிருக்கும் ஜான் புட்னி பிரிடிஷ் விமானப்படையைப்பற்றி அநேகம் கவிகளை எழுதியிருக்கிறார். சிறிய கதைகளின் ஆசிரியரும், படைகளுக்கு போதக குருவான விக்டோரியா பதக்கம் பெற்ற ரெவரெண்ட் உல்லியின் மகனுமான விமானிகளின் ஆபீஸரான ரோலோ உல்லி விமான நடவடிக்கையில் இறந்து போனார். பிரதம மந்திரியின் மருமகனும், ஸ்பானிஷ் யுத்தத்தில் அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை விளக்கிக்காட்டும் "போயாடில்லா" என்ற புஸ்தகத்தை எழுதியவருமான எஸ்மாண்டு ரோமிலி விமானம் நொருங்கி சமுத்திரத்தில் மூழ்கி இறந்துபோனார்.

தீரத்துக்கு நோயல் கவர்ட்டின் பாராட்டு.

மின்னல் எதிர்ப்பை சமாளித்தவரும் போஸ்டு-டி என்ற புஸ்தகத்தை எழுதியவருமான விமானப்படையில் லெப்டினெண்ட் வேலை பார்க்கும் ஜான் ஸ்ட்ராஸி என்பவர் பிரிடிஷ் விமானப்படையின் ஊக்கத்தையும், தீரத்தையும்பற்றி சிறந்த புஸ்தகம் ஒன்றை எழுதி அது பிரிடனிலும், அமெரிக்காவிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. நாசமடைந்து வருவதுபோல் தோன்றும் நாளில் வீணாகப் போய்விட்டதும், மானிட வர்க்கத்தினிடத்தில் துவேஷ புத்தி கொண்டதுமான நோயல்கவர்ட், அரசாங்கத்தில் வேலையிலமர்ந்தபின் "நாம் சேவை செய்யும் உலகம்" என்ற புஸ்தகத்தில் தீரத்திற்கும், நேர்மைக்கும், உருக்கமானதும் அர்த்த புஷ்டியுள்ளதுமான புகழுரையை வெளியிட்டிருக்கிறார்.

உருக்கமான புஸ்தகங்களை எழுதுவதில் கியாதிபெற்ற காட்பரே வின் மாலுமிகளுடனும், விமானிகளுடனும் சென்று தீரச் செய்கைகளைச் செய்கிறவர்களைப்பற்றி கட்டுரைகள் எழுதுவதற்காக கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவித்தார். அதன் பிறகு பத்திரிகை நிருபர் வேலையை விட்டுவிட்டு படைகளில் வேலையிலமர்ந்துகொண்டார். அவர் மாலுமிகள் பரீக்ஷையில் தேறிவிட்டார். அதேவிதமாக கான்ஸ்டன்ஸ் கம்மிங்ஸ் என்ற நடிகையின் புருஷனான நாடகாசிரியரான பென்லைவியும் யுத்தத்திலீடுபட்டார். நடிகரும், ஆசிரியருமான லெப்டினெண்ட் எஸ்மாண்ட் னைட் பிஸ்மார்க்கைத் தாக்கியபொழுது கண் திருஷ்டியை இழந்தார்.

அநேக சித்திரம் வரைகிறவர்களும் யுத்தத்திலீடுபட்டிருக்கிறார்கள். டங்கர்க் யுத்தத்தையும், டிப்பி யுத்தத்தையும் வரைந்தவர் ரிச்சர்ட் யூரிக், மத்தியக் கிழக்கிலிருந்து திரும்பி வரும்பொழுது மீன்வெடிக்கிறையான கப்பலிலிருந்த காப்டன் எட்மாண்ட் லாடன், ரிபல்ஸ் சப்பலில் சென்ற பார்னெட் ப்ரீட்மான், வடக்கு ஆபிரிக்கப் படையெடுப்புப் படையைச் சேர்ந்த ஹென்ரி கார், போன்ற அநேகர் யுத்தப் போர்முனைப் படங்களை வரைவதில் ஆர்வம் காட்டி யுத்த முனைகளிலுள்ள அபாயங்களிலிருந்து ஊக்கமடைகிறார்கள். சென்ற வருஷம் ஐஸ்லாந்திலிருந்து விமானத்தில் புறப்பட்டு காணாமல்போய் இறந்திருக்கக்கூடுமென்று அனுமானிக்கக்கூடிய காப்டன் எரிக் ராவிலஸ் அவர்களில் ஒருவர். வர்ணவேலை செய்பவரும், ஆசிரியருமான பீடர் ஸ்காட் ஸிஸிலிய ஜலசந்தியில் கடற்படையின் தலைமையைத் திறமையுடன் வகித்ததாக சமீபத்தில் பொதுமக்களால் பாராட்டப்பட்டார். கியாதிபெற்ற ஒளிப்படம் பிடிப்பவரான ஸெஸில் பீடனும், நாடகாசிரியரான டென்னிஸ் ஜான்ஸ்டனும் லிபியா யுத்த அரங்கத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மறைமுகப்படுத்தும் வேலையிலும் சித்திரவேலைக்காரர்கள்.

வாலிபமுள்ளவர்களைத் தவிர வயது முதிர்ந்தவர்களும், யுத்த சேவையிலீடுபட்டிருக்கிறார்கள். சாம்ராஜ்ய யுத்தக் கண்காக்ஷி சாலையில் தொங்கவிடப்பட்டிருக்கும் 1914—18-ம் வருஷத்திய போர் முனைச் சித்திரங்களை வரைந்த பால்நாஷ், விமானப்போர்களைப்பற்றிய சித்திரங்களை வரைந்திருக்கிறார். தோட்டத்திலுள்ள புஷ்ப விசேஷங்களை நுட்பமான விபரங்களுடன் வரையக்கூடிய சக்தியுள்ள அவருடைய சகோதரரான ஜான் நாஷ்

என்பவர் அப்ஸர்வர் படையில் ஆபீஸராகயிருக்கிறார். விமானங்களையும் அவர் நுட்பமாக வர்ணித்து வரைகிறார்.

சில சித்திரக்காரர்கள் ராணுவ முக்கியத்வம் வாய்ந்த வேலைகளில் தங்களுடைய புத்தியை உபயோகித்து வருகிறார்கள். ஆங்கிலேய உயர்தர தத்வதர்சியும், மறைபொருள் படித்தும் முறைகளில் பிரசங்கம் செய்கிறவருமான ரோலாண்ட் பென்ரோஸ் என்பவரும், ஆபிரிக்காவிலும், ஐரோப்பாவிலும் முக்கியமாக தூதகோஷ்டிகளில் சென்றவருமான ஜூலியன் டிரெவிலியானும் இந்தச் சேவையிலீடுபட்டவர்கள். நவீன நாடக மேடை அமைப்பவரும், துணிமணி நெய்பவருமான, ஒருவர் வெல்வெட் கால் சல்லடம் போட்டுக்கொண்டு தான் சாந்த ஸ்வபாவமுள்ளவர் என்று சொல்லிக்கொண்டிருந்தார். இப்பொழுது ஜலத்தை மறைக்கும் புதிய சாதனத்தைக் கண்டுபிடித்து, அதன் மூலம் மேஜர் பதவிக்கு வந்துவிட்டார். அலெக்ராஸ் தார்ண போன்ற அநேக வாலிபமுள்ள உயர்தரப் பாடகர்கள் யுத்தத்திலீடுபட்டிருக்கிறார்கள். அநேகமாகப் பாடகர்கள் திடகாத்திரமுள்ளவர்களல்ல. அநேகர்கள் முக்கியமான தொழிற்சாலைகளில் தாத்காலிகமாக அரசாங்க அதிகாரிகளாக உத்தியோகம் பார்த்துவருகிறார்கள். இன்னும் அநேகர்கள், சமாதான காலத்திய தொழில்முறைகளை விட்டுவிட்டு யுத்த முயற்சியில் தங்களுடைய கவனத்தைச் செலுத்திவருகிறார்கள். லண்டனில் வெளியாகும் ஈவ்னிங் ஸ்டாண்டர்ட் பத்திரிகையின் ஆசிரியரும், பத்திராதிபருமான பிராங்க் ஒவன் டாங்கியை ஓட்டுகிறார். கெட்டுப்போகும் வாலிபர்களைப்பற்றி அழகாக வர்ணனை செய்துவந்த எவலின் வா என்பவரும், பீடர் பிளெமிங்கும் கம்மாண்டோ படைகளின் காப்டன்களாக இருக்கிறார்கள். ஜெர்மன் பருந்துப் பாய்ச்சல் விமானங்கள், மற்றெல்லா ஜெர்மன் முஸ்தீப்புகளைப் போல, சிறந்தவைகளென்றும் வா சொல்லியிருக்கிறார். மேஜையின் சமீபத்தில் உட்கார்ந்து வா எழுதுவதற்கும், ஒளியில் உட்கார்ந்துகொண்டு சொல்லுவதற்கும் வித்யாசமுண்டு.

புத்திசாலித்தனத்தின் வித்தை.

பிரிடிஷ் சட்டசபையின் மெம்பரான காப்டன் ஸாமர்ஸட் டி சேர், அவருடைய ஆபிரிக்க அனுபவங்களைப்பற்றி "ஸில்வர் கிரெஸ்ட்" என்ற தலையங்கத்துடன் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். உயர்ந்த கிரந்தகர்த்தாவும், கவியுமான வாலிபமுள்ள ஆலன் லூயி, அயல் நாட்டில் சேனையில் ஆபீஸர் உத்தியோகம் வகிக்கிறார். கட்டுக்கதை ஆசிரியரான ஆர்தர் கால்டர் மார்ஷல் காலாட் படையில் ஆபீஸர் வேலைபார்க்கிறார்.

சமாதானப்படுத்தும் முறைகள் பயன்படாமல் போய்விட்டபொழுது நம்பிக்கையுடன் இருப்பதைவிட மேலான நடவடிக்கையை ஆரம்பிக்கவேண்டிய பிரச்னை உண்டாயிற்று. ஆகையால் புத்திசாலிகளும், மேதாவிகளும், எல்லா வேலைகளிலும் எல்லாப் படைகளிலும் தங்களுடைய பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவார்களென்று நாம் எதிர் பார்க்கலாம்.

இந்த யுத்தத்தில் நாகரீகம் படைத்த தேசங்கள் நாகரீகத்தை நிலைநாட்ட போர்புரிந்து வருகிறார்கள். நம்முடைய முன்னேற்ற நடவடிக்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மேதாவிகளும், தீரர்களும் நமக்கு ஊக்கம் அளித்து வருகிறார்கள். இதற்கு உதாரணம் வேண்டுமானால் பிரதம மந்திரி சர்ச்சிலின் சொற்பொழிவுகளைக் கவனியுங்கள். பிரிடனுக்கு நெருக்கடியான சமயத்தில் அவருடைய சொற்பொழிவுகள் ஜனங்களுக்குத் தைரியம் ஊட்டியதன்மூலம் சரித்திரத்திலேயே மேதாவிகளின் உயர்வையும், சக்தியையும் நிலைநாட்டிவிட்டன.

ராணுவ நடவடிக்கைகள், அதன் கணக்கைப்பொருத்துப் பார்ப்பதில்லை. உண்மை இதாலிக்காக நடந்த யுத்தத்தில் வெளிப்பட்டது.

(லெப்டினன்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் பிரௌன்ரிக்.)

ராணுவ நடவடிக்கைகள் ராணுவத்தின் எண்ணிக்கையைப் பொருத்து நடவாது என்பதை வெளிப்படுத்த இப்பொழுது இதாலியிலும், ருஷ்யாவிலும், நடந்துவரும் யுத்தங்களைத் தவிர வேறு சரியான உதாரணம் எனக்குத் தோன்றவில்லை.

சரியான கணக்கு கிடைக்காவிட்டாலும், 200 ஜெர்மன் படை வகுப்பும், சுற்றிவரும் படைவகுப்புகளும் ருஷ்யாவில் நடந்த நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொண்டனவென்பதும், இதாலியில் ஜெர்மானியரின் படைவகுப்பு 20-க்கு குறைந்ததேதான் என்பதும்

எடுத்துச் சொல்லப்பட்டது. சில மனிதர்களுக்கு எண்ணிக்கையைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், சிலருக்கு துருப்புகளின் எண்ணிக்கைதான் பிரதானம். நான் மேற்கூறிய இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவன் என்ற முறையிலே இவைகளைச் சொல்லுகிறேன்.

யுத்தத்தில் ஒரு தேச வர்த்தமானம்தான் முக்கியமான அம்சம். அதனை ஒரு தேசப் படத்தினின்றும் கண்டு கொள்பவரைப்போல் சுலபமாய் வேறுவழிகளில் உணருவது கஷ்டமாகும்.

1941-ம் வருஷம் ஜூன் மாதம் ஹிட்லரின் சைனியங்கள் ருஷ்ய எல்லைக் கடந்த பொழுது, அவர்களுக்குச் சமமானதும், கொடுங்காடுகளையுடையதுமான பெரும் நதிகளையுடையதுமான பெரும் நிலப்பரப்பைக் கடக்கவேண்டியிருந்தது. 1,400 மைல்கள் முன்னேறின. உண்மையில் ரயில், ரஸ்தாப் போக்கு வரத்துக்கள் அவர்களுக்கு உதவியாயிருந்தது. எனினும், சில இடங்களில் காடுகளும், சதுப்பு நிலங்களும் கூடிய இடங்களில் அவர்கள் முன்னேறுவதைத் தடுத்தன. ஒவ்வொரு வரிசைத் துருப்பும்; மற்ற வரிசை கருகிலேதான் இருந்தன. இருப்பினும் வரும் மாதங்களில் ஏற்படுத்த விருக்கும் நகரங்களையெல்லாம் தடுக்க ஜெர்மன் துருப்புகளால் முடியவில்லை. அத்தகைய கொடிய காடுகள் நிறைந்த சமபரப்பிலேயுங்கூட ஹிட்லரின் 200 படை வகுப்புகளும்கூட அதனைத் தாக்குவதற்கு போதுமானவேயாகும்.

இப்பொழுது இதாலியைப் பார்ப்போம். மத்தியதரைக்கடலில் நீட்டிக்கொண்டிருக்கும் இத்தீவு 100 மைல் நிளமுள்ளதாய் 1,000 மைல்கள் நீளமுள்ள கடற்கரையுடையதாய் மிருக்கிறது. இந்தத் தீபகற்பத்தில் இரு கடற்கரைப் பிரதேசங்கள் உள. அங்கு ரஸ்தாக்கள் மூலமாயும், ரயில் மூலமாயும், போக்குவரத்துகள் உள. இவ்விரு போக்குவரத்து ஸ்தலங்களும் சப்ளையின் மலைகளால் பிரிக்கப்பட்டு, சிற்சில இடங்களில் மலைகளின் கணவாய்களின் மூலம் ஒன்றிற்கொன்று சில ரஸ்தாக்களாலும், ரயில்வேக்களாலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ருஷ்யாவிலே மேற்கு நோக்கி ஸ்டெப்ஸ் புல்தரைகள் மேல் படையெடுத்து வரும் சைனியங்களைத் தடுப்பதற்கு வேண்டிய அளவு சைனியங்கள் இங்கு வடக்கு நோக்கி வரும் எதிரியைத் தடுப்பதற்கு அவசியமில்லை.

எனவே 20 ஜெர்மன் படை வகுப்புகள் இதாலியில் தாக்குதல் நடத்தி வருகின்றன. ருஷ்யாவில் பல படை வகுப்புகள் நடத்திவரும் தாக்குதல்களை இந்த 20 வகுப்புகளும் நடத்திவருகின்றன.

ஆனால், இவ்வாறெல்லாம் இருப்பினும், 20 ஜெர்மன் படை வகுப்புகள் இதாலியில் பிரிடிஷ், அமெரிக்க பெரிய படை வகுப்புகளுக்கு நேராய் நிற்க முடியாது என்பது பலரின் கருத்து. மத்தியதரைக்கடலின் ஆதிக்கம் பூராவும் நமக்கு இருக்கும் பொழுது நாம் நினைத்த இடத்தில் படைவகுப்புகளை இரக்கலாம். இதாலிய தீபகற்பத்தில் கடைசி வரையும் இருந்து தெற்கே கவனம் செலுத்துதல் என்ற நோக்கத்தோடு இருக்கலாம் என்பது உண்மையாயிருக்கலாம். ஆனால் இவர்கள் இம்மாதிரி நினைவோடிருப்பார்கள் என்று நான் கருதவில்லை. ஆங்கிலோ அமெரிக்கப்படைகளை ருஷ்யாவில் பனி நிறைந்த பனிகாலத்திலும், ஆல்ப்ஸில் இந்த பனிக்காலத்திலும் தங்களைக் காத்துக்கொண்டு எதிரிகளைத் துன்பம் செய்துகொண்டும் இருக்க விடுவதாக எண்ணிக்கொண்டு இருக்கலாம்.

ஐரோப்பாவில் யுத்தம் முழுமையும் குறைந்துகொண்டு வருகிறது. இதனால் ஜெர்மானியர்கள் எல்லாம் தரைமீதுவந்து நிற்கும் நிலைக்கு வந்துவிடுவார்கள். நேசக்கட்சியின் அதிர்ஷ்ட வசத்தாலும், ஜெர்மானியரின் அதிர்ஷ்ட வசமாயும் யுத்தம் தரைமீது நடப்பதில்லை. தற்கால யுத்தத்தில் விமான பலம் முக்கியத்வம் அடைந்திருக்கிறது. ஜெர்மானியரின் விமான பலம் நாளுக்கு நாள் க்ஷீணத்தும், பிரிடிஷாரின் விமானபலம் உச்சஸ்தானத்தை அடைந்துகொண்டும் வருகிறது. வடக்கு இதாலியில் விமான நிலயங்கள் நம்மால் ஏற்படுத்தப்பட்டால் அன்றுடம் பகலிலும், பின்இரவிலும் போடப்படும் நம் குண்டுகளுக்கு, ஜெர்மன் தொழிற்சாலைகள் இலக்காமலிருக்காது.

நெடுநாளாய் விஷயங்கள் நமக்கு மிகவும் அனுகூலமாயும் சந்தோஷகரமாயுமிருக்கிறது. ஸாலெர்னோவின் கடற்கரைவெற்றிகளே நம் வெற்றிகளுக்குச் சின்னமாயிருக்கிறது. காலம், நெபோலியனை தன்னிடம் அதைப்பற்றி யுத்த காலத்தில் கேட்கக்கூடாது என்று சொன்னபடி ஒரு சாமானகவேயிருக்கிறது. அதனையும் சுலபமாய் வாங்கிவிடலாம். எதிர்த்து நாடுகளில் இரங்குவதால் யுத்தம் சீக்கிரம் முடியாது. எனினும், நமக்கு லாபகரமாகவேயிருக்கும். பகட்டாய் படைகளைப் பிரிப்பதாயில்லை; முயற்சியால்தான் யுத்தத்தில் வெற்றிபெறுவோம்.

ஜெர்மானியர் எங்கு நிற்பார்கள்?

கீவிற்கு பின்பு பாதுகாப்பின்மை.

(ஸன்டே டைம்ஸ் பத்திரிகையில் ஸ்குரூடேடர்).

ஸல்ரோஸிக்குத் தெற்கிலும், கீவிற்கு வடக்கிலும் ஜெர்மானியர்கள் எங்கு நிற்க முடியும்?

அரண்களுக்குப்பின் ஜெர்மானியர்கள் ஏதும் பாதுகாப்பான கோட்டைகள் கட்டியிருப்பதாகத் தெரியவில்லை. அவ்விதமில்லாத சமயத்தில் ஐரோப்பாவில் இயற்கைப் பாதுகாப்புகளுமில்லை. உண்மையில் யூக்ரேன் பிரதேசத்தில் பெரிய நதிகளைத் தவிர வேறு எவ்விதமான பாதுகாப்புமில்லை. இந்த நதிகள் எதிரிகளைத் தடுப்பதற்கு ஒன்றுக்கொன்று வித்தியாசமுள்ள நதிகளாய் இருக்கின்றன. டினிப்பர் தாண்டமுடியாமல் பெரியதாகவும் பக், ப்ரத் இவைகள் வெகுசுலபமாய்த் தாண்டக்கூடியதாயும் இருக்கின்றன. டாங்கிகளுக்கு எதிராக நீர்ப்பகுதிகள் மிகவும் பாதுகாப்பான இடம். ஆனால், ருஷ்யாவில் பனிக் காலங்களில் தண்ணீர் உறைந்துவிடுகிறது. கீவிற்கு வடக்கே யூக்ரேனின் ஸ்டெப்ஸ் புல் தரைகள் பிரதேசத்திற்கப்பால் அப்பிரதேசங்கள் திறந்த வெளியாக இல்லை. அங்கு அடர்த்தியான பெரும் காடுகளும், பல சதுப்பு நிலங்களும் இருக்கின்றன. அவைகளில் இப்பொழுது யுத்தம் நடக்கும் பிராந்தியங்களுக்கு மேற்கே பிரிப்பெட் (Pripet) என்ற பெரிய சதுப்பு நிலமும் உள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்களில் சேனைகள் நடமாடுவதற்கு முடியாத நிலைமையாக உள்ளது. இருப்பினும், 1941-ம் வருஷத்தில் ஜெர்மானியர்கள் மாஸ்கோவை நோக்கிப் போகும்போது இவ்விடையூறுகளால் அவர்களுக்குத் தடையொன்றும் ஏற்படவில்லை. ருஷ்யர்கள், இப்பொழுது திரும்பி வரும்பொழுது இவைகளால் இடையூறுகள் அடையப்போவதில்லை.

ஜெர்மானியர்கள், வைடப்ஸ்க் வழியாகவரும் வடமேற்கு ரயில்வேயின் உதவியைக் கொண்டு டினிப்பரின் வட, தெற்கு பகுதிகளில் ஒரு வேளை நிற்கலாம். ஆனால், அவர்களுக்கு முக்கியமானதும், இப்பொழுது அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஸ்மொலன்ஸ்கையும் கூடிய சீக்கிரம் கைப்பற்றப்படப் போவதான கோமலையும் கைவிட்டு அவர்கள் இங்கு நிற்பதற்கு ஏதும் காரணமில்லை.

மேலே கூறிய இருப்புப்பாதை ஜெர்மானியர்களுக்கு அருகாமையான போக்குவரத்துக்கான வசதியாகும். வெலிக்கி லூகியைப் பிடித்தபின் ருஷ்யர்கள் சென்ற பனிக் காலத்தில் இந்த இருப்புப் பாதையின் அருகாமையில் வந்தபொழுது அவர்கள் இன்னும் வடக்கே பலப்படுத்தினர். மற்ற சைனியங்களின் நடவடிக்கைகள் தீவிரமான யுத்தத்தோடுகூடியதாயிருக்கிறது. ஜெர்மானியர்களின் பின் பாதுகாப்புகள் இலகுவில் இடந்தரத் தக்கதாயில்லை. ருஷ்யர்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அக்கோட்டைகளைத் தகர்க்கும் வரையில் ஜெர்மானியர்கள் இவ்விடம்விட்டு அகன்றாரில்லை.

நீண்ட அளவிலே நேசதேசத்தினர்கள் பெருங்கொள்ளையோ அல்லது சைனியங்களைச் சிறைப்படுத்தவோயில்லை. சென்ற பனிக் காலத்தைப்போல அவ்வளவு அதிகமில்லை என்றே சொல்லவேண்டும். அவ்வாறிருப்பதற்குக் காரணம் முக்கியமாக அவர்களுக்கு இப்பொழுது அவ்வளவு முடியவில்லை. ஏனெனில் முக்கியமாகத் துருப்புகளையும், அவர்களின் தளவாடங்களையும், நிர்மூலமாக்குவதிலே நம் சைனியங்கள் முனைந்திருக்கின்றன.

ருஷ்யர்கள் பின்வாங்கிய காலத்தில் கொல்லப்பட்ட ஜெர்மானியர்களின் எண்ணிக்கையை வெளியிட்டதானது ஊகிப்பின் மேல்தான். ஆனால், இப்பொழுது அவர்கள் முன்னேறிக் கொண்டிருப்பதால் இறந்தவர்களை அவர்களே புதைப்பதாலும் அவர்களை எண்ணுவதின் மூலமும் அந்த எண்ணிக்கை உண்மையானதாகவே இருக்க ஏதுவிருக்கிறது. இப்பொழுது கொடுத்துவரும் கணக்குகளும் இதே எண்ணிக்கையைக் கொண்டுதான் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வித நடவடிக்கைகள் நிற்குமென்பதற்கு எவ்விதமான சந்தர்ப்பமும் இப்பொழுது இல்லை. பனிக்கால மழையின் நிமித்தம் சில வாரங்களுக்குமட்டும் தற்காலிகமாய் யுத்தம் நிறுத்தப்படலாம். ஆனால், உறைபனி ஏற்பட்டவுடன் யுத்தம் மறுபடியும் துவக்கப்படும்.

ருஷ்ய தேசத்தில் எதிரிகள் இழக்கும் ஒவ்வொரு இடமும் அவர்களுக்குத் திரும்பவும் கிடைக்காத வண்ணமாக இழக்கிறார்கள். கொடும் யுத்தங்களில், அவர்களின் தியாகங்கள் எல்லாம் உபயோகமற்றவைகளேயாகும். இதன் முடிவுகள் அவர்களுக்குப் பெரும் தோல்வியோடு கூடியவைகளேயாகும். ஆனாலும் அம்முடிவுகள் நஷ்டத்தோடு கூடியவைகளேயாகும். இப்போது யுத்தம் நடக்கும் அரங்கங்களுக்கு சிறிது குறைந்த தூரத்திலும், பின்

அரங்கங்களுக்கு சிறிது தூரமானதுமான ஒரு இடத்தில் யுத்தம் நடந்தால் அவர்கள் ருஷ்யர் களை ஒரே நிலைக்குக் கொண்டுவருவார்கள் என்று வைத்துக்கொள்வோம். இப்பொழுதும் ஆங்கிலோ, அமெரிக்கத் துருப்புகள், ஐரோப்பாக் கண்டத்தில் இந்த யுத்தத்தின்போக்கில் ஜயம் ஏற்படவேண்டி வந்து இறங்குவார்கள். ராயல் விமானப்படையும், அமெரிக்க விமானப்படையும் ஜெர்மானியர்கள் தொழிற்சாலைகளை நாசமாக்கிக்கொண்டே வருவார்கள். அதனால் ஜெர்மானியர்களின் வலிமையை நசுக்கிவிடுவார்கள். அதே சமயத்தில் ஜெர்மனி யின் ஒவ்வொரு நகரங்களும், ஒன்றன்பின் ஒன்றாக ஹாம்பர்க் அடைந்த கதியை அடையும்.

நறுமணமுள்ள தீவென்று காரணப்பெயர்பூண்ட கார்ஸிகா.

கார்ஸிகாவும், ஸார்டீனியாவும், எல்பாவும் தகர்ந்துபோன பூப்பிரதேசத்தின் பாக்கி யுள்ள பாகங்கள். அவைகளைச் சுற்றிலுமுள்ள தரைப் பிரதேசம் சில இடங்களில் அகாதத் தில் மூழ்கிவிட்டது.

சாதாரணமாக நோக்கினாலும் இந்தத் தீவுகள் ராணுவ முக்கியத்வமுள்ளவைகளென்பது ஸ்பஷ்டமானது. ஏஜியன் கடலுக்குச் செல்லுவதற்கு கிரீட் முக்கியத்வமுள்ளதுபோல் தெற்கு பிரான்ஸுக்கும், வடக்கு, மேற்கு இதாலிக்கும் செல்லுவதற்கு கார்ஸிகாவும், ஸார்டீனியாவும்தான் வாசற்படி போன்றவைகள்.

இவைகளின் ராணுவ முக்கியத்வம், உலக சரித்திர ஆரம்பமுதல் மதிக்கப்பட்டிருக் கிறது: பினீஷியர்கள் பாலியாரிக் தீவுகளையும், ஸார்டீனியாவையும், கார்ஸிகாவையும், ஸிஸிலியின் ஒரு பாகத்தையும், மால்டாவையும் ஆக்கிரமித்து கடலின் இடுப்புப்போன்ற பாகத்தில் அவர்கள் கார்தேஜ் நகரத்தை நிர்மாணம் செய்தார்கள். அதற்கு வெகு நாட் களுக்குப் பின்னும் மத்தியதரைக்கடலிலுள்ள தீவுகள் முக்கியத்துவமுள்ளவையென்று கருதப்பட்டது. அவைகளைப் பிடிப்பதற்காகப் பிரிடிஷ் கடற்படையையும், பிரெஞ்சுக் கடற் படையும் அடிக்கடி போர் தொடுத்திருக்கின்றன.

பிரான்ஸின் ஆக்ஷி.

1769-ம் வருஷம் முதல் கார்ஸிகாவில் பிரெஞ்சுக்காரர்கள் ஆக்ஷிபுரிந்துவந்தனர். மத்தியில் 1794 முதல் 1797-ம் வருஷம் வரையில் ஆங்கிலேயர்கள் அங்கு நிர்வாகம் செய்தனர். பிரெஞ்சுக்காரர்கள் அதை வெகு தந்திரமாகக் கைப்பற்றிவிட்டனர். தீவின் நிர்வாகத்தை ஆதரிப்பதுபோல் பாசாங்குசெய்து அதை அழித்துவிட்டனர். இப்பொழுது தான் நெபோலியன் அவதாரம் செய்தார். ஹாலந்து ரோஸ் என்பவர் "நெபோலியனின் ஜீவிய சரித்திரம்" என்ற புஸ்தகத்தில் நெபோலியன் சொன்ன வார்த்தைகளை வெளியிட்டி ருக்கிறார். இந்த அபிப்பிராயத்தை நெபோலியன் பிற்பாடு மாற்றிக்கொண்டான். அவன் பிறந்த வருஷத்தில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி அவன் பின்வருமாறு குறிப்பிடு கிறான்.

"ஸ்வதந்திர முடியை ரத்த வெள்ளத்தில் அமிழ்த்துவிட்டு 30,000 பிரெஞ்சுக்காரர்கள் நமது கடற்கரையில் வந்திறங்கினார்கள். இந்த கோரமான தோற்றம்தான் எனக்குப் புலப்பட்டது".

நெபோலியனுடைய அமுலின் கீழ் கார்ஸிகாவும், பிரான்ஸும், சிறந்த பாந்தவ்யம் ஏற்படுத்திக்கொண்டன. இந்த சம்பந்தம் இயற்கைக்கொவ்வாதது. ஏனெனில், நாம் புராணத்தை ஆராய்ச்சி செய்தால், கார்ஸிகாவில் இதாலிய பாஷையும், இதாலிய வாழ்க்கை, அழிவு முறைகளும்தான் மிகுதியாகயிருக்கின்றன. கார்ஸிகா தீவு தனிப்பட்ட பிரெஞ்சுக் குடியேற்ற நாடல்ல. அது பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்ட இலாகா. அதற்கு பிரெஞ்சு சட்ட சபையில் பிரதிநிதித்வமுண்டு. ஆகிலும், முஸோலினியும், அவனைச் சேர்ந்தவர்களும் கார்ஸிகாவைக் கவர்ந்துகொள்ள கண் நோக்கினார்கள்.

ஐரோப்பாக் கண்டத்திலிருந்து அது 52 மைல்கள் தூரத்திலிருக்கிறது. அதன் ஐச்வர் யங்கள் சொற்பம்தான். ஆகிலும், அதன் ராணுவ முக்கியத்வம் அதிகமானது. இதாலிய பாஸிஸ்டு கக்ஷிக்காரர்கள், மத்தியதரைக்கடல், இதாலிய ஏரி என்று சொல்லுவதற்கு இந்தத் தீவைக் கைப்பற்றிக்கொள்ளுவது அவசியமாகும். ஜினோவாவும், லெக்ஹார்னும் சுலபமாகத் தாக்குதலுக்குட்படக்கூடிய முக்கியமான துறைமுகங்கள். லா ஸ்பீஸியாவி லுள்ள கப்பல் தளமும் அவ்வகைப்பட்டதுதான். அஜாசியோ கடலை ஒட்டியிருக்கிறது.

தெற்குக் கோடியிலுள்ள ஸான் போனிபேசியோ, போனிபேசியோ என்ற குறுகலான ஜல சந்தியை நோக்கியிருக்கிறது. அந்த ஜலசந்தியில் பலமான தற்காப்புகளுள்ள மாடெலனு என்னும் தீவு இருக்கிறது. பாஸ்டியா இதாலிக்கு வெகு சமீபத்திலிருக்கிறது. இதாலியக் கடற்படை நடமாடக்கூடிய மார்க்கங்களை இதிலிருந்து கவனித்துவரலாம்.

இவ்விதமாக கார்ஸிகாவில் மூன்று சிறந்த கப்பற்தளங்களும், தேசத்தின் குன்றுப் பாங்கான பிரதேசத்தினுல், விமானத் தளங்களுக்குக் குறைந்த வசதிகளும் இருக்கின்றன. ஆகையால், இதாலியர்கள் இதைக் கவர்ந்துகொள்ள ஆசைப்பட்டார்களென்பதில் ஒரு ஆச்சரியமுமில்லை.

கார்ஸிகாவின் சிறந்த அழகு.

கார்ஸிகாவின் அழகு தனிப்பட்டது. அதிலுள்ள பாறைகள் அநேக வர்ண விசேஷங்களுள்ளவை. சிவப்பும், பச்சையும், பழுப்பு வர்ணமும், சாம்பல் வர்ணமும் நிரம்பியிருக்கின்றன. பாறைகளின் அமைப்பு விசேஷத்தினுல் அவைகள் சீக்கிரத்தில் சிதைவுபட்டு அழகான கோடுகளும், பள்ளத்தாக்குகளும் உண்டாகுகின்றன. அவைகளில் வேகம் பொருந்திய மலையருவிகள் ஓடுகின்றன.

தீவின் அநேக பாகங்களில் கருவாலி மரங்களும், கார்க்கு மரங்களும், தேவதாரு விருக்ஷங்களும் ஓங்கி நிற்கின்றன. தீவு பூராவிலும், கார்ஸிகாவுக்கு விசேஷமான புஷ்ப வர்க்கங்களுள்ள அடர்த்தியான மாக்வி என்ற செடிகள் ஏராளமாக இருக்கின்றன. கார்ஸிகாவின் அழகை மதித்துத்தான் அதற்கு நறுமணமுள்ள தீவு என்று காரணப் பெயர் வழங்கப்படுகிறது.

இயற்கையழகு இருந்தபோதிலும், கார்ஸிகாவின் புராணம் மங்கலானது; ஸ்வாரஸ்யமற்றது. இந்தத் தோற்றம்தான் ஆல்பான்ஸே தாதத்தின் கதைகளில் புலப்படுகிறது. இந்த கோரமானத் தோற்றம் இரவில் அதிகமாகக் காணப்படுகிறது. பாறைகளிலுள்ள வர்ணங்கள் மறைந்து இருள்மூண்டு விடும்பொழுது, குடியிருப்புகளுள்ள கிராமத்தை விட்டுச் சென்றுல் விவரிக்கமுடியாதபடி தனித்து நிற்பதும், சௌகரியமின்மையும் புலப்படும். ஆகிலும், சில இடங்களில் ஆலிவ் மரங்களும், திராக்ஷைக் கொடிகளும் உள்ள பள்ளத்தாக்குகளின் உச்சியில் சிறிய கிராமங்களையும் பிரயாணி காணக்கூடும். பாறைகளைப்போல விசித்திரமான வர்ணங்களுள்ள மணல்பாங்கான கடற்கரைகளும் சில இடங்களில் காணப்படுகின்றன.

மலைப்பாங்கான கார்ஸிகாவில் எல்லாவிதமான சீதோஷ்ண ஸ்திதியும், காணப்படுகின்றது. இதனுல்தான் கார்ஸிகாவில் சுகாதாரக் குறைவென்ற அபப்ரதை அதற்கு உண்டாகியிருக்கிறது. பள்ளத்தாக்குகளிலிருந்து ஜலத்தைக் கொண்டுபோகும் ஜலாசயங்களும், வாய்க்கால்களும் கொசுக்களுக்கு உற்பத்தி ஸ்தானங்களாகயிருக்கின்றன. மலேரியா குளிர் ஜுரம் அபாரமாக அங்கு உலாவிவருகிறது. அங்கே சுகாதார முறைகளும் உபயோகமற்றவை. வாழ்க்கை முறைகளும் மட்டமானவை. ஆகிலும், ஏராளமாக நல்ல பக்குவமற்ற திராக்ஷா ரஸத்தைப் பானம் பண்ணுவதுமூலம் உயர்வான ஆகாரத்தைக் கார்ஸிகா வாசிகள் உட்கொள்ளுவதால் அவர்கள் ஜீவித்துவருகிருர்கள்.

ஜெர்மன் கடற்படையின் பலஹீனம்.

மத்தியதரைக்கடலில் புதிய நிலைமை.

போர்முனையிலிருந்து இதாலியக் கடற்படை மறைந்துவிட்டபடியால், ஜெர்மானியர்கள், யூப்படகுகள், விமானப்படை, லேசான கடற்கரையில் நடமாடும் கப்பல்களின் உதவி கொண்டுதான் மத்தியதரைக்கடலில் நேசதேசத்தாரின் கடற்படையைத் தாக்க வேண்டும்.

மத்தியதரைக்கடலில் நடமாட்டத்துக்கு அனுப்பக்கூடிய யூப்படகுகளின் சங்கியை அட்லாண்டிக்கடல் யுத்தத்தின் விளைவைப் பொருத்ததாகும். இவ்வருஷ ஆரம்பத்தைப் போல அட்லாண்டிக்கில் மகத்தான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதென்று கடற்தளபதி டோனிட்ஸ் நிச்சயம்செய்து அதன் மூலமாக யூப்படகுகளுக்கு அதிக நஷ்டமேற்பட்டால் மத்தியதரைக்கடல் நடவடிக்கைகளுக்கு தற்பொழுது அதிக யூப்படகுகளைக் கொண்டுவர

முடியாது. தற்சமயம் மத்தியதரைக்கடலில் சில யூப்படகுகள்தானிருக்கின்றன. இந்த வருஷ ஆரம்பம் முதல் இதாலிய நிர்வாகம் சரணடைந்த வரையிலும் அவைகள் ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

அவைகள் கடைசித் தடவையாக, 1942-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் துருப்புகள் இறங்கியபின் அவைகளுக்கு அனுப்பப்படும் ஸப்ளை மார்க்கங்களைத் தாக்கியிருக்கின்றன. அப்பொழுது அவைகளுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது. 7 நாட்களில் 13 யூப்படகுகள் நஷ்டமாகிவிட்டன.

ஜெர்மன் யூப்படகு வேலைக்காரர்கள் மத்தியதரைக்கடலில் நடவடிக்கை செய்வதில் பிரியப்படுகிறதில்லை. அட்லாண்டிக் கடலைவிட இங்கு அபாயம் அதிகம் என்று அவர்கள் மதித்துவிட்டார்கள். கப்பல் கூட்டங்களின் ரக்ஷணைக்கு அபரிமிதமான விமானப்படைகள் துணைக்காவல் செய்வதிலிருந்து குறுகிய கடல்களில் நடவடிக்கை ஆரம்பிப்பதின் சிரமங்கள் அதிகப்படுகின்றன. மத்தியதரைக்கடலிலுள்ள கஷ்டசாத்யமான வேலைகளைச் செய்வதற்கு ஜெர்மன் யூப்படகுத் தலைவர்களுக்கும், வேலைக்காரர்களுக்கும் பயிற்சியும் அனுபவமும் கிடையாது.

மத்தியதரைக்கடலில் ஜெர்மன் யூப்படகுகள் நடமாடுவதற்கு லேனிலும், மார்ஸெயில்ஸிலும் இதாலியில் ஜெர்மன் வசமிருக்கும் துறைமுகங்களும் கிரேக்க தேசத்திலுள்ள கடற்படை தளங்களும்தான் முக்கியமான தளங்கள். தற்பொழுது அட்லாண்டிக் கடற்கரையிலுள்ள தளங்களைப்போல் மத்தியதரைக்கடலிலுள்ள தளங்களில் விமானத் தாக்குதலைத் தடுக்கக்கூடிய தற்காப்புகள் பலமாக அமைக்கப்படவில்லை. நமது கடற்படைக்கு ஜெர்மன் விமானப்படை மூலமும், ஜெர்மனி கைப்பற்றியிருக்கும் இதாலியக் கடற்படை மூலமும்தான் வாஸ்தவமான அபாயமுண்டாகியிருக்கிறது. எதிரியின் விமான நடவடிக்கைகளுக்கு கிரீட்டும், தெற்குப் பிரான்ஸிலுள்ள விமானக் கூடங்களும், பெலாப்பனீஸும் முக்கியமான முன்னணி தளங்களாகும்.

ஆகிலும், நமது கடற்படையைத் தாக்கக்கூடிய எதிரியின் விமானப்படை பலம் இதாலியிலும் மற்ற இடங்களிலும் தரைப்போருக்குதவியாக எதிரி உபயோகப்படுத்தும் விமானங்களைப் பொருத்ததாகும்.

நேசநாடுகள் முன்னேறி வரும்பொழுது, அவர்கள் எதிரியின் விமானக் கூடங்களைக் கைப்பற்றுவதுடன் ஐரோப்பாவில் விமானப்படையைக் குவித்து கப்பற்படையையும் காப்பாற்ற முயற்சி செய்து விடுவார்கள்.

இதாலி சரண்புகுந்த காலத்தில் ஜெர்மானியரிடம் கடலில் நடமாடும் பெரிய கப்பல்கள் அதிகமாக இல்லை. யூகோஸ்லாவியக் கடற்படையைச் சேர்ந்த ஒன்று அல்லது இரண்டு பகுதிகளும் தரை மார்க்கமாக வந்த சில மோட்டார் மீன் வெடிப்படகுகளும்தான் மத்திய தரைக்கடலில் நடமாடின. ஆகையால், இதாலியக் கடற்படையைச் சேர்ந்த சிறிய கப்பல்களை ஜெர்மனி கைப்பற்றி அவைகளை உபயோகிக்கக்கூடும். இதாலியக் கடற்படையில் சில நாசகாரிகளும், மீன் வெடி ஈ படகுகளும், யூ படகுகளும் மோட்டார் மீன் வெடிப் படகுகளுமிருக்கின்றன. அவைகளின் மொத்தக் கணக்கை மதித்துச் சொல்லுவது சாத்தியமில்லை. மோட்டார் மீன் வெடிப் படகுகளையும், இதர சிறிய கலங்களையும் சுலபமாகக் கைப்பற்றி விடலாமென்றாலும் மற்ற கப்பல்களை ஓட்டுவதற்கு ஆள்களைத் தயாரிப்பதும் அவைகளில் தற்காப்புகளை அமைப்பதும் சிரமசாத்யமான காரியமாகும்.

ஜெர்மானியர்கள் இதாலியக் கடற்படையைச் சேர்ந்த பழுதுபட்ட மூன்று பெரிய கப்பல்களைக் கைப்பற்றிவிட்டார்கள். சண்டைக் கப்பல் காவோரும், இரண்டு 8 அங்குல பீரங்கிகளுள்ள சஞ்சாரிகளான கோரிஸியாவும், போல்ஸானோவும் கைப்பற்றப்பட்டன. இந்தக் கப்பல்களைச் சீர்படுத்துவதற்கு எதிரிகளிடம் பழுது பார்க்கும் நிலயங்களிருக்கின்றன. ஆகிலும், அவைகளை உபயோகிப்பதற்குமுன் அவைகளுக்கு வேண்டிய தளவாடங்களையும், கப்பல் வேலைக்காரர்களையும், கண்டுபிடிப்பது கஷ்ட சாத்யமான வேலையாகும்.

ஜெர்மனியிடமிருக்கும் படைபலம் இவ்வளவுதான். எந்நிலைமையிலும், இதாலியக் கடற்படை செய்துவந்த சுரங்கவெடி வாறுதல், துறைமுகங்களை ரக்ஷித்தல், நீர்மூழ்கிகளை அழித்தல், சாமான் கப்பல்களுக்கு துணைக்காவல் புரிதல் போன்ற சாதாரண அலுவல்களைச் செய்வதற்கே அவைகள் போதுமானதல்ல. துருப்புகளை ஏற்றிச் செல்லுவது, இறக்குவது, இறங்கிய துருப்புகளுக்கு உதவிப்படைகளை அனுப்புவது போன்ற வேலைகளையும் செய்து வரும் நேசதேசக் கடற்படையின் வலிமையைத் தடுக்க, ஜெர்மானியரிடம் யூப்படகுகளையும், விமானப்படையையும் தவிர வேறு போதுமான பலம் கிடையாது.

ஜெர்மன் கடற்படையில் கலவரம் என்ற வதந்தி.

நார்விக் பிராந்தியத்தில் ஜெர்மன் கடற்படையில் ஏதோ ஆச்சரியப்படத்தக்க சம்பவம் நடந்திருப்பது நிச்சயம் என்று டெயிலி டெலிகிராப் பத்திரிகையின் கடற்படை நிருபர் எழுதியிருக்கிறார்.

ஜெர்மன் யுத்தக் கப்பல் டிர்பிட்ஸும், சஞ்சாரியான ஷார்ன்ஹார்ஸ்டும், கொள்ளைக் கப்பலான லூயட்ஸௌவும், 8 இஞ்சு பீரங்கியுள்ள ஹிப்பர் வகுப்பைச் சேர்ந்த சஞ்சாரியும் உள்ள ஜெர்மன் கடற்படையின் பெரும் பாகம் தூர வடக்கிலுள்ள நார்வீஜியன் வளைகுடாக்களில் வைக்கப்பட்டிருந்தன. கொள்ளைக் கப்பலான லூயட்ஸௌ இப்பொழுது தெற்கு நோக்கிச் சென்று ஜெர்மன் துறைமுகத்துக்கு வந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. சென்ற சில நாட்களாக ஸ்வீடனிலிருந்து வெளியாகும் ஜெர்மன் செய்திகளையும் ரிபோர்ட்டுகளையும் கவனித்தால் இந்தக் கப்பலின் சலனத்தில் அதிக விசேஷமிருக்கிறது.

பிரிடனைச் சேர்ந்த சிறிய நீர்மூழ்கிகள் நார்வேயிலுள்ள வளைகுடாக்களை ஊடுருவிச் செல்ல முயன்றதென்றும் அவைகளின் வேலைக்காரர்கள் கைதி செய்யப்பட்டார்களென்றும் சில நாட்களுக்குமுன் ஜெர்மானியர்கள் அறிக்கை வெளியிட்டார்கள். சிறிய நீர்மூழ்கிகளைப் பற்றிய விவரங்களை அவர்கள் வெளியிடவில்லை. பேர்ல் துறைமுகத்திலும், டிகோஸுரஸ்ஸிலும்,ஸிட்னியிலும் ஜப்பானியர்கள் உபயோகப்படுத்திய நீர்மூழ்கிகளுக்கு பிரிடிஷ் நீர்மூழ்கிகள் ஒப்பிடக்கூடியவையென்று ஜெர்மானியர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்த சம்பவத்தைப்பற்றி ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் அதிகார முறையில் ஒரு அறிக்கையையும் வெளியிடவில்லை. ஆகிலும், ஸ்வீடனில் வெளிவரும் ஏராளமான ரிபோர்ட்டுகளில் ஜெர்மன் கடற்படையில் நாசவேலை நடந்ததென்றும் கலவரம் உண்டாகி விட்டதென்றும் கலவரத்தில் ஜெர்மன் ராணுவமும் கலந்து கொண்டதென்றும் சொல்லப்படுகிறது.

ஜெர்மன் கடற்படையின் தலைவரான கடற்தளபதி டோனிட்ஸ் வடக்கு முனைக்குத் தெற்கே 90 மைல்களிலுள்ள ஆல்டன் வளைகுடாவுக்கு நாசவேலையைப் பார்வையிட்டு, விசாரணை நடத்தச் சென்றிருக்கிறாரென்றும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் ஜெர்மன் கடற்படையைச் சேர்ந்த ஒரு கப்பல் மட்டும் துறைமுகத்தை விட்டு புறப்பட்டு தனியாக வேகமாகச் சென்று விட்டதென்பது விந்தையாகவிருக்கிறது. நார்வேயின் வளைகுடாக்களிலுள்ள எல்லாக் கப்பல்களும் பழுதுபட்டுவிட்டன என்று எண்ணுவது அசம்பாவிதமாகிலும் ஆல்டன் துறைமுகத்திலுள்ள ஜெர்மன் கடற்படையின் நிலைமை திருப்திகரமாகயில்லையென்பது நிச்சயம். ஆல்டன் துறைமுகத்தில் பழுதுபார்க்கப் போதுமான தளவாட வசதிகளில்லாததால் ஜெர்மன் கப்பல் கட்டும் தளங்களிலிருந்து சாமான்களைக் கொண்டு வருவதற்காக லூயட்ஸௌ என்ற கொள்ளைக்கப்பல் தெற்கு நோக்கிச் சென்றிருக்கக்கூடும்.

இதாலியின் சரணாகதியும், ஜப்பானும்.

இதாலியர்கள் சமாதான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்களென்ற தகவல் ஜப்பானியர்களுக்கு இடிவிழுந்தது போலாகிற்று. முஸோலினி வீழ்ச்சிபெற்றபின் டோக்கியோ அரசாங்க வர்க்கத்தார்கள் யுத்தத்தை முஸோலினி தீரமாக நடத்தாததினால்தான் அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்களென்று ஜனங்களுக்குப் புகட்டினார்கள். மார்ஷல் படோக்ளியோ திறைமை வாய்ந்த ஸோல்ஜரென்றும் இந்த சமயத்தில் சமாளித்து நிற்க அவன்தான் தகுந்தவனென்றும் பிரமாதமாகச் சொல்லப்பட்டது.

ஜூலை 17-ம் தேதியன்று டோமி செய்தி நிலயத்திலிருந்து இதாலி கடைசிவரையில் போராடுமென்று ஸ்டெபானி சொன்னதாக வெளிவந்தது. ஜூலை மாதம் 18-ம் தேதி டோக்கியோவிலுள்ள அயல்நாட்டு மந்திரி முஸோலினியின் உத்தரவுப்படி அச்சுநாடுகளின் ஒப்பந்தம் உறுதியானதென்று டோஜோவிடம் சொன்னான். முஸோலினி வீழ்ச்சிபெற்றபின் ஜூலை 27-ம் தேதியன்று இதாலியின் யுத்த நடவடிக்கையில் மாறுதல் ஏற்படாது என்று இதாலிய அயல் நாட்டு மந்திரி உறுதி கூறினார். ஜூலை 28-ம் தேதி டோமி செய்தி நிலயம் பின்வருமாறு வெளியிட்டது. "இதாலிய நிர்வாகம் மூவர் ஒப்பந்தத்தின்படி எப்பொழுதும் நடந்துகொள்ளுமென்றும் வாக்குறுதி செய்ததிலிருந்து அச்சுநாடுகளுக்கு எதிரிடையாகப் பிரசாரம் செய்பவர்களின் முயற்சி பயன்படாமல் போய்விட்டது." ஆகஸ்டு

மாதம் 30-ம் தேதியன்று அறிக்கை நிலயத்தின் தலைவரான எயிஜி அமாவு, இதாலி தனிப்பட்ட ஒரு சமாதானத்தையும் செய்துகொள்ளாதென்றும் மூவர் ஒப்பந்தத்திலிருந்து இதாலியைப் பிரித்துவிட நேசதேசத்தார்கள் செய்துவரும் சூழ்ச்சிகள் பிரயோஜனப்படாதென்றும் சொல்லிவிட்டார்.

கடைசியாக ஸெப்டம்பர் மாதம் 8-ம் தேதியன்று டோமி நியூஸ் ஏஜென்ஸியின் ரோமிலுள்ள விசேஷ நிருபரான ரினிசி சசாகியிடமிருந்து கிடைத்த தகவல்களை டோகியோ பத்திரிகைகளில் பிரசுரித்தார்கள். "நேசதேச வல்லரசுகள், இதாலி கூடிய சீக்கிரத்தில் சரணடைந்து விடுமென்று சொல்லிவருகிறார்கள். ஆகிலும், இதாலிய மக்களையும், அவர்களுடைய உணர்ச்சியையும், நடப்பு காரியங்களையும் கவனித்தால் வித்தியாசத்தைக் கண்டுபிடித்துவிடலாம். இதாலியர்களின் நடவடிக்கை, பரியாலோசனை செய்யப்பட்டபின் நியாயமானதும், பகுத்தறிவுக்கொத்ததுமானதாகயிருந்தது."

அன்றிரவு டோகியோவிலுள்ள ஜெர்மன் அயல்நாட்டு மந்திரி ஷிகமிட்ஸுவிடம் இதாலிய ஆலோசனையின் முடிவைத் தெரிவித்தார். மறுநாள் காலையில் டோகியோ ஒலிபரப்பு ஜெர்மானியர்கள் அடங்காக் கோபத்துடன் இதாலியின் சரணாகதியைப்பற்றி சமாதானம் கூறும் வெளியீடுகளை இடைவிடாது சொல்லிவந்தது. அதற்குப்பின் இதாலியின் சரணாகதி ஜப்பான் எதிர்பார்த்ததுதானென்றும், அதிலிருந்து ஜப்பானுக்கு ஏமாற்றமேற்படவில்லையென்றும் ஜப்பான் சொல்லிவந்தது. ஜெர்மானியர்களும், இதை அறிந்திருந்தார்களென்றும் சகலவிதமான ராணுவ ஜாக்கிரதைகளையும், மற்ற நடவடிக்கைகளையும் ஜெர்மனி எடுத்துக்கொண்டுவிட்டதென்றும் ஜப்பான் சொல்லிவந்தது.

இதாலியின் நடவடிக்கையிலிருந்து ஜப்பானுக்கு அதிகத் துக்கம் ஏற்பட்டது. ஏனென்றால் இதாலி சரணாகதி செய்யாது என்ற பிரசாரத்தை ஜப்பானில் மட்டுமல்லாமல் உலகம் பூராவிலும் அது நடத்தியிருக்கிறது. அதற்குப்பின் வேறுவிதமான பிரசாரம் செய்யப்பட்டது. இதாலியின் சரணாகதி பெரும் துரோகமென்றும், இது பெரிய விடுதலையென்றும், ஜெர்மனியின் பளுக்குறைந்துவிட்டதென்றும், இதாலிக்கு, ஜெர்மனி இனிமேல் ஸப்ளைகளை அனுப்பவேண்டியதில்லையென்றும், ஜெர்மன் துருப்புகள் தாராளமாக இதாலியில் நடமாடக்கூடுமானதால் ஜெர்மனியின் யுத்த நிலைமை வலுவடைந்து விட்டதென்றும், எந்நிலைமையிலும் ஸ்வதந்திர பாஸிஸ்ட் நிர்வாகம் நிறுவப்படுமென்றும், அந்த நிர்வாகம் எந்த இடத்தில் யாருடைய தலைமையின் கீழ் அமைக்கப்பட்டிருக்கிறதென்று ஜெர்மனி தகவலனுப்பியவுடன் அந்த நிர்வாகத்தை ஜப்பான் அங்கீகரிக்கத் தயாராகயிருக்கிறதென்றும் ஜப்பான் சொல்லிவந்தது.

இதேசமயத்தில் சுயேச்சையும், ஸ்வதந்திரமும் நிரம்பியிருக்கிறது என்று சொல்லப்படும் ஆக்கிரமிப்பு சைனாவில் இதாலியர்களுக்குச் சொந்தமான ஐச்வர்யங்களையெல்லாம் ஜப்பான் தன் வசப்படுத்திவிட்டது. ஜப்பானியரின் உதாரமான புதிய கொள்கையின்படி நாங்கிங் அரசாங்கம் உயர்வான அந்தஸ்து பெற்றிருக்கிறதென்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

இதாலியின் சரணாகதிச் செய்தியைக்கேட்டு ஆக்கிரமிப்பு நாடுகளில், முக்கியமாக, பிலிப்பைன்ஸிலும் ஸியாமிலும் பலமான நடுக்கமுண்டாயிற்று. பர்மாவும், மற்றதேசங்களும் "எல்லாம் மாறுதலடைந்த போதிலும், நிலைமையில் மாறுதலேற்படவில்லை" என்றும் செய்திகளை வெளியிட்டன.

இதாலியக் கடற்படை, பிரிடிஷ் கடற்படையுடன் சேர்ந்துவிட்டதென்பதைப்பற்றி ஒரு வியாக்கியானமும் செய்யப்படவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப்பின் மத்தியதரைக்கடலிலுள்ள பிரிடிஷ் கடற்படை விடுவிக்கப்பட்டு கிழக்கு சமுத்திரங்களுக்குச் செல்ல வசதி உண்டாகிவிட்டது.

கம்மாண்டோ சேவைப் படைகளின் திறமை.

பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த ஸாப்பர்ஸ்.

ஸாலர்னோவைச் சுற்றிலும் கடற்கரைப் பிரதேசங்களைப் பிடிக்க யுத்தம் நடைபெற்று வரும்பொழுது எட்டாம் படையின் இருகரங்களும் இதாலியின் கால் கட்டைவிரல் பக்கத்திலிருந்தும் இதாலியிருந்தும் வடக்கு நோக்கி முன்னேறுகின்றன. படைகள் முன்னேறிச்

செல்லும்பொழுது அநேக விமான தளங்கள் நேசதேச வசமாகிவிடுகின்றன. அதி சீக்கிரத்தில் பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த சேவையாளர்கள் அவைகளைப் போருக்கு லாயக்கான தளங்களாகத் திருத்தியமைத்து விடுகிறார்கள்.

இதுவரையில் 16 விமானக்கூடங்களும், இறங்கும் தளங்களும் நமது வசமாகிவிட்டன. இதாலியின் குதிகால் பாகத்திலுள்ள லேக்கி, டொரானடோ, கியோஸியா, குரோட்டாக்ளி, பாரி முதலிய தளங்களில் நடுத்தரமான வெடி விமானங்கள் இறங்கலாம். ஆன்பானராசியோவும், மண்டூரியாவும் கனமான வெடிவிமானங்கள் இறங்க வசதியுள்ளவைகள். ஆபத்துக் காலத்தில் உபயோகப்படக்கூடிய லெவெரானோ விமானதளத்தில் சண்டை விமானங்கள் தான் நடமாடலாம். பிரிண்டிஸி விமானதளத்தை சண்டை விமானங்களும், கடல் விமானங்களும், உபயோகிக்கலாம். கட்டைவிரல் பகுதியில் ரோஸரோ, டெரினிஸி, பொட்ரி ஸெல்லோ, ஸ்கேலியா, பிரஜா, டாஜெடா முதலிய தளங்கள் சண்டை விமானங்களின் நடமாட்டத்துக்குப் பிரயோஜனப்படும். விபி வாலன்ஷியாவிலுள்ள சண்டை விமானக்கூடம் நன்றாய் அமைக்கப்பட்டிருக்கிறது. ரெக்கியோடி கலாப்ரியாவும் கிரெடொனும் நடுத்தரமான வெடிவிமானங்களின் நடமாட்டத்துக்கு லாயக்குள்ளவை. ஆகிலும் கலாப்ரியாவிலுள்ள விமான தளம்தான் நல்ல மூஸ்திப்புகளுள்ளது. ஸாப்ரியில் கடல் விமானதளமிருக்கிறது.

சில மணி நேரத்தில் திருத்தியமைக்கப்பட்டன.

முதன் முதலில் பிடிபட்ட ரெக்கியோ விமான தளத்திலிருந்த இடைஞ்சல்கள் சில மணி நேரத்திற்குள் நிவர்த்திக்கப்பட்டன. படையெடுக்கும் துருப்புகளுடன் சேவைப்படையினரும் சென்று இந்த மகத்தான வேலையில் ஈடுபட்டனர். இதாலியில் கால்கட்டைவிரல் பாகத்தில் பிரிடிஷ் படையைச் சேர்ந்த ஸ்பிட்பையர் விமானம் இறங்கியபொழுது விமானப் படை வேலைக்காரர்கள், ஏராளமான சாமான்களும், பெட்ரோலுடனும், நின்று கொண்டு விமானங்களில் எண்ணெய் முதலியவற்றை நிறப்புவதற்கும், இதர பழுதுகளைப் பார்ப்பதற்கும் தயாராகயிருந்தனர். இப்பொழுது பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த சேவைப்படைகள் எதிரியைப் பின்பற்றி நெருங்கிச் செல்லுகிறார்கள். புதிய விமான தளங்கள் பிடிபட்டவுடன் அவர்கள் வேலை செய்யத் துவங்குகிறார்கள். முக்கியமான தொழில்களைச் செய்கிறவர்கள், பிட்டர்கள், ரிக்கர்கள், கவசம் செய்கிறவர்கள், யந்திரம் பழுது பார்ப்பவர்கள், மின்சார வேலைக்காரர்கள், சிறந்த பயிற்சி பெற்றிருப்பதால் விமானத்தைச் சேர்ந்த தரைப்படைகளிடம் தளங்களை ஒப்புவிக்கத் தயார்செய்து விடுகிறார்கள்.

ஓடும் வழிகள் பழுது பார்க்கப்படுகின்றன. அவசரத்தில் இறங்கக்கூடிய பிரதேசங்கள் அமைக்கப்படுகின்றன. பீரங்கிக் குண்டுகளுக்குட்பட்டும் கபடமாக அமைக்கப்பட்டிருக்கும் ரஸ்தாக்கள் மூலமாகவும் சாமான் ஏற்றிச் செல்லும் வண்டிகள் பெட்ரோலையும் வெடி மருந்து சாமான்களையும் குவித்து வருகின்றன.

பிரிண்டிஸியைச் சுற்றிலுமுள்ள விமான தளங்களும், வடக்கில் பாரியும் நேசதேச வசமாகிவிட்டதால் வெகுதூரத்திலுள்ள கிரீஸும், கிரீட்டும், ருமேனியாவிலுள்ள போலஸ்தி எண்ணெய் பிரதேசமும் நமது வெடி விமானங்களின் குண்டு வீச்சுக்குச் சமீபத்தில் வந்துவிட்டன. பாக்கியாவும், அதைச் சேர்ந்த விமானக் கூடங்களும் நமது வசமாகிவிட்டதால் பால்கன் நாடுகளையும், மேற்கே ஸாலர்னோவையும் தாக்க நமக்கு அதிக வசதி உண்டாகிவிட்டது.

ஆகிலும், விமான தளங்களில் ஊன்றிக் கொண்டபின் நேசதேச விமானப்படைகள் தரைப்படைகளுக்குக் கூடுமான ஒத்தாசை செய்வதுதான் முக்கியமான வேலையாகும். ஆகையால், தற்பொழுது விமானப்படை உயர்தர மார்ஷலான டெட்டர் இதாலியில் ஜெர்மானியர்களுக்கு முக்கியமான, விமான தளங்களையும், ரஸ்தாக்களையும், இருப்புப்பாதைகளையும், இதர லக்ஷியங்களையும் நொருக்குவதில்தான் விமானப்படையை ஏவுகிறார்.

பிரிடிஷ் கம்மாண்டோப் படைக்கு வேகம்தான் முக்கியமானது. போர்புரியும் படைகளுடன் சென்று அவர்கள் ஸாப்பர்ஸ், இன்ஜினியர்கள், யந்திர வேலைக்காரர்கள், கவசம்பூண்ட தரைப்படைகளுக்கு மார்க்கத்தைத் தயாரித்துக் கொடுப்பதுபோல, விமானங்களுக்கு உதவி செய்கின்றார்கள். எதிரி பின்வாங்கும்பொழுது செய்யும் நாசத்தையும் நேசதேச வெடி விமானங்கள் உண்டாக்கும் கெடுதலையும் அவர்கள் சீர்படுத்தவேண்டும். கம்மாண்டோ சேவைப்படையின் சிறந்த நடவடிக்கை ஸிஸிலியில் நடைபெற்றது. இதாலியைத் தாக்கும் பொழுது இவைகளுக்கு ஏற்பட்ட மகத்தான இன்னல்களுக்கு ஸிஸிலிய நடவடிக்கை மாதிரியாகயிருக்கிறது.

48 மணி நேரத்திற்குள் சீர்பட்டுவிடுகிறது.

ஒரு பிரிடிஷ் காலாட்படை பகுதி பிற்பகல் 1 மணிக்கு கடற்கரையிலிறங்கிற்று. 7 மணிக்கு கம்மாண்டோ சேவைப்படைகள் இறங்கி பாகினோ கடற்கரைப் பிரதேசத்தில் ஒன்று கூடின. தற்காப்பு அரண் அமைக்கப்பட்டது. பதில் தாக்குதலை சமாளிப்பதற்காக அதில் படைகள் வைக்கப்பட்டன. பகல் பூராவிலும் எதிரி விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன. இரவில் வெடிகுண்டுகளும், எதிர்வெடிகளும் முகாமிலும் முகாமைச் சுற்றிலும் போடப்பட்டன. காலையில் 7 மணிக்கு சேவைப்படைகள் கடற்கரையிலிருந்து புறப்பட்டு நான்கு மைல்களுக்கு அப்பாலிலுள்ள ஒரு விமான தளத்திற்குச் சென்றன. அந்த தளம் பண்படுத்தப்பட்டிருந்தது. ஓடு பாதைகளை அமைக்கும் வேலை துவக்கப்பட்டது. பெட்ரோலையும், வெடி மருந்து சாமான்களையும் கடற்கரையிலிருந்து லாரிகள் கொண்டுவந்தன. இரவு 11 மணிக்கு 100 கால்ன் பெட்ரோலும் ஏராளமான எண்ணெயும் வெடி மருந்து சாமான்களும் விமான தளத்தின் சமீபத்தில் குவிந்துவிட்டன. முக்கியமான சில இடங்களில் அவைகள் விநியோகம் செய்யப்பட்டன. புதிதாகப் போடப்பட்ட ஓடு பாதையில் முதன் முதலில் ஸ்பிட்பையர் சண்டை விமானம் இறங்கிற்று. அந்த விமானத்துக்கு வேண்டிய எண்ணெய் நிரப்பப்பட்டு, பழுது முதலியவைகள் கவனிக்கப்பட்டன. பிறகு ஓடு பாதைக்குக் கொண்டுவரப்பட்ட விமானம் மறுபடியும் புறப்பட்டது. அதன்பின் அநேக விமானங்கள் இறங்கின. அவைகளுக்கு மறுபடியும் எண்ணெய் நிரப்பிக்கொண்டிருந்தபொழுது அந்த தளத்தை எதிரிகளின் M. E. 109 விமானங்கள் தாக்கின. ஆகிலும் வேலைநிறுத்தப்படவில்லை.

மறுநாள் அதிகமான பெட்ரோலும், எண்ணெயும், வெடிமருந்துகளும் கடற்கரையிலிருந்து விமான தளத்திற்கு கொண்டு வரப்பட்டன. விமான தளத்தை ஆக்கிரமித்த 48 மணிகள் நேரத்துக்குள்ளாக கம்மாண்டோ சேவைப்படைகள் அதைச் சீர்திருத்திவிட்டனர். பிரிடிஷ் விமானங்கள் புதிய முஸ்தீப்புகளுடன் பழுது பார்க்கப்பட்டபின் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றன. 'இந்த விமான தளத்தை பழுது பார்த்துவிட்டு கம்மாண்டோ சேவைப்படைகள் மற்ற விமான தளங்களுக்குச் சென்று வேலை செய்தனர். ஒரு சமயத்தில் 60 அமெரிக்க வெடி விமானங்கள் பழுது பார்க்கப்பட்டு குறைந்த அவகாசத்தில் வெடிகுண்டுகள் நிறப்பப்பட்டு விமானதளத்திலிருந்து புறப்பட்டன. அமெரிக்க விமான வேலைக்காரர்கள் வரும்வரையில் கம்மாண்டோ சேவைப்படைகள் வேலை செய்துவந்தன.

அதிகமாக வேலை செய்யவேண்டும்.

மத்தியதரைப் போர்முனைக்குச் செல்லுமுன் சில பகுதிகள் பிரிடனில் பயிற்சியளிக்கப்பட்டார்கள். பின்னும் சில பகுதிகள் மத்தியக்கிழக்குப் பிரதேசத்தில் பயிற்சிபெற்றன. கம்மாண்டோ சேவைப் படைகள் இன்னும் கஷ்ட சாத்யமான வேலையை வருங்காலத்தில் செய்துவரவேண்டும்.

பஸிபிக் யுத்தத்தில் விமானந்தாங்கிக் கப்பல்களின் உபயோகம்.

(பீடர் மெஸ்பீல்டு).

பஸிபிக் போர்முனையில் முக்கியமான மாறுதல்கள் நமக்குச் சாதகமாக ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் பிரயோஜனங்கள் இப்பொழுதுதான் நமக்குப் புலப்படுகின்றன. ஜப்பானியர்கள் முன்னேறித்தாக்கும் முறைகளை நிறுத்திவிட்டு, சங்கடப்பட்டுக்கொண்டு தற்காப்பு யுத்தம்செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இந்த மாறுதலுக்கு முக்கியமான காரணம் தூரக்கிழக்கில் நேசதேசத்தாரின் வலிமை அதிகரித்துவிட்டதென்பது நிச்சயம். இந்த அம்சத்தில் பஸிபிக் யுத்தமும் மேற்குப் போர்முனையை ஒத்திருக்கிறது. நேசதேசத்தார்கள் இங்கு விமான ஆதிக்கம் ஏற்படுத்திவருகிறார்கள். அத்துடன் விமான நடவடிக்கையும் விரிவான பிரதேசங்களில் நடைபெற்றுவருகிறது.

ஜப்பானிய விமான பலத்தை அதிகமாக மதித்தோம்.

எல்லோரும் அறிந்தபடி விமானப்படை ஆதிக்கத்துடன் ஜப்பானியர்கள் பஸிபிக்கில் போர் துவக்கினார்கள். நேசதேச விமானப் படைகள் மிகவும் பலஹீனமாகயிருந்ததால், ஜப்பானிய விமானப்படையின் பலத்தை அளவுக்குமேல் அதிகமாக நாம் மதித்துவிட்டோம். அந்தக் காலம் போய்விட்டது. இப்பொழுது ஜப்பானியர்களை எதிர்க்க நம்மிடம் ஏராளமான படைகளிருப்பதால், அவர்களின் உண்மையான வலுவை மதிக்க நமக்கு வசதி

ஏற்பட்டிருக்கிறது. ஜப்பானிய விமானங்கள் இரண்டாந்தரமானவை யென்பதில் சந்தேகமில்லை. விமானம் ஓட்டிகளும் இதேமாதிரியானவர்கள்தான். எவ்வகையிலும், ஜப்பானியர்கள், ஜெர்மானியர்களின் திறமைக்கு ஒப்பிடக்கூடியவர்களில்லை. கங்கியையிலும் எதிரி விமானங்கள் பஸிபிக்குக்கு நாம் அனுப்பிவரும் விமானங்களுடன் ஒப்பிடமுடியாதவை.

பஸிபிக்கில் நேசநாடுகளுக்கு முன்னேறித் தாக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதில் இரண்டு முக்கிய அம்சங்களிருக்கின்றன. ஒன்று கடல் சம்பந்தமானது; மற்றொன்று ராணுவ சம்பந்தமுள்ளது. விளக்கிச் சொன்னால் கடல் நடமாட்டமும், தரைப் போரும் ஒன்று என்று சொல்லலாம். கடல்மூலம் விமான நடமாட்டம் செய்வதற்கு பஸிபிக் சமுத்திரம்தான் சரியான யுத்த அரங்கம். பஸிபிக் கடல் விசாலமாகயிருந்துவருவதால் விமானப் போர்களுக்கு விமானந்தாங்கிக் சப்பல்களை உபயோகிப்பதற்கு உலகத்திலேயே சிறந்த பிராந்தியமாகும். அட்லாண்டிக் கடலைத் தாண்டிச் செல்லும் மார்க்கங்களை ரக்ஷணை செய்துவரும் வேலைக்கு இது எதிர்முறையானது பஸிபிக் சமுத்திரத்தில் விமானந்தாங்கிக் கப்பல்கள் தற்காப்பு முறையில் எதிரியின் எதிர்ப்பிலிருந்து பத்திரமாக உதவிப்படைகளைக்கொண்டுவருவதுடன் முன்னேற்ற யுத்தத்துக்கும், எதிரியின் வாசற்படியை விமானங்கள்மூலம் தாக்குவதற்கும் முக்கியமான உதவியளிக்கக்கூடும். இந்த அம்சத்தில் மகத்தான நடவடிக்கைகளில் எந்த விமானந் தாங்கிக் கப்பலையும் தனிப்பட்ட கப்பல் என்று மதிக்கக்கூடாது. வெற்றிபெறவேண்டுமானால் குறைந்த பக்ஷம் இரண்டு விமானந்தாங்கிக் கப்பல்கள் ஒத்துழைக்கவேண்டும். எதிரியின் பிரதேசத்தில் பகலில் விமான நடவடிக்கை நடைபெறும்பொழுது பகல் சண்டை விமானங்கள் ஒன்றுக்கொன்று உதவுவதுபோல விமானந் தாங்கிக் கப்பல்களும் ஒன்றை மற்றொன்று ஆதரிக்கவேண்டும்.

நேசதேச விமானந்தாங்கிக் கப்பல்களின் மேன்மை.

சென்ற சில மாதங்களில் நேசதேசத்தார்களின் கடற்படையில் அநேக புதிய சக்தி வாய்ந்த விமானந்தாங்கிக் கப்பல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சில கப்பல்கள் பெரியதானவை; சில கப்பல்கள் திருத்தியமைக்கப்பட்ட சிறிய கப்பல்கள். பெரிய கப்பல்களில் 25,000 டன்கள் எடைமானமுள்ள 7 கப்பல்கள் 1942-ம் வருஷ ஆரம்பத்திற்குப் பின் அமெரிக்கக் கடற்படையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பிரிடிஷ் கடற்படையைப் பலப்படுத்தும் முறையிலும், பிரிடிஷ் கப்பல்கட்டும் நிலயங்கள் சுறுசுறுப்பாக வேலை செய்திருக்கின்றன. இருவருமாகச் சேர்ந்து மிகவும் சக்திவாய்ந்த விமானந்தாங்கிக் கப்பல்களின் கூட்டமொன்றைத் தயாரித்திருக்கிறார்கள். அவைகளிலிருந்து ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிர்க்க ஜப்பான் ஏராளமான முயற்சிகள் செய்து, கப்பல்களைக் கட்டியிருந்தாலும் நமது கப்பல்களிலுள்ள விமானங்களின் உயர்வும், யுத்த முஸ்தீப்புகளும் நமக்கு வெற்றியளிக்கக்கூடும்.

நேசதேச விமானந்தாங்கிக் கப்பல்களில் செல்லும் விமானங்கள், பஸிபிக் யுத்த ஆரம்பத்திலிருந்தவைகளைவிட மிகவும் உயர்வானவை என்பதுடன் தரையில் வைக்கப்பட்டிருக்கும் நேசதேச விமானங்களின் பல ரகங்களுடனும் ஒப்பிடக்கூடியவை. பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த சமீபத்தில் கட்டப்பட்ட சூபர்மரீன் ஸீபையர் சண்டை விமானம், ஸ்பிட்பையர் விமானத்தின் மேன்மைக்குச் சிறிதுகூட குறைந்ததில்லை. கப்பல்களிலுள்ள விமானங்களில் கப்பல் தட்டிலிறங்குவதற்காக ஒரு வளையமும், பார்வைக்காக மடக்கிவிடக்கூடிய இரக்கைகளும் அமைக்கப்பட்டிருப்பதால், அவைகள் சிறிது அதிக கனமுள்ளவைகளாதலால் அவைகளின் நடவடிக்கை கொஞ்சம் குறைவாகயிருக்கக்கூடும். இப்பேர்ப்பட்ட விமானங்கள், விமானந்தாங்கிக் கப்பல்களின் மேல்தட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லுவதில் யாதொரு விதமான கஷ்டமும் இல்லையென்று இப்பொழுது தெளிவாகிவிட்டது.

பஸிபிக்கில் விமானந்தாங்கிக் கப்பல்களின் இருவகைப்பட்ட நடவடிக்கை.

விமானந்தாங்கிக் கப்பல்களிலுள்ள விமானங்கள் பஸிபிக் போரில், எதிரியின் கடற்படையை எங்கு கண்டாலும் அழிப்பதும், ஜப்பானியர் வசமுள்ள எல்லைப்புற ஸ்தானங்களில் நேசதேசப் படைகளை இறக்குவதற்கு ஆதரவளிப்பதும்தான் முக்கியமான அலுவல்கள். மத்தியதரைக்கடலில் ரோமா என்னும் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதிலிருந்து யுத்தக் கப்பல்களும், விமானப்படைகளின் காவலில்லாவிட்டால் மூழ்கடிக்கப்படக்கூடியவைகள்தான் என்பதும் புலப்பட்டுவிட்டது.

'வி' டயரி-1944.

(குறிப்பு புஸ்தகம்).

(நவம்பரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ 0—4—3 அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,

தேசீய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 167 (1-வது பிரிவு).

10-10-43	ரேனூர்	... மாலை	7.00	13-10-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00
,,	நாஞ்சூர்	... ,,	7.30	,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00
11-10-43	பூவரசகுடி	... ,,	7.00	,,	பூங்குடி	... மாலை	7.00
,,	வேங்கடகுளம்	... ,,	7.30	,,	சத்யமங்கலம்	... ,,	7.30
12-10-43	பெருங்களூர்	... ,,	7.00	14-10-43	மிரட்டுநிலை	... ,,	7.00
,,	ஆதனக்கோட்டை	... ,,	7.30	,,	அரிமளம்	... ,,	7.30
13-10-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00	15-10-43	உடையாளிப்பட்டி	... ,,	7.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45	,,	கிள்ளுகோட்டை	... ,,	7.30

பிரசங்கம் 168. (2 பிரிவு).

16-10-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00	20-10-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00
17-10-43	குடுமியாமலை	... ,,	7.00	,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00
,,	பரம்பூர்	... ,,	7.30	,,	குழிபிறை	... மாலை	7.00
18-10-43	வெங்களூர்	... ,,	7.00	,,	செவலூர்	... ,,	7.30
,,	கோனுப்பட்டு	... ,,	7.30	21-10-43	களமாவூர்	... ,,	7.00
19-10-43	நச்சாந்துபட்டி	... ,,	7.00	,,	நல்லூர்	... ,,	7.30
,,	விராச்சிலை	... ,,	7.30	22-10-43	பனையப்பட்டி	... ,,	7.00
20-10-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00	,,	ராங்கியம்	... ,,	7.30
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45				

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

9—10—43	பொன்னமராவதி.	16—10—43	திருமெய்யம்.
10—10—43	விராச்சிலை.	17—10—43	தீத்தான்விடுதி.
11—10—43	விராலிமலை.	18—10—43	அரிமளம்.
12—10—43	வடகாடு.	19—10—43	பேராம்பூர்.
13—10—43	கீழாநிலை—புதுப்பட்டி.	20—10—43	கரம்பக்குடி.
14—10—43	ஆலங்குடி.	21—10—43	கீழாநிலை
15—10—43	புதுக்கோட்டை.	22—10—43	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—13-10-43.

புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ அக்டோபர் ௴ 16௳ [ந. 168

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டெண்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

பிரஸங்கம் CLXVIII.

ருஷ்யப் போர்முனையில் ஜெர்மனியின் தோல்விகளுக்குக் காரணம்.

செம்படை ஸ்மொலன்ஸ்க்கைப் பிடித்துவிட்டதிலிருந்து, சென்ற 27 மாதங்களாக நடைபெறும் செஞ்சேனையின் முன்னேற்ற யுத்தத்தின் வெற்றிகளை ஆராய்ச்சி செய்யவும், எதிர்காலத்திய நிகழ்ச்சிகளைப்பற்றி முன்கூடி ஊகித்துச் சொல்லவும், தகுந்த தருணம் வந்துவிட்டதென்று லண்டனிலிருக்கும் வியாக்யானிகள் சொல்லுகிறார்கள்.

ஹிட்லர் ருஷ்யாவைத் தாக்கியதற்கு உள்ள மூன்று முக்கியமான பொருளாதார நோக்கங்களில் உணவுப் பிரச்னையும் ஒன்றென்றும் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். பிரிடன் கடல் முற்றுகை செய்ததிலிருந்து ஜெர்மனிக்கு நிலத்தை செழிப்பிக்கச் செய்யும் உப்புகளும் இதர உணவுப் பொருள்களும் போகமுடியாமல் தடைபட்டன. ஜெர்மனியைச் சேர்ந்த இதர ஆக்கிரமிப்பு நாடுகளிலிருந்து அவைகளை உண்டுபண்ண 16,00,000 ஜனங்கள் விவசாயத்தில் ஈடுபட்டனர். இவ்விதமாக ஏற்பட்ட மனித பலக் குறைவைச் சரிப்படுத்த முடியவில்லை.

டானட்ஸ் நதிப் பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகளைக் கைப்பற்றுவதுதான் ஹிட்லரின் இரண்டாவது நோக்கம். ஜனநாயக நாடுகளுக்கு ஆயுதக் களஞ்சியம் என்று பொருள்படும்படியாக அமெரிக்காவின் தளவாட உற்பத்தி அதிகரித்துவருவதால் அதைச் சமாளிக்க தொழிற்சாலைகளைக் கைப்பற்றுவது அத்யாவச்யமாகயிருந்தது.

எண்ணெய் சம்பாதிப்பது தான் ஹிட்லரின் மூன்றாவது எண்ணம். பிரிடிஷ் கடல் முற்றுகைக்குப் பின் ருமேனியாதான் ஜெர்மனிக்கு முக்கியமாக எண்ணெய் ஸப்ளை செய்து வந்தது. சேர்மான எண்ணெய் உற்பத்தியில் 80,000 ஜனங்கள் வேலை செய்து வந்தனர். அந்தத் தொழிற்சாலைகள் பிரிடிஷ் விமானப்படையின் குண்டு வீச்சுக் குட்பட்டவை. இவ்வகையிலும் ஜெர்மனியின் மனித பலம் குறைவுபட்டது.

செம்படை முறியடிக்கப்படவில்லை.

ஜெர்மானியர்கள் முதல் எண்ணத்தைப் பூர்த்திசெய்து கொண்டார்கள். டானட்ஸ் நதி பிராந்தியத்தையும் ஆக்கிரமித்தார்கள். ஆகிலும், அதைப் பயன் படும்படி செய்துகொள்ளக் கூடவில்லை. மூன்றாவது நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு, இது 1942-ம் வருஷம் இலையுதிர் காலத்தில் கிட்டிவிடும்போலிருந்தது. ஜெர்மானியர்கள் செம்படையை முதலில் முறியடிக்கவேண்டும். 1941-ம் வருஷம் அக்டோபர் மாதம் 9-ம் தேதியன்று "ருஷ்யப் படைகள் அழிந்துவிட்டனவென்பது நிச்சயம். ருஷ்ய ராணுவம் அற்றுப்போய்விட்டது" என்று

டீட்ரிக் சொன்னபோதிலும், இந்த வேலையைச் செய்து முடிக்க ஜெர்மனி சக்தியற்றதென்று ருஜுவாகிவிட்டது. ஸ்மொலன்ஸ்க்கிலிருந்து ஓட்டம் பிடித்ததன் மூலம், உலகத்தாருக்கும் ஜெர்மன் மக்களுக்கும், ருஷ்யப் போர் முனையில் அவர்களுக்கு பலமான தோல்வி ஏற்பட்ட தென்றும், இனிமேல் எக்காலத்திலும் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையை அவர்கள் இழந்துவிட்டார்களென்றும் நஷ்டங்களை சாத்யமான வரையில் குறைத்துக்கொண்டு பாக்கி யிருக்கும் பிரதேசங்களைக் காப்பாற்றுவதென்றும் தீர்மானம் செய்துவிட்டார்களென்று ஜெர்மானியர்கள் விளம்பரம் செய்துவிட்டார்கள். இந்த நடவடிக்கை மிகவும் முக்கியமான தென்றும் யுத்த நிலைமையை எதிர் காலத்தில் விமர்சனம் செய்யும் பொழுது இந்தப் போக்கையும் கவனித்துப் பார்க்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

ஜெர்மனியின் அளவுகடந்த நம்பிக்கை.

ஜெர்மனியின் தோல்விக்குக் காரணங்கள் என்ன? போர்புரிவதில் ஜெர்மானியர்களை விட ருஷ்யர்கள் தீரர்கள். யுத்தம் நடைபெற்று வரும்பொழுது நாளடைவில் யுத்த தந்திரத் திலும் சேனைகளை ரக்ஷனை செய்வதிலும், முஸ்தீப்புகளைத் தயாரிப்பதிலும் ருஷ்யர்கள் அபார சக்தியுள்ளவர்களென்றும் புலப்பட்டுவிட்டது. ஆகிலும், ஜெர்மன் ராணுவ அதிகாரிகளின் முட்டாள்தனம் தான் ருஷ்ய வெற்றிக்குப் பேருதவி செய்தது. ஜெர்மன் ஜெனரல்கள் நிபுணர்களென்று கியாதிபெற்றிருந்ததால் ஜெர்மனியின் தோல்வி ஆச்சரியகரமாகயிருக்கிறது. ருஷ்ய யுத்த ஆரம்ப காலத்தில் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் அளவு கடந்த நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இந்த மனப்பான்மை, 1941-ம் வருஷம் மாரிகால யுத்தத்துக்கு அவர்கள் தயார் செய்துகொள்ளாததிலிருந்தும் ஸ்டாலின்கிராட்டைப் பிடித்துவிடக் கூடு மென்று ஜெர்மனி நம்பி, அதன் மூலம் சென்ற வருஷத்தில் அதற்கு ஏற்பட்ட இகழ்ச்சியி லிருந்தும் வெளிப்படுகிறது.

அதற்குப் பின், 1939-ம் வருஷத்தில் நடைபெற்ற போலிஷ் யுத்தம் போன்றதென்று நினைத்து ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் குர்ஸ்க் முன்னணி பிரதேசத்தில் வேனிர்காலத்தில் முன்னேறித் தாக்கத் துவங்கினர்கள். அதன் விளைவாக அங்கு உபயோகப்படுத்திய 15 பான்ஸர் டிவிஷன் துருப்புகள் ஏராளமான நஷ்டமடைந்து தங்களுடைய முஸ்தீப்புக ளெல்லாவற்றையும் இழந்து விட்டனர். ஜுலை 5 முதல் 16-ம் தேதிக்குள் ஜெர்மனிக்கு 2,282 டாங்கிகள் நஷ்ட மேற்பட்டதென்று ருஷ்யர்கள் கணக்கிடுகிருர்கள். பின்வாங்கு வதைத் தவிர வேறு கதியில்லாமல் போய்விட்டது.

கடைசியாக, நம்பிக்கையை யிழந்த ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் பீதியடைந்து விட்டார்களென்ற சின்னங்கள் புலப்படுகின்றன. சிறந்த தற்காப்பு அரண்களென்று பீத்திக் கொண்ட பிரதேசங்களை யெல்லாம் அவர்கள் கடைசிவரையில் ரக்ஷிக்கவில்லை. ஸ்டாலின் கிராட் சம்பவத்துக்குப்பின் மனிதர்களையும், முஸ்தீப்புகளையும் காவு கொடுக்க ஜெர்மானியர் கள் துணிவு கொள்ளவில்லை. அபாயத்தைக் கண்டு நடுக்கம் கொண்டு, தற்காப்புகளுள்ள கேந்திர ஸ்தானங்களிலிருந்து கொண்டு ருஷ்யர்களுக்கு பலமான நஷ்டங்களை உண்டுபண்ணு வதைவிட பின் வாங்குவது உத்தமமென்று ஜெர்மானியர்கள் முடிவு செய்துவிட்டார்கள். எதிரிப்படை பலத்தை அழித்தல் என்ற எண்ணத்தையும், ஜெர்மானியர்கள் கைவிட்டு விட்டார்கள்.

புதிய நிலைநிற்கும் பிரதேசம்.

செம்படையின் முன்னேற்ற வேகத்தை எந்தப் பிரதேசத்தில் ஜெர்மானியர் தடுத்து நிற்கக் கூடுமென்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத போனுலும் லண்டனிலுள்ள நிபுணர்கள் கர்ஸான் கோடு என்று சொல்லப்படும் குறுகலான பிரதேசத்தில்தான் ஜெர்மனி நின்று போராடுமென்று சொல்லுகிருர்கள். அந்தக் கோடு ரிகாவிலிருந்து தெற்கு நோக்கி கிராட்னோ வழியாகவும் பியாலிஸ்டாக்குக்கு மேற்கில் பிரெஸ்ட் லிடாவ்ஸ்க் வழியாகவும், பக் நதியின் கரை வழியாகவும், அதன் வலது பக்கம் கார்போதியன் மலைப் பிராந்தியத்திலுமுள்ள தாகவுமிருக்கக்கூடும். இந்தப் பிரதேசத்தில் நின்று போராடுவதில் சில சௌகரியங்களுண்டு. (*a*) இது ஜெர்மன் ராஜ்யத்துக்கு சிறிது வெளியே யிருக்கிறது. (*b*) இப்பொழுது சுமாராக 1,200 மைல்கள் கொண்ட போர்முனைக்கு பதிலாக 700 மைல்கள் நீளமுள்ள போர்முனை ஏற்படும். (*c*) அதற்குப் பின்புறத்தில் சிறந்த போக்குவரவு சாதனங்கள் அமைக்கப்பட்டி ருக்கின்றன. (*d*) அதற்குக் கிழக்கில் பிரிபெட் சதுப்பு நிலங்கள் காபந்து அளிக்கின்றன. அதற்குக் கிழக்கிலுள்ள ருஷ்யப்படைகளுக்கு போக்குவரவு மார்க்கங்கள் குறைவாகவும் வெகு தூரம் செல்லக்கூடியதாகவுமிருக்கும். (*e*) தெற்கு, மேற்குப் போர்முனைகளுக்கு கிழக்குப் போர்முனையிலிருந்து சில ஜெர்மன் துருப்புகளை அனுப்ப ஜெர்மனிக்கு வசதி ஏற்படும்.

இந்தப் பிரதேசங்களில் நின்று போராடுவதில் சில அசௌகரியங்களும் உண்டு. (*a*) ஏராளமான படைகளைப் பின்வாங்கும்படி செய்வதிலிருந்து ஜெர்மன் ராணுவ அதிகாரிகளிடம் ஜெர்மன் மக்களுக்கு உள்ள நம்பிக்கை குறைவு ஏற்படும். (*b*) பால்கன் நாடுகள் ரக்ஷணை

யற்று செம்படையின் தாக்குதலுக்குட்பட வேண்டியதாகயிருக்கும். மேலும், அந்நாடுகளி லுள்ள இயற்கைப் பொருள்களின் நஷ்டமும் ஏற்படக்கூடும்.

மற்றொரு விஷயத்தையும் நாம் இந்த விமர்சனத்தில் எடுத்துரைக்கவேண்டும். இவ் வருஷ ஆரம்பத்தில் ரூர் பிரதேசத்தைத் தாக்கிய பிரிடிஷ் விமானப்படை ஏற்கனவே முஸ்தீப்புகளை இழந்து நிற்கும் ஜெர்மானியர்களை கிழக்குப் போர்முனையிலும் பலமாகத் தாக்கக்கூடும். ஜூன் மாதம் 9-ம் தேதியன்று "ரூர் பிரதேசத்தின் யுத்த தளவாட உற்பத் தியில் 35 சதவிகிதம் அழிக்கப்பட்டுவிட்டதென்று ஸெல்போர்ன் பிரபு சொல்லியிருக்கிறார். அதாவது மூன்று மாதங்களில் உற்பத்தி செய்யப்படும் சாமான்கள் நஷ்டமாகிவிட்டன என்று பொருள்படுகிறது. கிழக்குப் போர்முனையிலுள்ள ஜெர்மன் ஸோல்ஜர்கள் வரப்போகும் மூன்று மாதங்களில் மிகவும் நெருக்கடியான நிலைமையை அனுபவிக்கவேண்டிவரும். அவர் களுடைய தலைவர்கள் சாமர்த்தியமற்றவர்களென்று ருஜுவாகிவிட்டது. செம்படை, பின்பற்றிவந்து கொண்டிருக்கிறது. பிரிடிஷ் விமானப்படை அவர்களுடைய முஸ்தீப்புகளை அழித்துவிட்டது. மாரிகாலத்தின் கொடுமைகளும் அவர்களை ஹிம்சிக்க ஆரம்பித்துவிடும்.

வார யுத்தச் செய்திகள்.

(A) – முக்கியமான சம்பவங்கள்.

7—10—43 (வியாழக்கிழமை). தென்கிழக்கு ஆசியாவின் உயர்தர சேனாதிபதியான லூயி மௌண்ட்பேடன் பிரபு புதிய டில்லிக்கு வந்துசேர்ந்தார்.

ருஷ்யர்கள் னெவல் என்னுமிடத்தைப் பிடித்தனர். ஜெர்மனியிலுள்ள ஸ்டட்கார்டை பிரிடிஷ் விமானப்படை பலமாகத் தாக்கியது.

8—10—43 (வெள்ளிக்கிழமை). நேசதேசத்தார்கள் இதாலியிலுள்ள காபுவாவைப் பிடித்தனர்.

9—10—43 (சனிக்கிழமை). ஸ்டெட்டினுக்குச்சமீபத்திலுள்ள ஆன்க்ளாமையும், கிழக்கு பிரஷ்யாவிலுள்ள அயிரன் பர்க்கையும், போலந்திலுள்ள டான்ஸிக்கையும், கினியாவையும் அமெரிக்க வெடி விமானங்கள் பகலில் பலமாகத் தாக்கின. ஜெர்மானியர்கள் டாமன் தீபகற்பத்தைக் காலி செய்துவிட்டார்கள்.

10—10—43 (ஞாயிற்றுக்கிழமை). நேசதேசத்தார்கள் ஸாலமன்ஸிலுள்ள கோலம்பங்காராத் தீவைப் பிடித்தனர்.

11—10—43 (திங்கட்கிழமை). ஜப்பானியர்கள் மதராஸில் முதல் தடவை குண்டுகளை வீசினார்கள். சொல்ப ஆள்சேதம். கட்டடங்களுக்கு சேதமில்லை.

12—10—43 (செவ்வாய்க்கிழமை). அஸோர்ஸ் தீவுகளை உபயோகப்படுத்திக் கொள்ள பிரிடனுக்கு போர்ச்சுகல் அனுமதி அளித்துவிட்டது.

13—10—43 (புதன்கிழமை). இதாலி ஜெர்மனியுடன் போர் தொடுத்துவிட்டது. பிரிடனும், அமெரிக்காவும், ருஷ்யாவும் இதாலியை ஒரு நேசநாடாக ஒப்புக் கொண்டனர்.

ருஷ்யர்கள் மெலிடாபோலைப் பிடித்தனர்.

நேசதேசத்தார்களின் வெடி விமானங்கள் நியூ பிரிடனிலுள்ள ரபாலைத்தாக்கி நாசம் விளைவித்தனர். 176 ஜப்பானிய விமானங்கள் அழிந்தன. 120 ஜப்பானியக் கடற்படைக் கலங்கள் மூழ்கிவிட்டன.

(B)—செய்திச் சுருக்கம்.

ருஷ்யா.–இலையுதிர்கால மழையும், ஜெர்மானியர்களுக்கு உதவியளிக்கவில்லை. ருஷ்யர்கள் மகத்தான ஒரு புதிய தாக்குதலை அக்டோபர் 8-ம் தேதியன்று ஆரம்பித்து லெனின்கிராட் போர்முனையில் னெவெலைப் பிடித்துவிட்டார்கள். நீபர் நதியின் மத்திய பாகத்தில் கீவுக்கு வடக்கிலும், பிரெஸ்லாவலுக்குத் தெற்கிலும், கிரெமென்சங்குக்குத் தென்கிழக்கிலும் ஊடுருவிச் சென்றுவிட்டனர். ருஷ்யத் துருப்புகள் கோமலின் சுற்றுப்புறங்களை அடைந்துவிட்டனர். வைடப்ஸுக்குப் போகும் வழியிலும் போர் நடைபெறுகிறது. டாமன் தீபகற்பம் பூராவும் ருஷ்யர் வசமாகிவிட்டது. அங்கிருந்து கிரிமியாவைத் தாக்குவதற்கு முற்போக்காக கெர்ச் ஜலசந்தியைத் தாண்டி பீரங்கி பிரயோகம் செய்துவருகிறார்கள்.

இதாலி.—நேபிள்ஸுக்கு வடக்கில் 19 மைல்களிலுள்ள காபுவை 5-ம் படை பிடித்து வால்டர்னோ நதிக்கரையில் கேந்திர ஸ்தானத்தை ஸ்தாபித்துவிட்டது. 8-ம் படை மேற்கு நோக்கி தீவிரமாக முன்னேறிவருகிறது. மத்தியப் பகுதியில் விஞ்சியாடர்னோவை நோக்கி துருப்புகள் சிறிது முன்னேறியிருக்கிறார்கள். வால்டர்னோ நதி யுத்தம் நடைபெறுகிறது. இருதரப்பாரும் அதிகமான படைகளைக் குவித்துவருகிறார்கள். ரோமுக்குப் போகும் வழியைத் துறந்துவிடுவதற்காகத்தான் யுத்தம் நடைபெறுகிறது. நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. எதிரி அதன் கரைகளை உடைத்து நாடெங்கும் வெள்ளப்பெருக்கு உண்டுபண்ணிவிட்டான். 8-ம் படை போர் புரிந்துவரும் பிரதேசத்தில் டெர்மாலிக்கு வடமேற்கில் 40 மைல்கள் தூரத்திலுள்ள பெஸ்காரா மீது அமெரிக்கக் கப்பல்கள் பீரங்கிப் பிரயோகம் செய்தன.

துருக்கிக்கு 5 மைல்களிலுள்ள ஸிமித் தீவில் ஜெர்மானியர்கள் இறங்க முயன்றபொழுது துறத்தியடிக்கப்பட்டார்கள்.

ஸெக் படைகள் உஸ்ஞ்ஜ், புட்டுவா முதலிய இடங்களில் இறங்கிவிட்டனர்.

யூகோஸ்லாவில் தேசீய விடுதலை சேனை லிவ்னோ, குபிர்ஸ், வாராஸ்டின்ஸ்கி–டோப்ளிஸ்; லட் எபிர்க், டுஸ்லா முதலிய இடங்களைப் பிடித்தன.

ஜெர்மனி பேரில் விமான நடவடிக்கை.—முக்கியமான லக்ஷியங்கள். ஸ்டட்கார்ட், பிரிட்ரிக் ஷேபன், ஆண்கிளாம், ஆபிரன்பர்க், டான்சிக், கினியா, மன்ஸ்டர், கிரெபெல்ட்.

கடல் போர்.—ஸெப்டம்பர் 27-ம் தேதியன்று பிரிட்டிஷ் சிறிய நீர்மூழ்கிகள் நார்வே வளைகுடாக்களிலிருந்த ஜெர்மன் கப்பல்களைத் தாக்கின. 35,000 டன்கள் எடைமானமுள்ள ஜெர்மன் யுத்தக்.கப்பலான டிர்பிட்ஸ் பழுது செய்யப்பட்டது.

பஸிபிக் யுத்தம்.—ஸாலமன்ஸ் தீவிலுள்ள கொலம்பங்காராவையும், விலாவிலுள்ள விமான தளத்தையும் இஸாபெல் தீவையும் நேசதேசத்தார்கள் கைப்பற்றினார்கள். அக்டோபர் 2-ம் தேதியன்று அமெரிக்க நாசகாரிகள் கொலம்பங்காராவிலிருந்து ஜப்பானியத் துருப்புகளை இட்டுக்கொண்டுபோன படகுகளைத் தாக்கி அவைகளின் பெரும் பாகத்தை அழித்துவிட்டன. "ஆள் சேதமும், ஒரே குழப்பமும்" உண்டாகிற்று என்று சொல்லப்படுகிறது.

அக்டோபர் 5-ம் தேதியன்று வேக் தீவிலுள்ள ஜப்பானியப் படைகளையும், ஜப்பானிய நிலயங்களையும் பஸிபிக் கடற்படையைச் சேர்ந்த டாஸ்க் படைகள் வெடிகுண்டுகளாலும், பீரங்கி பிரயோகத்தினாலும் தாக்கின.

அக்டோபர் 6-ம் தேதியன்று அமெரிக்க நாசகாரி, எதிரியின் பின்வாங்கும் படைகளுக்கு துணைக்காவல் செய்துவந்த ஜப்பானிய யுத்தக் கப்பல்களை வெல்லா லாவெல்லாவில் எதிர்த்தது.

அதன்பின் நேசதேச வெடி விமானங்கள் டச்சுக் கிழக்கிந்தியத் தீவிலுள்ள அம்பாயினாவின்பேரில் குண்டுகளைப் பொழிந்தன. அக்டோபர் 11-ம் தேதி ஸெலிபில் தீவிலுள்ள மாகாஸ்ஸார் பேரில் குண்டுகள் வீசப்பட்டன.

அக்டோபர் 13-ம் தேதியன்று நியூ பிரிடனிலுள்ள ரபாலிலிருக்கும் ஜப்பானிய தளம் மிகவும் பலமாகத் தாக்கப்பட்டது. இரண்டு மணிநேர நடவடிக்கையில் 350 டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன. 177 எதிரி விமானங்களும், 120 கப்பல்களும் நாசமாக்கப்பட்டன.

சைனா.—அமெரிக்க விமானப்படை சீனர்கள் முன்னணி ஸ்தானங்களுக்குப் பாதுகாப்பு அளித்தன. யாங்க்டீஸ் நதிக்கரையிலுள்ள கியூ கியாங்கிலுள்ள ஜப்பானியக் கப்பல்களின் பேரில் குண்டுகளை வீசின. பிரெஞ்சு இந்தோ-சைனாவில் ஹானாயிலுள்ள கியாலெம் விமான தளம் குண்டுவீச்சுக்குட்பட்டது.

பர்மா.—அரக்கான் போர்முனையில் பருவ காலம் முடிந்து காலநிலை சௌகரியமாகயிருக்கிறது. ரோந்து மும்மரமாக நடைபெறுகிறது. விமான நடவடிக்கை விபரங்கள் அடுத்த பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

4—10—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

விமானத் தொழிற்சாலை.—ஜெர்மனியிலுள்ள பிராங்பர்ட் (Frankfurt).

எதிரி விமான நிலயம்-பிரான்ஸிலுள்ள செயிண்ட் நாஸேர் (St. Nazaire).

எதிரிக் கப்பல்கள்.—வடகடல் (North Sea). (75 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப் பட்டன. 15 நேசதேச விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இரவு.—(ராயல் விமானப்படையால்). ஜெர்மனியிலுள்ள பிராங்பர்ட் (Frankfurt), லட்விக்ஷாபன் (Ludwigshafen).

இதர இலக்குகள்.—வடமேற்கு ஜெர்மனி (N. W. Germany). (12 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

பாலங்கள், யுத்த தளவாடங்கள் சேனைகள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—இதாலியிலுள்ள பால்ஸாஞே (Bolzano), பைஸா (Pisa).

ரயில்ரோட் தளங்கள்.—இதாலியிலுள்ள ஐசெர்னியா (Isernia), மிக்நாஞே (Mignano), டெர்ராஸிஞே (Terracina).

ரயில்கள், ரயில்ரோட் சந்திப்புகள், போக்குவரத்து ஸ்தாபனங்கள்.—இதாலி (Italy).

விமான நிலயம்.-மெனிடி (Menidi), அர்காஸ் (Argos).

ருஷ்யா (Russia).

(48 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.-ருஷ்ய யுத்த அரங்கம் பூராவிலும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியர் வெளியேறும் படகுகள்.—ஸாலமன்ஸிலுள்ள விலா (Vila).

பர்மா (Burma).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—மாண்டலே பிரதேசம்.

சேமிப்புகள்.—ஷ்வெபோ (Shwebo), ஸகெய்ங் (Sagaing), யுவாடாங் (Ywataung).

பெரிய களஞ்சியம்.—மிங்யாங் (Myingyan).

கப்பல்கள்.—ரங்கூன் (Rangoon), டாங்குப் (Taungup).

5—10—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல் இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

(15 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன. 6 நேசதேச விமானங்கள் நஷ்டமாயின.)

சேனைகள், யுத்த தளவாடங்கள், தயார் செய்து சேமித்துவைக்குமிடங்கள்.—இதாலியிலுள்ள பொலோஞ (Bologna), கிராசெட்டோ (Grosetto).

விமான நிலயம்.-ரோமிற்கு (Rome) வடக்கில்.

ரஸ்தாக்கள், பாலங்கள்.—பார்மியா (Formia), ஐசெர்னியா (Isernia).

ருஷ்ய (Russia).

(59 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும். ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய ஸப்ளைக் கப்பல்கள்.—செயிண்ட் ஜார்ஜ்முனைக்கும் (Cap. St. George), விட்டு (Vittu) தீவிற்கும் அருகில்.

ஸப்ளைக் கிடங்குகள்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

ஜப்பானியர் வெளியேறும் படகுகள்.—கொலம்பங்காரா, வேக் (Wake) தீவு.

பர்மா (Burma).

ரயில் ஸ்தாபனங்கள்.—மெய்க்டிலா (Meiktila.).

நீராவி யந்திரங்கள்.—இண்டா (Indaw) விற்கும், ஸகெய்ங் (Sagaing) கிற்கும் இடையில்.

கப்பல் படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—புரோம் (Prome).

6—10—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள், களஞ்சியங்கள்.—இதாலியிலுள்ள மெஸ்ட்ரி (Mestre).

ரஸ்தா சந்திப்புகள்.-மிக்நாஞே (Mignano), பார்மியா (Formia), ஐசெர்னியா (Isernia).

மோட்டார் போக்குவரத்துகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களில்.

விமான நிலயம்.—ரோட்ஸிலுள்ள மாரிட்ஸா (Maritza).

துறைமுகம்.—ஸைராஸ் (Syros).

விமான நிலயம்.—கிரீட்டிலுள்ள காஸ்டெல்லி பெடியாடா (Kastelli Pediada).

ருஷ்யா (Russia).

(32 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கப்பல்கள்.-யாங்ட்ஸி (Yangtse).

பர்மா (Burma).

ரயில்வே ஸ்தாபனங்கள்.-புரோம் (Prome).
ஜப்பானியர் ஆக்கிரமித்த கட்டடங்கள்.-கியாக்டா (Kyauktaw).
ஆக்கிரமித்த கிராமங்கள்.—மாயூ (Mayu) தீபகற்பம்.
எதிரி போக்குவரத்து ஸ்தாபனங்கள்.-தாழி (Thazi) ஜங்ஷன்.
சேமிப்புகள்.-ஈயூ (Ye. U.)
தளங்கள்.-செக்யி (Segyi).
மோட்டார் போக்குவரத்துகள்.-ஐராவதி (Irrawaddy).

7—10—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.-எதிரிக் கப்பல்கள் ஊஸ்ட்டர் ஷெல்டி (Ooster Schelde).
தாக்குதல்கள்.-பிரான்ஸ் (France), டச்சுத் தீவுகள் (Dutch Islands).
இரவு.-விமான இஞ்ஜின் தொழிற்சாலை-ஸ்டட்கார்ட் (Stuttgart).
ரேடியோ ஸாதனங்கள்.-பிரைடெட்ரிக் ஷாபன் (Friedrichshafen).
மியூனிச் (Munich).
சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

மோட்டார் போக்குவரத்துகள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்குப் பின்.
எதிரி போக்குவரத்து ஸாதனங்கள், ரஸ்தா சந்திப்புகள்.—யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்குப்பின்.

ருஷ்யா (Russia).

(87 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியத் துருப்புகள்.—கொலம்பங்காரா விலிருந்து வெளியேறுவன.
ஜப்பானிய விமான நிலயங்கள்.—பொகெய்ன் வில்லித் (Bougainville) தீவுகள்.
வேக் (Wake) தீவு.

பர்மா (Burma).

ரயில்வே தளங்கள்.—ஸகெய்ங் (Sagaing).
ராணுவ நிலயங்கள்.—கலிவா (Kalewa).

8—10—43. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(ராயல் விமானப்படையால் தாக்குதல்கள்).
விமான நிலயங்கள்.—பிரான்ஸிலுள்ள பிரெஸ்ட் (Brest).
கப்பல் கட்டும் தளங்கள்.—ஜெர்மனியிலுள்ள ப்ரெமன் (Bremen)
ஸப்மரீன் தளங்கள்.—வெஜிஸாக் (Vegesak).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

அச்சுநாட்டுப் போக்குவரத்துகள்.—இதாலியிலுள்ள வால்டர்னோ (Volturno) நதிக்குப் பின்.

ருஷ்யா (Russia).

(47 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

படகுகள்.—கொலம்பங்காரா (Kolambangara) கடற்கரை.
விமான நிலயங்கள்.—அம்பான் (Ambon).
நியு பிரிடனிலுள்ள கிளஸ்டர் முனை (Cape Gloucester), புரூக் (Brooke) தீவு.
விமான நிலயங்கள்.—இந்தோ-சைனுவிலுள்ள ஹனை (Hanoi).

பர்மா (Burma).

இலக்குகள்.—டாங்குப் (Taungup).
கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசங்கள்.

9—10—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானத் தொழிற்சாலை:—ஸ்டெட்டினிக்கருகிலுள்ள ஆங்லம் (Anklam).
விமான நிலயங்கள்.—கிழக்கு ப்ரெஷியா, அயரென்பர்க் (Airenburg).
ஸப்மரீன் தளங்கள்.—டான்ஸிக் (Danzig).
துறைமுகம், கப்பற்கட்டுந்துறைகள்.—போலந்திலுள்ள டினியா (Gdynia).
இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

(2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை; 6 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
எதிரிப் போக்குவரத்துகள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
விமான நிலயம்.-கிரீஸிலுள்ள ஏதன்ஸ் (Athens).
விமான நிலயங்கள்.-டெடிகானிஸிலுள்ள கிரீட் (Crete), மாரிட்ஸா (Maritza), கலாட்டா (Calata).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய வெளியேறும் படகுகள்.-கொலம்பங்காரா (Kolambangara).
ஜப்பானியச் சைனியங்கள்.—மடாங் (Madang).

பர்மா (Burma).

விமான நிலயம்.-மிங்கலடான் (Mingaladan), ரங்கூன் (Rangoon).
துருப்புகள்.—காலிமியோ (Kalemyo).
3 ஜப்பானியர் ஆக்கிரமித்த கிராமங்கள்.—காலிமியோ (Kalemyo).
முடிவுகள்.-தெற்கு பர்மா (Southern Burma).

10—10—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல், இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி போக்குவரத்துகள்—இதாலிய யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.
விமான நிலயங்கள்.—கிரீஸ் (Greece), ரோட்ஸ் (Rhodes), கிரீட் (Crete).
மோட்டார் பாதைகள்.—ரோம் (Rome), பிராஸினோன் (Frosinone).
காஸ்ஸினோ (Cassino), மாண்ட்ராகோன் (Mondragone).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய வியாபாரக் கப்பல் படகுகள்.—நியூ பிரிடன் (New Britain).
எதிரி தரை ஸ்தாபனங்கள்.—டெனிம்பரா (Tenimbara) தீவு.
விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak). (13 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

பர்மா (Burma).

ரயில்வே பாதைகள்.—ஸகெயிங் (Sagaing).
ஜப்பானியச் சைனியங்கள்.—குமிங் (Kuoming).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

5—10—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யப் போக்குவரத்துகள்.—டினிப்பரில் ருஷ்ய அரண்களுக்குப்பின்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—பிஸ்கே (Biscay) வளைகுடா. (1 ஜப்பானிய விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).
நேசதேச ஆக்கிரமிப்பு முனைகள்.—நியுகினி (New Guinea), ஸாலமன்ஸ் (Solomons).

6—10—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன்.—(London) ஜில்லா, இன்னும் சில இடங்கள்.

ருஷ்யா (Russia).

ருஷ்யப் போக்குவரத்துகள்.—டினிப்பரின் ருஷ்ய அரண்களுக்குப் பின்.

தூரக்கிழக்கு (Far East).

வெல்லா லவெல்லா (Valla Lavella).

7—10—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் பிரதேசம் (London). (விமான எச்சரிக்கை மட்டும்).
சில இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia), தென்கிழக்கு இங்கிலாந்து (South east England). (3 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

8—10—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—கெண்ட் (Kent) இங்கிலாந்திலுள்ள எஸ்ஸெக்ஸ் (Essex).

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.-டினிப்பரின் கீழ்கரை.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள பின்ஸ்ஷாபன் (Finschafen).

9—10—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

டினிப்பரின் கீழ் கரை.

தூரக்கிழக்கு (Far East).

வெல்லா லாவெல்லா (Valla Lavela).

10—10—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

11—10—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

டினிப்பரின் கீழ்கரை.

தூரக்கிழக்கு (Far East).

இந்தியாவிலுள்ள மதராஸ் (Madras) (சொற்ப உயிர்ச்சேதம்).

யுத்தக் குறிப்புகள்.

புதிய ருஷ்யத் தாக்குதல். ஜெர்மானியர்கள் எதிர்பார்த்த வண்ணம் இலையுதிர்கால மழையும் அவர்களுக்கு ஆச்வாசமளிக்கவில்லை. ருஷ்யர்கள் இதுவரையிலில்லாத துணிவுகரமான, சிறந்த திட்டங்களுள்ள, பரிஷ்காரமான ஏற்பாடுகளுள்ள புதிய தாக்குதலை ஆரம்பித்திருக்கிறார்கள். மாஸ்கோவிலுள்ள ராய்டரின்

விசேஷ நிருபர் "இதுவரையில் இம்மாதிரியான மகத்தான தாக்குதல் நடைபெற்றதில்லை" யென்று சொல்லுகிறார். இந்த முன்னேற்றமும் அலைகளைப்போல் பொங்கி வருகிறதென்றும் நீபர் நதிக்கரையிலுள்ள ஜெர்மன் தற்காப்பு ஸ்தானங்களை அழிக்கவும், ருஷ்யாவிலுள்ள ஜெர்மன் படைகளை நாசம் செய்யவும் மகத்தான தாக்குதல் செய்யப்படுகிறதென்றும் அவர் சொல்லுகிறார். அக்டோபர் மாதம் 8-ம் தேதியன்று ஆரம்பமான இந்தப் புதிய தாக்குதலுக்குப்பின் நீபர் நதியை ருஷ்யர்கள் மூன்று இடங்களில் ஊடுருவிச்சென்றுவிட்டனர்.

விஷயமறிந்த வியாக்யானிகள் ஜெர்மன் மாரிகால யுத்தமுனை நீபர் நதிப் பிரதேசமென்றும், நீஸ்டர் நதிப் பிரதேசமென்றும் இனிமேல் சொல்லமாட்டார்கள். ரீகாவிலிருந்து ஓடெஸ்ஸா வரையிலுள்ள ஒரு பிராந்தியத்தில் ஜெர்மானியர்கள் மாரிகாலத்தில் நிலைத்து நிற்பார்களென்று சொல்லப்படுகிறது. இந்தப் போர்முனை 200 மைல் நீளம் குறைவாகயிருப்பதுடன் 40 டிவிஷன் துருப்புகளை மீதப்படுத்தும். பாத் நதிப் பிரதேசத்திலும் ஜெர்மானியர்கள் நிலைத்து நிற்கக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ருஷ்யர்கள் தங்கள் தேசத்தின் எல்லைச்சரகத்தை அடைந்தவுடன் ஊக்கம் குறைந்தவர்களாகிவிடுவார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது ஜெர்மானியர்கள் இவ்விதம் எதிர்பார்த்திருந்தால் அவர்கள் நிச்சயமாய் ஏமாற்றமடைவார்கள். வர்ஷா காலத்துக்குப்பின் மாரிகாலம் வந்துவிடும். இது ருஷ்யாவுக்கு சாதகமான காலம். பனி உறைந்து கெட்டியாகிவிடும். ருஷ்யர்கள் முன்னேறுவதற்கு சௌகரியமேற்படும். தங்கள் தேசத்தைவிட்டு எதிரியை அப்புறப்படுத்துவதோடு மட்டும் ருஷ்யர்கள் திருப்தியடையமாட்டார்கள். ஜெர்மனியிடம் தீர்த்துக்கொள்ளவேண்டிய கணக்கு பாக்கியிருக்கிறது. மற்றெல்லோரையும்விட ஜெர்மனியிடமிருந்து பிரதிப்பயன் அடைய ருஷ்யருக்கு மிகுதியான முகாந்திரமிருக்கிறது. ருஷ்யாவின் எதிர்கால க்ஷேமத்தையும் ருஷ்யர்கள் பத்திரப்படுத்திக்கொள்ளவேண்டும். பெர்லினைப் பிடித்து, நாஸி ஆக்ஷியையும் ஜெர்மன் விமானப்படையையும் அழித்தால்தான் இது சித்திக்கும்.

வி வி வி வி வி

முன் வைத்த காலைப் பின்வாங்குவதில்லை. இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களிருக்கும்பொழுது "கிழக்குப் போர்முனையிலுள்ள ஜெர்மன் படைகள் சதாகாலமும் தற்காப்பே செய்துகொண்டிருக்கும் என்று ஒருவரும் நினைக்கவேண்டாம்" என்று ஜெர்மனி சொல்லிவருவது விந்தையாகயிருக்கிறது. ஸெப்டம்பர் 22-ம் தேதியன்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் பகிரங்கமாக, பக்க பலக்குறைவினாலும், இதாலியில் நேசதேசத்தார்கள் இறங்கிவிட்டதாலும்தான் ஜெர்மன் படைகள் ருஷ்யாவில் பின்வாங்கும்படி நேரிட்டது என்று ஒப்புக்கொண்டார்களெனபது வாசகர்களுக்கு ஞாபகம் வரலாம். இதாலியில் ஒரு சிறிய படை இறங்கியது கண்டு ருஷ்யாவில் ஜெர்மனி மகத்தான முறையில் பின்வாங்கிவிட்டதென்றால் மேற்கு ஐரோப்பாவில் ஏராளமான படைகள் இறங்கும்பொழுது என்ன விளைவுகள் உண்டாகுமென்று சுலபமாய் அறிந்துகொள்ளலாம். இந்தப் படையெடுப்பு நிச்சயமாக ஏற்படுமென்று சொல்லப்பட்டுவிட்டது. ஸெப்டம்பர் 21-ம் தேதி காமன்ஸ் சபையில் மிஸ்ட்டர் சர்ச்சிலும், ஸெப்டம்பர் 17-ம் தேதி அமெரிக்க காங்கிரஸ் சபையில் ரூஸ்வெல்டும் இதை வெளிப்படுத்திவிட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தில் கிழக்குப் போர்முனையில் ஜெர்மானியர்கள் முன்னேறித் தாக்குவதென்பது அப்பத்தப் பேச்சுத்தான்.

இது நடைபெறுதென்பதற்குக் காரணங்களும் இருக்கின்றன. நேசநாடுகளின் யுத்த தளவாட உற்பத்தி ஜெர்மனியுடையதைவிட அதிகரித்துவிட்டது. ஜெர்மன் விமானப் படையின் ஆகாய ஆதிக்கம் போய்விட்டது. ஜெர்மன் துருப்புகள் முறியடிக்க முடியாதவைகள் என்ற பேச்சும் வீணாகிவிட்டது. ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பிய நாடுகள் கலகம் செய்ய ஆரம்பித்துவிட்டன.

வி வி வி வி வி

இன்னும் முறியடிக்கப்படவில்லை. ஜெர்மானியர்கள் இப்பொழுது பின்வாங்குவது அவர்கள் தலைவிரிகோலமாக ஓடும் முறையல்ல. கைதி செய்யப்படும் ஜெர்மானியர்களின் கணக்கை கவனித்தால் ஜெர்மானியர்கள் ஓடும் நிலைமை வந்துவிடவில்லையென்று தோன்றுகிறது.

வி வி வி வி வி

திட்டப்படியில்லை. ஜெர்மானியர்கள் சொல்லிவருகிறபடி பின்வாங்குவது திட்டப்படியும் நடைபெறவில்லை. 1941-ம் வருஷம் ருஷ்யர்கள் பின்வாங்கியபொழுது திட்டப்படி நடைபெற்றதென்று சொல்லப்பட்டது. அவர்களைவிட பலமான படைகள் எதிர்த்ததால் அவர்கள் அகண்டமான பிரதேசத்திற்குள் பின்வாங்கிச் சென்றார்கள். எதிரி சோர்வடைந்தபொழுது அவர்கள் திரும்பி

முன்னேறினார்கள். ருஷ்யர்கள், நெபோலியன் படையெடுத்தபொழுதும் இவ்விதம்தான் செய்தார்கள்.

ஆகிலும், இப்பொழுது பின்வாங்கிவரும் ஜெர்மானியர்கள் மறுபடியும் முன்னேறித் தாக்கமாட்டார்கள். இது சாச்வதமான பிற்போக்காகும்.

வி வி வி வி வி

ஜெர்மனியின் திட்டம் என்ன? ஜெர்மானியர்கள் நடவடிக்கையில் வெளிக்காட்டியிருப்பதைவிட அவர்கள் புத்திகூர்மையும், ஆலோசனையுள்ளவர்களென்றும் நாம் தாராளமாகச் சொல்லலாம். ஆகிலும், சமீப காலத்தில் நடைபெற்ற சம்பவங்களைக் கவனிக்கும்பொழுது அவர்கள் தங்களுடைய பலத்தை விருத்திசெய்து குறிப்பான திட்டங்களைப் போடுவதை விட்டுவிட்டு அல்பமான விஷயங்களை அவலம்பித்து இலையுதிர்கால வர்ஷமும், மாரிகாலக் கடுங்குளிரும் நேசதேசத்தினரிடையே உள்ள மனஸ்தாபங்களும் அவர்களுக்கு உதவியளிக்கப்போகின்றன என்றும் நம்புகிறார்கள். உதாரணமாக, ஸ்டாலின்கிராடைப் பிடிக்க ஏராளமான துருப்புகளைக் காவுகொடுத்தபின் அதை ஏன் கைவிட்டுவிட்டார்களென்றும், ஆபிரிக்காவில் எல்அலாமீன் வரையில் முன்னேறிப் பிறகு ஆபிரிக்கா கண்டத்திலிருந்தே ஏன் வெளியேற்றப்பட்டார்களென்றும், குபான் தீபகற்பத்தை விடாமுயற்சியுடன் தற்காப்பு செய்தபின் அதை ஏன் காலி செய்தார்களென்றும், ஸ்மொலன்ஸ்கில் தற்காப்பு அரண்களை அமைத்தபின் அதைவிட்டு ஏன் வெளியேறினார்களென்றும் விளங்கவில்லை. கிரிமியாவைக் காலிசெய்வதா, இல்லையா என்ற யோசனையில் அவர்கள் ஆழ்ந்திருக்கிறார்கள்.

இதற்குக் காரணங்கள் ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்கு உண்டாகியிருக்கும் சந்தேகமும், சஞ்சலமும்தான். அவர்களுக்கு இன்னது செய்வதென்று விளங்கவில்லை. அவர்கள் அகாலத்தில் முடிவுக்கு வருகிறார்கள். ஸ்டாலின்கிராடைப்போன்ற மற்றொரு நிகழ்ச்சி ஏற்பட்டுவிடுமோவென்ற பீதி உண்டாகியிருக்கிறது. பிடித்த இடங்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆசையும் அவர்களைவிட்டகன்றுவிடவில்லை. ஆகையால் ஒவ்வொரு ஸ்தானத்திலும் அவர்கள் நின்று போராடுகிறார்கள். ஸ்டாலின்கிராடைப்போல் நெருக்கடி வருமென்று புலப்படும்பொழுது அவர்கள் பின்வாங்கிவிடுகிறார்கள்.

வி வி வி வி வி

வால்டர்னோ நதி யுத்தம். 5-ம் படை காபுவாவைப் பிடித்தபின்னும் 8-ம் படை டெர்மாலியைப் பிடித்தபின்னும் வால்டர்னோ நதிப் பிரதேசத்தில் யுத்தம் துவங்கிவிட்டது. இது சரித்திர பிரசித்தமான போர்க்களம். காபுவாவில்தான் பூனிக் யுத்தங்களில் ஹனிபாலின் மாரிகால தலைமை காரியாலயமிருந்தது. 80 வருஷங்களுக்குமுன் தெற்கு இதாலியின் விடுதலைக்காக காரிபால்டி வால்டர்னோ நதிக் கரையில் நிலைநின்று போர்புரிந்தான்.

5-ம் படையின் ரோந்துத் துருப்புகள் சில இடங்களில் வால்டர்னோ நதியைத் தாண்டி எதிர்த்த கரையிலுள்ள ஜெர்மன் தற்காப்பு ஸ்தானங்களை ஊடுருவிச் செல்ல முயலுகின்றனர். 8-ம் படை பஸ்கராவைப் பிடித்துவிட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது.

நேசதேசத்தாரின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்காக கடைசிப் பிரயத்தனமாக ஜெர்மானியர்கள் வால்டர்னோ நதியின் கரைகளை உடைத்துவிட்டு விசாலமான பிராந்தியங்களில் வெள்ளப்பெருக்கு உண்டாக்கிவிட்டார்கள். ஆகிலும் மூன்று பகுதிகளாகச்சென்று அவர்களைத் தாக்க நேசநாடுகள் தயாராகிவருகிறார்கள்.

இப்பொழுது வால்டர்னோ நதிக் கரையில் மூன்றில் ஒரு பங்கை 5-ம் படை ஆக்கிரமித்திருக்கிறது. மற்ற இரண்டு பாகங்களிலும் 8-ம் படை நிலை நின்று ஏட்ரியாடிக் கடல் வரையிலும் பரவியிருக்கிறது. இரண்டு சேனைகளும் பெனவெண்டோ என்னுமிடத்தில் ஒன்று சேருகின்றன.

வி வி வி வி வி

நேசநாடு. சென்ற வாரத்தில் படோக்ளியோ நிர்வாகத்தை நேசக் கட்சியினர் தங்களுடைய நண்பராக மதித்து விட்டார்களென்று எழுதியிருந்தோம். இந்த வாரத்தில் சிலர் இதை ஆக்ஷேபித்தனர். ஆகிலும், மறுபடியும் அது ஊர்ஜிதமாகிவிட்டது. இதிலிருந்து நேசதேசத்தார்களின் அபிப்பிராயம் அடிக்கடி மாறுபாடடைகிறதென்று பொருள்படாது. இது காலத்தின் கோளாறு தவிர வேறில்லை.

உருவில்லாத நிலைமை. இந்த வார ஆரம்பத்தில் படோக்ளியோ நம்முடைய நண்பனுமில்லை, எதிரியுமில்லை, நடுநிலைமைவகிப்பனுமில்லை யென்றும், வியவகாரமுறையில் அவன் எதிரியென்று கருதப்பட்டாலும் காரியாம்சையில் அவன் நமது நண்பனென்றும் சொல்லப்பட்டது. படோக்ளியோ நிர்வாகத்தைச் சேர்ந்த ஒரு சேனாதிபதி நேசநாடுகளுடன் ஒத்துழைத்து தெற்கு இதாலியில் அமுல் நடத்தி வருகிறார். நேசநாட்டார்கள் படோக்ளியோவின் ஒத்தாசை அளவுக்கு அவரை ஆதரித்து வருகிறார்கள். ஆகிலும், நிலைமை குழப்பமாகயிருக்கிறது. படோக்ளியோ இரண்டாம் தரமான நண்பன் தான். ஆகையால் நேசநாட்டாருடன் சேர்ந்து போர்புரியும் நாடென்று சொல்லுவது பொருத்தமானதுதான்.

வி வி வி வி வி

இதாலி ஜெர்மனியுடன் போர் தொடுத்தது. சந்தேகமற இதாலி ஜெர்மனியுடன் போர் தொடுத்து விட்டதென்று படோக்ளியோ பகிரங்கமாகச் சொல்லி விட்டான். இந்தச் செய்தியைச் செவியுற்ற பிரிடனும், அமெரிக்காவும் அதை வரவேற்று இதாலி ஒரு நேசநாடென்றும் சொல்லிவிட்டார்கள். ஆகையால், நேசதேசத்தார்கள் கக்ஷியில மற்றொரு நாடு சேர்த்துவிட்டது. ஹிட்லரின் நம்பிக்கைகளையும், பேராசையையும் அடைத்துவைக்கப்போகும் சவப்பெட்டியில் மற்றொரு ஆணி அறைந்தாகிவிட்டது.

வி வி வி வி வி

ஜெர்மன் அட்டூழியம். அக்டோபர் 13-ம் தேதி புதன்கிழமையன்று படோக்ளியோ ஒரு அறிக்கை விடுத்திருக்கிறான். தான் செய்த முடிவுக்கு இதாலியில் ஜெர்மனி செய்த அக்கிரமங்கள் தான் காரணமென்று அவன் சொல்லியிருக்கிறான். இதற்கு உதாரணமாக நேபிள்ஸ் சர்வகலாசாலையின் தலைவர் வெளியிட்டிருப்பதை இங்கு பிரசுரிப்போம்.

நேபிள்ஸுக்குள் நேசதேசத்தார்கள் நுழைவதற்கு 12 நாட்களுக்குமுன், ஸெப்டம்பர் 19-ம் தேதியன்று, ஜெர்மானியர்கள், ஆடவர்கள், ஸ்திரீகள், குழந்தைகளுள்ள 300 ஜனங்களை கூட்டமாகக் கூட்டி, அவர்களில் ஒருவரை வெளியே நிறுத்தி, ஒரு ஜெர்மன் சிப்பாய் தாக்கப்பட்டதற்குப் பழிவாங்கும் முறையில் எல்லோருடைய முன்னிலையிலும் அவனைச் சுட்டுக் கொன்றார்கள். ஜெர்மானியர்கள் சர்வகலாசாலையின் கட்டடத்தில் பெட்ரோல் எண்ணெய் பீப்பாய்களை வைத்து கட்டடத்தையும் அதிலுள்ள புத்தகசாலையையும் தீக்கிரையாக்கி விட்டனர். நெருப்பு வெகு நாட்கள் வரையிலும் எறிந்தது. நேபிள்ஸிலுள்ள நெருப்பணைக்கும் படையை அங்கு சென்று உதவக்கூடாதென்றும் தடுத்துவிட்டார்கள். விலை மதிக்கத்தகாத 2,000 புஸ்தகங்கள் சாம்பலாகிவிட்டன. இதாலிய பூமியிலிருக்கும் ஜெர்மானியர்களைப்பாக்கியில்லாமல் தேசத்தைவிட்டு அப்புறப்படுத்தும்வரையில் படோக்ளியோ போர்புரிவதாக சபதம் கூறியிருப்பதில் ஒரு ஆச்சரியமுமில்லை.

வி வி வி வி வி

ஒன்றுபட்ட இதாலி. படோக்ளியோவுக்கும், இதாலிலுள்ள தேசீயக் கக்ஷிகளைச் சேர்ந்த ஆறு ஜனநாயகக் கக்ஷிகளுக்கும், ஒற்றுமைக்குறைவு ஏற்படுமென்று ஜெர்மானியர்கள் நம்பியிருந்தார்கள். அந்த விஷயத்திலும் அவர்கள் ஏமாற்றம் அடைந்துவிட்டார்கள். பாஸிஸ்டு கக்ஷியின் 20 வருஷ ஆட்சியின் அனுபவத்திற்குபின் ஸ்வய புத்திபெற்ற இதாலிய ஜனநாயக கக்ஷித் தலைவர்கள், தங்கள் நாட்டின் க்ஷேமத்திற்காக பாஸிஸத்தை நிர்மூலமாக்குவதும் ஜெர்மானியர்களை இதாலியைவிட்டு துரத்தியடிப்பதும்தான் முக்கியமான வேலைகளென்று கண்டுபிடித்துவிட்டார்கள். அவர்களுடைய வித்தியாசங்களை மறந்து பிற்போக்காளர்கள் முதல் பொதுவுடமைக் கக்ஷியார்களுள்பட சகலவிதமான பொது மக்களும் ஒன்று சேரவேண்டுமென்றும் ஜெர்மானியர்களை எதிர்ப்பதுடன் படோக்ளியோவை ஆதரிக்கவேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கை செய்திருக்கிறார்கள். படோக்ளியோவும் தேசீய கக்ஷியார்களுடன் சேர்ந்து ஒத்துழைத்து வருகிறார்.

இதாலியின் மாஜீ அயல் நாட்டு மந்திரியும், ஸ்வதந்திர இதாலி கோஷ்டியின் தலைவருமான கார்லொஸஸ்பார்ஸா பிரபு இதாலிக்குத் திரும்பி வருகிறார். அவரும் படோக்ளியோவுக்கு ஆதரவளிப்பதாகச் சொல்லியிருக்கிறார். இந்த ஹேஷ்யங்களிலிருந்து படோக்ளியோ, ஸ்பார்ஸா மற்ற ஆறு ஜனநாயக் கக்ஷிகள் சேர்ந்த ஒரு தேசீய ஜனநாயக நிர்வாகம் இதாலியில் கூடியசீக்கிரத்தில் அமைக்கப்படலாமென்று தோன்றுகிறது.

ஏராளமான உத்தரவுகள்

இதேசமயத்தில் உள்நாட்டு மந்திரியான முஸோலினி இதாலிய மக்களுக்கு கடுமையான உத்தரவுகளைப் போட்டிருக்கிறான். நேசநாடுகளுடன் ஒத்துழைப்பவருக்கும், யுத்தக் கைதிகளுக்கு உதவியளிப்பவருக்கும், உண்மையான தகவல்களை வெளியிடுகிறவர்களுக்கும், பொதுஜனக் கூட்டங்களில் கலந்து கொள்ளுகிறவர்களுக்கும், அச்சு நாடுகளுக்கு அவசியமான காரியங்களைச் செய்ய மறுக்கிறவர்களுக்கும் கடுங்காவல் முதல் மரண தண்டனை வரையில் சிக்ஷை விதிக்கப்படும் என்று அவன் பயமுறுத்துகிறான். கடற்படையின் மந்திரி உத்தியோகத்தையும், முஸோலினி தானே வகிக்கிறான். இதாலிக்குக் கடற்படையே இல்லை என்பதை வாசகர்கள் ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். ஏதோ ஒரு இடத்திலிருந்து கடற்படை உத்தியோகஸ்தர்களெல்லாம் உத்தரவுகள் பெறுவதற்காக உடன் காலத்தில் ஆஜராகவேண்டுமென்று அவன் உத்தரவு பிறப்பித்திருக்கிறான்.

இதாலிய விமானப்படையையும் முஸோலினி திருத்தியமைத்துவிட்டதாக ரோம் ஒலிபரப்பில் செய்யப்பட்டது. விமானப்படை யாரிடமிருக்கிறது, அவைகளை ஓட்டும் விமானிகள் யாரிடம் சேவை புரிகிறார்களென்பதுதான் விளங்கவில்லை.

வி வி வி வி வி

இதாலிய சாம்ராஜ்ய நாடுகளைத் திரும்பிப் பிடிப்பது.

அச்சு நாட்டார்கள் பயித்தியக் கூட்டத்திலிருப்பவர்கள் போலாகிவிட்டார்கள். கற்பனையாகவுள்ள பாஸிஸ்டு குடியரசு நிர்வாகத்திற்கு முஸோலினி உத்தரவுகள் அனுப்புகிறான். முஸோலினியை பொருட்படுத்தாமலும், அவனுடைய அபிப்பிராயத்தையும் உணர்ச்சிகளையும், லக்ஷியம் செய்யாமலும் முஸோலினியின் குடியரசு நாடுகளைச் சேர்ந்த பொல்ஸானோ, டிரெண்டோ, பெல்லினு என்ற மூன்று மாகாணங்களை ஹிட்லர் சாவதானமாக ஜெர்மனியுடன் சேர்த்துக்கொண்டுவிட்டான். அந்த மாகாணங்களிலுள்ள ஜனங்கள் டோனிய ஜாதியாரைச் சேர்ந்தவர்களென்றும், அந்த தேசங்கள் ஆஸ்திரியாவைச் சேர்ந்தவைகளென்றும் காரணங்கள் சொல்லப்படுகின்றன. பிரென்னர் கணவாயைத் தாண்டி பால்ஸானோ மாகாணம் சென்றுவிட்டது.

வி வி வி வி வி

பால்கன் நாடுகள்.

இதாலியிலும், ருஷ்யாவிலும் நேசநாடுகளுக்கு ஏற்பட்டிருக்கும் வெற்றிகளும், ஏட்ரியாடிக் கடலில் யூகோஸ்லாவியர்களுடைய துணிவுகரமான நடவடிக்கைகளும் விசேஷ பயனளித்துவிட்டன. தெற்கு இதாலியிலுள்ள விமானக் கூடங்களை நேசதேசத்தார்கள் ஆக்கிரமித்தபின் ஹிட்லரின் ஐரோப்பியக் கோட்டைக்கு மேன்கூரை மேயவில்லையென்று பால்கன் நாடுகள் கண்டுபிடித்துவிட்டார்கள். அவர்களுடைய க்ஷேமத்திற்குக் குறைவுவராமல் சிறிய தேசங்கள் காண்பிக்கக்கூடிய மனக்கசப்பு முறைகளை கவனித்தால் அந்த நாடுகளில் அறுவறுப்பு உண்டாகியிருக்கிறதென்பது தெளிவானது. அவர்கள் தங்களுடைய கடன் தொகையைக் குறைத்துக்கொண்டு விட்டார்கள். ஜெர்மனிக்கு அனுப்பும் உணவுப் பொருள்களைக் குறைத்துவிட்டார்கள். ராணுவ உதவி அனுப்புவதை நிறுத்திவிட்டார்கள். ஜெர்மனிக்கு விரோதமான அறிக்கைகளை விடுக்கிறார்கள். சமாதானப் பேச்சுகளையும், துவக்குகிறார்கள். அதிக துணிவுகரமான ஸ்லவோனியர்கள், யூகோஸ்லாவியாவுடன் ஸ்லவோனியக் கடற்கரை மாகாணத்தைச் சேர்த்துவிடுவதற்காக விசேஷமான தேசீய கமிட்டி ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஜெர்மானியர்கள் ஒரு சமயம் நயவஞ்சகமாகப் பேசுவதும், மற்றொரு சமயம் பயமுறுத்துவதுமாக நடந்துகொள்ளுகிறார்கள். ஐரோப்பியக் கோட்டைக்குள் கலகம்செய்கிறவர்களை அடக்கியாள பலாத்காரத்தை ஜெர்மனி உபயோகப்படுத்தவேண்டியதுதான். வெருட்டலால்காரியம் சாதித்துக்கொள்ளக்கூடிய காலம் போய்விட்டது. ஆகையால், பால்கன் நாடுகளில்நயவஞ்சகப் பேச்சுகள் நடைபெறுகின்றன. ஜெர்மனியின் தற்போதைய பிரசார முறைகள்விசித்திரமாகயிருக்கின்றன. பால்கன் நாடுகளைப்பற்றி ஜெர்மனிக்கு எக்காலத்திலும் விரோத புத்தியிருந்ததில்லையென்றும் இதுவரையில் கைப்பற்றிய தேசங்களெல்லாம் ஸாவாய் மன்னரின் சூழ்ச்சியென்றும் சொல்லப்படுகிறது. டிரான்ஸ் ஓஷன் என்றும் பத்திரிகையின் ராஜ தந்திர நிருபரான ருடால்ப் பிஷர் பின்வருமாறு எழுதுகிறார். "ஐரோப்பாவின் சில பாகங்களிலிருந்து இதாலியரின் ஆக்ஷியை அப்புறப்படுத்திவிட்டால் ஜனங்களின் இஷ்டப்படி நாடுகளின் பலத்தைப் பெருக்கிக்கொள்ள ஜெர்மனிக்கு வசதியேற்படும். தெளிவுறச் சொன்னால், இதற்குமுன் நாடுகளை கைவசப்படுத்தியதெல்லாம் இதாலிய மன்னரின் நடவடிக்கைகளென்றும் இப்பொழுது ஜெர்மனி அந்நாடுகளுக்கு ஸ்வதந்திரமளித்துவிடுமென்றும் சொல்லப்பட்டது. இதற்கு அத்தாக்ஷியாக குரோஷியாவுக்கும் மாண்டினீக்ரோவுக்கும் ஜெர்மனி ஸ்வதந்திரம் அளித்துவிட்டது. ஆகிலும், பால்கன் நாடுகள் பழைய

நடவடிக்கைகளை மறந்துவிடவில்லை. 1942-ம் வருஷம் ஜுன் மாதத்தில் நூரம்பர்க் மகா நாட்டில் ஜெர்மானியர்கள் சொன்ன பேச்சை அவர்கள் மறந்துவிடவில்லை. "ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வசதிகளும், வியாபார முறைகளும் ஜெர்மனியின் ராஜீய அவசியத்துக்கு அர்ப்பணம் செய்யப்படவேண்டும்" என்று ஜெர்மனி சொல்லிற்று.

இதே சமயத்தில் நேசநாட்டார்கள் பால்கன் நாடுகளுக்கு ஸப்ளைகளை அனுப்பி அவர்களோடு நட்புக்கொள்ள முயன்று வருகிறார்கள். முக்கியமாக யூகோஸ்லாவிய கொரில்லாப் படைகளுக்கும், ஜெனரல் மிகைலோவிச்சுக்கும் சாமான்கள் அனுப்பப்படுகின்றன. நேசதேசத்தாருடன் சேர்ந்து இப்பொழுது 18,000 கொரில்லாப் படைகள் போர் புரிந்து வருகிறார்கள்.

வி வி வி வி வி

ஹிட்லரின் அயல் வீட்டார்கள். யுத்த நிலைமையில் மாறுதலேற்பட்டிருக்கிறதென்பதற்கு நடுநிலைமை வகிக்கும் நாடுகளின் நடவடிக்கைகள் அத்தாக்ஷியாகும். இந்த மாத ஆரம்பத்தில் நாம் எழுதியிருப்பதுபோல ஸ்வீடன் வழியாக ஜெர்மனிக்குச் செல்லும் போக்குவரவை ஸ்வீடன் நிறுத்திவிட்டது. டென்மார்க்கிலுள்ள யூதர்களைத் துன்புறுத்தும் முறைகள் நிறுத்தப்படாவிட்டால் தகுந்த பதில் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாகவும் ஸ்வீடன் பயமுறுத்திற்று. ஒரு வருஷத்திற்குமுன் ஸ்வீடன் இவ்விதமாக நடந்துகொள்ளத் துணிந்திருக்காது. நடுநிலைமை வகிக்கும் போர்ச்சுகல் தேசம் தனக்குச் சொந்தமான அஸோர்ஸ் தீவுகளை பிரிடன் உபயோகித்துக்கொள்ள பிரிடனுக்கு அனுமதி கொடுத்துவிட்டது. அஸோர்ஸ் தீவுகள் அட்லாண்டிக்கில் முக்கியமான கேந்திர ஸ்தானம் பெற்றவை. அட்லாண்டிக் கடல் யுத்தத்தில் இந்தத் தீவுகள் உபயோகமுள்ளவைகளாகயிருக்கும். போர்ச்சுகல் நடுநிலைமை வகித்தாலும் அதன் எண்ணங்கள் 600 வருஷங்களாக நட்புடனிருக்கும் பிரிடனிடம் தானிருக்கின்றனவென்பது தெளிவுபடுகிறது.

வி வி வி வி வி

மூன்று வல்லரசுகளின் மகாநாடு. பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா மூன்று வல்லரசுகளும் ஒன்றுகூடிப் பேசுவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டுவிட்டன. அமெரிக்க சமஸ்தான காரியதரிசியான மிஸ்ட்டர் கார்டல் ஹல் மாஸ்கோவுக்குப் போவதற்காக பிரேஸில் வழியாகச் சென்றார். பிரிடனின் பிரதிநிதியான மிஸ்ட்டர் ஈடன் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "சரித்திரப் போக்கில் உலகத்தில் மானிடர்களின் முற்போக்குக்கு அநேக சந்தர்ப்பங்கள் சில சமயங்களில் உண்டாகுகின்றன. வரப்போகும் சில மாதங்களில் பிரிடனும், ருஷ்யாவும், அமெரிக்காவும் ஒன்றுகூடி சாச்வதமான ஒப்பந்தம் செய்துகொள்ள நமக்குச் சந்தர்ப்பம் வாய்த்துவிடும். உலகம் பூராவிலும், சமாதானமும், க்ஷேமமும் நிலைபெறுவதற்கு அவசியமான சர்வதேச இயக்கத்தை அமைப்பதற்கு இப்பேர்ப்பட்ட உறுதியான நல்லறிவு அடிப்படையானது. எதிர்காலத்திய பிரிடிஷ் அயல்நாட்டு நடவடிக்கைகளுக்கும் இந்த அஸ்திவாரம் அவசியம். இவ்வகையான பலமான சர்வதேச இயக்கத்திலிருந்துகொண்டு பிரிடன் தன்னுடைய அயல்நாட்டு நடவடிக்கைகளை பயன்படும்படியாக நடத்த முடியும். பிரிடனுக்கும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்திற்கும் தகுதியான நடவடிக்கையானது அமெரிக்காவுடனும், ருஷ்யாவுடனும் உள்ளகூட்டுறவு என்றபலத்தினால் தான் பூர்த்தியடையவேண்டும்."

இவ்விதமாக இரு தேசங்களுடன் கூட்டாளியாகவும், எல்லோரும் சேர்ந்து ஒன்றுபடுவதற்காகவும்தான் இந்த மகாநாடு கூடப்போகிறது. பேர்ல் துறைமுக நடவடிக்கைக்கு முன்னிருந்தே அமெரிக்காவின் தங்குதடையற்ற உறவை பிரிடன் பெற்றுவிட்டது. பொதுவான பாஷையினாலும், கலை ஞானத்தினாலும், உணர்ச்சியினாலும் வேறு எந்த நாடும் பிரிடனுடன் உறவாடவும், ஒத்துழைப்பதற்கும் தகுதியற்றது. இந்த நட்பு ஒன்றுபட்ட யுத்த முயற்சிகளாலும், ஆபிரிக்காவிலும், இதாலியிலும் நடைபெற்ற ஒன்றுபட்ட தியாகங்களாலும் வலுவடைந்திருக்கிறது. மூவர் மகாநாட்டு மூலம் இந்த நட்பு அதிக வலுவடையும். யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் பிரிடனும், அமெரிக்காவும் இணைபிரியாதவர்கள்.

ஆகையால், உலகத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ருஷ்யாவின் நட்பும், ஒத்துழைப்பும் அத்யாவசியமாகும். ஐரோப்பா கண்டத்தில் கொள்ளைக்கூட்டத்தார்கள் இருந்து வரும்வரையில் பிரிடனும், அமெரிக்காவும் பத்திரமாக தனித்து நிற்கமுடியாது. மூன்று வல்லரசுகளின் மகாநாட்டில் ஐரோப்பிய யுத்த அரங்கத்தில் இதுகாறும் தன்னந்தனியாக யுத்த பளுவைத் தாங்கி வந்தவும், எதிர்காலத்தில் ஐரோப்பிய பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஒரு பாகஸ்தருமான ருஷ்யாவுடன் நெருங்கிய சம்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளுவதும்தான் முக்கியமான நடவடிக்கைகளாகும். சமீப காலத்தில் காமன்ஸ் சபையில் சர்ச்சில் சொன்ன பிரகாரம் ருஷ்யாவுடன் நெருங்கிய, நல்லுணர்ச்சியுள்ள, சாச்வதமான சம்பந்தம் ஏற்படுத்திக்

கொள்ளாவிட்டால் இந்த யுத்த முடிவில் அகாதமான குழப்பம் ஆரம்பிக்கும் தருவாயில் தான் நேசதேசத்தார்கள் இருப்பார்கள். அமெரிக்காவுடனும், ருஷ்யாவுடனும் ஒத்துழைப்பதுதான் சாஸ்வதமான சமாதானத்துக்கு அஸ்திவாரம்போன்றது.

வி வி வி வி வி

யூ படகு யுத்தம். இந்த யுத்தம் மறுபடியும் ஆரம்பமாகிவிட்டது. ஆகிலும், சென்ற மூன்று மாதங்களிலிருந்ததுபோல் அவ்வளவு பயங்கரமாகயில்லை. யூ படகுகளைக் கண்டுபிடித்து அழிப்பதற்காகப் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களும், பிரிடிஷ் கடற்படையின் வலிமையும் சேர்ந்து, யூ படகுகளை நீர் மட்டத்துக்குமேல் நடமாடும்படி செய்துவிட்டன. இப்பொழுது அவைகள் நீர் மூழ்கிகள் அல்ல. யூ படகுகளில் கனமான விமான எதிர்ப்பு பீரங்கிகள் அமைக்கப்பட்டிருப்பதால் அவைகள் நீர் பரப்பில் நடமாடி எதிரிகளை எதிர்த்துவருகின்றன. அல்லது அவைகள் எதிரிகளுக்கிரையாகுகின்றன. யூ படகுகள் இனிமேல் நீர்மட்டத்திற்கு அடியில் செல்லும் படகுகள் அல்ல. தண்ணீருக்குள் மூழ்கக்கூடிய சிறிய யுத்தக் கப்பல்களாக மாறிவிட்டன. நீர்மூழ்கியிலிருக்கும் மாலுமிகளுக்கு மூழ்கினால் இறந்துவிடுவோமென்றும் சமுத்திர மட்டத்தில் நடமாடினால் மிகுதியான் பலம் பொருந்திய எதிரிகளோடு போர் புரியவேண்டுமென்றும் புலப்பட்டுவிட்டது.

யூ படகுகளைப்பற்றி சிலாகித்துப் பேசிக்கொண்டிருந்த கோயபல்ஸின் வேலை ஓய்ந்துவிட்டது. காகூதிகள் பலமாக நடைபெறலாம். யூ படகுகளின் தீரர்களைப்பற்றி சிலாகித்துப் பேசி ஜனங்களின் மனப்பான்மை குன்றாதபடி செய்துவரலாம். ஆகிலும், காலக்கிரமத்தில் அவைகள் உபயோகமற்றவைகளாக ஆகிவிடும். நேசநாட்டாரின் சாமான் கப்பல்களும் துணைக்காவல் கப்பல்களும் பன்மடங்கு அதிகரித்துவிட்டன. யூ படகுகளுக்கு முன்போல அதிக வெற்றிகள் கிடைத்தாலும் நேசநாடுகளின் வலிமை குறைந்துவிடாது. நேசநாடுகளிடம் ஏராளமான உபரிக்கப்பல்களிருக்கின்றன.

சமீபத்தில் கிடைத்த தகவல்களிலிருந்து சென்ற மாதத்தில் அட்லாண்டிக்கில் $4\frac{1}{2}$ நாள்கள் நடைபெற்ற யூ படகு யுத்தத்தில் நேசநாட்டாருக்கு நஷ்டமான சாமான் கப்பல்களைவிட ஜெர்மானியர்கள் அதிகமான யூ படகுகளை இழந்திருக்கிறார்களென்று தெரியவருகிறது.

வி வி வி வி வி

பஸிபிக் யுத்தம். இங்கு யுத்தம் நேசநாடுகளுக்கு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. பஸிபிக் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் வேக் தீவுகளின்பேரில் 7-வது தடவையாக பீரங்கி பிரயோகம் செய்திருக்கிறார்கள். வெல்லா லாவெல்லாவிலிருந்த ஜப்பானியப் போர் கப்பல்கள் அடிக்கப்பட்டன. நியூ பிரிடனிலுள்ள ரபாலிலுள்ள ஜப்பானிய விமானக் கூடம் மிகவும் பலமாகத் தாக்கப்பட்டது. 177 எதிரி விமானங்கள் நாசமாகிவிட்டன. 120 கப்பல்கள் மூழ்கிவிட்டன. நியூஜார்ஜியா பூராவும் நேசதேச வசமாகிவிட்டது.

வி வி வி வி வி

ஜெர்மனிபேரில் விமான நடவடிக்கை. அக்டோபர் 15-ம் தேதியுடன் முடிவாகும் 9 நாட்களில் ஜெர்மனிபேரில் பிரிடிஷ் வெடி விமானங்கள் இரவில் 6 தடவையும், அமெரிக்க வெடி விமானங்கள் பகலில் 8 தடவையும் தாக்குதல் செய்தன. மூனிக்கை பிரிடிஷ் விமானப்படை ஸெப்டம்பர் 9-ம் தேதி தாக்கியதின் விளைவுகளைப்பற்றி ஜெர்மன் பத்திரிகையான மீயூன்ச்னர் நீயூஸெஸ்டே நாக்ரிச்டனில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

"மறுபடியும் எதிரிகள் காட்டுமிராண்டித்தனமாக நமது நகரத்தை தீக்கிரையாக்கினார்கள். இந்த புயல்காற்றிற்குப்பின் நமது நாட்டில் கட்டடங்கள் தீப்பற்றி எரிவதையும், வீடுகள் இடிந்து கிடப்பதையும் சித்ரத்துக்குப் பேர்போன அநேக கட்டடங்கள் தகர்ந்து நிற்பதையும் காண்கிறோம். கட்டடங்களுக்கு நாசமேற்பட்டதன்னியில் நமது பொதுஜனங்கள், வேதனையும், கஷ்டத்தையும், வறுமையையும் அனுபவிக்கிறார்கள்.

வி வி வி வி வி

சைன யுத்தம். டோக்கியோவும், டோக்கியோவின் ஆதிக்கத்துக்குட்பட்ட ஒலிபரப்பு நிலயங்களும் ஜப்பானின் வெற்றிகளை மிகைப்படுத்திச் சொல்லுவதற்காக சைன யுத்தத்தைப் பற்றி விபரங்களை எடுத்துச்சொல்லி வருகிறார்கள். ஆகிலும், முகான்மையான சீனரான டாகங்க் என்பவர் உண்மையை வெளிப்படுத்திவிட்டார். குவாங்க்ஸி, செகியாங்க், ஆன்வே மாகாணங்களில் சீனர்கள் முன்னேறித்

தாக்கினர்களென்றும் ஜப்பானியர்கள் தற்காப்பு யுத்தம் செய்யும்படி கட்டாயப்படுத்தப் பட்டார்களென்றும் தெரியவருகிறது. ஜப்பானியர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் ராணுவ முக்யத்வமுள்ளவைகளல்ல. இலையுதிர் காலத்தில் அறுவடையைக் கொள்ளையடிப்பதற்காக ஜப்பானியர்கள் செய்துவரும் வழக்கமான நடவடிக்கைகள்தான். மேலும் இந்த நடவடிக்கைகள் பிரசாரத்துக்கு உபயோகமுள்ளவை. தென்மேற்குப் பஸிபிக்கிலுள்ள எல்லைப்புற ஸ்தானங்களிலிருந்து ஜப்பானியர்களைத் துரத்தியடிக்கும் நேசநாட்டினரின் வெற்றிகளைக்கண்டு ஜப்பானிய மக்கள் மனப்பான்மை குலைந்துவிடாமல் செய்ய இந்த நடவடிக்கை உபயோகப்படும்.

ஸெப்டம்பர் 8-ம் தேதியன்று டோக்கியோ பின்கண்ட ஸ்வாரஸ்யமான ஒலிபரப்பு பிரசங்கம் செய்தது. "எதிரியை பலமான தற்காப்பு ஸ்தானங்களுக்கு சமீபத்தில் இழுத்து வருவதுதான் ஜப்பானின் யுத்த தந்திரம். ஆஸ்திரேலியாவிலும், அலாஸ்காவிலும் பலமான தளங்களையுடைய எதிரியின் பிராந்தியத்தில் போர் செய்வதென்பது ஜப்பானிய தளகர்த்தர்களின் புத்திசாலித்தனத்துக்கு ஒத்ததல்ல. ஜப்பானைச் சுற்றிலும் பிளக்கமுடியாத, தரை, கடல், விமான அரண்களை அமைத்துவிடுவதுதான் ஜப்பானின் யுத்த தந்திரம்."

ஆகையால் ருஷ்யாவிலும், இதாலியிலும் ஜெர்மனி செய்வதுபோல ஜப்பானும் பின் வாங்கும் யுத்தத்தை மேற்கொண்டுவிட்டது.

வி வி வி வி வி

இந்திய விஷயங்கள். தென்கிழக்கு ஆசியா, உயர்தர கமாண்டரான லூயி மௌண்ட் பேட்டன் பிரபு புதிய டில்லிக்கு வந்து ராணுவ அதிகாரிகளுடன் கலந்து பேசுகிறார்.

வேவுபார்க்கும் எதிரி விமானம் சென்ற இரவு மதராஸில் நடமாடிற்று. சில வெடிகுண்டுகளைப் போட்டது. மனித நஷ்டம் சொல்பம். பொருள் நாசம் ஒன்றும் ஏற்படவில்லை. மற்ரொரு ஜப்பானிய விமானம் இலங்கையின் கிழக்கரையில் வட்டாரமிட்டது. குண்டுகளை வீசுவதற்குமுன் அது சுட்டு வீழ்த்தப்பட்டது.

இந்துமகா சமுத்திரத்தில் ஐந்து நாட்கள் துரத்தியடிக்கப்பட்டபின் எதிரியின் யூ படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த கனமான வெடி விமானங்கள் அண்டமான்ஸிலும், நிகோபார் தீவிலுமுள்ள ஜப்பானிய நீர்மூழ்கி தளங்களைத் தாக்கின.

அரக்கான் போர்முனையில் கால நிலைமையில் மாறுதல் ஏற்பட்டு சௌகரியமேற்பட்டிருப்பதால் ரோந்து வேலை அதிகரித்திருக்கிறது.

மூன்று வல்லரசுகளின் மகாநாடுகூட்ட ஆயத்தம்.

ரகசியமான ராஜதந்திர நடவடிக்கைகள்.

(எட்வர்ட் மாண்ட் காமரி).

சமீப எதிர்காலத்தில் நடத்துவதாக உத்தேசித்திருக்கும் மூன்று நேசதேச வல்லரசுகளின் மகாநாட்டிற்காக நடைபெறும் முயற்சிகளைப்பற்றி உத்தியோக முறையில் அறிக்கைகள் வெளிவராவிட்டாலும் சென்ற சில நாட்களாக மூன்று வல்லரசுகள் ஒன்றுகூடி ராஜீய விஷயங்களைப்பற்றி பேசவும், விவாதிக்கவும் ராஜதந்திர முறையில் ரகசியமாக நடவடிக்கைகள் பலமாக நடைபெறுகின்றன என்று புலப்படுகிறது.

காமன்ஸ் சபையில் அவரும், ரூஸ்வெல்ட்டும், ஸ்டாலினும் இவ்வருஷம் முடிவடையுமுன் கூடிப் பேசும்படியான ஏற்பாடு செய்யப்படுமென்று சர்ச்சில் சொன்னது இது விஷயமாக முடிவான அபிப்பிராயம் என்று நாம் கருதலாம். அவர் சொன்னதிலிருந்து மகாநாட்டைப் பற்றி இனிமேல் ஒருவரும் ஊகிப்பது கூடாதென்று தோன்றுகிறது.

மூன்று தேசங்களின் அயல்நாட்டு மந்திரிகள் முற்போக்காகக் கூடிப்பேசுவதற்கு கொஞ்சம் கொஞ்சமாக ஆயத்தம் செய்யப்படுகிறது. மகாநாடு கூடும் காலமும், இடமும் நிர்த்தாரணம் செய்யப்படவில்லை. ஆகிலும், விஷயக் குறிப்புகளின் நகல் தயாரிக்கப்படுகிறதென்றும் மூன்றுதேசங்களின் தலைநகரங்களிலும் நகல் பூர்த்தியாகி விட்டதென்றும் நம்பப்படுகிறது. சர்ச்சில் சொன்ன பிரகாரம் "எந்த விஷயமும் சர்ச்சையிலிருந்து விலக்கப்

படவில்லை." இதன்மூலம் மூன்று தேசத்தினுடைய விஷயக் குறிப்புகளை ஒன்று கூடியமைக்கும் ராஜதந்திரிகள் மீட்டிங்கின் நடவடிக்கைகளைச் சுலபமாகச் செய்து விடலாம்.

வாஷிங்டனிலிருந்து உத்தியோக முறையில் ஒரு அறிக்கையும் வெளிவராதபோனலும், அமெரிக்காவின் பிரதிநிதியாக அமெரிக்க ஸமஸ்தான காரியதரிசியான கார்டல் ஹல் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று சென்ற சில நாட்களாக வதந்திகள் உலாவுகின்றன. ஹல்லின் வருகையை பிரிடிஷ் நிர்வாகமும், ருஷ்ய நிர்வாகமும் வரவேற்குமென்பது நிச்சயம். ராஜ தந்திரி என்ற முறையில் ஹல்லுக்கு ஜனங்களிடம் ஏற்பட்டிருக்கும் புகழும், அமெரிக்க சட்டசபையில் ஹல்லுக்குள்ள ராஜீய செல்வாக்கும் ஜனதிபதிக்கு அடுத்த ஸ்தானத்தை அவருக்கு அளித்திருக்கின்றன. அவர் மகாநாட்டுக்கு வருவதிலிருந்து அதன் நடவடிக்கைகளுக்கு பிராமாணிகமும், மற்ற எந்த அமெரிக்கப் பிரதிநிதியும் சம்பாதிக்க முடியாத விதம் அமெரிக்க காங்கிரஸினிடமும் ஜனங்களிடமும் மதிப்பும் உண்டாகிவிடும்.

அதேவிதமாக, மத்தியதரைக்கடலில் உண்டாகியிருக்கும் ராஜீய பிரச்னைகளைப் பரிசீலனை செய்வதற்காக அமைத்திருக்கும் மத்தியதரைக்கடல் கோஷ்டியின் அந்தஸ்தையும், முக்கியத்தவத்தையும் அபிவிருத்திசெய்யும் முறையில் ருஷ்ய நிர்வாகம் அயல்நாட்டு வியவகார உதவி கமிஷரான M. ஆண்ட்ரீ விசின்ஸ்கியை ருஷ்யாவின் பிரதிநிதியாக அனுப்பியிருக்கிறது.

சென்ற சில வருஷங்களாக ருஷ்யாவின் அந்நியநாட்டு நடவடிக்கைகளில் M. மாலடோவுக்கு விசின்ஸ்கி ஒத்தாசை செய்துவருகிறார். ருஷ்ய நிர்வாகத்தில் அவர் கௌரவம் வாய்ந்த ஸ்தானத்தை வகித்து வருகிறார். அவருடைய நியமனத்தையும் லண்டனிலுள்ளவர்கள் வரவேற்கிறார்கள். மேற்கு ஐரோப்பாவின் நடவடிக்கைகளில் ருஷ்யாவிற்குள்ள சிரத்தையையும், ஐரோப்பாவின் ராஜீய, பொருளாதார புனரமைப்புக்கும், புனருத்தாரணத்துக்கும் பொறுப்பெடுத்துக்கொண்டிருக்கும் மேநாட்டு வல்லரசுகளுடன் ருஷ்யாவும் சேர்ந்து பளுவை ஏற்றுக்கொள்ள அந்தரங்கமாகப் பிரியப்படுகிறதென்றும் லண்டனிலுள்ளவர்கள் கருதுகிறார்கள்.

மத்தியதரைக்கடல் கோஷ்டிக்கு பளுமாவில் அமெரிக்க அயல்நாட்டு தூதராகவிருக்கும் மிஸ்டர் எட்வர்ட் C. வில்ஸனை தேர்ந்தெடுத்திருப்பதாக அமெரிக்க நிர்வாகம் வெளியிட்டுவிட்டது. வில்ஸன் ஐரோப்பிய நடவடிக்கைகளில் அனுபவம்வாய்ந்த ராஜ தந்திரி. பிரிடனுடைய சிபார்சுப்படி கோஷ்டியில் ஸ்தானம்பெற்ற ஆல்ஜியர்ஸிலுள்ள பிரெஞ்சு கமிட்டி அதனுடைய பிரிதிநிதியை இன்னும் நியமிக்கவில்லை.

ஜெர்மனியின் ராஜதந்திரத் தோல்வி.

ஸாலர்னேவிலிருந்து பகிரங்கமாகப் பின்வாங்கியதின் விளைவு.

(W. N. யூயர்).

சென்ற சில நாட்களில் ஜெர்மனிக்கு மகத்தான ராஜதந்திரத் தோல்வி உண்டாகிவிட்டது. அதனுடைய முட்டாள்தனத்தினால் அது அதிகரித்துவிட்டது. அதன் ராஜ தந்திர முறையில் நேசநாட்டாரின் வெற்றியில் ஏற்பட்ட நம்பிக்கையைக் குறைப்பதற்காக ராணுவ வெற்றியை சம்பாதிப்பதுதான் முக்கியமான காரியம். இந்தக் கவலையிலிருந்து நம்பிக்கை உண்டாயிற்று. ஸாலர்னேவிலிருந்து சந்தோஷகரமான முதல் செய்திகளைக்கேட்டு ரிப்பன்டிராப்பும், கோயபல்ஸும் குதூஹல மடைந்தார்கள்.

ஜெர்மனிக்கு வெற்றி கிடைத்துவிட்டதென்றும், நேசதேச ஐந்தாம் படை ஸாலர்னேவைக் காலிசெய்துவிட்டதென்றும் கோயபல்ஸ் உலகத்தாருக்கும் ரிப்பன்டிராப்பு நிர்வாகங்களுக்கும் தங்கள் சிப்பந்திகள் மூலம் பறை சாற்றினார்கள்.

இந்தக் கனவு போன்ற வெற்றியை ஆதாரமாகக்கொண்டு, ஜெர்மன் ராஜ தந்திரிகளும் பிரசாரர்களும், நடுநிலைமை நாடுகளுக்கும் ஜெர்மனியுடன் உறவாடும் நாடுகளுக்கும் யோசனைகளை விடுத்தனர். ஜெர்மனியின் யுத்த முயற்சிகளுக்கு ஹங்கேரியும், பெல்ஜியமும் பொருளுதவவேண்டுமென்று கோரிக்கை செய்யப்பட்டது. ராஜ தந்திர முறையில் தேசங்களுக்கு உத்தரவுகள் அனுப்பப்பட்டன.

அதன் பிறகு எல்லாம் சுருங்கிவிட்டன. ஸாலர்னே யுத்தத்தில் பகிரங்கமான ஜெர்மன் வெற்றிக்குப் பதிலாக பகிரங்கமான ஜெர்மன் தோல்வி ஏற்பட்டது. இந்தத் தோல்வி முக்கியமானது என்பதற்குக் காரணம், இங்குதான் இந்த யுத்தத்தில் முதல் தடவையாக, கேந்திர ஸ்தானத்திலுள்ள தம் சங்கியையில் சரிசமமான அல்லது மிகுதியான ஒரு ஜெர்மன் சேனையானது பிரிடிஷ் அமெரிக்கத் துருப்புகளால் மூறியடிக்கப்பட்டது.

இந்த முக்கியத்வத்தை அறிந்துகொள்ளுவது ஒரு முக்கியமான ராஜீய விஷயமாகும் ஜெர்மன் ராஜ தந்திரிகள் ராணுவ வெற்றியில் அவசரப்பட்டு மிகுதியான நம்பிக்கை கொண்டதினால்தான் தோல்வியின் ராஜீய விளைவுகள் அதிகமாகிவிட்டன. சென்ற சில நாட்களில் இதுவரையிலிருந்ததைவிட இப்பொழுது ஜெர்மன் கௌரவம் பலமாகவும், விரைவிலும் குறைவுபட்டுவிட்டது. கௌரவம் குறைவுபட்டுவரும்பொழுது அதை நிலைநாட்ட எவ்வித ராஜதந்திர முறைகளும் பயன்படாது. ஸாலர்னோவிலிருந்தும், ருஷ்யப் போர்முனை பூராவிலிருந்தும் ஜெர்மனி திடீரென்று பின்வாங்கியதிலிருந்து நடுநிலைமை நாடுகளிலும், ஜெர்மனியைச் சேர்ந்த நாடுகளிலும் ஜெர்மானியர்களைப்பற்றி ராஜீய முறையில் அபிப்பிராய பேதத்தை உண்டாக்கிவிட்டது. முஸோலினியை தூக்கிச் சென்றதில் அவர்கள் செய்த அற்புதமான செய்கையை மிகைப்படுத்தி உபயோகிக்க ஜெர்மானியர்கள் செய்த பிரயத்தனம் அவர்களுக்குப் பாதகமாகமுடிந்தது. முஸோலினியின் ஒலிபரப்புப் பிரசங்கம் முஸோலினியின் புகழை நாசம் செய்துவிட்டது. சாரமற்ற, கம்பீரமற்ற சொற்பொழிவை ஆற்றிய முஸோலினி இனிமேல் சக்திவாய்ந்த தலைவரல்லவென்றும், சிறந்த குயிஸ்லிங் நிர்வாகியுமல்லவென்றும் தெளிவுபட்டுவிட்டது.

இப்பொழுது ஜெர்மனி ஒவ்வொரு நடுநிலைமை நிர்வாகத்துக்கும் சவால் விடுத்திருக்கிறது. இதற்காக ஹிட்லர் கூடிய சீக்கிரம் வருந்துவானென்றும் நான் நினைக்கிறேன். ஹிட்லரின் உத்தரவின்படி முஸோலினி இதாலிய பாஸிஸ்டு குடியரசு நிர்வாகத்தை அமைத்திருக்கிறான். அதற்கு முஸோலினி பிரதம மந்திரி, அயல்நாட்டு மந்திரி. இதாலியில் இதுதான் சட்ட பூர்வமான நிர்வாகம் என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து ஒவ்வொரு நடுநிலைமை வகிக்கும் நிர்வாகமும் முஸோலினியை அங்கீகரிப்பதா அல்லது படோக்ளியோவை ஆதரிப்பதாவென்றும் படோக்ளியோ நிர்வாகத்துடன் ராஜீய ஒப்பந்தங்களை விருத்திசெய்வதா அல்லது அவைகளை ரத்துசெய்து முஸோலினியுடன் சம்பந்தங்கள் ஏற்படுத்திக்கொள்ளுவதாயென்றும் யோசனைசெய்து முடிவுக்குவரவேண்டும். ஸ்பெயின் உள்பட, எந்த நடுநிலைமை வகிக்கும் நாடும் முஸோலினியின் நிர்வாகத்தை அங்கீகாரம் செய்து அதனுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளுமென்று நான் நம்பவில்லை. ஹிட்லர் இகழ்ச்சியை உபசாரம் செய்திருக்கிறான். அது நிச்சயம் அவனுக்குக் கிட்டிவிடும்.

நேசநாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில் அதன் முக்கிய ராஜீய விளைவு பின்வருமாறு. அமெரிக்க, பிரிடிஷ், ருஷ்ய, அயல்நாட்டு மந்திரிகள் ஒன்றுகூடிப் பேசி நிரந்தரமான மூன்று வல்லரசுகள் கொண்ட ராஜீய கோஷ்டியை நிறுவி விடுவதற்கும் அதில் பிரெஞ்சு தேசீய விடுதலைக் கமிட்டிக்குப் பிரதிநிதித்வமளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவென்று மிஸ்ட்டர் சர்ச்சில் பிரசங்கம் செய்திருக்கிறார்.

இதுவரையில் ஒரு முடிவுக்கு வராவிட்டாலும், மகாநாடு மாஸ்கோவில்தான் கூடுமென்று நிச்சயமாகத் தோன்றுகிறது. மகாநாடு அடுத்த மாதத்தில் எப்பொழுதாவது கூடுமென்று சொல்லலாம். ருஷ்யாவின் பிரதிநிதி மாலடோவ், பிரிடனின் பிரதிநிதி மிஸ்ட்டர் ஈடன். வெகு தூரம் பிரயாணம் செல்ல மிஸ்ட்டர் கார்டல் ஹல்லின் தேக ஆரோக்கியம் இடங்கொடுக்குமாவென்பது சந்தேகமாகயிருக்கிறது. அமெரிக்க ஸமஸ்தான காரியதரிசிக்குப் பதிலாக மிஸ்ட்டர் ஹாரி ஹாப்கின்ஸோ, அல்லது மிஸ்ட்டர் ஹாரிமானோ அனுப்பப்படலாம் என்று தோன்றுகிறது. மகாநாட்டில் சகல விஷயங்களும் விவாதிக்கப்படுமென்றுதான் நான் சொல்லக்கூடும். மிஸ்ட்டர் சர்ச்சில் சொல்லுகிறபடி "விவாதத்திலிருந்து ஒரு பிரச்னையும் விலக்கப்படவில்லை."

இந்த வருஷம் முடிவடையுமுன் தானும், மிஸ்ட்டர் ரூஸ்வெல்டும், மார்ஷல் ஸ்டாலினும் சந்தித்துப் பேசக்கூடுமென்று சர்ச்சில் சொல்லுவதிலிருந்து அயல் நாட்டு மந்திரிகள் கூடிப் பேசுவதென்பது மூன்று தலைவர்களும் கூடிப் பேசுவதற்கு முற்போக்கான நடவடிக்கை என்று புலப்படுகிறது.

ஈஜியன் கடலிலுள்ள இதாலியத் தீவுகள்.

டோடிகானீஸ் தீவுகள்.

ஈஜியன் கடலிலுள்ள இதாலியத் தீவுகள் அனடோலியா கடற்கரைக்கு அப்பாலிருக்கின்றன. பாட்மோவிலிருந்து ரோட்ஸ் வரையிலுள்ள ஒன்பது தீவுகள் வட மேற்கிலிருந்து தென் மேற்கு வரையில் 120 மைல்கள் கொண்ட ஒரு பிரதேசத்திலிருக்கின்றன. அவைகளுக்கு மேற்கிலும், தென் மேற்கிலும் ஸ்டாம்பாலியாவும் ஸ்கார்பான்டோவும் (கார்பேதாஸ்) கிழக்கில் ஸிமியுமிருக்கின்றன. அனடோலியா கடற்கரைக்கு வெகு சமீபத்திலும் ரோட்ஸ்

தீவுக்குக் கிழக்கே 85 மைல்கள் தூரத்திலுமுள்ள காஸ்டல் ரோஸோ என்ற சிறிய தீவும் இந்தக் கூட்டத்தில் ஒன்ருகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீவுகளின் பரப்பு 1,040 சதுர மைல்கள். லக்ஸம்பர்க்கைவிட சிறிது பெரிய தானவைகள். 546 சதுர மைல்களுள்ள மிகப்பெரிய தீவான ரோட்ஸ் மால்டாவையும் காஸ்ஸையும் விட ஐந்து மடங்கு பெரியது.

ரோட்ஸ் நகரம் அலெக்ஸாண்ட்ரியாவிலிருந்து 350 மைல்கள் தூரத்திலும், போர்ட் ஸெயிட்டிலிருந்து 410 மைல்கள் தூரத்திலும், பாமா கஸ்டாவிலிருந்து 330 மைல்கள் தூரத்திலும், காண்டியாவிலிருந்து 170 மைல்கள் தூரத்திலும், லேரோ என்பது ஆதென்ஸிலிருந்து 180 மைல்கள் தூரத்திலும், ஸலோனிகாவிலிருந்து 320 மைல்கள் தூரத்திலும், ஸ்மர்ணுவிலிருந்து 90 மைல்கள் தூரத்திலுமிருக்கின்றன.

ஆழமான துறைமுகங்கள்.

எல்லாத் தீவுகளும் மலைப்பாங்கானவைகள். அதன் கடற்கரைகள் கரடுமுரடானவைகள். கடற்கரை யோரங்களில் சிறிய குன்றுகள் செங்குத்தாய்க் கிளம்புகின்றன. கடற்கரையிலிருக்கும் அநேக வளைகுடாக்கள் ஆழமுள்ள துறைமுகங்கள் சிறியவையாகயிருந்தாலும் அவைகள் இயற்கையான தற்காப்புள்ள ஸ்தானங்கள். விமானந்தாங்கிச் செல்லும் கப்பல்கள் தங்குமிடங்கள். முக்கியமான தளங்கள் வடக்கில் லேரோவிலும், தீவுகளுக்கு மேற்கிலுள்ள ஆஸ்டிபேலாயிலிலும், இருக்கின்றன. காஸ்டல் ரோஸோ துறைமுகம் நன்ருய் ரக்ஷிக்கப்பட்டு வருகிறது. லேரோவில், தென்மேற்கிலுள்ள விரிகுடாவில் போர்டோ லாகோ என்ற துறைமுகமும் கிழக்குக் கரையில் அலிண்டா விரிகுடாவின் தெற்குப் பக்கத்தில் ஆகியா மாரினு என்ற துறைமுகமுமிருக்கின்றன. போர்டோ லாகோவில் 2,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களைப் பழுதுபார்க்கும், மிதக்கும் கப்பற்துறையிருக்கிறது. இந்தத் தீவுகளில் இந்த விரிகுடாக்களில் கப்பல்கள் பத்திரமாக நங்கூரம் பாய்ச்சி நிற்கக் கூடும். ஸ்கார்பாண்டோவிலுள்ள மாக்ரியாலோ என்னும் வளைகுடாவிலும் கப்பல்கள் வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்து வரும் புயல் காற்றுகளுக்குட்படாமல் பத்திரமாகத் தங்கியிருக்கக்கூடும். ரோட்ஸ் தீவில் முக்கியமான விமான தளமிருந்து வருகிறது.

ஆயுதம் பூண்ட படைகளைத் தவிர இந்தத் தீவுகளில் 1938-ம் வருஷக் கடைசியிலிருந்த ஜனத்தொகை 1,21,485 என்று கணக்கிடப்படுகிறது. அதில் 1,20,000 ஜனங்கள் தேசஸ்தர்கள். ரோட்ஸிலுள்ளவர்கள் 51,205, காஸ் தீவிலுள்ளவர்கள் 19,029, காலிஞேவிலுள்ளவர்கள். 14,800 பேர்கள் ரோட்ஸின் ஜனத்தொகையில் பாதி பாகம் நகரத்தில் வசித்து வருகிறது. மற்ற பாதிபாகம் தீவிலுள்ள 47 கிராமங்களில் வசித்து வருகிருர்கள். இதாலியர்கள் இங்கு குடியேறவில்லை. ரோட்ஸ் தீவில் வெனிஸியா டிரிடெண்டினுவிலிருந்து குடியேறினவர்கள், பாஸ்கேயோலி என்ற கிராமத்தில் வாசம் செய்து வருகிருர்கள்.

முக்கியமான விளைவுபொருள்கள்.

ரோட்ஸிலும், காஸிலும் தான் பெரிய தாழ்ந்த பூமி பிரதேசங்கள் காணப்படுகின்றன. விவசாயத்துக்கு லாயக்குள்ள பிரதேசங்களில் 85 சதவிகிதம் இந்த இரண்டு தீவுகளில் தான் இருக்கின்றன. கோதுமை தான் முக்கியமான விளைவு பொருள். மொத்த உணவுப் பொருள்கள் விளைவுகளில் கோதுமை விளைவு செம்பாதி பாகம். அடுத்தபடியாக பார்லி தானியம் பயிரிடப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக ஒட் தானியம் சாகுபடி செய்யப்படுகிறது. டொமாடோ, உருளைக்கிழக்கு, வெங்காயம் முதலிய மரக்கறிகளும் உண்டு பண்ணப்படுகின்றன. அநேக இடங்களில் புகையிலையும் பயிர் செய்யப்படுகிறது.

சுமார் 10,000 ஏக்கரா கொண்ட பிரதேசத்தில் திராக்ஷைக் கொடிகள் பயிரிடப்படுகிறது. பாதிக்கு அதிகமான பாகத்தில் திராக்ஷைப் பழங்கள் பயிரிடப்படுகின்றன. புளிப்பு கனிவர்க்கங்களான, ஆரெஞ்சுப்பழமும். ஆலிவ் பழமும், அத்திப் பழமும், குன்றுகளின் தாழ்வரைகளில் உண்டுபண்ணப்படுகின்றன. மலைகளின் உயர்ந்த சரிவுகள் ஆடுகளின் மேய்ச்சல் ஸ்தலமாகயிருக்கின்றன. சில இடங்களில் இலையுதிர்க்கும் மரங்களும், தேவதாரு விருக்ஷங்களும் தேர் மரங்களும் மிகுதியாக உள்ள அடர்ந்த காடுகளிருக்கின்றன.

வியாபாரம்.

இந்தத் தீவுக் கூட்டங்களில் நடைபெறும் மீன் வியாபாரத்தில் துவாரமுள்ள மீன்களின் ஏற்றுமதி தான் முக்கியமானது. இந்த ரக மீன்கள் ரோட்ஸ் தீவிலிருந்தும், ஸிமியிலிருந்தும், காலிஞேவிலிருந்தும், காஸ்டெல் ரோஸிலிருந்தும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்தத் தீவுகளில் இயற்கைப் பொருள்களும் மிகுதியாகயிருக்கின்றன. ரோட்ஸில் குரோமும், கூத்தீவில் வெள்ளீயமும், நிஸிரோவில் கந்தகமும், காஸோவில் சிலாசத்தும்,

நிஸிரோக்கு சமீபத்தில பாலி என்னுமிடத்தில் சிட்டக்கல்லும், கூவில் ஸ்படிகக்கற்களும் கிடைக்கின்றன.

தீவுகளுக்கு ஏற்றுமதி சாமான்களைவிட சாமான்கள் அதிகமாக இறக்குமதி செய்யப்படு கின்றன. ஏற்றுமதி, இறக்குமதி சாமான்களின் மூனறில இரண்டு பாகம் ரோட்ஸ் தீவு வழியாகச் செல்லுகிறது. இறக்குமதி செய்வதில் ரோட்ஸுக்கு அடுத்தபடியாக லேரோ முக்கியத்வமுள்ளது.

ரோட்ஸ் தான் முக்கியமான வியாபாரத் துறைமுகம். ஏற்கனவே சொன்ன துறைமுகங் கங்களைத் தவிர ஸ்கார்பாண்டோவுக்கு வட மேற்கிலுள்ள டிரிஸ்டோமாவிலும், ஸிமியிலும், விஸ்ஸோகாலினுவிலும், பாட்மேவிலும் சேர்த்தியான துறைமுகங்களிருக்கின்றன. ரோட்ஸில் தீவைச் சுற்றிவரக் கூடிய கெட்டியான ரஸ்தாக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஸர் டட்லி பௌண்ட் வேலையிலிருந்து ஒதுங்குகிறார்.

(கிளோர் பிரெஸ்).

பத்து வருஷங்களுக்கு முன் உதவி கடற் தளபதி டட்லி பௌண்ட் பிரிடிஷ் கடற்படை இலாகாவில் இரண்டாவது கடல் பிரபுவாகயிருந்த பொழுது "சில வருஷங்களுக்குள்ளாக கோரமான யுத்தம் நடைபெறப்போகிறது" என்று அவர் சொன்னாராம். அப்பொழுது அவர் ஜோஸியம் சொன்னது போல் தோன்றுகிறது. அந்தப் போரின் பளுவை அவரே யேற்கவேண்டியதாயிற்று. கடற்படை இலாகாவின் முதல் பிரபுவாகவும், பிரிடிஷ் கடற்படையின் உயர்தர அதிகாரியாகவும் இருந்த அவர் இப்பொழுது உத்தியோகத்திலிருந்து விலகிக் கொள்ளுகிறார்.

அவர் நடுத்தரமான உயரமுள்ளவர். அழகான, கூர்மையான மூக்கையும் அவயவங் களையும், நெற்றியில் அநேக சுறுக்கக் கோடுகளையும் அவர் பெற்றிருக்கிறார். அவர் பேசும் பொழுது கண்களின் ஓரங்களில் சுறுக்கம் ஏற்பட்டு அவருக்கு அழகு உண்டுபண்ணுகின்றன. அவர் மிகுதியான தேகாப்யாசமுள்ளவர். அவருக்கு இப்பொழுது வயது 66. கடற்படையில் 40 வருஷங்களாக அவர் செய்த சேவையில் அவருக்கு வழங்கப்பட்ட கௌரவ அடையாளங் கள் அவருடைய சட்டையின் இடது மார்பில் வரிசை வரிசையாகத் தொங்கவிடப்பட்டிருக் கின்றன.

சென்ற நூற்றாண்டின் கடைசியிலிருந்து அவர் பெரிய கப்பல்களின் தலைவராகவும், கடற்படையிலாகாவிலும் சேவை புரிந்திருக்கிறார். அவர் சிறந்த மாலுமி. அத்துடன் சிறந்த நிர்வாகி. மத்தியதரைக்கடலிலுள்ள கடற்படையின் தலைவர் உத்தியோகத்தைவிட்டு விட்டு, கடற்படை இலாகாவில் முதல் பிரபு வேலையை ஒப்புக்கொள்ளுவதற்காக, இந்த யுத்தம் துவங்குவதற்கு 10 வாரங்களுக்குமுன் இங்கிலாந்து திரும்பிவந்தார். யுத்தம் ஆரம்பமான பொழுது பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த கப்பல் கூட்டங்கள் யுத்தத்துக்குத் தயாராக வும், தங்களுக்கு ஏற்பட்ட ஸ்தானங்களிலும் இருந்து வந்தன என்பதில் ஒரு ஆச்சரியமு மில்லை.

பிரிடனுடைய மகத்தான யுத்த ஏற்பாட்டில் யுத்த காலத்திய மந்திரி சபை தான் கடற்படை நடவடிக்கைகளுக்கும் திட்டங்கள் போடுவது. மந்திரி சபையின் திட்டங்களை கடற்படை இலாகாவுக்கு முதல் பிரபு தான் அறிமுகப்படுத்துவார். முதல் கடல் பிரபு திட்டங்களை காரியாம்சையில் நடத்தவேண்டும். ஆகையால், கடற்படையின் யுத்த நடவடிக்கைகளைப் பற்றியும், கடற்படையின் நடமாட்டத்தைப் பற்றியும் உத்தரவுகள் பிறப் பிக்கவேண்டிய பொறுப்பு ஸர் டட்லி பௌண்டைச் சேர்ந்தது.

கடற்படை இலாகாவில் இரண்டு அரைகளில் அவர் வசித்து வந்தார். ஒன்று அவரு டைய கச்சேரி. கொஞ்சம் தள்ளி நடைபாதையைத் தாண்டியிருக்கும் அரையில் அவர் சயனம் செய்வார். அவருடைய வேலைக்காரர்களில் பெரும் பான்மையோர் தங்களுடைய கச்சேரி களிலேயே வசித்து வருகிறார்கள் தங்களுடைய மேஜைகளுக்குப் பக்கத்திலேயே முகாமுக் குறித்ததானபடிக்கைகளில் தூங்குவார்கள். சில சமயத்தில் நள்ளிறவுக்கும், காலை 3-மணிக்கும் மத்தியில் ஆபீஸ் பேபர்கள் கவனிக்கப்படவேண்டியிருக்கும். அப்பொழுது கடற்படை இலாகா வேலைக்காரர்கள் பொழுதுவிடிவதற்கு முன் சில மணிகள் நேரம் அங்கேயே படுத்துறங்குவார்கள்.

விளையாட்டுகளில் அபிருசி.

கால்ப் விளையாட்டைக் காட்டிலும், டெனிஸ் விளையாடுவது அவருக்குப் பிடித்தமானது. அவருடைய குடும்பத்தார்களே டெனிஸ் விளையாட்டில் பயிற்சி பெற்றவர்கள். வேட்டையாடுவதில் அவருக்கு மிகவும் ஆசை அதிகம். மத்தியதரைக்கடலிலிருக்கும் பொழுது அவர் அடிக்கடி பெண் தாராக்களைச் சுடுவதற்காக கிரீஸிலும், ஆல்பேனியாவிலுமுள்ள கடற்கரைக்குச் செல்லுவதுண்டு. பகல் முழுவதும் கால் நடையாக வேட்டையாடிவிட்டு, இரவில் தன்னுடைய கப்பலுக்கு வருவார். வந்து ஸ்நானம் செய்து போஜனம் சாப்பிட்டுவிட்டு, தன்னுடைய உத்தியோக சம்பந்தமான பேபர்களை நள்ளிரவு வரையிலும் சுறுசுறுப்புடன் சோர்வன்றியில் பார்த்துவருவார்.

அவர் எல்லோரையும் அன்புடன் ஆதரிப்பார். மலை வீரர்களான கிரேக்க, ஆல்பேனிய இடையர்களையும் அவர் நேசிப்பார். கடற்படையில் புதிதாகச் சேரும் யுவர்கள் அவருடைய குணங்களைக் கண்டு நடுக்க முறுவார்கள். ஆகிலும், இவரைப் போல வேறு எந்தக் கடற்தளபதிகளும் சாதாரண மனிதன் ஸ்வாஸ்த்யம் அடையும்படி நடந்து கொள்ளவே மாட்டார்கள்.

அவர் 1916-ம் வருஷம் ஜட்லாந்து யுத்தத்தில் கலாஸஸ் என்னும் யுத்தக் கப்பலில் தலைவராகயிருந்தார். ஸ்பெயினில் உள் நாட்டுக் கலவரம் நடைபெற்ற பொழுதும், அடைக்கலம் புகுந்தவர்களுடைய கதியைப்பற்றிய பிரச்னை, சிக்கலான நியாய இலாகா சம்பந்தமான பிரச்னைகள், பகிரங்கமாக இல்லாத இதர அந்தரங்க நடவடிக்கைகள் உண்டான பொழுதும் அவர் மத்தியதரைக்கடலிலிருந்த கடற்படையின் தலைமை உத்தியோகத்தை வகித்தார்.

பிரான்ஸின் ரகசியமான போர்.

(டெனியல் மாரிதி).

பிரான்ஸில் எதிரியை ரகசியமாக எதிர்த்து நிற்கும் நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத தனிப்பட்ட அநேக நடவடிக்கைகளைத் தவிர வேறில்லையென்று விஷயமறிந்தவர்களும் சொல்லிவருகிருர்கள். வேறு ஒன்றும் அவர்களுக்குப் புலப்படுவதில்லை. இந்த எதிர்ப்பு இயக்கத்திலுள்ள அநேக கோஷ்டிகளைப் பற்றிய விபரங்களைப்பற்றிய ரகசியத்தை ஒருவரும் கண்டுபிடித்துவிட முடியாது. இரண்டு கோஷ்டிகளுக்கிடையேயுள்ள சம்பந்தங்கள், கோஷ்டியைச் சேர்ந்த நபர்கள் கைதி செய்யப்படுவதாலும் கொலையுண்டு போவதாலும் துண்டிக்கப்பட்டுவிடும். தனிப்பட்ட நபர்களின் வாழ்க்கையையும் அவர்கள் கோஷ்டியில் சேர்ந்துகொண்டு என்ன நடவடிக்கைகளைச் செய்துவருகிருர்களென்பதையும் கண்டு பிடிப்பது கஷ்டசாத்யமானது. இந்த நடவடிக்கைகளை எந்த யுத்த நிருபரும் கண்டு பிடித்துவிடமுடியாது.

தலைவரின் காரியாலயத்திலிருக்கும் நிருபரும் விஷயங்களை அறிய முடியாது. சகலவிதமான மனிதர்களும், பணக்காரர்களும், ஏழைகளும் வந்து போவார்கள். அவர்களுடன் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் ஆலோசனை செய்வார்கள். சட்டையில் மடிப்புகளில் வைக்கப்பட்டிருக்கும் நுட்பமான காகிதங்களை அவர்கள் கவனிப்பார்கள். அவர்களுக்கு கட்டளைகளின் ஜாபிதா வழங்கப்படும் அல்லது கடிதத்தின் விஷயங்களை அவர்கள் விவரணம் செய்து தெரிந்துகொள்ளுவார்கள். அதன் பின் ஆடவரோ, ஸ்திரீயோ போய்விடுவார்கள். அவ்வளவு தான். அந்த இடத்தில் அதிக சம்பாஷணை நடைபெறுகிறதில்லை. அவர்கள் தங்கள் அலுவல்களைச் செய்துவருகிருர்கள். வருப்புகளைப் பிரித்தெழுதுகிருர்கள். ஸ்திரீ காரியதரிசி அங்குவந்து ஒருவருடைய விலாசத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிருள். அது ஜாபிதாவிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட உடன் அதை அம்மாது மனப்பாடம் செய்து கொள்ளுவாள். ஒரு காவல்காரர் பயந்து கொண்டு உள்ளே வருகிருர். ரகசியப் போலீஸாரோ அல்லது போலீஸ் காரரோ தெருக்கோடிக்கு வந்துவிட்டாராம். ஜாலவித்தை போல இந்தச் சிறிய குறிப்புப் புஸ்தகம் ஒரு பெட்டிக்குள் மறைந்து விடுகிறது. அந்தப் பெட்டியும் கண்ணுக்குப் புலப்படாமல் சென்று விடுகிறது. டைப் அடிக்கும் மெஷின்களும் ஒளித்து வைக்கப்படுகின்றன. நெருக்கடியான நிலைமை உண்டாகுகிறது. சமயோசிதம்

போல் ஓடுவதற்கோ அல்லது போர் புரிவதற்கோ தயாராக அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஊர் கதையைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று அபாய நீக்க அறிவிப்பு வந்துவிடுகிறது. மறுபடியும் குறிப்புகள் வெளிவருகின்றன. வேலையும் துவக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் நகரத்திலோ, அல்லது நாட்டிலோ உள்ள கோட்டையிலும் அல்லது சாதாரணமான குடியிருப்பிலும் நடைபெறும். காரியாலயத்தில் வேறொன்றையும் கண்டுபிடிக்க முடியாது. தஸ்தாவேஜுகள் திருடிச் செல்லப்பட்டாலும் அவைகள் ஒரு தகவலையும் கொடுத்துவிடாது. மங்கலாக எழுதப்பட்டிருக்கும் புதிருள்ள கடிதங்களையும், விசித்திரமாக ஒட்டப்பட்டிருக்கும் குறிப்புகளையும், 'மறை பொருளாக எழுதப்பட்டிருக்கும் விவரங்களையும் விளக்கிச் சொல்லுவதற்கு ஒருவனுடைய வாழ் நாளும் போதாது. பத்திராதிபருக்கு இதில் ஸ்வாரஸ்யமான ஒரு தகவலும் கிடைக்காது'.

அவன் காரியாலயத்தில் அனுவசியமாக ஒரு நிமிஷம் கூட கழிப்பதில்லை. நாசு வேலையில் போதனை செய்யும் ஒரு ஆசிரியரின் நடவடிக்கைகளை அவன் கவனிக்கக்கூடும். இவர்களில் 100 வகைப்பட்டவர்களிருக்கிறார்கள். ஒருவர் ஆபீஸராகயிருக்கலாம். அவர் நாடகமேடையில் உலாவும் வேலாளர் போல் ஆடைஅணிந்து கொள்வார். ஏனென்றால் சாதாரண உளவாளிகள் பொதுமக்களைப் போல் காணப்படுவார்கள். மற்றொருவர் மோட்டார் பழுது பார்ப்பவர் போலும், மற்றொருவர் திராக்ஷ ரச வியாபாரி போலும், மற்றொருவர் மூக்குக் கண்ணாடிகளணிந்த எஞ்சினியர் போலும் காணப்படுவார். நிருபர் அவர்களைப் பின்பற்றிச் சென்றாலும் அவன் ஒரு தகவலையும் அறிந்துவிட முடியாது. அவன் ஏழைமக்கள் வீட்டில் சென்று தகவல்களை அறிய முயலுவான். அடிக்கடி கொடுக்கப்படும் உத்தரவுகளை அவன் ஒட்டுக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

அவன் விசாரிக்கும் ஜனங்களைப் பற்றிய தகவல்களை அவன் ஒன்றும் அறிந்துவிட முடியாது. எதிர்ப்பு சட்ட திட்டங்களின் படி அவர்களை நுட்பமான குறுக்குக் கேள்விகளைக் கேட்கக்கூடாது. ஆகிலும், எல்லோருடைய அந்தரங்கத்திலும் ஒரேவிதமான ஆர்வமிருப்பதை அவன் காணக்கூடும் பொதுமக்களிடையே இன்னும் சிலர்களிருந்து வருகிறார்கள். இதை நாம் மறைத்துவிட முடியாது. ஒவ்வொரு தேசத்திலும் உற்சாக மற்றவர்களும், அறிவில்லாதவர்களுமிருக்கிறார்கள், பிரான்ஸில் இந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் ஒரு சிறிய பகுதிதானென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

நம்முடைய பத்திரிகை நிருபர் பள்ளிக்கூடங்களிலோ, அல்லது நிகழ்ச்சிகளிலோ அவருடைய கவனத்தைச் செலுத்தலாம். இங்கேயும் உற்றறிவோர்கள் ரகசியமான போரைத் தவிர வேறொன்றையும் கண்டுபிடிக்க முடியாது. பள்ளிக்கூடங்கள் போதனா சாலைகள் போலிருக்கவில்லை. காணக் கூடியதெல்லாம் ஒரு சிறிய அறையும் அல்லது ஒரு பண்டக சாலையும். அதில் ஒருவர் மற்ற இருவருக்கு போதித்துக்கொண்டிருப்பார். நிகழ்ச்சிகளை உற்றறிவாளருக்கு துலக்கிச் சொன்னாலும் அவனுக்கு அவைகள் ஸ்வாரஸ்யமாகத் தோன்றாது. இரவில் மௌனமாக நடந்து சென்றபின் களைப்புற்ற பத்திராதிபரைவிட்டு அவனுடைய சகாக்கள் திடீரென்று மறைந்துவிடுகிறார்கள். அவர்கள் மறுபடியும் திரும்பி வந்து மௌனமாகவிருக்கவேண்டுமென்று சமிக்கை செய்கிறார்கள். மறுநாள் அவனுக்கு ஒரு தகவலும் கிடைப்பதில்லை. லக்ஷியத்தைத் தகர்த்துவிட்டோம் என்ற தகவலை உள்நாட்டு பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. ஜெர்மன் பாராக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்களென்று உலாவும் வதந்தியை பத்திரிகை நிருபர் தெரிந்துகொள்ளுகிறார்.

நேசதேச வெற்றிகள் துருக்கியர்கள் மனதில் பதிந்துவிட்டது.

(லியோனட் கிர்ஷ்ச்சன்).

துருக்கிக்கு அடுத்தாற்போல் முக்கியமான சம்பவங்கள் நடைபெறுகின்றன. பல்கேரிய மன்னர் போரிஸ் திடீரென இறந்துவிட்டார். அரசாங்க விளம்பரமானது போரிஸ் மாரடைப்பால் இறந்துவிட்டார் என்ற விஷயத்தை துருக்கியில் யாரும் நம்பத் தயாராயில்லை. அநேகமாய் அங்குள்ளோர்கள் எல்லாம், அவர் வேறு கொடும் சாவால் இறந்துள்ளார் என்று கருதுகிறார்கள். அவர் பிறரால் கொல்லப்பட்டிருக்கவேண்டும், அல்லது தானே தற்கொலை

புரிந்து கொண்டிருந்திருக்கவேண்டும் என்றும் அபிப்பிராயங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் அவைகள் எல்லாம் இப்பொழுது நமக்குத் தேவையில்லை. உண்மை ஒரு காலத்தில் வெளிவரும்.

பால்கன் சமஸ்தானங்களில் நடக்கும் ராஜீய வியவகாரங்களில் தலையிடாமல் போரிஸ் இறந்துவிட்டார் என்பது மட்டும் மறுக்கமுடியாத விஷயமாகும். போரிஸ் மறைந்தார். அவருடன் பல்கேரியாவின் வெளிநாட்டு வியவகாரங்களை பராமரிக்கும் உத்தியோகஸ்தரும் மறைந்துவிட்டார். பால்கன் சமஸ்தானத்தில் பல்கேரியா பங்கெடுத்துக்கொள்ளக்கூடாது என்று போரிஸ் தடுத்தார் என்று கூறுவது பொய்யாகும். ஆடாடர்க் உயிருடன் இருக்கும் பொழுது, அச்சமஸ்தானத்தில் பல்கேரியா பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று போரிஸ் நினைத்தார். ஆனால் அவரின் மக்களின் இஷ்டப்படி ராஜ்யபாரம் செய்துவந்த போரிஸ் ஜெர்மானியர்களுக்குச் சாதகமாகவே ஜெர்மானியர் கொள்கைகளை பின்பற்றிவந்தார்.

பல்கேரியர்கள் ஜெர்மானியர்களை சிறிதும் விரும்பவில்லை. அவர்களின் சுய ஆட்சிக்கு உதவி செய்த ருஷ்யர்களையே பெரிதும் அவர்கள் விரும்பினர். ஆனால் ஜெர்மானியர்களின் கொள்கைகளை கடைப்பிடித்ததால்தான் தேசங்களை கைவசப்படுத்தவேண்டும் என்ற பல்கேரியர்களின் அதிக ஆசை திருப்தியாகும். இதுதான் பல்கேரியர்களுக்கு குழப்பத்தை தரத்தக்க பிரச்னையாகும்.

யூகோஸ்லாவியர்களுக்கும், கிரேக்கர்களுக்கும் சொந்தமான பல பிரதேசங்களை பல்கேரியர்கள் ஆக்கிரமித்து தங்களதென்று சொல்லிக்கொள்ளுகின்றனர். இப்பொழுது போரிஸ் இறந்துவிட்டார். இந்த ஈனச்செயலை பல்கேரியர்கள் விட்டுவிடுவார்களா என்பது சந்தேகமுடையதாயிருக்கிறது. அதிகமான தியாகமின்றி சம்பாதித்த இந்த நாடுகளை பல்கேரியர்கள் விட்டுவிடமாட்டார் என்ற காரணத்தால், இச்செயல் நடக்கக்கூடியதில்லை என்று துருக்கியர்கள் நம்புகிறார்கள்.

பல்கேரியர்களுக்குத் தோல்வி.

கொள்ளையடித்து அப்பிரதேசங்களை தங்களுக்குத் தருவதாகச் சொல்லும் நாடுகளுக்கு உதவியாய் பல்கேரியர்கள் சண்டையிடுவார்கள் என்று துருக்கியர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் ஒரே பிடிவாதமாய் இருப்பதால் அவர்களுக்கு உதவி செய்வதாகச் சொல்லும் நாட்டினர் தோல்வியுறுவதை சிறிதும் கருதுகிறார்கள் இல்லை.

போரிஸ் இறந்த இப்பொழுதும், துருக்கியர்களின் வாக்கிலிருந்து பல்கேரியாவில் நடந்துவரும் ராஜ்ய நடவடிக்கைகள் எவ்விதம் என்பதைக் கண்டுகொள்ளுதல் கடினம். அப்படியாராகிலும் அதனைச் சிந்தித்தாலும், இப்பொழுது நடந்துவரும் அரசாங்கமான பைலாபிப் ஆட்சியானது, ஜெர்மன் ஆக்கிரமிப்பைத் தவிர வேறு இல்லையாதலால், அதனை மாற்றவும் முடியாது.

ஜெர்மானியர்களுக்கு மற்றும் ஒரு புது தொல்லையும் உளது என்பது முக்கியமான காரியம். ஹாலந்தின் ஆக்கிரமிப்பிற்குபின் உடனே நடந்த போரிஸ் இறந்த சம்பவமானது, ஜெர்மானிய பாதுகாப்பு சேனைகளுக்கு இன்னும் அதிகமான கஷ்டத்தை உண்டுசெய்கிறது.

இவைகளும் துருக்கியர்களின் மனதில் மெதுவாய் பதிகிறது. ருஷ்ய முன்னேற்றம் ஹாலந்து மக்களால் ஏற்படும் கஷ்டங்கள், ஸிவிட்ஸர்லாந்தின் எதிர்த்தாக்கும், ஜெர்மானியர்களுக்கு போர்ச்சுகீஸியரால் ஏற்படும் தொல்லைகள், இதாலியின் மேல் படையெடுப்பு, பால்கன் சமஸ்தானங்களில் உள்ள குறைவுகள் என்ற இவைகள் எல்லாம், அச்சுநாட்டினர் முடிவான ஒரு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதையும், நேசதேசப் படைகளின் வெற்றிக்குமேல் வெற்றியோடு முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்பதையும் தெள்ளெனத் தெளிவுப்படுத்துகிறது.

ஒரு வருஷ வெற்றி.

எல் அலமீன் யுத்தத்திற்குப் பின் இப்பொழுது ஒரு வருஷம் ஆகிறது. இந்த ஒரு வருஷத்தில் நேசக்கட்சியினர்களுக்கு ஒரு சிறிது தோல்வியும் ஏற்படவில்லை. மோசமான காரியங்கள் நடைபெறும் என நினைத்துக் கொண்டிருப்பவர்களும், தற்காலம் நடந்துவரும் நடவடிக்கைகளை உணர்ந்துதான் ஆகவேண்டும். ஒரு வருஷத்திற்கு முன்பு டாக்டர் கோயபல்ஸ் பேசியவைகளை, ஜெர்மனியின் வெளிநாட்டு வியவகார காரியாலயத்திலிருந்து டாக்டர் சண்டர்மான் என்பவரின் பேச்சுகளின் மூலம் துருக்கியர்கள் அறிகின்

றனர். தற்செயலாக, அவரைப் போன்ற டாக்டர் பால்ஸ்குமிட் என்பவர் தன் வாயைத் திறவாமலே இருக்கிறார்.

ஜெர்மானியர்கள் ஆரம்பமுதல் தங்களைக் காத்துக்கொள்ளும் யுத்தம் புரிகின்றனர் என்ற ஜெர்மானியரின் வாக்குமூலம் பெரிதும் மிகைப்படச் சொல்லப்பட்டதென்பதை துருக்கியர்கள் அறிகின்றனர்.

ஆகஸ்டு 10-ம் தேதியில் ராயல் விமானப் படையெடுப்பிற்குப்பின் பேர்லினிலிருந்து சண்டைக்குப் புறப்பட்டது பற்றி பேர்லினிலிருந்து துருக்கிக்கு வந்த செய்திகளிலிருந்து துருக்கியர்கள் விபரமாய் அறிந்து கொள்ளுகின்றனர். பேர்லினைவிட்டுச் செல்ல வெறுப்புற்றிருந்தவர்கள் எல்லாம் இந்த முதல் படையெடுப்பிற்குப் பின் ஓட ஆரம்பித்தனர். பட்டணங்களில் மத்தியிலும், அண்டர்டென் லிண்டன் பிரதேசங்களிலும் உள்ளவர்கள் பெரிது துன்புற்றனர். ஹிட்லர் கட்டியவைகள் எல்லாம் அநேகமாய் மறைந்துவிட்டன.

ஒவ்வொரு நாளும் ரைனிலும், ரூரிலும் இருந்த மக்கள் பேர்லின் வழியாக ரெயில்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன. உண்மையில் ஜெர்மன் அரசாங்கம் அங்கு நடக்கும் விஷயங்களை பிறர் பார்க்காமலோ, அறிந்துகொள்ளாமலோ மறைக்க முடியாது.

பால்கன் சமஸ்தான எதிர்ப்புகள்.

ஜெர்மனியின் படையெடுப்புகளால் ஏற்பட்ட பயன்களை ருமேனியர்கள் அனுபவித்துவிட்டார்கள். சில நடுநிலைமை வகித்த நாடுகளின் தலை நகரங்களில் நடந்த பலமாறுதல்களை ருமேனிய அரசாங்கம் கண்ணுற்றுள்ளது. அண்டோனெஸ்கு அதிகாரம் பெறுவதற்கு முன்பு, ருமேனியர்கள் அங்குள்ள ஜெர்மன் கொள்கைகளையோ, இதாலியக் கொள்கைகளையோ பின்பற்றும் மந்திரிகளைப்பற்றி, ஒருவித கொள்கைகளையுமில்லாதவர்களையோ, பிரிடிஷ் கொள்கைகளுக்கு அனுதாபம் காட்டுபவர்களையோ நியமிப்பதை நினைத்தது. ஆனால் ஜெர்மன் கொடுமைகளுக்கு அடிமைகளாக இருந்த ருமேனியர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லையாதலால் சில காலம்வரையிலும் எவ்விதமாறுதலும் ஏற்படுத்தப்படவில்லை.

இப்பொழுது முடிவாய் மாறுதல்கள் ஏற்படுத்த முடிவு செய்துள்ளார்கள். அங்காராவில் இருந்த மந்திரி அலெக்ஸாண்டர் கிரெட் ஸியானுவிற்குப் பதிலாக வேறு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அண்டோனெஸ்கு அதிகாரம் பெறுவதற்கு முன்பு கிரெட் பெரியானு வெளிநாட்டு வியவகார மந்திரி சபையில் காரியதரிசியாக இருந்தார். அவர்களால்கூடிய அச்சுநாட்டு கொள்கைகளைப் பின்பற்றுவது பற்றி எதிர்த்தாலும்கூட இதுவரையிலும் அப்பதவியில் தானிருந்தார். மார்ஷல் அண்டோனெஸ்கு அதிகாரம் பெற்றதும், இவரின் எதிர்ப்பு அதிகமாகவோ, இவருக்கும் அண்டோனெஸ்குவிற்கும் சிறிது தகறுர் ஏற்பட்டது. இவர் தன் பதவியை ராஜீனுமா செய்துவிட்டார். இவர் இப்பொழுது மறுபடியும் இத்தேசத்தின் பிரதிநிதியாயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறார்.

இந்த மாறுதல் எல்லாம் குறிப்பிடத்தக்கவைகளேயாகும். அச்சு ஐரோப்பிய முறைகளை நசுக்குவதை இவைகள் வெளிப்படுத்துகின்றன. இவ்வகையால் நேசதேச வெற்றிகளின் நம்பிக்கையால்தான் துருக்கி சபை கூடுகிறது. இதன் காலம் சிறிதுயிருப்பதன்னியில் இது சென்ற கோடை காலத்தில் கூடிய சபையின் தொடர்ச்சியாயிருக்கும். வெளிநாட்டு மந்திரி இச்சந்தர்ப்பத்தை தனக்கு அனுகூலமானதாய செய்துகொண்டு, ஜனங்களின் சார்பில் உள்ள சபையோர்களிடம் தனித்துப்பேசி, இப்பொழுது அகில உலக ராஜீய நிலைமைகளைப்பற்றிக் குறிப்பிடுவார்.

நிச்சயமில்லாத விஷயம்.

துருக்கியர்களின் மனம் மாறி விட்டதென்பதை குறிப்பிடத்தக்க எவ்விதமான காரியமும் நடைபெறவில்லை. இதனைத் திரும்பவும் சொல்லுதல் சிறிது கேலிக்கிடமுடையது எனினும், இந்நாளில் காரியங்கள் எல்லாம் வெகு விரைவாய் நடைபெறுவதால் நாளைக்கு என்ன நடக்கும் என்று சொல்லுதல் எளிதல்ல என்பதையும் கருதவேண்டும். நாள் செல்லச்செல்ல துருக்கியைப் போன்ற நாடுகள் நடை முறைகளின் செயலைவிட்டு எவ்வித காரியமும் செய்யாது என்பது யாரும் கருதக்கூடியதே.

சிறிய நாடுகளின் மூலப் பொருள்கள் மிகவும் கணக்காய் உள்ளனவாதலால் நெடுங்காலத்திய நடப்புகளால் நசுக்கப்படுத்தல் முடியாது என்று துருக்கியர்கள் சொல்லுகின்றனர். நேற்று நினைக்காததும், இன்று நிச்சயமாய் நடப்பதுமான வேகமாய் செயல்கள் நடைபெறும் இக்காலத்தில் ஒரு அனுகூலமான காரியம் நடைபெற்றால் சீக்கிரமான முடிவுக்கு

வந்துவிட ஏதுவாகிறது. எனவே, துருக்கியர்கள் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்ள விரும்பாவிட்டாலும், சில தெரியாத திடீரென நடைபெறும் செய்கையால் 24 மணி நேரங்களுக்குள் துருக்கியர்களின் கொள்கைகள் மாறுபடலாம். ஒவ்வொரு நாளும் யுத்தம் துருக்கிக்கு கருகாமையால் வந்துகொண்டேயிருக்கிறது, கூடிய சீக்கிரம் துருக்கியின் கடற்கரைகளில யுத்தம் நடைபெறலாம். இத்தகைய தீர்ப்பான காரியஙகளால் துருக்கி தயாராகவேண்டும். அன்றாடம் நடைபெறும் துருக்கிய சம்பவங்கள் மிகவும் கடினமாயும் இருக்கிறது.

பெரிய கப்பற் பீரங்கிகளின் உபயோகம்.

(A. J. மாக்வின்னி.)

இன்று மத்தியதரைக்கடலில் ஜெர்மானியர்கள் எங்கு நோக்கினாலும் அவர்களுக்கு எதிர்காலம் கோரமான தோற்றமுள்ளதாகப் புலப்படுகிறது. ஜெர்மானியரின் வலு நாளுக்கு நாள் குன்றுவதும் நேசதேசத்தாரின் வலிமை அதிரிப்பதமாக இருந்துவருகிறது. பிரிடிஷ் கடற்படை குறுக்கிட்டு பீரங்கி பிரயோகம் செய்திராவிட்டால் ஸாலெர்னோ யுத்தத்தில் ஜெர்மன் துருப்புகள் வெற்றிபெற்றிருக்கும் என்று ஜெர்மன் வியாக்யானிகள் ஒலிபரப்பில பிரசங்கம் செய்வது ஜெர்மன் மக்களுக்கு ஒரு விதமான ஆறுதலையும் அளித்துவிடாது. ஸாலெர்னோப் போரிலிருந்து பீரங்கிகளுள்ள பிரிடிஷ் கடற்படை கடற்கரைக்கு ஒரு மைல் சமீபத்தில் வந்து நேசதேசத்தாரின் தரைப்படைகளுக்கு உதவியளிக்கும் மிதக்கும் கோட்டைகளாக வரக்கூடுமென்பது நிதர்சனமாகிவிட்டது. யுத்தத்துக்கு முன்னும், யுத்தம் ஆரம்பமாகிய பின்னும் தரைச்சண்டைகளில் கடற்படை குறுக்கிடாதபடி விமானப்படை செய்துவிட்டதென்று அழுத்தமாகச் சொல்லிவந்தவர்களெல்லாம், போதுமான விமானபலமிருந்தபோதிலும் கடற்படை உதவியளிக்கக்கூடுமென்ற அறிவு புகட்டப்பட்டார்கள்.

கடலிலிருந்து பிரிடிஷ் கப்பற்படை பீரங்கிகளை உபயோகித்து பயனளிப்பதுடன், காலி பொலியல் காணக்கூடாத விதமாக, எதிரிக்கப்பல்களைக் கண்டுபிடிக்கும் தந்திரத்திலும் பிரிடிஷ் கடற்படை பீரஙகிகளில் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

மத்தியதரைக்கடல் போரில் பெரிய யுத்தக்கப்பல்கள் பலவிதமான வேலைகளைச் செய்யக் கூடுமென்று வெளியாகிவிட்டது. அநேகர்கள் யுத்தக்கப்பல்களின் காலம் போய்விட்டதென்று சொன்னார்கள். அவர்களில் ஹிட்லரும் ஒருவர்.

ஜெர்மனியின் போக்குவரவு சிரமங்கள்.

இரண்டு வருஷங்களுக்குமுன் மத்தியதரைக்கடலில் பிரிடனுடைய நிலைமை மோசமாகயிருந்தது. இரண்டு மாதங்கள் வரையில் இந்தப்பிராந்தியத்தில் எதிரியைச் சமாளிக்க மூன்று சஞ்சாரிகள் மட்டும்தான் நடமாடிக்கொண்டிருந்தன. ஆகிலும், பிரிடிஷ் கடற்படையின் சக்திக்கும், ஜெர்மன் கடற்படையின் சக்திக்கும் அபாரமான வித்தியாசமுண்டு பிரிடனுக்கு நெருக்கடியான சமயங்களிலும், கப்பல் கட்டும் நிலயங்களிலிருந்தும் நேசநாடுகளிடமிருந்தும் உதவிகிடைத்துவிடுமென்று பிரிடனுக்கு நிச்சயமாகத் தெரியும். ஸிஸிலியின் வீழ்ச்சிக்குமுன் மத்தியதரைக்கடலில் ஜெர்மானியரின் கப்பல் நிலைமையைப்பற்றி ஜெர்மன் ராணுவ அதிகாரிகளுக்குக் கவலை ஏற்பட்டு ஜெர்மனியின் கஷ்ட சாத்யமான கடற்படை நிலைமையை சரிப்படுத்துவதற்காக, கடற்படை இலாகா டிரெக்டரான ஹெர் காப்மான் என்பவரை மத்திய தரைக்கடலுக்கு அவர்கள் அனுப்பினார்கள்.

இதாலியக் கடற்படை சரணடைந்துவிட்டதால் பிரிடிஷ் யுத்தக் கப்பல்களும், நீர்மூழ்கிகளும், ஹெர் காப்மான் கள்ளத்தனமாக பிரிடிஷ் கடல் முற்றுகையைத் தாண்டி மத்திய தரைக்கடலுக்குக் கொண்டுவரும் ஒவ்வொரு ஜெர்மன் கப்பலையும் வேட்டையாடிவிடுகின்றன.

மத்தியதரைக்கடலில் பிரிடனுடைய வலிமை.

மத்தியதரைக்கடலில் ஜெர்மனியிடம் விஷியிடமிருந்தும், இதாலியிடமிருந்தும் எடுத்துக் கொள்ளப்பட்ட சில சாமான் கப்பல்கள் தானிருக்கின்றன. ஜெர்மன் வேலைக்காரர்களமைக்கப்

பட்ட சில சிறிய பிரெஞ்சு யுத்தக் கப்பல்களும் சொல்பமான அளவில் யூ படகுகளும் கப்பல்களுக்குத் துணைக்காவல் புரியவும் வடக்கு இதாலியிலிருந்து தெற்கு பிரான்ஸுக்குச் செல்லும் கடல்மார்க்கங்களை ரக்ஷிக்கவும், தூரதேசத்திலுள்ள கிரீட், கிரீஸ், யூகோஸ்லாவியா, டோடிகானீஸ் போன்ற இடங்களிலுள்ள ஜெர்மன் படைகளுக்குச் சாமான்களை இட்டுக் கொண்டு போகவும் உபயோகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகிலும் ஸார்டீனியாவை ஜெர்மனி காலி செய்ததற்கு ஜெர்மன் கடல் போக்குவரவு கிரமங்களும்தான். முக்கிய காரணங்களென்பதில் சந்தேகமில்லை.

சரித்திரத்திலேயே இதுவரையிலில்லாதபடி இப்பொழுது மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் கடற்படையின் பலம் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. அதே சமயத்தில் எதிரியின் கடற்படை மிகவும் பலஹீனமடைந்திருக்கிறது. மேலும் எதிரியின் கடற்படைக்கு இப்பொழுது வேலை அதிகரித்து விட்டது.

ஜெர்மனி எடுத்துக்கொண்ட சில இதாலிய நாசகாரிகளையும், மீன்வெடிப்படகுகளையும், லேசான கடற்கரைக் கலங்களையும் மத்தியதரைக்கடலில் இறுதிப்போரில் ஜெர்மனி உபயோகிக்கக்கூடுமென்பதை பிரிடன் எதிர்பார்த்துத் தயாராகயிருக்கவேண்டும். ஆகிலும் இதாலிய யுத்தக்கப்பல்களிலுள்ள அபூர்வமான இதாலிய இன்ஜின்களையும் ஆயுதங்களையும் கையாளுவதற்கு ஜெர்மானியர்கள் வெகுகாலம் பயிற்சிபெற வேண்டும்.

உலகத்திலேயே மிகவும் கடினமான வேலை.

இவ்வகைப்பட்ட சொற்பமான கடற்படை பலத்துடன் ஜெர்மனி மத்தியதரைக்கடலிலுள்ள ஜெர்மன் படைகளுக்கு ஒத்தாசை அனுப்பவேண்டும். நேசதேசத்தாரின் சுரங்க வெடிகளை அறிக்க வேண்டும். பிரிடிஷ் நீர்மூழ்கிகளையும் மிதக்கும் யுத்தக்கப்பல்களையும் எதிர்க்கவேண்டும். புதிதாகப் படைகளிறங்காதபடி காபந்து செய்யவேண்டும். நேசதேச விமானப்படைகளைத் துறத்தியடிக்கவேண்டும். ஜெர்மனிக்கு இது சமாளிக்க முடியாத நிலைமையாகும்.

அபாரமான ஏமாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் யூ படகுகள் மத்தியதரைக்கடலுக்குத் திரும்பிவந்து நிலைமையை சமாளித்து விடுமென்று ஜெர்மானியர்கள் இன்னமும் நம்பியிருக்கிறார்கள். இதன் விளைவுகள் அட்லாண்டிக்கில் நடமாடக்கூடிய யூ படகுகளின் நிலைமையைப் பொருத்திருக்கும். அமெரிக்கக் கடற்படை காரியதரிசியான கர்னல் நாக்ஸ், வட அட்லாண்டிக் கடல் மார்க்கங்களுக்கு யூ படகுகள் அதிகமாகத்திரும்பிவரக்கூடுமென்று நேசதேசத்தார்களுக்கு எச்சரிக்கைச் செய்திருக்கிறார். யூ படகுகளின் புதிய தாக்குதல்களைச் சமாளிக்க தயாராகயிருக்கிறார்கள். அடுத்த யூ படகுகளின் நடவடிக்கையாவது வசந்த காலத்திலும், வேனிர் காலத்திலும் நடைபெற்ற முறையைப் பின்பற்றினால் அபாயகரமான மத்தியதரைக்கடலில் நடமாடுவதற்குக்கூட யூ படகுகள் இல்லாமல் போய்விடும். அபாயங்களையும் பொருட்படுத்தாமல் மத்தியதரைக்கடலில் யூ படகுகளின் எதிர்ப்பு துவக்கப்பட்டால் ஏராளமான நஷ்டங்கள் ஏற்படுவதை ஜெர்மனி எதிர்பார்க்க வேண்டும்.

ஸ்தம்பிக்கச்செய்தல், சரணாகதி.

ஹாம்பர்க்கிலும் எஸ்ஸனிலும் நடைபெற்ற விமானத்தாக்குதலின் விளைவுகளுடன் இதற்கு முன் நடைபெற்ற விமான நடவடிக்கைகளின் பலன்களை ஒப்பிட்டுப் பார்த்தால் வெடிகுண்டுகளால் எதிரியை ஸ்தம்பிக்கச் செய்யும் நடவடிக்கைகள் பலப்பட்டு வருகின்றனவென்பது தெளிவாகத் தோன்றுகிறது.

ஆச்சரியகரமாக உண்மையில் குண்டுவீச்சுகள் அதிகரித்து வருவதை அறியவேண்டுமானால், சென்ற வருஷத்தில் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன என்ற புள்ளி விவரங்களை ஆராய்ச்சி செய்யவேண்டும். அது பின்வருமாறு :—

வெடிகுண்டு வீச்சு.

ஊர்.	வருஷம், மாதம் தேதி.	மொத்தம் எடை மானம் டன்கள்.	ஒரு நிமிஷத்தில் சராசரி எடைமானம் டன்கள்.
லூபெக் ...	1942 மார்ச்சு.	300	2
கொலோன் ...	,, மே.	1,500	16.7
ஸெயிண்ட் நாஸேர்.	1943 பிப்ரவரி.	1,000	22
எஸ்ஸன் ...	,, ஏப்ரல் 30.	1,000	25
டியிஸ்பர்க் ...	,, மே. 12.	1,350	30
டார்ட்மண்ட் ...	,, மே. 30.	2,000-க்கு மேல்	34
டஸ்ஸல்டார்ப் ...	,, ஜுன் 11.	2,000-க்கு மேல்	34
ஹாம்பர்க் ...	,, ஜுலை 24.	2,500	46
எஸ்ஸன் ...	,, ஜுலை 25.	2,000	40

ஜுலை 24, 25 தேதிகளில் இரவில் மட்டும், அமெரிக்க வெடிவிமானங்கள் பகலில் போட்ட வெடிகுண்டுகளைத் தவிர, நேசதேச விமானங்கள் ஹாம்பர்க் பேரிலும், எஸ்ஸன் பேரிலும், ஜெர்மன் விமானப்படை பூராவிலும் லண்டன் பேரில் மின்னல் எதிர்ப்பு நடந்த 90 இரவுகளில், இரண்டு இரவுகளில் போடப்பட்ட 4,300 டன்களும், மொத்தமாக 7,000 டன்களும் எடைமானமுள்ள குண்டுகளில் மூன்றில் இரண்டு பாகமுள்ள வெடிகுண்டுகளைப் பொழிந்திருக்கின்றன.

எந்த நாடு, எந்த நாடுகளுடன் போர்புரிந்து வருகிறது ?

இந்தியாவிலுள்ள மூவகைப்பட்ட படைகளின் ஐக்கிய சங்கத்தினால் வெளியிடப்படும் பத்திரிகையின் சமீபத்தில் வெளிவந்த இதழில் பிரிடிஷ் சாம்ராஜ்யமும் ஸெகோஸ்லாவாகியாவும்தான் அச்சுநாட்டார்கள் பூராவையும் எதிர்த்து நிற்கின்றனவென்று பத்திராதிபர் கட்டுரை எழுதியிருந்தார். இது உண்மையல்லவென்றும், இது தவறான அபிப்பிராயமென்றும் ஒரு நிருபர் எழுதினார்.

இதற்கு விடையளிக்கும் முறையில் பத்திராதிபர் அடுத்த சஞ்சிகையில் அடைக்கலம் புகுந்த அரசாங்கங்கள் உள்பட யுத்தத்திலீடுபட்டிருக்கும் நேசதேசத்தார்களின் பெயரையும் அவர்கள் எதிர்த்துப் போராடும் அச்சுநாட்டாரின் பெயரையும் அச்சிட்டார். இந்த ஜாப்தா எனக்கு மிகவும் ஸ்வாரஸ்யமாகப் புலப்பட்டதால் அதை இந்தப் பத்திரிகையிலும் ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டியதற்காகப் பிரசுரித்திருக்கிறேன். இந்தக் கட்டுரை இதாலி சரண் புகுவதற்குமுன் அச்சியிடப்பட்டது.

பிரிடிஷ் சாம்ராஜ்யமும், ஸெகோஸ்லாவாகியாவும்.—ஜெர்மனி, இதாலி, ஜப்பான், பின்லாந்து ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, ஸியாம் போன்ற எல்லா அச்சுநாடுகளுடனும்.

அமெரிக்கா.—பின்லாந்தைத் தவிர பாக்கி எல்லா நாடுகளுடனும்.

நிகராக்குவாவும் ஹெயிதீயும்.—பின்லாந்து, ஸியாமைத் தவிர பாக்கி எல்லா நாடுகள் பேரிலும்.

ருஷ்யா.—ஜெர்மனி, இதாலி, பின்லாந்து, ஹங்கேரி, ருமேனியா, பேரிலும்.

கிரீஸ்.— ஜெர்மனி, இதாலி, பல்கேரியாவுடனும்.

யூகோஸ்லாவியா.—ஜெர்மனி, இதாலி, ஜப்பான், ஹங்கேரி, பல்கேரியாவுடனும்.

சைனு, பெல்ஜியம், ஹாலந்து, குபா, டொமினிகன் குடியரசு நாடுகள், கௌதமாலா, ஹான்டூரோஸ், பனமா, ஸால்வடார், மெக்ஸிகோ, எதியோப்பியா.—ஜெர்மனி, இதாலி, ஜப்பான் பேரிலும்.

கோஸ்டரைக்கா.—ஜெர்மனி, இதாலி, ஜப்பான் ஹங்கேரி, ருமேனியாவுடனும்.

போலந்து.—ஜெர்மனி, ஜப்பான் பேரிலும்.

பிரெஸில்.—ஜெர்மனி, இதாலியுடனும்.

நார்வேயும், லக்ஸம்பர்க்கும்.—ஜெர்மனியுடனும் போர் தொடுத்திருக்கின்றன.

இந்த ஜாப்தா சர்வ அடக்கமானதல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. உதாரணமாக யுத்தத்திலீடுபட்டிருக்கும் இராக் இந்த ஜாப்தாவில் சேர்க்கப்படவில்லை. போர்புரியும் பிரெஞ்சுக்காரர்கள் விலக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகிலும் சொல்லியிருக்கும் புள்ளி விபரங்களிலிருந்து சில அம்சங்களில் இது ஒரு விசித்திரமான யுத்தம் என்று தெரியவருகிறது.

கம்மாண்டோப் படைகள்.

கம்மாண்டோப் படைகளைச் சேர்ந்தவர்கள் யாரென்றும் அவர்கள் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார்களென்றும் பயிற்சியளிக்கப் படுகிறார்களென்றும் விவரிப்போம். அவர்கள் பிரிட்டனுடைய முதல்தரமான கொரில்லாச் சண்டைபோடும் படைகள். அந்தப்படையில் பிரிடிஷ் சேனையைச் சேர்ந்த, குதிரைப் படைகளும், காலாட் படைகளும், பீரங்கிப் படையும் ஸாப்பர்ஸ்களும் சேர்ந்திருக்கிறார்கள். அதில் சேர்ந்துகொள்ளுவதற்கு ஆரோக்கியமான சரீர அமைப்பு முதல் யோக்யதாம்சம். அவர்கள் சுறுசுறுப்பாயும், புத்திசாலிகளாகவும், தந்திரசாலிகளாகவுமிருக்கவேண்டும். கம்மாண்டோப் படையின் ஆபீஸர்கள் தங்களுடைய படைகளைத் தாங்களே தேர்ந்தெடுக்கிறார்கள். நன்றாய் பரிசீலனை செய்துதான் ஆட்களைப் பொருக்கியெடுக்கிறார்கள்.

கம்மாண்டோப் படையில் சேருகிறவர்கள் மிகுதியான அனுபவம் பெற்றவர்கள். ஆகையால் அவர்கள் பயிற்சிபெறும்பொழுது சிப்பாய்கள் முகாமிலுள்ள கடுமையான விதிகளுக்கு அவர்கள் உட்படவேண்டியதில்லை. வருஷத்தில் அநேக மாதங்களிலும், மாரிகாலத்திலும் அவர்கள் பாராமுகாம்களில் வசித்து தங்களுக்குத் தேவையான உணவை வேட்டையாடித் தாங்களே சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். பயிற்சிபெற்ற வேடர்கள் வனங்களில் சஞ்சாரம் செய்யும் முறைகளையும் சமவெளிகளில் செல்லும் முறைகளையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள். அவர்கள் சுயேச்சையுடனும், பிறர் உதவியன்னியில் தங்களைப் போஷித்துக்கொள்ளும் வகையிலும் ஜீவிக்க அவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. சதாகாலமும் அவர்கள் சத்தியுடன் இருந்து வருகிறார்கள். சமயத்தில் அதை உபயோகிக்கவும் அவர்கள் சக்திவாய்ந்தவர்கள். சுழற் துப்பாக்கி, மெஷின் துப்பாக்கி, கைத்துப்பாக்கி முதலியவற்றைச் சுடுவதில் அவர்கள் நிபுணர்கள். துப்பாக்கிகளைக் கையாளுவதும் இயற்கையாக நடைபெறுகிறது. விசையைத்தட்டும் விரல் லக்ஷியத்தைப் பார்த்து அதை சித்தத்தில் இறுத்துவதற்கு முன்னமே விசையைத் தட்டிவிடும். அவர்களுக்கு எதிரியின் ஆயுதங்களின் அனுபவமுமுண்டு. ஒவ்வொருவரும் குத்துச் சண்டையிலும் சடுகுடு பாய்வதிலும் கெட்டிக்காரர்கள். சகல முஸ்தீப்புகளுடனும் அவன் நீந்திச் செல்லுவான். துப்பாக்கியையும் கெடுதியடையாமல் பார்த்துக்கொள்ளுவான். ஒரு நாளைக்கு 60 மைல்கள் பிரயாணம் செய்வான். வெகுகாலம் வரையில் ஆகாரமும் தண்ணீருமில்லாமல் காலத்தை அவன் கடத்திவிடுவான்.

அவனுக்குப் படகுகளை ஓட்டவும், தள்ளவும் கற்பிக்கப்படுகிறது. செங்குத்தான குன்றுகளில் ஏறுவதற்கும், சமவெளிகளில் சர்ப்பம்போல நெளிந்து செல்லவும் அவன் கற்றுக்கொள்ளுகிறான். வெடிகுண்டுகளைப் பற்றிய தகவல்களும் பாலங்களை உடைப்பதற்கும் சாமான்களுக்கு நெருப்புவைப்பதற்கும் அவனுக்கு அறிவூட்டப்படுகிறது. சூயுக்தியான முறையில் சண்டை போடுவதற்கும் அவனுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

நெல் வயல்களில் மீன் வளர்த்தல்.

இந்திய விவசாயம் என்ற பத்திரிகையில் ஒரு அதிகாரத்தில், நெல் வயல்களிலிருந்து விவசாயிகள் மீன் வளர்த்தலால் எவ்வாறு பணம் சம்பாதிக்கலாம் என்பதுபற்றி கூறப்பட்டிருக்கிறது. வங்காளத்தில் அரிசி, சணல் முதலியவை உற்பத்தி செய்யும் இடங்களில், இந்த பயிர்களோடு மீன் வளர்த்தால் 5 கோடி ரூபாய் இன்னும் அதிகமாய் சம்பாதிக்கலாம் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஆகார வசதிகளில் உள்ள குறைபாடையும் இவ்வித மீன் வளர்த்தல் குறைக்கிறது.

இம்மாதிரியாக உஷ்ணத்தினலும் நல்ல செழிப்பினலும், குறைந்த தண்ணீருள்ள நெல்வயல்களில் மீன்கள் கூடிய சீக்கிரம் பெருக்கின்றன. மீன்கள் சாதாரணமாய் குளங்களில் வருஷங்களில் வளரக்கூடிய வளர்த்தியாகிய 1 அடி முதல் 1½ அடி வரையிலும் இந்நெல் வயல்கள் சில மாதங்களில் வளர்ந்து விடுகின்றன.

வயல்களில் மீன்கள் அங்குமிங்கும் திரிவதால், அந்தப் பயிர்கள் ஆட்டப்பட்டு, அதன் மேலுள்ள பயிர்களுக்கு கெடுதி செய்யும் பூச்சிகள் கீழேவிழ அவைகளையும் மீன்கள் விழுங்கி விடுகின்றன. இம்மாதிரி மீன்கள் அங்குமிங்கும் போவதால், நிலமும் பண்பட்டு அங்குள்ள மண்ணும் பாசிகளும் நிலத்தில் மெதுவாய் ஆகின்றன. மெதுவான பாசிகளையெல்லாம் மீன்கள் சாப்பிட்டுவிடுவதாலும், பயிரின் வளர்ச்சி அதிகமாகிறது. அதனல் கழிக்கப்பட்டவைகளும் நல்ல உறமாகவும் ஆகிறது.

பயிர்களுடன் மீன் வளர்க்கும் பழக்கம் ஜப்பானில் மிகவும் அதிகமாய் கையாளப்பட்டது. இதற்காக வேண்டிய கருக்குகள் இனமாயும் கொடுக்கப்பட்டன. பிரிடிஷ் கயானவில் பயிர்களுடன் மீன் வளர்க்கும் பழக்கத்தை கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவிலும், கிராமாந்திர வருவாயை அதிகப்படுத்துவதன்னியில் உணவுப்பொருள்களும் குறைவின்றி கிடைக்கும் என்ற காரணத்தினல் இப்பழக்கம் கையாளப்படவேண்டும் என்று தூண்டப்படுகிறது.

"எதில்" என்ற லெட் உலோகத்துடன் சேர்க்கப்பட்ட பெட்ரோல். கார்களுக்குத் தவிர வேறு காரியங்களுக்கு பயன்படுத்தல் அபாயமுடையதாகும்.

இந்தியாவில் சாதாரணமாய்க் கிடைக்கும் பெட்ரோல் எண்ணெய்யை, சமையலுக்கோ, விளக்கெரிக்கவோ, சுத்தம் செய்யவோ உபயோகப்படுத்துதல் அபாயத்திற்கிடமுள்ளது என்று பொதுஜனம் எச்சரிக்கப்படுகின்றனர்.

இந்த எச்சரிக்கை இப்பொழுது மிகவும் அவசியமானது. ஏனென்றல், இப்பொழுது வரும் பெட்ரோலில் எல்லாம் லெட் என்ற உலோகம் கலக்கப்பட்டிருக்கிறது. இது "எதில்" என்ற பெயரோடு, தனியாக ஒருவித நிறத்தில் உள்ளது. அதன்மேல் "எச்சரிப்பு: இந்தப் பெட்ரோலில் லெட் கலக்கப்பட்டிருக்கிறது. மோட்டாருக்கு மட்டும்தான் உபயோகப்படுத்தலாம்" என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது.

"எதில்" கணக்குப்படி வாங்குபவர்களுக்கு ஸப்ளை செய்யப்படும். இது சிகப்பு நிறமுள்ளதாயும் வேறு எவ்விதமான எச்சரிப்பில்லாமலும் கொடுக்கப்படும்.

ஆகவே, பெட்ரோலைச் சுத்தம் செய்யவும், துணிகளிலோ, பூட்ஸ்களிலோ, தொப்பிகளிலோ, உள்ள அழுக்கைப் போக்கவும், சமையலுக்கென உபயோகப்படுத்தப்படும் ஸ்டௌ அடுப்புகளுக்கு உபயோகப்படுத்தவும், வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுக்கப் பயன் படுத்தவும், விளக்குகளில் எறிக்கவும் கூடாது.

வீட்டின் உபயோகத்திற்கோ, தொழிற்சாலைகளின் தேவைக்கோ, இதை உபயோகப்படுத்துபவரின் கையில் படும் சந்தர்ப்பம் உள்ளோரும் ஆகாரப் பண்டங்களில் படும், சந்தர்ப்பம் உள்ள சமயத்தும், பெட்ரோல் வேண்டுவோர் அருகிலுள்ள பெட்ரோலை கணக்குடன் கொடுக்கும் உத்தியோகஸ்தர்களிடம் தனியாய் கேட்டுக்கொள்ளவேண்டும். லெட்டுடன் கூடாத பெட்ரோலும் சிறிய அளவிலே அவசியமெனக் கருதப்பட்டால் கொடுக்கப்படும்.

'வி' டயரி—1944.

(குறிப்பு புஸ்தகம்).

(நவம்பரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3 அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,

தேசீய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரசங்கம் 168. (2-வது பிரிவு).

16-10-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
17-10-43	குடுமியாமலை	... ,,	7.00
,,	பரம்பூர்	... ,,	7.30
18-10-43	வெங்களூர்	... ,,	7.00
,,	கோனுபட்டு	... ,,	7.30
19-10-43	நச்சாந்துபட்டி	... ,,	7.00
,,	விராச்சிலை	... ,,	7.30
20-10-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
20-10-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00
,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00
,,	குழிபிரை	... மாலை	7.00
,,	செவலூர்	... ,,	7.30
21-10-43	களமாவூர்	... ,,	7.00
,,	நல்லூர்	... ,,	7.30
22-10-43	பனையப்பட்டி	... ,,	7.00
,,	ராங்கியம்	... ,,	7.30

பிரஸங்கம் 169. (3-வது பிரிவு).

23-10-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
24-10-43	சூரக்காடு	... ,,	7.00
,,	கோட்டைக்காடு	... ,,	7.30
25-10-43	விருவிமலை	... ,,	7.00
,,	பொருவாய்	... ,,	7.30
26-10-43	மழையூர்	... மாலை	7.00
,,	கரம்பக்குடி	... ,,	7.30
29-10-43	வாளரமாணிக்கம்	... ,,	7.00
,,	எம்பல்	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

16—10—43	திருமெய்யம்.
17—10—43	தீத்தான்விடுதி.
18—10—43	அரிமளம்.
19—10—43	பேராம்பூர்.
20—10—43	கரம்பக்குடி.
21—10—43	கீழாநிலை
22—10—43	புதுக்கோட்டை.
23—10—43	வெட்டம்விடுதி.
24—10—43	மருதன்கோன்விடுதி.
26—10—43	கோனுபட்டு.
29—10—43	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—20—10—43.

புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ அக்டோபர் ௴ 23௳ [ந. 169

தேசீய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே, அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CLXIX.

விடுதலைக்காக யுத்தம்—அதன் பரிமாணமும், நடைமுறைகளும், அதில் இந்தியாவின் முயற்சி.

(**Mr. K.** ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், **B. A., B. L.**)

சரித்திரத்திலேயே காணக்கூடாத மகத்தான யுத்தம் நடைபெறுகிறது. இதுவரையில் இவ்வளவு விரிவான யுத்தமும், யுத்த நடைமுறைகளில் மகத்தான ஏற்பாடுகளும் ஒரு பொழுதும் நடைபெற்றதில்லை. இந்த யுத்தத்தின் விமர்சையிலிருந்தும் நோக்கங்களிலிருந்தும், உலகத்தில் எதிர்காலத்தில் புதிய முறைகள் தோன்றக்கூடுமென்பது நிச்சயம்.

இந்த யுத்தம் உலகமளாவியும், மனிதனுடைய வாழ்க்கையைப் பாதிக்கக்கூடியதாகவுமிருப்பதால் இந்த யுத்தத்தின் கெடுதல்களை மதிப்பிடமுடியாது. மனித பலத்தைவிட சாஸ்திர முறைகளும், யந்திர சாதனங்களும்தான் இந்த யுத்தத்தில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்த யுத்தத்தில் அபூர்வமான ஆராய்ச்சிகளும், புதிய சாதனங்களும், நாசவேலைக்குறிய பலவிதமான கருவிகளும் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஜனத்தொகை அதிகரித்துவிட்டதாலும், ஆள் சேமிப்பு, கட்டாயசேவை முறைகள் அதிகரித்திருப்பதாலும், சென்ற யுத்தத்தைவிட இந்த யுத்தத்தில் பன்மடங்கு அதிகமாகப் படைகள் தயாராகிவிட்டன. தொழிற்சாலைகளும், வேகமாகவும், சிறந்த முறையிலும், உற்பத்திகளைச் செய்யும் சாதனங்களும், அதிகரித்திருப்பதால் சாமான்கள், யுத்த தளவாடங்கள் இவைகளின் தரமும், அளவும், ரகமும், உன்னதியை அடைந்துவிட்டன. யுத்தச் செலவும் மிலியன்கள், பிலியன்கள், டிரிலியன்கள் கணக்கில் அதிகரித்துவிட்டது. இந்த யுத்தத்தின் செலவு புள்ளி விவரங்கள் அபரிமிதமானவை. இது சம்பூர்ணமான யுத்தம். இதில் ஒரு பிராந்தியமும், ஒரு மனிதனும்கூட தாக்குதலிலிருந்து தப்பமுடியவில்லை. ஆடவரும், ஸ்திரீகளும், குழந்தைகளும், எல்லோரும் யுத்தச் சிரமங்களை அனுபவிக்கவேண்டும். எல்லோரும் இந்த யுத்தத்தில் ஈடுபடவேண்டும்.

இதன் நோக்கங்களும் உயர்வானவை. ராஜ்யங்களை விஸ்தரிப்பதற்கும், வியாபாரஸ்தலங்களை அடக்கியாளுவதற்கும், வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் இந்த யுத்தம் நடைபெறவில்லை. ஜாதிபேதம், வர்ணபேதம் என்ற வேறுபாடுகள் இதில் பாராட்டவில்லை. இந்த யுத்தத்திலீடுபட்டிருப்பவர்கள் பூகோள அமைப்பிலும், ராஜீய வியவகாரங்களிலும் ஒன்றுபட்ட தேசங்களாகவோ, கண்டங்களாகவோ பிரித்துச் சொல்லக்கூடிய தேசங்களல்ல. இந்த யுத்தத்தை இங்கிலீஷ்—ஜெர்மானிய, பிராங்கோ—ஜெர்மானிய, ஐரோப்பிய, ஆசியா, அமெரிக்க யுத்தமென்று சொல்லமுடியாது. உண்மையாக விசாரம் செய்தால், இந்த யுத்தத்தில் உயர்தரமான தெய்வீக, ஆத்மீக நோக்கங்கள் மிகுதியாகயிருக்கின்றன. அநேக பிரசங்க மேடைகளிலும், பத்திரிகைகளிலும், ஒலிபரப்பிலும், வெளியிட்டிருப்பதுபோல இந்த யுத்தம் உயர்தர நோக்கங்களுக்காகவும், ஜனசமூக ராஜீய முறைகளுக்காகவும், அடிமைத்தன்த்தை அகற்றி ஸ்வதந்திரத்தைப் பெறுவதற்காகவும் நடைபெற்றுவருகிறது. உலகத்திலிருந்து அடிமைத்தனத்தையும், கொடுமைகளையும் அறவே ஒழித்துவிட மனித வர்க்கம் மகத்தான முயற்சி செய்துவருகிறது. இந்த யுத்தம் கொடுமைகளை விளைவிக்கும் ராணுவ யதேச்சாதிகாரிகளுக்கும், ஜனநாயகத்தையும், ஸ்வதந்திரத்தையும் கடைப்பிடித்திருக்கும் வல்லரசுகளுக்கும் நடைபெறுகிறது.

ஸ்வதந்திரம் மனிதனின் வாழ்க்கை உரிமை. மனித வாழ்க்கையின் சிறந்த குணமும் அதுதான். ஸ்வதந்திர தாகம் எப்பொழுதும் அழிவுபடுவதில்லை. அதன்மூலம் சமாதானமும், ஸமிருத்தியும் உண்டாகுகின்றன. ஸ்வதந்திரத்தையும், சமாதானத்தையும், பெறுவதுதான் மானிட வர்க்கத்தின் உயர்வான நோக்கங்கள். இவைகளில்லாமல் மனித வாழ்க்கை பிரயோஜனமற்றது. ஸ்வதந்திரமும், சமத்வமும், சகோதரபாவமும்தான் அரசாங்க, ராஜீய வாழ்க்கையின் அடிப்படையான கொள்கைகள். நாகரீக வாழ்க்கைக்கும் அவைகள்தான் அவசியமானவை. சாஸ்வதமான ஸ்வதந்திரமும், சமாதானமும், செழிப்பும் உள்ள ஒரு புதிய ஏற்பாடு உலகத்தில் ஏற்படவேண்டுமென்றுதான் நாகரீக உலகம் ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறது. உலகத்திலுள்ள ஜனநாயக நாடுகளில் ஸ்வதந்திரமென்பது ஜனங்களின் மனோபீஷ்டத்தைத் தாராளமாக வெளியிடுவதென்று பொருள்படும். தேசங்கள், பெரிதாகயிருந்தாலும், சிறியதாகயிருந்தாலும் சுயநிர்ணயமும், ஸ்வதந்திரமும்பெற அவைகள் உரிமையுள்ளவர்கள். தங்களுடைய இஷ்டப்படி வாழ்க்கையை நடத்த அவர்களுக்கு உரிமையுண்டு. ஆகையால், அவர்களுடைய ஸ்வதந்திரத்துக்கு பங்கம் விளைவிக்கவும், அவர்களை வெருட்டல், அபாயம் விளைவித்தல், பலாத்கார பிரயோகம் முதலிய முறைகளால் அடக்கியாளவும், செய்யும் பிரயத்தனங்களை ஜனங்கள் பலமாக எதிர்த்தே தீருவார்கள். ஸ்வதந்திர தாகத்தை ஒருபொழுதும் அடக்கிவிடமுடியாது. எவ்வளவுக்கெவ்வளவு அதை அடக்கியாள முயற்சிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு எதிர்ப்பு பலப்பட்டு அதன் விளைவுகளும் அதிகரிக்கும். ஸ்வதந்திரத்தை அழிக்க முன்வரும் நடவடிக்கைகளை சர்வ தேசத்தார்களும் எதிர்த்து நிற்பார்கள். தனிப்பட்ட நபர்களின் ஸ்வதந்திரத்துக்கு ஏற்படும் அபாயம் ஸ்வதந்திரக் கொள்கைக்கே ஹானியளித்ததாகும். ஆகையால்தான் உலகமெங்கும் எதிர்ப்பு உண்டாகியிருக்கிறது. அயல் வீட்டானின் வீடு தீப்பற்றி எறியும்பொழுது நாம் சும்மா படுத்துறங்க முடியாது. ஒரு ஸ்வதந்திர நாடு வீழ்ச்சிபெற்றுவிட்டால், மற்றொரு நாட்டின் ஆதோகதியும் பின்பற்றிவரும். கொடுங்கோன்மையுள்ள வல்லரசுகளை முதலெடுப்பிலேயே அழித்துவிடாவிட்டால், அவைகள் அதிக வலிமையை நாளடைவில் அடைந்துவிடுவார்கள். பின்பு அவைகளை அடக்கியாளுவது சிரமசாத்தியமான காரியமாகிவிடும். இந்த யுத்தத்தில் இவ்விதம்தான் நடைபெற்றிருக்கிறது.

நேசதேசத்தார்களுக்கு குறிப்பிட்ட ஒரு தேச மக்களிடமும், நாட்டினிடமும் வெறுப்பு கிடையாது. ஜெர்மன், இதாலிய, ஜப்பானிய மக்களிடம் அவர்களுக்குத் துவேஷ புத்தியில்லை. புத்திசாலிகளும், கலைஞான சாஸ்திரிகளும், நாகரீகம் படைத்தவர்களும், ஜெர்மானியராகிலும், இதாலியர்களாகிலும், ஜப்பானியர்களாகிலும் நன்கு மதிக்கப்படுவார்கள். அவர்களுடைய மகிமையை சர்வ ஜனங்களும் பாராட்டுவார்கள். அமைதியையும், ஸ்வதந்திரத்தையும் விரும்பும் பொது மக்கள் விடுதலையடையவேண்டும். அவர்களுக்குள் அக்ரமங்களைச் செய்து உலகம் நடுங்கும்படியாக நடந்துகொண்டவர்களும், சதிசெய்து சர்வதேசங்களும் இகழும்படியாக் குற்றங்கள் செய்த்வர்களும், உலகம் பூராவிலும் அழிவையும், கஷ்டத்தையும், விளைவித்தவர்களும் இகழ்ச்சியடைந்து, உலகின் கண் குற்றவாளிகளாக நிற்கின்றார்கள். அவர்களை அடக்கி, பழிக்குப்பழி வாங்கி சர்வதேச நியாய சபையின்முன் அவர்களுடைய குற்றங்களைப் பரிசீலனை செய்து தண்டனை விதிக்கவும்தான் இந்த மகத்தான யுத்தம் நடைபெற்றுவருகிறது. ஸ்வதந்திரத்தையும், சமாதானத்தையும் நேசிக்கும் நாடுகளுடன் ஜாதி மத பேதமன்னியில் நாம் நட்புகொண்டிருக்கிறோம். இந்த யுத்தம் யதேச்சாதிகாரிகளின் ஒன்றுபட்ட உத்தமபக்ஷமான பலத்துக்கும், ஜனநாயக நாடுகளின் உயர்தர

மான உத்தமபக்ஷ பலத்துக்கும் நடைபெறுகிறது. சென்ற உலக யுத்தத்திலும் பலாத்காரம், உலக ஆதிக்கம் என்ற முறைகளை எதிர்க்கும் நோக்கங்களுடன் போர் தொடுக்கப்பட்டது. 20 வருஷங்களுக்குப் பின்னும் அதே உயர்வான எண்ணங்களுக்காக மற்றொரு உலக யுத்தம் ஆரம்பமாகிவிட்டது.

சென்ற யுத்தத்துக்குப்பின் சமாதானம் ஏற்பட்டபொழுது, உலகத்தில் சாச்வதமான அமைதியும், க்ஷேமமும் உண்டாகிவிட்டதென்று தோன்றிற்று. அநேக நாடுகள் ஸ்வதந்திரம் பெற்று, ஜனநாயக ஆக்ஷியை ஸ்தாபித்து நிர்வாக சபைகளை அமைத்து ராஜ்யபாரம் நடத்தினார்கள். ஜெர்மனியும், வேமாரில் தாராள மனப்பான்மையுடன் குடியரசு ஜனநாயக ஆக்ஷியை ஏற்படுத்துவதாகப் பறைசாற்றிற்று. ருமேனியாவும், போலந்தும், ஆஸ்திரியா, ஹங்கேரியைச் சேர்ந்த நாடுகளும், பால்டிக்கிலுள்ள நாடுகளும், தன்னிச்சையாக ஜனநாயக முறையில் நிர்வாக சபைகளை அமைத்துக்கொண்டனர். ஜனநாயகம் உலகத்தில் வேரூன்றிவிட்டதாகத் தோன்றிற்று. ஆனால், அது நிலைபெற்றிருக்கவில்லை.

சென்ற யுத்தத்துக்குப் பின் பொருளாதார நெருக்கடி, நஷ்ட ஈடுகளின் அதிகரிப்பு, நாணயச் செலாவணிக் குறைவு, பஞ்சம், அபாரமான கடன், ஐரோப்பாவிலுள்ள உபயோக மற்ற ஜனநாயக நாடுகள் பொருளாதாரத்தைச் சரிப்படுத்திக்கொள்ளாதது என்ற இடுக்கண்கள் ஏற்பட்டபொழுது முஸோலினியும், அவனுடைய கருஞ்சட்டையினரும், ஹிட்லரும், அவனுடைய பழுப்புச் சட்டையினரும் ஆதிக்கம்பெற்று தலைவர்கள் சர்வாதிகாரிகளாக ஆனார்கள். ஹர் ஹிட்லர் ஜெர்மனியின் சான்ஸலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் 1933-ம் வருஷத்தில் சட்டசபையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதும், ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட அபாயத்தை அடையாளம் காட்டின. முஸோலினியும், இதாலியில் ஒரு பெரிய வல்லரசாகி நாடு பூராவிலும் பாஸி தத்வத்தைப் பரவச்செய்துவிட்டான். ரைன்லாந்தை ஆக்கிரமித்ததின்மூலம், ஹிட்லர் முதல் முதலாக ஜனநாயக நாடுகளுக்குப் பகிரங்கமாக சவால் விடுத்தான். 1938-ம் வருஷத்தில் அயல் நாடுகளிலுள்ள ஜெர்மானியர்களைத் தாயகத்துக்கு அனுப்பிவிடவேண்டுமென்று மறுபடியும் சவால் விடுத்தான். பலாத்காரமாக அவன் ஆஸ்திரியாவை ஆக்கிரமித்தான். அதன்பின் ஸெகோஸ்லாவாகியாவையும், பொஹிமியாவையும், மொராவியாவையும் ஹிட்லர் கைப்பற்றிக்கொண்டான். திருப்தியடையாமல் மகத்தான துணிவுகரமான செய்கைகளை ஆரம்பிப்பதற்கு அவன் அவசர அவசரமாக முஸ்தீப்புகளையும், மனித பலத்தையும் சேகரித்தான். தூங்கிக்கொண்டிருந்த தேசங்கள் நெருக்கடியான நிலைமையை அறிந்தார்கள். உலகத்தில் சமாதானம் நிறுவுவதற்காக முன்வந்த பிரிடிஷ் பிரதம மந்திரி சமாதான முறையில் உடன்படிக்கை செய்துகொள்ள தன்னாலியன்றதைச் செய்துவந்தார். ஆனால் ஹிட்லர் டான்சிக், காரிடார் சம்பந்தமாகப் பிடிவாதமாகயிருந்து சமாதானப் பேச்சுகளைப் புறக்கணித்துவிட்டு போலந்தின்பேரில் பாய்ந்தான். போலந்துடன் தாங்கள் செய்துகொண்ட ஒப்பந்த ஷரத்துகளின்படிக்கும், சர்வ தேசங்களின் க்ஷேமத்தை உத்தேசித்தும், இங்கிலாந்தும், பிரான்ஸும் ஜெர்மனிபேரில் போர் தொடுத்தனர்.

உலக ஆதிக்கம் பெறுவதற்காக அச்சு வல்லரசுகள் தங்களுடைய பூரா ஐச்வர்யத்தையும் உபயோகித்து வருகிறார்கள். ஜெர்மனியில் எல்லா உத்தியோகங்களையும் எல்லா அதிகாரத்தையும் ஏகபோகமாக ஒரு கக்ஷியார்கள் வகித்துவருகிறார்கள். அவர்களே பத்திரிகைகளையும் அடக்கியாண்டுவருகிறார்கள். அவர்களின் தலைவராக ஒருவரிருந்து நிர்வாகத்தின் சகல காரியங்களையும் அமுல் நடத்திவருகிறார். இந்த யதேச்சாதிகாரியுள்ள ஆக்ஷிக்கும், ஜப்பானிய சாம்ராஜ்ய ஆக்ஷிக்கும் வித்தியாசமில்லை. பாஸி தத்வம், நாஸி தத்வம், பொது உடமைக் கொள்கை எல்லாம் யதேச்சாதிகார முறைகள்தான். அவைகளும் ஜப்பானிய ஏகாதிபத்யக்கொள்கையும் ஒன்றுதான். அவர்களெல்லோருமாக உலகத்தை அழித்துவிட முன் வந்திருக்கிறார்கள். இப்பேற்பட்ட நிலைமை உண்டாகிவிட்டதென்பது துக்கிக்கத் தகுந்தது.

எதிர்காலத்தில் பலாத்காரம் ஓங்கி நிற்காமல் தடுப்பதற்கும், உலக ஐக்யபத்யம், உலக ஸ்வதந்திரம் என்ற கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட நியாயமான ஆக்ஷியை நிலைநாட்டுவதற்கும் ஜனநாயக நாடுகள் தங்கள் பலம் பூராவையும் ஒன்றுதிரட்டுகிறார்கள்.

இவ்விதமான அசுரசுவபாவமுள்ள நாடுகள் மோதிக்கொண்டு போர் புரியும்பொழுது அதன் எதிரொலிகள் உலகம் எங்கும் பரவக்கூடும். இந்தியாவின் எந்த பாகமும் அதன் அதிர்ச்சியிலிருந்து தப்பித்துக்கொள்ளமுடியாது. ஜனநாயகத்தின் முன்னேற்றத்தை இந்தியா வியப்புடன் கவனித்து வந்தது. காருண்யமுள்ள அநேக மன்னர்களின் ஆக்ஷியின் கீழ் இந்தியா மேனாட்டாரின் ஜனநாயக லக்ஷியங்களையும், ஸ்தாபனங்களையும், அனுஷ்டானத்துக்குகொண்டுவர முயற்சிசெய்து வந்தது. இந்தியாவும், ஜனநாயக நாடுகள் ஒன்றுபட்டு

விட்டது. அதனுடைய அக்கரைகளும் நேசநாடுகளுடன் ஒன்றுபட்டுவிட்டன. இந்தியா இனி மேல் பிரிந்திருக்க முடியாது. எவரும் இனிமேல் சோம்பேரித்தனமாகவும், வேடிக்கை பார்க்கிறவர்களாகவுமிருக்கமுடியாது. ஸ்வதந்திரம் அழியாமல் ஓங்கிவளரவேண்டுமானல் நேசநாடுகளும், இந்தியாவும், இந்த யுத்தத்தில் வெற்றிபெறவேண்டியது அத்யாவச்யம். நாம் தீர்க்க ஆலோசனை செய்தால் எதிரிகளை எதிர்க்கும் நடவடிக்கைகளில் நம்முடைய ஸர்வ ஐச்வரியங்களையும் தியாகம் செய்யவேண்டுமென்றுதான் முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. இரண்டு நூற்ருண்டுகளாக மன்னர்பிரானின் ஆக்ஷிக்குட்பட்டும், பிரிடிஷார்களின் பராமரிப்புடனும் சாவதானமாகவும், அமைதியுடனும், ஒற்றுமையுடனும் இந்தியா தற்போதிய நிலைமையை அடைந்துவிட்டது. இந்தியாவில் வசித்துவரும் எவரும் நூற்ருண்டுகளுக்குப்பின் கிடைத்திருக்கும் ஜன சமூக, ராஜீய, நிர்வாக, பொருளாதார முன்னேற்றங்களை உதறிவிட்டு அச்சு நாடுகளுக்கு வெற்றி ஏற்பட்டால் ஏற்படக்கூடிய அடிமைத்தனத்தையும், அவமானத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகயிருக்கமாட்டார்கள். நயவஞ்சகமுள்ள எதிரிகளையும், அவர்களுடைய ராஜீயமுறைகளையும் நிர்வாக அமைப்புகளையும், நாம் நன்கு அறிவோம். பேராசை பிடித்த சிலந்திப் பூச்சியைப்போல அவர்கள் நம்மை விழுங்கிவிட உத்தேசித்திருக்கிருர்கள். நாம் குடியரசு ஆக்ஷியைப் பெரும் வழியில் சென்று வருகிறேம். நம்முடைய லக்ஷியத்தைத் தள்ளிவிட்டு பச்சாத்தாபமற்ற கொடுங்கோன்மைபொருந்திய யதேச்சாதிகாரிகளின் ஆக்ஷிக்கு உட்படுவதா? நம்முடைய தொழிலபிவிருத்திகளை நாசம்செய்தும், மகத்தான திட்டங்களையும் உதறிவிட்டு, அச்சு வல்லரசுகளிடம் இழிவான அடிமை வேலைகளில் நாம் அமர்ந்து கொள்ளுவதா? நம்முடைய ஜனசமூக அமைப்பைத் தலைகீழாக மாற்றி ராணுவ யதேச்சாதிகாரிகளின் கொடுமைகளின் கீழ் சகைடப்பட்டுக்கொண்டிருக்கும் அடிமைகளின் நிலைமையை நாம் அடைவதா? விதிவசம்போல் நடைபெறட்டுமென்று நாம் நினைத்திருக்கவும்கூடாது. அவ்விதம் நடைபெறும்படியாகவும் சும்மாவிருக்கக்கூடாது. நாம் ஒன்றுபட்டு, நம்முடைய ஐச்வர்யங்களை ஒன்று திரட்டி நம்முடைய முயற்சிகளை ஒருநகுசெய்து, நம்மாலியன்றளவு நியாய மார்க்கத்தில் போர் புரியும் கக்ஷியார்களுக்கு உதவியளிக்கவேண்டும். நமக்கும், நேசநாடுகளுக்கும், ஜனநாயகத்திலும், ஸ்வதந்திரத்திலும் ஆசைகொண்டவர்களுக்கும் அத்யாவச்யமான வெற்றியையும் நாம் அடையவேண்டும். யுத்தத்தின் நான்கு வருஷங்கள் பூர்த்தியாகி விட்டன. யுத்தம் உலகம் பூராவிலும் பரவிவிட்டது. நாம் வசித்துவரும் ஒதுக்குப்புறமாக யுள்ள வாசஸ்தலமும் யுத்தத்தின் முக்கியமான அரங்கமாகும். நம்மைச் சுற்றிலும், ராணுவப்படைகள் ஒத்திகை செய்வதையும், எதிரி நம்முடைய தேசத்துக்கு சமீபத்தில் நடமாடுவதையும் நாம் கண்ணுறைப் பார்க்கிறேம். நம்முடைய தறெண்ணங்களை அகற்றிவிடவும், உள்நாட்டு வித்தியாசங்களைச் சரிபடுத்திக்கொள்ளவும், சமயோஜிதம்போல் சிறந்த முறையில் நடந்து கொள்ளவும் இதுதான் தகுந்த சந்தர்ப்பம். நம்முடைய ஊக்கத்தையும் ஜனநாயக சாம்ராஜ்யத்தில் நமக்குள்ள அன்பையும் நாம் இப்பொழுது வெளிக்காட்ட வேண்டும்.

தற்போதிய நிலைமையை விமர்சனம்செய்வோம். யுத்தத்தின் ஆரம்பகாலம் பயங்கரமாக இருந்தது. நேசநாடுகள் முற்றிலும் தயாராகயில்லாத சமயத்தில் ஜெர்மனி நம்மை யுத்தத்தில் புகுத்திவிட்டது. அவர்கள் சிலகாலம் வரையில் முஸ்தீப்புகளைத் தயார் செய்து கொள்ளவேண்டியிருந்தது. ஏராளமான நஷ்டங்களும், கோரமான பிற்போக்குகளும், மகத்தான லாபங்களும், புகழத்தக்க முன்னேற்றங்களும், மாறிமாறி வந்துகொண்டிருந்தன. நாம் இப்பொழுது யுத்தத்தின் உச்ச நிலையை அடைந்து விட்டோம். நமக்கு ஏற்பட்ட அனுபவங்களின் பயனுக, நமக்கு அபாரமான நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. யுத்தத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கும், நாம் எதிர்பாராத வண்ணம் எதிரிகளை முறியடிப்பதற்கும், அவர்களுடைய திட்டங்கள் பயன்படாதென்று அவர்களுக்கு அறிவூட்டவும், அவர்களை மறுபடியும் தலையெடுக்காமல் சாச்வதமாக அழிப்பதற்கும், நம்பிக்கையுடனும், ஆர்வத்துடனும், போர்புரியும் நாளை நாம் எதிர்பார்க்கிறேம். 1942-ம் வருஷம் முடிவில் யுத்தப்போக்கு நமக்கு வெற்றி கரமாகவே யிருந்தது. 1943-ம் வருஷ ஆரம்பத்திலும், நமக்கு வெற்றி நிச்சயம் என்ற தோற்றம் புலப்பட்டுவிட்டது. ருஷ்யர்கள் தங்களுடைய மாஜி சிநேகிதனின் துரோகமான நடவடிக்கைகளை தீரத்துடன் சமாளித்து நின்றது மட்டுமில்லாமல் இரட்டிப்பு பலத்துடன் வெற்றிகரமாக பதில் தாக்குதல்களும் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களுடைய தீரமும், வீரமும் என்றுமழியாத புகழைப் பெற்றுவிட்டன. ஹிட்லரின் சிறந்த படைகள் ருஷ்யாவின் பனிக்கட்டி பிரதேசங்களில் அகப்பட்டுக்கொண்டு சிதைவுபட்டு விட்டார்கள். இனிமேல் வசந்த காலத்திலோ அல்லது வேனிர் காலத்திலோ முன்னேறித்தாக்கவும், சக்தியற்றவர்களாக ஆகிவிட்டார்கள். ஹிட்லரின் கனவுகள் மறைந்து விட்டன. ஆடம்பரமாகவும், திமிருடனும் இதற்கு முன்பு பேசிவந்த ஹிட்லர் இப்பொழுது மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவதும், ஷராக்கள் சொல்லுவதுமாக காலம் கடத்துகிருன். அவனிடம் இப்பொழுது அவசியமான யுத்த தளவாடங்கள் குறைவுபட்டுவிட்டன. அவனைப் பின்

பற்றுகிறவர்கள் யுத்தத்தில் ஏற்பட்ட தோல்விகளைக்கண்டு மனம்நொந்து பலஹீனமடைந்து விட்டார்கள். எதிரியின் மனஉறுதி நிலைகுலைந்து விட்டது. உதைபட்டு, யுத்தத்தில் வெறுப்படைந்து முணுமுணுத்துக்கொண்டிருக்கிறவர்களாக அவர்கள் மாறிவிட்டார்கள். அபாரமான நஷ்டங்களும், தோல்விகளும் நேர்ந்ததிலிருந்து ஜெர்மன் ஆயுத பலத்தின் உயர்வும், ஹிட்லர் அவதார புருஷனென்ற தோற்றமும், அவர்கள் மனதை விட்டகன்று விட்டன. மத்தியக் கிழக்குப் பிராந்தியத்தில் அவர்கள் போட்டதிட்டம் பாதகமாக முடிந்துவிட்டது. ஸைப்ரஸ், இராக், ஸிரியா, பாரசீகம் முதலிய நாடுகள் அவர்களின் சூழ்ச்சிகளுக்கு இனிமேல் உட்படாது. ஆபிரிக்காவையும் அவர்கள் இனிமேல் கைப்பற்ற முடியாது.

ஆகிலும் நுட்பபுத்தியுள்ள உற்றறிவோர்கள் அபாரமான நம்பிக்கை கொள்ளமாட்டார்கள். எதிரி இன்னும் அபார சக்திபெற்றிருக்கிறான். எதிர்த்து நிற்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது, அவன் கடைசி பிரயத்தனமாக ஊக்கத்துடன் சண்டைபோடுவான் அவன் தந்திரசாலி. அஜாக்ரதையாக உள்ள எதிரியை சங்கடத்தில் மாட்டிவிட அவன் எவ்வித உபாயத்தையும் மேற்கொள்ளுவான். மேலும், அவன் பிரசாரம் செய்வதில் திறமையுள்ளவன். போலந்துக்கும், ருஷ்யாவுக்கும் சிண்டு முடிந்துவிட அவன் ஏற்கனவே முயற்சி செய்தான். தன்னுடைய சாமர்த்தியம் பூராவையும், படைகளையும் யுத்த முஸ்தீப்புகளையும் அவன் பிரயோகம் செய்வான். அவனுடன், அபாயகரமான, நன்றியறிவற்ற, துரோக புத்தியுள்ள ஜப்பானும் கூட்டாளியாகயிருக்கிறது. கிழக்குப்போர் முனையில் ஜப்பானுக்கு யுத்த ஆரம்பத்தில் சிறப்பான வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. அவனுடைய தறபோதிய நிலைமை என்ன. பாட்டிகள் கதையில் குழந்தைகளுக்கு பொம்மைகளையும் தின்பண்டங்களையும் கொடுத்து ஏமாற்றி அழைத்துச் செல்லுவது என்று சொல்லுவதுபோல ஆசியாவில் புதிய உலக அமைப்பை ஏற்படுத்தப்போவதாகச் சொல்லும் ஜப்பான் இந்தியாவுக்கு ராஜீய சம்பந்தமான மோக்ஷத்தைத் தருவதாக புன் சிறிப்புடன் ஆசைவார்த்தைகளை விடுத்து வருகிறது. முகமதியர்களுக்கு சுயநிர்ணய உரிமையை அளிப்பதாக ஜப்பான் சொல்லி வருவதும் ஒரு ராஜீய தந்திரமாகும். ஆகிலும் அவனுடைய கெட்ட எண்ணங்களை நாம் நன்கு அறிவோம். அவைகளின் அந்தரங்க கெட்ட எண்ணங்களையும் நாம் கண்டு பிடித்து விட்டோம். அவன் யுத்தத்தை திடீரென்று துவக்கினான். பிரிடிஷ் அமெரிக்க தேசங்களின் நட்பினாலும், ஆஸ்திரேலியாவின் ஜாக்ரதையினாலும், சைனாவின் விடாமுயற்சியாலும் நிலைமை சமாளிக்கப்பட்டது. கூடிய சீக்கிரத்தில் ஜப்பானியர்கள் திடுக்கிடும்படியாகவும், பின்வாங்கும் படியாகவும் தங்களுடைய குற்றங்களுக்காக வருந்தி அவைகளுக்குப் பரிஹாரம் செய்யும் படியாகவும் நாம் போர் தொடுப்போம்.

எனவே, நாம் மிகவும் நெருக்கடியான காலத்தை சமாளித்துக் கரையேறிவிட்டோம். நமது நேசநாட்டினரின் உதவியுடன் நாம் அதிகமான வலிமையைப் பெற்றுவிட்டோம். நம்முடைய யுத்த முயற்சிகள் அபரிமிதமாக முன்னேற்ற மடைந்து வருகின்றன. ஒவ்வொரு வருஷமும், நம்முடைய மனித பலமும், யுத்த முஸ்தீப்புகளும் பன்மடங்கு அதிகரித்து வருகின்றன. எதிரிகளின் முற்றுகை முயற்சிகளை நாம் பயன்படாது செய்துவிட்டோம். ஆகாயத்திலும் நாம் எதிரிகளை விட அதிக ஆதிக்கத்தைப்பெற்று விட்டோம். நம்முடைய கடலாதிக்கம் பலமாகயிருக்கிறது. எல்லா விஷயங்களும் நமக்கு வெற்றி நிச்சயமென்ற நம்பிக்கையை ஊட்டுகின்றன.

பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸின் பிரசங்கம்.

பிரிடிஷ் சாம்ராஜ்யம்.

எதிர்பாரதவண்ணம் நெருக்கடி உண்டாகிற்று. ஆனால், நம்மிடம் பிளவுகள் உண்டாகவில்லை. நெருக்கடியிலிருந்து பரஸ்பர நல்லுணர்ச்சியும், ஒற்றுமையும் நமக்குள் ஏற்பட்டு விட்டது.

உலகம் பூராவிலும் பரவியுள்ளதும், மானிட வர்க்கத்துக்கு வழிகாட்டி போலுள்ள அரசாங்க சபையை அமைக்கக்கூடியதுமான அநேக வல்லரசுகள்கொண்ட, இந்த சாம்ராஜ்யம், மிகவும் நெருக்கடியான நிலைமையிலிருக்கிறது. மேலும், எக்காலத்திலுமிருந்ததை விட இப்பொழுதுதான் மிகுதியான வலிமையை அடைந்திருக்கிறது. எதிர்காலத்திய மனித வாழ்க்கைக்கு அடிப்படையாகவுமிருக்கிறது.

யுத்தப்போக்கில் சிறந்த மாறுதல்.

எதிரிகள் வால்கா—காஸ்பியன் கடல் பிரதேசத்திற்குச் சென்றும், தெற்கில், எகிப்தையும் பிடித்தும், இவ்விரண்டு ஸ்தலங்களிலிருந்தும் மேற்குமுகமாக இந்தியாவையும், இந்துமகா சமுத்திரத்தையும் நோக்கி முன்னேறிவந்த ஜப்பானியர்களுடன் சேர்ந்திருந்தால் நம்முடைய வெற்றிச் சின்னங்கள் அழிந்து போயிருந்திருக்கும். நாஸி ஜப்பான் ஆக்ஷிசெய்யும் உலகத்தை ஸ்தாபிப்பதென்ற ஹிட்லரின் எண்ணம் நிறைவேறியிருக்கும். ருஷ்யர்கள் ஸ்டாலின்கிராட் போரிலும், பிரிடிஷ் படைகள் எல்அலமீன் போரிலும் இந்த திட்டத்தைக் குலைத்துவிட்டார்கள். ஆகினும், யுத்தம் முடிவடைந்தபாடில்லை. இந்த வெற்றிகள்தான் யுத்தத்தின் முடிவுக்கு ஆரம்பம். இவைகள் யுத்தப்போக்கை மாற்றிய முக்கியமான நிகழ்ச்சிகள். அதன் விளைவுகள் அபிவிருத்தியடைந்து காலக்கிரமத்தில் வெற்றிகளை அளித்துவருகின்றன.

விமான யுத்தம்.

நேசதேச விமானத் தாக்குதல் அதிக உக்ரமாகயிருப்பதால் அதை மற்றொரு பெரிய போர்முனைக்குச் சமமாக ஒப்பிடலாம். ஜெர்மானியர் சுமார் 50 அல்லது 60 இதாலிய டிவிஷன்களை இழந்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்திலேயே அவர்கள் நேசதேசத்தார்களுடன் சேர்ந்து போர்புரியக்கூடும்.

இந்த யுத்தத்தில் இத்துடன் ஒப்பிடக்கூடியதும், அல்லது இதைவிட முக்கியமானதுமான நடவடிக்கைகள் இதுவரையில் நடைபெற்றதில்லை.

அடுத்த மாரிகாலத்திற்குள் நாம் செய்து முடித்துவிடுவதாக கங்கணம் கட்டிக்கொண்டதற்கு அதிகமாகவே நாம் இப்பொழுது செய்துவிட்டோம். தெற்கு, தென்கிழக்கு ஐரோப்பாவில் நாம் அதிகம் முன்னேறக்கூடும். அடுத்த மாரிகாலத்துக்குள் ஹிட்லரின் கோட்டையைச் சுற்றி வளைத்து அதைத் தாக்கும் நிலைமை ஏற்பட்டுவிடும்.

பிரதானமான நடவடிக்கை.

இந்த நடவடிக்கைகள்தான் பிரதானமானது. இதேசமயத்தில் கொஞ்சம் கொஞ்சமாகதூரக்கிழ் திசையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இரண்டாம் பக்ஷமான ஜப்பானியப் போருக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

மேற்கே ஹிட்லரின் வீழ்ச்சியினால் ஜப்பானின் தோல்வியும், விரைவில் சம்பவிக்கும். ஜெர்மனியின் வீழ்ச்சியானது, தூரக்கிழக்கு யுத்தப் போக்கில் விசேஷ மாறுதல்களை உண்டுபண்ணும். இதற்குப்பின் யுத்தமும் கூடிய சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும்.

யுத்தத்துக்குப் பின்.

ஸ்டாலின்கிராட்டில் எல்அலமீன் யுத்தங்களுக்கப்புறம் நமக்குத் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் வெற்றிகளை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அடுத்த வருஷத்திற்குள் யுத்தத்தை முடிக்க நாம் முனையவேண்டும். யுத்தம் முடிந்ததும், ஐரோப்பாவுக்கு ஏற்பட்ட நாச வேலையைச் சரிப்படுத்துவதே நமது முதல் வேலையாகும். கஷ்டங்களை அனுபவித்த ஜனங்களுக்கு உணவுப்பொருள்களை விநியோகம் செய்வதும், விடுதிகளை அமைப்பதும், போஷணை செய்வதும் மற்றொரு யுத்தம்போல் நம்மை பாதிக்கக்கூடும். ஐரோப்பாவில் பொருளாதார நிலைமையினால் அராஜகமும், அநாகரீகமும் தாண்டவமாடாமல் இருக்கும்படிக்கும் நாம் செய்யவேண்டும்.

1918-ம் வருஷம்போல் நடக்கவிடக்கூடாது.

பொதுமக்களின் கவனமும், தனிப்பட்டவர்களின் மானிட வளர்ச்சியும் இந்த முக்கியமான வேலையில் செலுத்தப்படவேண்டும்.

சென்ற யுத்தத்திற்குப் பின் நடைபெற்ற சமாதானத்திற்குப் பின், எதிரியின் நாடுகளின் நிலைமை மோசமாகிவிட்டது. யுத்தத்தில் ஏற்பட்ட நஷ்டங்களைவிட சமாதானத்துக்குப் பின் மகத்தான கெடுதல்கள் உண்டாகின. இப்போது அவ்விதம் நடைபெறும்படி விடக்கூடாது.

இவைகளைவிட முக்கியமான பிரச்னைகளிருக்கின்றன. முக்கியமாக அக்ரமச் சண்டையை ஒழிக்கவேண்டும். நமது கிருஸ்துவ நாகரீகத்திற்கு அநாகரீக பூதத்தினால் பயம் ஏற்பட்டிருக்கிறது. நமது ஜாதி வெற்றிபெறவேண்டும், அல்லது அழியவேண்டும். அமைதியான உலக திட்டத்தில் தனிப்பட்டு சர்வாதிகாரத்துடன் இருக்க எந்த தேசம் விரும்புவதாலும் பயன் இல்லை. நமது வருங்கால க்ஷேமத்திற்கான வழியைத் தேடவேண்டுமானால், திடமான நிச்சய புத்தி அவசியம். நமது வருங்கால க்ஷேமத்திற்கான வழி அட்லாண்டிக் சாஸனத்தில் காணக்கிடக்கிறது.

வார யுத்தச் செய்திகள்.

(A)—முக்கியமான சம்பவங்கள்.

14—10—43 (வியாழக்கிழமை). ஜெர்மனியிலுள்ள ஷ்வீன்பர்ட்டை அமெரிக்கப் பறக்கும் கோட்டை விமானங்கள் பலமாகத் தாக்கின.

ருஷ்யர் ஸாபரோஷியைப் பிடித்தனர்.

யூகோஸ்லாவிய தேசாபிமானப் படைகளைத் தாக்கும் நடவடிக்கைகளுக்கு ரோமல் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

15—10—43 (வெள்ளிக்கிழமை). பிரிடிஷ் 8-ம் படை இதாலியிலுள்ள காம்போபாஸோவைப் பிடித்தது.

லூயி மவுண்டு பேடனுக்கு உதவி செய்வதற்காக ஜெனரல் ஸர். H. பௌனல் காரியாலயத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

16—10—43 (சனிக்கிழமை). பிரிடிஷ் 8-ம் படை இதாலியிலுள்ள விஞ்சியாடேரோவைப் பிடித்தது.

அமெரிக்கத் துருப்புகள் ஸாலமன்ஸிலுள்ள கிஸோவை ஆக்கிரமித்தன.

17—10—43 (ஞாயிற்றுக்கிழமை). பிரிடிஷ் விமானப்படை பெர்லினைத் தாக்கிற்று.

18—10—43 (திங்கட்கிழமை). மிஸ்ட்டர் ஈடனும், கார்டல் ஹல்லும் மூன்று வல்லரசுகளின் பிரதிநிதிகளின் மஹாநாட்டில் கலந்துகொள்ள மாஸ்கோவுக்கு வந்துவிட்டார்கள்.

19—10—43 (செவ்வாய்க்கிழமை). இதாலியில் வால்டர்னோ நதியின் வடக்குக் கரையிலிருந்து ஜெர்மானியர்களை நேசதேசப் படைகள் அப்புறப்படுத்திவிட்டார்கள்.

ருஷ்யர்கள் நீப்ரோபெட்ரோவ்ஸ்க்கின் விலாப் பக்கமாக முன்னேறிவிட்டனர்.

நியூபிரிடனிலுள்ள ரபாலை அமெரிக்க விமானங்கள் மறுமுறை பலமாகத் தாக்கின. 50 விமானங்கள் சேதப்பட்டன.

20—10—43 (புதன்கிழமை). வேவல் பிரபு இந்தியாவின் வைஸிராய் பதவியை ஏற்றுக்கொண்டார்.

(B)—செய்திச் சுருக்கம்.

இதாலி.—ஐந்தாம்படை கீழே கண்ட இடங்களை கைப்பற்றிற்று:—

ஸான்குரோஸ், காஜாஸோ, அமொராஸி, ஸொராடோ, மாரோன், கான்ஸெல்லோ, ஆர்னன், ரூவியானோ, பாண்டலாடோன், ஆல்விக்னனோ, லிபெரி, கியோயியா, பெயிசியோ, பிரேஸா.

8-ம் படை பொனிபிரோ, ரிக்கியா, காம்பொபாஸ்ஸோ, விஞ்சியாடேரோ, மாண்டிஸிபொனி, ஸான்ஸ்டெபானோ, ரிபாபாட்டினி முதலிய இடங்களைப் பிடித்தது.

மூன்று பகுதிகளாக முன்னேறி 5-ம் படை வால்டர்னோ நதியைக் கடந்து காபுவாவிலிருந்து கடல் வரைக்குமுள்ள நதியின் வடக்குக் கரையில் நன்றாய் ஊன்றிக்கொண்டு விட்டார்கள். இத்துடன் ரோமுக்காக நடைபெறும் யுத்தத்தின் முதல் கட்டம் முடிந்துவிட்டது. இப்பொழுது யுத்தம் காபுவா சமவெளிகளில் நடைபெறுகிறது. இங்கே ஜெர்மானியர்கள் மலைக்குன்றுகளின் சகாயத்தைப் பெற்றிருக்கிறார்கள். இதாலியின் முதுகெலும்பு போன்ற பாகத்திலுள்ள மலைச் சரிவுகளின் ஒரு பிரதேசத்தில்

நடைபெற்ற போரில் எதிரி முறியடிக்கப்பட்டான். கடைசியாக வந்த செய்திகளின்படி எதிரியின் எதிர்ப்பு தணிந்துவிட்டது. காபுவா சமவெளியைப் பொசுக்கி நாசம் செய்துவிட்டு எதிரி பின்வாங்கிவருகிறுன். முற்றுகை ஏற்பட்டால் அதைச் சமாளித்து நிற்க ரோமில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. டைபர் நதியின் வட கரைக்கு மேற்குக் கடற்கரை ஓரமாயுள்ள பிரதேசம் பூராவும் நேசதேசத்தார்கள் இறங்கக்கூடுமென்று பயந்து காலி செய்யப்படுகிறது.

கிழக்குப் போர்முனையில் 8-ம் படையினர் ஜெர்மன் படையின் விலாப்பக்கத்தில் சாவதானமாக முன்னேறி வருகிறுர்கள். டெர்மாலியிலிருந்து போகும் குறுக்கான ரஸ்தாவைப் பிடித்தபின் ரோமுக்குப்போகும் வழியிலுள்ள இஸர்னியாவை நோக்கி 8-ம் படை முன்னேறுகிறது. எதிரிகள் கோரமாக எதிர்த்துப் போர்புரிந்து வருகிறுர்கள்.

யூகோஸ்லாவியா.—கொரில்லாப் படைகள் மத்திய பாஸ்னியாவிலுள்ள ஸெனிகாவைத் தாக்கினர். மாண்டினீக்ரோவிலுள்ள பெரெனேவைப் பிடித்தனர். பாஸ்னியாவின் முதல் படைகள் ஸிங்னியாவைப் பிடித்தன. யூகோஸ்லாவிய விடுதலைப் படைகள் மாண்டினீக்ரோவிலுள்ள ஆண்ட்ரோஜெவிக் என்னும் இடத்தைப் பிடித்துக்கொண்டனர். ஸ்காபிள்ஜியில் விமானத் தாக்குதல் நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது.

ருஷ்யா.—கிரிமியாவின் தெற்குக் கரையிலுள்ள யால்டா அக்டோபர் 13-ம் தேதியன்றும், நீபரின் தெற்கு பாகத்திலுள்ள ஸாபரோஷி அக்டோபர் 14-ம் தேதியன்றும் நீப்ரோபெட்ரோவ்ஸக்கிலிருந்தும் யெயலேயாசெர்காவிலிருந்தும் வரும் இருப்புப்பாதைகள் சந்திக்குமிடத்திலுள்ள பியாடிகாட்கி அக்டோபர் 19-ம் தேதியன்றும் பிடிபட்டன. சென்ற வாரத்தில் கிரமென்சக்கையும், இந்த வாரத்தில் பியாடிகாட்கியையும் பிடித்து, ருஷ்யர்கள் நீப்ரோபெட்ரோவ்ஸ்க்கைத் தாண்டி விலாப் பக்கமாகச் சென்று விட்டனர். மெலிடோபோலின் தெருக்களில், டாங்கிகளும், பீரங்கிகளும் உதவிகொண்ட கோரமான யுத்தம் நடைபெறுகிறது. வெண்மை ருஷ்யாவில் கோமல்—ராசிஸ்டா, நீபர்—ஸாஷ் பிரதேசத்தில் பலமான யுத்தம் நடைபெறுகிறது.

விமான நடவடிக்கை.—பவேரியாவிலுள்ள ஷ்வீன்பர்ட் அக்டோபர் 14-ம் தேதியன்று தாக்கப்பட்டது. 104 ஜெர்மன் விமானங்கள் நாசமாகின. அமெரிக்கர்களும் 60 பறக்கும் கோட்டை விமானங்களை இழந்தனர். தாக்குதலின் வலிமை பொலஸ்தியைத் தாக்கிய அளவு போன்றது. அந்தப் பிரதேசத்தில் குண்டுகள், உருளைகள்பேரில் செல்லும் யந்திரங்கள் உள்ள தொழிற்சாலைகளிருக்கின்றன. அக்டோபர் 18-ம் தேதியன்று எண்ணெய், ரப்பர், யுத்த தளவாடங்களின் உற்பத்திக்குப் பேர்பெற்ற ஹானேவர் நகரம் பிரிடிஷ் விமானப் படைகளால் தாக்கப்பட்டது. இங்கே எதிரியின் சண்டை விமானங்களின் எதிர்ப்பு கிடையாது.

கடல் யுத்தம்.—அமெரிக்க நிர்வாக சபையின் கடற்படை இலாகாவிலிருந்து வெளிவந்த ரிபோர்ட்டின்படி, அட்லாண்டிக் கடல் யுத்தம் அடிக்கடி மாறுதலடைந்து வருகிறதென்றும் யூ படகு நடவடிக்கைகள் குறைவுபட்டு வருகின்றன. அமெரிக்கா இப்பொழுது உணவுப்பொருள்களையும், முஸ்தீப்புகளையும் குறைந்த பக்ஷம் 32 பிரதேசங்களுக்கு அனுப்பி வருகிறது.

பஸிபிக்.—அமெரிக்கர்கள், ஸாலமன்ஸிலுள்ள கிஸோவைப் பிடித்துவிட்டனர். மாடாங்கை நோக்கி முன்னேறும் முயற்சி வெற்றிகரமாக நடைபெறுகிறது. யூரியா, பாரியா முதலிய இடங்களிலுள்ள பள்ளத்தாக்குகள் வழியாகச் சென்று ராமு பிரதேசத்திலுள்ள கும்பாரத்துக்கு அமெரிக்கர்கள் முன்னேறிவிட்டார்கள். காகிலியையும் அலெக்ஸிஸ்ஷேபனையும் விமானப்படை தாக்கியதில் எதிரிக்கு 104 விமானங்கள் நஷ்டமாயின. நாம் இரண்டு விமானங்களை இழந்தோம் ரபாலை மறுபடியும் நாம் தாக்கியதில் எதிரி 60 விமானங்களை இழந்தான். இந்தப் பிரதேசத்திலுள்ள ஜப்பானியக் கடற்படையையும் நாம் தாக்கினேம். ஒரு நாசகாரியும், பீரங்கிப் படகும், சாமான் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டன. காவியங் பிராந்தியத்தில் 8,000 டன்கள் எடைமானமுள்ள ஒரு துருப்பேற்றிச் செல்லும் கப்பல் குண்டுகளால் அடிக்கப்பட்டது.

மாகிம் தீவு, காஸ்மாடா, கிளஸ்டர் முனை, துவாம் தீவு, டொராபெ, பூகா நடைவழி, வேவாக், போராம் முதலிய ஸ்தானங்கள் வெடிகுண்டு வீச்சுக்குட்பட்டன.

சைனு.—இந்த வார ஆரம்பத்தில் ஜப்பானியத் துருப்புகள் பர்மா எல்லைச் சரகத்திலிருந்து யூனன் மாகாணத்தை மூன்று பகுதிகளாகச் சென்று தாக்கி, ஸால்வின் நதியின் கிளைநதியைத் தாண்டி, பியன்னுவென்ற சிறிய நகரத்தைப் பிடித்தனர். அமெரிக்க விமானப் படை இந்த பிராந்தியத்தைத் தாக்கிற்று. ஜப்பானியர்கள் புதிய ஸ்தானங்களிலிருந்து இப்பொழுது பின்வாங்குகிறுர்கள்.

பர்மா.—ரோந்து வேலை பலப்பட்டுவிட்டது. எதிரியுடன் சில்லரைச் சச்சரவுகள் நடைபெற்றன. அரக்கானில் மாங்க்டாவுக்கருகில் ஒரு ஜப்பானிய ரோந்துப் படை துறத்தியடிக்கப்பட்டது. பிரிடிஷ் ரோந்துப் படைகளும், துருப்புகளும் சின் மலைகளில் எதிரியின் அநேக கோஷ்டிகளை மறைந்திருந்து நாசம் செயதுவிட்டார்கள்.

இவ்வாரத்திய விமான நடவடிக்கைகள் அடுத்த பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

11—10—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.–(102 அச்சு விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 32 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

(அமெரிக்க விமானப் படையால் தாக்குதல்கள்).

ஜெர்மனியிலுள்ள மன்ஸ்டர் (Munster), கிரெபெல்டு (Krefeld).

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

பீரங்கி ஸ்தாபனங்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—இதாலியிலுள்ள யுத்த அரங்கங்கள்.

விமான நிலயம்.–காரிட்ஸா (Garitza).

ருஷ்யா (Russia).

(41 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகங்களில் உள்ள கப்பல்கள்.—டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலுள்ள அம்பாய்னு (Amboina).

ஜப்பானியச் சைனியங்கள்.-வீவாக் (Wewak) பிரதேசம்—(10 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

ஜப்பானியத் துணைக்காவலோடுகூடிய கப்பல்கள்.—ஸாலமன்ஸிலுள்ள புகா (Buka).

ஜப்பானியப் படகுகள்.–நியூ கினி (மூழ்கடிக்கப்பட்டன).

பர்மா (Burma).

(ராயல் விமானப்படையால் தாக்குதல்கள்)

எதிரித் துருப்புகள், ஸப்ளைக் குவியல்கள்.–காலிமியோ (Kalemyo) பிரதேசம்.

நாச்சேய் (Nachai).

எதிரிகள் ஆக்கிரமித்திருந்த கிராமங்கள்.—மாயூ (Mayu) தீபகற்பம்.

படகுகள்.—மாயு நதி (Mayu), அக்யாப் (Akyab) பிரதேசம்.

(அமெரிக்க விமானங்களால் தாக்குதல்கள்).

ரயில்வே தளங்கள்.—ஸகெய்ங் (Sagaing).

பாதைகள்.—நியாங்பின்வன் (Nyaungbinwun).

ரயில்வே தளங்கள்.-மாண்டலே (Mandalay) பிரதேசம்.

12—10—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல் இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

பீரங்கி ஸ்தாபனங்கள் மோட்டார் போக்குவரத்துகள்.—இதாலியில் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள்.

விமானச் சண்டைகள்.—டெர்மோலி (Termoli).

(1 ஜெர்மன் விமானம் நாசமாக்கப்பட்டது).

கடல்விமானதளம்.—ஆர்பெடெல்லோ (Orbetello) விற்குத் தெற்கில்.

எதிரிக் கப்பல்கள்.—காஸ் (Cos) தீவு.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

டிமோர் (Timor), (அட்மிராலிடிக்கூட்டத்திலுள்ள பர்டி (Purdy) தீவுகள்.

பர்மா (Burma).

(ராயல் விமானப்படையால் தாக்குதல்கள்).

ரயில்வே ஜங்ஷன்கள்.—பின்மானு (Pyinmana), டவுன்கூ (Toungoo).

கிராமங்கள்.—காலிமியோ (Kalemyo) பிரதேசம்.

ரயில்வே தளங்கள்.—மின்ஸூ (Minzu).

13—10—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

நேசதேச விமானநடவடிக்கையைப்பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில் வண்டிகள்.—பெஸ்காரா (Pescara), இதாலியிலுள்ள வாஸ்டோவிற்கருகிலுள்ள பைவோனக் (Bivonac) பிரதேசங்கள்.

டாங்கிகள் துருப்பு ஸ்தாபனங்கள்.-ஐந்தாம் சேனே யுத்தம் செய்யும் பிரதேசங்கள்.
ரயில்வே ஜங்ஷன்கள் ரஸ்தா சந்திப்புகள்.—பார்மியா (Formia)விற்கருகில்.
மோட்டார் போக்குவரத்துகள்.—சீட் (Chiet) பிரதேசம்.

ருஷ்யா (Russia).

(97 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானதளம், துறைமுகம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால்(Rabaul). (120 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 177 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

பர்மா (Burma).

(ராயல் விமானப்படையால் தாக்குதல்கள்).
ரயில்வே ஸ்டேஷன்கள்.—முனிவா (Monywa).
எதிரி ஆக்கிரமித்த கட்டடங்கள்.—பகாக்கு (Pakokku).
கிராமங்கள், துருப்புகள்.—காலிமியோ (Kalemyo)பிரதேசம்.
வேவு பார்த்தல்.—மாயு (Mayu), தீபகற்பம் மித்தா (Myittha)சமவெளி, அக்யாப் (Akyab)பிரதேசம்.
ஜப்பானியச் சைனியங்களின் நடிசைகள்.—ராதிடாங் (Rathedaung).
(அமெரிக்க விமானப் படையால் தாக்குதல்கள்).
படகு போக்குவரத்து ஸ்தாபனங்கள்.—மிட்னி (Myitnge).
ரயில்ரோட் தளங்கள்.—டவுன்கூ (Toungoo).
ரயில்வே மத்திய ஸ்தலம்.—புரோம்(Prome).

14—10—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

(104 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 62 நேசதேச விமானம் காணப்படவில்லை). (அமெரிக்க விமானப்படையால் தாக்குதல்கள்).
முக்கிய தளவாடங்கள்.— ஜெர்மனியிலுள்ள ஷ்வெய்ன்பர்ட் (Schweinfurt).
வியாபாரக் கப்பல்கள்.—பிரெஸ்ட் (Brest).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—டெர்னி (Terni).
ரயில் ரோடுகள்.—குவில்லா (Givlla)விற்குத் தெற்கிலே பெஸ்காரா (Pescara)விற்கு வடக்கில்.
இருப்புப்பாதை சந்திப்புகள்.—பார்மியா (Formia)விற்கருகில்.

ருஷ்யா (Russia).

(93 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் பூராவிலும்.

தூரக்கிழக்கு (Far East).

காஹிலி விமான நிலயம்.—பொகெய்ன்வில்லி (Bougainville).
கப்பல்கள்.—பொகெய்ன்வில்லிக் (Bougainville)கருகில்.

பர்மா (Burma).

ஒரு தகவலும் இல்லை.

15—10—43. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

நேசதேச விமான நடவடிக்கைகளைப்பற்றி ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

(6 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
ரஸ்தா சந்திப்புகள்.—வெனுப்ரோ (Venafro).
மோட்டார் போக்குவரத்துகள்.—காபா (Capua)விற்கருகில் ஒரு பாலம்.
யுத்த தளவாடக் குவியல்கள்.—பெடாக்கியாடோ (Petacciato).
விமான நிலயம்.—ரோமிற்கருகில் மாரிக்லியானு (Marigliana).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய தளங்கள்.—நியூ கினியிலுள்ள மடாங் (Madang); நியூ பிரிடனிலுள்ள கிளஸ்டர் முனை (Cape Gloucester).
விமான நிலயம்.—காஸ்மாடா (Gasmata).
ஸ்தாபனங்கள்.—நியூ பிரிடனிலுள்ள லிண்டன் ஹாபென் (Linden-hafen),
விமான நிலயம்.—அலெக்ஸிஸ்ஷாபென் (Alexisshafen).
எதிரிப் படகுகள்.—ஸாலமன்ஸிலுள்ள புகா (Buka).

பர்மா (Burma).

கப்பற்கட்டும் துறை தளங்கள்.—ரங்கூன் (Rangoon).
ரயில்வே தளங்கள்.—புரோம் (Prome), ரங்கூன் (Rangoon), ஹென்ஸாடா (Henzada).
ராணுவ நிலயங்கள்.—கியாக்பியு(Kyaukpyu).
கப்பற் கட்டுந் துறை பிரதேசங்கள்.—கியாக்மியாங் (Kyaukmyaung).
படகு போக்குவரத்துகள்.—தாபெய்க்கியின் (Thabeikkyin).

16—10—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

(8 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

சேனைகள் யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—அன்கோனு (Ancona).

ரஸ்தாக்கள், ஸப்ளை ஷெட்டுகள் —காபா (Capua).

மோட்டார் போக்குவரத்துகள் ரயில்வேக்கள்.-ரோமிற்குத் (Rome) தெற்கிலே.

வியாபாரக் கப்பல்.—கிரீஸின் (Greece) மேல கரை.

விமான நிலயம்.—கிரீஸிலுள்ள ரோம் கஸாலே (Rome Casale).

விமான நிலயங்கள்.—ரோட்ஸ் (Rhodes), டொடிகானிஸிலுள்ள காஸ் (Cos).

கிழக்கு கடற்கரை ரயில்வே—இதாலியில் பெஸ்காரா (Pescara).

ருஷ்யா (Russia).

(64 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானத் தாக்குதல்கள்.—மாடாங்கிலிருந்து (Madang) ஒரோ கடல் வரையிலும். (84 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

பர்மா (Burma).

எதிரிக் கப்பல்கள்.—காதா (Katha).

படகுகள்.—ஐராவதி (Irrawaddy), மாயு (Mayu) நதிகள்.

விமான மிறங்குமிடங்கள்.—பாமோ (Bhamo).

குடிசைகள்.—ராதிடாங் (Rathedaung) பிரதேசம்.

17—10—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—(ராயல் விமானப்படையால் தாக்குதல்கள்). பெர்லின் (Berlin.)

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

ரயில்வே இலக்குகள்.—ஆக்கிரமித்த பிரதேசங்களில்.

கப்பல்கள்.—இதாலியின் கீழ்கரை (Italy).

ருஷ்யா (Russia).

(45 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன)

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

பின்வாங்கும் ஜெர்மன் சைனியங்கள்.—டினிப்பரின் (Dnieper) மேல் கரை.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—வீவாக் (Wewak), போரம் (Boram), (22 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

ஸப்ளைக் குவியல்கள்.-காஸமாடா (Gasmata).

விமான எதிர்ப்பு பீரங்கி ஸ்தானங்கள்.—கிளஸ்டர் முனை (Cape Gloucester).

எதிரிப் படகுகள்.—ராட்டாக் (Rottock) வளைகுடா.

விமானச் சண்டைகள்.—விட்டியாஸ் (Vitiaz) ஜலஸந்தி. (2 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

அலெக்ஸிஸ்ஷாபன் (Alexisshafen). (25 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

கப்பல்கள்.—காஹிலி (Kahili). (6 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

பர்மா (Burma).

ரயில்வே ஸ்டேஷன்.—ஸகெய்ங் (Sagaing).

அக்யாப் நகரம் (Akyab).

படகுகள்.—ஐராவதி (Irrawaddy), சிண்ட்வின் (Chindwin) நதிகள்.

ரயில்வே ஜங்ஷன்.—நாபா (Naba).

எண்ணெய் வண்டிகள், படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

12—10—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

இங்கிலாந்தின் கீழ் கரை. (ஒரு எதிரி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

ருஷ்யா (Russia).

நஷ்யச் சைனியங்கள்.—வெள்ளை ருஷ்ய யுத்த அரங்கம்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள லே (Lae).

13—10—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

கடற்கரை ஜில்லா.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—மெலிடோபோல் (Melitopol).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

14—10—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஸப்போரோஸி (Zaporozhe) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

அட்டு (Attu) த்தீவு.

15—10—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

தென் கிழக்கு இங்கிலாந்தின் சில பகுதிகள். கிழக்கு ஆங்கிலியா (East Anglia).

ருஷ்யா (Russia).

ஜெர்மன் சைனியங்கள்.—கெரமென்சக் (Kremenchug).

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசச் சைனியங்கள்.—பின்ஸ்சாபன் (Finschhafen).

16—10—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

தென்கிழக்கு இங்கிலாந்தின் சில பகுதிகள். ஹோம் கண்ட்ரீஸ் (Home Counties), லண்டன் (London) பிரதேசம்.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள பூனு (Buna), டோரோ பே (Toro Bay).

17—10—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

தென்கிழக்கு இங்கிலாந்தின் சில இடங்கள். கிழக்கு ஆங்கிலியா (East Anglia), ஹோம் கண்ட்ரீஸ் (Home Counties).

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள லே (Lae), பின்ஸ்சாபன் (Finschhafen).

18—10—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

சில இடங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து லண்டன் (London) பிரதேசம். (சொற்ப உயிர்ச் சேதம்).

ருஷ்யா (Russia).

நுஷ்யா பாலங்கள்.—டினிப்பரின் மேல்கரை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசக் கப்பல்கள் ஸ்தாபனங்கள்.—ஒரோ (Oro) கடல். (31 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன அல்லது சுட்டுத்தள்ளப்பட்டன.

யுத்தக் குறிப்புகள்.

இதாலியின் நிலைமை இதாலியின் தற்போதிய நிலைமையை அறியவேண்டுமானால் ராஜீய, ராணுவ விஷயங்களை முக்கியமாக கவனித்துப் பார்க்கவேண்டும். ராஜீய முறையில் பாஸிஸ்ட் கக்ஷியினரின் ஆக்ஷி ஒழிந்த பின்னும் நிலைமையில் மாறுதல் ஏற்படவில்லை. ஆனால் இதாலியில் குழப்பமும், கெடுதலும் அதிகரித்துவிட்டது. இதாலியின் தெற்குப் பக்கத்தில் ஒரு ஆக்ஷியும், வடக்குப் பக்கத்தில் மற்றொருவர் ஆக்ஷியுமிருந்துவருகிறது. ஒன்று மன்னரின் நிர்வாகம், மற்றொன்று பாஸிஸ்ட் கக்ஷியின் நிர்வாகம். ராணுவ முறையில் பின்வாங்கிவரும் ஜெர்மானியர்கள் தெற்குப் பக்கத்தை நாசம் செய்துவிட்டனர். அந்தப் பிராந்தியம் பூராவிலும், தீக்கிரையான நகரங்களும், பாழாய்ப்போன கிராமங்களும்தான் காணப்படுகின்றன. இதாலியின் மற்ற இரண்டு பாகங்களும் ஜெர்மனியின் ஆட்சிக்குட்பட்டிருக்கிறது. அங்கே ஜனங்களைக் கைதி செய்வதும், அயல்நாடுகளுக்கு வெளியேற்றுவதும் நிரந்தரமாக நடைபெறுகின்றன.

வி வி வி வி வி

உருவமற்றது. போர் தொடுத்த பின்னரும் இதாலியின் நிலைமையில் தெளிவு ஏற்படவில்லை. போர்புரியும் நாடுகளில் ஒன்றென்று எம்மானுவல்-படோக்ளியோ நிர்வாகம் கருதப்பட்டாலும் இன்னும் அது நேசதேசத்தார்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அது நேசநாடாக ஆகவில்லை. அந்த நிர்வாகம் அனுப்பும் ராணுவ ஒத்தாசை சொல்பமானதே. படோக்ளியோவின் நிலைமை தகவல் அறிவிப்பதற்குத்தான் உபயோகப்படுகிறது. போர்புரியும் பிரெஞ்சுக்காரர்களும், யூகோஸ்லாவியர்களும் அந்த நிர்வாகத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அபிஸீனியா அதைக் கண்டனம் செய்கிறது. எம்மானுவல் மன்னர் தான் அபிஸீனிய சக்ரவர்த்தியென்றும் அல்பேனியா மன்னர் என்றும் பட்டங்கள் வழங்கிக்கொள்ள நேசதேசத்தார்கள் அனுமதிக்கமாட்டார்கள்.

வி வி வி வி வி

பிளவு. இதாலிய தேசம் பூராவும் கக்ஷி பிரதிக்கக்ஷியுள்ள நாடு போலாகிவிட்டது. ஆகிலும், உள்நாட்டுக் கலகம் ஏற்படவில்லை. ஏனென்றால், ஜனங்களிடையே பிளவு கிடையாது. அவர்கள் சுறுசுறுப்பாக இல்லை. இதற்கு முஸோலினியும், அவனைச் சேர்ந்த புதிய பாஸிஸ்ட் கக்ஷியினரும்தான் காரணம். முஸோலினி அதிகாரத்துக்கு மறுபடியும் வந்தபின் அவன் அச்சுநாடுகளுக்கு உதவியளித்துவருகிறான் என்பதையும் நாம் மறந்துவிடமுடியாது. பால்கன் நாடுகளில்

முஸோலினியின் நிர்வாகம் ஒரு சிறிது ஊக்கமளித்திருக்கிறது. ஜெர்மனியிலுள்ள பொது மக்களின் மனோதிடத்தை அதிகரித்திருக்கிறது. ஹிட்லர் நேசநாட்டார்களைச் சுட்டிக்காட்டி தன்னுடைய தேச மக்களிடம் "நாஸி—பாஸிஸ்ட் நாடுகளின் ஒற்றுமை குலையவில்லை. இதாலி நமது கக்ஷியில் சேர்ந்து சண்டைபோடுகிறது" என்று சொல்ல சந்தர்ப்பமளித்து விட்டது.

வி வி வி வி வி

இதாலியக் கூத்து. ஆகிலும், உண்மையில் முஸோலினி மறுபடி பதவி ஏற்றதும் பாஸிதத்வமும் ஹிட்லருக்கு உபயோகப்படவில்லை. முஸோலினி பதவிக்குத் திரும்பிவந்ததுபற்றி இதாலியில் உற்சாகம் ஏற்படவில்லை. அவனுடைய குடியரசு பாஸித்த்வ நிர்வாகமும் ஜனங்களிடையே நம்பிக்கையை உண்டுபண்ணவில்லை. முஸோலினியையும் அவனுடைய பாஸிஸ்டு கோஷ்டியார்களையும் பலமான ஜெர்மன் துணைக் காவலுடன் போலோனுக்குக் கொண்டுபோய்விட்டதாகத் தெரியவருகிறது. ஹிட்லருடன் ஒத்துழைப்பதில் முஸோலினி ஒரு கோமாளிபோல நடிக்கிறான். அவனுடைய பரிவாரங்கள் அவனை வெறுப்புடன் நோக்குகிறார்கள். அவனுடன் ஒத்துழைக்கவும் மறுதளித்துவிட்டார்கள். அவன் கோரிக்கைக்கிணங்கி 10 மிலியன் இதாலியர்களில் 2 சத விகிதம்தான் அவனுடன் சேர்ந்திருக்கிறார்கள். போலீஸ் வேலையிலமருவதற்கும் அதிக இதாலியர்கள் முன்வரவில்லை. முஸோலினி இதாலியிலிருப்பதால் நாசவேலை மூலமாகவும், உள்நாட்டுக் கலகங்கள் மூலமாகவும் ஜெர்மனி இதாலியை இழந்துவிடக்கூடும்.

வி வி வி வி வி

ஜெர்மனியின் ஆதிக்கம். பாஸி தத்வம், குடியரசு ஆக்ஷி என்ற வேறு பெயருடன் நிலைநாட்டப்பட்டபோதிலும், ஜெர்மன் ராணுவ அதிகாரிகளால் இழச்சி செய்யப்பட்டுவருகிறது. பிரான்ஸில் பிடேனுடைய ஆக்ஷியைப் போல இதாலியில் பாஸி ஸத்லதயும் ஜெர்மானியர்கள் வெறுக்கிறார்கள். ஜெர்மானியர்களுக்குப் போதுமான ஒத்தாசையை பாஸிதத்வம் அளிக்காவிட்டால் அது நிச்சயம் அழிந்து போய்விடும். நாசவேலை இதாலியில் அதிகரித்திருக்கிறதென்பதில் ஒரு ஆச்சரியமுமில்லை. லா ஸுமிஸா என்னும் பத்திரிகையில் வாலிபமுள்ள இதாலியர்கள் மலைப்பிராந்தியங்களுக்கு ஓடி கொரில்லாச் சண்டையைத் துவக்கிவிட்டார்கள். எதிர்ப்புச் செய்கிறவர்களுக்கும் ஒத்துழைக்காதவர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. தேக திடமுள்ளவர்களெல்லோரும் ஜெர்மனியில் வேலைசெய்ய தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நாட்டிலுள்ள உணவுப்பொருள்களும், ராணுவ முஸ்தீப்புகளும், இயற்கைப்பொருள்களும் கொள்ளையடிக்கப் படுகின்றன.

வி வி வி வி வி

புத்துயிர். அவமானமும், அழிவும், தோல்வியும், சரணுதிகதியும், நாசமும் கொள்ளையடிப்பும் நிரம்பிய இதாலி அதனுடைய அக்கிரமங்களின் பயனாக இன்னும் அநேக கஷ்டங்களையும், இருபது வருஷங்களாக பாஸிதத்வ முறைகளிலீடுபட்டிருந்ததால் கைதி முகாம்களின் துன்பங்களையும் அனுபவிக்கவேண்டும். இதாலியிலிருந்து ஜெர்மானியர்களை அப்புறப்படுத்தும்வரையில் இது நடந்துதான் தீரும். தற்போதிய நிலைமையை உத்தேசித்தால் இதாலியர்களிடையே உள்நாட்டுக்குக் கலகமும் ஏற்படக்கூடுமென்று தோன்றுகிறது. இதாலி பிரயாசைப்பட்டால் அது புத்துயிர் பெறலாம். ராஜீய புனரமைப்பும் ஏற்படலாம். அவ்விதம் இதாலியர்கள் நடந்துகொள்ளுவார்களா?

வி வி வி வி வி

தற்காப்பு யுத்தம். ஸாலர்னோவில் நேசதேசப்படைகளை கடலுக்குள் துரத்தியடிக்க முடியாமல் போய்விட்டபொழுது, ஜெர்மானியர்கள் தற்காப்பு யுத்த முறைகளையும் பின்வாங்கிக்கொண்டே போர் செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவிட்டார்கள். போர் புரியும் பிரதேசத்தில் சௌகரியமிருக்கும் வரையில் ஜெர்மானியர்கள் முரட்டுத்தனமாகப் போர்புரிவதும் அங்கு நேசதேசப்படைகள் குவிந்துவிட்டவுடன் அங்கிருந்து கிளம்பிப் பின்வாங்குவதும்தான் ஜெர்மனியின் புதிய யுத்த தந்திரம். டெர்மாலியில் மட்டும் இந்த நடவடிக்கையை அவர்கள் அனுஷ்டிக்கவில்லை. இங்கே 8-வது படை ஜெர்மனியின் படையின் விலாப்பக்கத்தை வளைத்துக்கொண்டது. இந்த இடத்தில் முன்னேறித் தாக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதால் 5-ம் படையை எதிர்த்து நின்ற 16-வது பான்ஸர் டிவிஷன் துருப்புகளை எட்ரியாடிக்கடல் யுத்த அரங்கத்துக்கு ஜெர்மனி அனுப்பிவிட்டது. நேசதேசப்படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்க ஜெர்மனி செய்த பிரயத்தனங்கள் கிழக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதியிலும் பயன்படவில்லை. பெருவாரியான நஷ்டத்துடன் அவர்கள் மறுபடியும் மலைப்பிராந்தியங்களுக்குப் பின்வாங்கிவிட்டார்கள்.

ரோமுக்காக யுத்தம். நேசநாட்டாரின் துருப்புகள் இப்பொழுது வால்டர்னோ வளைகுடாவிலிருந்து காபுவா வழியாக டெர்மாலிக்கு வடக்கே நான்கு மைல்களிலுள்ள பிரதேசத்துக்குச் செல்லக்கூடிய ஒரு கோட்டில் நின்று கொண்டிருக்கின்றன. வால்டர்னோ நதியின் கரையில் பாலமுனைகளை ஏற்படுத்தியபின் 5-ம் படை முன்னேற ஆரம்பித்து காபுவா சம வெளிகளை அடைந்து விட்டது. ரோமுக்காக யுத்தம் துவங்கிவிட்டது. நேசநாடுகளின் பலமான தாக்குதலைக்கண்டு ஜெர்மன் படைகள் பின்வாங்குகிறார்கள். போகும்பொழுது கிராமங்களை தீக்கிரையாக்கியும், கால்நடைகளைச் சுட்டுக் கொன்றுவிட்டும் செல்லுகிறார்கள்.

8-ம் படையும் சாவதானமாக முன்னேறிவருகிறது. டெர்மாலியிலிருந்து விஞ்சியாடர்னோவுக்குச் செல்லும் குறுக்கான ரஸ்தாவை அவர்கள் பிடித்தனர். பாக்கியாவுக்கு வடமேற்கில் 48 மைல்களிலுள்ள காம்போபாஸ்ஸோவை எதிரி காலிசெய்யும்படியாகவும் செய்துவிட்டனர்.

வி வி வி வி வி

மாரிகாலம் சமீபித்துவிட்டது. ஹிட்லர் ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவிலும், ஜெர்மனியிலும் வெடிகுண்டுவீச்சுகளால் வாசஸ்தலமிழந்த மிலியன்கணக்கான பொதுமக்களுக்கு எவ்விதமாக வாசஸ்தலத்தை நிர்மாணிப்பது என்பது தான் ஜெர்மனியின் முக்கியமான பிரச்னை. அவர்களெல்லாம் காவல் முகாம்களிலிருந்து கட்டடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். தாங்கள் இழந்த வாசஸ்தலங்களுக்கு திரும்பிவர ஆசைப்படும் வசதிகளுக்கு அதிகார வர்க்கத்தார் உணவுப்பொருள்களை விநியோகம் செய்ய மறுத்துவிடுகிறார்கள். வாசஸ்தலமில்லாததுடன் உணவுப் பஞ்சமும் உண்டாகிவிட்டது. உணவுப்பொருள்களின் திருட்டு அபாரமாக ஜெர்மனியில் நடைபெறுகிறது. கனிவர்க்கங்களும், காய்கறிகளும், குழி முயல்களும், உணவுப்பொருள் பார்சல்களும் சோரம் செய்யப்படுகின்றன.

வி வி வி வி வி

சோர்வு. ஜெர்மானியர்கள் மறுத்தபோதிலும் பிரிடனின் கடல் முற்றுகை மூலம் ஜெர்மனியின் உணவுப்பொருள் ஸப்ளை குறைந்துவிட்டதென்பது நிச்சயம். ஆக்கிரமித்த நாடுகளிலுள்ள உணவுப்பொருள்களைக் கொள்ளையடித்து எவ்வளவு காலம் ஜெர்மனி ஜீவிக்கமுடியுமென்பதுதான் இப்போதிய பிரச்னை. மேலும் யுத்தத்துக்குமுன் தயாரித்து வைத்திருந்த எல்லா யுத்த தளவாடங்களையும் சென்ற மகா யுத்தத்தைவிட இந்த யுத்தத்தில் இதுவரையில் இரட்டிப்பு மடங்கு மனித பலத்தையும் ஜெர்மனி இழந்துவிட்டது.

வி வி வி வி வி

பால்கன் நாடுகள். இதாலி சரணடைந்தபின் பால்கன் நாடுகளின் நிலைமை நாளுக்குநாள் மோசமாகிவருகிறது. ஜெர்மனி 30 டிவிஷன் துருப்புகளை இழந்துவிட்டது. தேசாபிமானிகளும், செட்னிக்குகளும், கொரில்லாப் படைகளும் பலமாக ஜெர்மனியை எதிர்க்க ஆரம்பித்துவிட்டன. டால்மேஷியா, அல்பேனியா கடற்கரையில் ஜெர்மனியின் பிடிப்பு பலஹீனம் அடைந்துவிட்டது. கொரில்லாப்படைகள் ஆசாக்கிலும், ஸ்பிளிட்டிலும், நிக்ஸிக்கிலும், ரோஸோவிலும், வலோனாவிலும் பூமிக்கும் ஸபிட்ளிடுக்குமிடையிலுள்ள தீவுகளிலும் ஏராளமாகத் திரண்டிருக்கிறார்கள். மூன்று டிவிஷன் பல்கேரியத் துருப்புகளையும், சில டிவிஷன் குரோஷியத் துருப்புகளையும் தவிர இந்தப் பிராந்தியத்தில் ஜெர்மனிக்கு உதவியளிப்பவர்கள் வேறொருவருமில்லை. இந்த பிராந்தியத்துக்கும் வட இதாலிக்கும் ரோமல் சேனாதிபதியாக நியமுக்கப்பட்டிருக்கிறார். ஜெர்மன் துருப்புகள் பால்கன் நாடுகளைக் காப்பாற்றதற்காக தென்கிழக்கு மத்தியதரைக்கடலிலுள்ள தீவுகளில் கதியற்று உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வி வி வி வி வி

பிரசாரத்தின் எதிரொலி. கோயபல்ஸ் சொல்லும் அபாண்டமான பொய்பிரசாரங்கள் ஜெர்மனிக்கே ஆபத்து உண்டாக்கிவிட்டன. சில உதாரணங்களைக் கூறுவோம்.

முதலாவதாக, அக்டோபர் 3-ம் தேதியன்று அறுவடைக்காக வந்தனோபசாரம் செய்யும் பொழுது செய்த பிரசங்கத்தில் "ஜெர்மனியிலுள்ள விவசாயிகளின் பிள்ளைகள் யுத்த தளத்துக்குப் போயிருந்தாலும், ஜெர்மனியின் உணவுப் பங்கீடு முறையானது யுத்த ஆரம்பத்திலிருந்ததைவிட 100 கிராம்கள் அதிகமாக இருக்கிறது" என்று கோயபல்ஸ் பீத்திக்கொண்டான். மட்டுப்படுத்தக்கூடியதாகச் சொன்ன வாக்கியத்தில் அவன் குட்டை வெளிப்படுத்திவிட்டான். ஜெர்மனியில் விவசாயிகளில்லாதபோது விளைவுபொருள்கள் எவ்வித

மாக அமிதமாகயிருக்கக்கூடும். அயல்நாடுகளைக் கொள்ளையடித்தால் ஒருக்கால் உணவுப் பொருள்களை அதிகப்படுத்திவிடலாம். அந்த சந்தர்ப்பத்தில் கோயபல்ஸ் மற்றொரு செய்தியை விடுத்தான். "உழுதுண்பதும், ஆயுதங்களும் நமக்கு வெற்றியளித்துவிடும்" என்று அவன் சொன்னான். அதாவது ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ளவர்கள் விவசாயத்தில் ஈடுபடவேண்டு மென்றும் யுத்த தளத்தில் ஜெர்மானியர்கள் போர் நடத்துவார்களென்றும் பொருள்படுகிறது.

அதே சொற்பொழிவில், 1918-ம் வருஷத்திய நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்திக்கொண்டு யுத்தத்தில் ஏற்படக்கூடிய மதிக்கமுடியாத அநேக நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசிவிட்டு இந்த யுத்தமானது ஜெர்மானியர்கள் பிழைத்திருப்பதற்காக நடைபெறுகிறதென்றும் சொன்னான். அடிமைப்பட்டிருக்கும் ஐரோப்பாவில் இந்தப் பிரசங்கத்தின் எதிரொலிகள் தோன்றி விட்டன. அவர்கள் கோயபல்ஸின் வார்த்தைகளின் அர்த்தத்தைக் கண்டுபிடித்துவிட்டார்கள். ஜெர்மனியுடன் நட்பு கொண்டிருந்த தேசங்கள் ஜெர்மனி நிச்சயமாக முறியடிக்கப்பட்டுவிடு மென்றும் மதித்துவிட்டனர். ஆகையால் அவைகள் நாசவேலையை அதிகப்படுத்தி ஜெர்மனி யின் வீழ்ச்சியை துரிதப்படுத்துகின்றனர். டென்மார்க்கிலேற்பட்ட கலகங்கள் இதன் விளைவுகள்தான். அங்கே கலகம் அடங்கிவிட்டதாகப் புலப்படவில்லை.

இரண்டாவது உதாரணமாக, பிரிடிஷ் விமானப்படையின் வெடிகுண்டுகளிலிருந்து தப்பித்துக்கொள்ள பெர்லினைக் காலி செய்துவிடவேண்டியது அவசியமென்று கோயபல்ஸ் விளம்பரம் செய்தான். அதன் விளைவுகள் கோரமானவை. ஜனங்களுக்கு திகில் அதிகரித்து விட்டது. ஆகையால் பெர்லினைவிட்டுச் செல்லுகிறவர்களின் தொகை ஜாஸ்தியாகிவருகிறது

மூன்றாவதாக, ருஷ்யாவுடன் ஜெர்மனி சமாதானம் செய்துகொண்டதாக கோயபல்ஸ் பிரசாரம் செய்தான். அதுவும் கெட்ட பலனை அளித்துவிட்டது. ஜெர்மன் ஸோல்ஜர்கள் இந்த வார்த்தைகளை நம்பி, சமாதானம் வந்துவிட்டதென்று நினைத்து, தங்களுயிரைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்காக கடுமையாகப் போர்புரியவில்லை. இந்தப் பிரசாரம் கெடுதலை உண்டுபண்ணிவிட்டதென்று அறிந்த கோயபல்ஸ் அவ்வித அபத்தப் பிரசாரத்தை இப் பொழுது நிறுத்திவிட்டான்.

வி வி வி வி வி

கடுமையான உத்தரவுகள். ஜெர்மன் மக்களின் மன உறுதி குலைந்துவிட்டதென்பது தெளிவாகத் தோன்றுகிறது. இதை விளக்கக்கூடிய முறையில் ஜெர்மனியில் அநேக புதிய கடுமையான உத்தரவுகள் பிறப்பிவிக்கப்பட்டிருக் கின்றன. பிரசாரர்கள் சொல்லுகிறபடி தோல்வி மனப்பான்மையுள்ளவர்கள் தயையன்னி யில் ஒழிக்கப்படுவார்களாம். மரண தண்டனையும் விதிக்கப்படும். அவ்விதம் தண்டனை பெற்றவர்களை அவர்களுடைய குற்றங்களுக்கு சிக்ஷை விதிக்கும் முறையிலும் மற்றவர் களுக்கு எச்சரிக்கை செய்யும் முறையிலும் பகிரங்கமாகக் கொலைசெய்துவிடுவார்களாம்.

வி வி வி வி வி

யூதர்களை நிர்மூலம் செய்வது. இதேவிதமாக யுத்தம் முடிவடையும் முன் ஐரோப்பிய நாடுகளிலுள்ள யூதர்களை அழித்துவிடவேண்டு மென்று ஹிட்லர் மற்றொரு உத்தரவு பிறப்பித்திருக்கிறான். இந்த வேலைக்கு ஜெர்மன் ரகசியப் போலீஸின் தலைவரும், டென்மார்க்கிலுள்ள யூதர்களை வதைத்ததுமான எயிக்மான் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஹிம்லர்கூட இந்த நடவடிக்கையை ஆக்ஷேபித்தான். ஹிட்லர் அவன் பேச்சை உதறிவிட்டான். யூதர்களை கொலை தளங்களுக்கு அனுப்புவதைவிட அவர்களைக் கைதி முகாம்களில் அடைத்துவைக்கலாமென்று நாஸி மிதவாதிகள் ஹிட்லரிடம் சிபார்சு செய்தார்கள். ஸ்வீடன் சமீப காலத்தில் ஆக்ஷேபித்த பிறகு டென்மார்க்கிலுள்ள யூதர்களை கிட்னியாவுக்கு அப்புறப்படுத்துவது ஓய்ந்துவிட்டது.

வி வி வி வி வி

ருஷ்யர்களின் முன்னேற்ற யுத்தம். நீபர் நதியின் மத்திய பாகத்துக்கு ஜெர்மானியர்கள் பின் வாங்குவது முடிவடைந்துவிட்டதென்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். தாத்காலிகமாக நின்றுவிட்டதென்று அவர்கள் சொல்லியிருந்தால் பொருத்தமாகயிருந்திருக்கும். இலையுதிர்கால மழையும், இடைவிடாது முன்னேறியபின் படை வரிசைகளைத் திருத்தியமைக்கும் அவசியமும் சேர்ந்து சொல்ப காலத்திற்கு ருஷ்யர் களின் முன்னேற்ற வேகத்தில் தளர்ச்சியேற்படுத்தியிருக்கலாம். நீபர் நதியைச் சில இடங் களில் ருஷ்யர்கள் ஊடுருவிச் சென்றாலும் பிடித்த ஸ்தானங்களைப் பலப்படுத்தவேண்டியதும் அவசியமாகும். ஆகிலும் நீபர் நதியை ருஷ்யர்கள் தாண்டிவிட்டார்களென்பதும ருஷ்யர்கள் முன்னேறித் தாக்குதல் செய்ய சக்திபெற்றிருக்கிறார்களென்பதும் மறுக்கமுடியாத உண்மைகள்.

அக்டோபர் 8-ம் தேதி வெளிவந்த டிரான்ஸ் ஓஷன் என்னும் பத்திரிகையில் புதிய ருஷ்யத் தாக்குதல் என்பது பிரசார முறையில் செய்யப்பட்ட வீராப்புப் பேச்சு என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகிலும் ஜெர்மானியர்கள் வேறு விதமாகப் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். ருஷ்யர்களின் தாக்குதலைப்பற்றி சேர்ந்தாற்போல் சொல்லாமல் ஒவ்வொரு சமயத்திலும் ஒரு பகுதியில் நடைபெறும் யுத்தத்தைப்பற்றி விவரித்து ருஷ்யர்களின் தாக்குதல்களின் வேகத்தைக் குறைத்துச்சொல்ல ஜெர்மானியர்கள் முயற்சிசெய்து வருகிறார்கள்.

எதிரி எந்த தந்திரத்தை மேற்கொண்டாலும் பின்வாங்குவது ராணுவ தந்திரப்படி சிறந்த முறையில் நடைபெறுகிறதென்று பீத்திக்கொண்டாலும் ருஷ்யாவின் யுத்த தந்திரம் தான் சிலாகிக்கத் தகுந்ததாகயிருக்கிறது. ஒரு வாரத்துக்குள்ளாகவே ருஷ்யர்கள் 1,300 மைல்கள் நீளமுள்ள போர்முனையை ஏற்படுத்தி வடக்கிலும், மத்தியிலும், தெற்கிலும் ஜெர்மானியர்களைத் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள். நீபர் நதி பிரதேசத்தில் ஜெர்மானியர் நின்று போர் செய்வார்களென்று நினைத்தது சாத்தியமில்லை. அந்த பிராந்தியத்தில் ருஷ்யர்கள் மூன்று இடங்களில் ஊடுருவிச் சென்றுவிட்டனர். மேலும் நீபர் நதி பிரதேசத்தை அடைந்தவுடன் ஓய்வெடுத்துக்கொள்ளலாமென்று நினைத்த ஜெர்மனியை ருஷ்யர்கள் மறுபடியும் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

வி வி வி வி வி

ராஜ தந்திர நடவடிக்கைகள். அக்டோபர் மாதத்தில் ஏராளமான ராஜதந்திர நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. ஆல்ஜியர்ஸில் நடைபெறும் ராஜீய ராணுவ கோஷ்டியின் சர்ச்சைகளும் மாஸ்கோவில் நடைபெறப்போகும் மூன்று வல்லரசுகளின் மகாநாடும் பொதுமக்களின் கவனத்தைக் கவருகின்றன.

ஆல்ஜியர்ஸ் கமிஷனர்கள் விடுதலைபெற்ற நாடுகள் சம்பந்தமான எல்லாப் பிரச்னைகளையும் விவரித்துப் பேசுவார்கள். இங்கே ருஷ்யாவில் மூன்றுவது ஸ்தானம் வகிக்கும் M. விஷின்ஸ்கி ஸ்டாலினின் பிரதிநிதியாகயிருப்பார். மத்தியதரைக்கடல் கமிஷன் என்று சொல்லப்பட்ட ஆல்ஜியர்ஸ் கமிஷனை இப்பொழுது ராஜீய—ராணுவக் கமிஷன் என்று அழைப்பதில் விசேஷமிருக்கிறது. அது அரைகுறையான சாச்வதமான ஸ்தாபனம் என்று சொல்லப்படுகிறது.

அந்தோனி ஈடனும், மிஸ்ட்டர் கார்டல் ஹல்லும் மாஸ்கோவுக்கு வந்துவிட்டார்கள். ஆகையால் மகாநாடு ஆரம்பமாகிவிட்டது. அதன் விரிவான லக்ஷியங்கள் பின்வருமாறு, மூன்று வல்லரசுகளிடையே உள்ள ஒத்துழைப்பை பலப்படுத்துவது, கூடிய சீக்கிரத்தில் வெற்றியை சம்பாதிப்பது, நியாயமான, சாச்வதமான சமாதானத்தை ஸ்தாபிப்பது, நெடும் போக்கான யுத்தத்துக்குப்பின் நிர்த்தாரணம் செய்யப்படவேண்டிய எல்லைச்சரக நிர்ணயம் போன்ற பிரச்னைகள் இப்பொழுது விவாதிக்கப்படமாட்டா. விஷயக் குறிப்பில் இரண்டாம் போர்முனையை ஏற்படுத்தும் விஷயம் விவாதிக்கப்படுமென்று சொல்லப்படுகிறது. ஜெர்மனி நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று ருஷ்யா வற்புறுத்தும். ருஷ்யாவின் உபதலைவரான M. போரிஸ், E. வாடனேயெவ் பின்வருமாறு சொல்லுகிறார்.

"ருஷ்யாவுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டங்களை ஜெர்மனி சாமான்களை உற்பத்தி செய்து நஷ்ட ஈடு செய்யவேண்டும். ருஷ்யாவின் தேசியப் பொருளாதார நிலைமை முன்போல் நிலைநாட்டப்பட்டு அபிவிருத்தியடையக்கூடிய அளவுக்கு ஜெர்மனி நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். நஷ்டமானதை சரிப்படுத்துவதற்கு மிகுதியான சேவையும், முயற்சியும் தேவைப்படும். ஆகையால் ஜெர்மனி நாசம் செய்து கொள்ளையடித்தவைகளுக்கு நஷ்ட ஈடு செய்வது நியாயமானது."

வி வி வி வி வீ

அஸோர்ஸ் தீவுகள். யுத்தம் முடிவடையும் வரையில் பிரிட்டனுடைய உபயோகத்திற்காக போர்ச்சுகல் அஸோர்ஸ் தீவுகளை தானம் செய்துவிட்டதென்று நாம் ஏற்கனவே சொன்னோம். இப்பொழுது அந்தத் தீவுகளில் பிரிடிஷ் படைகள் இறங்கிவிட்டன. இந்தத் தளங்களை அமெரிக்கர்களும் உபயோகப்படுத்துவார்கள். போர்ச்சுகல் ஐரோப்பாவில் நடுநிலைமை வகிக்குமென்று அந்நாட்டு பிரதம மந்திரி சொல்லிவிட்டார். இந்த நடவடிக்கையை ஜாக்கிரதையுடன் கவனித்துவருவதாக ஜெனரல் பிராங்கோவும் உறுதிகூறிவிட்டார். மற்ற நடுநிலைமை வகிக்கும் நாடுகளுடன் துருக்கிக்கும் ஐயர்லாந்துக்கும் போர்ச்சுகல் வழிகாட்டிவிட்டது. அச்சுநாட்டார்கள் வெருட்டிக் கொண்டிருக்கும்பொழுது நேசநாட்டாருடன் ஒத்துழைப்பதுதான் நடுநிலைமை வகிக்கும் நாடுகள் செய்யக்கூடிய புத்திசாலித்தனமான நடவடிக்கையென்று போர்ச்சுகல் காண்பித்து இருக்கிறது.

யுத்த ஆரம்பத்தில் பிரிடனுக்குத் தோல்விகள் ஏற்பட்டபொழுது தங்களுடைய பாதுகாப்பிற்காக அஸோர்ஸ் தீவுகளைத் தங்களிடம் விட்டுக்கொடுக்கும்படி அமெரிக்கர்கள் கேட்டபொழுது போர்ச்சுகல் மறுதளித்தது மட்டுமல்லாமல் அமெரிக்கர்கள் மீறி நடவடிக்கை எடுத்துக்கொண்டால் பலமான எதிர்ப்பு உண்டாகுமென்று எச்சரிக்கையும் விடுத்தது. இப்பொழுது போர்ச்சுகலின் மனப்பான்மை மாறுதலடைந்துவிட்டது. அமெரிக்காவுக்கு அளிக்க மறுதளித்த சலுகைகள் இப்பொழுது பிரிடனுக்குக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சலுகைக்கு அச்சுநாட்டார்களுக்கு நம்முடைய வந்தனம் ஒரு சிறிது உரித்ததாகும். முக்கியமாக இரண்டு வருஷங்களுக்குமுன் போர்ச்சுகீய டிமோரையும் இப்பொழுது சைனாவிலுள்ள போர்ச்சுகீய மாகோவையும் கைப்பற்றிக்கொண்ட ஜப்பானியர்களுக்கு நம்முடைய வந்தனம் உரித்ததாகும். மனப்பூர்வமாக நடுநிலைமை வகிப்பதாக முயற்சி செய்துவந்த நாடுகளெல்லாம் அச்சுநாடுகளின் நடவடிக்கையின்மூலம் தங்களுக்கு ஒவ்வாத காரியங்களைச் செய்யும்படி நேர்ந்துவிட்டது. போர்ச்சுகலின் நடவடிக்கை, 600 வருஷங்களாக பிரிடனுக்கும், போர்ச்சுகலுக்கும் ஏற்பட்டிருந்த நட்புக்கு ஒவ்வானதென்பதையும் அச்சு நாடுகளின் கௌரவம் போய்விட்டதென்பதையும் வெளிப்படுத்துகிறது.

பெர்லினும், டோக்கியோவும் தங்களுடைய ஆக்ஷேபனைகளை தெரிவித்துவிட்டன. என்ன விபரீதம் நேரிடுமோவென்பது புலப்படவில்லை. போர்ச்சுகலுடன் போர் துவக்கப்படலாம், அல்லது அயல்நாட்டு ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்படலாம், அல்லது பொதுமக்கள்பேரில் வெடிகுண்டுகள் வீசப்படலாம். முதலில் சொல்லியிருக்கும் நடவடிக்கையை ஆரம்பிக்க ஹிட்லரிடம் சக்தியில்லை. மேலும் அவன் மற்ற ஒரு இடத்தில் போர் நடத்துகிறான். போர்ச்சுகலில் யுத்தம் துவக்கினால் மற்றொரு போர்முனையை ஏற்படுத்தியதாகும். அயல்நாட்டு சம்பந்தங்களை ரத்து செய்தால் சமாதானப் பேச்சுகளை நடத்த உபயோகப்படக்கூடிய நடுநிலைமையை வகிக்கும் ஒரு நாட்டை அவன் இழந்துவிடநேரிடும். போர்ச்சுகலைத் தாக்கினால் அதற்கு சக்தி வாய்ந்த நண்பர்களிருக்கிறார்கள். வெற்றி பெற்றுவரும் கக்ஷியில் சேர்ந்துவிட்டோமென்று போர்ச்சுகல் அறிந்துவிட்டது.

அஸோர்ஸ் என்பது ஒன்பது எரிமலைகளுள்ள தீவுக்கூட்டம். இன்னமும் அபாயத்துக்குட்பட்டிருக்கும் அட்லாண்டிக்கடல் மார்க்கத்தில் அவைகளிருக்கின்றன. லிஸ்பனிலிருந்து 780 மைல்கள் தூரத்திலும், ஆபிரிக்காவிலிருந்து 900 மைல்கள் தூரத்திலும், நியூ பௌண்ட்லாந்திலிருந்து 1,000 மைல்கள் தூரத்திலுமுள்ள இந்தத் தீவுக்கூட்டம் நியூ யார்க் ஆகும் அக்ஷரேகையிலிருக்கிறது. அஸோர்ஸ் தீவுகளின் ஆக்கிரமணத்திலிருந்து அட்லாண்டிக் கடலின் குறுகிய மார்க்கத்தில் செல்லுவதற்கு தற்காப்பு செய்யப்படலாம். சென்ற மூன்று வருஷங்களாக பிரெஞ்சு தளங்களிலிருந்து புறப்பட்டு வெடிகுண்டுகளை வீசும் எதிரி விமானப்படையின் தாக்குதலைத் தவிர்ப்பதற்காக நேசதேசக் கப்பல்கள் வடக்குப் பக்கத்திலுள்ள நீண்ட கடல் மார்க்கத்தில் செல்லவேண்டியிருந்தன. மேலும் அங்கிருந்தபடியே மத்தியதரைக்கடலுக்குச் செல்லும் கப்பல் கூட்டங்களுக்கு பலமான துணைக்காவல் அனுப்பக்கூடும். மேலும் யூ படகு கூட்டங்கள் நடமாடக்கூடிய பிஸ்கே வளைகுடாவில் கடுமையான ரோந்து வேலை செய்துவரலாம். அஸோர்ஸ் தீவுகளை இலேசான கப்பல்கள் தங்குவதற்கும் வெகுகாலம் சஞ்சாரம் செய்தபின் ஓய்வெடுத்துக் கொள்ளுவதற்கும் தளமாகவும் உபயோகப்படுத்தலாம்.

வி வி வி வி வி

ஐரோப்பிய வானம். ஐரோப்பிய வானம் நேசதேச ஆதிக்கத்துக்குட்பட்டுவிட்டது. ஐரோப்பாவிலுள்ள ஆக்கிரமிப்பு நாடுகளின் எந்த மூடுக்குக்கும் எந்த நேரத்திலும் நேசதேச விமானங்கள் செல்லக்கூடும். பிரிடிஷ், அமெரிக்க விமானங்கள் நன்றாய் ஒத்துழைத்து வருவதால் எதிரியின் தரை, ஆகாயத் தற்காப்புகள் சதாகாலமும் உஷாராகயிருக்கவேண்டும். சமீபத்தில் பிராங்க்பர்ட்டை பகலில் அமெரிக்க விமானங்களும் அன்றிரவே பிரிடிஷ் விமானங்களும் தாக்கியதிலிருந்து இது நன்றாய்ப் புலப்படுகிறது. இதாலியில் புதிய விமான தளங்கள் கிடைத்து விட்டபடியால் புதிய லக்ஷியங்கள் தாக்கப்படுகின்றன. மேற்கிலிருந்து ஏற்படும் தாக்குதலுடன், தெற்கிலிருந்தும் விமான நடவடிக்கை செய்யப்படுகிறது. இது வரையில் பத்திரமாகயிருக்கிறது என்று நினைத்த ஜெர்மன் நகரங்களும், புதிதாகத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்ட பிரதேசங்களும், வெடிகுண்டுகளின் வீச்சுக்குட்பட்டுவிட்டன. மேலும் இதாலியிலும், ருஷ்யாவிலுமுள்ள போர்முனையை குறுக்கிக்கொண்டு பிரதேசங்களிலிருந்து ஜெர்மன் துருப்புகள் பின்வாங்கிவருவதால் மற்ற தொழிற்சாலை பிரதேசங்களும் வெடிகுண்டு வீசும் விமானங்களின் தாக்குதலுக்கு சமீபத்தில் வந்துவிட்டன. நேசதேச வெடி விமான நடவடிக்கைகள் ஜெர்மன் யுத்த தளவாட உற்பத்தியை பாதித்துவிட்டன என்பது நிச்சயம். தளவாட உற்பத்தி இலாகா மந்திரியான ஸ்பீயர் விமானம் கட்டுகிறவர்களையும் கட்டுவதற்கு

திட்டங்கள் போடுகிறவர்களையும் கூட்டி வெடி விமானங்களின் பீதியை நிவர்த்திக்க விமான எதிர்ப்பு முஸ்தீப்புகளை எவ்விதம் தயாரிப்பது என்று விவாதிக்கப்போகிருர்.

நேசநாடுகளின் விமான நடவடிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் அதைத் தடுக்க ஜெர்மனி விமான எதிர்ப்பு தற்காப்புகளை பலப்படுத்தியிருக்கிறது. சண்டை விமானங்களையும் அதிகப்படுத்தியிருக்கிறது. இதிலிருந்து முன்போல நேசதேச விமானங்கள் அகஸ்மாத்தாக ஒரு சமயம் சென்று வெடிகுண்டுகளைப் போடுவதில்லையென்றும், மகத்தான தாக்குதல்களை ஏற்பாடாக நடத்தி அதன் மூலம் ஏராளமான நஷ்டங்களையும் அனுபவிக்கிருர்களென்றும் பொருள்படுகிறது. ஜெர்மனியின் தளவாட உற்பத்தி குறைந்துவிட்டது. மேலும் ருஷ்யப் போர்முனையிலிருந்து ஜெர்மன் விமானப்படையின் ஒரு பகுதியை இங்கு கொண்டுவரவேண்டிய நிலைமையும் உண்டாகிவிட்டது. விமானப்படை உயர்தர மார்ஷல், ஸர் பிலிப் ஜோபர்ட் சொல்லுவது போல், ருஷ்யாவில் ஜெர்மன் சண்டைவிமானங்களில் இப்பொழுது நாலில் ஒரு பாகம்தான் இருக்கின்றன.

வி வி வி வி வி

புதிய நிகழ்ச்சிகள். விமான நடவடிக்கையில் புதிய கட்டம் ஆரம்பமாகிவிட்டது. அக்டோபர் மாதம் 9-ம் தேதியன்று பிரிடனிலிருக்கும் அமெரிக்க வெடிவிமானங்கள் வடகிழக்கு ஜெர்மனி, கிழக்கு பிரஷியா, ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் போலந்து முதலிய இடங்களைத்தாக்கி ருஷ்யாவுக்கு நேர்முகமாக ஒத்தாசை செய்தன. இந்த நடவடிக்கையில் விமானங்கள் 2,000 மைல்கள் பறந்து சென்றன. இந்த வெடிவிமானங்கள் பகலில் தாக்கின. ஆகிலும், அவைகள் பறக்கும் கோட்டைகளானதாலும் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளும் சக்திபெற்றவைகளானதாலும் அவைகளின் துணைக்காக சண்டை விமானங்கள் செல்லவில்லை. அவைகள் கடுமையான பீரங்கி பிரயோகம் செய்யக்கூடியவைகளாதலால் அவைகளை சுலபமாகத் தாக்கமுடியாது.

அன்றிரவு பிரிடிஷ் மஸ்கிடோ விமானங்களும் சிறந்த விமானத் தாக்குதல் செய்தன, அவைகள் இரவில் பெர்லினைத் தாக்கின. எல்லா விமானங்களும் பத்திரமாகத் திரும்பி வந்தன. மஸ்கிடோ அதிக வேகம் பொருந்தியது. அதுதான் ஆகாய யூ படகு.

வி வி வி வி வி

தூரக்கிழக்கு யுத்தம். தூரக்கிழக்கு யுத்ததந்திரம் இப்பொழுது உருவாகிவிட்டது. இது குறுகிய போக்கும் நெடும் போக்குமுள்ளது. குறுகிய திட்டப்படி பர்மாவைக் கைப்பற்றுவது. இது லூயி மௌண்ட் பேடன் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.) ரபாலைக் கைப்பற்றுவது. (இந்த நடவடிக்கையில் ஆஸ்திரேலிய, அமெரிக்கப்படைகள் கலந்துகொள்ளும்). நீண்டகால திட்டப்படி ஜப்பானின் வலிமையை அழித்துவிடுவது. பஸிபிக் யுத்த அரங்கம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். ஒன்றில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடாவும், இரண்டாவது பகுதியில் பிரிடனும் இந்தியாவும், மூன்ருவதில் சைனுவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இரண்டாவது பகுதியில் நடவடிக்கைகள் லூயி மௌண்ட் பேடன் பிரபுவின் தலைமையில் நடைபெறும். அமெரிக்கா பெரிய கடற்படையையும், சைனு மகத்தான தரைப்படையையும், பிரிடன் ஒன்றுபட்ட கடல், தரை, ஆகாயப்படைகளையும் இந்தப்போர்முனையில் உபயோகப்படுத்தக்கூடும். சைனுவுக்கு பிரிடனும், அமெரிக்காவும் உதவியளிக்கும். அமெரிக்கா பிலிபைன்ஸ் தீவுகளில் பலமான யுத்தம் ஆரம்பிக்கும். பிலிப்பிணேக்களுக்கு டோஜோ சமீபகாலத்தில் ஸ்வதந்திரமளித்து விடுவதாகக் கூறியதிலிருந்து இங்கே போர் தொடங்குமென்று ஊகிக்கலாம்.

வி வி வி வி வி

புதுக்கோட்டையில் யுத்த நடவடிக்கைகள். அமோனியா உப்பு கட்டுப்பாடு உத்தரவு, எதிரிகளுக்கு ஒத்தாசை செய்யும் நபர்களின் சீர்திருத்த சட்டம், ஸோல்ஜர்களின் தாவா சீர்திருத்தச் சட்டம் நிறுவப்பட்டிருக்கின்றன. தவிடு, உமி முதலியவற்றை ஸமஸ்தானத்துக்கு வெளியே உள்ள நாடுகளுக்கு அனுப்பக்கூடாதென்று தடை செய்யப்பட்டிருக்கிறது.

உணவுப்பொருள் தான்யங்களின் பேரில் அடமானமாக தொகைகளைக் கடன் கொடுப்பது குற்றமாகும். ஜவுளித்துணி வியாபாரம் செய்யும் கூட்டுறவு சங்கங்கள் லைஸென்ஸ் வரி விதித்ததிலிருந்து விலக்கப்பட்டிருக்கிருர்கள்.

இந்தியாவின் கிழக்கேயுள்ள பர்மா, மலேயா, இதர தேசங்கள், இவற்றிலிருந்து பிரகிருத யுத்த காரணங்களால் 8—12—41-க்குப் பிறகு இங்கு திரும்பி வந்திருப்பவர்கள், 1943-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் கச்சேரியுள்ள எந்த தினத்திலோ தங்கள் சம்பந்தப்பட்ட தாலுகா கச்சேரிக்குப் போய் ஆங்கு இருக்கும் எனுமரேட்டர் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான பூராவான பதில்களை அறிவிக்கவேண்டும் என்று மற்றொரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

போர்ச்சுகலின் அயல்நாட்டு நடவடிக்கையில் நான்கு கொள்கைகளிருக்கின்றன.

வருங்கால நிகழ்ச்சிகளில் போர்ச்சுகல் ஒரு முக்கிய ஸ்தானம் வகிக்கக்கூடுமென்று எதிர்பார்த்துவரும் நாளில், அதன் அயல்நாட்டு நடவடிக்கைகளில் நாலு கொள்கைகள் தோன்றுகின்றன. நடுநிலைமை பிரிடனுடன், தொன்றுதொட்டு பெற்றிருந்த விசுவாசம், ஸ்பெயினுடன் நட்பும் நெருங்கிய நடவடிக்கையும், பிரேஸிலுடன் வியாபார அபிவிருத்தியும் மற்ற சம்பந்தங்களின் அதிகரிப்பும். போர்ச்சுகல் பிரிடனுடைய பிராசீனமான நண்பன் என்று சொலலும் முறையானது இங்கிலாந்தின் மன்னரான 1-வது எட்வர்டுக்கும், போர்ச்சுகலுக்கும் 1294-ம் வருஷத்தில் ஏற்பட்ட வியாபார ஒப்பந்தத்தை ஒட்டி ஆரம்பமானது. 1373-ம் வருஷத்தில் இஙகிலாந்தின் 3-வது எட்வர்டும் போர்ச்சுகலின் மன்னரான பெர்டினண்டும் இரு தேசங்களுக்குள் சாச்வதமான நட்பு ஏற்படுவதற்காக ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்கள். மானிட வர்க்கத்தின் நடவடிக்கைகளில் சாச்வதமான என்ற பதத்துக்கு விளங்கும் அர்த்தத்தைவிட பிரிடனுக்கும், போர்ச்சுகலுக்குமிடையே ஏற்பட்ட நட்பு அது முதற்கொண்டு சாச்வதமாக நீடித்திருக்கிறது.

இந்த யுத்த ஆரம்பத்தில், 1939-ம் வருஷம் அக்டோபர் மாதம் 10-ம் தேதியன்று தேசீய சபையில் போர்ச்சுகீஸ் பிரதம மந்திரியான டாக்டர் ஸலாஸார் பேசியபொழுது "நம் இரு நாடுகளுக்குமிடையே நிலவும் நட்பையொட்டி போர்ச்சுகல் யுத்தத்தில் ஈடுபடும் படியாக பிரிடன் ஒரு கோரிக்கையையும் செய்யவில்லை. ஆகிலும் பிரிடனிடம் போர்ச்சுகலுக்குள்ள நட்பையும் விசுவாசத்தையும் உடன் காலத்தில் வெளிப்படுத்தினால்தான் நம்முடைய அந்தக் கர்மம் திருப்தியடையும்" என்று சொன்னார். அதற்கு சில மாதங்களுக்குப் பின் மூர் ஜாதியார்களைத் துறத்தியடித்து போர்ச்சுகல் தேசத்தை ஸ்தாபித்த 800-வது வருஷ விழாவையும் ஸ்பெயினிடமிருந்து விடுதலை பெற்ற 300-வது வருஷ விழாவையும் போர்ச்சுகல் கொண்டாடியபொழுது ஜார்ஜ் மன்னரின் பிரதிநிதியாக காலஞ்சென்ற கெண்ட் பிரபு வைபவங்களில் கலந்துகொண்டார்.

டாக்டர் ஸாலாஸார் ஆக்ஷிபுரிந்துவரும் காலத்தில் அவர் போர்ச்சுகீஸ் தேசீய மக்களுக்கு போர்ச்சுகல் உலகத்தில் குடியேற்ற நாடுகளுள்ள தேசங்களுக்குள் நான்காவது வல்லரசு என்றும் அதன் சாம்ராஜ்யம் 8,50,000 மைல்கள் பரவியிருக்கிறதென்றும் தாய் நாட்டைப்போல் 25 மடங்கு பரிமாணமுள்ளதென்றும் புகட்டியிருக்கிறார். குடியேற்ற நாடுகளில் அஸோர்ஸ் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த 9 தீவுகளும் உட்பட்டவை. போர்ச்சுகலிலிருந்து 700 மைல்கள் தாண்டி அவைகளிருந்தாலும் அவைகள் தலைநகரைச் சேர்ந்தவைகளென்று கருதப்படுகின்றன. சமீபகாலத்தில் அவைகளுக்கு சுய ஆக்ஷிமுறையில் சிறிது சலிகை காட்டப்பட்டது.

நடுநிலைமை வகிக்கும் நாடுகளைப்போல யுத்த காலத்தில் பொருளாதார கஷ்டங்களை போர்ச்சுகலும் அனுபவித்திருக்கிறது. அயல்நாட்டு வியாபாரக் குறைவுடனும், இறக்குமதிக் குறைவுடனும், சேர்ந்தாற்போல் அல்பமான அறுவடையும் சேர்ந்துகொண்டன. சென்ற வருஷம் வரையில் தேசத்தின் மொத்த வருமானத்தில் 34 சதவிகிதம் தேசத்தின் தற்காப்புகளில், முக்கியமாக கடற்படை பலத்தை விருத்தி செய்வதில், செலவிடப்பட்டு வந்தது.

1933-ம் வருஷத்தில் டாக்டர் ஸாலாஸாரின் தலைமையில் நிறுவப்பட்ட நிர்வாகம் ஒரு சமாஜ ஆக்ஷி போன்றது. அது மேல்மேலும் விருத்தியடைந்து வருகிறது. தேசத்தின் நெருக்கடியான சமயத்திலும் தேசீய சபையைக் கூட்டவோ அல்லது கலைத்துவிடவேண்டிய சமயத்திலும் கூட்டி ஆலோசனை செய்வதற்காக ஒரு ஆலோசனை சபை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தேசீய சபையில் 90 மெம்பர்களிருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நான்கு வருஷங்கள் வரையில் ஸ்தானம் வகிப்பார்கள். 23 வகுப்புகள் கொண்ட சமாஜ கோஷ்டியார்கள் விவாதித்து அனுப்பிய மசோதாவை தேசீய சபை சட்டமாக நிறைவேற்றிவிடும். சமாஜ கோஷ்டியில் தேசத்தின் பொருளாதார சம்பந்தமாக முக்யத்வமுள்ளவர்கள் சேர்ந்திருப்பார்கள்.

ஸலாஸார்—போர்ச்சுகலின் கூச்சமுள்ள யதேச்சாதிகாரி.

(ஸ்பெக்டேடர், டெயிலி மெயில் பத்திரிகை).

டாக்டர் ஸலாஸாரின் அழகான உடுப்புகளையும், அவருடைய அமைதியையும், கவனித்தால் அவர் நியாயவாதியோ, அல்லது அமைதியுள்ள கடற்படை அதிகாரியோ, அல்லது கலாசா அதிகாரியோ என்று சொல்லக்கூடும். உண்மையாக அவர் சர்வகலாசாலை அதிகாரிதான். கொயிம்பிரா சர்வகலாசாலையில் அவர் பொருளாதார, கோச சாஸ்திரத்தின் போதகர்.

இதை விஞ, போர்ச்சுகலில் அவருடைய முயற்சியில் குதூகலமாகவும், க்ஷேமமாகவும வசித்துவரும் அநேகர்கள் அறியாதபடி அவர்தான் அண்டோனியோ டி ஆலிவீரா ஸலாஸார் என்பவர், போர்ச்சுகலின் கூச்சமுள்ள யதேச்சாதிகாரி. எஸ்டாடோ நோவா என்ற நிர்வாகத்தை உண்டுபண்ணியவர். தென்மேற்கு ஐரோப்பாவில் இன்று மிகவும் முக்கியமான புருஷர்.

அவர் 1889-ம் வருஷத்தில் விசியூவுக்கும், கோயிம்பராவுக்குமிடையிலுள்ள ஸாண்டா கோம்பாடாஓ என்னும் கிராமத்தில் பிறந்தவர். அவருடைய பெற்ரோர்கள் கிராமத்தில் உண்டிக்கடை வைத்திருந்தார்கள். தங்களுடைய பிள்ளையை மதவிசாரத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்ற ஆவலுடன் அவரை விசியூவிலுள்ள கல்விச் சாலைக்கு அனுப்பினார்கள். அங்கு அவர் உதவி குருவாக நியமிக்கப்பட்டார். ஆகிலும், அவர் அந்த வேலையை ஒப்புக்கொள்ளவில்லை. பொருளாதார சம்பந்தமான நூல்களைக் கற்க ஆரம்பித்தார். 21-வது வயதில் அவர் கொயிம்பரா சர்வகலாசாலைக்குச் சென்று கல்வி கற்ருர். 1916-ம் வருஷத்தில் பொருளாதார நூல் போதகராக நியமிக்கப்பட்டார்.

பத்து வருஷங்களுக்குப்பின், சென்ற மகா யுத்தத்தில் ஜெர்மனியை எதிர்க்கச் சென்ற போர்ச்சுகீஸியப்படைகளின் தலைவராகயிருந்த மார்ஷல் கோமஸ்டி காஸ்டாவின் செல்வாக்குக் குட்பட்ட தேசமக்கள், 1910-ம் வருஷம் மன்னர் ஆக்ஷி வீழ்ச்சி பெற்றபின் 16 வருஷங்களாக லஞ்சம் வாங்கக்கூடிய ராஜீய வாதிகளுள்ள பிரபுக்களின் ஆக்ஷியை எதிர்த்துக் கலகம் செய்தார்கள். போர்ச்சுகலின் பொருளாதார, கோச, நிர்வாக நிலைமை சீர்கெட்டிருந்தது. மார்ஷல் கோசா பொருள் நூல் போதகரைக் கூப்பிட்டு ஸமஸ்தானத்தின் அழுக்கான நிலைமையை சீர்திருத்தும்படி வேண்டிக்கொண்டார்.

ஸலாஸார் செய்கைகளை விளம்பரம் செய்வதில் பிரியப்படுவதில்லை: அதிகாரம் வகிக்க வேண்டுமென்ற ஆசையும் அவருக்குக் கிடையாது. ஆகிலும், அசமாதானத்துடன் அவர் அந்த வேலையை ஒப்புக்கொண்டார். ஆறு நாட்களுக்குப்பின் ராஜீய வாதிகளின் லஞ்சம் வாங்கும் புத்தியையும், யோக்கியதையின்மையையும் கண்டு வெறுப்புற்று அவர் வேலையை ராஜீனமா செய்தார். ஒன்றும் தோன்ருமல் அரசாங்கத்தார் சர்வ தேச சங்கத்தாரிடம் பொருள் கடன் கொடுக்கவேண்டுமென்று கெஞ்சினார்கள். தேசத்தின் கோசம்; பாங்குகளின் நிலைமையைப் பற்றி விரிவான விசாரணையை முதலில் செய்யவேண்டுமென்று சங்கத்தார் பதிலனுப்பிய பொழுது நிர்வாகத்துக்கு அசமாதானம் உண்டாகிற்று.

மறுபடியும் கோயிம்பரா கலாசாலை போதகரை ஜனங்கள் அணுகி வேண்டிக்கொண்டார்கள். அவர் மறுபடியும் கோசாதிபதி வேலையை ஒப்புக்கொண்டார். 1928-ம் வருஷத்தில் உத்தியோகம் ஏற்றுக்கொண்டபொழுது அவர் ஒரு கக்ஷியையும் சேர்ந்தவரல்ல. தான் செய்யப்போகும் நடவடிக்கைகளில் தனக்கு நிராக்ஷேபனையான அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்ற ஒரு உரிமையை மட்டும் அவர் பெற்றுக்கொண்டார். 12 மாதங்களுக்குள்ளாக குழப்பமாகயிருந்த பொருள், நிர்வாக அமைப்பை சீர்திருத்தம் செய்துவிட்டார். அவர் முதல் முதலில் தயாரித்த வரவு செலவுகணக்கு திட்டத்தில் அதிகமான பணம் மீதம் காட்டப்பட்டது. செலவு ஐட்டங்கள் குறைக்கப்படவில்லை. சுங்கவரியில் பேரம் செய்யப்படவில்லை. பணம் சம்பாதிக்க குறுக்கான திட்டங்கள் போடப்படவில்லை. உபரி வரி விகிதங்கள் காணப்படவில்லை. காலக்கிரமத்தில் வரவும், செலவும் சரிக்கட்டிவந்தன. அதற்குப்பின் நாளடைவில் பொருள் மீதமும் வைக்கப்பட்டது. போர்ச்சுகீஸ் நாணய செலாவணி நிலைநாட்டப்பட்டது. அயல் நாடுகளுக்குக் கொடுபடவேண்டிய கடன் தொகைகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன. விலைவாசிகள் ஒழுங்கான நிலைமையை அடைந்துவிட்டன.

இந்த அற்புதமான மாறுதல்களைச் செய்தவரை போர்ச்சுகீஸிய மக்கள் தங்களுடைய ரக்ஷகர் என்று புகழ்ந்தார்கள். அதற்குப்பின் அவரிடம் அயல்நாட்டு வியவகாரங்களையும் மூவகைப்பட்ட படைகளின் நிர்வாகத்தையும், கோசாதிபத்யத்தையும், தேசத்தின் இலாகாக்கள் சம்பந்தமான சர்வ அதிகாரத்தையும் ஒப்படைத்துவிட்டார்கள். சிறந்த திறமையுடன்

அவர் தேசத்தின் புனருத்தாரண வேலையைச் செய்துவந்தார். துருப்புகளை உபயோகிக்காமலும், விமானத் தாக்குதல் செய்யாமலும், பீரங்கிப்பிரயோகம் செய்யாமலும், 1933-ம் வருஷத்தில் தற்போதிருக்கும் எஸ்டாடோ நோவோ என்ற சமாஜ நிர்வாகத்தை அவர் ஸ்தாபித்தார். அதன் அடிப்படையாகயிருப்பது, தனிப்பட்ட நபர், ஒரு குடும்பம், கிருஸ்துவ மதம் ஆகிய மூன்றும் தான்.

ஆறு வருஷங்களுக்குள்ளாக ஸலாஸார் கிலாக்கியமான பொதுஜன இலாகாக்களையும், ராணுவப் படைகளையும், மனிதர்களின் ஆத்மீய, மத சம்பந்தமான ஸ்வதந்திரத்தையும் தேசத்தின் செல்வப்பெருக்கையும், சமாதான வாழ்க்கையையும் நிலைநாட்டிவிட்டார். இது ஒருவர் செய்த சிறந்தவேலையாகிலும் அவர் ப்யூரர், டூசே என்ற பதங்களுக்கு ஒத்ததான போர்ச்சுகீஸிய பாஷையிலுள்ள பதங்களை உபயோகித்து கௌரவம் பாராட்டவில்லை.

அவருக்கு விளம்பரத்தில் வெறுப்புண்டு. அவருடைய ஒளிப்படங்கள் பத்திரிகைகளில், அடிக்கடி வெளிவராது. வியாபார ஸ்தலங்களிலும், அவருடைய படங்கள் விற்பனை செய்யப் படமாட்டா. கிருஸ்துவ மதஸ்தர்கள் தங்களுடைய செஞ்சிலுவையைத் தரித்துக்கொள்ளுவது போல் ஸலாஸார் தன்னுடைய பதவியை டம்பமன்னியில் வகித்துவருகிறாரென்று சொல்லப் படுகிறது.

ஸலாஸார் மகத்தான ராணுவ ஒத்திகைகளிலும், வெறிபிடித்தவர்கள்போல் கோஷமிடும் கூட்டங்களில் பேசுவதிலும் ஆசைப்படுகிறதில்லை. 15 வருஷகாலத்தில் அவர் ஆறு தடவைகள் தான் சொற்பொழிவாற்றியிருக்கிறார்.

போர்ச்சுகீஸிய மக்களில் நூற்றில் ஒருவர் கூட அவர் தெருக்களில் நடமாடும் பொழுது அவரைக்கண்டு பிடிக்க முடியாது. அவர் சந்நியாசிகள் போல வாழ்க்கையை நடத்திவருகிறார். அவர் பிரம்மச்சாரி. லாகிரி வஸ்துக்களை உள்கொள்ளுவதில்லை. சுருட்டுக்குடிப்பதில்லை. மரக்கறி உண்ணுகிறவர். அவர் தனக்கு வருஷத்துக்கு 1,000 பவுன் ஊதியத்தை மட்டும் விதித்திருக்கிறார். தான் குடியானவர்கள் வீட்டில் ஜனித்ததைப் பற்றி அவர் பெருமை பாராட்டுகிறார்.

பிரிட்டனுடன் 600 ஆண்டுகளாக நட்புக்கொண்ட தேசத்தின் ராஜீய நிர்வாகியாகிய டாக்டர் ஸலாஸார் அவருக்கு பிரிடிஷாரின் நியாயமான எதிர்ப்பில் உள்ள அனுதாபத்தை வெளிப்படையாகக் காட்டியிருக்கிறார். அடைக்கலம் புகுந்த அநேக பிரிடிஷார்களுக்கு அவர் ரக்ஷணை அளித்திருக்கிறார். போர்ச்சுகலின் சர்வ ஐச்வர்யங்களையும் பிரிட்டிஷ் யுத்தக் கைதிகளின் உதவிக்காக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தாரிடம் ஒப்படைத்திருக்கிறார். அவர் அதிகாரத்துக்கு வந்த 17-வது ஆண்டுவிழா தினமான ஏப்ரல் 17-ம் தேதியன்று அவர் ஒலிபரப்பில் ஒரு பிரசங்கம் செய்தார். முதலில் போர்ச்சுகலுக்கும், பிரேஸிலுக்கும், பிரிட்டனுக்குமுள்ள நெருங்கிய சம்பந்தத்தை விளக்கிச் சொல்லிவிட்டு நாம் யுத்தத்தில் நேர்முகமாகக் கலந்து கொள்ளாவிட்டாலும் மற்ற நாடுகளைப்போல் நாமும், யுத்தத்துக்கு உதவியளிக்கிறோம் என்று அவர் சொன்னார்.

அச்சுநாடுகள் ஸலாஸாரை தங்களுடைய வலையில் சிக்கிக்கொள்ளும்படியாக எவ்வளவோ, பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். சென்ற வருஷத்தில் டாக்டர் ஸலாஸாரை ரோமுக்கு வரும்படிக்கும், அங்கே மத்தியதரைக்கடலின் சுயேச்சையை நிலைநாட்ட எல்லாநாடுகளும் ஒத்துழைக்கவேண்டுமென்று விவாதிப்பதற்காக அவர் ஸ்பானிஷ் அயல்நாட்டு மந்திரியுடன் சேர்ந்து மகாநாட்டில் கலந்து கொள்ளவேண்டுமென்றும் அச்சுநாடுகள் சூழ்ச்சி செய்தனர். டாக்டர் ஸலாஸாருக்கு அந்நிய நாடுகளில் பிரயாணம் செய்வதிலும் வெறுப்புண்டு. ஆகையால், அவருக்கு வந்த அழைப்பை மறுதளித்துவிட்டார்.

ஒழுங்கற்ற யுத்தத்திலிருந்து ஒழுங்கான குழப்பம் உண்டாகிவிட்டது.

தெற்கு ஐரோப்பாவின் கலவரத்திலிருந்து ஜெர்மனிக்கு உண்டாகியிருக்கும் பயன்கள்.

(அப்ஸர்வர் பத்திரிகையில் லிபரேட்டர் எழுதுவது.)

தெற்கு ஐரோப்பாவில் நடைபெறும் கலவரங்கள் ராணுவ முக்கியத்வமுள்ளதாக மாறிவிட்டன. இதாலியிலோ, அல்லது பால்கன் நாடுகளிலோ நடைபெறும் யுத்தத்தின் போக்குக்கும், உண்மையான ராணுவ வலிமைக்கும், ஒரு சம்பந்தமுமில்லையென்பதுதான் கலவரங்களின் முக்கியமான படிப்பினை. கலவரங்களின் மூலம் ஏற்பட்ட குழப்பமானது முடிவான திட்டங்களைக் கவிழ்த்துவிட்டது. படைகளின் வ்யூகரசனையையும் யுத்த தந்திரத்தையும் அவைகள் மாற்றிவிட்டன.

வடக்கு இதாலியில், ஜெர்மானியர்கள் 12 அல்லது 15 டிவிஷன் துருப்புகளை வைத்திருக்கிறார்கள். இவைகளில் ஒரு டிவிஷன் கார்ஸீகாவிலிருந்திருந்தால் ஜெர்மன் எதிர்ப்பு குலைந்திருக்காது. ஸாலர்னோவில் உபரியாக இரண்டு டிவிஷன் துருப்புகள் ஈடுபட்டிருந்தால் கெஸ்ஸல்ரிங் வெற்றிபெற்றிருப்பான். ஆனால், ஜெர்மானியர்கள் உபரிப்படைகளை அங்கு அனுப்பக்கூடவில்லை. கலவரம் செய்துகொண்டு இருக்கும் எதிரியின் நாட்டில் துருப்புகளை வைத்து அபாரமான பளுவைத் தாங்குவதென்பது ஒழுங்கான யுத்தம் செய்வதைவிட லாபகரமானதல்ல என்று ஜெர்மானியர்கள் கண்டுபிடித்து விட்டார்கள்.

ஆகையால் ரோமலின் சூழ்ச்சிகள் பலிக்கவில்லை. அவன் ஒரு போர்முனையை ஏற்படுத்தி விடலாமென்று மதித்திருந்தான். இதாலியை ஆக்கிரமித்த ஆரம்பம் செய்தகாலத்தில், கெண்டோனிலிருந்து டீரிஸ்டி வரையிலுள்ள 500மைல்கள்கொண்ட கடற்கரைப்பிரதேசத்தை தன் வசமுள்ள துருப்புகளைக்கொண்டு காப்பாற்றிவிடலாமென்றும், நேசநாடுகளை முன்னேற வொட்டாமல் காலம் கடத்துவதற்கு கெஸ்ஸல்ரிங்கினுடைய படைகள் எல்லைச் சரகங்களில் சில்லரைச் சண்டைகளை நடத்திவரக் கூடுமென்றும் ரோமல் நினைத்திருந்தான். எதிர்த்து நிற்கும் இதாலியத் தொழிலாளர்களும் இதாலியச் சேனையின் ஒரு பகுதியும், 500 மைல்களல்லாத 60,000 சதுர மைல்கள்கொண்ட பிரதேசத்தைப் பாதுகாக்கும் வேலையில் ஜெர்மானியர்களை ஈடுபடும்படி செய்துவிடுவார்களென்பதை ரோமலும், ஜெர்மன் ராணுவ அதிகாரிகளும் மதித்துப் பார்க்கவில்லை. சுலபமாக அங்குமிங்கும் சலனம் செய்யக்கூடிய ஒரு படையின் தளகர்த்தராகயிருந்த ரோமல், இப்பொழுது தன்னுடைய சேனையை அக்கக்காகப் பிரித்து, அவைகளை ஜெர்மனிக்கும், பிரான்ஸுக்கும் செல்லும் போக்குவரவு மார்க்கங்களை ரக்ஷிப்பதற்கும், பிரிடிஷ் யுத்தக் கைதிகளை வேட்டையாடுவதற்கும், சண்டித்தனம் பண்ணும் இதாலியத் தொழிலாளர்களை அடக்கியாளுவதற்கும், அராஜகத்தை ஒழிப்பதற்கும் ஏவவேண்டியதாயிற்று. ரோமலின் அதிகாரத்துக்குட்பட்டு 60 மாகாண தலைநகரங்களிருக்கின்றன. ஒவ்வொரு தலைநகரத்திலும் துருப்புகளின் ஒரு பகுதியை வைப்பதென்றால் அவரிடம் போதுமான துருப்புளே இருக்காது.

பால்கன் நாடுகளிலும், ஜெர்மனிக்கு, இதாலியிலுள்ள நிலைமை ஏற்பட்டுவிட்டது. பீல்ட் மார்ஷல் வேக்கிடம் 12 முதல் 15 டிவிஷன் ஜெர்மன் துருப்புகளும், 7 டிவிஷன் குரோஷியத் துருப்புகளும் பால்கன் படைகளைச் சேர்ந்த சில துருப்புகளும இருக்கக்கூடும். உண்மையில் அவனிடம் அப்பேர்ப்பட்ட துருப்புகள் கிடையாது. 1,50,000 சதுரமைல்கள் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் ஜெர்மன் ஆக்ஷியை நடத்த அவனிடம் 22 முதல் 27 டிவிஷன் துருப்புகள்தானிருக்கின்றன. இந்தப் பரப்பில் அவனிடமிருக்கும் துருப்புகள் புள்ளிகள்போல் தானிருக்கக்கூடும். மேலும், அவைகள் விசாலமாகப் பறவியிருக்கும் ஸ்தானங்களில் வைக்கப்படிருக்கின்றன. அதாவது ரோட்ஸிலும், கிரீட்டிலும், ஸலோனிகாவிலும், பெலப்பனீஸ்ஸிலும், பெல்க்ரேட்டுக்குப் போகும் இருப்புப்பாதையிலும், ஏட்ரியாடிக் கடற்கரையிலும் அவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மன் ஆதிக்கத்துக்குட்பட்ட இந்த பறந்த வெளிகளில் அநேக வாரங்களாக ஒரு ஜெர்மன் ஸோல்ஜரும் அல்லது இதர தேசத் துருப்பும் தலைகாட்டவில்லை.

இந்தக் கலவரங்களின் மற்றொரு விளைவுயாதெனில் ஜெர்மனியினுடையவும், ஜெர்மனியைச் சேர்ந்த நாடுகளுடையவும், துருப்புகளை லாபகரமாக ஜெர்மனி உபயோகிக்க முடியாமல் பரவலாக வைக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டதுடன் படைகளை ஒன்றுபடுத்தித் தாக்கும்படிசெய்யவும் அல்லது ஒருவருக்கொருவர் ஒத்தாசைசெய்து கொள்ளவும் முடியாமல் போய் விட்டது. இந்த நடவடிக்கைகளிலிருந்து ஜெர்மன் ராணுவ திட்டங்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லுவது சிரமசாத்தியமானது. இந்த யுத்தம் பூராவிலும், ஒரு குறிப்பான யுத்த முனையை ஏற்படுத்தி அந்த முனைக்கு ஏராளமான மனித பலத்தையும் முஸ்திப்புகளையும் அனுப்பி போர்புரிவதென்ற தந்திரம்தான் மேற்கொள்ளப்பட்டது. ஆகையால், நாடுகளில் கலவரம் நடைபெற்றாலும் அல்லது குழப்பமுண்டாகும் நிலைமை தோன்றினாலும், ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் தெற்கு ஐரோப்பாவில் படைகளை ஒருங்கு சேர்த்து உபயோகிப்பதென்பது முடியாத காரியம். அப்படிச் செய்வதற்கு மற்றப்போர் முனைகளிலிருந்து உபரிப்படைகள் ஏராளமாக வந்து சேரவேண்டும்.

நேசக் கட்சிக்கு இதாலியரின் உதவி.

(டைம்ஸ் பத்திரிக்கை).

பாஸிஸத்தின் வீழ்ச்சிக்கு ஒத்தாசை செய்தோர்களும், அதனால் மகிழ்வெய்தியோருமாகிய இதாலியர்கள், இதாலி தன் சாம்ராஜ்யத்தையும், யுத்தத்தையும் இழந்தும், தங்கள் தாய் நாடே தாக்குதலுக்கு உட்பட்டு பொருள் நஷ்டம் மனிதர்களின் மனோதைரியத்தில்

குறைவு இவைகள் ஏற்படுவதைத் தவிர வேறு எவ்விதமான லாபமும் இல்லை என்பதை உணர்கிறார்கள். தேசத்திலுள்ள எல்லா மக்களின் விருப்பம் இந்த யுத்தத்தினின்றும் கூடிய சீக்கிரம் தங்களை விடுவித்துக் கொள்ளவேண்டுமென்பதாகும். எனினும், யுத்தத்தினின்றும் தற்காலம் நேசக் கட்சியினரிடம் சரணடைந்து விலகிக் கொள்ளலாமென்றாலும், அவர்களுக்கு முன்பே விரோதியாயிருந்தவர்களும், இப்பொழுது மிகவும் தீவிரமாக விரோதத் தன்மையோடிருப்பவர்களுமான ஜெர்மானியர்களுடன் போரிட வேண்டியிருக்கிறது. அவர்களும் பழக்கம்போல் ஜெர்மனியை யுத்த களமாக்காமல் இதாலியைப் போர்க்களமாக்கிக்கொண்டு வருகிறார்கள்.

ஜெர்மானியர்களின் திட்டங்களெல்லாம் பல இதாலியத் தலைவரால் எதிர் பார்க்கப் பட்டனவாகவே இருந்து அதன்படி நடந்துவருவதையும் அத்தலைவர்கள் உணர்கிறார்கள். ஆரம்பமுதலே இந்த சமாதான உடன்படிக்கையால் இதாலியர்களின் கஷ்டங்கள் நிவர்த்தியாய் விடாது என்பதும், இன்னும் வேறு வழிகளில் அவர்கள் முயல வேண்டுமென்பதும் அவர்கள் எதிர் பார்த்ததே. நடுநிலைமை வகிப்பது அசாத்தியம். பின் நடவடிக்கைகளின் தன்மை அவர்கள் செய்ததே சரியெனச் செய்தது. இதாலியின் விடுதலைக்கு சமாதான உடன்படிக்கை மிகவும் முக்கியமானதான முதல் காரியமாகும். இரண்டாவதாக, திடமான நம்பிக்கையோடுகூடிய தேச பக்தர்களான இதாலியர்களை ஒருங்குபடுத்தி அவர்கள் முன்பு செத்தவர்களையும், இப்பொழுது அதற்கு பிராயச் சித்தமாக செய்யவேண்டியவைகளை உணருமாறு செய்து, பிரிடிஷ், அமெரிக்க படைகளுடன் சேர்ந்து ஜெர்மானியர்களை நிர்மூலப்படுத்த முயலுவதாகும். சமாதானத்திற்கென பேசியபொழுதே இவ் விஷயங்கள் பேசப்பட்டன. இதனையேதான் ஜெனரல் ஈஸன் ஹோவரும் அவர் போன்ற பல நேசதேசத் தலைவர்களும் கூறுகிறார்கள்.

கிரேட் பிரிடன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இந்நாட்டு சைனியங்கள், தங்களை ஸிஸிலியிலும், தெற்கு இதாலியிலும், எவ்விதம் இதாலியர்கள் நல்ல மனதோடு வரவேற்றார்கள் என்பது நன்கு அறிந்ததே. நேசதேசத்தார்கள் இதாலியர்களின் கூட்டுறவால், கூடியவரையிலும், ஜெர்மானியர்களைத் துரத்திவிட்டு பல பிரதேசங்களில் சமூக முன்னேற்றங்களிலும், பொருளாதார விஷயங்களிலும், பொதுஜன இயக்கங்களிலும், ஒரு விதமாக சமாதானமும் நல்வாழ்வும் உண்டாக்கி நிர்வகித்து வருகிறார்கள். இக்காரியங்கள் பொதுவாய் என்றும் நினைவில் வைக்கக்கூடிய முக்கிய காரியங்களேயானாலும், இப்போதைக்குள்ள அவசரமான பல காரியங்களுக்குப் பயனளிக்கக்கூடியதாயில்லை. போர் ஒன்றுதான் அவைகளைச் செய்யமுடியும். முக்கியமான விஷயம் ஜெர்மானியர்களைத் துரிதமாய் ராணுவமுறையில் தோற்கடிப்பதேயாகும். இந்த யுத்தத்தில் இதாலியர்கள் நேசக்கட்சியாருடன் சேர்ந்திருப்பது இன்னும் தீவிரமாய் இருப்பின் ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்கு நமக்கு இன்னும் சுலபமாகும். இவ்விஷயத்தை யாரும் எதிர்க்கவேமுடியாது. இதாலியர்களுக்கு இவ் விஷயத்தில் எவ்விதமான சந்தேகமும் இருக்கமுடியாது.

ஜெர்மனி பேரில் இருதிசைகளிலிருந்து விமான நடவடிக்கை.

(விங் கமாண்டர் L. V. பிரேஸர்).

அக்டோபர் 1-ம் தேதியன்று மத்தியக் கிழக்குப் பிராந்தியத்திலிருந்த வெடி விமானங்கள் தெற்கு ஜெர்மனியைத் தாக்கி மற்றொரு திசையிலிருந்து விமான நடவடிக்கை ஆரம்பித்தன. தெற்கு ஜெர்மனியிலும், ஆஸ்திரியாவிலுமுள்ள லக்ஷியங்களின் பேரில் வெடிகுண்டுகளை வீசியதிலிருந்து பிரிடிஷ் வெடிவிமானங்களின் நடவடிக்கையால் ரூர் பிரதேசத்திலிருந்து வேறு பல இடங்களுக்கு மாற்றியமைக்கப்பட்ட தொழிற்சாலைகள் தாக்கப்பட்டன. மற்றொரு பிரயோஜனமும் ஏற்பட்டது. இதுதான் யுத்த தந்திரத்தில் முக்கியமான நெடும் போக்கு. ஏற்கனவே கஷ்டப்பட்டுக் கொண்டும் ஜெர்மன் இரவுச் சண்டை விமானங்களை மேற்கு முனையிலிருந்து வெளிப்படுத்தி அங்குள்ள லக்ஷியங்களை சுலபமாகத் தாக்குவதற்கு வசதியளித்தும். அவைகளுக்கு தற்காப்பில்லாமலும் செய்துவிட்டது.

நமது இரவு வெடிவிமானத் தாக்குதலை சமாளிக்க ஜெர்மனி முக்கியமாக இரவு சண்டை விமானங்களைத்தான் நம்பியிருக்கிறது. இது நூதனமாக சமீபகாலத்தில் செய்யப்பட்ட தற்காப்பு முறை. இதற்கு முன் நெருப்புப் பந்தங்கள் உபயோகப்பட்டன. அதன்பின் நெருப்புப் பந்தங்களும் பலமான தேடுவிளக்குகளும் உதவியளித்தன. பிரிடிஷ் வெடி விமானங்களும், சாம்ராஜ்ய விமானப்படைகளும், அமெரிக்க விமானப்படையும் பலமாகத் தாக்க ஆரம்பித்தது. நஷ்டக் கணக்குகளை குறைவுபடுத்த ஆரம்பித்தபின் ஜெர்மனி இரவுச் சண்டை விமானங்களைத் தயார்செய்தது. அவைகளுடன் தேடுவிளக்குகளும், சுளுந்துகளும் உதவியளித்து வந்தன. அப்படியிருந்தும் நேசதேச வெடி விமானங்கள் லக்ஷியங்களின் பேரில் குண்டுகளை வீசிவிட்டுக் குறைவான நஷ்டத்துடன் திரும்பிவந்து விட்டன.

இரவு சண்டை விமானங்களை அதிகமாகக் கட்டி அவைகளை நார்வேயின் தெற்குக் கோடியிலிருந்து டென்மார்க், வடமேற்கு ஜெர்மனி, ஹாலந்து, டிஷான் வழியாக

பிரான்ஸின் கிழக்கு எல்லைச் சரகம் வரையிலுள்ள தற்காப்பு ஸ்தானங்களில் எதிரி அமைத்து விட்டான். அவைகளை விசேஷமாக அதிகப்படுத்தி விட்டான்.

1942-ம் வருஷ ஆரம்பத்தில் நார்வேயிலிருந்து பிரான்ஸ் வரையிலுள்ள தற்காப்புப் பிரதேசத்தில் ஜெர்மனியிடம் 200-க்குக் குறைவான சண்டை விமானங்கள்தான் இருந்தன. 1943-ம் வருஷ ஆரம்பத்தில் சண்டை விமானங்களின் சங்கியை இரட்டித்து விட்டது. இப்பொழுது 500 சண்டை விமானங்கள் எதிர்த்துப் போராடுகின்றன. அதாவது 300 சதவிகிதம் சண்டை விமானங்கள் அதிகரித்திருக்கின்றன. அவைகள் பூராவும் ஜெர்மனியின் தற்காப்புக்காக உபயோகப்படுகின்றன. மேலும் பகலில் தற்காப்பு செய்யக்கூடிய சண்டை விமானப்படையின் பரிமாணமும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. நேசதேச வெடி விமானங்கள் ஜெர்மனியையும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளையும் பலமாகத் தாக்குவதைத் தடுக்க தற்காப்புக்காக விமானப்படையை அதிகரித்துவிட வேண்டுமென்று எதிரி தீர்மானம் செய்துவிட்டதென்பதற்கு வேறு அத்தாக்ஷி தேவையில்லை.

இவ்விதமாக ஒன்றைக் குறைத்து மற்றொன்றைத் தயாரிக்கும் ஏற்பாட்டிலிருந்து பலமான விளைவுகள் உண்டாகக்கூடும். வெகு தூரம் சென்று வெடி குண்டுகளை வீசக்கூடிய வெடி விமானங்களைக் கட்டுவதை நிறுத்திவிட்டு ஜெர்மானியர்கள் சண்டை விமானப் படையை பலப்படுத்தியிருக்கிறார்கள். ஜெர்மன் தொழிற்சாலைகள் வெடிகுண்டு வீசும் விமானங்களைக் கட்டுவதை நிறுத்திவிட்டதுடன், விமான வேலையாட்களும் வேறு வேலைகளில் கவனம் செலுத்தவேண்டியிருக்கிறது. வெகுதூரம் சென்று வெடிகுண்டுகளை வீசக்கூடிய விமானங்களின் இருப்பும் அவைகளில் செல்லக்கூடிய வேலைக்காரர்களின் தொகையும் சில காலமாகக்குறைவுபட்டுவிட்டன. அந்த நெருக்கடி இன்னும் தீர்ந்தபாடில்லை. ஜெர்மனியை தற்காப்பு செய்வதற்காக பகல், இரவு சண்டைவிமானங்கள் உபயோகப்படுத்தப்படுவதிலிருந்து கிழக்குப் போர்முனையில் ருஷ்யர்களின் பேரில் விமான நடவடிக்கைக்காக உபயோகப்படக்கூடிய விமானப்படை பலம் குறைவுபட்டதென்பது மற்றொரு முக்கியமான விளைவு. ருஷ்யப் போர்முனையில் அநேக அரங்கங்களில் ஜெர்மன் படைகள் விமானப்படை உதவியன்றியில் சண்டை போடுகிறார்கள்.

வடக்கு ஆபிரிக்க தளத்திலிருந்து நேசதேச பறக்கும் கோட்டை விமானங்கள் தெற்கு ஜெர்மனி பேரில் முதல் முதலில் நடவடிக்கை செய்ததின் பலன் இப்பொழுது தெளிவாக புலப்படுகிறது. இதேவிதமாக அநேக தாக்குதல்களும் நடைபெறக்கூடும். ஏராளமான விமானங்கள் விசேஷபயன்படும்படியாக லக்ஷியங்கள பேரில் குறிதவறாமல் குண்டுகளைப் பொழியக்கூடும். இதாலிய தேசத்திலுள்ள விமான தளங்கள் நேசதேச விமானப்படையின் நடமாட்டத்துக்கு லாயக்குள்ளதாக அமைக்கப்பட்டபின், அங்கிருந்து தினசரி இடைவிடாது, பிரிடனிலிருந்து இராக்காலங்களில் விமான நடவடிக்கை நடைபெறுவது போல், விமானங்கள் தாக்க ஆரம்பித்துவிடும்.

இதைத் தடுப்பதற்காக ஹிட்லர் சண்டை விமானங்களை தெற்கு ஜெர்மனிக்கு அனுப்ப வேண்டும். இந்தப் பிராந்தியத்திற்குத் தேவையான விமானங்களை தொழிற்சாலைகளிலிருந்து அவன் அனுப்பமுடியாது. தொழிற்சாலைகள் ஏற்கனவே அளவு கடந்த உற்பத்தியைச் செய்து வருகின்றன. மேலும் அவைகளை நேசதேச விமானங்கள் சுலபமாக வெடிகுண்டுகளால் தாக்கிவருகின்றன. ஆகையால் உற்பத்தி குறைவுபடுமேயல்லாது அதிகப்படுவதற்கு காரணமில்லை. தெற்கு ஜெர்மனிக்கு மேற்கு முனையிலிருந்துதான் சண்டை விமானங்கள் வந்துசேரவேண்டும். இருபக்கங்களிலிருந்தும் நாம் ஜெர்மனியை பலமாகத் தாக்கும் பொழுது ஜெர்மன் சண்டை விமானங்களுக்கு சஹிக்கமுடியாத சிரமம் ஏற்படும். அப்பொழுது அவைகளின் சக்தி முறிந்துபோய்விடும்.

பின்ஷேபன்.

பின்ஷேபனை ஆஸ்திரேலிய 9-வது படை கைப்பற்றியதைப் பற்றி ஆஸ்திரேலிய யுத்த நிருபரான H. J. ஸமமார்ஸ், பின்ஷேபனுக்கு வடக்கே 6 மைல் தூரத்தில் துருப்புகள் இறங்கிய பின் 11 நாட்களுக்குள்ளாக அதைக் கைப்பற்றிவிட்டார்களென்று வியாக்யானம் எழுதியிருக்கிறார். லே, ஸலாமூவாவைவிட இங்கு துருப்புகள் அதிக அபாயங்களையும், கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருந்தது. முடிவைப் பற்றி ஒரு சந்தேகமுமில்லை. ஆகிலும் பலமான போர்களை நடத்தவேண்டியிருந்தது. ஜப்பானிய விமானப்படையின் எதிர்ப்பு மிகவும் பலமாயிருந்தது.

பின்ஷேபனைக் கைப்பற்றிய நடவடிக்கையில் தரைப்படையும், விமானப்படையும் சிறந்த வகையில் ஒத்துழைத்ததென்று புலப்படுகிறது. துருப்புகள் இறங்கிய ஒரு மணிநேரம் அவைகள் தீரத்துடன் சேவை செய்ததினால்தான் மற்ற நடவடிக்கைகள் பயன்படும் முறையில் நடந்தேறின.

ஜப்பானியர்கள் பெரும் நஷ்டத்துடன்தான் துறத்தியடிக்கப்பட்டார்கள். ஆகிலும் நாம் எளிதில் எதிரியை முறியடித்து விட்டோமென்று நினைப்பது பொருத்தமானதல்ல. துருப்புகள் பூமி நதியில் பிரவாகத்தை எதிர்த்துச்சென்று பிறகு தாண்டவேண்டியிருந்தது. இந்த நடவடிக்கையில் அவர்கள் மலைப்பாங்கான இடத்தை அடைந்தார்கள். கத்திமுனை போன்ற மலைச்சரிவுகளில் ஏறிச்செல்லுவதற்கு அவர்கள் ஒருவருக்கொருவர் கைலாக்குக் கொடுத்துக்கொண்டும் கால்களை ஊன்றிக்கொள்ள குழிகளைத் தோண்டிக்கொண்டும் முன்னேறவேண்டியிருந்தது.

ஜப்பானியர்கள் பின் வாங்கிச் சென்ற நாடுகளில் வசிப்பவர்கள் எதிரி நோய் வாய்ப்பட்டு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தானென்று ஒரே முகமாகச் சொல்லுகிறார்கள். ஜப்பானியர்கள் போகும் மார்க்கத்தில் உயிர் துறந்தார்களென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு பலமான வயிற்றுப்போக்கு நோய் வந்துவிட்டதென்று தெரியவருகிறது.

ஜப்பானிய விமானப்படை அபாயத்தைத் தவிர்க்க முயலுகிறது.

(டெயிலி டெலிகிராப்).

"பர்மாவில் வெகுகாலமாக நாம் சமாளித்து தற்காப்பு யுத்தம் செய்துவிட்டு இப்பொழுது முன்னேறித் தாக்குவதென்று தீர்மானித்துவிட்டோம்" என்பது க்யூபெக் மகாநாட்டின் முடிவுகளில் முக்கியமானதென்று ஜனாதிபதி ரூஸ்வெல்டு வெளியிட்டார். இதைக் கேள்வியுற்ற ஜெர்மனியும், ஜப்பானும் பருவகாலம் முடிந்தவுடன் தாக்குதல் ஆரம்பிக்க நேசதேசத் துருப்புகள் பர்மா எல்லையில் நிற்கின்றன என்று அறிக்கை வெளியிட்டனர். நேசநாடுகள் முன்னேறித் தாக்கும் காலம் நெருங்கிவிட்டது.

இந்திய விமானதளங்களிலிருந்து பிரிடிஷ் விமானப்படையும், அமெரிக்க விமானப்படையும் தினந்தோறும் பயன்படும்படியாக விமான நடவடிக்கைகளை நடத்தியதிலிருந்து ஜப்பானியர்கள் பர்மாவில் முஸ்தீப்புகளைச் சேகரித்து வைக்கமுடியாமல் தடைசெய்யப்பட்டார்கள். ரெங்கூனை உபயோகப்படுத்தக்கூடவில்லை. அவர்களுடைய போக்குவரவு மார்க்கங்கள் நொருக்கப்பட்டுவிட்டன. தொடர்ச்சியாக நடைபெற்ற இந்த விமான நடவடிக்கைகளிலிருந்து மற்ற முக்கியமான விளைவுகளும் உண்டாகியிருக்கின்றன.

நியூகினியாவிலும், ஸாலமன்ஸிலும் நடைபெற்றதுபோல பர்மாவிலுள்ள ஜப்பானிய விமானப்படையின் எதிர்ப்புகள் பலஹீனமாகிவிட்டனவென்று சில காலத்துக்குமுன் நாம் சொன்னோம். பர்மா போர்முனையையும், பஸிபிக் போர்முனையையும் ஒன்றுபடுத்தி மதித்துப் பார்த்தால் ஜப்பானிய விமானப்படையைவிட நேசநாடுகளிடம் மிகுதியான விமானங்களிருக்கின்றனவென்பது நிச்சயம். ஜப்பானிய விமானங்கள் அபாயத்தைத் தவிர்க்க முயன்றுவருவதுடன், அவைகள் தற்காப்பு யுத்தம் செய்யவேண்டியிருக்கிறது. இந்த நடவடிக்கைகள் மூலம் ஜப்பானிய விமானப்படை பழுதுபட்டுவிடுகிறது. அதே சமயத்தில் எதிரிகளின் கை ஓங்கிவிடுகிறது. ஹிட்லர் சமீபத்தில் சொல்லிவருவதுபோல் டோஜோவும் நிலைமையில் நெருக்கடி உண்டாகிவிட்டதென்றும், மகத்தான கஷ்டங்களுக்குள்ளாகவேண்டுமென்றும் சமீப காலத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறான்.

ஜப்பானுக்கு ஏற்பட்டிருக்கும் விமானங்களின் நஷ்டத்தை தாதுப்பொருள்களின் குறைவினாலும், கப்பற்படையின் குறைவினாலும் ஜப்பான் புதிய விமானங்களைக் கட்டி ஈடு செய்துகொள்ள முடியவில்லை. ஜெர்மன் விமானப்படையைப்போல ஜப்பானிய விமானப்படை பலமும் நாளடைவில் குறைவுபட்டுவருகிறது. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் செய்ததுபோல ஜப்பானிய ராணுவ அதிகாரிகளும் வெடிவிமானங்கள் கட்டுவதை நிறுத்தி சண்டைவிமானங்களைக் கட்டுவதில் அதிக கவனம் செலுத்திவருகிறார்கள். காலக்கிரமத்தில் விமானப்படையின் முன்னேறித் தாக்கும் சக்தி குறைந்துவிடக்கூடும். கடற்படையுடனும், தரைப்படையுடனும், விமானப்படையும் அதோகதியடைந்துவிடும்.

ஜப்பானிய விமானிகள் தீவிரமாய் யுத்தம் செய்வதற்கில்லை.

(யார்க்ஷயர் தபால்).

தென் பஸிபிக்கில் இருந்து வாஷிங்டனிற்கு திரும்பிய நம் சேனையின் விமானப்படையின் அஸிஸ்டெண்ட் ஸ்டாப் தலைவர் கர்னல் லாரென்ஸ் C. ஷெர்மன் என்பவர், ஜப்பானிய விமானிகள் முன்போல் அவ்வளவு தீவிரமாய்ச் சண்டைசெய்யவில்லை என்றும் அவர்களின் திறமையும் இப்பொழுது மிகவும் கீழ்த்தரமானதாய் விட்டது என்றும் சொன்னார்.

"அநேகமாய் கைதேர்ந்த விமானிகளில் பெரும்பகுதி கொல்லப்பட்டனர்" என்று கர்னல் கூறினார். "அவர்கள் விமானங்கள் நஷ்டமடைந்தபோது அதிலுள்ள எல்லா விமானிகளும் கொல்லப்பட்டேயிருக்கின்றனர். ஆனால் சுடப்பட்ட அமெரிக்க விமானங்களிலிருந்த

விமானிகளை நாம் தப்புவித்திருக்கிறோம். நமது குண்டுபோடும் விமானங்களின்மேல் ஏற்படும் ஜப்பானியத் தாக்குதல்கள் முன்போல் அவ்வளவு தீவிரமாயில்லை. நமது ஒரு குண்டு போடும் விமானத்தைத் தாக்குவதென்றால் அவர்களிடம் 8 அல்லது 10 ஸீரோ சண்டை விமானங்கள் இருந்தால்தான் தாக்குவார்கள் ஒரு வருஷத்திற்கு முன்பு ஜப்பானியர்கள் கெட்டிக்காரத்தனமாய் தாக்குதல் செய்தனர். ஆனால், இப்பொழுது அவ்வாறு இல்லை."

ஜப்பானியர்கள் தென் பஸிபிக்கில் இழந்த விமானங்களை உற்பத்தி செய்கிறார்களேயன்றி புதிதாய் முன் இருந்ததைவிட அதிகமான விமானங்கள் உற்பத்தி செய்யவில்லை என்று கர்னல் ஷெர்மன் கூறினர் அவர்களின் விமான நஷ்டம் "மிகவும் அதிகம். 'ஸீரோ' விமானங்கள், தீவிரமாய் சண்டையிடும் விமானமாயிருந்துங்கூட அது அதிகமாய் முன்னேற்றமடையவில்லை. 2 இஞ்ஜினுடைய ஜப்பானிய குண்டுபோடும் விமானங்கள்தான் அவர்களிடமுடைய பெரிய விமானங்களாகும். நாலு இஞ்ஜினுடைய விமானங்கள் பல அவர்களிடம் போக்குவரத்துகளுக்கும், வேவுபார்த்தலுக்கும், உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனாலும் அவர்களிடம் இன்னும் 4 இஞ்ஜினுடைய குண்டுபோடும் விமானங்கள் இல்லை என்றும் கர்னல் ஷெர்மன் கூறினர். அமெரிக்க விமானங்கள் மிகவும் போற்றத்தக்கவாறு முன்னேற்றமடைந்திருக்கின்றன.

ஜப்பானியர் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசங்களிலுள்ள இந்தியர்களுக்கு வசதிகள் செஞ்சிலுவைச் சங்கத்தாரின் பேருதவிகள்—தகவல்களை அறிவதில் சிரமங்கள்.

சிங்கப்பூருக்கும், ஹாங்காங்குக்கும் ராஜதந்திர முறையில் பரிவர்த்தனை செய்யும் கப்பல்களில் செஞ்சிலுவை சங்கத்தார்கள் ஏராளமான உணவுப்பொருள்களையும், வைத்திய மருந்துகளையும், ஆடைகளையும் அனுப்பியிருக்கிறார்கள். உஷ்ண ரேகைப் பிரதேசத்திலிருந்து குளிர் நிரம்பிய பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்ட யுத்தக்கைதிகளின் உபயோகத்துக்காக 20,000 உஷ்ண உடுப்புகள் அனுப்பப்பட்டன. ஜப்பானிலும், கொரியாவிலும், பார்மோஸாவிலும் ஏழு முகாம்களில் வசதியளிக்கும் நிலயங்களை ஸ்தாபிக்க மத்திய கிருஸ்துவ வாலிப ஆடவர்களின் சங்கத்துக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

செஞ்சிலுவை சங்கத்தார் மூலம் அனுப்பப்பட்ட சாமான்கள் யுத்தக்கைதிகளுக்கு சிறிது ஆறுதலளித்திருக்கின்றன. ஆகிலும் முகாம்களில் அவர்களைப் பார்வையிடுவதற்கும், அவர்களுடன் கடிதப் போக்குவரத்து செய்வதற்கும் ஜப்பானியர்கள் கடுமையான நிபந்தனைகளை ஏற்படுத்தியிருப்பதால் அவர்களைப் பற்றிய ஒரு தகவலும் வெளியே புசிவதில்லை.

காவலில் வைக்கப்படாத பொதுமக்களின் பொருளாதார நிலைமையும், பாங்குகளை மூடிவிட்டதால் கஷ்டமாகிவிட்டது முக்யத்வமல்லாததும், சரக்குகளில்லாததுமான சிறிய வியாபார ஸ்தலங்கள் தொழில் நடத்திவருகின்றன. உபயோகமுள்ள வியாபாரங்களெல்லாம் ஜப்பானியரின் கண்காவலுக்குட்பட்டு நடைபெற்று வருகின்றன. பாங்கிகளும், இன்ஷ்யூரன்ஸ் கம்பேனிகளும், ஜப்பானியர்களின் உத்தரவினபடி கலைக்கப்பட்டுவிட்டன.

ஜப்பானியர் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுள்ள பிரிடிஷ் மக்களைப்பற்றிய தகவல்களை அறிய நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை இங்கு விவரிப்போம். கடல் தாண்டியிருக்கும் இந்தியர்களின க்ஷேமத்தைக் கோரும் இலாகாவுக்கு 7,480 கடிதங்கள் வந்தன. இதுவரையில் 1,023 பேர்களைப் பற்றித்தான் தகவல்கள் கிடைத்திருக்கின்றது. ஆஸ்திரேலியாவுக்கும், தென் ஆபிரிக்காவுக்கும், தப்பி ஓடியவர்களுடையவும், அல்லது எதிரி ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுள்ளவர்களுடையவும், ஜாபிதாக்கள் ஆஸ்திரேலிய நிர்வாகத்தினிடமிருந்தும், தென் ஆபிரிக்காவிலுள்ள பிரிடிஷ் உயர்தர கமிஷனரிடமிருந்தும், இதர அதிகாரிகளிடமிருந்தும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. யுத்தக் கைதிகளைப்பற்றி அவைகள் முக்கியமாக குறிப்பிட்டாலும், எதிரியின் ஒலிபரப்பில் சொல்லப்படும் தகவல்களும் நமக்கு உபயோகமுள்ளவைகளாக இருந்துவருகின்றன.

1942-ம் வருஷத்தின் மத்தியில் பிரிடனுக்கும், ஜப்பானுக்கும், ஏற்பட்ட பரிவர்த்தனை ஒப்பந்தப்படி ஜப்பானிலும், ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுமுள்ள 125 இந்தியர்களை இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பாதுகாப்பு கமிட்டியும் மற்ற இந்தியர்களும் தேர்ந்தெடுத்த இந்தியர்கள் பம்பாய்க்கு அக்டோபர் மாதம் 27-ம் தேதியன்று வந்து சேர்ந்தார்கள்.

ஹாங்காங்கிலிருந்து ஸ்வதந்திரச் சைனுவுக்குச் சென்ற இந்தியர்களுக்கும், உதவியளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பெனிஸிலின் (Penicillin) என்ற மருந்து.

(டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகை).

ரெபிஜிரேட்டர்களில் (Refrigorators) ஏற்றிச்செல்லப்பட்ட பெனிஸிலின் என்ற மருந்து, மத்தியதரைக்கடலில் யுத்தம் நடந்த பிராந்தியங்களிலும், வாஷிங்டனில் அவசரத் தேவைகளுக்கும் அனுப்பப்பட்டு பெரும் காயங்களையும் அழுகிப்போன ரணங்களையும், காயங்களில் அசுத்தம் ஏற்படுவதால் உண்டாகும் மற்றைய கோளாறுகளையும் சொஸ்தம் செய்ய பெரிதும் உபயோகப்படுத்தப்பட்டது. எலும்புகளை நாசப்படுத்தும் சிறு கிருமிகளைக் கொல்லும் இம் மருந்து அமெரிக்காவில் 13 தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. எனினும் மிகவும் சொற்பமான அளவிலேயே உற்பத்தி செய்யப்படுவதால் எல்லா இடங்களுக்கும் ரணவைத்தியங்களுக்கு அனுப்பப்படமுடியவில்லை.

ஸிஸிலியிலுள்ள எட்னு மலைக் (Mount Etna) க்-கருகில் உள்ள ஒரு சுரங்கவெடியைத் தொட்டதினால் ஒரு அமெரிக்க யுத்தவீரனுக்கு ஏற்பட்ட பெருங்காயங்களுக்குத்தான் இம் மருந்தினால் முதன் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்குப் பல காயங்கள் காலில் ஏற்பட்டிருந்தன, அவருடைய பாதம் நீக்கப்பட்டது. ரணங்கள் அழுகிப் போய்விட்டன இன்னும் வியாதி பரவிக்கொண்டது. அவர் காலில் ஒரு பகுதி துண்டித்தும்விடப்பட்டது.

பெனிஸிலின் கொண்டுவரப்பட்டு 3 மணிக் கொருதரம் அந்த யுத்த வீரனுக்கு ஊசியின் மூலம் இம்மருந்து ஏற்றப்பட்டது. அவருடைய உடல் நிலை சந்தோஷகரமாய் சுகமாயிற்று. நான்கு நாட்களுக்குப்பின் அவரை ஒரு ஆஸ்பத்திரிக்கு அனுப்பமுடிந்தது.

ஒரு புதிய ஆச்சரியம்.

$2\frac{1}{2}$ வயதுள்ள நீக்ரோ கான்ஸெட்டி என்பவர், பாஸிஸ்டு கக்ஷியின் திடகாத்தரமுள்ள ஒரு அங்கத்தினராம்.

வாலிபர்களை அபகரிக்கும் முஸோலினியைச் சேர்ந்த "ஓநாயின் மகன்கள்" என்று வழங்கப்பட்ட சங்கத்தின் அங்கத்தினரான நீக்ரோவின் அடையாளச் சீட்டு சமீபகாலத்தில் ஒரு குப்பையிலகப்பட்டது.

நீக்ரோ ஜனனமாகி 9 நாட்களானவுடன் அவன் சத்தியம் செய்தானும்.

"சர்வ வல்லமையுள்ள தெய்வத்தின் முன்பாகவும், இதாலிக்காகவும் முஸோலினியின் உத்தரவுகளின்படி கீழ்ப்படிந்து நடப்பதாகவும், பாஸிஸ்டு கக்ஷிக்காரர்களின் புரக்ஷியில் என் சக்தி பூராவையும், அவசியமானல் என் உயிரையும் அர்ப்பணம் செய்து சேவை புரிவதாயும் நான் பிரமாணமாகச் சொல்லுகிறேன்.

விஷய அறிவிப்பு.

இந்தியாவில் சேனைகளுக்குத் தேவையான சாமான்களில் 90 சதவிகிதம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்தியாவில் 2 மிலியன் கைத்தரிகள் இருக்கின்றன.

இந்தியாவில் சேனைகளின் உபயோகத்திற்காக உண்டுபண்ணப்படும் ஆடைகள் 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் 2 லக்ஷமாகயிருந்தது. இப்பொழுது மாதாமாதம் 8 மிலியன் ஆடைகள் தயார் செய்யப்படுகின்றன.

இந்தியாவில் 40,477 மைல்கள் நீளமுள்ள இருப்புப்பாதைகளிருக்கின்றன. 1941-1942-ம் வருஷத்தில் அவைகள் வழியாக 623 மிலியன் பிரயாணிகளும், 97 மிலியன் டன்கள் எடைமானமுள்ள சாமான்களும் கொண்டுபோகப்பட்டன. 14,469 லக்ஷம் ரூபாய்கள் வருமானம் கிடைத்தது. இந்திய ரெயில்வேக்களில் 7,58,000 வேலைக்காரர்களிருக்கின்றார்கள். வருஷாந்திர சம்பளபட்டுவாடா 3,914 லக்ஷம் ரூபாய்களாகுகின்றன.

பிரிடிஷ் இந்தியாவில் 3 லக்ஷம் மைல்கள் நீளமுள்ள ரஸ்தாக்களிருக்கின்றன. 1938—1939-ம் வருஷங்களில் ரஸ்தாக்களில் 40,000 லாரிகள் ஓடிக்கொண்டிருந்தன.

இந்தியாவில் 1941—42-ம் வருஷத்தில் ஜனங்கள் 235,66,28,000 யூனிட் மின்சார சக்தியை உபயோகப்படுத்தினார்கள்.

லண்டனில் ஹைட்பார்க்கைச் சுற்றி வேலி அடைத்திருந்த 450 டன்கள் எடைமானமுள்ள இரும்பு தண்டவாளங்கள் இப்பொழுது விமானம் எதிர்ப்பு பீரங்கிகளுக்கு உபயோகப்படுத்தியாகிவிட்டன. 5 டன்கள் எடைமானமுள்ள இரும்பு இரண்டு போபர்ஸ் பீரங்கிகள் செய்யப்போதுமானது.

1943-ம் வருஷம் முதல் மூன்று மாதங்களில் 1942-ம் வருஷம் முதல் மூன்று மாதங்களைவிட பிரிடிஷ் விமான உற்பத்தி 55 சத விகிதம் அதிகரித்துவிட்டது.

ஒரு டாங்கியைக் கட்டுவதற்கு 100 டன் நிலக்கரி வேண்டும். ஒரு விமானத்தில் 70,000 பலவகைப்பட்ட துணுக்குகளும், விமானம் கட்டும் சாமான்களுமிருக்கின்றன.

பிரிட்டனில் துணிமணிப்பங்கிடு செய்ததிலிருந்து 5 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் மீதப்பட்டன. துணிமணிகள் வாஙகும் செலவில் 600 மிலியன் பவுன்கள் மீதம் பிடிக்கப்பட்டன.

'வி' டயரி-1944.

(குறிப்பு புஸ்தகம்).

(நவம்பரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—8—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—12—0; மொராக்கோ ரூ. 2—4—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3 அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,

தேசீய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 169. (3-வது பிரிவு).

23-10-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00	26-10-43	மழையூர்	... மாலை	7.00
24-10-43	சூரக்காடு	... ,,	7.00	,,	காரம்பக்குடி	... ,,	7.30
,,	கோட்டைக்காடு	... ,,	7.30	29-10-43	வாளரமாணிக்கம்	... ,,	7.00
25-10-43	விராலிமலை	... ,,	7.00	,,	ஏம்பல்	... ,,	7.30
,,	பொருவாய்	... ,,	7.30				

பிரசங்கம் 170. (4-வது பிரிவு).

30-10-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00	3-11-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	11.00
31-10-43	கீரப்பழனி	... ,,	7.00	,,	காலேஜ் B தமிழ்	... ,,	11.00
,,	ஆலூர்	... ,,	7.30	,,	நார்த்தாமலை	... மாலை	7.00
1-11-43	காரையூர்	... ,,	7.00	,,	உப்பிலியக்குடி	... ,,	7.30
,,	இடையாத்தூர்	... ,,	7.30	4-11-43	அண்டக்குளம்	... ,,	7.00
2-11-43	வடவாளம்	... ,,	7.00	,,	கிள்ளனூர்	... ,,	7.30
,,	சம்மட்டிவிடுதி	... ,,	7.30	5-11-43	கொடும்பாளூர்	... ,,	7.00
3-11-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00	,,	விராலூர்	... ,,	7.30
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45				

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

23—10—43	வெட்டம்விடுதி.	31—10—43	ஏம்பல்.
24—10—43	மருதன்கோன்விடுதி.	2—11—43	குடுமியாமலை.
26—10—43	கோனபட்டு.	4—11—43	குழிபிறை.
29—10—43	புதுக்கோட்டை.	5—11—43	புதுக்கோட்டை.
30—10—43	பொன்னமராவதி.		

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—27-10-43.